"யுத்தத்திற்குப் பிறகு அபிவிருத்தியடைந்து வரும் ஸ்வதந்திர தேசத்தாராக நியாயத்தை நிலை நிறுத்தவும், உலகத்தில் புதிய திட்டம் ஏற்படுத்தவும், மனித வர்க்கத்தைக் கஷ்டங்களிலிருந்து விடுதலை செய்யவும் எல்லா தேசத்தார்களுடனும் கூடிக்கலந்து செய்ய வேண்டியவைகளெல்லாம் செய்ய நாம் தயாராக இருக்கவேண்டும்.

"ஆசியாவிலுள்ள நாடுகளில் சீனு பெரிய புராதன நாடு. ஆனால் அந்நாடுகளில் தலைமை வகிக்கக்கூடிய உரிமை சீனுவிற்கு இருக்கிறதென்று நாமே பெருமையாகப் பேசிக்கொள்ளக்கூடாது.

" அந்தரங்க சுத்தியோடும், கொள்கையில் உறுதியுடனும் இந்த யுத்தத்தில் நாம் போராடி வருகிறோம். முதலில் நமது தற்காப்புக்காகவும் அதன் மூலம் சுயநலமில்லாத உலக விமோசனத்திற்காக நாம் இந்த யுத்தத்தை நடத்துகிறோம்.

"ஆசியாவிடத்திலும் சரி, உலகத்தாரிடத்திலும் சரி, நாம் நமது கடமையைத் தான் செய்ய விரும்புகிறோம். அதிகார ஆசையை விலக்கிவிட்டோம். சீன தேசீய உணர்ச்சிக்கும் பொருத்தமான வெற்றியினால் கிடைக்கக்கூடிய பிரியமும், உதார குணத்திற்கு ஒவ்வாமலிருக்கிற ஆசையை நாம் ஒழித்துவிட்டோம்".

---

## விஸ்பயம் வேண்டாம்.

### (The Illustrated London News).

" யுத்தத்தில் வெற்றியும் தோல்வியும் மாறி மாறி ஏற்படுமென்பதை நாம் மறந்து விடக்கூடும். யுத்தத்தில் வெற்றியோ தோல்வியோ இரண்டு வாரத்திற்குள் ஏற்பட்டு விடுமென்றுவதோ சொல்லுவதும் தவறுதான். நல்ல செய்தி கிடைத்து வந்தால் அதுதான் தொடர்ந்து வரவேண்டுமென்றும், கொஞ்சம் மாறிவிட்டால் மறுபடி வெற்றியே கிடைக்காதென்றும் சிலர் நினைக்கிறார்கள். அதுவும் கூடாது. உதாரணமாக சாமான்களின் விலை உயர்ந்து கொண்டே போனால் மறுபடி குறையாதென்று நாம் எவ்வாறு சொல்லக்கூடும். இதற்கு உதாரணமாக பாலைவனத்தில் நடக்கும் சண்டைகளைக் கூறலாம். அங்கே நடந்த சண்டைகளில் வெற்றி கிடைக்குமென்று எதிர்பார்த்த சமயத்தில் ஏமாந்து போனோம். தோல்விவரும் என்று எதிர்பார்த்த சமயத்தில் வெற்றியடைந்தோம். ஆகவே எதையும் பற்றி அவசரப்பட்டு அபிப்பிராயம் கூறக்கூடாது. அதுவும் பொய்யாகாது. அதில் முக்கியமாகப் பொய்யான தகவல்களைக் கூறவே கூடாது ".

---

## யுத்தக் குறிப்புகள்

ஒரு மோட்டார்காருக்கு ஆறு மாதங்களுக்குச் செலவாகும் பெட்ரோல் ஒரு பெரிய பாம்பர் விமானத்திற்கு ஒரு மணி நேரம் பிரயாணம் செய்வதற்குத் தான் போதுமானதாக இருக்கிறது.

ஒரு காரிலிருக்கும் எஃகு சுமாராக 26 யந்திர பீரங்கிகளிலிருக்கும் எஃகுக்கு சமமானது.

ஏழு மோட்டார்கார் டயர்களில் இருக்கும் ரப்பரைக்கொண்டு பெரிய பாம்பர் விமானத்தின் ஒரு டயரைத் தயாரிக்கலாம்.

200 பட்டு ஸ்டாகிங்ஸ்களுக்குத் தேவையாயிருக்கும் பட்டைக்கொண்டு ஒரு குடை விமானம் செய்ய முடியும்.

ஒரு ஸெட் கோல்ப் தடிப்பு (Golf Club)களிலுள்ள எஃகைக்கொண்டு ஒரு



## யூதர்களை ஜெர்மானியர் படுகொலை செய்கின்றனர்.

---

### நாஸிக்கொடுமைகள் அடியோடு அழியும்வரை நாம் இளைப்பாறுவதில்லை என்று நாம் தீர்மானிக்கவேண்டும்.

**1. மிஸ்டர் சர்ச்சில்.**

லண்டன், அக்டோபர் 29.

நாஸி அரசாட்சியில் யூதர்களுக்கு முறையே செய்து வரப்பட்ட கொடுமைகளெல்லாம் சரித்திரத்திலுள்ள பயங்கரமான சம்பவங்களில் அதிகக் கொடுமையானது. அவற்றைச் செய்யாதவர்களுக்கும், செய்யத்தூண்டியவர்களுக்கும் என்றும் அழியாத இழிவு ஏற்பட்டிருக்கிறது.

**2. டாக்டர் வில்லியம் டெம்பிள், காண்டர்பரி மதகுரு.**

கெட்ட தன்மை வாய்ந்த நாஸிகள் யூதர்களின் பேரில் தங்கள் கோபத்தைச் செலுத்தி அழிவை உண்டாக்கியிருக்கிறார்கள். யூதர்களே இல்லாமல் அந்த ஜாதியார்களை அழித்துவிடக்கூடுமானால் அம்மாதிரி செய்யவும் தீர்மானித்திருக்கிறார்கள்.

**3. ஜெனரல் ஸிக்கோர்ஸ்கி, போலந்து பிரதம மந்திரி.**

ஜெர்மானியர் செய்திருக்கும் குற்றச்செய்கைகளுக்கெல்லாம் பழிக்குப் பழி வாங்காமல் இருக்கப்போவதில்லை. ஒரு சுத்த வீரன் என்ற முறைமையில் அவர்கள் செய்யும் கொடுமைகளைக்கண்டு நான் எச்சரிக்கை செய்கிறேன்.

**4. யூதர்களின் தலைமை குரு டாக்டர் ஹெர்ட்ஸ்.**

தீங்கை நல்லதென்றும், இருட்டை வெளிச்சமென்றும் சொல்லுகிறவர்களும், மனிதர்களின் உயிரையும், ஆவியையும் அழித்து வருகிறவரையில் நமது குழந்தைகளுக்குப் பாதுகாப்புமில்லை, வம்ச பரம்பரை என்பதுமிருக்கமாட்டாது. நாஸி ஆதிக்கம் பூரா அழியும்வரை நாம் இளைப்பாறுகிறதில்லை என்று நாம் தீர்மானிக்கவேண்டும்.


## 'வி' டயரி 1943.

(குறிப்பு புஸ்தகம்)

லினன் ரூ. 1, ஸிப்ஸ்கின் ரூ. 1—4—0, மொராக்கோ ரூ. 2.

**லாபம் யுத்தநிதிக்குச் சேர்க்கப்படும்.**

கீழ்கண்ட விலாசத்திலிருந்து வாங்கிக்கொள்ளலாம் :—

**காரியதரிசி,**

தேசிய யுத்த முன்னணி நிலயம்,

புதுக்கோட்டை (தென் இந்தியா).

ஒழுக்கம், நியாயம் முதலியவைகளை எதிர்த்துப் போராடும் விரோதிகளின் உச்ச நிலைமை இப்பொழுது போய்விட்டது. சமீபத்தில் நடந்த நடவடிக்கைகளின் காரணமாக நமது நேசநாடாகிய பிரான்ஸிலிருந்து ஏராளமான போர்வீரர்கள் நேசதேசத் துருப்புகளுடன் சேர்ந்து உதவி புரிகின்றனர்.

பிரான்ஸ் தேசத்தில் யுத்தத்தில் இன்னுரென்று தெரியாத ஒரு அமெரிக்க சிப்பாய் உயிர் துறந்திருக்கிறான். அமெரிக்காவைப் பாதுகாப்பதற்காக மட்டில் அவன் யுத்தத்தில் மடியவில்லை.

அவனுடைய குடும்பம், மற்றும் அமெரிக்காவிலுள்ள உறவினர்கள் யாவரும் எதிர் காலத்தில் சமாதானத்துடனும் சந்தோஷமாகவும் வாழுவதற்கே அவன் யுத்தம் செய்து இறந்திருக்கிறான். இப்பொழுது அமெரிக்கத் துருப்புகள் எல்லா கண்டங்களிலும், எல்லாக் கடல்களிலும் சென்று இறந்து போன யுத்த வீரனின் எண்ணத்தைப் பூர்த்தி செய்வதற்காக தங்கள் உயிரைத் திரணமாக மதித்து யுத்தம் புரிந்து வருகிறார்கள்.

---

## இந்திய ராணுவத்துக்குப் பாராட்டு.

மாட்சிமை தங்கிய சக்ரவர்த்தி.—லண்டன்; நவம்பர் 11.

இந்திய ராணுவத்தின் பலம் ஒவ்வொரு மாதமும் வளர்ந்து பெருகிவருகிறது. அநேகம் போர்க்களங்களில் அது தன் திறமையைக் காட்டியிருக்கிறது. இந்தியர்களில் 10 லக்ஷம் போர் வீரர்களுக்கு மேலேயே தாங்களாகவே இஷ்டப்பட்டு, தரைப்படை, விமானப்படை, கப்பற்படைகளடங்கிய இந்திய ராணுவத்தில் சேர்ந்திருக்கின்றனர் என்பதை அறிந்து நாம் பெருமையடைகிறோம். வரப் போகும் போராட்டத்தில் அவர்களுடைய தீரம், சகிப்புத்தன்மை இவற்றில் பூர்ண நம்பிக்கை கொண்டிருக்கிறோம்.

---

## இந்தியாவில் தொழிலாளிகளுக்குப் பயிற்சி.

இதுவரை மொத்தத்தில் 5 பகுதிகளில் 250 பையன்கள் இங்கிலாந்தில் பயிற்சிபெற அனுப்பப்பட்டிருக்கிறார்கள். இப்பொழுது 6-வது பகுதியும், பயிற்சிபெறத் தயாராக இருக்கிறது. இந்தத் திட்டப்படி பயிற்சிபெற்று இப்பால் 149 பேர்கள் இந்தியாவுக்குத் திரும்பியிருக்கின்றனர். ஏற்கனவேயே அவர்களில் 135 பேர்கள் பல தொழிற்சாலைகள், என்ஜின்கள் பழுதுபார்க்குமிடங்கள் இவைகளில் வேலைக்கமர்த்தப்பட்டிருக்கிறார்கள். இதற்குமுன் அவர்கள் மாதம் ஒன்றுக்கு 30 ரூபாய் முதல், 100 ரூபாய் வரை சம்பாதித்துவந்தனர். இப்பொழுது யுத்தத்தின் நிமித்தம், அவர்களின் மாதச் சம்பளம் 165 சதவிகிதம் உயர்த்தப்பட்டிருக்கிறது.

பெவின் திட்டத்தை விரு தொழில் கற்றுக்கொடுப்பதற்கான திட்டம் 1940-ம் வருஷம் ஜுலை மாதத்தில் போடப்பட்டது. 3,000 பேர்களுக்குப் பயிற்சியளிக்கவேண்டுமென்பதுதான் அத்திட்டத்தின் நோக்கம். அப்பொழுது 1943-ம் வருஷம் ஜுன் மாதத்தோடு 70,000 பேர்களுக்குப் பயிற்சியளிக்கப்பட்டுவிடும். இப்பொழுது அந்த ஏற்பாட்டின்படி 380 பயிற்சிசாலைகள் இந்தியாவில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. அவைகளில் 45,000 பேர்களுக்குப் பயிற்சியளிக்கப்படுகின்றன.

"இப்பள்ளிக்கூடங்களை நடத்துவதற்கு இங்கிலாந்திலிருந்து 100 யந்திர நிபுணர்கள் இந்தியாவிற்கு வந்திருக்கிறார்கள். அவர்களிடம் 163 இந்தியர்கள் தயாராகியிருக்கிறார்கள். அவர்களே பல பள்ளிக்கூடங்களை நடத்துவதற்கு முடியும். ஸெப்டம்பர் மாதம் 30-ம் தேதியில் இந்த ஏற்பாட்டின்படி 32,416 பேர்களுக்குப் பயிற்சியளிக்கப்பட்டது. அதே தேதியில் 21,750 பயிற்சிபெற்றவர்கள், பாதுகாப்பு சேவையிலும், யுத்தத்திற்கு வேண்டிய தொழிற்சாலைகளிலும், பொதுமக்களுக்கு வேண்டிய பல கைத்தொழில்களிலும் வேலைக்கமர்த்தப்பட்டிருக்கின்றனர்.



## இந்தியாவில் பிரிடனின் ஆட்சி.

---

### இவ்வளவு ஸ்வல்ப்பமான காலத்திற்குள் பிரிடிஷார் செய்திருப்பதுதான் அதிக ஆச்சரியமானது.

ஸர் எம். அஸிஸுல்ஹக்.

லண்டன், அக்டோபர் 29.

புதிய உணர்ச்சியொன்று பிரஸ்தாபத்திலிருக்கிறது. இந்தியா பூராவும் வாழ்க்கையின் பிராதான்யத்தைக் கவனிக்க ஆவலதிகரித்திருக்கிறது.

ஒரு புதிய ஐக்கிய பத்தியத்தையடையப் பிரயத்தனப்படுகிறோம். முந்தி நடந்ததையும், இப்பொழுது நடப்பதையும் ஒற்றுமைப்படுத்த முயலுகிறோம். கீழ் நாட்டாரும், மேல் நாட்டாரும் ஒற்றுமையடைவதை எதிர்பார்க்கிறோம். அந்த சந்தர்ப்பம் வந்தால் இந்திய வாழ்க்கையில் பண்டைகாலத்தில் ஹிந்துக்கள், முஸ்லீம்கள் எவ்வளவு தூரம் நாகரீகமடையச் செய்தார்களோ அவ்வளவு தூரம் பிரிடிஷாரும் வேலை செய்திருக்கிறார்கள் என்பது தெரியும்.

புதிய சங்கிட்டத்தை பிரிடிஷார் ஏற்படுத்தியிருக்கிறார்கள். நகரங்களிலும், கிராமங்களிலும் தன்னைத்தானே அரசாளக்கூடிய சபைகள் ஏற்படுத்தியிருக்கிறார்கள். யுத்த காலத்தில் அநேக விதாகூ, தேவைக்குத் தக்கவாறு பொருள்களைத் தயாரிக்க கைத்தொழிலையும் அபிவிருத்தியடையச் செய்திருக்கிறார்கள்.

தேச சரித்திரத்தை நான் பார்க்கும்போதெல்லாம் அவர்கள் செய்திருப்பவைகளுக்கு நாம் அவர்களுக்கு நன்றி பாராட்டவேண்டுமென்ற உணர்ச்சியே எனக்கு உண்டாகிறது. இவ்வளவு ஸ்வல்ப்பமான காலத்திற்குள் அவர்கள் செய்திருப்பதுதான் அதிக ஆச்சரியமானது.

---

## ராணுவ சேவைக்கு இந்திய ஸ்திரீகள்.

---

கிழக்கு ராணுவப் பகுதியின் திட்டம்—கல்கத்தா, நவம்பர் 12.

இந்திய ஸ்திரீகள் ராணுவ சேவையில் அதாவது உயரம் தெரிந்துகொள்ளும் வேலை, ராணுவங்கள் இருக்கக்கூடிய இடம், எதிரிகள் வரக்கூடிய இடம் இவைகளைத் தெரிந்துசெல்லுதல், ரேடியோ, டெலிபோன் ஸ்தாபனங்களில் வேலைபார்த்தல் இம்மாதிரி வேலைக்கு அனுப்பப்படுவார்கள். இந்நாட்டில் மற்றபாகங்களைப் போல் கிழக்கு ராணுவப் பகுதியில் ஸ்திரீகள் உதவிப்படையில் 1,000 கணக்கான ஸ்திரீகளை வேலைக்குச் சேர்ப்பதற்கு தீவிரமாக நடவடிக்கை எடுத்துக்கொள்ளுகிறார்கள். சேவைக்கு ஸ்திரீகள் உதவிப்படை ஒரு கிளை ஸ்தாபனமாக இருக்கும்.

இங்கிலாந்தில் அயல் நாட்டு உதவிப்படையைச் சேர்ந்த யௌவன ஸ்திரீகள் மனிதர்களைப் போல் தங்கள் சேவையில் திறமையுள்ளவர்கள் என்றும், சில சமயங்களில் அவர்களைக் காட்டிலும் அதிக திறமையுள்ளவர்களாகவும் காட்டியிருக்கிறார்கள். மனிதர்கள் எரிகுண்டுகள் விழுந்த காலத்தில் சேவைபுரிந்ததில் புகழ் பெற்றிருக்கிறார்கள்.

பிரிடிஷ் பீரங்கிப்படையில் புருஷர்களும், ஸ்திரீகளும் ஒன்று சேர்ந்து ஒரு இடத்தில் பயிற்சி பெற்றதும், தேசப்பாதுகாப்பில் நேரிடும் சங்கடங்களையும், பொறுப்புகளையும் தோளோடு தோள் சேர்ந்து நின்று, பங்கிட்டுக்கொண்ட சரித்திரம் மிகவும் குறிப்பிடத்தக்கது.

V2:1194'19(3)
N43



ராணுவத்தை ஸ்தாபிக்கவேண்டியதாயிற்று. 1757-ம் வருஷத்தில் பிளாஸி யுத்தத்திற்குப் பிறகு, ராணுவத்தை கிளைவ் சீர்திருத்தம் செய்தார். அது முதற்கொண்டு இந்தியச் சைனியம் முன்னேற்றமடைந்து 18-வது நூற்றாண்டின் முடிவில் அதிக முக்கியத்வம் வாய்ந்ததாக விளங்கிற்று.

1858-ம் வருஷத்தில் கிழக்கிந்தியக் கம்பெனியாரின் பொறுப்புகள் யாவும் பிரிடிஷ் அரசாங்கத்தாருக்கு மாற்றப்பட்டவுடன், ம்பேனியார் கவசமுள்ள ஐரோப்பியத் துருப்புகள் யாவும் பிரிடிஷ் சைனியத்தில் சேர்க்கப்பட்டுவிட்டன. அதுமுதற்கொண்டுதான் தற்போதைய இந்திய ராணுவத்தின் ஆரம்பம் என்று சொல்லலாம். 1895-ம் வருஷம் வரையில் மூன்று முக்கிய மாகாணங்களில் தனித் தனி சைனியங்கள் இருந்தன. பிற்பட்டு அந்த வருஷத்தில் அவைகள் ஒன்று சேர்க்கப்பட்டு இந்திய ராணுவம் ஒழுங்குபடுத்தப்பட்டது. 1903-ம் வருஷத்திற்கு முன் இந்தப் பெயர் அரசாங்க பூர்வமாக அங்கீகாரம் செய்யப்படவில்லை — இந்திய ராணுவத்திற்குப் பதிலாக 'இந்தியன் ஸ்டாப் கோர்' என்ற பல பகுதிகள் இருந்தன. அப்பகுதிகள் யாவும் பிரிடிஷ் அதிகாரிகளின் கீழ் ஒன்று சேர்க்கப்பட்டன.

69409

நவீனமுறையில் தயாரிப்பு.

அந்தக் காலத்திலிருந்த நவீன முறைப்படி இந்தியச் சைனியம் தயாரிக்கப்பட்டிருந்தது. ஏற்கனவேயே ரிசர்வ் பட்டாளம் ஒன்று வைக்கப்பட்டிருந்தது. ஆனால் 1914-ம் வருஷத்தில் யுத்தம் ஆரம்பகாலத்தில் இந்திய குதிரைப் பட்டாளங்கள் மொத்தம் 39-ல், 36 பகுதிகள் ஸிலாதார் முறைப்படி இருந்துவந்தன. பண்டைகாலத்தில் இங்கிலாந்தில் போர் செய்யும் யுத்த வீரர்களுக்கு அதிக சம்பளம் கொடுப்பதுபோல, இம் முறையில் பயிற்சி செய்யப்பட்ட துருப்புகளுக்கு உயர்ந்த சம்பளம் கொடுக்கப்பட்டது. அதைக் கொண்டு குதிரைகளை வைத்து போஷித்தும், போர் சாமான்கள், உடைகள், துப்பாக்கிகள் தவிர மற்ற ஆயுதங்கள் முதலியவைகளுக்காகச் செலவு செய்துகொள்ளவும் வேண்டும். யுத்த நெருக்கடியில் இந்த முறை அடியோடு போய்விட்டது. 1922-ம் வருஷத்திற்குப் பிறகு அம்முறை அமுலிலில்லை.

1904-ம் வருஷத்தில் கிட்ச்னர் இந்தியச் சைனியத்தை ஒழுங்குபடுத்தி எல்லைப்புற ஸ்தானங்களைக் காப்பாற்றும் முக்கிய நோக்கத்துடன் பெருத்த முயற்சி எடுத்துக்கொண்டார். அந்த சமயத்தில் இந்தியத் துருப்புகள் சில வருஷங்களுக்குப் பிற்பட்டு, ஐரோப்பா, எகிப்து, பாலஸ்தீனம், மெஸபடோமியா, பர்ஸியா, ஆபிரிக்கா, ஸிரெனைகா, காலிபோலி (Gallipoli) முதலிய இடங்களுக்குச் சென்று சேவை புரியும் என்று வெகு சிலரே எதிர்பார்த்தனர். அந்த சமயத்தில் இவ்விஷயம் மறைத்து வைக்கப்பட்டிருந்தது. எப்படியிருந்தாலும் இந்தியச் சைனியம் எந்த இடத்திற்கும் போய் சேவை செய்யத் தயாராக இருக்க வேண்டும்.

இந்தியப் பாதுகாப்பை முன்னிட்டு பிரிடிஷ் விமானப் படை அதிக உதவி செய்து வருகிறது. அதுமாத்திரமல்ல. இந்திய விமானப்படை ஒன்றும் உருவாகிக்கொண்டு வருகிறது. அதற்கு ஏராளமாக விமானிகள் சேர முன்வருகிறார்கள். அந்நாட்களில் பிரிடிஷ் விமானப்படையே கிடையாது.

1912-ம் வருஷத்தில் ஒரு விடுமுறை நாளில் முஸௌரியில் டன்பள்ளத்தாக்கை நோக்கியிருக்கும் சிறுகுன்றில், அன்று பிற்பகலில் சிற்றுண்டி விருந்துக்கு எங்கள் கோஷ்டியில் கூர்க்கர்களின் தலைவர், ஒரு வாலிபர் சேர்ந்துகொண்டார்.

இந்திய ராணுவத்திற்காக உத்தியோகஸ்தர்களை முதல் முதலில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களில் அவரும் ஒருவர். ஸீதாபுரம் என்னுமிடத்தில் விமானப் பயிற்சி அவருக்குக் கொடுக்கப்பட்டது. விமானங்களின் மூலம் யுத்த முறையே மாறக்கூடுமென்றும், கூடிய சீக்கிரத்தில் விமானங்களில் பிரயாணிகளை ஏற்றிக்கொண்டு குன்றுகளின் உச்சிக்குப் பறந்து செல்லக்கூடுமென்று அந்த உத்தியோகஸ்தர் சொன்னார். அந்த அபிப்பிராயத்தை எங்களில் சிலர் ஒப்புக்கொள்ளவில்லை.



அந்த உத்தியோகஸ்தர்தான் ஸிரில் நிவால். 1914—18-ல் நடந்த உலக யுத்தத்தில் மிகவும் பிரக்கியாதி பெற்று, பிரிடிஷ் விமானப் படையின் உத்தியோகஸ்தராகத் திரும்புவார் என்றாவது, பிற்பட்டு இந்த யுத்தத்தில் முதல் வருஷத்திலேயே பிரிடிஷ் விமானப் படைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படுவார் என்றாவது நாங்கள் அப்பொழுது எதிர்பார்க்கவில்லை.

19-வது நூற்றாண்டிலும், 20-வது நூற்றாண்டின் முதல் பகுதியிலும், இந்திய ராணுவத்தில் சேருவது பிழைப்புக்காக என்று கருதப்பட்டது. ஆனால் இந்தியாவின் எல்லைப்புற பாதுகாப்புக்காக குறிப்பிட்ட நேரத்தில் யுத்தத்திற்குத் தயாராக இருப்பதற்கு ராணுவத்தில் ஒரு பகுதி ஒதுக்கப்படவேண்டியது அவசியமாயிற்று. ஏனென்றால் மலைப் பிராந்தியமான எல்லைப்புறங்களில் ஒரு சமயத்திலாவது அமைதி நிலவியது கிடையாது. ஏதாவது சில்லரைக் கலகங்கள் ஏற்பட்டுக்கொண்டே யிருக்கும்.

இந்தியச் சிப்பாயின் போர்திறமையைப்பற்றி பிரிடிஷ் ராணுவத்திற்கு நன்றாகத் தெரியும். 1914-ம் வருஷத்தில் பிரான்ஸிலுள்ள பிரக்யாதிபெற்ற "கன்டெம்டிபின்ஸ்" என்ற சைனியத்திற்கு இந்திய ராணுவம் அடுத்தபடியாக இருக்கும் என்று கருதப்பட்டது. அச்சைனியத்திற்கு உதவியாயிருந்த இந்தியப் பகுதியின் திறமையை லார்டு கிச்னர் (Lord Kitchener) நன்குணர்ந்தார். ஆகையால் அவர் யுத்த அரங்கத்திற்கு இந்தியப் பகுதிகளை அனுப்பும்படி கேட்டார். இந்தியப் பட்டாளத்துடன் நன்றாகத் தேர்ச்சி பெற்ற பிரிடிஷ் பட்டாளங்களும் பின் தொடர்ந்தன. அவர்களுக்குப் பதிலாக இந்தியப் பாதுகாப்புப் படைகளில் புதிய துருப்புகள் சேர்க்கப்பட்டார்கள்.

இந்திய ராணுவத்திற்கு இப்பொழுதும் தன் பூராதன பிரக்யாதியை நிலைநாட்டவேண்டுமென்று ஆவலிருக்கிறது. உதாரணமாக "வைஸிராயின் பாடிகார்டு" என்ற ஒரு பகுதி அநேக சண்டைகளில் வெகு திறமையுடன் போர் புரிந்து பிரக்யாதி பெற்றிருக்கிறது.

இவ்விஷயம் பலருக்குத் தெரிந்திருக்காது. இப்பொழுது அந்தப் பகுதியில் பஞ்சாபிகள், முஸல்மான்கள், சீக்கியர்கள், சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். 1773-ம் வருஷத்தில் அதற்கு முதன் முதலாக சிப்பாய்கள் சேர்க்கப்பட்டார்கள். அப்பொழுது அதற்கு "கவர்னரின் முகலாயத் துருப்புகள் என்று பெயர். ஜாவா, ஆவா, மகாராஜ்பூர், மூட்கி, பிரோஸிஷா, அலிவால் (Aliwal), ஸோப்ரான் முதலிய இடங்களில் நடந்த சண்டைகளில் பிரக்யாதி பெற்றவர்கள் அதில் சேர்ந்திருக்கிறார்கள். இதைப்பற்றிச் சொல்லும்பொழுது சீக் யுத்தங்களில் "பாடிகார்டு படை" காட்டிய 'தீரச்செயல்கள் ஞாபகத்திற்கு வருகிறது. அப்பொழுது வைஸிராயாயிருந்த லார்டு ஹார்டிஞ் குறுக்கிட்டு சைனியங்கள் வியூகத்தை மாற்றியமைக்கும்படி உத்தரவிட்டார். அதுமாதிரி இந்தக்காலத்தில் நடப்பது வெகு அரிது.

இந்திய ராணுவத்திற்கு ஆட்கள் சேகரிப்பதில் நிர்பந்தம் கிடையாது. போர்செய்யும் ஜாதியார்களிலிருந்தும், விவசாயிகளிலிருந்தும், புதிதாக சைனியத்திற்கு ஆட்கள் சேகரிக்கப்படுகிறார்கள். ஆனால் சமீபகாலத்தில் ராணுவ இலாகாக்கள், யுத்த தளவாடசாலைகள் அதிக விரிவாக ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. அது காரணத்தினால் சைனியத்திற்கு ஆட்களைச் சேர்ப்பதற்காகப் போடப்பட்டிருந்த கடுமையான நிபந்தனைகள் குறைக்கப்பட்டன. ஆதலால் பட்டண வாசிகளும்கூட வேலைசெய்வதற்கு சௌகரியம் கிடைத்திருக்கிறது. ஒவ்வொரு குடும்பத்திலும் மகன், பேரன், கொள்ளுப்பேரன் தங்கள் மூதாதையர்களிருந்த படைப்பகுதிகளில் சேர ஆசைகொண்டிருக்கிறார்கள். ஆதலால் வெகு எளிதில் சைனிய பலம் திரட்டப்படுகிறது. அதன் பயனாக இந்தியாவிலுள்ள பல கிராமங்களிலிருந்தும் பல வீரர்கள் சைனியத்தில் சேர்ந்திருக்கிறார்கள்.

இந்திய ராணுவ உத்தியோகஸ்தர்கள்.

மாட்சிமை தங்கிய பிரிடிஷ் அரசரின் உயர்தர உத்தியோகஸ்தர் வைஸிராயின் உயர்தர உத்தியோகஸ்தரின் குடும்பத்தைச் சேர்ந்தவராக இருப்பார்.

உத்தியோகஸ்தர்களின் மனைவிகளும் போர்வீரர்களின் குடும்ப நிலையைப் பற்றித் தெரிந்துகொள்ள ஆவலாக இருக்கிறார்கள். ஆகையால் ஒருபடைப்பகுதியிலுள்ளவர்கள் ஒரே குடும்பத்தினர்கள் போலிருக்கிறார்கள். இந்திய ராணுவத்தில் அவ்வித உணர்ச்சி ஏற்பட்டிருப்பது முக்கியமான பலனைக்கொடுக்கிறது.

1914-18வரை நடந்த யுத்தத்தில், கடைசி வருஷத்தில் இந்தியச் சைனியம் யுத்தத்தில் காட்டிய தீரத்தைப்பார்த்து ராணுவத்தில் உயர்ந்த பதவிகளுக்கு ஸான்ட்ஹர்ஸ்ட் (Sandhurst)டிலுள்ள ராணுவக் கல்லூரியில் இந்தியர்கள் சேர்ந்துகொள்ள தகுதியானவர்கள் என்று தீர்மானிக்கப்பட்டது. அதில் பயிற்ச்சிபெற்ற இந்தியர்கள் படைப்பகுதிகளில் கமிஷன், உத்தியோகஸ்தர்களாக தலைமை வகிக்க ஆரம்பித்தனர். ஸான்ட்ஹர்ஸ்ட்டில் பயிற்சிபெற்ற உத்தியோகஸ்தர்களுக்குமேல் அதிகமான நியமனங்கள் செய்யப்பட்டதால், டேராடன் என்னுமிடத்திலும் மற்றொரு ராணுவப் பயிற்சிசாலை ஒன்று 1932-ம் வருஷத்தில் ஸ்தாபிக்கப்பட்டது. டேராடனில் பயிற்சிபெற்ற இந்தியத் தலைமை அதிகாரி ஒருவருக்கு இந்த யுத்தத்தில் முதன் முறையில் 'விக்டோரியா கிராஸ்' பதக்கம் சமீபத்தில் வழங்கப்பட்டது. இதனால் சமீபகாலத்திற்குள் ஏற்பட்ட பள்ளிக்கூடத்துக்கு அதிக கௌரவமும், ஆதரவும் ஏற்பட்டது.

மேலும் அந்நியநாடுகளில் சென்று போர்செய்யும் வீரனுக்கும், அவன் சொந்த ஊரிலிருக்கும் அவன் குடும்பத்தாருக்கும் அடிக்கடி க்ஷேம சமாசாரங்களைத் தெரிவிப்பதற்காக "போர்வீரர்கள் இலாகாக்கள்" ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அவைகளில் ராணுவத்தில் சேவைசெய்து இப்பால் பென்ஷன் வாங்கிவரும் உத்தியோகஸ்தர்கள் அங்கத்தினர்கள். யுத்தரங்கத்திலிருந்த தலைமை காரியாலயங்களில் நடக்கும விஷயங்கள் அவ்வப்போது இவ்விலாகாக்களுக்குத் தெரியப்படுத்தப்படும். இன்னும் சிப்பாய்களுக்கு வேண்டிய சௌகரியங்கள் செய்து கொடுக்கப்படுகின்றன. ஆகையால் ராணுவ சேவை லாபகரமானது, கௌரவமானது என்று எல்லார் மனதிலும் படும்படிசெய்ய அரசாங்கத்தாருக்கு இச்சபை உதவி புரிகிறது. யுத்தத்தில் சேர்ந்த போர்வீரர்களுக்கு மான்யங்கள் விட்டுக்கொடுப்பது, சிப்பாய்களின் குழந்தைகளுக்கு இனாமாகப்படிப்பு அளிப்பது, உத்தியோகங்கள் கொடுப்பது இவைகளெல்லாம் செய்யப்படுகிறது. இவைகளைத் தவிர சிப்பாய்களுக்குப் பென்ஷனும் உண்டு.

இம்மாதிரி சிப்பாய்களின் நலத்தைப் பாராட்டுவதால், இந்திய ராணுவம் மிகவும் மேன்மையடைந்திருக்கிறது, இந்திய ராணுவத்திலுள்ளவர்கள் எல்லாவித நவீன ஆயுதங்களையும் கையாளப் பயிற்சிபெற்றிருக்கிறார்கள். சௌகரியக் குறைவான தேசங்களில் சண்டைசெய்ய வேண்டியிருக்கிறது. இம்மாதிரி இந்தியச் சைனியத்திலிருக்கும் உத்தியோகஸ்தர்களுக்கும், போர்வீரர்களுக்கும், பயிற்சி கொடுக்கப்படுவதால் அவர்கள் ஒழுங்காகவும், உறுதிப்பாட்டுடன் நின்று சண்டைசெய்யவும், தேசத்திற்குத் தகுந்தவாறு நடந்துகொள்ளவும் சாத்தியமாக இருக்கிறது. உதாரணமாக, வாஸிரிஸ்டான் ஒரு மலைப்பாங்கான பிரதேசம். அங்கு அநேக மலைத்தொடர்களும், கணவாய் பாதைகளும் இருக்கின்றன. அங்கு வெயிற்காலத்தில் சூரியவெப்பம் அதிகமாகவும், மாரிகாலத்தில் தாங்கமுடியாத குளிரும் இருக்கும். ஏனென்றால் குன்றுகளின் உச்சியில் பனி நிறைந்திருக்கும். அந்த இடத்தில் சண்டைசெய்து அனுபவம்பெற்ற வீரர்கள், அபிஸீனியா, எரிட்ரியா முதலிய இடங்களிலும், லிபியா பாலைவனப் பிரதேசங்களிலும் சென்று போர்புரியத் தயாராக இருக்கிறார்கள்.

இம்மாதிரியாக இரண்டு நூற்றாண்டுகளாக இந்தியச் சிப்பாய்கள் பிரிடிஷ் ராணுவ உத்தியோகஸ்தர்களுடனும், பிரிடிஷ் பட்டாளங்களுடனும், சேர்ந்து பழகிவந்ததினால், அவர்களுக்குள் பரஸ்பர நம்பிக்கையும், சிநேகபாவமும் ஏற்பட்டிருக்கிறது. இவ்வித பாந்தவ்யம் சமாதான காலத்தில் மட்டுமல்ல; யுத்தகாலத்திலும் அவர்களுக்குள் அதிக ஒற்றுமை ஏற்படுகிறது.

இந்திய ராணுவத்தில் படை பகுதிகளுக்கு உபபலமாக ஸ்வதந்திர நேபால் அரசாங்கத்திலிருந்து கூர்க்கர்கள் பிரிடிஷாருடனும், இந்தியருடனும் இதே விதமான உணர்ச்சியுடன் பக்கத்தில் நின்று போர் புரிகிறார்கள்.



இம்மாதிரியான சகோதர பாவம் இந்தியாவுக்கும், பிரிடிஷ் சாம்ராஜ்யத்துக்கும் ஒரு வித ஊக்கத்தை அளிக்கிறது. ஆனால் இதற்கும், நாஸிகளின் அதிகாரத்தின் கீழிருக்கும் துருப்புகளுக்கும் அதிக வித்தியாசமிருக்கிறது. "புதிய திட்டத்தின்" கீழ் நாஸிகள் திறள் திரளாக ஜனங்களை ஆயுத படைகளில் சேரும்படி நிர்பந்திக்கிறார்கள். அவர்களுக்குள் சகோதர வாஞ்சை இருக்காது. ஆனால் இந்திய ராணுவமோ ஸ்வதந்திர மனிதர்கள் சேர்ந்த ஒரு கூட்டம். அதில் ஒவ்வொரு சிப்பாயும் தானாகவே சேர முன் வந்து, மனிதர்களின் உரிமையைக் காப்பாற்றுவதற்காக, பொதுவான தலைமையின் கீழ் ஏக மனதுடன் ஒத்துழைக்க இஷ்டப்படுகிறான்.

## நற்போது நடக்கும் யுத்தம்.

1939-ம் வருஷம் வரை இந்தியப் பாதுகாப்பு இந்தியா அதன் எல்லைப் புறங்களைப் பாதுகார்த்துக் கொள்ளுகிறதென்றும், மற்றபடி வேறு எந்த வல்லரசாவது இந்தியாவைப் படையெடுத்தால் அதைப்பாதுகார்க்க கிரேட் பிரிடன் பூரா பொறுப்பையும் ஏற்றுக்கொள்ள வேண்டியது என்றும், இவ்வித முறையில் அமைக்கப்பட்டிருக்கிறது. நவீன யுத்தமுறையில் பல மாறுதல்கள் ஏற்பட்டுவிட்டன. இப்பொழுது யந்திர சாதனப்படைகளும் வெகு துரிதமாக, அதிக தூரம் செல்லுகின்றன. அதனால் தான் முன்னிருந்த யுத்த தந்திரத்தை மாற்றி அமைக்க வேண்டுமென்று லார்டு சாட்பீல்டு தலைமையின் கீழுள்ள கமிட்டி 1939-ம் வருஷத்தில் சிபார்சு செய்தது. அதனால் கடல்களுக்கப்பாலுள்ள இந்தியாவின் எல்லைப் புறங்களான எகிப்து, மலேயா முதலிய இடங்களைப் பாதுகாப்பதற்கு ஒத்துழைக்க வேண்டிய பொறுப்பு இந்தியாவுக்கு ஏற்பட்டது. இந்த முக்கிய மாறுதல் ஏற்பட்ட சமயத்தில் தான் யுத்தமும் ஆரம்பித்தது. சைனியத்தை நவீன முறையில் கொண்டுவருவதற்கு யந்திர முஸ்தீப்பு கொடுக்க வேண்டியதாயிற்று. அதற்கு அதிக செலவு பிடித்தது. இந்தச் செலவுக்கு ஈடுசெய்ய இந்தியச் சைனியத்தில் போர்வீரர்களின் எண்ணிக்கையைக் குறைக்க வேண்டுமென்று அபிப்பிராயம் இருந்தது. ஆனால் போர் துடங்கிய காரணத்தினால் இந்தியச் சைனியத்தை அதிகரிக்கச்செய்ய வேண்டியதாயிற்று. அதற்கு கைவசமிருக்கும் ஆயுத முஸ்தீப்பையும், யுத்த தளவாட உற்பத்தியை அதிகப்படுத்துவதையும், இன்னும் அதிக உத்தியோகஸ்தர்களுக்குப் பயிற்சி கொடுக்க போதுமான பேர்களைச் சேகரிப்பதையும் பொறுத்திருந்தது.

ஆகையால் சமுத்திரங்களைத் தாண்டி ஆபிரிக்காவுக்கு அனுப்பப்பட்ட இந்தியத் துருப்புகள், புதிய யந்திர வண்டிகளையும், ஆயுதங்களையும் கையாளுவதற்கு, எதிரிகள் அவர்களுடன் சண்டை செய்யும் பொழுதே கற்றுக்கொண்டார்கள். அங்கு சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு இந்தியர்கள் வெகு திறமையுடன் நடந்து கொண்டமாதிரியை தளகர்த்தர் ஆச்சின்லக் மிகவும் பாராட்டியிருக்கிறார். யுத்தத்தில் தீரச்செயல்கள் நிரம்பிய இடங்களில் முக்கியமாக ஸிடிபாரானி, கேரன், அம்பா அலாகா ஆகிய மூன்று இடங்களைக் குறிப்பாகச் சொல்லலாம். அங்கு புதிய இந்திய ராணுவம் தனது முழுத்திறமையையும் காண்பித்திருக்கிறது.

1941-ம் ௵ ஜூலை மாதத்தில் இந்திய ராணுவத்தின் தொகுதி 5,00,000 ஆக இருந்தது. இப்பொழுது அது இரட்டித்துவிட்டது. ஆனால் இந்தியச் சைனியத்தை திறமையிலும், முஸ்தீப்புக்கு வேண்டிய பொருள்களிலும் இன்னும் அபிவிருத்தி செய்யவேண்டிய அவசியமிருக்கிறது. தனக்குத் தேவையான எல்லாவித யுத்த சாதனங்களையும் இந்தியா இன்னும் தனிமையில் தயாரித்துக் கொள்ளுவதற்கு முடியவில்லை. இந்திய ராணுவத்தில் சேருவதற்கான நிபந்தனைகள் குறைக்கப்பட்டிருக்கின்றன. எல்லாவிடங்களிலிருந்தும் சைனியத்திற்கு ஆட்கள் திரட்டப்படுகிறார்கள். அஸ்ஸாம், பீஹார், வங்காளம் இந்த மூன்று மாகாணங்களிலும் புதிதாகப் பட்டாளங்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. மதராஸ் பட்டாளம் புதிதாக திருத்தியமைக்கப்பட்டிருக்கிறது. மஹார், மிஷ்பி (Mzbhi) ராம்தாஸி முதலிய இடங்களிலிருந்து சீக்கியர்கள் பட்டாளத்தில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். உள்நாட்டு பாதுகாப்புப் படைகளை போர் பட்டாள

மாக மாற்றப்பட்டிருக்கிறது. இந்திய ராணுவத்தில் முதலில் 8 பகுதிகள் மட்டும், பிற்பட்டு 21 பகுதிகள் இந்தியர்களுக்கு ஒதுக்கப்படவேண்டுமென்று கொண்டு வரப்பட்ட ராலின்ஸன் திட்டம் ரத்துசெய்யப்பட்டது. இப்பொழுது எல்லாப் பகுதிகளிலும் இந்திய உத்தியோகஸ்தர்கள் உயர்ந்த பதவிகளை வகிக்கலாம். இதற்குமுன் ராணுவ உத்தியோகப் பதவிக்கு டேராடனில் 2½ வருஷகாலத்திற்கு ராணுவப் பயிற்சி ஏற்பட்டிருந்தது. இப்பொழுது 18 மாதப் பயிற்சியே போது மென்று குறைக்கப்பட்டிருக்கிறது. மோவ் (Mhow) என்னுமிடத்தில் ராணுவப் பயிற்சிக்கென்று புதிதாகப் பள்ளிக்கூடம் ஒன்று ஏற்பாடாகியிருக்கிறது. அதில் பயிற்சி பெறுகிறவர்களை இந்திய விமானப்படைப் பகுதியில் சேர்த்துக்கொள்ளப் படுகிறது. இன்னும் அபிவிருத்திகள் அதிகம் ஏற்பட்டிருக்கின்றன. இதுவரை பிரிடிஷாருக்கு மட்டில் பங்களூரில் பயிற்சி கொடுக்கப்பட்டது. இப்பொழுது அங்கு இன்னும் 100 இந்திய வாலிபர்களுக்கும் பயிற்சி கொடுக்கப்படுகிறது. இந்தியர்களுக்கென்று ஏற்பட்ட மோவ் (Mhow) பள்ளிக்கூடத்தில் 100 பிரிடிஷ் வாலிபர்களுக்கும் பயிற்சிகொடுக்கப்படுகிறது. இம்மாதிரி இவ்விரண்டு பள்ளிக் கூடங்களை ஒரே நிலைமைக்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இந்த முறைகளெல் லாம் யுத்தத்தின் காரணமாக ஏற்பட்டதென்று கருதவேண்டும். இருந்த போதிலும் அவ்விரண்டு பள்ளிக்கூடங்களிலும் ராணுவப் பயிற்சி நிரந்தரமாகக் கொடுப்பதற்கு வசதிகள் கூடிய சீக்கிரத்தில் ஏற்பட்டுவிடுமென்று எதிர்பார்க்கப் படுகிறது.

"பண்டை காலத்தில் இந்திய ராணுவம் பெற்றிருந்த கியாதிக்கு ஏற்றவாறே இப்பொழுதும் இந்திய ராணுவம் நடந்துவருகிறது என்பதற்கு போர்க்களத்தில் தந்தி மூலம் வரும் அறிக்கைகளிலிருந்து தெரியவருகிறது. புதுமாதிரியான உத்தியோகஸ்தர்கள் மிகவும் திறமையுடன் நடந்து வருகிறதாகத் தெரிகிறது. ஏற்கனவே சொன்னபடி இந்திய சிப்பாய்கள் தன்னிச்சையாகவே சேர்ந்து கொண்டவர்கள். வாலிப உத்தியோகஸ்தர்களும் அதே மாதிரியாக இந்த உத்தி யோகத்தை ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் இந்தியாவிற்கு சுய ஆட்சி யாவது குடியரசு நாட்டு அந்தஸ்தாவது கொடுக்கவேண்டுமென்று விரும்புகிறவர் கள் சாம்ராஜ்யத் தற்காப்புக்காக இத்தகைய பெரிய சேவையை இந்திய ராணு வம் செய்து வருவதை மறைத்தோ அல்லது சிறுமைப்படுத்தியோ ஏன் சொல்லு கிறார்கள் என்பது எனக்குத் தெரியவில்லை. இந்திய ராணுவம் எடுத்துக்கொள்ளும் பங்கு மகத்தானது என்று சொல்லும் வார்த்தைக்கு ஒப்பாகவே இருக்கிறது. ஆனால் இந்திய ராணுவம் எண்ணிக்கையில் குறைவு என்பதை மறக்கக்கூடாது. இந்தியச் சைனியத்திற்கு பண உதவி அதிகமில்லாமலிருந்தாலும் அதற்குள் அது திறமை பெற்று விளங்குகிறது. ஆனபோதிலும் நிதி நிர்வாக கட்டுப்பாட்டினால் இந்திய ராணுவம் வளர்ச்சியடையாமல் போக நேர்ந்ததை சாட்பீல்டு ரிபோர்ட் டின் பேரில் அரசாங்கத்தார் எடுத்துக்கொண்ட நடவடிக்கையிலிருந்து தெரிய வருகிறது. இந்தியாவைப் பற்றி பிசகான வதந்திகளைக் கிளப்பிவிட்டு இந்தியாவை சாம்ராஜ்யத்தில் பிரிடிஷார் சேர்த்துக்கொள்ளாமல் இருக்கிறார்கள் என்றும், இந்தியாவில் பிரிடிஷார் அக்கிரமம் செய்கிறார்களென்றும், இருந்தாலும் ஏதோ பிரிடிஷ் ஆட்சியினால் பல ஆயிரக்கணக்கான வருஷங்களாக நாம் கனவுகொண்டி ருந்த இந்தியா பூராவும் ஒருமைப்பட்டு ஒரு தேசமென்று சொல்லக்கூடிய நிலை மையை அடைந்திருக்கிறதென்றும், சில இந்தியப் பத்திரிகைகளில் எழுதப்பட்டு வரு கிறது. இம்மாதிரி பிரிடிஷாரை அனுவசியமாகக் குறைகூறுவதினால் பின்னால் இந்தியாவை ஆளுபவர்களுக்கும் இக்கட்டுகள் சம்பவிக்கும். ஆகையால் இம்மா திரி சொல்வதை இப்பொழுதாவது நிறுத்திவிடுவது நல்லது. அப்படிச் செய் வதால் பிற்பட்டு இந்தியாவில் ஆட்சியை நடத்துபவர்களை அனுவசியமான கஷ்டங்களுக்குட்படுத்தாமலிருக்கலாம்.

## இந்தியச் சைனியம் கூலிக்காக வேலை செய்கிறதாம்.

சென்ற சில வாரங்களாக இந்திய அரசியல் முன்னேற்றத்தைப்பற்றி சொல்லப்பட்டு வந்ததோடுகூட இந்தியச் சைனியத்தைப் பற்றியும் இழிவாகச் சொல்லப்பட்டது. "150 வருஷ காலமாக பிரிடிஷ் அரசாட்சியினால் இந்தியா விற்கு ஒரு பயனுமில்லை. அட்லாண்டிக் சாஸனத்தில் இந்தியாவிற்கு ஒரு பங்கு கொடுக்கப்படவில்லை. இந்தியாவில் பிரிடிஷார் ஏராளமாகப் பணம் திரட்டி வரு கிறார்கள்" என்று சொல்லப்பட்டு வருகிறது. இதற்குப் பதிலாக இந்திய ராணுவ அபிவிருத்தியைச் சுட்டிக்காட்டினால் "அது என்ன! வயிற்றுப் பிழைப்புக்காகத் தானே இந்தியர்கள் ராணுவத்தில் சேருகிறார்கள் என்று சொல்லப்படுகிறது.'; இம்மாதிரி குறைகூறும் ஆசாமிகளில் ஒருவர் இந்தியச் சைனியத்தைக் "கூலிக்காக வேலை செய்பவர்கள்" என்று இழிவாகச் சொன்னார். அந்த விஷயத்தைப் பற்றித்தான் நான் எடுத்துக்காட்ட விரும்புகிறேன். இந்தியச் சைனியம் அதன் வேலையில் கண்ணும் கருத்துமாக இருக்கிறது என்பது வாஸ்தவம். மேலும், இந்தியச் சைனியத்தில் இந்தியாவிலுள்ள பல வகுப்பினர்கள் ஒற்றுமையாக இருப்பதோடுகூட பிரிடிஷ் சைனியங்களுடனும் ஒற்றுமையாக இருக்கிறார்கள். அன்றொரு நாள் விஷயம் தெரிந்தவர்கூட ஒருவர் இந்திய ராணுவத்தில் ஹிந்துக் களைச் சேர்க்கப்படவில்லை என்று மிஸ்டர் அமெரி பேரில் குறைகூறினார். இவ் விதம் குறைகூறினாரே ஒழிய எப்படி ஹிந்துக்களை அதிகமாகச் சைனியத்தில் சேர்க்கலாமென்று அவர் சொல்லவில்லை. ஆனால் அவருக்கு உற்சாகமூட்ட சில விஷயங்களை இங்கு குறிப்பிடுகிறேன். டோக்ராக்கள் (Dogras) ராஜபுத்திரர்கள், ஜாட்ஸ், மராட்டியர்கள் இந்த நான்கு வகை ஜாதியினரும் நேர்த்தியாகச் சண்டை செய்யத்திறமை வாய்ந்தவர்கள். அவர்கள் ஹிந்துக்கள். அவர்களுக்கு நீண்ட காலமாக ஆயுதப் பயிற்சி அளிக்கப்பட்டிருக்கிறதென்பதையும் அவருக்கு ஞாபகப் படுத்துகிறேன். இந்திய ராஜீய வட்டாரங்களில் பிரசித்திபெற்ற குடும்பத் தார்களைச் சேர்ந்தவர்கள், இந்தியச் சைனியத்தில் வாலிப உத்தியோகஸ்தர்களாக இருக்கிறார்கள். அவர்களில் சிலரைச் சந்தித்து நான் பேசியிருக்கிறேன். இந்திய தேசியக் கொள்கையில் அவர்களுக்கு இருக்கும் ஆர்வமான நம்பிக்கையை அவர்கள் மறைக்கவில்லை. காங்கிரஸ் கட்சியின் கொள்கையை அவர்கள் குற்றஞ் சாட்டி சொல்லவில்லை. இந்திய அரசாங்கத்தை சரிவர நடத்தும்படி செய்வதற்கு இந்தக் காங்கிரஸ் கட்சி தூண்டுகோலாக இருக்கிறது என்று அவர்கள் நினைக்கிறார் கள். சைனியத்தில் உத்தியோகஸ்தர்களாக வருவதற்கு அரசாங்கத்தார் அதிக மெதுவாகத்தான் வசதிகளை அளிக்கிறார்கள் என்று அவர்கள் முற்றிலும் உணர் கிறார்கள். இப்பொழுது ஸர் பிலிப் சாட்வுட் என்பவரின் தலைமையின் கீழ் டேராடனில் ஒரு ராணுவக் கல்லூரி 1932-ம் வருஷத்தில் ஸ்தாபிக்கப்பட்டது.

பொதுவாக விசாலமான நோக்கத்தையே இந்தியச் சிப்பாயும் கொண்டிருக் கிறான். பண்டைக்காலத்திலுள்ள சிப்பாய்க்கும், இப்பொழுதுள்ள சிப்பாயுக்கும் உள்ள வித்தியாசத்தைப் பார்த்தால் இருவர்களுக்கும் சில குணாதிசயங்களில் ஒற்றுமை இருக்கிறது. தீரம், ஒழுங்குப்படி நடந்துகொள்ளுதல், குடும்பத்தார் கள் பேரிலும், தேசத்தின் பேரிலும் விசுவாசம் முதலிய குணங்களில் ஒற்றுமை இருக்கிறது. இப்பொழுது இந்தியத் துருப்புகள் அந்நிய நாடுகளுக்குச் சென்று, சாம்ராஜ்யத்தின் மற்றத் துருப்புகளுடன் சேர்ந்து போர்செய்து வந்திருப்பதில் அநேக விஷயங்களைத் தெரிந்து கொண்டிருக்கிறார்கள்.

வருங்காலத்தில் யுத்தம் முடிந்து சமாதான மேற்பட்டவுடன் இந்தியாவில் பெரிய பிரச்னைகளைத் தீர்க்கவேண்டியதாக வரும். உலகத்திலுள்ள மற்ற தேசங் களுடன் அதற்குள்ள பாந்தவ்யம் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. இதுவரை அது பிரிடிஷ் அரசாங்கத்தின் கீழிருந்தது போக இனிமேல் சுயராஜ்யம் அடை வதற்கும் பிரயத்தனப்படும். இதுவரை உலகத்தில் அதிகம் விவசாயத்தில் ஈடு பட்டிருந்த தேசங்களில் இந்தியாவும் ஒன்றாகக் கருதப்பட்டு வந்தது. இனிமேல் கைத்தொழிலில் அது அதிக முன்னேற்றமடையப் போகிறது. இந்திய மக்களில் ஆண், பெண் உள்பட யாவரும் சாமர்த்தியம், தேசவிசுவாசம், போர்திறமை முதலியவைகளைக் கொண்டே வருங்காலத்தில் அரசியல் அமைப்பார்கள். அதனால் பல போரரங்கங்களில் சண்டைசெய்த போர்வீரர்கள், வினைபொருள்கள், நவீன யுத்த தளவாடங்கள் இவைகளைத் தயாரித்தவர்கள் இவர்கள் தான் வருங்காலத்தில் அரசியல் திட்டங்களைப் போடுவதற்குத் தகுதியானவர்கள். அவர்களுக்குத்தான் அவ்வித உரிமைகள் உண்டு. தற்போது அவர்கள் அரசியல் திட்டங்களை ஏற்படுத்து வதற்குத் திறமையற்றவர்கள் என்று நாம் சொல்லிவரும் அபிப்பிராயங்கள்

உபயோகமற்றவை என்று பொருட்படுத்தாமலிருப்பார்கள், என்று நான் நம்புகிறேன். தற்போது பொதுவாக உள்ள எதிரியை எதிர்த்து, ஜயம் பெறுவதற்கு ஒன்று சேரவேண்டுமென்ற உணர்ச்சி அதிகமாக இருக்கிறது. யுத்த நெருக்கடி தீர்ந்த பிறகு உலகத்தார்களுக்குள் சிநேகபாவமும், பொருளாதாரத்தில் ஒற்றுமையும், ஸ்தாபிக்க வேண்டுமென்ற பிரயத்தனத்தில் இதே உணர்ச்சியும் நிலைத்திருக்க வேண்டுமென்று நான் நம்புகிறேன்.

---

## வார யுத்தச் செய்திகள்.

### 24—10—42-லிருந்து 30—10—42-வரை.

**ருஷ்யா.**—ஸ்டாலின்கிராட்டில் பனிவிழ ஆரம்பித்துவிட்டது. மாரியால் சக்தி ஏற்பட்டு சண்டை தடைபட்டு வருகிறது. நடக்கும் சண்டையும் சிறிய பிரதேசத்தில் தான் நடக்கிறது. இந்த நகரில் சண்டை ஆரம்பமாகி இரண்டு மாதங்களாகியும் நகரம் இன்னும் எதிர்த்து நிற்கிறது. நகரத்திலிருந்து ஜெர்மானியரும் கழட்டிச்செல்ல முடியாது. முன்னேறவோ, பின்னேறவோ முடியாது. ஏதோ சீதோஷ்ண நிலை சாதகமாக இருந்தபோது ட்ஜெர்ஜினஸ்கியைப் பிடித்து அக்டோபர் தொழிற்சாலையைத் தாக்கிவருகின்றனர். கடுமையாக விமானத்தாக்குதல் இருந்தும் நகரின் கீழ் சுரங்கங்களில் சில தொழிற்சாலைகள் வேலைசெய்து வருகின்றன. வால்காவை எதிரிகள் அடைந்ததிலிருந்து நகருக்கு ஸப்ளைகள் வரமுடியவில்லை.

டிமோஷென்கோவின் உதவிப்படைகள் நகருக்கு வடக்கிலும், தெற்கிலும் முன்னேறி சில இடங்களைக் கைவசப்படுத்தின. எதிரியுடன் வடக்கிலும் சண்டை செய்தன.

கடைசி சில நாட்களாக டுவாப்ஸியில் நிலைமை மோசமாகி வந்தாலும் ருஷ்யரின் எதிர்ப்பு பலமாக இருக்கிறது. மோஸ்டக்கில் ஜெர்மானியரின் முன்னேற்றம் தடைபட்டிருக்கிறது.

**எகிப்து.**—மூன்றும் தடவையாக அக்டோபர்மீ 23உ பிரிடிஷ் முன்னேற்றம் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. தரை, கடல், விமானம் மூன்றிலும் சண்டை நடக்கிறது. எட்டாம் படையின் முன்னணித் துருப்புகள் எதிரியின் நிலைகளைத் துளைத்துச் சென்றன. எதிரியின் சுரங்க மார்க்கங்கள், கம்பி வேலிகள் முதலியவைகளும் பிளக்கப்பட்டன, அவனுடைய பலமான நிலைகளும் பிளக்கப்பட்டன. இதுவரை 15,000 பேர்கள் இதாலியரும், ஜெர்மானியரும் பிடிபட்டனர். கடலுக்கும் குவாடரா பள்ளத்தாக்குக்கும் இடையில் ரோமல் தனது நிலையைக் கெட்டியாகப் பலப்படுத்திக்கொண்டிருக்கிறான்.

**ஸாலமன்ஸ், அக்டோபர் 19.**-கூடல்கனரிலும் அமெரிக்க நிலயங்களை ஜப்பானிய விமானங்கள் தாக்கின.

**அக்டோபர் 19—20.**—கூடல்கனருக்கு அருகில் ஜப்பானிய க்ரூயிஸர் ஒன்றை அமெரிக்கக் கப்பற்படை, விமானப்படையைத் தாக்கிச் சேதப்படுத்தியது.

**அக்டோபர் 20—21.**—எதிரி ஸப்ளைக் கிடங்குகளை அமெரிக்கக் கப்பற்படை விமானங்கள் தாக்கின.

**அக்டோபர் 21.**—அமெரிக்கா இரண்டு நாசகாரிகளும், ஜப்பானிய க்ரூயிஸர் ஒன்றும், நாசகாரி ஒன்றும் சேதமாயின.

**அக்டோபர் 22—23.**—கூடல்கனருக்கும், நியூ ஜார்ஜியாவுக்கும் இடையிலுள்ள ரஸ்ஸல் தீவில் ஜப்பானியர் இறங்கினர். எஸ்பிரிடா ஸான்டோவை ஜப்பானிய நீர்மூழ்கி தாக்கியது. ஷார்ட்லண்டு தீவில் எதிரிக் கப்பல் தாக்குண்டு ஒரு சிறிய க்ரூயிஸரும், ஒரு நாசகாரியும் சேதமாயிற்று. ஒரு யுத்தக்கப்பல் அநேகமாக சேதமடைந்திருக்கலாம். கூடல்கனர் விமானத் தளங்களை ஜப்பானியர் குண்டு வீசினர்.



**அக்டோபர் 23—24.**—கூடல்கனரின் மேற்குப் பாதுகாப்பு நிலைகளை ஜப்பானிய டாங்கிகளும், பீரங்கிகளும் தாக்கின. ஆனால் திருப்பியடிக்கப்பட்டன.

**அக்டோபர் 24.**—அதுபோல மற்றொரு தாக்குதலும் திருப்பியடிக்கப்பட்டது.

**அக்டோபர் 24—25.**—அமெரிக்க விமானங்கள் ஜப்பானியக் கப்பல்களைத் தாக்கின. ஒரு க்ரூயிஸர் அநேகமாகத் தாக்கப்பட்டிருக்கும்.

**அக்டோபர் 25.**—கூடல்கனரின் மேற்கே எதிரிகள் இறங்கினர். புளோரிடா தீவிற்கு வடக்கில் ஜப்பானியக் கப்பல்கள் தாக்கப்பட்டன. ஒரு க்ரூயிஸர் சேதமுற்றது. ஸெமினோல் என்ற அமெரிக்க நாசகாரி மூழ்கடிக்கப்பட்டது.

**அக்டோபர் 25—26.**—பஸிபிக் படைகளுக்கும் விமானப் போர் நடந்தது. 22 ஜப்பானிய விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன. ஜப்பானிய விமான மேற்றும் கப்பல்கள் இரண்டும், இரண்டு பெரிய க்ரூயிஸர்களும், ஒரு சிறிய க்ரூயிஸரும் சேதமாயின. அமெரிக்க நாசகாரி போர்டர் மூழ்கடிக்கப்பட்டது.

கூடல்கனரில் எதிரித் துருப்புகளின் நடமாட்டம் இருந்துவருகிறது. முக்கியமாக அமெரிக்க வரிசைகளைப் பிளப்பதிலேயே கவனம் இருந்துவருகிறது. சைனியங்கள் அவைகளை எதிர்த்து நிலைகளை மீண்டும் பிடித்தன.

**நியூ கினி.**—ஈயோரா கிரீக்கிலிருந்து (Eora Creek) ஜப்பானியர் துரத்தப்பட்டனர். இது கொக்கோடாவிலிருந்து 12 மைல் தூரத்தில் இருக்கிறது. கொக்கோடாவிற்கும் டெனிகூனுவிற்கும் இடையிலுள்ள எதிரி நிலைகள் தாக்கப்பட்டன. அலோலா (Alola) என்ற இடத்திலிருந்தும் நேசநாட்டுத் தாக்குதல் செய்யப்பட்டன.

**அலூஷியன்.**—அக்டோபர் 23, 24 தேதிகளில் கிஸ்காவில் இரண்டு படையெடுப்புகள் செய்யப்பட்டன.

**சைனா, அக்டோபர் 17—18.**—வடகிழக்கு இஷாங், மேற்கு ஹூபே இரண்டையும் ஜப்பானியர் தாக்கினார். தென்கிழக்கு யூனானில் மென்ஜிட்ஸாவையும் தாக்கினர்.

**அக்டோபர் 20.**—ஸ்வாடவ்வை சீனத் துருப்புகள் தாக்கின. பெகின்கையும், லின்ஸியையும் நேசதேச விமானங்கள் தாக்கின.

**அக்டோபர் 25.**—நேசதேச விமானங்கள் ஹாங்காங்கையும், கௌலூனையும் தாக்கின.

**அக்டோபர் 26.**—ஹாங்காங்கில் மின்சார சாலையை நேசதேச விமானங்கள் தாக்கின. அதேமாதிரி கான்டனுக்கு வட கிழக்கிலும் தாக்கின.

**இந்தியா, பர்மா, அக்டோபர் 17.**—பர்மாவில் மொஹூயின் என்ற இடத்திற்கு வடக்கிலும், மெயிட்கிலாவிற்கு அருகில் இரண்டு நகரங்களையும் நேசதேச விமானங்கள் தகர்த்தன.

**அக்டோபர் 18.**—அஸ்ஸாமில் டிக்பாயிக்கு அருகில் எதிரி விமானம் தடுக்கப்பட்டு தாக்கவும்பட்டது.

**அக்டோபர் 25.**—வடகிழக்கு அஸ்ஸாமில் டிப்ருகாரில் எதிரி விமானங்கள் அமெரிக்க விமான தளங்களைத் தாக்கின. இரண்டு எதிரி விமானங்கள் வீழ்த்தப்பட்டன. சில பிரயாணிகள் செல்லும் விமானங்களை எதிரி சேதப்படுத்தினான். இருவர் கொல்லப்பட்டனர். ஐவர் காயமடைந்தனர். பொதுஜன ஊழியர்கள் அமைதியாக இருந்தனர்.

**அக்டோபர் 26.**—நேசதேச விமான[illegible] தாக்கி எதிரிகள் முன்னே பல கட்டடங்களை தீ மூட்டினர். [illegible] மறுபடி செய்த தாக்குதலில் எதிரி நாலு விமானங்களை இழந்தா[illegible].

**மடகாஸ்கர் அக்டோபர் 25.**—பிரிடிஷ் படைகள் அன்டானனுரிவோவிற்குத் தெற்கில் 175 மைல் தூரத்திலுள்ள அம்போஸிமஹிஸோவைப் பிடித்தன.

விமானப் படைகள்.—கீழ்கண்டவை பிரிடிஷ் விமானப் படையின் லக்ஷியங்களாக இருந்தன.

அக்டோபர் 21.—ஹாலந்து, டார்ட்மன்ட், எம்ஸ் கால்வாய்.

அக்டோபர் 22.—டூரின், ஜிேனுவா.

அக்டோபர் 23.—டூரினிலுள்ள பயட் மோட்டார் தொழிற்சாலை.

அக்டோபர் 24—25.—மிலன்.

## சத்துருவினுடையவும், சத்துருவினல் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில், பிரிடிஷ், நேசதேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படை யெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ் நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| 19—10—42. (திங்கட்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்.** | | | |
| | இரவில்.—விரோதிக்குச் சொந்தமான சமுத்திரங்களில் சுரங்க வெடிகள் போடுவது. | | | |
| | **எகிப்தும், லிபியாவும் (Egypt & Libya).** | | | |
| | ஒரு ரயில்வே இஞ்ஜின்.—எல் டாபா (El Daba)வுக்கருகாமையில். | | | |
| | இருப்புப்பாதைகளும், ரயில் போக்குவரத்தும்.—மெர்ஸாமாட்ரு (Mersa-Matruh), ஸிடிபாரானி (Sidi-Barrani) பிரதேசங்களில். | ரயில் வண்டிகள் சேதமாக்கப்பட்டன. | | |
| | கப்பல்கள், துறைமுகத்திலுள்ள கட்டடங்கள்.—டொப்ருக் (Tobruk). | | | |
| | விமானமிறங்குமிடங்களில் விரோதி விமானங்கள்.—ஸிடிஹேனிஷ் (Sidi Haneish), பூகா (Fuka), டாபா (Daba). | | | |
| | மோட்டார் போக்குவரத்து.— யுத்தப் பிரதேசத்தில். | | | |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean).** | | | |
| | விரோதிக் கப்பல்கள்.—லாம்பெடுஸா (Lampedusa)வுக்கருகாமையில். | | | |
| | சிறு கப்பல்.—கிரீட்டுக் (Crete)குத் தெற்கே. | மூழ்கடிக்கப்பட்டது. | | |
| | **ருஷ்யா (Russia).** | | | |
| | விமானச் சண்டைகள், விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்.—ருஷ்யப போர்முனை முழுவதிலும். | | | |
| | **நியூ கினி (New Guinea).** | | | |
| | ஜப்பானிய ஸ்தானங்கள்.—கொக்கோடா (Kokoda) பிரதேசத்தில். | | | |
| | **ஸாலமன் (Solomons) தீவுகள்.** | | | |
| | விரோதித் துருப்புகள், ஸப்ளைகள்.—கூடால்கனுர் (Gudalcanar). | | | |



| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படை யெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமான நஷ்டம். |
|---|---|---|---|---|
| 19—10—42. (திங்கட்கிழமை)—தொடர்ச்சி. | | | | |
| | **ரெக்காடா (Rekata) விரிகுடா.** | | | |
| | 3 விரோதி நாசகாரிகள்.—கூடால்கனுரு (Gudalcanar)க்கு மேற்கே. | 1 நாசகாரி சேதமாயிற்று. | | |
| | **அலூஷியன் (Aleutians) தீவுகள்.** | | | |
| | கடற்கரையோரமுள்ள கட்டடங்கள்.—கிஸ்கா (Kiska). | | | |
| 20—10—42. (செவ்வாய்க்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்.** | | | |
| | பகலில்.—ஹனேவர் (Hanover), வில்ஹெல்ம்ஷேவன் (Wilhelmshaven), ப்ரெமன் (Bremen) முதலிய இடங்களுக்கருகாமையிலுள்ள லக்ஷியங்கள். | | | |
| | **எகிப்தும், லிபியாவும் (Egypt & Libya).** | | | |
| | விமானச் சண்டைகள்.—எகிப்து (Egypt). | | | 11 விமானங்கள். |
| | விரோதிப் போக்குவரத்து.—கடற்கரை ரஸ்தாவில். | | | |
| | அச்சுநாட்டு விமானமிறங்குமிடங்கள், கட்டடங்கள்.—யுத்தப் பிரதேசத்திற்குப் பின்புறத்தில். | | | 3 விமானங்கள். |
| | துறைமுகம், கப்பல்கள்.— டொப்ருக் (Tobruk), எல் டாபா (El Daba). | | 3 விமானங்கள். | |
| | சாமான் வெடிமருந்து கிட்டங்கிகள், வண்டிகள்.—யுத்தப் பிரதேசத்தில். | | | |
| | **ருஷ்யா (Russia).** | | | |
| | விமானச் சண்டைகள், தரையிலுள்ள விமானங்கள்.—கிழக்குப்போர்முனை முழுவதிலும். | | | |
| | **ஸாலமன் (Solomons) தீவுகள்.** | | | |
| | விரோதிக்குச் சொந்தமான க்ரூயிஸர்.—கூடால்கனுரு (Gudalcanar)க்கு மேற்கே. | நேராகத் தாக்குண்டது. | | |
| | ஸப்ளை கிட்டங்கிகள், விரோதி ஸ்தானங்கள்.—கூடால்கனுரு (Gudalcanar)க்கு வடமேற்கே. | | | |
| | **அலூஷியன் (Aleutians) தீவுகள்.** | | | |
| | கிஸ்கா (Kiska). | | | |
| | **நியூ கினி (New Guinea).** | | | |
| | கொக்கோடா (Kokoda). | | | |
| | **பர்மா (Burma).** | | | |
| | விமானநிலயம், ரயில் வண்டிகள் பாதை மாறுமிடங்கள், விரோதி ஆக்கிரமித்த கட்டடங்கள், குடிசைகள்.—மோனிவா (Monywa). | | | |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| 21—10—42. (புதன்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்.** | | | |
| | பகலில்.—டச்சுக்காரர்கள், ஜெர்மானியர் சேர்ந்த ராணுவ முகாம். | | | |
| | தொழிற்சாலை, கியாஸ் (Gas) சேகரித்து இவ்விரண்டும் வைத்துமிடம்:—லாதென் (Lathen). | தாக்குண்டன. | | |
| | லக்ஷியங்கள்.—டார்ட்ஸ்மண்டு, (Dortsmund), (Ems) கால்வாய். | | | |
| | விமான நிலயங்கள், இன்னும் மற்ற லக்ஷியங்கள்.—ஹாலந்து (Holland). | | நஷ்டமில்லை. | |
| | நீர்மூழ்கித் தளம்.—லோரியண்ட் (Lorient). | | | 9 பைடர் விமானங்கள். |
| | விமானநிலயம்.—செர்பர்க் (Cherbourg) குக்கருகாமையிலுள்ள மாபெர்டஸ் (Maupertus). | | 3 விமானங்கள். | |
| | **எகிப்தும், லிபியாவும் (Egypt & Libya).** | | | |
| | விரோதி விமானமிறங்குமிடங்கள்.—எல் டாபா (El Daba) பிரதேசத்தில். | | | |
| | விமானச் சண்டைகள்.—விமானமிறங்குமிடங்களில். | | | 3 விமானங்கள். |
| | லாரிகள், வெடிமருந்து ஏற்றிய வண்டிகள், சாதாரண வண்டிகள்.—காம்பூத் (Gambut)துக்கும் ஸிடிபாராணி (Sidi-Barrani)க்கும் இடையேயுள்ள ரஸ்தாவில். | | | |
| | விரோதி இறங்குமிடங்கள், கூடாரங்கள்.—யுத்தப் பிரதேசத்தில். | | | |
| | **கிரீட் (Crete).** | | | |
| | விமான நிலயங்கள்.—மலீமி (Maleme). | | | |
| | **ருஷ்யா (Russia).** | | | |
| | விமானச் சண்டைகள்.—யுத்தப் பிரதேசம் முழுவதிலும். | | | |
| | **தூரக்கிழக்கு (Far East).** | | | |
| | **நியூ பிரிடன் (New Britain).** | | | |
| | விரோதியின் கப்பல்கள்.—ராபாலி (Rabaul)லுள்ள துறைமுகத்தில். | | | |
| | விரோதியின் பெரிய யுத்தப் படகு—காஸ்மாடா (Gasmata)வுக்கருகாமையில். | | | |
| | கடற்கரைகள்—லூஷான் (Luschan) துறைமுகம். | | | |
| | **டிமோர் (Timor).** | | | |
| | விரோதி ஆக்கிரமித்த பட்டணம்.—மோபிஸ்ஸி (Maobisse). | | | |
| | **சைனா (China).** | | | |
| | கைலான் சுரங்கத் தொழிற்சாலைகள்—க்யூயென (Kuyuen) க்கருகாமையில் | | | |



| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ் நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம் |
|---|---|---|---|---|
| 22—10—42. (வியாழக்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்.** | | | |
| | பகலில்.—சாமான் ரயில் வண்டி—வடபிரான்ஸ் (France). | | | |
| | வண்டிகளை அணிவகுக்குமிடம்—எமீன்ஸ் (Amiens). | | | |
| | இரண்டு கவசம்பூண்ட படகுகள்—கடற்கரைக்கருகாமையில். | | | |
| | தொழிற்சாலைகள்.—வடமேற்கு ஜெர்மனி (Germany), ரூர் (Ruhr). | | | |
| | **எகிப்தும், லிபியாவும் (Egypt & Libya).** | | | |
| | விரோதி விமானமிறங்கும் இடங்கள்—பூக்கா (Fuka) பிரதேசம். | | | |
| | கிட்டங்கிகள், முகாம்கள்—பூகா (Fuka). | | | |
| | ரஸ்தாவிலுள்ள லக்ஷியங்கள்—மாட்ரூ (Matruh) வுக்கும், ஸோலூமுக்கும் (Sollum) இடையே. | | | |
| | விமானச் சண்டைகள்—விரோதிக்குச் சொந்தமான விமான நிலயங்களில். | இன்னும் அநேக எதிரி விமானங்கள் சேதமாயின. | 6 விமானங்கள். | 6 விமானங்கள். |
| | விரோதியின் மோட்டார் போக்குவரத்து—கடற்கரை எங்கும். | | | 1 விமானம். |
| | **இதாலி (Italy).** | | | |
| | துறைமுகம், கப்பற்படை தளம்—ஜினோவா (Genoa). | | | |
| | **ருஷ்யா (Russia).** | | | |
| | விமானச் சண்டைகள், தரையிலுள்ள விமானங்கள்—கிழக்குப் போர்முனை முழுவதிலும். | | | |
| | **நியூ கினி (New Guinea).** | | | |
| | வேவு பார்த்தல்—பூனா (Buna). | | | |
| | **ஸாலமன் (Solomons) தீவுகள்.** | | | |
| | விரோதியின் கப்பல்கள்—பூயின் (Buin). | | | |
| 23—10—42. (வெள்ளிக்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்.** | | | |
| | பகலில்.—லக்ஷியங்கள்—வடபிரான்ஸ் (France), ஹாலந்து (Holland), ஜெர்மனி (Germany). | | | |
| | **எகிப்தும், லிபியாவும் (Egypt & Libya).** | | | |
| | விரோதியின் விமானமிறங்குமிடங்கள்—முன்னணிப் பிரதேசங்கள். | | | |
| | விமானச் சண்டைகள் விமானமிறங்குமிடங்கள். | அநேக விமானங்கள் சேதமாயின. | 4 விமானங்கள். | 8 விமானங்கள். |
| | விரோதி ஸ்தானங்கள்—யுத்தப் பிரதேசத்தில், டொப்ருக் (Tobruk). | | | |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படை வெடிப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| 23—10—42. (வெள்ளிக்கிழமை)—தொடர்ச்சி. | | | | |
| | **இதாலி (Italy).** | | | |
| | ஜினோவா (Genoa). | பெருந் தீக்கள் கிளம்பின. | | |
| | டூரின் (Turin). | | | |
| | ஸ்வோனியா (Savonia). | | | |
| | **ருஷ்யா (Russia).** | | | |
| | விமானச் சண்டைகள்.—கிழக்குப்போர் முனை முழுவதிலும். | | | |
| | **நியூ கினி (New Guinea).** | | | |
| | விரோதி ஸ்தானங்கள்.-டெனிகியெண்ட் (Denikiund) கொக்கோடா (Kokoda). | | | |
| | **அலூஷியன் (Aleutians) தீவுகள்.** | | | |
| | கிஸ்கா (Kiska). | | | |
| | **நியூ பிரிடன் (New Britain).** | | | |
| | கப்பல் கூட்டங்கள்—ராபால் (Rabaul). | 1 க்ரூயிஸர் சேதமாயிற்று. 8 சாமான் கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டன. | நஷ்டமில்லை. | |
| 24—10—42. (சனிக்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்.** | | | |
| | பகலில்.—விமான எதிர்ப்புகள்—வட பிரான்ஸ் (France), ஹாலந்து (Holland), ஜெர்மனி (Germany). | | | |
| | தொழிற்சாலை—ஹெங்கலோ (Hengelo), ஹாலந்து (Holland). | | | |
| | ரயில் வண்டிகள்.—வட பிரான்ஸ் (France). | | 2 விமானங்கள். | |
| | இரவில்.—விமான நிலயங்கள், தொழிற்சாலைகள், ரயில்வே ஸ்டேஷன், ரயில்வே தொழிற்சாலைகள்—வட பிரான்ஸ் (France). | | | |
| | **எகிப்தும், லிபியாவும் (Egypt & Libya).** | | | |
| | சுரங்கங்களிலிருக்கும் இடைவெளிகள்—யுத்தப் பிரதேசத்தில். | | | |
| | விரோதியின் தரைப் படைகள்—யுத்தப் பிரதேசத்தில். | | | |
| | வெடிமருந்து கிட்டங்கி—யுத்தப் பிரதேசத்திற்கருகாமையில். | பெரிய வெடிகள் கிளம்பின. | | |
| | விமான எதிர்ப்புகள்.—முன்னணிப் பிரதேசங்களில். | | | |
| | **இதாலி (Italy).** | | | |
| | பகலில்.—தொழிற்சாலைகள்-மைலான் (Milan) | பெருந் தீக்கள் கிளம்பின. | | |
| | இரவில்.—துறைமுகம், கப்பல் கட்டுமிடம்—ஜினோவா (Genoa). | | | |



| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படை வெடிப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| 24—10—42. (சனிக்கிழமை)—தொடர்ச்சி. | | | | |
| | **ருஷ்யா (Russia).** | | | |
| | விமானச் சண்டைகள், விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்—ருஷ்யப் போர்முனை முழுவதிலும். | அக்டோபர் 17-லிருந்து அக்டோபர் 24-வரை. | 5 விமானங்கள். | 114 விமானங்கள். |
| | **நியூ கினி (New Guinea).** | | | |
| | விமான நிலயம்.—லே (Lae). | | | |
| | **நியூ பிரிடன் (New Britain).** | | | |
| | விரோதியின் கப்பல்கள்.—ராபால் (Rabaul). | 17,600 டன் நிறையுள்ள கடல் விமானம் மூழ்கடிக்கப்பட்டது. | | |
| | **ஸாலமன் (Solomons) தீவுகள்.** | | | |
| | விரோதியின் தரைப்படை—கூடால்கனாலு (Gudalcanar)க்கு 300 மைல் கனுக்கு வடகிழக்கே. | 1 க்ரூயிஸர் மூழ்கடிக்கப்பட்டது. | | |
| | பூயின் (Buin). | | | |
| 25—10—42. (ஞாயிற்றுக்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்.** | | | |
| | பகலில்.—ரயில்வே தொழிற்சாலைகள், மற்ற தொழிற்சாலைகள்.—ஆக்கிரமித்த பிரதேசத்தில். | | | |
| | **எகிப்தும், லிபியாவும் (Egypt & Libya).** | | | |
| | விரோதி ஸ்தானங்களின் பேரில் வெடிகுண்டுப் பிரயோகம்.—யுத்தப் பிரதேசத்தில். | | | |
| | விரோதியின் கவசம்பூண்ட வண்டிகள், மற்றும் துருப்புகள்.—விரோதி சைனியங்களுக்குப் பின்னால். | | | |
| | விமான எதிர்ப்புகள்.—முன்னணிப் பிரதேசங்கள். | | | 7 விமானங்கள். |
| | விமான மிறங்குமிடங்கள்—பூகா (Fuka), டாபா (Daba). | | | |
| | வியாபாரக் கப்பல்.-ஆபிரிக்கா (Africa) கடற்கரை யோரத்தில் (Tobruk). | | | |
| | **ருஷ்யா (Russia).** | | | |
| | விமானச் சண்டைகள், தரையிலுள்ள விமானங்கள்.—ருஷ்யப் போர் முனை எங்கும். | | | |
| | **நியூ பிரிடன் (New Britain).** | | | |
| | விரோதியின் கப்பல்கள்.—ராபாலி (Rabaul) லுள்ள துறைமுகம். | | | |
| | **நியூ கினி (New Guinea).** | | | |
| | ஒரு பிரதேசம்.—வெய்ரோபி (Wairopi)க்குத் தெற்கே. | | | |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
| --- | --- | --- | --- | --- |
| 25—10—42. (ஞாயிற்றுக்கிழமை)—தொடர்ச்சி. | | | | |
| | நியூ அயர்லாந்து (New Ireland). | | | |
| | விரோதியின் பெட்ரோல் கிட்டங்கிகள்.—காயெங் (Kauieng). | | | |
| | டிமோர் (Timor). | | | |
| | விமான நிலயம்.-கோயபாங் (Koepang). | | | |
| | ஸாலமன் (Solomons) தீவுகள். | | | |
| | விரோதியின் க்ருயிஸர்படை.—பிளோரிடா (Florida) தீவிற்கு வடக்கே. | | | |
| | விமான தளம்.—கூடால்கானர் (Gudalcanar). | | | |
| | ஹாங்காங் (Hongkong). | | | |
| | கப்பல் துறைகள், கப்பல்கள்.—ஹாங்காங் (Hongkong) பிரதேசத்தில். | | | |
| | கப்பல் துறைகள், பண்டக சாலைகள், கப்பல்கள்.—ஹாங்காங்–கௌலூன் (Hongkong-Kowloon) பிரதேசம். | | | 13 விமானங்கள். |
| | ஹாங்காங் (Hongkong). | | | |
| | கௌலூன் (Kowloon). | | | |

## விரோதிகளின் விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.

| தேதி. | லக்ஷியங்கள். | விமானங்களிலிருந்து குண்டுகள் போடுவதினால் ஏற்படும் சேதம். | விரோதி விமான நஷ்டம். | பிரிடிஷ் நேசதேச விமான நஷ்டம். |
| --- | --- | --- | --- | --- |
| 20—10—42. (செவ்வாய்க்கிழமை). | | | | |
| | பிரிடன் (Britain). | | | |
| | தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | மத்தியதரைக்கடல் (Mediterranean). | | | |
| | மால்டா (Malta). | | 1 விமானம். | நஷ்டமில்லை. |
| | ருஷ்யா (Russia). | | | |
| | ஸ்டாலின்கிராட் (Stalingrad). | | | |
| | ருஷ்யப் பாதுகாப்புகள்.—மோஸ்டாக் (Mozdok) பிரதேசம். | | | |
| 21—10—42. (புதன்கிழமை). | | | | |
| | பிரிடன் (Britain). | | | |
| | பகலில்.—ஒரு இடம்—இங்கிலாந்தி (England)ன் தென்மேற்கே. | | | |
| | இரவில்.— | | | |
| | மத்தியதரைக்கடல் (Mediterranean). | | | |
| | மால்டா (Malta). | | 4 விமானங்கள். | |



| தேதி. | லக்ஷியங்கள். | விமானங்களிலிருந்து குண்டுகள் போடுவதினால் ஏற்படும் சேதம். | விரோதி விமான நஷ்டம். | பிரிடிஷ் நேசதேச விமான நஷ்டம். |
| --- | --- | --- | --- | --- |
| 21—10—42. (புதன்கிழமை)—தொடர்ச்சி. | | | | |
| | ருஷ்யா (Russia). | | | |
| | ஸ்டாலின்கிராட் (Stalingrad). | | | |
| | ஸாலமன் (Solomons) தீவுகள். | | | |
| | விமானதளம்.—கூடால்கனர் (Gudalcanar). | | 2 விமானங்கள். | 9 விமானங்கள். |
| 22—10—42. (வியாழக்கிழமை). | | | | |
| | பிரிடன் (Britain). | | | |
| | காலையில்.-அங்குமிங்கும் சில இடங்கள் லண்டனி(London)ல் கடற்கரையோரங்கள். | | | |
| | இரவில்.-விமான நடமாட்டமேயில்லை. | | | |
| | மத்தியதரைக்கடல் (Mediterranean). | | | |
| | மால்டா (Malta). | | 5 விமானங்கள். | |
| | ருஷ்யா (Russia). | | | |
| | ஸ்டாலின்கிராட் (Stalingrad). | | | |
| | ஸாலமன் (Solomons) தீவுகள். | | | |
| | விமானதளம்.—கூடால்கனர் (Gudalcanar). | | | |
| 23—10—42. (வெள்ளிக்கிழமை). | | | | |
| | பிரிடன் (Britain). | | | |
| | பகலில்.—அங்குமிங்கும் சில இடங்கள் இங்கிலீஷ் கால்வாய் (English-Channel) கடற்கரையில். | | | |
| | மத்தியதரைக்கடல் (Mediterranean). | | | |
| | மால்டா (Malta). | | 3 விமானங்கள். | |
| | ருஷ்யா (Russia). | | | |
| | ஸ்டாலின்கிராட் (Stalingrad). | | | |
| | நியூ கினி (New Guinea). | | | |
| | மோர்ஸ்பி (Moresby) துறைமுகம். | | | |
| | ஸாலமன் (Solomons) தீவுகள். | | | |
| | விமான நிலயம்.—கூடல்கனர் (Gudalcanar). | | | |
| 24—10—42. (சனிக்கிழமை). | | | | |
| | பிரிடன் (Britain). | | | |
| | இரவில்.—பட்டணங்கள்—லண்டனு (London)க்குக் கிழக்குக்கரை, வடகிழக்குக்கரை. | | | |
| | மத்தியதரைக்கடல் (Mediterranean). | | | |
| | மால்டா (Malta). | | | |
| | ருஷ்யா (Russia). | | | |
| | ஸ்டாலின்கிராட் (Stalingrad). | | | |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானங்களிலிருந்து குண்டுகள் போடுவதினால் ஏற்படும் சேதம். | விரோதி விமான நஷ்டம். | பிரிடிஷ் நேசதேச விமான நஷ்டம். |
|---|---|---|---|---|
| 25—10—42. (ஞாயிற்றுக்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain).** | | | |
| | இரவில்.—மிட்லாந்தி (Midlands) உள்ள ஒரு பட்டணம், இங்கிலாந்தி (England)ன் தென்கிழக்குக் கடற்கரையில் இரண்டு இடங்கள். | | | |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean).** | | | |
| | மால்டா (Malta). | | 1 விமானம். | |
| | **ருஷ்யா (Russia).** | | | |
| | ஸ்டாலின்கிராடு (Stalingrad). | | | |
| | **ஸாலமன் (Solomons) தீவுகள்.** | | | |
| | கூடால்கனர் (Gudalcanar). | | | |
| | **இந்தியா (India).** | | | |
| | ஒரு விமானக்கூடம்.—அஸாமில் (Assam). | | | |
| 26—10—42. (புதன்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain).** | | | |
| | பகலில்.—தெற்கு இங்கிலாந்தி (England)ல் பல பிரதேசங்கள். | | | |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean).** | | | |
| | மால்டா (Malta). | | | |
| | **ருஷ்யா (Russia).** | | | |
| | ஸ்டாலின்கிராடு (Stalingrad). | | | |
| | **ஆஸ்திரேலியா (Australia).** | | | |
| | டார்வின் (Darwin) துறைமுகம். | | | |
| | **ஸாலமன் (Solomons) தீவுகள்.** | | | |
| | கூடால்கனர் (Gudalcanar). | | | |
| | **இந்தியா (India).** | | | |
| | விமானதளம்.—அஸாமி(Assam)ல். | | | |

---

# யுத்தக் குறிப்புகள்.

---

**சமாதானத்தை ஏற்படுத்துவது.** அக்டோபர் 21ல் தென் ஆபிரிக்க பிரதம மந்திரி பீல்டுமார்ஷல் ஸ்மட்ஸ் பிரிடிஷ் பார்லிமெண்டு சபைகளின் முன்பாகப் பேசும் போது யுத்தத்திற்குப் பின் உலகம் இருக்கவேண்டியதைப்பற்றி அதிகமாக எடுத்துரைத்தார். இப்போது நடக்கும் யுத்தம், சென்ற யுத்தத்தின் தொடர்ச்சியென்றும் இடைகால ஓய்வு ஒரு உணர்ச்சி பொருந்திய காலமென்றும் சொன்னார். மேலும் தற்போது உள்ள சந்தர்ப்பத்தில் நாம் முன்னேற்றப் போருக்குத் தயாராக இருக்கிறோமென்றும் சொன்னார். இருந்தாலும் வரும் காலத்தைப்பற்றிதான் அதிகம் எடுத்துச் சொன்னார். "நாம் சாதாரணமாக அரசியல் கொள்கைகளை விட்டு மீறிச் செல்லவேண்டும். இனி சம உரிமைக் கட்சியோ, பொதுவுடமைக் கட்சியோ, அதுபோன்ற எந்தக் கட்சியே எஞ்சியிருக்கமுடியாது. ஆனால் யாவருக்கும் பொதுவான நியாயம், முதலியவைகளை வழங்குவோம். இந்த யுத்தம் மனித ஸ்வதந்திரத்திற்காகப் புரியப்படுவதே.



யுத்தத்திற்குப் பின்னர் எவ்வாறான லக்ஷியத்தைக்கொண்டு சமூகம், சர்வதேச அமைப்பு முதலியவைகளை ஏற்படுத்தப் போகிறோம் என்ற கேள்விகளைச் சிலர் கேட்பது விசித்திரமாக இருக்கிறது. இவைகளுக்குப் பதில் கூறும் விதமாக சர்ச்சிலும், ரூஸ்வெல்ட்டும் ஒரு சாஸனத்தை ஏற்படுத்தியிருக்கிறார்களே. அதற்கு கொஞ்ச நாள் கிரமித்து ரூஸ்வெல்ட்டு நான்கு ஸ்வதந்திரங்களைப்பற்றிச் சொன்னார். யுத்தத்தைப்பற்றி முதலில் ஒரு சரியான அபிப்பிராயம் வேண்டும். அது இல்லாவிட்டால், யுத்தத்தில் பாதகம் ஏற்படலாம். வரும் காலத்தில் க்ஷேமம் கிடைக்குமென்ற நம்பிக்கையிருந்தால் தான் யுத்தத்தில் உத்ஸாகம் ஏற்படும். அதற்காக தற்போதே சில ஏற்பாடுகளை மனதில் வைத்துக் கொள்ளுவதும் நலம் தான். ஆனால் யுத்தத்தை ஜயிக்க வேண்டுமென்றால் தைரியம் வேண்டும். ஆகவே ஸர்வதேசச் சங்கம் போன்ற ஒரு நன்கு அமைக்கப்பட்ட ஸ்தாபனத்தை அவர் விரும்பியதாகவே சொல்லலாம். இத்துறையில் அட்லாண்டிக் சாஸனம் மனிதரின் ஸ்வதந்திரத்திற்கும், உலகத்தின் ஒற்றுமைக்கும் அடிப்படையானது. ஸர்வதேச ஒற்றுமையின் பேரில் குற்றவாளிகளைத் தண்டிக்க நாம் ஏற்பாடு செய்வோம்.

வி வி வி வி வி வி வி

**ஒரு வேற்றுமை.** அக்டோபர் 27ல் வெண்டல் வில்கி நியூ யார்கிலிருந்து செய்த ஒலிபரப்பு அமெரிக்கர்கள் யுத்தத்திற்குத் தயார்செய்யவேண்டுமென்று வற்புறுத்த செய்யப்பட்டதாயினும் வருங்கால உலக சமாதானத்தை உலக கோளங்களுக்கு ஏற்றதாகச் செய்ய வேண்டுமென்று சொன்னார். இது அவ்வளவு உயர்ந்த சிபார்சு ஆகாது. ஸ்மட்ஸைப் போல் இவருக்கு அவ்வளவு அனுபவமில்லையென்று தெரிகிறது. நேசநாடுகளுக்குள் முதல் தரம், இரண்டாம் தர மென்ற வித்தியாசம் போர்க்களத்தில் வேண்டுமென்கிறார். அப்படிச் செய்தால் பலநாட்களாக வெவ்வேறு நாடுகளுக்கு இருந்துவரும் முக்கியத்வமும் மாறுபாடுகளும் மாறிவிடுமென்று அவர் அபிப்பிராயப்படுகிறார். அமெரிக்க யுத்த ஸப்ளை மிகக் குறைவு என்கிறார். யுத்த சாமான்களை ஒரே இரவில் ஜொப்பிடு வித்தையால் செய்து முடித்துவிடலாமென்கிறார். இரண்டாம் போர்முனையை ஏற்படுத்துங்கள் என்கிறார். யார் வேண்டாமென்கிறார்கள். ஆனால் எப்போ, எங்கே என்பதல்லவா பிரச்னையாக இருக்கிறது. அரசியல் நிபுணர்களும், வீரர்களும் தவறுதலே செய்யவே மாட்டார்களாம். ஆனால் அவர்கள் பொது ஜன மனப்பான்மையை அனுசரிக்க வேண்டுமென்கிறார். இவ்விதம் பேசும்போது ஜனநாயக ஆட்சி முறையில் குற்றம் செய்யும் யாவரும் தான் தண்டனைக்கு உட்படவேண்டும் என்பதை மறந்துவிட்டார்.

வி வி வி வி வி வி வி

**போர்முனைகள்** 1. எகிப்து. முன்னேற்றப் போர் நடத்த சந்தர்ப்பம் வந்திருக்கிறது, "இதைத் தவரவிடக்கூடாது என்று" (அக்டோபர் 21) ஜெனரல் ஸ்மட்ஸ் கூறியிருக்கிறார். அதே தினத்தில் எகிப்தில் பிரிடிஷ் முன்னேற்றம் ஆரம்பமாயிற்று. எல் அலமீனில் ரோமலின் முன்னேற்றத்தை ஆசின்லக் நிறுத்தியதிலிருந்து இருகட்சிகளும் மறுபடி தாக்குதலுக்குத் தயார் செய்துகொண்டிருந்தன. சென்ற மாதம் ரோமல் முதலில் ஆரம்பித்தான். ஆனால் திருப்பியடிக்கப்பட்டான். பெர்லினில் ஹிட்லர் பிரசங்கத்தின்போது தனது குறையைத் தெரியப்படுத்தி மீண்டும் உதவி கோரவே ரோமல் சென்றான். அதற்குப் பதில் கூறும்விதமாக மால்டாவைத் தாக்கி மத்தியதரைக்கடல் வழியாக ஸப்ளைகளை ஹிட்லர் அனுப்பினான். ஆனால் ஆங்கிலேய-அமெரிக்கப் படையெடுப்புகளால் அந்த ஸப்ளை தளங்களுக்குக் கெடுதி ஏற்பட்டது. பிரிடிஷ் நீர்மூழ்கித் தாக்குதலும் ஏற்பட்டது. ரோமலுக்கு ஸப்ளை கிடைக்கும் தளமான ஜினோவாவும் தாக்குண்டது. இவைகளின் பயனாக ஸப்ளைகள் ரோமலுக்குப்போய்ச் சேரவில்லை. புதிய இதாலியப் படை ஒன்று ரோமலுடன் சேர்ந்திருக்கிறது. மொத்தம் எதிரிக்கு 5-லக்ஷம் பேர்களிருக்கின்றனர். தற்போது செய்யப்பட்ட பிரிடிஷ் தாக்குதல் சரியான சந்தர்ப்பத்தில் செய்யப்பட்டிருக்கிறது

சண்டை கடுமையாகத் தானிருக்கும். போர்முனை மிகக்குறுகலாக இருக்கிறது. எதிரிக்கு மறுகிச்செல்ல வசதி குறைவு. இருகட்சியினரும் பலமாகத் தற்காப்பு செய்துகொண்டிருக்கின்றார். ஆனதால் திடீரென ஒரு மாறுதலை எதிர்பார்க்க முடியாது. இருந்தாலும், ஆரம்பத்தில் பிரிடிஷாருக்கு வெற்றிக்கான சகுனங்களிருக்கின்றன.

வி வி வி வி வி வி வி

**ருஷ்யா.** ஸ்டாலின்கிராட்டைப் பிடித்துவிடுவதாகச் சொன்ன ஹிட்லரின் கூற்று பலிக்கவில்லை. இப்படியே இவ்வருஷம் ஸ்டாலின்கிராடு இருந்துவிடும். மண் சண்டையாக மாறியிருக்கிறது. மண்மாரியும் பெய்கிறது. சிறிதளவு எதிரி முன்னேறியும் இருக்கிறார்கள். ட்ஜெர்ஜவிஸ்கியைப் பிடித்து ருஷ்ய எஃகுத் தொழிற்சாலையையும் தாக்கிவருகிறான். ஜெர்மன் பீரங்கிகள் வால்காவிற்கு அருகில்வந்து ருஷ்ய ஸப்ளைகளைத் தடுத்துவருகின்றன.

டுவாப்ஸி முனையிலும் முன்னேறியிருப்பதாக எதிரி சொல்லுகிறான். ஆஸ்டராகானில் புதிய தாக்குதல் ஏற்பட்டிருக்கிறது.

வி வி வி வி வி வி வி

**ஸாலமன்.** அமெரிக்கர்களை வெளியேற்ற ஜப்பானியர் எல்லா படைகளையும் திரட்டிவருகின்றனர். பெரும் க்ரூயிஸர்கள் போதாதென்று சண்டைக் கப்பல்களையும் கொண்டு வந்திருக்கிறான். நியூ கினியில் தற்காப்புப் போர் செய்துவருகின்றனர். அங்கிருக்கும் விமானங்கள் போராததால் கோராடித் தொழிற்சாலைகளிலிருந்து விமானங்களை அனுப்பிவருகின்றனர். நடுத்தரமான விமானங்களே ஈடுபடுகின்றன. கூடால்கனலில் ஜப்பானியர் இருந்தும் விமான தளங்களை அவர்களால் ஸ்வாதீனப் படுத்த முடியவில்லை.

வி வி வி வி வி வி வி

**லே க்ருஸாட் (Le Crusot).** அக்டோபர் 17ல் லே க்ருஸாட்டில் பகல் காலத்தில் செய்யப்பட்ட பிரிடிஷ் விமானப்படைத் தாக்குதல் பல விஷயத்தில் முக்கியமானதாக இருக்கிறது. அதாவது போடப்பட்ட குண்டுகள் அதிகம். குறிதவறாமல் போடப்பட்டு சேத முண்டாக்கப்பட்டது. நமக்கு ஏற்பட்ட நஷ்டமும் குறைவு. 91 அவ்ரோ லங்காஸ்டர் விமானங்கள் சென்றதில் ஒரு விமானம்தான் திரும்பிவரவில்லை. பகல் காலத்தில் செய்யப்பட்ட தாக்குதல்களில் அன்று அங்கு செய்யப்பட்டதே மிகக் கடுமையானது. தாக்குதல் 7 நிமிஷங்கள்தான் நடந்தது.

வி வி வி வி வி வி வி

**மால்டாவின் வீரத்தனம்.** அக்டோபர் 21ல் விமான மந்திரி ஆர்ச்பால்டு ஸிங்கிளேர் காமன்ஸ் சபையில் அறிவித்தபடி மால்டாவில் அக்டோபர் 19லியோடு 1,660 படையெடுப்புகள் நேர்ந்திருக்கின்றன. ஸெப்டம்பர் 20ல் வரை 1,386 பேர் இறந்திருக்கின்றனர். இதுவரை 6,704 கட்டடங்கள் இடிந்து போயின. இல்லஸ்டிரேடட் லண்டன் நியூஸ் பத்திரிகை கீழ்கண்ட விவரங்களைக் கொடுத்திருக்கிறது.

“மால்டா மீது அச்சுநாட்டுப் படையெடுப்புகள் நேர ஆரம்பித்ததிலிருந்து அதன் தோற்றமே மாறிவிட்டது: மாதாக்கோவில்களின் மேலிருந்த சிகரங்களும், ஸ்தூபிகளும் காணப்படவில்லை. ஸெயிண்டு ஜான் கட்டடங்களில் சேதமாகாத பாகமே கிடையாது. அங்கிருக்கும் கவர்னர் மாளிகையும் ஆபெர்ஜ (Auberge) கண்காக்ஷிசாலையும் சேதமாயின. அந்தக் கண்காக்ஷிசாலையில் தற்போது ஒன்றுமே மீதமில்லை. இதுபோல் பிரசித்தமான நாடகசாலையும் பல மாதாக்கோவில்களும் அழிந்து போயின. புராதனமான கட்டடங்களில் இடிந்த தளவாடமே மீதமிருக்கிறது. மால்டாவில் பிளாரியனவில் இருந்த தோட்டங்களும், ஸெயிண்டு டப்ளியன் மாதாக்கோவிலும் அழிந்து போயின. கடற்கரைப் பிரதேசமான ஸ்லீமா (Sleima)வும் அங்கிருந்த நாடகசாலையும், மூன்று மாதாக்



கோவில்களும் அதிகமாகச் சேதமடைந்தன. ஆனால் இவ்வளவு சேதமேற்பட்டும் அந்தத் தீவின் ராணுவ பலத்தில் கொஞ்சமும் குறை ஏற்படவில்லை. எப்போதும் போல் ஜனங்கள் நடமாட்டம் செய்து வருகின்றனர். படையெடுப்பு முடிந்த எச்சரிக்கை கொடுத்த உடனே மறு படையெடுப்பு சங்கு ஒலிக்கும். இருந்தாலும், எதிரி விமானங்கள் ஏராளமாகவும் சேதமாக்கப்பட்டன. மே மாத மத்திவரையில் 507 எதிரி விமானங்கள் கைப்பற்றப்பட்டன. சமீபத்தில் விமானத் தலைவர் ஸர் ஆர்தர் சொன்னதாவது “இதாலியோடு சண்டை துவக்கிய ஆரம்பத்தில் மால்டாவில் ஒரு விமானங்கூட இல்லை. இப்போது மற்ற இடங்களைக்காட்டிலும் மால்டா அதிகம் பலப்படுத்தப்பட்டிருக்கிறது.” சுமார் 350 வருஷங்களுக்குமுன் மால்டா துருக்கியர்களை எதிர்த்து நின்றது என்றும் தற்போது மால்டா வாசிகள் அனுபவித்துவரும் தொந்தரவால் உலகிற்கு என்ன தர்மம் கிடைக்குமென்று யார் சொல்ல முடியும் என்றும் ஸிபில்டோபி சொன்னார்.”

வி வி வி வி வி வி வி

**நீர்மூழ்கி இடைஞ்சல்.** கப்பல் இலாகா மந்திரி மிஸ்டர் A. V. அலெக்ஸாண்டர் சமீபத்தில் அறிவித்தபடி இந்த யுத்தம் ஆரம்பித்தபிறகு 530 அச்சுநாட்டு நீர்மூழ்கிகள் மூழ்கடிக்கப்பட்டிருக்கின்றன. இந்தக் கணக்கில் 1940-ம் வருஷ ஜூன் மாதத்திற்கு முன் பிரெஞ்சுக் கப்பற்படையாலும் ருஷ்யர்களாலும் மூழ்கடிக்கப்பட்ட விவரம் சேர்க்கப்படவில்லை. நீர்மூழ்கித் தொந்தரவு அதிகரித்து வரும் இந்த நாளில் முன் கொடுத்த விவரம் வரவேற்கக்கூடியதே. இவைகளை ஈடு செய்வதற்கு ஜெர்மானியர் அதிக ஏற்பாடு செய்திருப்பதாக நமக்குத் தெரியவில்லை. நீர்மூழ்கிகளை நடத்திச் செல்லும் மாலுமிகளை சீக்கிரத்தில் ஈடுசெய்ய முடியாது. அதற்கு லாயக்கான பேர்களைக் கண்டுபிடிப்பதும் அரிது. பயிற்சி கொடுப்பதும் அரிது.

வி வி வி வி வி வி வி

**யுத்தக் கப்பல்கள்.** புதிதாக அன்ஸான், ஹோவ், என்ற இரண்டு பிரிடிஷ் யுத்தக் கப்பல்கள் தயாரிக்கப்பட்டிருப்பதாக அறிவித்ததிலிருந்து கிங் ஜார்ஜ் பிப்த் (King George V) இனத்தில் ஆறு கப்பல்களிருக்கின்றன. ஜெர்மனி வசத்தில் டர்பிட்ஸ் என்ற ஒரே யுத்தக் கப்பல் இருக்கிறது. கப்பல் கட்டும் புதிய திட்டங்களின் பயனாகவே இப் புதிய கப்பல்கள் தயாரிக்கப்பட்டிருக்கின்றன. இவைகள் சமீபத்தில் ருஷ்யாவிற்கு ஸப்ளைகளை ஏற்றிக்கொண்டு ஆர்க்டிக் கடல் வழியாகச் சென்றன.

வி வி வி வி வி வி வி

**ராணுவச் சட்டம்** ஸெர்ப்பியாவில் அமுல் படுத்தப்பட்டிருக்கிறது. இது யூகோஸ்லாவியாவின் தென்கிழக்குப் பக்கத்தில் இருக்கிறது. நாஸிகளின் பயங்கரமான அடக்கு முறை இங்கே பலிக்கவில்லை. 1,50,000 பேருள்ள ஸ்வதந்திரப்படை ஜெனரல் டிராகாமி ஹெய்லாவிட்சின் கீழ் கிளம்பி க்ரேஷியாவிற்குள் சென்றிருக்கின்றனர். இதற்குப் பிரதியாக பூராவாக பல கிராமங்கள் அழிக்கப்பட்டன. பீடர் மன்னர் நாட்டை விட்டு வெளியேறின பிறகு துவக்கமான இயக்கம் பலமடைந்து வருகிறது. சில தேசாபிமானிகளை ஜெர்மானியர் முதலில் காவாலிகள் என்று சொன்னார்கள். தற்போது அவர்களைக் கலகக்காரர்கள் என்கிறார்கள். இவர்களை அடக்க ராணுவச் சட்டம் அமுலிலிருந்து வருகிறது.

வி வி வி வி வி வி வி

**நாஸித் திருட்டுத்தனம்.** பொருளாதார யுத்த இலாகா மந்திரியின் காரியதரிசியான மிஸ்டர் டிங்கின்புட் என்பவரின் அபிப்பிராயப்படி பிரான்ஸில் இருக்கும் ஆக்கிரமணச் சைனியத்தின் ஆறுமாதச் செலவிற்கு 3,000 லக்ஷம் பிராங் நாணயத்தை பிரான்ஸ் கொடுக்க வேண்டுமென்று கட்டாயப்படுத்தப்படுகிறதாம். இது சாதாரணமாக யுத்தத்திற்கு முன் பிரான்ஸின் மொத்த வரவு செலவு தொகையில் 1½ மடங்காகும். சென்ற யுத்தத்திற்கு பிறகு யங் திட்டப்படி (Young plan) ஜெர்மனி கொடுக்க

வேண்டுமென்று சொன்ன தொகையைப்போல் இரட்டிப்பு மடங்காகும். பிரான்ஸ் கொடுக்கவேண்டுமென்று நிர்ப்பந்திக்கப்படும் தொகையைக் காட்டிலும் குறைவாகத்தான் ஆக்கிரமணச் சைனியத்தின் செலவு பிடிக்கும். இந்தச் செலவு போக மீதமுள்ள பணத்தைக்கொண்டு நாஸிகள் பிரெஞ்சுத் தொழிற்சாலைகளை விலைக்கு வாங்கி வருவதாகச் சொல்லப்படுகிறது.

வி வி வி வி வி வி வி

**பரஸ்பர விரோதம்.** பொருளாதார பிரச்னையாலும், உள்நாட்டு சச்சரவாலும் இராக் மந்திரி சபையில் சில மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன. இது சம்பந்தமாக அச்சுநாடுகளின் வக்கிர மான பிரசாரத்தைப்பற்றிச் சொல்லலாம். பழைய மந்திரி சபை மாறியதற்கு பிரதம மந்திரி நூரி ஸயத்திற்கும், பிரிடிஷ் ஸ்தானிகருக்கும் ஏற்பட்ட மனஸ்தாபம் காரணமென்றனர். மற்றொரு தடவையில் அவனுக்கு பிரிடிஷாரின் பேரில் அதிக பிரியமிருப்பதால் தேசாபிமானிகள் அவனைத் துரத்தியதாகவும் சொல்லினர். அதற்காக அவனும் அவனது சகாக்களும் லெபானனுக்கு ஓடவேண்டி வந்ததாம். இந்த இரண்டு அறிக்கைகளும் பரஸ்பரம் விரோதமானவை. நூரிஸயதும் அவனது சகாக்களும் பாக்தாத்தில் இருக்கின்றனர். இவன் ஐந்தாம் தடவையாக பிரதம மந்திரியாக இருக்கிறான். முன்பு இருந்த நிபந்தனைகளின்படி பிரிடிஷ் அரசாங்கத்திற்கும் இராக்கிற்கும் சிநேகம் இருக்கிறது. அல்இராக் பத்திரிகை எழுதுவதாவது :—இக்காலத்தில் உலக நிலைமையில் பிரிடன் செய்து வரும் உதவிக்கு இராக் விசுவாஸமுள்ளதாக இருக்கிறது.

வி வி வி வி வி வி வி

**ஆங்கிலேயருக்கு துருக்கி உறவு.** இந்த உதவியின் மூன்றும் வருஷக்கொண்டாட்டம் அக்டோபர் 19-ல் நடந்தது. அதன் பிறகு ஜப்பானிய அட்மிரல் நோமூராவும், ஏபியும் துருக்கிக்கு வந்தனர். மூவரசு ஒப்பந்தத்தில் இவ்விருவர்களும் கையெழுத்திட்டிருக்கின்றனர். துருக்கியின் நல்லெண்ணத்தைப் பெறவே இவர்கள் அங்கு வந்திருக்கின்றனர். ஆனால் நடுநிலைமையின் உறுதிதான் வெளிவந்தது. ஆகவே வந்த வழிபோய் விட்டனர்.

இது இவ்வாறு இருக்க பிரிடனின் உறவு மிகவும் ஊர்ஜிதமாக இருக்கிறது. 1940 நவம்பர் 1உ ஜனாதிபதி இனோனு 'இந்த சிநேகம் திடமாக இருக்கிறதென்றார்'. அதற்கு பிற்பட்டு அச்சுநாட்டு சூழ்ச்சிகள் பல நடந்தும் இருக்கின்றன. பிரிடனுடன் சிநேகம்தான் நிலைத்திருக்கிறது. அங்காரா ரேடியோ கூறும் விதமாக 'எல்லாத் துருக்கியும், உண்மை சிநேகித நாடான பிரிடனையே வரவேற்றது.'

வி வி வி வி வி வி வி

**லிபரியா.** இங்கே அமெரிக்கத் துருப்புகள் இறங்கிய விவரத்தைப்பற்றி மேலும் சில தகவல்கள் கிடைத்துள்ளன. சென்ற நூற்றாண்டில் அமெரிக்கக் குடியேற்ற நாட்டுச் சங்கம் விடுவிக்கப்பட்ட நீக்ரோ அடிமைகளை இங்கே அனுப்பிவந்தது. லிபரியாவை முதல் முதலில் ஜெஹூடி ஆஷ்மன் என்பவர் கண்டு பிடித்தார். மெஸுராடோ (மான்ரோவியா) முனையில் 1882-ல் இவர் குடியேறினார். 1847-ல் லிபரியாவிற்கு ஸ்வதந்திரம் வழங்கப்பட்டது. அமெரிக்க அரசாங்கத்தைப்போல் ஒரு அரசாங்கம் அமைக்கப்பட்டது. 1925-ல் அமெரிக்க டயர் கம்பேனிக்கு ரப்பர் உற்பத்தி செய்ய ஏராளமான பிரதேசம் கொடுக்கப்பட்டது. அதிலிருந்து துறைமுகங்களும், ரயில்வேக்களும், ரஸ்தாக்களும் போட அனுமதிக்கப்பட்டது.

நீக்ரோ ஜாதியாரின் குடியரசுகளில் லிபரியா ஒன்று. மற்றொன்று ஹெய்ட்டி. மான்ரோ என்பதுதான் முக்கிய துறைமுகம். தலை நகரமும் அதுதான். அதன் தெற்கு முனையில்தான் பால்மாஸ் முனையிருக்கிறது. இங்கே பூ படகுகள் வைக்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது.

வி வி வி வி வி வி வி

**எதிரிக் கப்பல் நஷ்டம்.** எதிரி தனக்கு நேரும் கப்பல் நஷ்டத்தின் விவரங்களைச் சரியாக கொடுப்பதில்லையாதலால் கீழே கொடுக்கப்பட்டிருக்கும் கணக்குகளிலிருந்து உண்மைகளைத் தெரிந்துகொள்ளலாம்.



ஜெர்மனி யுத்தத்திற்கு முன் 45,00,000 டன் இடைக்கு வியாபாரக் கப்பல்கள் இருந்தன. அதில் 40,00,000 டன்கள் மூழ்கடிக்கப்பட்டும், கைப்பற்றப்பட்டும், சேதமாக்கப்பட்டும் போயிற்று. மீதியில் 2,50,000 டன்கள் மத்திய, தென் அமெரிக்கத் துறைமுகங்களில் அடைபட்டுக்கிடக்கின்றன. இதாலிக்கு 35,00,000 டன்களிருந்ததில் 23,66,000 டன் அழிந்தது. ஜப்பானுக்கு 55,00,000 டன் இருந்ததில் 10,00,000 டன் இழந்தது.

வி வி வி வி வி வி வி

**போக்குவரத்துப் பிரச்னை.** ஜப்பானுக்கு ஏராளமான கப்பல்கள் நஷ்டமானதிலிருந்து அதற்குப் போக்குவரத்து பிரச்னை கடுமையாகிவருகிறது. தரைமார்க்கங்கள் அதற்கு அதிகம் இல்லாததால் விமானம், ஸ்டீமர் முதலியவைகளைத்தான் நம்பவேண்டியிருக்கிறது. கப்பல்கள் குறைந்ததும் ரயில் போக்குவரத்தைப் பலப்படுத்தப் பார்க்கிறது. இந்தியாவில் யுத்த சாமான்களின் போக்குவரத்திற்கு ரயில்வேக்கள் உபயோகப்படுவதிலிருந்து நதி, கடற்கரைப் போக்குவரவு பலப்படுத்தப்படுகிறது. அதற்கு நேர் விரோதமாக ஜப்பானில் செய்யப்படுகிறது. ஹோன்ஷியோவிற்கும் கியுஷுவிற்கும் இடையில் பாலம் கட்டப்பட்டிருக்கிறது. மேலும் சுரங்க இருப்புப் பாதைகள் மூலம் பல தீவுகளை ஒன்று சேர்க்கவும் நினைக்கிறது.

வி வி வி வி வி வி வி

**ஜப்பானும், மெயின்காம்ப் புஸ்தகமும்.** ஹிட்லரின் மெயின்காம்ப் புஸ்தகத்தை ஜப்பானியர் மொழி பெயர்த்து வருகின்றனர். இம்மொழி பெயர்ப்பில் எல்லா விஷயங்களும் உள்ளது உள்ளபடி காணப்பட்டிருக்கும். அதில் ஆரியர்களை ஜப்பானியர் பின்பற்றுவதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஜப்பானியருக்கு இயற்கையாக ஒன்றும் கிடையாது. ஹிட்லர் ஜப்பானியரின் சிநேகம் ஏற்படாதபோது இப்புஸ்தகத்தை எழுதினான்.

வி வி வி வி வி வி வி

**ஓநாயும் ஆடும்.** அக்டோபர் 8உ பெர்லினிலிருந்து செய்யப்பட்ட ஒலிபரப்பிலிருந்து ஜப்பானின் பொது க்ஷேமத்தைப் பற்றிய சில தகவல்கள் கிடைக்கின்றன.

'சில மாதங்கள் யுத்தம் செய்த பிறகு ஜப்பான் பொருளாதாரம் மிகுந்த பணக்கார தேசமாகிவிட்டது.

அகில ஆசியக்கொள்கையால் ஜப்பான் ஒரு தொழிற்சாலை மிகுந்த நாடாக ஆனதோடு உணவும் அதிகமாகக் கிடைக்கிறது.

'எல்லாத் தொழிற்சாலைக்கும் ஜப்பான் பிரதான நாடாக இருக்கும். இதர நாடுகள் அதற்குத் தேவையான மூலப்பொருள்களையும் உணவுப் பண்டங்களையும் அனுப்பும். இதிலிருந்து ஜனங்களை ஜப்பான் பிரிக்கவேண்டியிருக்கிறது. தாத்காலிகமாகப் போடப்பட்டிருக்கும் திட்டப்படி தொழிலுக்கு ஏற்றவாறு 40 சத விகிதம் விவசாய வேலையில் ஈடுபடும். இதர நாடுகளில் 80, 90 சத விகிதம் ஈடுபடவேண்டும்'.

அதாவது ஆக்கிரமித்த நாடுகளிலிருந்து உணவு உற்பத்தி செய்து ஜப்பானுக்கு அனுப்பவேண்டும் என்கிறது.

வி வி வி வி வி வி வி

**ஷாங்கேயின் கதி.** சுங்கிங்கிலிருந்து சமீபத்தில் கிடைத்த செய்தியின்படி ஷாங்கேயில் உணவு பெறுவதற்கோ, சாமான்களை விலைகொடுத்து வாங்கவோ, நகரிலிருந்து வெளியே போய் வரவோ மிகசிரமமாக இருக்கிறது. ஒருவன் நகரிலிருந்து வெளியே போவதென்றால் மூன்று கெஜம் பட்டுத்துணியும், 2 அவுன்ஸ் பருத்தி நூலும், மூன்று கெஜம் கம்பளியும், 5 சிறு பெட்டிகளில் தீக்குச்சியும்தான் எடுத்துக்கொள்ளலாம். யாராவது நகருக்குள் வருவதானால் 20 முட்டைகளும் ஒரு டீ டப்பாவும் எடுத்து வரவேண்டும். ஷாங்கேயிலுள்ள எல்லாப் பஞ்சு யந்திர சாலைகளும், பட்டுநெசவு

யந்திரங்களில் மூன்றில் ஒரு பங்கும், சீன மாவு மில்லுகளும் மூடப்பட்டன. பசியால் வருந்திய ஸ்திரீ புருஷர்கள் உணவிற்காகத் தெருக்களில் கூட்டம் கூட்டமாகத் திரிகிறார்கள்.

வி வி வி வி வி வி வி

**ஜப்பானியரின் தந்திரம்.** ஸ்வதந்திர பிரெஞ்சு சிப்பாய் ஒருவர் ஹாங்காங்கிலிருந்து இங்கிலாந்துக்கு சமீபத்தில் வந்து சேர்ந்தார். அவர் ஜப்பானியரைப்பற்றி கொடுக்கும் தகவல்களிலிருந்து ஜப்பானியர் எண்ணெய்க் கப்பல்களை விமானமேற்றும் கப்பல்களாக மாற்றி அதில் 20 விமானங்கள் வைக்கக்கூடியதாகத் தயாரித்து வருகின்றனராம். மீன் பிடிக்க உதவும் படகுகளில் நீர்மூழ்கிகளுக்கு ஸப்ளைகளை ஏற்றிக்கொண்டும் செல்லுகின்றனராம்.

வி வி வி வி வி வி வி

**காலத்தின் சின்னங்கள்.** பர்மாவைப் பிடிக்கும் திட்டத்தைப்பற்றி தான் சிந்தித்து வருவதாகச் சொல்லிவிட்டு வேவல் பர்மா எல்லையும் சுற்றிப் பார்த்தார். ஆசின்லக், ஸ்டில்வெல் முதலியோர் இந்தியாவிற்கு வந்திருப்பதிலிருந்து பர்மா சண்டை சீக்கிரம் துவங்குமென்று தெரிகிறது. பருவ மழைகள் ஓய்ந்துபோயிற்று. ஆகவே யுத்தம் ஏற்படலாம். அதற்கு லாயக்காக நேசதேசங்களின் பலம் பூர்த்தியடைந்திருக்கின்றன. பர்மாவின் விடுவிப்பு முக்கியமாக சைனாவிற்கு அவசியம். ஏனென்றால் வேறு மார்க்கமாகச் சாமான்களை அனுப்ப வசதியில்லை.

வி வி வி வி வி வி வி

**அச்சுநாடுகளும் முஸ்லீம்களும்.** அச்சுநாடுகளின் மனதில் திடீரென இந்திய முஸ்லீம்களைப் பற்றி ஏதோ தயவு உண்டாகியிருக்கிறது. அதாவது கொடுமை இந்திய அரசாங்கம் ஹாஜ் பிரயாணிகளை இவ்வருஷம் அனுமதிக்கவில்லை. ஏனென்றால் வெளிநாட்டு முஸ்லீம்களுக்கும் இந்திய முஸ்லீம்களுக்கும் ஒற்றுமை ஏற்படுவது இந்திய அரசாங்கத்தாருக்கு இஷ்டமில்லையாம். இது இவ்வாறு இருக்க உண்மை யாதென்று கவனிப்போம். 11,500 பிரயாணிகளுக்கு கப்பல் வசதி கொடுத்து இதற்குமுன் அனுப்பப்பட்டது. இவ்வருஷத்தில் அராபிக்கடலில் ஜப்பானிய நீர் மூழ்கிகள் சஞ்சரித்து வருவதால் கப்பல் போக்குவரத்திற்கு சாவதானமில்லை என்று கவனித்து தரை மார்க்கத்தை ஏற்படுத்தியிருக்கின்றனர். ஆகவே அக்டோபர் 2வ இந்திய அரசாங்கத்தாரின் அறிக்கை வெளியிடப்பட்டது. ‘கப்பல் பிரயாணத்திற்கு ஏற்பட்டிருக்கும் அபாயத்தை அனுசரித்து கடல் மார்க்கம் நிறுத்தப்பட்டிருக்கிறது.’ இதில் கடைசியான வார்த்தைகளைத் தான் கவனிக்க வேண்டும். தரைமார்க்கத்திற்கு ஒரு தடையும் இல்லை. பஞ்சாப் ஸர்க்காரும் பின்கண்டவாறு பிரசுரித்திருக்கின்றனர். இராக், ஹெஜஸ் போன்ற இடங்களுக்கு தரைமார்க்கமாகச் செல்ல ஒரு தடையும் இல்லை. அப்படிச் செல்ல விரும்புவோருக்கு அனுமதிச் சீட்டு கொடுக்கப்படும்.

இது சம்பந்தமாக ஹாஜ் துறைமுகக் கமிட்டி, ஹாஜ் மத்திய கமிட்டி, இதர முஸ்லீம் பிரதிநிதிகள் யாவருக்கும் இவ்விஷயத்தில் ஆக்ஷேபனை இல்லை.

வி வி வி வி வி வி வி

**‘இஸ்லாம் மத ரக்ஷகர்கள்’.** தங்களுடைய தேசத்திலும், தங்களுக்கு வசப்பட்ட நாட்டிலும் உள்ள இஸ்லாம் மதத்தை ரக்ஷிக்க அச்சு நாட்டினர் என்ன செய்து வருகிறார்கள் என்று கவனிப்போம். அச்சுநாட்டினர் தங்களை இஸ்லாம் ரக்ஷகர்கள் என்று சொல்லிக்கொள்ளுகின்றனர். ஆனால் அல்பேனியாவில் முஸ்லீம் தேசாபிமானிகள் மேஜர் பெஜ்ராடரி என்பவரின் கீழ் கிளம்பி இதாலியரின் ஆட்சிமுறையை எதிர்த்து வருகின்றனர். பல்கேரியாவில் யேனி ஸபா பத்திரிகையின்படி 95 சதவிகிதம் பல்கேரியா முஸ்லீம்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள். கூட்டம் கூட்டமாகத் தெருக்களில் நடமாடுகிறார்கள். முன்பு இஸ்காஸ்யில் (Iskece) வியாபாரம் அதிகமாக நடந்து வந்த கடைத்தெருவு பாழடைந்திருக்கிறது. புகையிலைத் தொழிற்சாலையில் வேலை பார்த்து வந்த முஸ்லீம்கள் அவ்வேலையிலிருந்து நீக்கப்பட்டு ரோடு போடுவதில் அமர்த்தப்பட்டிருக்கின்றனர். வட ஆபிரிக்கா, சமீபக்கிழக்கு முதலிய இடங்களிலிருந்து 10,000 முஸ்லீம்கள் நாஜி யுத்தத் தொழிற்சாலைகளில் வேலை செய்ய பலாத்காரமாக இழுத்துச் செல்லப்பட்டிருக்கின்றனர்.



---

# பிரிடிஷ் விமானப் படையின் மதராஸ் பகுதி.

---

## “நாங்கள் உங்கள் நன்மைக்காகச் சண்டை செய்கிறோம்”.

லண்டன், அக்டோபர் 22.

I

### மதராஸ் பகுதியின் வீரச் செயல்கள்.

பிரிடிஷ் விமானப் படையின் மதராஸ் பகுதி 1940-ம் ஹூ நவம்பர் மாதத்தில் பாம்பர் படையாகத் திருத்தியமைக்கப்பட்டது. அப்பொழுது முதன் முதலில் நாலு இன்ஜின்கள் கொண்ட ஹாலிபாக்ஸ் விமானங்கள் அப்பகுதியில் சேர்க்கப்பட்டன.

1941-ம் வருஷம் மார்ச்சு மாதத்தில் ஓர் இரவில் இவ்விமானப் பகுதியைச் சேர்ந்த ஹாலிபாக்ஸ் விமானங்கள் முதன் முதலில் வெளிச்சென்று தாக்குதல் செய்துவிட்டுத் திரும்பின. அந்த சொற்ப அவகாசத்திற்குள் நடந்த சம்பவத்தைப்பற்றி பாம்பர் விமானப் பகுதித் தலைவர் கீழ் கண்ட பிரகாரம் அறிக்கை விடுத்திருக்கிறார்.

“இன்றிரவு ஹாலிபாக்ஸ் விமானங்களில் ஏராளமாக வெடி குண்டுகளை ஏற்றிக் கொண்டு தாக்குதல்கள் நடத்திய மதராஸ் விமானப் பகுதியை நான் மிகவும் பாராட்டுகிறேன். அப்பகுதி நடத்திய கடுமையான தாக்குதல்கள் சுற்றிலுமுள்ள எல்லா இடங்களுக்கும் தெரிந்திருக்கும்.”

விமானத் தலைமை உத்தியோகஸ்தரின் பாராட்டுதலுக்குத் தகுந்தவாறு மதராஸ் பாம்பர் பகுதி அதிக தீரமாக நடந்துகொண்டது. பெர்லின் பேரில் பல தடவைகளில் ஹாலிபாக்ஸ் விமானங்கள் பறந்து சென்று வெடிகுண்டுகளை வீசின. மேலும் எதிரி நாட்டில் பிராங்பர்ட், கொலோன், ஹனோவர், கீல், டஸ்ஸெல்டார்ப், ஸ்டெடின், மான்ஹீம், நூரெம்பர்க், வில்ஹெல்ம்ஷேவன், ப்ரெமன், இன்னும் அதிக தூரத்திலிருக்கும் டூரின் முதலிய முக்கிய இடங்களில் இவ்விமானங்கள் சென்று குறி தவறாமல் குண்டுகளை வீசி விட்டுத் திரும்பின.

மேலும் பல தடவைகளில் பகற்காலங்களிலும் இப்பகுதி வெற்றிகரமாக எதிரி நாட்டில் வெடி குண்டுகளை வீசின. சென்ற வருஷம் ஜூன் மாதம் 30-ம் தேதியன்று இப்பகுதி கீல் (Kiel) பிரதேசத்திற்கு இரண்டு தடவைகள் பறந்து சென்று தாக்கிற்று. லக்ஷியங்களின் மேல் குறி தவறாமல் குண்டுகள் போடப்பட்டதால் அவைகளுக்குச் சேதம் விளைந்தன.

இந்த சமயத்தில் விமானத் தலைவர், “கீல் (Kiel) பிரதேசத்தில் நீங்கள் இன்று வெடி குண்டுகளைக் கொண்டு வெற்றிகரமாகத் தாக்கியதைக் கேட்டு நான் சந்தோஷம் அடைந்தேன்,” என்று தந்தி மூலம் செய்தி அனுப்பினார்.

கீல் பிரதேசத்தில் வெற்றிகரமாகத் தாக்குதல்கள் நடத்திய மதராஸ் பகுதிக்கும், அதன் சிப்பந்திகளுக்கும் பல பதக்கங்கள் வழங்கப்பட்டன.

#### ஷார்ன்ஹார்ஸ்டின் பேரில் தாக்குதல்.

லாபிலீஸ் என்னும் இடத்தில் ‘ஷார்ன்ஹார்ஸ்ட்’ என்ற கப்பலை இப்பாம்பர் படைப் பகுதி மிகவும் வெற்றிகரமாக பகற் காலத்தில் தாக்கிற்று. லாபிலீஸை நோக்கிச் செல்லும்பொழுது விமானங்கள் ‘வி’ எழுத்துப் போன்ற வரிசையில் பறந்து சென்றன. அப்பொழுது துரதிருஷ்டவசமாக நடுவழியில்

விரோதியின் நாசகாரிக் கப்பலுக்கு உயரே அவை பறக்க நேர்ந்தன. அக் கப்பல் இவ்விமானப் பகுதி தாக்க வருவதைப்பற்றி முன்னதாகவே தகவல் கொடுத்துவிட்டது.

லக்ஷியத்தை நோக்கி ஹாலிபாக்ஸ் விமானங்கள் நெருங்கி வருவதற்குள், அவைகளுடன் சண்டை செய்ய எதிரியின் 30 பைடர் விமானங்கள் தயாரில் இருந்தன. ஏற்கனவே போட்ட திட்டப்படி இவ்விமானங்கள் இருவரிசைகளாக சமதூரத்திலேயே லக்ஷியத்தை நோக்கிப் பறந்து சென்றன. ஒரு விமானம் சுமார் 20 தடவைகளுக்கு மேலேயே எதிரி விமானத்துடன் சண்டை செய்ய வேண்டியதாயிற்று. இம்மாதிரியான தாக்குதலைக் கண்டு மெச்சி பாம்பர் விமானப் பகுதியின் தலைவர் பின்வருமாறு செய்தி அனுப்பினார்:—"ஹாலிபாக்ஸ் விமானங்கள் அன்று வெகு தீரத்துடனும், தைரியத்துடனும் யாவரும் வியக்கத் தக்க விதமாகச் சண்டை செய்தன. பாம்பர் விமானப்பகுதி இம்மாதிரியாகத் தான் இதற்கு முன் படையெடுப்புகள் நடத்தி வந்திருக்கிறது, என்ற விஷயம் இப்பொழுதுதான் உலகத்தார் நன்கு உணர்ந்திருக்கிறார்கள்."

1,000 பாம்பர் விமானங்கள் சேர்ந்து ஒரு சமயம் கொலோனைத் தாக்கின. அதில் மதராஸ் விமானப் பகுதியும் கலந்து கொண்டிருந்தது. அன்றிரவு அப் பகுதியைச் சேர்ந்த விமானங்கள் ஒன்றுகூட சேதமின்றி அவையாவும் இங்கிலாந்திற்குத் திரும்பிவந்தன.

## II

## விமான உபதலைவர் ராபின்ஸன் சொன்னதாவது.

பொதுவாக அரசியல் விஷயமாகவாவது, உயர்வான யுத்த தந்திரத்தைப் பற்றியாகவாவது நாங்கள் அப்பொழுது நினைக்கவே முடியாது.

ஆனால் நாங்கள் திறமையாகப் போர் செய்வது எவ்வளவு முக்கியம் என்பதை நாங்கள் தெளிவாகத் தெரிந்துகொண்டிருக்கிறோம். மேலும் மிகவும் ஸ்தரியத்துடன் லக்ஷியங்களை நோக்கிச் சென்று அவைகளை வெடி குண்டுகளால் வெற்றிகரமாகத் தாக்குவதற்குத் தீர்மானித்திருக்கிறோம். இத்துடன் யுத் தத்தினால் ஏற்படும் பலன்களைப் பற்றி நன்குணர்ந்திருக்கிறோம். பெருத்த முயற்சிகளை நாம் எடுத்துக் கொள்வோமானால், நமது உரிமைகள் பாதுகாக்கப் படும்; நமது வாழ்க்கைக்கு பந்தோபஸ்தும் ஏற்படும்.

வெடிகுண்டுகளின் சுமை, அவற்றைப் போடுவதற்கு நாங்கள் பார்க் கும் லக்ஷியங்கள், அவற்றைத் தூக்கிச் செல்லும் விமானங்கள், அப்படிச் செல்வதற்கு லாயக்காயுள்ள இன்ஜின்கள் இத்தகைய பிரச்னைகளில்தான் நாங்கள் தினசரி ஈடுபட்டிருக்கிறோம்.

வேறு விஷயங்களைப்பற்றி சிந்திக்க எங்களுக்கு அவகாசமிருந்தபோது பாம்பர் பகுதி விமானிகளுக்கும், தரைச் சிப்பந்திகளுக்கும் இத்தகைய வேலை களினால் உள்ளூர கிடைக்கக்கூடிய பலாபலன்கள் எவ்வளவு என்பது தெரியாமல் இல்லை.

இங்கிலாந்தின் நடுவில் இந்த விமான நிலயத்திலிருந்து சண்டை செய்து வந்தாலும் ஏராளமாக யிருக்கும் நேசநாட்டுப் படைகளில் நாங்களும் ஒரு பகுதி என்பதைத் தெரிந்துகொண்டிருக்கிறோம்.

### மதராஸிலுள்ளவர்களுக்குச் சொல்லுங்கள்.

இன்று தங்களது விஜயம் எங்களுக்கு ஒரு முக்கியமான சந்தர்ப்பம். ஏனெனில் மதராஸின் கௌரவத்தைப் பாதுகாக்கவும், எங்கள் நகரங்களுக் காகவும் சண்டைசெய்து வருகிறோமென்பதை அது ஞாபக மூட்டுகிறது.

நாங்கள் 'ஹாலிபாக்ஸ்' விமானங்களை அடையும்படி செய்த மதராஸ் வாசிகளுக்கு எங்கள் சார்பாக வந்தனம் செய்யுமாறு தங்களைக் கேட்டுக் கொள்கிறோம். எங்கள் வந்தனங்களுடன் எங்களைப்பற்றியும், எங்கள் வேலை களைப்பற்றியும் புகழ்ச்சியாக நீங்கள் அவர்களுக்குச் சொல்வதற்கு தக்கபடி நாங்கள் நடந்துகொள்வோம்.



# மனிதனின் ஸ்வதந்திரத்திற்காக இப்போராட்டம் நடைபெறுகிறது.

(பீல்டு மார்ஷல் ஸ்மட்ஸ்).

லண்டன், அக்டோபர் 21.

இந்த யுத்தம் உண்மையில் சென்ற யுத்தத்தின் தொடர்ச்சி. இடையே உள்ள காலம் ஒரு நிம்மதியற்ற ஓய்வேயாகும். இந்த மகத்தான தேசத்தினரின் அந்தராத்மா உருக்கொண்டதுபோல் விளங்குகிறார் மிஸ்டர் சர்ச்சில்; யுத்த நாடகத்தில் முக்கியமான நடிகர் பிரிடிஷார்தான்.

இந்த நாடு க்ஷீணித்துவருவதாகவும் பிரிடிஷ் சாம்ராஜ்யம் சிதைய விருக்கிறதென்றும் சிலர் பிதற்றுகின்றனர். இது அறியாமை. இது தற்போது நடக்கும் விஷயங்களின் உண்மையைத் தெரிந்துகொள்ளாமல் சொல்லும் பேச்சுத்தான்.

எனினும் நாம் கவலையுற்றிருப்பதற்கில்லை. நாம் நமது உயிருக்கே நடத்தும் போராட்டமானது இனி கொடியமுறையில் நடக்கக்கூடும்.

பிரிடன்பேரில் நடத்திய யுத்தத்தில் நாஸி விமானப்படை தோற்றத்தின் மூலம், லண்டன், பிரிடன்மட்டுமின்றி நேசக்கட்சிகள் பூராவும், உலகின் எதிர்கால க்ஷேமமும் பாதுகாக்கப்பட்டது. ருஷ்யாவைப் பின்புறத்தில் அப்படியே விட்டு விட்டு பிரிடன்மீது படையெடுப்பது அபாயகரமானதென்பதை ஹிட்லர் கண்டுகொண்டான். பிற்பட்டு ருஷ்யாபேரில் படையெடுப்பைத் தொடுத்தான். இப்பால் ருஷ்ய யுத்தத்தில் ருஷ்யர்களின் தீரமான எதிர்ப்பைக்கண்டு ஹிட்லர் மட்டுமின்றி அனைவருமே ஆச்சரியமடைந்திருக்கின்றனர்.

எந்த யுத்தத்திலும் இருதிறப்பினர்களுக்கும் இவ்வளவு கொடுஞ்சேதம் ஏற்பட்டதில்லை. ருஷ்யர்களுக்கு ஏற்பட்டசேதமோ அபரிமிதமானது. இதே போலவே ருஷ்யப் போரரங்கத்தில் ஏராளமான ஜெர்மன் வீரர்கள் இறக்கின்றனர்.

ஜெர்மனியைப்போலவே ஜப்பானின் கதியைப்பற்றியும் சந்தேகத்துக் கிடமில்லை. இப்பொழுது வெளித்தோற்றத்திற்கு வெற்றிகள் அடைந்துவருவது போல் காணுவதெல்லாம் இறுதியில் ஜப்பானியருக்கு ஜப்பான்மட்டுமே மிஞ்சும் போல் தோன்றுகிறது. ஜப்பான் தன்னுடைய அழிவைத்தானே ஏற்படுத்திக் கொண்டது.

பேர்ல் துறைமுகத் தாக்குதலானது அமெரிக்காவுக்கு மட்டுமின்றி, மேனாட்டு நாகரீகத்துக்கும் அதற்கு அடிப்படையாயுள்ள யோக்கியத்தன்மைக்கும் ஒரு அறைகூவலாகும். நாளடைவில் ஜெர்மனிகூட ஜப்பானிடமுள்ள கூட்டுறவைக் கைவிடநேரும்.

ஜப்பான் திடீரென்று துரோக எண்ணத்துடன் ருஷ்யாவை ஸைபீரியப் பகுதியில் தாக்குமா என்பது இனிமேல்தான் தெரியவேண்டும்.

இப்போது நாம் யுத்தத்தின் நான்காவது வருஷத்தை அடைந்திருக்கிறோம்.

தற்காப்புப் போர்முறை தீர்ந்து இப்போது முன்னேறித்தாக்க ஏற்பாடு செய்திருக்கிறோம். நமது சாதனங்கள் பலவிதத்திலும் அதிகரித்தவண்ணமாக இருக்கின்றன. ஆனால், எதிரியின் சாதனங்களோ வரவர குறைந்துகொண்டிருக் கின்றன.

### ஏராளமாக அதிகரித்தல்.

இன்னும் நமது கட்சியில் ஆள்பலம் அதிகரித்துவருகிறது. எதிரிகளுக்கோ மனித பலம் மிகவும் குறைந்துவிட்டது. அது காரணத்தினால், தங்களிடம் அடிமைப்பட்ட நாடுகளிலிருந்து ஆள் திரட்டுகின்றனர்.

அங்கு வறுமையும், பசிப்பிணியும் அதிகரித்திருக்கிறது. அமைதிக்குறைவும், கிளர்ச்சியும் ஓங்கிக்கொண்டிருக்கின்றன. மனிதர்களின் சகித்துக்கொள்ளும்

தன்மை அதன் வரம்பைக்கடந்துவிட்டது. உள்நாட்டுப் பாதுகாப்பிலும் அந்நிய நாடுகளிலுள்ள போரரங்கங்களிலும், நமது நிலைமை அதிக முன்னேற்றமடைந்து வருகிறது.

இதுவரை காலம் நமக்கு அனுகூலமாக இருந்திருக்கிறது. நமக்கு எவ்வளவோ தோல்விகளும், ஏமாற்றங்களும் ஏற்பட்டிருந்தும், ஏராளமாகச் சைனியங்களையும், யுத்தப் பொருள்களையும் திரட்டி, பலப்படுத்திக்கொள்ள நமக்கு அவகாசம் இருந்திருக்கிறது.

உள்ளூராகவே நமக்கு ஒரு உணர்ச்சி ஏற்பட்டு சண்டைசெய்து வருகிறோம். அவ்வித உணர்ச்சியை அடியோடு அழித்துவிட ஹிட்லர் முயற்சிக்கிறான். அதனால் முக்கியமாக அவ்வித ஊக்கமே நமக்கு ஏற்படக்கூடாது என்பதுதான் அவனுடைய நோக்கம். முக்கியமாக நாஜி வாலிபர்களுக்குப் பிடிவாதமான மதக் கொள்கையைக் கையாளுவதற்குப் போதித்து வந்திருக்கிறான்.

மனிதனின் ஸ்வதந்திரத்திற்காகவும், சுய நிர்ணய உரிமை, ஜனநாயகம் முதலிய லக்ஷியங்களுக்காகவே நாம் இந்தப் போராட்டத்தை நடத்துகிறோம். அதை நாம் கடைசிவரையில் நமது உயிருக்கு என்ன ஆபத்து நேரிட்டபோதிலும் போர் புரியத் தீர்மானித்திருக்கிறோம்.

நாஸியமும், அதன் சின்னங்களும் அழியும்வரை நாம் கத்தியை உறையில் போடப்போவதில்லை;

## பழிக்குப்பழி வாங்கும் நாள் இன்னும் வெகு சமீபத்தில்தானிருக்கிறது.

(கிரேக்கர்களுக்கு மிஸ்டர் சர்ச்சில் விடுத்த செய்தி).

லண்டன், அக்டோபர் 27.

"கிரீஸை இதாலி தாக்கியதிலிருந்து வரப்போகும் புதன்கிழமையோடு இரண்டு வருஷமாகிறது. இதாலியைத் திருப்பித் தாக்குவதற்கு வெகு நாட்கள் பிடிக்காது.

இன்று முதல் ஒரு வருஷத்திற்கு முன் நேசதேசத்தாரின் சார்பாக கிரீஸ் தேசம் மகத்தான உதவி செய்து வந்தது. இதற்கு முன்னும் உதவி செய்திருக்கிறது. அதற்காக நான் பிரிடிஷ் மக்களின் சார்பாக வந்தனங்களைச் செலுத்தினேன்.

இன்னும் மற்றொரு வருஷம் சென்று விட்டது. இப்பால் கிரீஸைப் படையெடுத்த விரோதிகள் கிரேக்கர்களிடத்தில் பலாத்காரம் உபயோகித்தும், பொருளாதார முற்றுகையிட்டும் அவர்களைக் கீழ்படியும்படி முயற்சித்தார்கள்.

அவர்கள் முயற்சி பலிக்கவில்லை. உங்களுக்குக் கஷ்டம் நேர்ந்த சமயத்தில் உங்களது மனோ தைரியமும், ஊக்கமும் மற்ற ஐக்கிய நாடுகளுக்கு உதாரணமாக விளங்குகின்றன. அந்நிய நாடுகளில் கிரீஸின் ஆயுதப்படைகள், கப்பற்படை, சைனியம், விமானப்படை முதலியவைகளை மீண்டும் யுத்தத்தில் இறங்கிவிட்டன. எதிரிகளுக்கு முன்னால் அவர்களுக்கு அதிகரித்து வரும் பலத்தைக் காட்டி வருகிறார்கள். இப்பொழுது உங்களுக்கு நேர்ந்திருக்கும் கஷ்டங்களுக்கு உங்களுடன் சேர்ந்து எதிரிகளைப் பழிக்குப் பழிவாங்கும் நாளை எதிர்பார்த்திருக்கிறார்கள். அந்த நாள் சமீபத்தில்தான் இருக்கிறது.

உங்களுடைய தீரத்தைக்கண்டு மெச்சியும், உங்கள் பேரில் அனுதாபம் காட்டியும், உங்கள் தேசம் சீக்கிரத்தில் ஸ்வதந்திரம் அடைந்துவிடுமென்ற பூரண நம்பிக்கைகொண்டும் பிரிடிஷ் மக்கள் சந்தோஷத்துடன் வரவேற்கிறார்கள்.



## வாலிபர்களுக்கு ஒரு செய்தி.

ரூஸ்வெல்டின் மனைவியார்.

லண்டன், அக்டோபர் 27.

"உங்கள் நாட்டிலுள்ள வாலிபர்களும், எங்கள் நாட்டிலிருக்கும் வாலிபர்களும் நமக்குத் திருப்தியளிக்கும்படி நடந்துகொள்ளவேண்டும். 20 சொச்சம் வருஷங்களுக்கு முன் நாம் எந்த ஸ்வதந்திரத்தை அடைய விரும்பினோமோ, அதை அவர்கள் இப்போது அடைவதற்குப் பிரயத்தனப்படவேண்டும். இப்பொழுது நாம் அதை அடைந்தாக வேண்டும். நாம் அதை யுத்த முடிவில் கண்டிப்பாய் அடைவோம். அதற்குப் பிறகு சமாதானத்தையும் அடைவோம் என்று எதிர்பார்க்கிறோம்."

## ருஷ்ய யுவர்களுக்கு தலைவர் கலினின் விடுத்த செய்தி.

"மொத்தத்தில் ஸோவியத் ராணுவம் விரோதிக்குச் சமமான ஜோடி என்பது மட்டுமின்றிப் பல வழிகளில் அவர்களைவிட பலமானதென்பதைக் காட்டியிருக்கிறது. இவ்வளவு பெரிய போரரங்கத்தில் பலஹீனமான படைத்தலைவர்களும், திறமையற்றவர்களும் இருக்கிறார்கள் என்பதில் ஐயமில்லை. ஆனால் படைத்தலைவர்களில் பெரும்பான்மையோர் அவரவர்களுக்கிட்ட ஜோலிக்கு முற்றிலும் தகுதியானவர்கள் என்பதை மறுக்கமுடியாது.

"நமக்கு நேரிட்ட நஷ்டம் கொஞ்சநஞ்சமல்ல. ஆனால் ஜெர்மானியர் நம்மைவிட அதிகமாக நஷ்டமடைந்துவருகின்றனர். இவ்விஷயம் ராணுவ நிபுணர்களிடம் நான் செய்த ஆராய்ச்சியிலிருந்து தெரியவந்தது. ஸ்டாலின் கிராடை உறுதியாகப் பாதுகாத்து வருகிறவர்களுக்கு நாம் பல வழிகளிலும் நன்றி செலுத்தவேண்டும்.

"அவர்கள் நன்றாகப் போராடுகின்றனர். அவர்கள் நமது தேசத்தையும், எப்படி பாதுகாக்கவேண்டுமென்பதற்கு தங்களை உதாரணமாகக் காட்டியிருக்கின்றனர்.

"இதர போர்முனைகளிலும் ஜெர்மானியர் முன்னேறித் தாக்க முயன்றபோதெல்லாம், ஆங்காங்கு அவர்களுக்கு நல்ல பலமான எதிர்ப்பு ஏற்படுகிறது. எதிரிகளுக்கு நாம் மிக்கபலமான அடிகொடுக்கும் போதுதான், ஜெர்மானியர் தங்களது கொள்ளை கோஷ்டிக்கு நேரவிருக்கும் கதியை சீக்கிரம் உணர்வார்கள். நமது ராணுவம் யுத்த ஆரம்பத்திலிருந்ததைவிட தற்போது அதிக ஆயுத சாதனங்களைப் பெற்றிருக்கிறது. ருஷ்ய சரித்திரத்திலேயே இத்தகைய நிலைமை ஏற்படவில்லை. நமது பீரங்கி நஷ்டங்களை ஈடுசெய்யும்படி அவ்வளவு பீரங்கிகளை உற்பத்தி செய்வது மட்டுமின்றி, கையிருப்புக்காகவும் ஓரளவு ஒதுக்க முடிகிறது.

"விவசாயத் துறையிலேயே நமக்கு மிகவும் கஷ்டமான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. யூக்ரேன், கியூபன் இவ்விரண்டு பிரதேசங்களில்தான் ஏராளமாக கோதுமை விளைகிறது. அங்கிருந்துதான் பல இடங்களுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகிறது. அவ்விரண்டு பிரதேசங்களையும் ஜெர்மானியர் தாத்காலிகமாகப் பிடித்திருக்கிறார்கள். உணவுப் போராட்டம் அனைத்தும் கிழக்குப் பிரதேசத்திற்கு மாற்றப்பட்டுவிட்டது. அங்குள்ளோர் எவ்வளவு உணவுப் பொருள்களை உற்பத்தி செய்யமுடியுமோ அவ்வளவு உணவுப்பொருளையும் உற்பத்தி செய்யவேண்டும். அதற்காக எல்லோரும் எவ்வளவு அதிகமாக உழைக்க முடியுமோ அவ்வளவு அதிகமாக உழைக்கவேண்டும்.

"ஜெர்மானியரை நாம் முறியடிப்பது நிச்சயம். நாம் அவர்கள் முறியடிக்கும்போது அழிந்தவற்றை புனருத்தாரணம்செய்து, எதிர்கால உலகையமைப்பது ஸோவியத் யுவர்களாகிய உங்களது வேலையாகும்.

"விவசாயத் துறையில் அடையும் வெற்றி இந்த மகா யுத்தத்தில் முக்கியமான போரில் கிடைக்கும் வெற்றிக்கு சமமாகும். பொதுவுடமைக் கட்சி சிறுவர், சிறுமிகளே விவசாயப் போர்முனையில் நீங்கள் வெற்றிபெற வேண்டுமெனக் கேட்டுக்கொள்ளுகிறேன்."

---

## மகத்தான முயற்சி எடுத்துக்கொள்ளும்படி மாட்சிமை தங்கிய வைஸிராயின் வேண்டுகோள்.

க்வெட்டா, அக்டோபர், 22.

போராங்கத்தில் நடக்கும் யுத்தத்தைத் தவிர ஒவ்வொரு ஆண், பெண் குழந்தை முதலானவர்கள், அவர்கள் எந்தத் தொழிலை நடத்தி வந்தாலும் இந்த யுத்தத்தில் பெருத்த முயற்சிகள் எடுத்துக்கொள்ளவேண்டும். அநேக கோடி மக்கள் ஒன்றுசேர்ந்து எடுத்துக்கொள்ளும் முயற்சியுடன் நீங்கள் ஒவ்வொருவரும் தனித்தனியாக எடுத்துக்கொள்ளப்படும் முயற்சியும் சேர்ந்து இவ்யுத்தத்தை ஒருநாளோ, ஒரு மணியோ, ஒரு நிமிஷமோ குறைத்து வெற்றிகரமாக முடிவு செய்யக்கூடும். ஆகையால் இனி ஒரு நிமிஷமும் வீணாகக் கழிக்கக்கூடாது. ஏனென்றால் நவீன யுத்த முறையில் வெற்றி ஒருநாள், அல்லது ஒருமணி, முன்பே வெற்றியடைவதினால் அதில் எவ்வளவோ லக்ஷக்கணக்காக உயிர்ச்சேதமேற்படாமல் செய்துவிடலாம்.

### தேசிய யுத்த முன்னணி.

"இப்பொழுது இந்தியா பூராவிலும் வரவர அதிக பலமாக ஸ்தாபிக்கப்பட்டுவரும் தேசீய யுத்த முன்னணியில் நீங்கள் எல்லோரும் கலந்துகொள்ளலாம். வீண் வதந்திகளைப் பரவாமல் அப்படியே தடுத்துவிடு. விரோதியின் பொய்ப்பிரசாரங்களுக்கிடங்கொடுக்காதே. இவைகள் உன் மனதைக் கலக்கி, என்னுடைய ஊக்கத்தையும், தீர்மானத்தையும் மாற்றிவிடக்கூடும். ஆகையால் அவைகளை நம்பாதே. உன் கண் முன்னால் நடக்கும் உண்மையான விஷயங்களைப் பார்த்து உன் மனதைத் திடப்படுத்திக்கொள்.

### வெற்றி கை மாறிக்கொண்டிருக்கிறது.

"இதுவரை நாம் எதிர்த்துவரும் அலைகளை நோக்கி நீந்தி வந்தோம். இப்பொழுது அவ்வலைகள் நமக்கு அநுகூலமாக அடிக்கின்றன. அதாவது ஒரு சமயத்தில் நாம் தனிமையில் நின்று நன்றாகத் தயாரிக்கப்பட்ட எதிரி சைனியங்களுடன் போர் புரிந்தோம். இப்பொழுது பல பெரிய தேசங்கள் நமக்கு உதவியாக நிற்கின்றன. முக்கியமாக ருஷ்யா, சைனு, அமெரிக்கா இன்னும் மற்ற நாடுகளிலிருந்து நேசதேசப் படைகள் வந்திருக்கின்றன. நாளுக்கு நாள் நமது ஆயுதபலம் அதிகரித்துவருகிறது. அதைக்கொண்டு கூடிய சீக்கிரத்தில் நிச்சயமாக எதிரியைத் தோற்கடிக்க முடியும். எதிரி இன்னும் மிக்க பலத்துடனும் ஏராளமான யுத்த சாதனங்களுடனுமிருக்கிறான். ஆனால் நேசதேசப் படைகளின் சேர்க்கையைப் பார்த்து அவன் மனத்தளர்ச்சி அடைந்து வருகிறான். அவனும் கூடியசீக்கிரத்தில் தோற்றுவிடுவான். பலாத்காரம், கொடுமை, துரோக சிந்தனை இவ்விதமுறைகளை அநுசரித்து எதிரிதான் ஆக்கிரமித்த நாடுகளிலிருந்து சைனியம் திரட்டிவருகிறான். ஆனால் நமது படையில் சேர்ந்தவர்கள் யாவரும் ஸ்வதந்திர உணர்ச்சியுடையவர்கள். இதைவிட மேலானது, நம்முடைய கட்சி நியாயமானது என்பது தான்."

### விடாமல் போர்செய்.

"அதிகப் பிடிவாதமாகவும், தீர்மானத்துடனும் போர் செய்யுங்கள். யுத்தத்தின் சார்பாக, தேக உழைப்பிலும், சாமர்த்தியத்திலும், நீங்கள் அதிக முயற்சிகள் எடுத்துக்கொள்ளவேண்டும். அம்மாதிரி அதிக சேவைபுரிந்து ஈடுபடுவோமானால் இன்னும் கூடியசீக்கிரத்தில் ஒரேயடியாக நாம் எதிரிகளைத் தோற்கடித்து அவர்களின் கொடுமைகளை இவ்வுலகத்திலிருந்து அடியோடு ஒழித்துவிடுவோம் என்பது நிச்சயம்".



## அமெரிக்கா உலகத்திற்கே ஒரு பெரிய ஆயுதசாலையாக விளங்குகிறது.

(கர்னல் நாக்ஸ், அமெரிக்கக் கப்பற்படை இலாகா காரியதரிசி).

நியூயார்க், அக்டோபர் 28.

"உலகத்தில் அமைதி ஏற்படவேண்டுமென்றால் யுத்தத்திற்குப் பிறகும் நேசதேசத்தார்கள் வசம் முதல்தரமான கப்பற்படை இருக்கவேண்டும்.

"அமெரிக்கா இன்னும் ஏராளமான யுத்தத் தளவாடங்கள் உற்பத்தி செய்யும் அது 1940-ம் வருஷத்தில் யுத்தத்திற்காகவும், வியாபாரத்திற்காவும், எவ்வளவு கப்பல்கள் தயாரித்ததோ, வரப்போகும் அடுத்த வருஷத்தில் யுத்தத்திற்காக அதைக்காட்டிலும் இன்னும் அதிகமான கப்பல்களைக் கட்டிமுடித்துவிடும்.

"5 லக்ஷத்திற்கும் மேலேயே பயிற்சி பெற்ற போர்வீரர்கள் அந்நியநாடுகளில் இருந்து வருகிறார்கள். இன்னும் பல லக்ஷக்கணக்கான பேர்களுக்குப் பயிற்சியும் கொடுக்கப்படுகிறது.

"அமெரிக்க சரித்திரத்தைப் பார்த்தாலேயே இச்சைனியத்தில்தான் அதிக நல்ல பயிற்சி பெற்ற போர்வீரர்கள் இருக்கிறார்கள் என்று தெரிகிறது. நல்ல சக்திவாய்ந்த ஆயுதங்களுடன் இருக்கிறார்கள்.

"கப்பற்படையில் சிப்பந்திகள் இரட்டித்துவிட்டார்கள். ஏராளமான டன் நிறையுள்ள மிகப் பெரிய கப்பல்கள் இப்பொழுது கட்டப்படுகின்றன. பேர்ல் துறைமுகத்தில் நடந்த சண்டைக்கு முந்தி அமெரிக்காவுக்கு இருந்த விமான பலம், பீரங்கிபலம் இப்பொழுது பன்மடங்கு அதிகரித்திருக்கின்றன. எதிரிகள் மூழ்கடித்து வரும் வியாபாரக் கப்பல்களின் எண்ணிக்கையைக் காட்டிலும் அது அதிகமான கப்பல்களைக் கட்டி வருகிறது. நாங்கள் விமானங்கள், வெடிகுண்டுகள் முதலியவைகளை ஏராளமாகத் தயார்செய்து வருகிறோம். இன்னும் விமானிகளுக்கும் அதிகமாகப் பயிற்சியளிக்கப்படுகிறது.

"சமாதான காலங்களில் தொழிற்சாலைகளில் தயாரிக்கப்படும் சாமான்களுக்குப் பதிலாக அங்கு ஏராளமாக யுத்த தளவாடங்கள் தயாரிக்கப்படுகின்றன. அதனால் அது உலகத்திற்கே பெரிய ஆயுதசாலையாக மாறிவிட்டது.

"இதுவரை சில பிசகுகள் இருந்திருக்கின்றன. இன்னும் அதிகம் ஏற்படாமலிருந்தது ஆச்சரியம்தான். நாம் கடுமையாக யுத்தம் புரிந்து வருவதில் இப்பொழுது ஒரு வருஷம் கழிந்துவிட்டது. இனி ராணுவ தந்திரங்களைப்பற்றி அதிகம் தெரிந்த நிபுணர்களுக்கு இது ஒரு பொருட்டாகமாட்டா. இப்பொழுது பலபெரிய ராணுவத் தலைவர்களின் கீழ் நமக்குச் சொந்தமான 13 கோடி போர் வீரர்கள் யுத்தத்திற்குத் தயாராக இருக்கிறார்கள்.

### இன்னும் நாம் செய்யவேண்டிய வேலைகள் பல இருக்கின்றன.

"நாம் இன்னும் செய்யவேண்டிய வேலைகள் பல இருக்கின்றன. உலகத்தில் முக்கிய இடங்களில் ரோந்து மூலம் பாதுகாக்கவும், பல சமுத்திரங்களில் செல்லும் கப்பல்களுக்குத் துணைபுரியவும், எதிரிகப்பல்களுடன் போர் புரியவும், ஆகிய முக்கியமான பல அலுவல்களைச் செய்யவேண்டியிருக்கிறது. ஆரம்பகாலத்தில் எங்களுடைய பல வியாபாரக் கப்பல்கள் எதிரி நீர்மூழ்கிக் கப்பல்களால் மூழ்கடிக்கப்பட்டன. எங்களுடைய மாலுமிகளில் ஏராளமான பேர் உயிர் துறந்தனர். வரவர அமெரிக்க யுத்தப் பொருள்களும், பயிற்சி பெற்ற அமெரிக்க வீரர்களும் எதிரிகளுடன் யுத்தத்திற்குத் தயாராகயிருக்கிறார்கள்.

"நாங்கள் நேசதேசத்தார்களுக்குப் போதுமான உதவி செய்யவில்லை. ஆனால் இதுவரை எங்களால் முடிந்த உதவியைச்செய்து வந்தோம். நாங்கள் அவர்களுக்கு அதிகமாக உதவிசெய்யும் காலம் நெருங்கிவிட்டது. அவ்விதம் உதவியும் செய்வோம். நமக்கு இன்னும் கஷ்டப்பட்டு போரிட வேண்டியிருக்கிறது. எவ்வித கஷ்டங்கள் நேரிடக்கூடுமென்று ஸாலமன் தீவுகளிலுள்ளவர்கள் நன்குணர்ந்திருக்கிறார்கள்".

## பெர்லின், மியூனிச் ஒப்பந்தங்களினுல் தோன்றியிருக்கும் கெடுதல்கள் எல்லாம் வேருடன் பிடுங்கப்படும்.

(ஜெக்கோஸ்லாவியாவின் ஸ்வதந்திர தினக்கொண்டாட்டத்தில் டாக்டர் பீன்ஸ் பேசியது).

லண்டன், அக்டோபர் 27.

"ஆகஸ்டு மாத முடிவோடு 40 லக்ஷம் ஜெர்மன் வீரர்கள் கொல்லப்பட்டோ, காயமடைந்தோ விட்டனர். 1917-ம் வருஷ முடிவில் ஜெர்மனியின் உணவுப் பிரச்னை எந்த நிலைமையில் இருந்ததோ அதே நிலைமையில் தான் இப்பொழுதும் இருந்து வருகிறது.

"1918-ம் வருஷத்தில் ஜெர்மன் சக்ரவர்த்தியாயிருந்த கெய்ஸர் சமாதானத்தை விரும்பினுரோ, அம்மாதிரியாகவே இன்னும் கூடிய சீக்கிரத்தில் 'இந்த யுத்தம் இனிமேல் வேண்டாம், ஏதாவது ஒப்பந்தம் செய்து கொள்ளத் தயாராக இருக்கிறேம்' என்று ஹிட்லர், கோயரிங், கோயபெல்ஸ். இம்மூவரும் சமாதானப் பேச்சைத் தொடங்கிவிடுவார்கள். அவர்கள் ஒவ்வொரு தடவை பேசும் பொழுதும், ஜெர்மனி தோல்வியடைந்தால் தன்னேடு ஐரோப்பா பூராவுக்குமே அழிவு ஏற்பட்டுவிடுமென்று பயமுறுத்துவார்கள்.

"நேசதேசத்தார்களிடம் அம்மாதிரி பேசி அவர்கள் மனதில் பீதியை விளைவிக்க முடியாது. பெர்லின், மியூனிச் முதலிய இடங்களில் ஏற்பட்ட ஒப்பந்தங்களிலுள்ள கெடுதல்கள் வேரோடு அழிக்கப்பட்டு விடும். குற்றவாளிகள் அவரவர்கள் குற்றங்களுக்குத் தகுந்தாற்போல் தண்டிக்கப்படுவார்கள்."

---

## பேர்ல் துறைமுகத்தில் நடந்த படுகொலைகள் இனிமேல் ஏற்படக்கூடாது.

---

(அட்மிரல் வில்லியம் லீஹி—கப்பற்படை தினம்.)

நியூயார்க், அக்டோபர் 28.

"உலகத்திற்குக் கெடுதி நேரிடக்கூடிய இந்த கோரயுத்தம் நீண்டகாலம் நடக்கவேண்டியிருக்கிறது. இதற்கு முன் நாம் அனுபவித்ததைக் காட்டிலும் அதிகமாக அமெரிக்காவிலுள்ள நாமும் அதிக பரித்தியாகம், செய்யவேண்டியிருக்கிறது. ஏராளமாக பணச்செலவும் நேரிடும். காட்டுமிராண்டிகளால் நமது நாகரீகத்தை அழிய விட்டுவிடவேண்டும், அல்லது நமது பொக்கிஷங்களைக் காலிசெய்தும், ரத்தத்தைச் சிந்தியும், ஆயுதம் பூண்ட காட்டுமிராண்டிகளை அழித்தாக வேண்டும், ஆகிய இவை இரண்டில் ஏதேனும் ஒன்றை நாம் செய்தாக வேண்டியிருக்கிறது.

"நமது பெற்றேர்கள் கஷ்டப்பட்டு பிரயாசையின் பேரில் அமெரிக்காவின் ஸ்வதந்திரத்தை நிலைநிறுத்திருப்பதைக் காப்பாற்ற வேண்டுமானுல் அச்சு நாடுகளை முற்றிலும் முறியடிக்கவேண்டும். நமது குழந்தைகள் அமைதியுடன் வாழ வேண்டுமானுல் இப்பொழுது உலகத்தார்கள் பீதியடையச் செய்தவர்களையும், தங்கள் நாட்டினரை யுத்தத்தில் ஈடுபடுத்தி அவர்களுக்கு சேதம் விளையும்படி செய்கிறவர்களையும் அடியோடு அழித்தாக வேண்டும்.

"வருங்காலத்தில் பேர்ல் துறைமுகத்தில் நடந்த படுகொலை சம்பவம்போல் இனிமேல் நேரிமலிருக்கும்படி நாம் ஏற்பாடு செய்யவேண்டும்."



## ஜப்பானைத் தோற்கடிக்க முடியும்: அதைத் தோற்கடிக்கத்தான் வேண்டும்.

மிஸ்டர் ஜோஸப் க்ரு (Joseph Grew), நியூ யார்க், அக்டோபர் 27.

---

"ஜப்பான் நகரங்களிலுள்ள வீடுகள் மிகவும் மோசமான கட்டடங்கள். விமானங்களிலிருந்து எரிகுண்டுகள் போடப்பட்டால் அவை நிலைத்து நிற்காது. மேலும் பொருளாதார நெருக்கடியால் ஜப்பானைக் கீழ்படியச் செய்யலாம். அவர்கள் சுயேச்சையாக நடந்துகொள்ள முடியாதாகையால் அவர்கள் வெற்றி பெறக்கூடியவர்களல்ல என்ற இவைபோன்ற அபிப்பிராயங்களை நாம் தவிர்க்க வேண்டும்.

"ஜப்பானிய வீரர்கள் தங்கள் தலைமை அதிகாரிகளின் உத்தரவுப்படி நடக்கிறுர்கள். அவர்களிடத்தில் அதிகமான ஒழுங்குப்பாடு உண்டு. எதிரிகளிடத்தில் பயப்படமாட்டார்கள். இனிமேல் போர்செய்ய முடியாது என்ற தருணம் வரும்வரை சண்டை செய்வார்கள்.

"பூகம்பத்தினுல் ஏற்படும் அதிர்ச்சி, நெருப்பு முதலிய கெடுதல்களைத் தடுக்கக்கூடிய விதமாக வீடுகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. பிரிடனைப் போலல்லாமல் ஜப்பான் அந்த நாட்டினர் பூராவுக்கும் தேவையான உணவுப் பொருள்களை உற்பத்தி செய்கிறது. கடற்சண்டையில் ஜப்பான் தேர்ச்சியடைந்திருக்கிறது. அதற்கு வேண்டிய சாதனங்களும் அதனிடமிருக்கின்றன. இருந்த போதிலும் அதை நம்மால் தோற்கடிக்க முடியும். அதைத் தோற்கடிக்கத்தான் வேண்டும்.

"அதற்காக நாம் வீரத்தனம் பொருந்திய முயற்சிகளை எடுத்துக்கொள்ள வேண்டும். மேலும் சர்வாதிகாரத்தினுல் அதிகார ஆசைகொண்டு தூண்டப்பட்டும் உயிர், உடல், ஆவி இம்மூன்றையும் கொடுத்து சண்டை செய்யும் ஜப்பானியருக்கு எதிராக நாம் அரைகுறையாகவும், தாத்காலிகமாகவும் சண்டை செய்யக்கூடாது.

### பிரிடிஷ் மக்களுக்கு நாங்கள் ஏராளமாகக் கடமைப்பட்டிருக்கிறேம்.

பிரிடிஷ் கப்பற்படை, விமானப்படை இவைகள் செய்த உதவிக்காக நாங்கள் மிகவும் கடமைப்பட்டிருக்கிறேம். இதற்குமுன் நாஸிகளுடன் அவர்கள் சண்டை செய்திருக்கிறுர்கள். 1940-ம் ஜூன் மாதத்தில் பிரிடன் படையெடுக்கப்பட்டு அதற்குப் பேராபத்து நேரிட்டது. தெய்வ எத்தனத்தினுலொழிய மற்றபடி அவ்வாபத்திலிருந்து தப்பமுடியாது. வெகு ஆச்சரியகரமாக பிரிடிஷ் மக்கள் போரில் ஈடுபட்டார்கள். முதன் முதலில் தங்களைத் தற்காப்பு செய்துகொண்டு, பிற்பட்டு எதிரிகள்பேரில் வெற்றியடைய முற்பட்டார்கள். ஆதலால் பிரிடிஷ் மக்களுக்கு நாங்கள் மிக்க கடமைப்பட்டிருக்கிறேம்.

### நம்முடைய தைரியசாலியான ருஷ்ய, சீன நேசதேசத்தார்கள்.

நமது ருஷ்ய நேசதேசத்தார்கள் நம்முடன் சேர்ந்திருப்பதில் நாம் அடைந்திருக்கும் பலத்தைக் குறைவாக நினைக்கக்கூடாது. சீன இப்பொழுது ஒன்று சேர்ந்துவிட்டது. எதிரி ஜப்பானியருடன் எதிர்த்து நின்று, சமாளித்து இருக்கிறது. சீனவிடத்திலும் நாங்கள் மிகக்கடமைப் பட்டிருக்கிறேம். ஆனுல் யுத்தத்தில் ஜயம் பெற்று, நிலைத்து நிற்கக்கூடிய சமாதானத்தை அடைய முயற்சிப்பதுதான் நமது முக்கியகடமை."

---

## நோட்டீஸ்.

---

சண்டை செய்யாத வகுப்பினர்களையும் சேர்த்து இந்தியச் சிப்பாய்கள், மாலுமிகள், ஆகாய கமனிகள் இவர்களின் குடும்பத்தார்களின் நன்மையை கவனிக்க ஒரு ராணுவ நன்மை ஸ்தாபனம் இருக்கிறது.

*இந்த ஸ்தாபனத்தின் தலைமை நிலயமானது :—*

**MILITARY WELFARE OFFICE,**
**CORNWALLIS BARRACKS,**
***BANGALORE.***

***மிலிடரி வெல்பேர் ஆபீஸ்,***
**காரன்வாலிஸ் பாரக்ஸ்,**
**பெங்களூர்.**

*ஈ-தர்பாரவர்கள் புதுக்கோட்டை டவுனிலிருக்கும்* Mr. J. *கோசலராம நாயுடு* M. L. C.-*ஐ, ஸமஸ்தான ஆனரரி மிலிடரி வெல்பேர் ஆபீஸராக, நியமித்துள்ளார்கள். மேற்படி குடும்பத்தார்களுக்கு, யுத்தத்திற்குச் சென்றிருக்கும் தங்கள் சொந்தக்காரர்களிடமிருந்து பணம் வரவில்லை, கடிதம் வரவில்லையென்றுவது, மேற்படி சிப்பாய் முதலியவர்களுடைய விலாசங்களைக் குறித்தாவது, கல்வி ஸாதனங்களைப் பற்றியாவது இன்னும் இதுமாதிரியான வேறு விஷயங்களைக் குறித்தாவது ஏதாவது புகார்கள் இருந்தால் அவற்றை அவர்கள் மேற்படி ஆனரரி வெல்பேர் ஆபீஸரிடமாவது, அல்லது ஈ-புதுக்கோட்டை தர்பாரவர்களிடமாவது, பெங்களூர் மிலிடரி வெல்பேர் ஆபீஸரிடமாவது தெரிவித்துக்கொள்ளலாம்.*

---

## புதுக்கோட்டை ஸமஸ்தான
## தேசீய யுத்த முன்னணி நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சிமுறை.

---

**1942— பிரஸங்கம் 119—(5-வது பிரிவு).**

| | | | | | மணி. |
|---|---|---|---|---|---|
| அக்டோபர் | 31, சனிக்கிழமை ... | முனிஸிபல் ஆபீஸ் சதுக்கம். | | மாலை | 6.00 |
| நவம்பர் | 1, ஞாயிற்றுக்கிழமை. | குளவாய்ப்பட்டி | ... | ,, | 7.00 |
| | | கீழையூர் (தெற்கு) | ... | ,, | 7.30 |
| | 2, திங்கட்கிழமை ... | திருமயம் | ... | ,, | 7.00 |
| | | மேலூர் | ... | ,, | 7.30 |
| | 3, செவ்வாய்க்கிழமை | காலேஜ் (A) ஆங்கிலம் | ... | காலை | 10.15 |
| | | பள்ளிவாசல் | ... | மாலை | 7.00 |
| | | பில்லமங்கலம் | ... | ,, | 7.30 |
| | 4, புதன்கிழமை ... | C.S.M. பள்ளிக்கூடம் | ... | காலை | 10.00 |
| | | ராணி பெண்பாடசாலை | ... | ,, | 10.15 |
| | | காலேஜ் தமிழ் பிராஞ்சு ஸ்கூல். | | ,, | 10.15 |
| | | திருவரங்குளம் | ... | மாலை | 7.00 |
| | | வம்பன் | ... | ,, | 7.30 |
| | 5, வியாழக்கிழமை ... | புலியூர் | ... | ,, | 7.00 |
| | | கண்ணங்குடி | ... | ,, | 7.30 |



**1942— பிரஸங்கம் 120—(1-வது பிரிவு).**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அக்டோபர் | 7, சனிக்கிழமை ... | முனிஸிபல் ஆபீஸ் சதுக்கம். | | மாலை | 6.00 |
| | 8, ஞாயிற்றுக்கிழமை | பூவரசகுடி | ... | ,, | 7.00 |
| | | வேங்கடக்குளம் | ... | ,, | 7.30 |
| | 9, திங்கட்கிழமை ... | பெருங்களூர் | ... | மாலை | 7.00 |
| | | ஆதனக்கோட்டை | ... | ,, | 7.30 |
| | 10, செவ்வாய்க்கிழமை. | காலேஜ் (A) ஆங்கிலம் | ... | காலை | 10.15 |
| | | கீரனூர் | ... | மாலை | 7.00 |
| | | நாஞ்சூர் | ... | ,, | 7.30 |
| | 11, புதன்கிழமை ... | C.S.M. பள்ளிக்கூடம் | ... | காலை | 10.00 |
| | | ராணி பெண்பாடசாலை | ... | ,, | 10.15 |
| | | காலேஜ் தமிழ் பிராஞ்சு ஸ்கூல். | | ,, | 10.15 |
| | | அரிமளம் | ... | மாலை | 7.00 |
| | | கீழாநிலைக்கோட்டை. | ... | ,, | 7.30 |
| | 12, வியாழக்கிழமை ... | மலம்பட்டி | ... | ,, | 7.00 |
| | | பேராம்பூர் | ... | ,, | 7.30 |
| | 13, வெள்ளிக்கிழமை... | உடையாளிப்பட்டி | ... | ,, | 7.00 |
| | | இள்ளுகோட்டை | ... | ,, | 7.30 |

புதுக்கோட்டை தேசீய யுத்த முன்னணி பிரசார கோஷ்டியார்கள் பிற்பகலில் கீழ்க்கண்ட இடங்களுக்கு வருவார்கள். பாண்டு வாசித்துக் கொண்டு, படங்கள் காண்பித்து, துண்டுபத்திரிகைகள் கொடுத்து, பிரசாரம் செய்வார்கள்.

| | | | | |
|---|---|---|---|---|
| சனிக்கிழமை | ... | 31—10—42 | ... | பொன்னமராவதி. |
| ஞாயிற்றுக்கிழமை | ... | 1—11—42 | ... | கொடும்பாளூர். |
| திங்கட்கிழமை | ... | 2—11—42 | ... | கீரனூர். |
| செவ்வாய்க்கிழமை | ... | 3—11—42 | ... | வடகாடு. |
| புதன்கிழமை | ... | 4—11—42 | ... | ராயவரம். |
| வியாழக்கிழமை | ... | 5—11—42 | ... | குழிபிறை. |
| வெள்ளிக்கிழமை | ... | 6—11—42 | ... | புதுக்கோட்டை. |
| சனிக்கிழமை | ... | 7—11—42 | ... | வெட்டன்விடுதி. |
| ஞாயிற்றுக்கிழமை | ... | 8—11—42 | ... | ஏம்பல். |
| திங்கட்கிழமை | ... | 9—11—42 | ... | விராலிமலை. |
| செவ்வாய்க்கிழமை | ... | 10—11—42 | ... | பேராம்பூர். |
| புதன்கிழமை | ... | 11—11—42 | ... | கரம்பக்குடி. |
| வியாழக்கிழமை | ... | 12—11—42 | ... | கீழாநிலை. |
| வெள்ளிக்கிழமை | ... | 13—11—42 | ... | புதுக்கோட்டை. |

## விளம்பரம்.

இந்தியர் கவர்ன்மெண்டார் தயாரித்த

# துணைக்காவலுடன் கப்பல்கள் வந்துசேர்ந்தன

என்று பெயர் விளங்கிய ஒரு யுத்தப் படம்

(தமிழில்)

பொன்னமராவதி வலம்புரி டாக்கீஸில்

*6—11—42 முதல் 9—11—42 முடிய காண்பிக்கப்படும்.*

## புதுக்கோட்டை தேசீய யுத்த முன்னணி நிலயம்

இப்படத்தை

ஜனங்களுக்குச் சிபார்சு செய்கிறது.

Sri Brihadamba State Press, Pudukkottai 2,000—1-11-42.

புதுக்கோட்டை ஸமஸ்தான

# தேசீய யுத்த முன்னணி நிலயம்.

பிரசுரம்] 1942-ம் ௵ நவம்பர் ௴ 7உ [ந. 120

பிரலங்கம் CXX.

## யுத்தத்திற்குப் பிறகும் ஜெர்மனி மிக விபரீதமான பிரச்னையாகயிருக்கும்.

*(மிஸ்ட்டர் அந்தோனி ஈடன், லண்டன், அக்டோபர் 30).*

*"உலகில் ஒரு பெரிய வல்லரசு என்ற ஸ்தானத்தை பிரிடிஷ் சாம்ராஜ்யம் விட்டுக்கொடுப்பதற்கில்லை என்பதை வறபுறுத்த நாம் சிறிதும் கூச்சம்கொள்ளக் கூடாது. அரசியல் நிர்வாகத்தில் நமது ஜனங்கள் வெகுகாலமாக அனுபவமுள்ளவர்கள். மனிதர்களின் தன்மையைக் குறித்தும், பொருளின் மதிப்பைக் குறித்தும் அவர்களுக்கு மேலான அபிப்பிராயம் உண்டு.*

*"நாம் இனியும் உலக முழுவதிலும் பாத்தியதைகள் உள்ள ஒரு வல்லரசாக இருந்துவர நம் ஜனங்கள் நமக்கு உதவி செய்யவேண்டும்.*

*"நமது சரித்திரமும், பூகோள நிலையும் வற்புறுத்துவது இதுதான். உலக அமைப்பும் இதையேதான் வற்புறுத்துகிறது. தற்போது நடக்கும் யுத்தத்தின் போதும், பிறகும், நாம் மிகவும் முக்கியமான பங்கு எடுத்துக் கொண்டாக வேண்டும்.*

*"சமாதானத்தைப்பற்றி நாம் நினைக்கவேகூடாது. இவ்விஷயங்களைப் பற்றிச் சொல்வதில் எனக்கு மிகவும் வருத்தமாக இருக்கிறது. இருந்தாலும் அதை இப்பொழுதே சொல்வது மேலெனக் கருதுகிறேன். அதாவது யுத்தம் முடிந்த பின் ஓய்வு எடுத்துக்கொள்வதுதான் நமது வேலையென நாம் எண்ணக் கூடாது. சமாதானம் இந்த யுத்தத்தில் நமக்கு ஏற்பட்ட ஒரு வெகுமானம் என்று கருதக்கூடாது.*

*"சமாதானம் என்பது நமது முயற்சியால் ஏற்படவேண்டிய ஒரு நிலைமை. அதைப் பாதுகாக்க நாம் இன்னும் அதிகமாக முயற்சி செய்தாகவேண்டும். அதற்காக நாம் ஒரு திட்டமான ஏற்பாடு செய்து அதைக் கார்க்கவும் வழி செய்ய வேண்டும். போனதடவையில் நாம் அதைச் செய்யவில்லை.*

### ஹிட்லர் கொடுமையின் அறிகுறி.

*"எல்லாவற்றைக் காட்டிலும் விபரீதமானது ஜெர்மனியைப்பற்றிய பிரச்னை தான், ஹிட்லர் கொடுமை தற்செயலாக நேர்ந்த விபரீதம் என்று எண்ணுவது*

தவறு. அது ஜெர்மனியில் உள்ளூர இருந்துவரும் உணர்ச்சியின் சின்னமாகும். யுத்தத்திற்குப் பிறகு நாம் நிம்மதியாக இருக்கும் நேரங்களில் ஒருவரும் இதை மறந்துவிடக்கூடாது.

"ஹிட்லரையும், ஹிட்லரின் ஆதிக்கத்தின் கீழிருந்த ஆட்சியையும், கொஞ்சம்கூட வைக்காமல் அழித்த பிறகும் ஜெர்மனியைக் குறித்த பிரச்னையை நாம் தீர்த்தாகவேண்டியிருக்கும்.

"நமது ஜீவிய காலத்திலேயே நமக்குத் தெரிந்த இரண்டு முறையிலும், ஒரு நூற்றாண்டுக்குள் ஐந்து தடவைகளிலும் ஜெர்மனி நாடுகளைக் கைப்பற்ற வேண்டிய ஆசையை முன்னிட்டு போர் செய்திருக்கிறது.

"இக்கொடுமை ஒரு கடுதாசில் சில கையெழுத்துக்களைப் போடுவதின்மூலம் இமைகொட்டுவதற்குள் மறைந்துவிடுமென நினைப்பது அபாயத்தை விளைவிக்கும்.

"ஜெர்மனியின் பிரச்னை தீராத பிரச்னையாக இருக்கும். ஏனென்றால் ஹிட்லரும், அவன் கட்சியினர்களும் கொண்டிருந்த கோரமான கொள்கையை ஜெர்மன் வாலிபர்களுக்குப் போதிக்கப்பட்டிருக்கிறது.

"நாம் நீண்ட கால பிரயத்தனத்தைச் செய்யவேண்டியிருக்கிறது. நாம் அவகாசம் எடுத்துக்கொண்டு எச்சரிக்கையாகவும், ஜரூராகவும் நடந்து ஜெர்மனியின் பிரச்னையையும், ஐரோப்பாவின் பிரச்னையையும் தீர்த்துவிடக்கூடும். சென்ற யுத்தத்தில் நாம் மனக்கோட்டை கட்டியிருந்தமாதிரி இப்பொழுதுமிருந்தால் அதுதான் பெரிய தவறு.

இந்தத் தடவை நாம் ஜெர்மனியைப்பற்றிய பிரச்னையை அடியோடு தீர்த்துவிடவேண்டியது.

### பிரிடனுக்குக் கிடைத்த அரிய சந்தர்ப்பம்.

ஹிட்லருக்கும், ஹிட்லர் உலக ஆதிக்கத்தை அடைய 1940-ம் ஆண்டில் பிரிடன் ஜெர்மனியை எதிர்த்துப் போராடுவது என்று உறுதியாக எடுத்துக் கொண்ட நடவடிக்கைதான் குறுக்கிட்டது என்பதை ஒரு பொழுதும் மறக்கக் கூடாது. வருங்காலத்தில் தேச சரித்திரத்தை எழுதுகிறவர்கள் பொடீஸியாவில் நடந்தவற்றைப்பற்றி விவரிக்கலாம். இருந்தபோதிலும் 1940-ம் ஆண்டில் நடந்த விவரம் பிரிடனுக்குக் கிடைத்த அரிய சந்தர்ப்பம் என்பதை அவர்கள் கூறுவார்கள். இப்பொழுது யுத்தம் புதிய மாறுதலையடைய ஆரம்பிக்கிறது.

"எல்லா இடங்களிலும் நாம் தற்காப்பு முறையில் இருக்கவில்லை. இங்கிலீஷ் கால்வாயில் நமக்கு ஆதிக்கம் இருக்கிறது. பிரான்ஸின் வடக்குக் கடற்கரைகளும் அதற்கப்பால் உள்நாட்டுப் பிரதேசமும் நமது ஆதிபத்தியத்தில் இருக்கின்றன. பகற்காலத்தில் நமது பிரிடிஷ் விமானப்படை இதாலிக்கு பகிரங்கமாகப் பறந்து மைலானையும், முஸோலினியின் ஸ்தானத்தையும் வெடிகுண்டுகளால் தாக்கக் கூடியவையாக இருக்கிறது. அத்தகைய விஷயம் பிரிடிஷ் விமானப்படையின் சரித்திரங்களில் மிகவும் பிரக்யாதி பெற்றிருக்கிறது. அது அழியாதது.

"ருஷ்யாவுக்குப் பொருள்களுடன் கப்பற் கூட்டங்கள் அனுப்பப்படுவது போல் அத்தகைய மகத்தான செய்கை நடந்ததாக பிரிடனின் தேச சரித்திரங்களில் எப்பொழுதுமே கிடையாது.

"லுப்ட்வாபி நம்மை வெடிகுண்டுகளால் தாக்கினதைக் காட்டிலும் பன்மடங்கு மேலாக பிரிடிஷ் விமானப்படை ஜெர்மனியைத் தாக்கிவருகிறது. இந்த மாரிகாலம் பூராவும் இத்தகைய தாக்குதல்கள் அடிக்கடி நடக்குமென்றும், கொடுமை அதிகரிக்குமென்றும் நான் உறுதி கூறுகிறேன்."



# வார யுத்தச் செய்திகள்.

## 31—10—42-லிருந்து 6—11—42-வரை.

**ருஷ்யா.**—ஸ்டாலின்கிராடு யுத்தம் சற்றும் வேகம் தணியாமல் மீண்டும் நடந்துவருகிறது. எதிரிக்கும் இணையற்ற நஷ்டங்கள் நேர்ந்திருக்கின்றன. எதிரி விமானங்கள் சுமார் 2,000 தடவை பறந்தும், 2,000 டீரங்கிகள் தாக்கியும் வந்திருக்கின்றன. ஒரு நாளைக்கு ஒரு டிவிஷன் வீதம் ஜெர்மானியருக்குச் சேதமேற்படுகிறது. ஜெர்மன் சவங்கள் மலைபோல் குவிந்துவருகிறதென்று நேரில் கண்ட ஒருவர் சொல்லுகிறார். இருந்தாலும், மூர்க்கத்தனமான சண்டை நடக்கிறது. மாஸ்கோவிற்கு எதிராக நடந்த சண்டையில்தான் இவ்வித நஷ்டம் எதிரிக்கு முன்பு ஏற்பட்டது.

வால்கா நதிக்கரையை அடையவொட்டாமல் ருஷ்யர்கள் ஜெர்மானியரை விரட்டிவருகின்றனர். தெருச்சண்டைகளிலும் வெற்றிகரமாகத் துரத்தியடிக்கின்றனர்.

நகரின் தெற்கில் குபரோஸ்நோயி (Kuporossnoye) என்ற இடம் வரையில் ருஷ்யர்கள் சென்றிருக்கின்றனர். இது அக்டோபர் தொழிற்சாலையிலிருந்து 10 மைல் தூரத்திலிருக்கிறது. நகரத்தின் வடமேற்கிலும், ருஷ்யர்கள் முன்னேறியிருக்கின்றனர்.

**நால்சிக்** காலி செய்யப்பட்டது. எதிரிகள் அதிகமான மனிதர்களையும், டாங்கிகளையும் ஒரே மூச்சாக மாஸ்டக் பிரதேசத்திலிருந்து உபயோகித்ததால் தான் அதைக் காலிசெய்யவேண்டியதாயிற்று. நால்சிக்கிலிருந்து கிராஸ்னீ, மக்காச்காலா, அலாகிரி, ஆர்ட்ஜோனிக்ஜிட்ஜி முதலிய இடங்களை நோக்கி ஜெர்மானியர் முன்னேறுவதாகத் தெரிகிறது. இம்முயற்சியைப் பார்த்தால் மாஸ்டாக் பிரதேசத்தைப் பூராவையும் கைப்பற்ற நோக்கம் இருப்பதாகத் தெரிகிறது.

காகஸஸிலுள்ள ருஷ்யப் படை நோவோரோஸிஸ்க்—டுவாப்ஸி பிரதேசத்தில் எவ்வித ஜெர்மன் தாக்குதலையும் தடுக்க வல்லமையுள்ளதாக இருக்கிறது. நோவோரோஸிஸ்க், ஸமஸ்க்குடா முதலியவைகளை ருஷ்யர்கள் தாக்கிவருகின்றனர். நோவோரோஸிஸ்கை ருஷ்யர்கள் காலிசெய்து 1½ மாதகாலமாகியும் ஜெர்மானியர் நகரத்தை வசப்படுத்த முடியவில்லை.

**எகிப்துப் போர்.**—நவம்பர் 1௳ ஆஸ்திரேலியர்களடங்கிய சாம்ராஜ்யப்படைகள் எல் அலமீன் இருப்புப்பாதையைப் பிளந்து முன் செல்லுகின்றன. இதன் பயனாக டெல் எலிஸாவிலிருந்து ரோமல் உதவிபெற முடியாமல் செய்யப்பட்டது. ரோமல் படையின் இடது பக்கம் பூராவாக சாம்ராஜ்யப்படைகள் ஸ்வாதீனத்தில் வைத்துக்கொண்டிருக்கின்றன.

கடற்கரை ஓரமாக நவம்பர் 1, 2, தேதிகளில் ரோமல் செய்த குறுக்கு எதிர்ப்புகள் பலிக்கவில்லை. நவம்பர் 3௳ மீண்டும் தெற்கில் பிரிடிஷ் காலாட்படை தாக்கி வியக்தமாக முன்னேறின. டெல்எலிகார் என்ற உயரமான இடத்தில் கவசப்படைகளின் சண்டை நாள் பூரா நடந்தது. இது ஸிடி அப்டெல் ரஹ்மான் என்ற இடத்திலிருந்து தெற்கில் இருக்கிறது. ஆகவே போர்முனை பூராவாக யுத்தம் நடக்கிறது. கவசப்படைகளுடன் சண்டை நடப்பதால் எட்டாவது படைக்குப் போதுமான இடவசதி கிடைத்திருக்கிறது என்று தெரிகிறது.

நியூ யார்க் ஹெரால்டு டிரிபூன் சொல்லும் விதமாக அந்த யுத்தத்தில் எட்டாம் படையின் முன்னேற்றத்தினால் ரோமலின் வெளிப்புறமான பாதுகாப்புகள் தாக்கப்பட்டன. 'பிரிடிஷ் படைகளின் பலம் இந்தத் தடவை விருத்தியடைந்திருப்பதால் வட ஆபிரிக்காவில் அச்சுநாட்டுப் படைகள் நிச்சயம் தோற்கடிக்கப்படும். இதுவும் இனிமேல் யுத்தம் வருவதைப் பொறுத்திருக்கிறது.

[பிறகு கிடைத்த செய்திகளின்படி சாம்ராஜ்யப்படைகள் எல் அலமீனிலிருந்து 110 மைல் தூரமிருக்கும் மெர்஼ாமெட்டுவையடைந்தன. மேலும் அமெரிக்கத் துருப்புகள் பிரெஞ்சு வட ஆபிரிக்காவில் அட்லாண்டிக் பக்கத்திலும், மத்திய தரைக்கடல் பக்கத்திலும் இறங்கியிருக்கின்றன—பத்திராதிபர்].

**ஸாலமன்—அக்டோபர் 26.**—ஸ்டீவர்டு தீவிற்குக் கிழக்கில் நடந்த கப்பல், விமானச் சண்டைகளில் போர்டர் என்ற அமெரிக்க நாசகாரியும், விமான மேற்றும் கப்பலும் தாக்கப்பட்டன. அதேவிதமாக ஒரு ஜப்பானிய விமான மேற்றும் கப்பல் ஒன்றும் இரண்டு க்ரூயிஸர்களும் சேதமாயின.

**அக்டோபர் 27.**—ரிகடாகுடாவில் அமெரிக்க விமானங்கள் கடற்கரை யந்திரங்களையும், கடல் விமானங்களையும் தாக்கின.

**அக்டோபர் 29.**—அமெரிக்க விமானங்கள் கூடல்கனலில் எதிரி நிலைகளைத் தாக்கின.

**அக்டோபர் 30.**—ரஸ்ஸல் தீவின் எதிராக அமெரிக்கப் பாய்ச்சல் விமானங்கள் எதிரி நாசகாரிகளைத் தாக்கின.

**நவம்பர் 1.**—பூயினுக்கு அருகில் கடல் போரில் ஒரு ஜப்பானிய க்ரூயிஸர் நாசமாக்கப்பட்டது.

**நியூ கினி.**—அலோலா, கொக்கோடா திரும்பப் பிடிக்கப்பட்டு இலுராவா, அபூவாரி இரண்டையும் நோக்கி நேசநாட்டுப் படைகள் முன்னேறுகின்றன.

கொக்கோடாவைத் திரும்பப் பிடித்தது ஒரு முக்கிய சாதகம். ஆஸ்திரேலிய விமான மந்திரி போர்டு கூறும் விதமாக அதுவே ஆஸ்திரேலியர்களின் தைரியத்தைத் தெரிவிக்கிறது.

**மெடகாஸ்கர்.**—அல்காமிஸியில் சிறிது சண்டைக்குப் பிறகு கிழக்கு ஆபிரிக்கப் படைகள் அக்டோபர் 29-ல் பயானரன்டோஸோவினுள் புகுந்தன. இது தெற்கு மெடகாஸ்கரில் ஒரு முக்கிய இடமாகும். இதுதான் விஷி கவர்னர் ஜெனரலான அன்னட்டின் தலைமை காரியாலயம். அவர் தற்சமயம் மீண்டும் தெற்கு நோக்கி ஓடிவிட்டார்.

[அங்கே சண்டை நின்றுவிட்டது. சமாதானத்தைக்கோரிய பிரெஞ்சு வேண்டுகோளுக்கு இணங்கப்பட்டது—பத்திராதிபர்]

**இந்தியாவும், பர்மாவும்—அக்டோபர் 25.**—அமெரிக்கப் போர் விமானங்கள் லாஷியோவைத் தாக்கின.

**அக்டோபர் 28.**—வடகிழக்கு இந்தியாவில் சில விமான நிலயங்களை ஜப்பானிய விமானங்கள் தாக்கின. சேதம் ஒன்றும் ஏற்படவில்லை.

**அக்டோபர் 29.**—பர்மாவில் பகோக்கு, ஹிலிபோ இரண்டையும் பிரிடிஷ் விமானப்படை தாக்கிற்று.

மழைகள் ஓய்ந்துவிட்டதால் இந்திய—பர்மிய எல்லையில் இரு கட்சிகளும் காவல் புரிந்துவருகின்றனர். ஜப்பானியப் படைகள் சில பர்மியர்களைக் கூட்டிக்கொண்டு அங்கிருக்கும் பொதுஜனங்களை பயமுறுத்தினர். சின்மலையின் ஓரமாக நமது கொரில்லாப் படைகளுக்கும் ஜப்பானியத் துருப்புகளுக்கும் நடந்த சண்டையில் ஜப்பானியருக்குச் சேதம். இது மாதிரி அக்யாபிற்கு அருகிலும் நடந்தது. மாங்கடௌ (Mungdow) விற்கு வடக்கில் ஒரு எதிரிக்கூட்டத்தை பஞ்சாப் சாரணக்கூட்டம் சுட்டது.

**சைனா.**—யுங்சாங்கிலுள்ள ஜப்பானிய விமான தளங்களுக்கு அதிகச் சேதம் ஏற்பட்டது. அமெரிக்க விமானங்கள் ஹாங்காங்கில் இரண்டாம் தடவை தாக்குதல் செய்தன. சாஸ்கோவை ஜப்பானியர் தாக்கினர். ஹான்கவ்வை சீனர்கள் தாக்கினர்.

**விமானப் படையெடுப்புகள்—அக்டோபர் 31.**—ஜெர்மன் விமானங்கள் பகலில் தென் கிழக்கு இங்கிலாந்தில் தாக்கின. இதில் சுமார் 50 விமானங்கள் ஈடுபட்டதாயும் அதில் 9 சுட்டு வீழ்த்தப்பட்டதாயும் சொல்லப்படுகிறது. அதே



தினத்தில் பிரிடிஷ் விமானப்படை வடமேற்கு ஜெர்மனி, பிரான்ஸ், பெல்ஜியம் முதலியவைகளைத் தாக்கின.

**பலவகைப்பட்டவை.**—1. மாக்ஷிமை தங்கிய சக்ரவர்த்தியின் உத்தரவுப்படி நவம்பர் மாதம் 15உ ஸிவில் பாதுகாப்பு தினம் கொண்டாடப்படும். அது 1940-41-ல் கிரேட் பிரிட்டனை தாக்க முடியாமல் ஜெர்மன் விமானங்கள் தோற்றுப் போனதின் ஞாபகார்த்தமாகும்.

2. **ஆங்கிலேய—அமெரிக்க டெக்னிகல் கோஷ்டி** ஒன்று ஏற்படுத்தப்பட்டு இந்தியாவின் மேற்குக் கரையில் துறைமுகங்கள், கப்பல் வசதி முதலியவைகளை கவனிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இது சம்பந்தமாக விசாரணை செய்ய இந்திய அரசாங்கத்தின் பிரதிநிதி ஒருவரும் இத்துடன் சேர்ந்துகொள்ளுவார்.

3. ஸ்லோவேனியாவில் டொர்போல்லாவின் தலைவன் க்ராக்ஸ் என்பவன் கொல்லப்பட்டதற்காக 50 யூகோஸ்லாவியர்கள் பதிலாக கொல்லப்பட்டனர். மீதியுள்ளவர்கள் வெளிநாட்டிற்கு ஏற்றி அனுப்பப்பட்டனர். ஸ்லோவேனியாவில் கிராஸ்ன்ஜா கிராமத்தில் நான்கு ஜெர்மன் ஆபீஸர்களும், ஒரு உத்தியோகஸ்தரும் கொல்லப்பட்டதற்காக அந்த கிராமம் அடியோடு அழிக்கப்பட்டது. புருஷர்கள் கொல்லப்பட்டு ஸ்திரீகள் குழந்தைகள் அப்புறப்படுத்தப்பட்டனர்.

ஜெர்மன் யுத்தத் தொழிற்சாலையில் வேலை செய்ய மறுத்ததற்காக 60 ருஷ்யர்கள் வெள்ளை ருஷ்யாவில் கொல்லப்பட்டனர்.

---

## சத்துருவினுடையவும், சத்துருவினால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில், பிரிடிஷ், நேசதேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

| தேதி. | லக்ஷியங்கள். | வியானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| **26—10—42.** (திங்கட்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்.** | | | |
| | தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | **எகிப்தும், லிபியாவும் (Egypt & Libya).** | | | |
| | **போக்குவரத்து வண்டிகள், கவசம் பூண்ட வண்டிகள்.**—யுத்தப் பிரதேசத்தில். | | | |
| | **விமானமிறங்குமிடங்கள்.**—யுத்தப் பிரதேசத்திற்குப் பின்புறத்தில். | | | |
| | **விமானச் சண்டைகள்.**—யுத்தப் பிரதேசத்தில். | 20 விமானங்கள் சேதமாயின. | | 16 விமானங்கள். |
| | **விரோதி ஸ்தானம், பீரங்கி ஸ்தானங்கள்.**—எல் அலமீன் போர்முனையின் வடக்குப் பகுதியில். | | | |
| | **ருஷ்யா (Russia).** | | | |
| | **விமானச் சண்டைகள்.**—கிழக்குப் போர் முனை முழுவதிலும். | | | |
| | **தூரக்கிழக்கு–பர்மா (Burma).** | | | |
| | **ராணுவ லக்ஷியங்கள்.**—ஆக்கியாப் (Akyab) பிரதேசத்தில். | | | |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படை வெடிப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| 26—10—42. (திங்கட்கிழமை)—தொடர்ச்சி. | | | | |
| | **தூரக்கிழக்கு—நியூ கினி (New Guinea).** | | | |
| | விமான நிலயம்.—லே (Lae). | | | |
| | விரோதியின் கட்டடங்கள்.—ஸலாமூவா (Salamaua), கொக்கோடா (Kokoda). | | | |
| | **தூரக்கிழக்கு—டிமோர் (Timor).** | | | |
| | விமான நிலயம்.—கொயபாங் (Koepang). | | | |
| | **தூரக்கிழக்கு—அலூஷியன் (Aleutians) தீவுகள்.** | | | |
| | கிஸ்கா (Kiska). | | | |
| | **தூரக்கிழக்கு—ஸாலமன் (Solomons) தீவுகள்.** | | | |
| | விரோதி க்ரூயிஸர்கள், நாசகாரிகள்.— கூடால்கனல் (Gudalcanar)க்கு கிழக்கே. | விரோதியின் க்ரூயிஸர் தாக்குண்டது. | | |
| 27—10—42. (செவ்வாய்க்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்.** | | | |
| | பகலிலும், இரவிலும் வெடிகுண்டு பிரயோகத்தைப்பற்றி தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | **எகிப்தும், லிபியாவும் (Egypt & Libya).** | | | |
| | விமானமிறங்குமிடங்கள்.—எல் டாபா (El Daba). | | | 6 விமானங்கள். |
| | விரோதி விமானங்கள், இறங்குமிடங்கள், துணைக்காவல் மோட்டார்கள், டாங்கி கூட்டங்கள்.—யுத்தப் பிரதேசத்தில். | | | |
| | கப்பல்துறை பிரதேசம்.—மெர்ஸாமாட்ரூ (Mersa Matruh). | | | |
| | விமானச் சண்டைகள்.—யுத்தப் பிரதேசத்தில். | | | 7 விமானங்கள். |
| | **கிரீஸ் (Greece).** | | | |
| | விமான நிலயம்.—மேலமீ (Malame). | | | |
| | **ருஷ்யா (Russia).** | | | |
| | விமானச் சண்டைகள், தரையிலுள்ள விமானங்கள்.—ருஷ்யப் போர்முனை முழுவதிலும். | | | |
| | **தூரக்கிழக்கு—நியூ கினி (New Guinea).** | | | |
| | விமானக்கூடம், படகுகள்.—லே (Lea)யில். | | | |
| | கொக்கோடா (Kokoda) பிரதேசத்திற்குத் தெற்கே செல்லும் பாதை. | | | |
| | **தூரக்கிழக்கு—போர்ச்சுகீஸ் டிமோர் (Timor).** | | | |
| | விமானக்கூடம்.—டில்லி (Dilli). | | | |
| | **தென்மேற்கு பஸிபிக் (S. W. Pacific).** | | | |
| | விரோதி சமுத்திரக்கரையோரத்திலுள்ள கட்டடங்கள், கடல் விமானங்கள்.—ரெகாடா (Rekata) விரிகுடாவில். | | | |
| | **தூரக்கிழக்கு—பர்மா (Burma).** | | | |
| | விமானநிலயம்.—லாஷியோ (Lashio). | | | |



| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படை வெடிப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| 28—10—42. (புதன்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்.** | | | |
| | இரவில்.—விமான எதிர்ப்புகள்—வட பிரான்ஸ் (Northern France), ஹாலந்து (Holland), பெல்ஜியம் (Belgium). | | | |
| | **எகிப்தும், லிபியாவும் (Egypt & Libya).** | | | |
| | விமானமிறங்குமிடங்கள்.— எல் டாபா (El Daba). | | | |
| | டாங்கிகள், மோட்டார் போக்குவரத்து.—யுத்தப் பிரதேசத்தில். | | | |
| | டிரக்குகள், கவசம்பூண்ட வண்டிகள், யுத்த தளவாடங்கள் ஏற்றிச் செல்லும் லாரிகள், கம்பியில்லாத் தந்தி ஸ்தாபனம்.—எல் அலமீன் (El Alamein) போர் முனையில் தெற்குப் பகுதியில். | | | |
| | விமானச் சண்டைகள்.—யுத்தப் பிரதேசத்தில். | | | 6 விமானங்கள். |
| | **ருஷ்யா (Russia).** | | | |
| | விமானச் சண்டைகள்.—ருஷ்யப் போர் முனை முழுவதிலும். | | | |
| | **தூரக்கிழக்கு—நியூ பிரிடன் (New Britain).** | | | |
| | விரோதிக் கப்பல்கள், துறைமுகம்.— ராபால் (Rabaul). | ஒரு யுத்தக் கப்பல் தாக்குண்டது; துறைமுகம் தீப்பற்றியது. | | |
| | விமானக்கூடம்.—காஸ்மாடா (Gasmata). | | | |
| | **தூரக்கிழக்கு—நியூ கினி (New Guinea).** | | | |
| | கொக்கோடா (Kokoda) பிரதேசத்தில். | | | |
| | **தூரக்கிழக்கு—ஸாலமன் (Solomons) தீவுகள்.** | | | |
| | விமானக்கூடம்.—பூகா (Buka). | | | |
| | விரோதியின் கப்பல்கள், யுத்தக்கப்பல்கள்.—கூடால்கனரி (Gudalcanar)ன் வடகிழக்கே. | | | |
| 29—10—42. (வியாழக்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்.** | | | |
| | பகலில்.—லக்ஷியங்கள்—ஜெர்மனியின் மேற்கேயும், வடமேற்கேயும். | | | |
| | கால்வாயிலுள்ள படகுகள்.—பெல்ஜியம் (Belgium). | | | |
| | இரவில்.—சுரங்க வெடிகள் போடுவது—விரோதி சமுத்திரங்களில். | | | |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| 29—10—42. (வியாழக்கிழமை)—தொடர்ச்சி. | | | | |
| | **எகிப்தும், லிபியாவும் (Egypt & Libya).** | | | |
| | விரோதி டாங்கிகளின் கூட்டங்கள், மற்று வண்டிகள்—யுத்தப் பிரதேசத்தில். | | | |
| | விமான மிறங்கு மிடங்கள்—யுத்தப் பிரதேசத்துக்குப் பின்புறம். | | | |
| | மெர்ஸா மாட்ரு (Mersa Matruh). | | | |
| | விமானச் சண்டைகள்—யுத்தப் பிரதேசத்தில். | | | |
| | **ருஷ்யா (Russia).** | | | |
| | விமானச் சண்டைகள், தரையிலுள்ள விமானங்கள்.—ருஷ்யப் போர் முனை முழுவதிலும். | | | |
| | **தூரக்கிழக்கு—பர்மா (Burma).** | | | |
| | விமானம் பறப்பதற்கு உதவுமிடங்கள்—போ கோக்கு (Pho Kokku). | | | |
| | விமானக் கூடத்திலுள்ள கட்டடங்கள்—ஷ்வீபோ (Shwebo). | | | |
| | **தூரக்கிழக்கு—ஸாலமன் (Solomons) தீவுகள்.** | | | |
| | விரோதி யுத்தக்கப்பல்கள், விமானக் கூடம்—பூயின் (Buin). | | | |
| | **தூரக்கிழக்கு—நியூ கினி (New Guinea).** | | | |
| | கோக்கோடா (Kokoda). | | | |
| 30—10—42. (வெள்ளிக்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்.** | | | |
| | பகலில்.—சாமான் ரயில்வண்டி—ஆஸ்டெண்டு (Ostend)க் கருகாமையில் | | | |
| | விமான தளம், தொழிற்சாலை.—ஹாலந்து (Holland). | | | |
| | கப்பல்கள்.—ஹாலந்தின் கடற்கரைக் கருகாமையில். | | | |
| | இரவில்.—சுரங்க வேடிகள் போடுவது—விரோதி சமுத்திரக்கரையோரங்களில். | | 1 விமானம். | |
| | **எகிப்தும், லிபியாவும் (Egypt & Libya).** | | | |
| | விமான மிறங்குமிடங்கள்—யுத்தப் பிரதேசத்திற்குப் பின்புறம். | | | |
| | விரோதிப் போக்குவரத்து.—கடற்கரைப் பிரதேசத்தில். | | | |
| | விமானக்கூடம்—எலாடம் (Eladem). | | | 1 விமானம். |
| | விமானச் சண்டைகள்—யுத்தப் பிரதேசத்தில். | | | 5 விமானங்கள். |
| | **ருஷ்யா (Russia).** | | | |
| | விமானச் சண்டைகள்—யுத்தப் பிரதேசத்தில். | | | |
| | **தூரக்கிழக்கு—ஸாலமன் (Solomons) தீவுகள்.** | | | |
| | விரோதியின் யுத்தக்கப்பல்கள்—பூயின் (Buin). | | | |



| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| 30—10—42. (வெள்ளிக்கிழமை)—தொடர்ச்சி. | | | | |
| | **தூரக்கிழக்கு—நியூ கினி (New Guinea).** | | | |
| | கோக்கோடா (Kokoda). | | | |
| | **தூரக்கிழக்கு—டிமோர் (Timor).** | | | |
| | டில்லி (Dille). | | | |
| | **தூரக்கிழக்கு—பர்மா (Burma).** | | | |
| | விமானக்கூடம்—ஷ்வீபோ (Shwebo). | | | |
| | ரயில்வே ஸ்டேஷன்—ஸீவா (Seywa). | | | |
| 31—10—42. (சனிக்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்.** | | | |
| | பகலில்.—லக்ஷியங்கள்—வடமேற்கு ஜெர்மனி (Germany). | | | |
| | தொழிற்சாலைகள்—வடபிரான்ஸ் (France), பெல்ஜியம் (Belgium). | | 7 விமானங்கள். | |
| | இருப்புப் பாதைகள்—வடபிரான்ஸ் (France). | | | |
| | **எகிப்தும், லிபியாவும் (Egypt & Libya).** | | | |
| | வண்டிகள், கவசம்பூண்ட வண்டிகள், டாங்கிகள் முகாம்கள்—யுத்தப் பிரதேசத்தில். | பெருத்த சேதம் ஏற்பட்டது. | | |
| | துருப்புகள் முகாம்—மெர்ஸாமாட்ரு (Mersa Matruh)வுக்கருகாமையில். | தீ மூட்டப்பட்டது. | | |
| | ஒரு ரயில்வண்டி—சமுத்திரக்கரை ரஸ்தாவில். | | | |
| | விமானச் சண்டைகள்.—யுத்தப் பிரதேசத்தில். | | | 6 விமானங்கள். |
| | **கிரீட் (Crete).** | | | |
| | விமானக்கூடங்கள்—கிரீட்டில் (Crete). | | | |
| | **ருஷ்யா (Russia).** | | | |
| | விமானச் சண்டைகள், விமானக்கூடங்களிலுள்ள விமானங்கள்—ருஷ்யப் போர்முனை முழுவதிலும். | அக்டோபர் 24 முதல் அக்டோபர் 31-வரை முடிந்தவாரத்தில். | 178 விமானங்கள். | 202 விமானங்கள். |
| | **தூரக்கிழக்கு—ஸாலமன் (Solomons) தீவுகள்.** | | | |
| | துறைமுகம், கப்பல்கள்—பூயின் (Buin). | | | |
| | விரோதி நாசகாரிகள்—கூடல்கனரி (Gudalcanar)ன் வடகிழக்கே. | | | |
| | **தூரக்கிழக்கு—டிமோர் (Timor).** | | | |
| | டில்லி (Dilli). | | | |
| | **தூரக்கிழக்கு—நியூ கினி (New Guinea).** | | | |
| | கோக்கோடா (Kokoda). | | | |
| | விமானக்கூடம் (Lae). | | | |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| **1—11—42.** (ஞாயிற்றுக்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்.** | | | |
| | பகலில்.—விமான எதிர்ப்புகள்—வட பிரான்ஸ் (France). | | 2 விமானங்கள். | |
| | கால்வாயிலுள்ள படகுகள்—பிரான்ஸ் (France). | | | |
| | விமான தளம், தொழிற்சாலை—வட பிரான்ஸ் (France). | | | |
| | இரவில்.—சுரங்க வெடிகள் போடுவது—விரோதி சமுத்திரக்கரையோரங்களில். | | | |
| | விமான மிறங்குமிடங்கள்—யுத்தப் பிரதேசத்திற்குப் பின்புறம். | | | |
| | மெர்ஸாமாட்ரு (Mersa Matruh). | | | |
| | டோப்ருக் (Tobruk). | | | |
| | விமானச்சவாடைகள்—யுத்தப் பிரதேசத்தில். | | | |
| | **ருஷ்யா (Russia).** | | | |
| | விமானச்சவாடைகள்—கிழக்குப் போர் முனை முழுவதிலும். | | | |
| | **தூரக்கிழக்கு—நியூ கினி (New Guinea).** | | | |
| | ஜப்பானிய துணைக் காவற்கப்பல்—பூனா (Buna)வுக்கருகாமையில். | | | |
| | கோக்கோடா (Kokoda) பிரதேசத்தில். | | | |
| | **தூரக்கிழக்கு—டிமோர் (Timor).** | | | |
| | சைனிய வாஸ ஸ்தலங்கள், மற்ற கட்டடங்கள்.—டில்லி (Dilli). | | | |
| | **தூரக்கிழக்கு—ஸாலமன் (Solomons) தீவுகள்.** | | | |
| | விரோதியின் யுத்தக் கப்பல்கள், போக்கு வரத்துக்கள்.—பூயின் (Buin) பிரதேசத்தில். | | | |

## விரோதிகளின் விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.

| தேதி. | லக்ஷியங்கள். | விமானங்களிலிருந்து குண்டுகள் போடுவதினால் ஏற்படும் சேதம். | விரோதி விமான நஷ்டம். | பிரிடிஷ் நேசதேச விமான நஷ்டம். |
|---|---|---|---|---|
| **27—10—42.** (செவ்வாய்க்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain).** | | | |
| | விமான நடமாட்டமேயில்லை. | | | |
| | **ருஷ்யா (Russia).** | | | |
| | ஸ்டாலின்கிராடு (Stalingrad). | | | |
| | **தூரக்கிழக்கு—நியூ கினி (New Guinea).** | | | |
| | விமானம் பறப்பதற்கு உதவுமிடம்.—மில்னே (Milne) விரிகுடா. | | | |
| | விமானக்கூடம்.-மோர்ஸ்பி (Moresby) துறைமுகத்தில். | | | |
| | **ஆஸ்திரேலியா (Australia).** | | | |
| | டார்வின் (Darwin) துறைமுகம். | | | |



| தேதி. | லக்ஷியங்கள். | விமானங்களிலிருந்து குண்டுகள் போடுவதினால் ஏற்படும் சேதம். | விரோதி விமான நஷ்டம். | பிரிடிஷ் நேசதேச விமான நஷ்டம். |
|---|---|---|---|---|
| **28—10—42.** (புதன்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain).** | | | |
| | தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean).** | | | |
| | வேவு பார்த்தல்.—மால்டா (Malta) வில். | | | |
| | **ருஷ்யா (Russia).** | | | |
| | ஸ்டாலின்கிராடு (Stalingrad). | | | |
| | **ஆஸ்திரேலியா (Australia).** | | | |
| | டார்வின் (Darwin) துறைமுகம், | | | |
| | **இந்தியா (India).** | | | |
| | விமானக்கூடங்கள்.-இந்தியாவின் வட கிழக்கில். | அநேகம் சேதமாயின. | 2 விமானங்கள். | |
| **29—10—42.** (வியாழக்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain).** | | | |
| | இரவில்.-விமான நடமாட்டமேயில்லை. | | | |
| | **ருஷ்யா (Russia).** | | | |
| | ஸ்டாலின்கிராடு (Stalingrad). | | | |
| | நால்சிக் (Nalchik). | | | |
| | **தூரக்கிழக்கு—ஸாலமன் (Solomons) தீவுகள்.** | | | |
| | விமானதளம்.—கூடால்கனார் (Gudal-canar). | | | |
| **30—10—42.** (வெள்ளிக்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain).** | | | |
| | விமான நடமாட்டமேயில்லை. | | | |
| | **எகிப்து (Egypt).** | | | |
| | பிரிடிஷ் ஸ்தானங்கள்.—எல் அலமீன் பிரதேசத்தில். | | | |
| | **ருஷ்யா (Russia).** | | | |
| | ஸ்டாலின்கிராடு (Stalingrad). | | | |
| | **நியூ கினி (New Guinea).** | | | |
| | மோர்ஸ்பி (Moresby) துறைமுகம். | | | |
| **31—10—42.** (சனிக்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain).** | | | |
| | பகலில்.—கான்டர் பரி (Canterbury) இங்கிலாந்தின் தென்கிழக்குக் கடற்கரையிலுள்ள ஒரு இடம். | அநேகர் கொல்லப்பட்டனர். | 4 விமானங்கள். | |
| | **ருஷ்யா (Russia).** | | | |
| | ஸ்டாலின்கிராடு (Stalingrad). | | | |
| | நால்சிக் (Nalchik). | | | |
| **1—11—42.** (ஞாயிற்றுக்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain).** | | | |
| | விமான நடமாட்டமேயில்லை. | | | |
| | **ருஷ்யா (Russia).** | | | |
| | ஸ்டாலின்கிராடு (Stalingrad). | | | |
| | ஒரு கிராமம்.—நால்சிக் (Nalchik) பிரதேசத்தில். | | | |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானங்களிலிருந்து குண்டுகள் போடுவதினால் ஏற்படும் சேதம். | விரோதி விமான நஷ்டம். | பிரிடிஷ் நேசதேச விமான நஷ்டம். |
|---|---|---|---|---|

**1—11—42.** (ஞாயிற்றுக்கிழமை)—தொடர்ச்சி.

**ஸாலமன் (Solomons) தீவுகள்.**

அமெரிக்க விமானதளம்.—கூடால்கனர் (Gudalcanar).

**2—11—42.** (திங்கட்கிழமை).

பிரிடன் (Britain).

தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை.

**ருஷ்யா (Russia).**

ஸ்டாலின்கிராடு (Stalingrad).

**தூரக்கிழக்கு—ஸாலமன் (Solomons) தீவுகள்.**

அமெரிக்க விமானதளம்.—கூடால்கனர் (Gudalcanar).

---

# யுத்தக் குறிப்புகள்.

---

**யுத்தப்போக்கு.** 1. **எகிப்து.**—யுத்தம் சீதோஷ்ண நிலையை ஒத்து நடைபெறுகிறது. ருஷ்யாவில் மாரிகாலம் ஆரம்பித்திருக்கிறது. இந்தியாவில் மாரிகாலம் ஓய்ந்துவிட்டது. எகிப்தில் மாரிகாலம் ஆரம்பமாகியிருக்கிறது. இதுவரை நாம் யுத்தத்திற்கு தயார் செய்யாதிருந்த காரணத்தினால் எதிரிகள் முன்னேற்றப்போர் செய்து வந்தனர். நாமும் தற்காப்புப்போர் செய்தோம். சீதோஷ்ண நிலைமைக்குத் தக்கவாறு போர் அரங்கங்களை எதிரி ஏற்படுத்திக்கொண்டான். ஆனால் நேசதேசங்களின் பலம் வலுப்பெற்று வரவர, எதிரிக்கு இருந்த சாதகங்கள் குறைந்துவிட்டன. நேசதேசங்கள் தங்களுக்குத் தேவையான போர் அரங்கங்களை ஏற்படுத்திக்கொண்டு முன்னேற்றப் போர் செய்கின்றனர். உதாரணமாக எல் அலமீனைக் காணலாம்.

மேலும், ருஷ்யாவில் சண்டை நடந்துகொண்டிருக்கும்போதே எகிப்தில் ஜெனரல் அலெக்ஸாண்டர் தாக்குதலை ஆரம்பித்திருக்கிறான். இதே சமயத்தில் பிரிடிஷ் விமானத் தாக்குதல்கள் மேற்கு ஐரோப்பாவில் நடந்துகொண்டிருக்கின்றன. ஆகவே ஜெர்மனியின் பலத்தைக்கொண்டு மூன்று பக்கங்களில் ஈடுகொடுக்கவேண்டியிருக்கிறது. 1940—41-ல் இருந்த நிலைமையைக் காட்டிலும் இது எவ்வளவு மாறுபாடுள்ளது என்று பாருங்கள்.

எல் அலமீன் ஒரு குறுகிய பிரதேசமாகியதால் அதற்குள்ள சாதகபாதகங்கள் இருக்கின்றன. பாதுகாப்புக்கு லாயக்காக இருப்பதால் முன்னேற்றப் போருக்கு வசதி குறைவு. நேருக்கு நேர்தான் சண்டை செய்யமுடியும். டாங்கித் தாக்குதலையும் செய்யமுடியாது. ஆகவே பீரங்கிப்படை உதவியையும், விமான உதவியையும்கொண்டு நாம் காலாட் படைகளுடன் முன்னேறலாம். முக்கியமாக பிரிடிஷ் தாக்குதல் கடற்கரையோரமாயுள்ள ரயில்வேயை நோக்கித்தான் செய்யப்படுகிறது. இதனால் எதிரி முன்னேற்றப் போரைத் தொடுக்க முடியாது. ஆகவே நேராடி எதிரியின் தற்காப்புகளைப் பிளந்து சென்றால்தான் பிறகு நமது டாங்கிகளைக்கொண்டு தாக்குதல் செய்யமுடியும். எல் கஸாலாவில் எல்லாவித சௌகரியங்கள் இருந்தும், முன்பு ரோமலுக்கு முன்னேற பல வாரங்கள் பிடித்தது. தற்சமயத்தில் மாண்ட்காமரி ஒரு எதிரி நிலயத்திலிருந்து மற்றொன்றுக்கு தவளையைப்போல் தத்திப்பிடிக்கிறார்.



மூன்று நாட்களாக நேசதேசக் காலாட்படை அச்சுநாட்டுப் படையில் பல பிளவுகளை உண்டுபண்ணி, சில முன்னணி நிலயங்களைப் பிடித்திருக்கிறது. எதிரியின் டாங்கி எதிர்ப்பு ஸ்தலங்களும், சுரங்கத் தளங்களும் போதுமானபடி துளைக்கப்பட்டதால் நேசதேச டாங்கி முன்னேற முடிகிறது.

சமீபத்தில் அச்சு நாட்டு விமானப்படை அதிகமாகியிருந்தாலும் நேசதேசங்களின் விமானாதிக்கம் அதிகமாகவே இருக்கிறது.

“ஆபிரிக்காவில் அமைக்கப்பட்டிருக்கும் அச்சுநாட்டு பான்ஸர் படைகளையே நேசநாடுகள் லக்ஷியமாக வைத்துக்கொண்டிருக்கின்றன. அவைகள் வசத்திலுள்ள நிலத்தைப் பிடிக்கவேண்டுமென்பது அவ்வளவு முக்கியமல்ல தற்போதே எகிப்திலிருந்து அவர்களை விரட்டமுடியாதபோயினும் அவர்களை எப்படியாவது அழிக்கவேண்டும்.

இந்த நோக்கத்துடனேயே 1942-ல் பிரிடிஷ் யுத்த முயற்சியில் கப்பல்களும் டாங்கியும் தயாரிக்கப்பட்டன. இவைகளைக்கொண்டு பிரிடிஷ் 8-ம் படைக்கு உதவிகொடுத்து முடிவான சண்டையைச்செய்ய அனுப்பவும்பட்டது.

“எகிப்து போரில் நமக்குக் கிடைக்கும் லாபங்களைக்கொண்டே இந்த உலக யுத்தத்தின் போக்கையே திருப்பவேண்டும். மேலும், இதைப் பிரதானமாகக் கொண்டு சமயம் வந்தபோது வேறு இடங்களில் நமது படைகளைத் திருப்பி சண்டையைச் செய்யவும் முடியும்.

2. **ஸாலமன்.**—பிரிடிஷ், அமெரிக்க விமானப்படை நெடுந்தூரமுள்ள போக்குவரத்து மார்க்கத்தில் சண்டைசெய்யவேண்டியிருக்கிறது. எகிப்து இங்கிலாந்திலிருந்து நன்னம்பிக்கை வழியாக 1,000 மைல் தூரமிருக்கிறது. ஸாலமன் தீவுகள் அமெரிக்காவிலிருந்து ஸிட்னி வழியாக 8,000 மைல் தூரமிருக்கிறது. லண்டன் டைம்ஸ் பத்திரிகை கீழ்கண்ட அபிப்பிராயத்தைக் கூறுகிறது.

[இந்த சமயத்தில் அச்சு நாட்டுப்படைகள் மெர்ஸா மெட்ருவிற்குத் தெற்கில் ஓடுகிறதாயும், வடக்கு பிரெஞ்சு ஆபிரிக்காவில் அட்லாண்டிக் மத்தியதரைக் கடல் பக்கமாக இறங்கியிருக்கின்றன என்றும் தெரிகிறது. பத்திராதிபர்].

ஜப்பானியர், கரோலைன், மார்ஷல், ஜில்பர்டு, எல்லிஸ் தீவுகளின் வழியாக வடக்கே ஒரு வட்டத்தை ஏற்படுத்தியிருப்பதுபோல் தெற்கில் ஆஸ்திரேலியாவிலிருந்து நியூ கரோலைன், நியூஹிப்ரிடிஸ், பிஜி, ஸாமூவாத் தீவுகளை ஒரு வட்டமாக சுவாதீனப்படுத்தியிருக்கின்றனர். இவை இரண்டிற்கும் இடையில் ஸாலமன் தீவுகள் இருக்கின்றன. நேசதேசங்கள் விமானாதிக்கத்தைக் கொண்டிருக்கின்றனர். ஜப்பானியர் கப்பலாதிக்கம் கொண்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. முக்கிய சண்டை விமானத்திலதான் நடைபெறுகிறது. சண்டையின் முதல் கட்டம் முடிந்திருப்பதாக கர்னல் நாக்ஸ் அறிவித்திருக்கிறார். இதிலிருந்து அடுத்த கட்டம் ஏற்படாதென்று சொல்லமுடியாது. முதல் கட்டத்தில் ஜப்பானியர் 12-கப்பல்களை இழந்தனர்; 3-மீண்டும் மூழ்கடிக்கப்பட்டன ; 58-சேதமாயின.

இந்தச் சண்டையினால் ஜப்பான் கலகலத்துப் போயிருக்கிறதென்று மாத்திரம் தெரியவருகிறது.

3. **ருஷ்யா.**—கொஞ்சநாள் சும்மாயிருந்துவிட்டு ஜெர்மானியர் மீண்டும் ஸ்டாலின்கிராட்டின்பேரில் சண்டையைத் தொடுத்திருக்கிறார்கள். நகரைப்பிடிக்கும் எண்ணம் அவர்களுக்கு இருக்கிறது. நாலில் ஒரு பங்கே பிடித்திருக்கிறார்கள். ஆனால் டிமோஷென்கோவின் உதவிப்படைகள் வடக்கிலும், தெற்கிலும் குறுக்கு எதிர்ப்புகளைச் செய்கிறார்கள், குபோரோஸ்னாயாவையும் ருஷ்யர்கள் அடைந்திருக்கின்றனர். மாரிகாலத்திற்குள் நகரைப்பிடிக்க ஜெர்மானியர் போரிடுகின்றனர். ருஷ்யர்கள் அதுவரை தாக்கப்பார்க்கின்றனர்.

காகஸஸில் ஜெர்மானியர் நால்சிக்கில் இறங்கி மாஸ்டக் பிரதேசத்தில் முன்னேறியிருப்பதுதான் விசேஷம். இவ்விதம் கிராஸ்னி எண்ணெய் பிரதேசங்களைப்பிடிக்க உத்தேசம்.

கருங்கடலில் வோப்ஸியை நோக்கி ஜெர்மானியரின் முன்னேற்றத்தை ருஷ்யர்கள் தடுத்துவருகின்றனர்.

4. கிழக்கு.—மாரிகாலம் ஓய்ந்ததால் ஜப்பானியர் அஸ்ஸாமிலுள்ள அமெரிக்க தளங்களைத்தாக்க ஆரம்பித்திருக்கின்றனர். ஆனால் இதற்கு முன்னாடியே பிரிடிஷ், அமெரிக்க பாம்பர்கள் அக்யாப், ரெங்கூன், லாஷியோ முதலியவைகளின்பேரில் தாக்கி, ஹாங்காங் வரையிலும் முன் செல்லுகின்றனர்.

வி வி வி வி வி வி வி

**யுத்த சாமான்கள் அதிகரிக்கின்றன.** பிரிடனில் யுத்த சாமான்களின் உற்பத்தி அதிகமாக இருப்பதாக உள்நாட்டுப் பாதுகாப்பு மந்திரி ஹெர்பர்டு மாரிஸன் லண்டனில் நவம்பர் 1உ அறிவித்தார். இந்த சாமான்கள் வேறு எந்த நாட்டின் உற்பத்திக்கும் அதிகமானவை. பிரிடிஷ் கப்பல் தொழில் இரண்டு பங்காகியிருக்கிறது. இருந்தாலும் முடிவையடையவில்லை. ஸெப்டம்பர் மாதத்திய சுத்த சாமான்களின் உற்பத்தியில் ஸ்டோர்கள் 14 சதவிகிதமும், விமானங்கள் 18 சதவிகிதமும் அதிகரித்திருக்கின்றன.

அமெரிக்க உற்பத்தியிலும் முக்கியமாக சில சாமான்கள் அதிகரித்திருக்கின்றன. ஆகஸ்டைவிட ஸெப்டம்பரில் விமானங்கள் 22 சதவிகிதம், வியாபாரக் கப்பல் 10 சதவிகிதம், டாங்கி 3 சதவிகிதம் அதிகரித்திருக்கின்றன. 12 பெரிய யுத்தக் கப்பல்கள் மிதக்க விடப்பட்டன. 92 புதிய வியாபாரக் கப்பல்களும் மிதக்க விடப்பட்டிருக்கின்றன. எதிரி நாட்டில் படையெடுப்புக்கு லாயக்காக 13 பெரிய விமானமேற்றும் கப்பல்களை அமெரிக்கா தயாரித்துவருகிறது.

வி வி வி வி வி வி வி

**உலகத்திலேயே அதிகமானவை.** ஜப்பானுக்கு உட்பட்ட படேவியா ரேடியோவிலிருந்து வெளிவந்த ஒலிபரப்பு ஒன்றில் ஜப்பானிய விமானங்கள் நேசதேச விமானங்களைக் காட்டிலும் மேலானவையென்று சொல்லப்பட்டது.

ஆனால் அதற்குப் பதில் கூறும் விதமாக லண்டன் ஸண்டே டைம்ஸ் பத்திரிகையின் விமான நிருபர் கூறிய விவரத்தில் புதிதாக வெளிவந்த 12 விமானரகத்தில் பிரிடிஷார் மூன்றிலும், அமெரிக்கா 7-லும், ஜெர்மனி ஒன்றிலும், இதாலி ஒன்றிலும், முன்னிற்கின்றன. ஜப்பான் ஒன்றிலும் இல்லை. அந்த நிருபரின் விவரம் பின்வருமாறு:—"ஒருவர் உட்காரும் பைடர், நீர்மூழ்கி, ஸ்பிட் பையர் (பிரிடிஷ்); வெகுதூரம் சென்று தாக்கக்கூடிய இரவு பைடர், பிரிஸ்டல் பியோ பைடர் (பிரிடிஷ்); கனமான பாம்பர்கள், அவ்ரோலங்காஸ்டர் (பிரிடிஷ்); நடுத்தரமான பாம்பர் டார்னியர் D. O. 217 E. 2 (ஜெர்மன்); டார்பிடோ பாம்பர் ஸவாய்மெர்செடி (இதாலி); சைனியத்தோடு ஒத்துழைக்கும் விமானம் வடஅமெரிக்க முஸ்டாங் (அமெரிக்கன்); வெகுதூரம் காவல்புரியும் வடக்கு கொரோனடோ (அமெரிக்கன்); போக்குவரத்து நிலவிமானம் (டக்கிளஸ் D. C. 4 அமெரிக்கன்); கடல்விமானம், போயிங்கி ஸிப்பர் (அமெரிக்கன்); கடற்படையினர் கார்ஸயர் (அமெரிக்கன்); டார்பிடோ பாம்பர் கிரம்மன் அவென்ஜர் (அமெரிக்கன்); கப்பற்படை பாய்ச்சல் விமானம் கார்டிஸ் (அமெரிக்கன்).

வி வி வி வி வி வி வி

**மிலனின் முக்கியத்வம்.** அக்டோபர் 24உ இரவும், பகலும் நடந்த பிரிடிஷ் விமானப்படைத் தாக்குதலால் ப்ரடா (Breda), கப்ரோனி (Caproni) முதலிய இடங்களில் இருந்த விமான தளங்கள் அதிகம் சேதமடைந்தன. இதிலிருந்து ஐரோப்பாவின் மேற்கு பாகம் அவ்வளவு பலமாக எதிரிகளால் காபந்து செய்யப்படவில்லையென்றும் தெரிகிறது. லே க்ருஸ்டு ஒரு வாரத்திற்கு முன்பு தாக்கப்பட்டபோதே, அங்கு பாதுகாப்பு ஏற்பாடுகள் குறைவாக இருந்ததென்று கண்டுகொள்ளப்பட்டது. பைடர் விமானங்களின் 'உதவியில்லாமலேயே பிரிடிஷ் பாம்பர் விமானங்கள் பிரான்ஸைத் தாண்டி மிலன் வரையில் பட்டப்பகலில் சென்று தாக்கித் திரும்பியதிலிருந்து பிரான்ஸ் வேண்டிய அளவிற்குப் பாதுகாக்கப்படவில்லையென்று தெரிகிறது.



இதற்குக் காரணம் என்னவென்றால் ருஷ்யா, எகிப்து, ஜெர்மனியின் உள்நாடு முதலிய இடங்களில் ஏராளமாக ஜெர்மன் விமானங்கள் ஈடுபட்டிருக்கின்றன. அதோடு டியப், லிலி முதலிய இடங்களில் வேறே சேதம் ஏற்படுகிறது. மேற்கு ஐரோப்பாவில் ஜெர்மன் விமானங்கள் சுமார் 500 இருக்கலாம். டியப், லிலி தாக்குதல்களுக்குப் பிறகு இந்த எண்ணிக்கை குறைந்து போயிருக்கும்.

கோயரிங் எது எடுத்தாலும் 'ஜெர்மனிக்கு முதலில்' என்று சொல்லுவது உணவுக்கு மாத்திரமில்லை. விமான எதிர்ப்புப் பாதுகாப்புகளுக்கும்தான். அதிகத் தாக்குதலுக்கு உள்ளாகும் ஜெர்மன் நகரங்களில்தான் அதிக விமானங்கள் இருக்கும். அதாவது வடக்கு, மேற்கு ஜெர்மனி, அதற்கு அடுத்தபடிதான் மேற்கு ஐரோப்பாவிலுள்ள கலே, பெல்ஜியம், ஹாலந்து முதலியவை. இவைகளின் பாதுகாப்பிற்கு வெகு சில விமானங்கள்தானிருக்கும்.

வி வி வி வி வி வி வி

**நோஞ்டிக் குதிரை.** ஜினோவா, டூரின் முதலிய தொழிற்சாலை பிரதேசங்கள் பலமாகத் தாக்கப்படுவதிலிருந்து இதாலியைப்பற்றிய பிரஸ்தாபம் வருகிறது. அச்சுநாட்டுக் கூட்டத்தில் இதாலியின் நிலைமைதான் கேவலமானது. இது வரையில் அதற்கு ஒரு லாபத்தையும் காணோம். இதாலிய சாம்ராஜ்யத்தை ஏற்படுத்தச் செய்யப்பட்ட முயற்சியில் இருந்த சாம்ராஜ்யமும் போய்விட்டது. ஜெர்மனி தாக்ஷிண்யமாக விட்டுக்கொடுத்த க்ரோஷியாவை வைத்துக்கொள்ளுவதே இதாலிக்கு வெகு சங்கடமாக இருக்கிறது. இதாலியிலிருந்து தொழிலாளிகள் ஜெர்மனிக்கு அனுப்பப்பட்டனர். இதாலியத் தொழிற்சாலைகள் ஜெர்மன் மயமாகிவிட்டன. இதாலியப் பட்டு ஜெர்மனியில் குடை விமானங்களைத் தயாரிக்க உபயோகிக்கப்படுத்தப்படுகின்றன. இதாலிய ஆரஞ்சுப்பழங்கள், எலுமிச்சம்பழங்கள் ஜெர்மன் துருப்புகளின் உபயோகத்திற்கு எடுத்துச் செல்லப்படுகின்றன. இதாலிய இருப்புப் பாதைகள் ஜெர்மன் படைகளின் உபயோகத்திற்கு வைத்துக்கொள்ளப்பட்டன.

இதாலிய பாஸிஸ்டு கட்சியின் செல்வாக்கு குறைந்துவிட்டது. முஸோலினிக்கும் வயதாகிவிட்டது. ஆசை ஒழிந்தபாடில்லை. பேருக்குத்தான் தலைவனாக இருக்கிறான். சமீபத்தில் மிலன் பிரிடிஷ் விமானப் படைகளால் தாக்கப்பட்ட பிறகு இதாலிய மன்னர் அந்நகரைப் பார்வையிடவந்தாரே தவிர முஸோலினி வரவில்லை.

முஸோலினியின் கீழ் இதாலி விஷிக்குச் சமமாக ஆகி வருகிறது. பிடேனைவிட மிகக் கேவலமாக முஸோலினி நடந்துகொள்ளுகிறான். ஏனென்றால் பிடேனுக்குத் தன்னுடையது என்று சொல்லிக்கொள்ள கொஞ்சம் இடமும், சிறிய கடற்படையும் இருக்கிறது. ஆனால் இதாலியும், இதாலியக் கப்பற்படையும் ஹிட்லருக்கு விற்கப்பட்டனவே. ஆகவே இவ்வித சந்தர்ப்பங்களில் பிரிடிஷார் வெற்றி பெற்று தங்களைவிடுவிக்கும் தருணத்தையே இதாலியர் அதிகம் விரும்பிக் கொண்டிருக்கின்றனர்.

இதாலிதான் மிகவும் பலக்குறைவான இடம். அது தாக்கப்பட்டால் அச்சுநாட்டு அட்டைக்கோட்டை தளதளர்த்துப்போகும். இதை உத்தேசித்துத்தான் எகிப்தில் முதலில் எல் அலமீனில் பிரிடிஷ் படை மான்ட் காமரியின் கீழ் போரைத் துவக்கியிருக்கிறது.

வி வி வி வி வி வி வி

**விஷ வாயு.** அக்டோபர் 12உ எடின்பரோ நகரில் மிஸ்டர் சர்ச்சில் பேசுகையில் 'தாங்கள் செய்யும் குற்றங்கள் தங்களுக்கு நான்கு பக்கங்களிலும் சூழ்ந்து வருவதாக நாஸிகள் உணர உணர, இந்த யுத்தத்தின் கடுமையும் அதிகமாகிக்கொண்டேபோகுமென்று நான் எதிர் பார்த்தது தான்' என்றார். அதற்கு சற்று பிறகு ப்ரொபஸர் ஹால்டேனும் ஜெர்மானியர் விஷ வாயுத் தாக்குதலை அதிகம் செய்வார்களென்றும் எச்சரித்தார்.

இவ்விதம் இவ்விருவர்களும் எச்சரிக்கை கொடுப்பதற்குத் தகுந்த முகாந்தரங்கள் இருக்குமென்பதற்குச் சந்தேகம் இல்லை. ஏனென்றால் அனுபவத்தைப்

பார்த்தாலும் அதிகம் தளர்ந்துபோவோமென்று ஜெர்மானியர் உணரும்போது மிகக்கொடிய முறைகளை அவலம்பிக்கிறார்கள். உதாரணமாக சென்ற யுத்தத்தில் இனி சமாளிக்க முடியாது என்று தோன்றியதும் வெர்டுன் என்ற இடத்தில் ஜெர்மானியர் விஷ வாயுவைப் பிரயோகித்தனர். ஆனால் அப்படி அவர்கள் உபயோகிப்பதற்கு முன்னால் பிரிட்டிஷார் உபயோகித்ததாக வீண் அபாரதம் சாற்றினர். ஓணான் தனது நிறத்தை இடத்திற்கு ஏற்றவாறு மாற்றிக்கொள்ளுவது போல ஜெர்மானியரும் தங்களுடைய முறைகளை மாற்றிக்கொள்ளமாட்டார்கள் தான். அந்தச் சண்டையைப்போல இதுவும் ஒரு பெரிய சண்டை. அப்போது யுத்தம் தொடங்கி நான்காவது வருஷத்தில் ஜெர்மானியரின் நிலை சமாளிக்க முடியாததாயிற்று. இந்த யுத்தத்திலும் தற்போது அவர்களின் நிலைமை அப்படித்தானிருக்கிறது. கனடியர்கள் ஜெர்மன் கைதிகளின் பேரில் விஷ வாயுவை உபயோகித்ததாக ஜெர்மன் ரேடியோக்கள் ஜெர்மன் மக்களுக்கு எடுத்துச்சொல்ல ஆரம்பித்துவிட்டனர். அவர்களுடைய சகாக்களான ஜப்பானியரும் குவாம் தீவைப் பிடித்தபோது விஷவாயுக் கருவிகளை உபயோகித்தனர்.

விஷ வாயுச் சண்டைக்கு ஜெர்மானியர் தயார் செய்து வருகிறார்களென்று 1928-ல் ஹாம்பெர்க்கில் ஸ்டால்ஸென்பர்க்கில் ஒரு தொழிற்சாலையில் விஷ வாயுவால் பலர் இறந்ததிலிருந்தே தெரியும்.

வி வி வி வி வி வி வி

**துருக்கியின் நடுநிலை.** ஆங்கிலேய-துருக்கி நட்பின் மூன்றாவது வருஷ நாள் கொண்டாட்டத்தின் போதும், துருக்கி ஜனநாயகத்தின் போதும், துருக்கி பார்லிமெண்டைத் திறந்துவைக்கும் போதும், துருக்கி ஜனாதிபதி சொல்லிய சொற்களில் நடுநிலையை உண்மையாகக் காப்பாற்றக்கூடும் என்பதற்கான உறுதிமொழி காணப்பட்டது. ஏமாற்றக்காரர்களும், போக்கிரிகளும் நிறைந்த இவ்வுலகத்தில்தான் அவர்களுக்கு இணங்காமல் உறுதியாக இருக்கக்கூடுமென்றார். மூன்று வருஷ காலமாகச் செய்யப்பட்ட நாஜி சூழ்ச்சிகளுக்கு துருக்கி கொஞ்சமும் அசைந்து கொடுக்கவில்லை. 'புது திட்டம்' என்ற பொம்மலாட்டத்தை துருக்கியின் கண் முன்பாக பேபன் செய்து பார்த்தான். லாபகரமான ஜெர்மன் வியாபாரம் என்ற கானல் ஜலத் தோற்றத்தை கிளாடி காண்பித்தான். ஆனால் துருக்கி அவர்களின் வலையில் சிக்கிக்கொள்ளவில்லை. யுத்தத்திற்கு முன் இருந்ததைக் காட்டிலும் நான்கு மடங்கு அபிவிருத்தியடைந்த பிரிட்டிஷ் வியாபாரத்தையே வைத்துக்கொண்டிருக்கிறது. குத்தகைக் கடன் திட்டப்படி அமெரிக்காவிலிருந்து ஆயுதங்களைப் பெற்று நடுநிலையை நிலை நாட்டிக்கொண்டிருக்கிறது.

நேசநாடுகளோடு சேர்ந்து யுத்தத்தில் ஈடுபடுவதைக் காட்டிலும் துருக்கி நடுநிலை நாடாக இருப்பதே சாதகம்தான். ஏனென்றால் சமீபக்கிழக்கு, மத்தியக் கிழக்கு முதலியவைகளைக் காக்க நடுநிலை வகிக்கும் துருக்கிதான் வேண்டும்.

வி வி வி வி வி வி வி

**ஸெக்கர்கள்.** அக்டோபர் 28-ல் கொண்டாடப்பட்டது. உலகின் எல்லா இடங்களிலும் வசிக்கும் ஸெக்கர்கள் இதில் கலந்து கொண்டனர். ஸெக்கோஸ்லாவியா முதலில் ஆஸ்திரியாவிற்கும், ஹங்கேரிக்கும் சொந்தமாக இருந்தது. 1918 அக்டோபர் 21-ல் ஸ்வதந்திரம் பெற்றது. 20 வருஷ காலம் சிரமமான நிலைகளைக் கடந்துவந்து ஹிட்லருக்கு வசமடைந்தது. 1939 மார்ச்சு 14-ல் நாஜித் துருப்புகள் ஸெக்கோஸ்லாவியாவில் புகுந்து இரண்டு நாளில் அதை ஸ்வாதீனப்படுத்திக்கொண்டனர். 1940 ஜூலை 21-ல் லண்டனில் ஸ்தாபிக்கப்பட்ட ஸெக்கோஸ்லாவிய தேசியக் கமிட்டியை பிரிட்டன் அங்கீகரித்தது. ஸ்வதந்திரத்தன்று ஸெக்கோஸ்லாவியாவின் ஜனாதிபதியான டாக்டர் பீனஸ் 'பெர்லினின் கொடுமை வேரோடு களைந்து எறியப்படும்' என்றார்.

வி வி வி வி வி வி வி

**பிரெஞ்சு யுத்த வீரர்களின் கூட்டம்.** பிரெஞ்சு யுத்த வீரர்களின் படையின் டைரக்டர் ஜெனரலான லாஷலியைக் கொல்லச் செய்த ஏற்பாட்டிலிருந்து பிடேனின் அரசாங்கத்திற்குச் செல்வாக்கு குறைந்துவிட்டதென்று தெரிகிறது. தேசியப்



புரட்சி இயக்கத்தின் பிரசார இலாகாவின் தலைவனாக லாஷலி இருக்கிறான். கிராம ஆட்சியை விருத்தி செய்வதற்கு உதவி செய்யும் போர்டின் தலைவனாகவும் இருக்கிறான். புரட்சிக்குப் பதிலாக தொழில், குடும்பம், தாய்நாடு என்ற மூன்று அம்சங்களைக்கொண்டு ஆட்சி முறையை ஸ்தாபிக்க பிடேன் இந்த இயக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறான். இந்தப் புது இயக்கம் தலை ஓங்காது என்பதற்கு அதன் தலைவரைக் கொல்ல செய்த ஏற்பாட்டிலிருந்தே தெரிய வரும். பிடேன் ஏற்படுத்துவதாகச் சொல்லும் அற்ப விஷயத்திற்கு இணங்கி 1789 முதல் இருந்து வரும் புராதன வழக்கங்களைவிட பிரெஞ்சுக்காரர்கள் விரும்பமாட்டார்கள்.

வி வி வி வி வி வி வி

**ஸயாமின் நிலைமை மோசமாகி விட்டது.** ஜப்பானின் பொது க்ஷேம திட்டத்திற்குட்படும்படி அழைக்கப்படும் இதர ஆசியா நாடுகளுக்கு இது ஒரு எச்சரிக்கையாகும். ஸயாமின் தொழிற்சாலை நிறைந்த இடமாகவும், போதுமான சாமான்கள் கிடைக்கக்கூடிய இடமாயும் செய்வதாகச் சொன்ன ஜப்பானிய வார்த்தைகள் பொய்யாயின. ஏனென்றால் தனது தேவைக்கே உலோகங்களோ யந்திர சாமான்களோ இல்லாத காலத்தில் ஸயாமுக்கு எவ்விதம் ஜப்பான் கொடுத்துதவமுடியும். நெல்லு சாகுபடி செய்வதற்குப் பதிலாக பருத்தியை உண்டுபண்ணி ஜப்பானுக்கு அனுப்பவேண்டியிருக்கிறது. ஜப்பானைத் தவிர இதர நாடுகளுடன் ஸயாம் வியாபாரம் செய்யக்கூடாது. ஸயாமிலுள்ள எல்லா வியாபாரத்தையும் சுவாதீனப்படுத்த ஜப்பான் புதிய மந்திரியை நியமித்திருக்கிறது. இதற்காக ஸயாமில் தொழிற்சாலை நகரங்களையும், இதர நகரங்களையும் பிரித்து ஸரபூரிக்குத் தலைநகரம் மாற்றப்பட்டிருக்கிறது. பாங்காக்கில் கொடுக்கல் வாங்கல், வியாபாரம் முதலியன தான் உண்டு.

வி வி வி வி வி வி வி

**கொள்ளை.** சமீபத்தில் டோக்கியோவிலிருந்து வெளிவந்த ஒலிபரப்புகளைப் பார்த்தால் இதர நாடுகளையும் கொள்ளையிட திட்டம் போடப்பட்டிருக்கிற விஷயம் தெரியவருகிறது. அக்டோபர் 17-ல் டோக்கியோ சொன்னதாவது:—'தெற்குப் பஸிபிக்கில் சண்டை போடும் ஜப்பானியத் துருப்புகளுக்கு மலேயாவிலிருந்து கிடைக்கும் உணவுப் பண்டங்களே உபயோகிக்கப்படுகின்றன'. அக்டோபர் 23-ல் சொன்னதாவது:—'ஒரு ஜப்பானிய ஸ்டீமரில் 25,000 டன் மூலப்பொருள்கள் ஜெர்மனிக்கு அனுப்பப்பட்டன.' அக்டோபர் 25-ல் ஜப்பானிய விவசாய மந்திரி சொன்னதாவது:—'யுத்தத்திற்குத் தேவையான மூலப் பொருள்கள் குறைந்து வருவதால் யாராயிருந்தாலும் சிக்கனப்படுத்தி ஜப்பான் வெற்றிபெற ஏற்பாடு செய்யவேண்டும்'. அதே தினத்தில் படேவியா ரேடியோ கூறியதாவது:-'தெற்குப் பிராந்தியங்களை நன்கு பரிசீலனை செய்ய ஜப்பான் விமர்ச ஸ்தாபனங்களை ஏற்படுத்திவருகிறது. அதாவது கொள்ளையிடத்தான்'. அக்டோபர் 23-ல் ஹாஷிமோடோ சொன்னதாவது:—'தெற்குப் பிராந்தியங்களில் இருக்கும் மூலப்பொருள்களைக்கண்டு நான் வியப்புற்றேன். மலை மலையாகக் குவிந்து கிடக்கின்றன. இவைகள் ஜப்பானுக்கு ஏற்றியனுப்ப லாயக்காகவும் இருக்கின்றன.'

வி வி வி வி வி வி வி

**ஹோபே (Hopei).** ஹோபேயை அமெரிக்க வெடி விமானங்கள் தாக்கிய சம்பவம் முக்கியமானது. ஏனென்றால் விமானத் தாக்குதல்கள் ஏற்படாதென்று இதுவரை நினைக்கப்பட்ட பிரதேசங்களில் விமான யுத்தம் பரவி வரும் விஷயம் தெரிகிறது. இது சைனாவின் வடகிழக்குக் கோடியிலுள்ள மாகாணம். இங்குள்ள பீபிங், டீன்ட்ஸின் என்ற இடங்களில் ஜப்பானியர் 1937 முதல் ஸ்திரமாக இருக்கின்றனர். டீன்ட்ஸின் என்பது மஞ்சூரியாவிற்கும் சைனாவிற்கும் இடையிலுள்ள கேந்திரமான இடத்தில் இருக்கிறது. ஜப்பானியக் கப்பல் பலம் குறைந்து வரும் இந்நாளில் இது அவர்களுக்கு மிகவும் உபயோகமாக இருக்கிறது. அதனால்தான் அது நம்மால் தாக்கப்படுகிறது.

அதேவிதமாக ஹாங்காங்கில் அமெரிக்கர் செய்த படையெடுப்பும் முக்கியமானது. தென்மேற்குக்குப் போகும் மார்க்கத்தில் இருக்கும் இது அதிக காபந்துள்ள

கப்பல் நிறுத்தும் இடமும், துறைமுக வசதிகளும் பொருந்தியிருக்கிறது. இந்தத் தாக்குதல்கள் சைனாவின் உள்நாட்டு தளங்களிலிருந்து தான் செய்யப்பட்டிருக்கும். ஏனென்றால் நேசதேசப்படைகள் ஜப்பானியப் பாதுகாப்பு வரிசைகளுக்குப் பின்புறம் சென்றுவிட்டன.

## யுத்த தந்திரம் மாறியிருக்கிறது.

(அப்ஸர்வர் பத்திரிகையிலிருந்து எடுக்கப்பட்டது).

தற்காப்பு ஏற்பாடுகள் பலப்பட்டு வருகின்றன. 1942-ம் வருஷம் நடந்து வரும் ருஷ்ய யுத்தத்திலிருந்து இவ்விஷயத்தை நாம் நன்றாகத் தெரிந்துகொண்டிருக்கிறோம். மேலெழுந்த வாரியாக கவனிக்கும்போது இது ஒரு பெரிய விஷயமாகக் காணப்படாதபோயினும் யுத்தத்தின் போக்கில் ஒரு முக்கியத்வத்தை ஏற்படுத்துகிறது. நமது தற்காப்பு ஏற்பாடுகள் பலமடைந்து வருவதற்கு ஒரு வெளிப்படையான சின்னமும் காணப்படுகிறது. அதாவது 1941-ம் ௵ சரத் காலம் முதல் போர் அரங்கங்கள் குறைந்து வருகின்றன. மேலும் எந்தக் கட்சியின் முன்னேற்றப்படைகள் துரிதமாகச் செல்லுகின்றதோ அப்படை சில தினங்களுக்குள்ளாகவே நூற்றுக்கணக்கான மைல்களுக்குப் போர்முனையை உண்டாக்குகின்றன. ருஷ்ய யுத்தத்தின் ஆரம்பத்தில் பியலிஸ்டாக்-மின்ஸ்க், உமான், கீவ், வியாஸ்மா-பிரெயான்ஸ்க் போன்றவைகள் நாம் குறிப்பிட்ட திட்டத்தை அனுசரித்தவைகளாகும்.

### ருஷ்யாவின் பாதுகாப்பு.

கொஞ்சநாள் கிரமித்து சில புதிய விஷயங்கள் தென்பட்டன. 1941௵ நவம்பர், டிஸம்பர் மாதங்களில் மாஸ்கோ, ரோஸ்டவ் முதலியவைகளைப் பிடிக்கச் செய்யப்பட்ட சண்டைகளில் குறிப்பிட்ட இடங்களிலேயேதான் சண்டை நடந்தது. முன்னேற்றமும் கொஞ்சம் தான் ஏற்பட்டது. ஜெர்மானியரின் மின்னல் போருக்குத் தகுந்த பதில் ஏற்பாடுகளை ருஷ்யர்கள் கண்டுபிடித்தனர். அம்முறையைத்தான் ஜெர்மானியரும் மாரிகாலச் சண்டையில் கைக்கொண்டனர். ருஷ்யரின் தற்காப்புப் போருக்குத் தேவையான ஏற்பாடுகள்தான் எதிரிகளின் முன்னேற்றப் போரைத் தடைசெய்தது. சென்ற உலக யுத்தத்திலும் இம்மாதிரியான சண்டைகள் நடந்தன. இவ்வருஷம் இம்மாதிரியான சண்டைகள் ஸெபாஸ்டோபூல், டானெட்டல் முதலிய இடங்களில் நடைபெற்றன. ஸெபாஸ்டோபூல் முற்றுகைச் சண்டைக்கு லாயக்காகவே பிரதேசம் அமைந்திருந்தது. அது முதல் ருஷ்யராயினும், ஜெர்மானியராயினும் யார் முன்னேற்றப்போர் தொடுத்தாலும், பிரமாதமான பாகத்தைக் கைவசப்படுத்த முடிவதில்லை. 1918-ல் ஜெர்மானியருக்கும், பிரிடிஷாருக்கும் ஸெயிண்டு குவின்டின், அமின்ஸ் என்ற இடங்களில் இம்மாதிரி தான் சண்டை நடந்தது. இவ்வருஷம் வாரனேஷில் எதிரிகள் கடந்து முன்னேறியதால் யுத்தம் விஸ்தாரமான இடத்திற்கு மாறிய போதிலும், இந்த பிரதானமாகக்கொண்டு யுத்த தந்திரத்தில் ஒரு முடிவை ஏற்படுத்த முடியாது.

லிபியா யுத்தத்தை மேலெழுந்த வாரியாகக் கவனித்தால் தற்காப்பு ஏற்பாடுகள் எதிரியைத் தடுப்பதற்கு லாயக்காக இருந்ததாகத் தெரியாது. ஆனால் சற்று ஊன்றி கவனித்தால் தான் அவ்விஷயம் புலப்படும். சென்ற உலக யுத்தத்தில் ஐரோப்பாவின் மேற்கே நடந்த சண்டைகள் எவ்வளவு விஸ்தாரமான இடத்தில் நடந்ததோ அதைவிடக் குறைவான விஸ்தீர்ணமுள்ள பிரதேசத்தில் மூன்று வாரகாலம் சண்டை செய்த பிறகே லிபியாவில் பிரிடிஷ் 8-வது படை பின்வாங்க நேரிட்டது. ஜுன் 13உ நடந்த சண்டையிலும் தற்காப்பு பலமாக இருந்ததால் தான் வெற்றி கிட்டியது. இதற்கு ஒரு மாதம் முந்தி ரோமலுக்கு உதவிபுரிய ஜெனரல் நேரிங் அனுப்பப்பட்டான். இவன் டாங்கிகளை எதிர்க்கும் தந்திரத்தில் கைதேர்ந்தவன்.

### புதிய தந்திரத்தின் உபயோகம்.

இதிலிருந்து நாம் 1914—18-ல் இருந்த பழைய தற்காப்பு யுத்த தந்திரத்தை மறுபடி கையாளுவதாக நினைத்துவிடக்கூடாது. முன்னேற்றத்திற்கும், தற்



காப்பிற்கும் உள்ள சாதகங்களைப் பார்க்கும்போது டாங்கிகளை எதிர்க்கும் பீரங்கி, டாங்கிகளைப் பிளக்கும் விமானங்கள், சுரங்க வெடிகள் முதலியவைகளால் டாங்கி ஆதிக்கத்தை முறிக்கலாம். அதேவிதமாக டாங்கிகளைக்கொண்டு யந்திர பீரங்கி, பள்ளத்தில் மறைந்து தாக்குவது, அரண்கள் முதலியவைகளைப் பிளந்துவிடலாம். ஆகவே தற்காப்பு பலமாக இருந்தால்தான், எதிரியின் யுத்த தந்திரத்தை மாற்றமுடியும்.

இவ்வித நிலை நேசதேசங்களுக்குத்தான் சாதகமாயுள்ளது. ஏனென்றால் ஜெர்மனியும், ஜப்பானும் யுத்தரங்கத்தை மீண்டும் விஸ்தாரப்படுத்த நினைக்கின்றனர். ஆனால் நேசநாடுகள் அதைத் தடுக்க முயலுகின்றன. ஆனால் முன்னேற்றப்போரை நேசநாடுகள் செய்யவில்லையே என்று கவலைப்படவேண்டாம். முந்திய உலக யுத்தத்தில் நேசநாட்டுத்தலைவர்கள் தற்காப்புப் போரின் முக்கியத்வத்தை முதலில் கவனியாது முன்னேற்றத்திலேயே ஈடுபட்டிருந்தனர். இதன் பயனாக லூஸ், ஸோம், நெவில், பெஷன் டேல் (Passchendaele) முதலிய இடங்களில் அவர்களுக்கு தோல்வி ஏற்பட்டது. நாம் இந்த யுத்தத்தில் ஜெர்மன் மின்னல் படையெடுப்பு முறைகளைக் கையாண்டால் ஒருக்கால் தீங்கு ஏற்படலாம். ஜெர்மன் மின்னல் படையெடுப்புகள் 1939—41-ல் பலித்தது என்று வைத்துக்கொண்டு 1942—43-ல் நாம் மின்னல் போரை செய்யக்கூடாது.

### மூன்று நிபந்தனைகள்.

1940-ல் ஜெர்மானியர் கையாண்டுவந்த முன்னேற்றத் தந்திரங்கள் 1942-லோ, 1943-லோ கையாளப் பட்டால் அவர்களுக்குத் தோல்வி ஏற்படுமென்றே சொல்லலாம். முன்போல் வெற்றிகரமான முன்னேற்றப்போர் தற்சமயம் செய்யமுடியாது. ஆனால், மூன்று சாதகங்கள் இருந்தால் ஒருக்கால் பலிக்கலாம்.

நூதனமான முறையில் ஆயுதங்களும், தந்திரங்களும் இருக்கவேண்டும். எதிரியின் இக்காலத்திய பாதுகாப்பு ஏற்பாடுகளைக் கெடுக்கக்கூடியவைகளாகவே இருக்கவேண்டும். எதிரிக்குத் தெரியாத புதிய ஆயுதங்களை முன்னேற்றப் போருக்கென்று, உபயோகிக்கவேண்டும். இவ்விதம் செய்ய கொஞ்சம் நாள் பிடிக்கும்.

1939—40-ல் ஜெர்மானியர் உபயோகித்ததைக் காட்டிலும், அதிகமான ஆள்களையும், ஆயுதங்களையும் ஈடுபடுத்த வேண்டும். இவ்விதம் செய்வது நேச தேசங்களுக்கு சாத்தியமாயினும் கொஞ்சம் நாள் பிடிக்கும்.

இவ்வித தாக்குதலைச் செய்வதற்கு முன், எதிரிக்கு பீதியை உண்டாக்கி அவனது சாமான்களையும் அழிக்கவேண்டும். அதாவது படையெடுப்பு செய்வதற்கு முன்னாடியே எதிரியின் தொழிற்சாலைகளைப் பாழாக்கி, பொது ஜனங்களுக்கு பயத்தை விளைவித்து, அவனது படைகளுக்குச் சண்டை செய்யும் மனப்பான்மையைத் தளரச் செய்யவேண்டும். இதற்காக விமானப் படையெடுப்புகளை ஜெர்மனி பேரில் ஏராளமாகச் செய்யவேண்டும். இதுவும் கொஞ்சகாலம் பிடிக்கும். ஆனால் இவ்விதமான ஏற்பாடுகளைச் செய்ய நாம் காலத்தை வீணாக்க மாட்டோம். கிடைத்த சமயத்தைப் பயன்படுத்திக்கொள்வோம்.

## பட்டாளத்தில் புதிதாகச் சேருதலும், சிப்பாய்கள் ஆக விரும்புகிறவர்கள் செய்ய வேண்டியவைகளும்.

(மதராஸ் யுத்த சஞ்சிகை).

புதிதாகப் படையில் வந்து சேருகிறவர் தான் 'ரிக்ரூட்.' அவரைத் திடீரென்று அவருடைய கிராமத்திலேயிருந்து பிடித்துக்கொண்டு வந்துவிடுவதில்லை. படைகளுக்கு ஆள் திரட்டும் பிரசாரக்காரர்கள் பேசுவதை அவர் பல மாதங்களாகக் கேட்டிருக்கவேண்டும். அல்லது சுவரொட்டி விளம்பரங்களைப் பார்த்திருக்க வேண்டும். அல்லது அவருடைய கிராமத்திலிருந்து படையில் சேர்ந்திருந்து, திரும்பி வந்தவர் யாரேனும் தம் அனுபவத்தையும் ராணுவ வாழ்க்கையின் ஆச்சரியங்களையும் எடுத்துச் சொல்லியிருக்கவேண்டும்.

பிறகு, தானும் படையில் சேருவதென்று முடிவு செய்துகொள்கிறார். தன் குடும்ப விஷயங்களையெல்லாம் ஒருவாறு முடிவு செய்து கொள்ளுகிறார். நேரே கிராம முனிசிப்பிடமாவது, படைக்கு ஆள் திரட்டும் ஏஜெண்டிடமாவது போகிறார். நூற்றுக்கணக்காக இந்த ஏஜெண்டுகள் சென்னை மாகாணத்திலுள்ள பல கிராமங்களுக்கும் போய்க்கொண்டிருக்கிறார்கள். கிராமவாசிகள் இவர்களை லகுவில் அடையாளம் கண்டு கொள்ளுகிறார்கள். அவர்கள் காக்கி உடுப்பு அணிந்திருக்கிறார்கள். அவர்கள் சட்டைக் கையில் ஒரு பச்சை நிறப்பட்டை இருக்கிறது. இவரைக் கண்ட உடனே, அவருக்குப் படையில் சேருவதினால் உண்டாகும் நன்மைகளைக் குறித்தும், சம்பள விவரங்களைக் குறித்தும் அவர் தெரிவிக்கிறார். அவருடைய சம்மதியின் பேரில், எக்ஸ்ட்ரா உதவி ரிக்ரூட்டிங் ஆபீசுக்கு அவரை அந்த ஏஜெண்டு அழைத்துப்போகிறார்.

நான் படையில் சேருவதென்று தீர்மானம் செய்தது முதல் அவருக்கு ஏஜெண்டு தான் சாப்பாடு போடுகிறார். பணத்தைக் குறித்து அவர் கவலைப் படவேண்டியதே கிடையாது. சென்னை மாகாணத்தைச் சேர்ந்த ஒவ்வொரு ஜில்லாவிலும் ஒரு எக்ஸ்ட்ரா அஸிஸ்டெண்ட் ரிக்ரூட்டிங் ஆபீஸ் இருக்கிறது. சில ஜில்லாக்களில் 2 அல்லது 3 ஆபீசுகளும் இருக்கின்றன. ஆகையால் ஒரு ரிக்ரூட் தன் கிராமத்திலிருந்து ஒரு ரிக்ரூட்டிங் ஆபீசுக்குப் போக 70 மைல்களுக்கு மேல் போகும்படி இருக்காது. எக்ஸ்ட்ரா அஸிஸ்டெண்ட் ரிக்ரூட்டிங் ஆபீஸர் சதா சுற்றுப்பிரயாணம் செய்துகொண்டுதான் இருப்பார். ஆகையால், தன் சொந்தக் கிராமத்துக்கு அவர் வரும்போதே, ஒரு ரிக்ரூட் நேரில் அவர் முன் ஆஜராகி படையில் சேர, தான் விரும்புவதாக அறிவிக்கலாம்.

இந்த உத்தியோகஸ்தர் ஒரு சுபேதாராகவோ, சுபேதார் மேஜராகவோ, ஒரு தாசில்தாராகவோ இருக்கலாம். இவர் ரிக்ரூட்டின் கருத்தையறியவேண்டி சில கேள்விகள் கேட்கிறார். அளந்து பார்க்கிறார். நிறுத்துப் பார்க்கிறார். ஒரு டாக்டரைக்கொண்டு பரிசோதித்துப் பார்க்கிறார். பிறகு ராணுவத்தில் இன்ன வேலைக்குத்தான் அந்த ரிக்ரூட் தகுந்தவர் என்று அந்த உத்தியோகஸ்தர் தெரிவிக்கிறார். அந்த ஆபீஸிலேயே அந்த ரிக்ரூட் தங்கியிருக்கிறார். அநேக ரிக்ரூட்டுகள் சேர்ந்தவுடனே அவர்களை எல்லாம் ஒரு பஸ் மூலமாகவோ, ரயில் மூலமாகவோ அஸிஸ்டெண்ட் ரிக்ரூட்டிங் ஆபீஸரின் தலைமை ஆபீசுக்கு அந்த ஆள் சேர்க்கும் ஏஜெண்ட் அழைத்துக்கொண்டு போகிறார்.

இங்கே ரிக்ரூட்டுகள் தங்குவதற்கு விடுதிகள் இருக்கின்றன. குளிப்பதற்கும் சமைப்பதற்கும் தனித் தனி இடங்கள் இருக்கின்றன. இங்கே தான் ராணுவத்தார் கொடுக்கும் ஏராளமான உணவுப் பொருள்களைக்கொண்டு சமைத்துச் சாப்பிடுகிறார்கள். இங்கே தான் ராணுவ ஆரம்பக்கட்டு திட்டங்களுக்கு ரிக்ரூட்டுகள் ஆளாகிறார்கள். குழல் ஊதிய உடனே, கவாத்துக்குத் தயாராகி விடவேண்டும். அப்போது அஸிஸ்டெண்ட் ரிக்ரூட்டிங் ஆபீஸர் இவர்களைப் பார்வையிடுவதும் உண்டு. மூன்று மூன்று பேர்களாக அணி வகுத்து ராணுவ முறைப்படி நடந்து போகவும் வரிசைப்படி நிற்கவும் ஆரம்பப் பயிற்சி ஆரம்பமாகிறது. விளையாட்டுகளும் கற்றுக்கொடுக்கிறார்கள்.

அஸிஸ்டெண்ட் ரிக்ருடிங் ஆபீஸர்கள் இந்தியர்களாகவோ, ஐரோப்பியர்களாகவோ தான் இருக்கிறார்கள். அவரவர்கள் வேலை செய்யும் ஜில்லாக்களைக் குறித்த எல்லா விவரங்களையும் அவர்கள் நன்கு அறிவார்கள். அந்த ஜில்லாக்களில் பேசப்படும் மொழிகளையும் பேசுகிறார்கள். இவர்களுடைய தலைமைக் காரியாலயத்தில் ஒவ்வொரு ரிக்ரூட்டையும் மீண்டும் டாக்டர் சோதிக்கிறார். உயரம், எடை, கல்வி முதலியவை பற்றியும் தணிக்கை செய்கிறார்கள். கடைசியாக அவரை இன்ன படைக்குத் தகுதியானவர் என்று அந்த உத்தியோகஸ்தர் தானே நேரில் நியமிக்கிறார். இதில் ரிக்ரூட்களின் கருத்தையும் ஒட்டித்தான் நியமிக்கிறார்.

உடல் வலிமை, கல்வித் தகுதி இவ்விரண்டையும் ஒட்டித்தான் ஒவ்வொரு ரிக்ரூட்டையும் இன்ன பதவிக்குத் தகுதியுடையவர் என்று முடிவு கட்டுகிறார்கள். உயரமாகவும் பருத்தும் இருக்கிறவர்களை பீரங்கிப் படைக்கும் மற்றவர்களை ஆர். ஐ. ஏ. எஸ். ஸியைச் சேர்ந்த எம். டி. பகுதிக்கும், சென்னை சாப்பர்ஸ் அண்டு மைனர்ஸைச் சேர்ந்த காலாட் படைக்காவது, க்யூ. வி. ஓ. வாகவாவது சேர்த்துக்



கொள்ளுகிறார்கள். படித்தவர்களாகவிருந்தால் அதாவது 6-வது வகுப்பு தேறி, கொஞ்சம் இங்கிலீஷ் பேசக்கூடியவர்களாக இருந்தால், நான் கமிஷன் உத்தியோக மாணவர்களாகவோ கடற்படையில் ஸ்டோக்கர்களாகவோ சிமென்களாகவோ சேர்த்துக்கொள்ளுகிறார்கள்.

இதற்கு அடுத்தபடி, பட்டாளத்தில் தாக்கலாவது. இதற்குச் சில சடங்குகள் இருக்கின்றன. ரிக்ரூட்டுகள் எல்லோரையும் வரிசையாக நிறுத்துகிறார்கள். 13 கேள்விகளுக்கு அவர்கள் விடை சொல்லவேண்டும். இந்தக் கேள்விகளை ரிக்ரூட்டுகள் உணர்ந்துகொண்டு அவற்றிற்குத் தகுந்த விடைகளைக் கூறி விட்டார்கள் என்று அந்த உத்தியோகஸ்தர் திருப்தி கொண்டாரானால், தாக்கல் பத்திரத்தில் கையெழுத்துப்போடுகிறார். அது முதல் அந்த ரிக்ரூட் இந்தியப் படையைச் சேர்ந்தவராகிறார்.

10 முதல் 100 ரிக்ரூட்கள் சேர்ந்த பிறகு, அவர்களை ரயிலேற்றி படைகள் உள்ள ஊர்களுக்கு அனுப்புகிறார்கள். ரயிலில் இவர்களுக்கென்று தனிப் பெட்டிகள் ரிசர்வ் செய்கிறார்கள். படைக்கு ஆள் சேர்க்கும் ஏஜெண்டும் அவர்களுடனே போய் படை அதிகாரிகள் வசம் அவர்களை ஒப்புவித்துவிடுகிறார். பிறகு தான், படைப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

சில மாதங்களுக்குப் பிறகு ரஜாவில் படை வீரர் திரும்பி வருகிறார். அப்போது, தான் அணிந்துகொண்டு வரும் ராணுவ உடுப்புகளைக் குறித்துப் பெருமையடைகிறார். பையில் பணம் கலகலக்கிறது. ராணுவத்தில் சேருவதனால் உண்டாகும் சிறப்புகளைக் குறித்து அடிக்கடி தன் கிராமத்தாருடன் பேசிக்கொண்டிருக்கிறார். இப்படி ரஜாவில் தம் ஊர்களுக்குத் திரும்பி வரும் படை வீரர்கள் தான், இந்திய ராணுவத்தைக் குறித்தும், படைகளுக்கு ஆள் சேர்ப்பதைக் குறித்தும் சிறந்த முறையில் பிரசாரம் செய்யக்கூடியவர்கள்.

---

## அஸ்ஸாமில் ஜப்பானியர் குண்டுவீச்சும், அதற்குப் பிற்பட்டும்.

(ஜெனரல் பிஸேல்—நியூ டெல்லி, அக்டோபர் 29.)

ஜப்பானியர் ஆச்சரியப்படும்படியான வகையில், அவர்களை முன்னேறித் தாக்குவதில் நாம் வெற்றிபெற்றிருக்கிறோம். மேலும், மேலும் இதே மாதிரி செய்யமுடியுமென்றும் நாம் நம்புகிறோம். ஜப்பானிய நகரங்கள் ஏற்கனவே தாக்கப்பட்டிருக்கின்றன. இனியும் தாக்கப்படும்.

அமெரிக்கா நடத்திய சுயேச்சைப் போராட்டத்தின்போது 'என்னைத் தீண்டாதே' என்று வரையப்பட்ட கொடிய விஷப்பாம்பின் சின்னம் உபயோகிக்கப்பட்டது. 10-வது அமெரிக்க விமானப்படை சென்ற சிறிது காலமாக இந்தப் பாம்பின் நிலைமையிலே தான் இருக்கிறது. ஜப்பானியர் இதைத் தீண்ட முயற்சித்தனர். அஸ்ஸாமில் ஒரு இடத்தை அவர்கள் தாக்கினர். அதையொட்டி அமெரிக்கப் படை நாலா பக்கங்களிலும் சரேலென்று பாய்ந்து தாக்கியதைப் பற்றி நீங்கள் பத்திரிகைகளில் படித்திருப்பீர்கள். நாம் ஹாங்காங்கில் இரண்டு தடவை தாக்கினோம்; காண்டனை ஒரு தடவை தாக்கினோம்; கம்மிங்கை நோக்கிப் பாய இருந்த எதிரியை நாம் மண்டையிலடித்தோம்.

சிட்டகாங்கையும், அஸ்ஸாமையும் ஜப்பானியர் தாக்கியதன் நோக்கம், சீனாவுக்கும், இந்தியாவுக்குமிடையே உள்ள விமானப் போக்குவரத்து மார்க்கத்தை தடை செய்வதேயாகும். ஆனால் ஜப்பானியர் ஒரு நாளும் அந்த மார்க்கத்தை நிறுத்த முடியாது என்று நான் சொல்லுவேன்.

டிக்பாய் (Digboi) பிரதேசத்தில் ஜப்பானியர் தாக்கும்பொழுது, ஒரு சில நிமிஷங்கள்கூட தாமதிக்காமல் நம்முடைய துருப்புகளும், இந்தியத் துருப்புகளும் ஒன்று சேர்ந்து ஒத்துழைத்தார்கள். நம்முடைய டாக்டர்கள் ஜாதி, மதம் பேதம் பார்க்காமல் காயமடைந்தவர்களுக்கு சிகிச்சை செய்தார்கள். ஆபத்துக் காலத்தில் அவர்கள் சிநேகப்பான்மையுடன் ஒத்துழைக்க முற்பட்டனர். ஜப்பா

னியர்கள், அமெரிக்கர்கள் என்றும், இந்தியர்கள் என்றும் வித்தியாசம் பாராட்டாமல் யந்திர பீரங்கிகளைக்கொண்டு தாக்கினார்கள். உடனேயே அமெரிக்கர்களும், இந்தியர்களும் ஒன்று சேர்ந்து எதிரியைத் தோற்கடிப்பதற்கான முயற்சியில் ஈடுபட்டுவிட்டனர். இதிலிருந்து அமெரிக்க ராணுவத்தினருக்கும், இந்திய மக்களுக்கு மிடையே சிநேகப்பான்மை நிலவுவது தெரியவருகிறது.

இப்பொழுது பெரிய தாக்குதலை ஜப்பானியர் ஆரம்பிப்பார் என்று எண்ணுவதற்கான அறிகுறி எதுவுமில்லை. மிட்கியானு, லாய்விங், லாஷியோ இவை தான் அஸ்ஸாமை அடுத்தாற்போலுள்ள ஜப்பானிய விமான தளங்கள். இங்கிருந்தே அவர்கள் தாக்கியிருக்கவேண்டும். இந்த இடங்களையெல்லாம் ஜப்பானியர் தாக்குதல் ஏற்பட்ட 24 மணி நேரத்துக்குள் நாம் தாக்கியிருக்கிறோம்.

நம்மில் குறிக்கப்படும் விஷயங்கள் ஏற்கனவே பத்திரிகைகளில் பிரசுரமாகியிருக்கின்றன. ஹாங்காங்கைத் தாக்குவதற்கு பிரதானமாக நாங்கள் கருதி வந்தோம். அம்மாதிரி நகரங்களை அழிக்கவேண்டுமென்பது நமது நோக்கமல்ல. முக்கிய ராணுவ இலக்குகளைச் சரியாகக் குறிபார்த்தே நாங்கள் தாக்கிவருகிறோம்.

---

## காகஸஸ் இந்தியாவைப் பாதுகாக்கிறது.

### ஸோவியத் தலைவர் M. கலினின்.

லண்டன், அக்டோபர் 29.

"1918-ம் வருஷத்தில் ஜெர்மானியர், யூக்ரேன், காகஸஸ், துருக்கித் துறைமுகமாகிய ட்ரெபிஸான், ஆசியா மைனர் ஆகியவற்றைப் பிடித்து, இந்தியாவையும் தாக்க உத்தேசித்தனர். இவ்விதமாக உலக ஆதிக்கத்தைப்பெற அவர்கள் எண்ணினர்.

"இது சம்பந்தமாக ஜெர்மன் பத்திரிகை ப்யூட்ஷி யூக்ரேனர் ஸீடங் கூறுவதாவது :—'இப்பொழுது ஜெர்மன் ஆல்பைன் துருப்புகள் 1918-ம் வருஷத்திய திட்டத்தை நிறைவேற்ற அப்பிரதேசங்களில் தோன்றியிருப்பதை ஒருவர் நினைத்துப்பார்ப்பாரானல், உலக சரித்திரத்தின் போக்கை அவர் தெளிவாகத் தெரிந்து கொள்ளலாம். 1918-ம் வருஷம் ஜெர்மனிக்குக் கிடைத்திருக்கவேண்டிய வெற்றி 25 வருஷங்களுக்கப்பால் தள்ளிவைக்கப்பட்டது.

"எதிரியின் முன்னேற்றத்தை ருஷ்யச் சைனியம் தடுத்துவருகிறது. காகஸஸுக்கு அப்பாலுள்ள குடியரசு நாடுகள், காகஸஸின் வடபாகத்தைப் பாதுகாப்பதற்காகப் போருக்குக் கிளம்பியிருக்கின்றன. காகஸஸிலுள்ள ஜனங்களை ஒடுக்கி, மலைகள் வழியாக இந்தியாவுக்கு ஒரு ரஸ்தாவை அமைக்க ஜெர்மானியர் விரும்புகின்றனர்.

"ஆனல் காகஸஸை ஜெர்மானியரின் கல்லறைகளாக நாம் செய்வோம்".

---

## துருக்கி தேசத்தினர் அதிகபலம் பெற்றும், தைரியமாகவும் இருக்கின்றனர்.

I

(துருக்கி பிரஸிடென்டு M. இஸ்மேட் இனேனு ஸ்வதந்திர தினக் கொண்டாட்டத்தன்று பேசியது. லண்டன், அக்டோபர் 29).

"ஒரு தேசத்தார் தன் வசமுள்ளதைப் பூராவும் சைனியத்திற்காகக் கொடுத்தும், தன் நாட்டுப் பாதுகாப்புக்காக எல்லாவித பரித்தியாகங்களும் செய்வதுதான் பெருத்த விபத்துகளிலிருந்து தப்புவதற்கு வழியாக இருக்கும்.

"சுற்றிலும் யுத்தத் தீ பரவியிருக்கும் இவ்வுலகத்தின்முன் துருக்கி தேசத்தார்கள் தைரியத்துடன் நிமிர்ந்து நிற்கிறார்கள். அவர்களின் தேசீய உணர்ச்சி பலமாகவும், தளராமலுமிருக்கிறது. நாம் நம்மிடத்திலும், நமது தேசத்தாரிடத்திலும் ஐயிப்போமென்ற நம்பிக்கை கொண்டிருக்கிறோம்.

"நாம் ஒற்றுமைக்கு வருவதில் குறுக்கே நிற்கும் தடைகளை நிவர்த்திக்க உபாயங்களைத் தேடவேண்டும். எந்த தேசத்திற்கும் அதனிடமுள்ள நம்பிக்கை தளர்ச்சி அடைந்தால் அதுவே பெருத்த கேட்டை விளைவிக்கும்".



(துருக்கி மந்திரி சபையில் பிரஸிடென்டு இனேனு பேசியது—
அங்காரா நவம்பர் 1).

"இந்த வருஷத்தில் பலதேசங்கள் தீப்பற்றியும், சேதமாக்கப்பட்டும் வருகின்றன. இந்த யுத்தத்தில் ஈடுபடாத தேசமே கிடையாது. இவ்வுலகத்தில் அந்தந்த தேசத்தினர் சுயேச்சையாக வாழ்வதற்கான உரிமை எதிர்காலத்தில் அவர்களுக்கு வழங்கப்படும்.

"இந்தக்கொள்கையைக் கொண்டே நாங்கள் விடாமல் பிரயாசை எடுத்துக் கொண்டுவந்தோம். இந்த கோரமான யுத்தம் முடிந்தபிறகு உலகமெங்கும் ஸ்வதந்திரம் நிலவியிருக்கும் என்ற விஷயம் எங்களுக்கு ஆனந்தத்தை அளிக்கிறது.

"இந்த சமயத்தில் யுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் வல்லரசுகள் ஒன்று சேர்ந்து சமாதானம் செய்துகொள்ளப் போவதாக அறிகுறிகள் ஒன்றும் தோன்றவில்லை. இதற்கு மாறாக 1943-ம் ஆண்டு இந்த யுத்தம் இன்னும் கடுமையாக இருக்கும். அதிலிருந்து மிகவும் கொடுமையான பலன்கள் நேரிடலாம்.

"அடுத்த வருஷத்திலும் நமது தேசியக் கொள்கையை உள்நாட்டு விஷயத்திலும் சரி, அயல் நாட்டு விஷயத்திலும் சரி தாடஸ்தீகமாக அனுசரிப்போம். வலிமையுடன் அந்தக் கொள்கையைப் பாதுகாப்போம்.

"நாம் இதுவரை செய்துகொண்ட ஒப்பந்தங்களுக்கும், சிநேகிதத்திற்கும் யாதொரு இடைஞ்சல்களும் ஏற்படாமல் பாதுகாத்துக்கொள்வோம்.

"நாளுக்குநாள் யுத்தம் பலவிடங்களிலும் பரவிக்கொண்டு வருகிறது. இருந்தாலும் மேற்சொல்லிய கொள்கையை நமது தேசீய சபை பின்பற்றி, முற்றிலும் நடுநிலைமை வகித்தால் நமது தேசத்தினருக்கு அதிக நன்மை ஏற்படும். நாம் நடுநிலைமை வகித்து வருவதில் நமக்கு அனுகூலம் இருக்கிறதாக யுத்தத்தில் ஈடுபட்ட எல்லா வல்லரசுகளும் நம்மை பெருமைபடுத்திச் சொல்லுகின்றன."

II.

(அயல் நாட்டுக்கு கூட்டுறவு சங்கத்தின் தலைவர், டோம் கனலி,
வாஷிங்டன், அக்டோபர் 29).

"துருக்கி ஜனநாயகத்திற்குத் துணையாக இருக்கும். மத்தியக் கிழக்குக்கு நாஸியின் ஆக்கிரமிப்புப் பரவாமல் 10 லக்ஷம் துருப்புகளுடன் துருக்கி குறுக்கே நின்று தடுக்கும்.

"ஸ்டாலின்கிராட்டில் நடக்கும் போர் ஒரு புறமும், லிபியாவில் நடக்கும் போர் மறுபுறமும் இருப்பதில் துருக்கி ஒன்றிலும் ஈடுபடாமல் இருக்கிறது. ஏராளமான துருக்கி வீரர்கள் நாஸி ஆக்கிரமிப்பை அணுகவொட்டாமல் தடுக்கத் தயாராக இருக்கும் வரை துருக்கி நடுநிலைமையாக இருக்கும்".

---

## இனிமேல் எதிரிகள் முன்னேறி தாக்க முடியாது.

### 'யுத்தத்தில் நமக்கு வெற்றிகிடைத்தாலும்' கிடைக்கலாம், அல்லது இல்லாமலும் போகலாம். ஆனல் வெற்றி கிடைத்தால் அது தகுதியானதுதான்.

உள்நாட்டு காரியதரிசி, மிஸ்டர் ஹெர்பர்ட் மாரிஸன்.

லண்டன், அக்டோபர் 29.

"உள்நாட்டிலுள்ள எல்லா மனிதர்களையும் யுத்த சேவையில் ஈடுபடச் செய்திருக்கிறது. ஏதாவது மூலைமுடுக்குகளில் பாக்கி இருக்கிறதாவென்று தேடிப்பார்க்கப்படுகிறது.

"தொழிலாளிகளின் ஜனத்தொகையையும், அவர்கள் தயாரித்துவரும் யுத்தப் பொருள்களையும் ஒப்பிட்டுப்பார்த்தால் எந்த தேசத்தையும்விட இந்த தேசமே அதிகப்படியாகச் செய்து வருகிறது.

“இந்த யுத்தத்தில் மூன்று வருஷங்களாக நாம் எடுத்துக்கொண்டிருக்கும் பங்கு குறைவுயென்று யாரும் குறைகூறுவதற்குமில்லை. அதற்காக நாம் மன்னிப்புக் கேட்கவேண்டியதுமில்லை. இப்பொழுது யுத்தத்தில் ஒரு புதிய தோற்றம் ஏற்பட்டிருக்கிறது. இதுவரையிலும் நடந்ததுபோல் முன்னேறித் தாக்குதல் இனிமேல் எதிரிகளிடம் இல்லை. சில பாகத்தில் அத்தகைய சந்தர்ப்பம் நமக்கேற்பட்டிருக்கிறது. வருங்காலத்தில் முற்றிலும் நமக்கு அந்த சந்தர்ப்பம் கிடைக்கும்.

*மறுபடியும் நமதுமுறை.*

“நேசதேசத்தார்களுக்குள் நடப்பதற்கு கைகொட்டி சந்தோஷப்பட வேண்டும். இந்தப் பொதுக்காரியத்தில் பெரும்பங்கு எடுத்துக்கொண்டதற்கு நன்றி பாராட்டுவதும், கிடைக்கப்பெற்றவைகளை வெளிப்படையாகப் பூஷித்துப் பேசுவதும் அவசியம்.

“இப்பொழுது நம்முடைய முறையே வந்திருக்கிறது என்று சொல்லலாம். மேற்குப் பாலைவனத்தில் நடக்கும் சண்டையை நாம் பார்க்கிறோம். நமது தரைப்படையும், விமானப்படையும் மூர்க்கமான ஆவலுடன் போர் செய்கிறார்கள். அதில் வெற்றிகிடைத்தாலும் கிடைக்கலாம், இல்லாவிடினும் இல்லை. ஆனால் வெற்றி கிடைத்தால் அது தகுதியானதுதான்.

---

## அடியில் கண்டவைகளைக் கவனிக்கவேண்டும்.

*(மதராஸ் மாகாண யுத்தக் கமிட்டியார்).*

பெர்லின், ரோம், டோக்கியோ முதலிய அந்நிய நாட்டு ஒலிபரப்புகளைக் கேட்டு அந்த ரேடியோக்கள் ஒலிபரப்பும் பொய் பிரசாரங்களை உண்மையென்று நம்பவேண்டாம்.

ஒருவரும் பொய் வதந்திகளைப் பரப்பக்கூடாது.

ராணுவ விஷயங்களைப்பற்றி தோணியவாறு ஒன்றும் பேசக்கூடாது. ஆலைகள், தொழிற்சாலைகள், இன்னும் பெரிய கைத்தொழில்கள் முதலியவைகளில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளிகளை, வேலை நிறுத்தம் செய்யும்படி தூண்டக்கூடாது.

முக்கியமான வேலைகளில் உதாரணமாக, ரயில்வே, டிராம், மோட்டார் பஸ் முதலியவைகளிலுள்ள வேலையாட்கள் வேலை நிறுத்தம் செய்வார்களானால், பணக்காரர்களுக்கும், ஏழைகளுக்கும், பொதுவாக எல்லா வகுப்பினருக்கும் போக்குவரத்தில் மிக்க அசௌகரியங்கள் ஏற்படுமென்பதை உணரவேண்டும்.

ரகசிய கலகங்களால் நிரபராதிகளான பொதுமக்களுக்குத்தான் கேடும், அழிவும் ஏற்படும் என்பதை மறந்துவிடக்கூடாது.

அனாவசியமாக வகுப்பு வாதங்களைக் கிளப்பிவிடக்கூடாது.

தற்போதைய நிலைமை ஒரு கட்சியின் நலத்தை மட்டும் முக்கியமாக கவனிக்காமல், எத்தகைய கட்சியிருந்தபோதிலும் தேசத்தின் நலத்தையே பாராட்டும்படி நிர்ப்பந்திக்கிறது என்பதை மறந்துவிடக்கூடாது.

யுத்த முயற்சிக்குத் தடையாயிருக்கக்கூடிய எந்த நடவடிக்கையையும் ஆதரிக்கக்கூடாது.



# புதுக்கோட்டை ஸமஸ்தான
# தேசீய யுத்த முன்னணி நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சிமுறை.

---

| 1942— | **பிரஸங்கம் 120—(1-வது பிரிவு).** | | | மணி. |
|---|---|---|---|---|
| நவம்பர் | 8, ஞாயிற்றுக்கிழமை | பூவரசகுடி ... | மாலை | 7.00 |
| | | வேங்கடக்குளம் ... | ,, | 7.30 |
| | 9, திங்கட்கிழமை ... | பெருங்களூர் ... | ,, | 7.00 |
| | | ஆதனக்கோட்டை ... | ,, | 7.30 |
| | 10, செவ்வாய்க்கிழமை. | காலேஜ் (A) ஆங்கிலம் ... | காலை | 10.15 |
| | | கீரனூர் ... | மாலை | 7.00 |
| | | நாஞ்சூர் ... | ,, | 7.30 |
| | 11, புதன்கிழமை ... | C.S.M. பள்ளிக்கூடம் ... | காலை | 10.00 |
| | | ராணி பெண்பாடசாலை... | ,, | 10.15 |
| | | காலேஜ் தமிழ் பிராஞ்சு ஸ்கூல். | ,, | 10.15 |
| | | அரிமளம் ... | மாலை | 7.00 |
| | | கீழாநிலைக்கோட்டை. ... | ,, | 7.30 |
| | 12, வியாழக்கிழமை ... | மலம்பட்டி ... | ,, | 7.00 |
| | | பேராம்பூர் ... | ,, | 7.30 |
| | 13, வெள்ளிக்கிழமை... | உடையாளிப்பட்டி ... | ,, | 7.00 |
| | | கிள்ளுகோட்டை ... | ,, | 7.30 |

**பிரஸங்கம் 121—(2-வது பிரிவு).**

| | | | |
|---|---|---|---|
| 14, சனிக்கிழமை ... | முனிஸிபல் ஆபீஸ் சதுக்கம். | மாலை | 6.00 |
| 15, ஞாயிற்றுக்கிழமை. | குடுமியாமலை ... | ,, | 7.00 |
| | பரம்பூர் ... | ,, | 7.30 |
| 16, திங்கட்கிழமை ... | நச்சாந்துபட்டி ... | ,, | 7.00 |
| | விராச்சிலை ... | ,, | 7.30 |
| 17, செவ்வாய்க்கிழமை | வெங்களூர் ... | ,, | 7.00 |
| | கோனாபட்டு ... | ,, | 7.30 |
| 18, புதன்கிழமை ... | C.S.M. பள்ளிக்கூடம்... | காலை | 10.00 |
| | ராணி பெண்பாடசாலை... | ,, | 10.15 |
| | காலேஜ் (A) ஆங்கிலம் ... | ,, | 10.15 |
| | காலேஜ் தமிழ் பிராஞ்சு ஸ்கூல். | ,, | 10.15 |
| | பனையப்பட்டி ... | மாலை | 7.00 |
| | ராங்கியம் ... | ,, | 7.30 |
| 19, வியாழக்கிழமை ... | கொடும்பாளூர் ... | ,, | 7.00 |
| | விராலிமலை ... | ,, | 7.30 |
| 20, வெள்ளிக்கிழமை... | பூங்குடி ... | ,, | 7.00 |
| | சத்தியமங்கலம் ... | ,, | 7.30 |

**புதுக்கோட்டை தேசிய யுத்த முன்னணி பிரசார கோஷ்டியார்கள் பிற்பகலில் கீழ்க்கண்ட இடங்களுக்கு வருவார்கள். பாண்டு வாசித்துக் கொண்டு, படங்கள் காண்பித்து, துண்டுபத்திரிகைகள் கொடுத்து, பிரசாரம் செய்வார்கள்.**

| | | | | |
|---|---|---|---|---|
| *சனிக்கிழமை* | ... | 7—11—42 | ... | *வெட்டம்விடுதி.* |
| *ஞாயிற்றுக்கிழமை* | ... | 8—11—42 | ... | *எம்பல்.* |
| *திங்கட்கிழமை* | ... | 9—11—42 | ... | *விராலிமலை.* |
| *செவ்வாய்க்கிழமை* | ... | 10—11—42 | ... | *பேராம்பூர்.* |
| *புதன்கிழமை* | ... | 11—11—42 | ... | *கரம்பக்குடி.* |
| *வியாழக்கிழமை* | ... | 12—11—42 | ... | *கீழாநிலை.* |
| *வெள்ளிக்கிழமை* | ... | 13—11—42 | ... | *புராக்கோட்டை.* |
| *சனிக்கிழமை* | ... | 14—11—42 | ... | *திருமயம்.* |
| *ஞாயிற்றுக்கிழமை* | ... | 15—11—42 | ... | *விராச்சிலை.* |
| *திங்கட்கிழமை* | ... | 16—11—42 | ... | *அரிமளம்.* |
| *செவ்வாய்க்கிழமை* | ... | 17—11—42 | ... | *கோனாபட்டு.* |
| *புதன்கிழமை* | ... | 18—11—42 | ... | *கீழாநிலை புதுப்பட்டி.* |
| *வியாழக்கிழமை* | ... | 19—11—42 | ... | *ஆலங்குடி.* |
| *வெள்ளிக்கிழமை* | ... | 20—11—42 | ... | *பாப்பாபட்டி.* |


*விளம்பரம்.*

இந்தியா கவர்ன்மெண்டார் தயாரித்த

**விமானப்படை தயாரிப்பு**

என்ற பெயருள்ள யுத்தப் படம்

(தமிழில்)

பொன்னமராவதி வலம்புரி டாக்கியில்

*13—11—42 முதல் 16—11—42 வரை காண்பிக்கப்படும்.*

**புதுக்கோட்டை தேசிய யுத்த முன்னணி நிலையம்**

இப்படத்தை

ஜனங்களுக்குச் சிபார்சு செய்கிறது.


Sri Brihadamba State Press, Pudukkottai 2,000—11-11-42.

# புதுக்கோட்டை ஸமஸ்தான
# தேசிய யுத்த முன்னணி நிலையம்.

பிரசுரம்] 1942-ம் ௵ நவம்பர் ௴ 14௳ [ந. 121

பிரஸங்கம் CXXI.

## நேசதேசத்தார்கள் எகிப்தில் பூரா வெற்றியை அடைந்துவிட்டார்கள்.

### அச்சு நாட்டினர் ஆபிரிக்காவைவிட்டு விரட்டப்படுவார்கள்.

*பிரஸ் நிருபர்கள் முன்னிலையில் ஜெனரல் மாண்ட்காமரி பேசியது—*

*கெய்ரோ, நவம்பர் 5.*

12 *தினங்கள்வரை கடுமையான போராட்டத்திற்குப்பின் நாங்கள் சந்தேகமறப் பூர்ணமான வெற்றிபெற்றுவிட்டோம் என்பதைத் தெரிவிக்கவே உங்களை அழைத்தேன். எதிரிப்படை வரிசையில் இரண்டு இடங்களில் பிளவுகள் ஏற்படுத்தியிருக்கிறோம். எங்கள் கவசம்பூண்ட படைகள் உள்ளே பிரவேசித்தன. எதிரிப்படைகள் வாபஸ் பெறுகின்றன. வாபஸ் பெறமுடியாத படைகள் கூடிய சீக்கிரத்தில் கைதிசெய்யப்படும்.*

*(மூன்று இதாலியப் படைப்பகுதிகள் போக்குவரத்து வசதியில்லாமல் இருக்கின்றனவென்று தெரியவருகிறது).*

*விரோதிக்குக் கொடுத்த பலமான அடிகளை அவனால் தாங்க முடியவில்லை. மகத்தான வெற்றியடைவதற்கு எல்லாவித படைகளும் உதவியளித்தன. அகண்ட சுரங்கவெளிகளில் சண்டை நடந்தது. அதில் பிரிடிஷ் பீரங்கிப்படை ஆச்சரியகரமாக நடந்துகொண்டது.*

*ஸாப்பர்களும் அதிக சிரமம் எடுத்துக்கொண்டு அபரிமிதமாக வேலை செய்தார்கள். இப்பொழுது எதிரியைத் தோற்கடிக்க காலாட் படைகளின் யுத்தத்தைப் பொறுத்திருக்கிறது. கவசம்பூண்ட படைகள் ஒன்று சேர்ந்து எதிரியை அடியோடு அழித்தாகவேண்டும்.*

*நேசதேசக் கலாட்படைகளும், விமானப்படையும் ஒன்று சேர்ந்து உழைக்காமலிருந்திருந்தால், இவ்யுத்தத்தில் பல வெற்றிகள் நமக்குக் கிடைத்திருக்காது. இம்மாதிரி முழு ஒக்குமத்துடன் இரண்டு படைப்பகுதிகளும் வேலை செய்துவருகின்றன. யுத்தத்தில் முக்கியமான கட்டத்திற்கு வந்துவிட்டோம். ஆகையினால் இவை இரண்டும் ஒரு கோஷ்டியாக இருந்து ஆபிரிக்காவைவிட்டு எதிரிகளைத் துரத்தி, ஒழித்துவிடும் என்று நாம் நிச்சயமாக எண்ணலாம்.*

## ஹிட்லர் கழுத்தைச்சுற்றி சுருக்குக் கயிறு.

மாஸ்கோவில் புதிதாகத் தயாரிக்கப்பட்ட யுத்தப்படங்களில் ஒன்றில் பிரிடிஷ், அமெரிக்கர், ருஷ்யர் மூவர் ஒரு கயிற்றை ஹிட்லரின் கழுத்தைச் சுற்றிப் பிடித்துக்கொண்டிருக்கின்றனர்.

அந்தக் கயிற்றில் பின்வருமாறு எழுதப்பட்டிருக்கிறது. "அமெரிக்கா, பிரிடிஷ், ருஷ்யா மூவருக்கும் ஏற்பட்ட ஒப்பந்தம்". அந்தப் படத்தின் மேல் "கொடியவன் இந்தக் கயிற்றிலிருந்து தப்பமுடியாது" என்று எழுதப் பட்டிருக்கிறது.

---

## பெரிய பிரிடிஷ் தாக்குதல்.

## எகிப்திலிருந்து ரோமல் விரட்டியடிக்கப்பட்டான்.

(டெய்லி மெயில் பத்திரிகையிலிருந்து).

ரோமலுக்கு ஏற்பட்ட தோல்விக்கு பிரிடிஷாரின் அதிர்ஷ்டமோ, திடுக்கிடக் கூடிய சம்பவமோ, சீதோஷ்ணநிலை மாறுதலோ இவைகள் காரணமில்லை. நேர் முகமாகவும், நீண்ட காலமான தயாரிப்பின் பேரிலும், நிலத்தும் சண்டை நடந்தது. இரு திறப்பார்களுக்கும், எங்கே சண்டை நடக்குமென்றும், எப்படி பொருதல் நேரிடுமென்றும் நன்ருகத் தெரியும். மேலதிகாரிகள் தீர்க்காலோசனை யின் பேரில் இந்த சோதனையை ஏற்பாடு செய்தார்கள். யுத்தப் பொருள்களையும், தைரியத்தையும் பயன்தரத்தக்க விதமாக உபயோகித்திருக்கிருர்கள். இரு திறப்பு சைனியங்களும் உறுதிப்பாடுடன் சண்டையில் ஈடுபட்டார்கள்.

இந்த சம்பவத்தில் உலகத்தார்கள் முழு கவனத்தையும் செலுத்தியிருக்கிருர் கள். பனியுரைந்த காகஸஸ் மலையில் ஈடுபட்டிருக்கும் ஜெர்மானியருக்கு இன்னும் அதிக நடுக்கம் உண்டாகியிருக்கிறது. நியூ கினி காடுகளில் ஈடுபட்ட ஜப்பானியர்கள் அதிகமாக பீதியடைந்துவிட்டார்கள்.

இந்த வெற்றியினுல் ஏற்படக்கூடிய பயன்கள் ஏராளம். இறுதியில் சமீப காலத்தில் மத்தியதரைக்கடலில் நமது கப்பற்படை ஆதிக்கம் செலுத்துவதற்கு அதி சீக்கிரத்தில் வழி ஏற்பட்டுவிடும். இங்குதான் இரண்டாவது போர்முனை ஏற்பட்டிருக்கிறது என்பதை ஹிட்லர் மறுக்கமுடியாது. இப்பொழுது அவனுக்குப் பாதகமாக நிலைமை ஏற்பட்டுவருகிறது. அதுவும் பார்வைக்கு மிக்க பயங்கர மாகத் தோன்றுகிறது. அவ்வித அபாயத்தைத் தடுப்பதற்கு ஹிட்லர் தன்னு லான பிரயத்தனங்களைச் செய்தாகவேண்டும். முக்கியமாக அவன் வேறு முனை களில் ஈடுபட்டிருக்கும் சைனியங்களை இங்கு கொண்டுவந்தால்தான் மேலே சொன்ன ஆபத்து நீங்க இடமுண்டு. அவ்விதம் அவன் செய்வதே நேசதேசத் தார்களுக்கு ஏற்படும் பெருத்த வெற்றியைக் குறிக்கிறது. அதனுல் ருஷ்யா வுக்கும் மிகுந்த அனுகூலம் ஏற்படும்.

லிபியாவை நோக்கியிருக்கும் பல விமான தளங்களைக் கைப்பற்ற பெருத்த போராட்டம் வெகு சீக்கிரத்தில் ஏற்பட்டுவிடும். அது பிரிடிஷ் விமானப் படைக் கும், ரோமலுக்கும் ஒரு பந்தயம் போலிருக்கும். பிரிடிஷ் விமானப்படை தற்போது எதிரி வசமுள்ள முன்னணி விமான தளங்களைக் கைப்பற்றுவதற்குள் ரோமல் தன்னுல் முடிந்தவரையில் அவைகளைக் கைப்பற்ற பிரயத்தனப்படுவான். இந்தப் பந்தயத்தில் ரோமலுக்குத் தோல்வி ஏற்பட்டால் பாலைவனத்தில் தற்போது ஏற்பட்டிருக்கும் பலமான போராட்டத்தில் நேரிடும் தோல்வியை அவனுல் சமாளிக்க முடியாமல் போய்விடும் என்று கருதப்படுறது.



ரோமல் எங்கு தடைப்படுவான், அல்லது அவன் எந்த இடத்திற்குச் செல்லக்கூடும் என்பது அவனை விரட்டியடிக்கும் சக்தியைப் பொருத்திருக்கிறது. செல்லக்கூடும் என்பது அவனை விரட்டியடிக்கும் சக்தியைப் பொருத்திருக்கிறது. அவன் ஏற்கனவே முகாம் செய்த இடத்திலிருந்து வெகு தொலைவரை பிரிடிஷ் சைனியம் துரத்தியடித்திருக்கிறது. இதனுல் இரண்டு மாதங்களுக்கு முன்பு ரோமல் வெற்றியடைய எத்தனித்து முடியாமல் போனதை இப்பொழுது ஜெனரல் அலெக்ஸாண்டரும், மாண்ட்காமரியும் வெற்றியடைந்துவிட்டார்கள்.

---

## மகத்தான, முடிவான வெற்றி.

(மிஸ்டர் சர்ச்சில், லண்டன் நவம்பர் 10).

நாம் புரிந்த யுத்தங்களில் பல சம்பவங்கள் பாதகமானதாக இருந்த போதி லும் முடிவு எப்பொழுதும் திருப்திகரமாகவே இருந்திருக்கிறது. சென்ற யுத்தத் தில் கடைசிவரையில் நாம் சிரமப்படவேண்டிவந்தது.

இந்த யுத்தத்தில் இதுவரை ஏற்பட்டிருப்பதைக் காட்டிலும் கடுமையான விபத்துக்கள் அப்போது ஏற்பட்டன. ரத்தம் சிந்தி கண்ணீர் வடித்து, உழைத்து, வியர்வை கொட்டி சிரமப்பட வேண்டுமென்பதைத் தவிர சுலபமாக நாம் எதை யும் காணமுடியாதென்று நான் கூறினேன். ஆனால் இப்பொழுதோ நம்முடைய அனுபவம் மாறியிருக்கிறது. வெற்றி நிச்சயம் என்ற நிலைமை ஏற்பட்டிருக் கிறது.

ரோமலின் சைனியத்தை சண்டை செய்ய முடியாதபடி முறியடித்து விட்டோம். எங்கே எதிரியின் ஆயுதப்படைகள் அழிந்தால் அவனுக்கு விபரீதம் ஏற்படுமென்று எதிர்பார்த்தோமோ அந்த இடத்தை லக்ஷியமாகக் கொண்டு ஒரே நோக்கத்துடன் போரிட்டோம்.

அந்த இடத்தில் இந்தியத் துருப்புகள் பிரெஞ்சு வீரர்கள் கிரேக்கப் படை கள், ஸெக்கோஸ்லாவியர்கள் இன்னும் மற்றவர்களும் விசேஷப் பங்கெடுத்துக் கொண்டனர். அமெரிக்கர்கள் விமான உதவி கொடுத்து அபாரமான உதவி புரிந்தார்கள். எனினும் பிரிடிஷ் குடியேற்ற நாட்டு சிப்பாய்களுக்கும், ஜெர்மானி யருக்குமே மிகக் கடுமையான போர் நடந்தது.

இது மிக உக்கிரமாகவே இருந்தது. ஜெர்மானியர் எவ்வித ஆயுதங்களைக் கொண்டு பலபேர்களைக் கொளுத்தினர்களோ அவற்றைக் கொண்டே அவர்கள் இப்போது வீழ்த்தப்படுகின்றனர். அதாவது விமானங்கள், டாங்கிகள், பீரங்கி கள் இவைகளேயாம்.

ஆனல் இதுவே முடிவு அல்ல, முடிவின் ஆரம்பம்கூட அல்ல. ஆரம்பம் முடிவுக்கு வந்துவிட்டதென்று மட்டில் சொல்லாம்.

### பழிக்குப்பழி வாங்கப்பட்டது.

இனிமேல் நம்முடைய விமானபலத்தை நாஸிகள் பொறுத்துக்கொள்ள வேண்டிவரும். விமானபலத்தைக்கொண்டுதான் அவர்கள் முன்பு ஈவு இறக்க மின்றி நடந்து கொண்டனர்.

கடற்கரை ரஸ்தாக்களில் பிரிடிஷ் டாங்கிகளும் விமானங்களும் தாக்கும் போது ஜெர்மானியர் ஓடி அழிவதாகக் கிடைக்கும் செய்தியைப் பார்க்கும்போது, முன்பு பிரான்ஸிலும், பிளான்டர்ஸிலும் திக்கற்றவர்களின் மீது ஜெர்மானியர் செய்த அட்டூழியச் செய்கை ஞாபகத்திற்கு வருகிறது.

அதாவது பழிக்குப்பழி வாங்கப்படுகிறது என்று தான் சொல்லாம். இது வரை கிடைத்துள்ள வெற்றிகளைக் கொண்டு எகிப்தின் தற்காப்பைப் பொருத்த வரையில் நிச்சயமான ஒரு முடிவைக்காணலாம் என்பதற்கு நல்ல சூசகங்களாகும்.

எகிப்துப் போருக்குத் தனிப்பட்ட முக்கியத்துவம் உண்டு. இதை அமெரிக் கர்கள் உசித காலத்தில் ஏற்பாடு செய்து மத்தியதரைக்கடல் பக்கத்தில் வந்திறங்

கிறார்கள். இவர்கள் பிரிடிஷ் சைனியம், விமானப்படை, கப்பற்படை இவைகள் உதவிபுரிந்தன.

வட ஆபிரிக்கப் போருக்கு ரூஸ்வெல்ட்டே மூலகர்த்தா ஆவார். நான் அவருக்கு உதவி செய்கிறவனேயாகிறேன்.

ஸ்பெயின், போர்ச்சுகல் இந்நாடுகளின் உரிமைகளுக்கும், நலன்களுக்கும் அமெரிக்காவும், பிரிடனும் கண்டிப்பாக மதிப்பு காட்டுமென்று ரூஸ்வெல்ட் அறிவித்திருக்கிறார்.

மேற்படி தேசங்கள் சுயேச்சையுடனும், சுபீக்ஷமாகவும், சமாதானத்துடனும் வாழவேண்டுமென்பது தான் நமது கொள்கை.

ஸ்பெயினிலும் பொருளாதார வாழ்க்கையை விருத்தி செய்யப் போதுமான உதவியை பிரிடனும், அமெரிக்காவும் கொடுக்கும். முக்கியமாக ஸ்பெயின் தேசத்தினருக்கு சமாதானமும், சுக வாழ்க்கையும் தேவையாக இருக்கிறது.

அடுத்தபடியாக ஜெர்மனியின் காலின் கீழ் தவித்துக் கொண்டிருக்கும் பிரான்ஸைப் பற்றி நாங்கள் கவனிப்போம். மறுபடியும் பிரான்ஸ் தலை தூக்கி நிற்கும் என்று திடமான நம்பிக்கை எனக்குண்டு. ஜெனரல் டிகால், ஜெனரல் ஜிராட், போன்றவர்கள் இருக்கும்வரை பிரான்ஸிற்கு நல்ல காலம் உண்டு.

பிரான்ஸ் ஸ்வதந்திரம் பெற்று தனது குடியேற்ற நாடுகளுடனும், அல்ஸாஸ் லொரேனுடனும் கூடியிருக்குமென்பதில் கொஞ்சமும் சந்தேகமில்லை.

லாபத்திற்காகவோ ராஜ்யம் விஸ்தாரமடைய வேண்டுமென்றோ நாம் இந்த யுத்தத்தில் இறங்கவில்லை. கடமையைச் செய்யவும், உரிமையைப் பாது காத்து கௌரவத்தை நிலைநாட்டவே தான் இறங்கியிருக்கிறோம். இருந்தாலும் இதைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

நமது சாம் ராஜ்யத்தைப் பாதுகாக்க நமது உத்தேசம். பிரிடிஷ் சாம் ராஜ்யம் அழிந்து போவதை ஏற்படுத்துவதற்காக மன்னரின் பிரதம மந்திரிப் பதவியை நான் ஏற்கவில்லை.

அகண்ட சாம் ராஜ்யத்தில் நான் அங்கத்தினராக இருப்பதைப்பற்றி பெருமை கொள்ளுகிறேன். இந்த, புராதான பிரிடிஷ் ராஜ்யத்தைச் சுற்றி எத்தனையோ நாடுகள் சேர்ந்திருப்பதிலும் எனக்குக் கௌரவமே. அப்படி இவைகள் சேராமலிருந்திருந்தால் பல நல்ல காரியங்கள் பாழாய் போயிருக்கும்.

## மலைபோல் திடமாக இருக்கிறோம்.

மாறி வரும் உலகின் மத்தியில் நாம் திடமாக முன்னேறி வருகிறோம். நமது செயல்களே நமது கௌரவத்திற்கு அத்தாக்ஷியாக இருந்து வருவதால் எதற்கும் நாம் மன்னிப்பு கேட்கவேண்டிய அவசியமில்லை.

இப்போது ஆபிரிக்காவில் ஆரம்பமாயிருக்கும் ஒன்றுன ராணுவ, ராஜீயத் தந்திரத்தின் இரண்டு அம்சங்களாகும். இதை சாதிப்பதற்காக எவ்வளவோ காளாகப் பாடுபட்டோம். இதில் நாம் நம்பிக்கை கொண்டிருப்பது உசிதமே.

இது ஆங்கிலம் பேசும் மக்களினிடையே புதிய பாந்தவ்யத்தையும், உலகம் பூராவிலும் புதிய நம்பிக்கையையும் உண்டுபண்ணும்.

---

# வார யுத்தச் செய்திகள்.

## 7—11—42-லிருந்து 13—11—42-வரை.

**பிரேஞ்சு வட ஆபிரிக்கா.**—ஞாயிற்றுக்கிழமை காலையில் அமெரிக்கச் சைனியம், கப்பற்படை, விமானப்படை முதலியவைகளுடன் 1,40,000 பேர்கள் அட்லாண்டிக், மத்தியதரைக்கடற்கரையோரமாக பல இடங்களில் வந்திறங்கினார்கள். இதற்கு பிரிடிஷ கப்பற்படையும், பிரிடிஷ் விமானப்படையும் உதவி செய்தன. இப்பால பிரிடிஷ் சைனியமும் பின்பற்றி இருக்கிறது. அப்பிர தேசத்தை ஜெர்மானியர் ஆக்கிரமிப்பதை எதிர் பார்த்துத்தான் இவ்விதம் அங்கு



இறங்கியதின் நோக்கம். மேலும் ஆபிரிக்கப் படைகளை அழிப்பதற்கு எட்டாவது சைனியம் இடுக்கித் தாக்குதலை நடத்தவும், மத்தியதரைக்கடலின் மேற் பாகத்தில் போக்குவரத்துக்கு லாயக்காகச் செய்யவும், இதாலியை நசுக்குவதின் மூலம் பிரான்ஸை விடுதலை செய்யவும்தான் அவர்களின் முக்கியமான நோக்கங்கள்.

பிரெஞ்சு வட ஆபிரிக்காவை அதிக சீக்கிரத்தில் ஆக்கிரமித்துக் கொண்டார்கள். ஆல்ஜியர்ஸ், ராபட், ஸிடிபெருச், ஆர்ஸேன், ஸெகாலோ, போஸ்பெர், ஸாபி (Safi), பெதாலா (Fedhala), மீடியா, லெயாண்டே துறைமுகம், மேடியா, ஓரான், கஸபிளான்கா முதலியவைகள் ஒன்றன்பின் ஒன்றாக பிடிக்கப்பட்டன. கஸபிளான்காவிலிருந்த பிரெஞ்சு யுத்தக்கப்பல் ஜீன்பார்ட் தீக்கிரையாயிற்று. நேசதேசத்தார்களின் விருந்தினராக டார்லான் பாவிக்கப்பட்டான். சண்டை நின்றுவிட்டதாக அவன் பிரஸ்தாபித்தான். அதிலிருந்து அப்பிரதேசம் பூராவிலும் சண்டை நின்றுவிட்டது. டுனிஸியாவினுள் நேசதேசப் படைகள் அந்த தேசத்திற்குள் பிரவேசித்தன.

இதாலியத் துருப்புகள் நைஸையும் கார்ஸிகாவைப் பிடித்துக்கொண்டன.

ஏற்கனவேயிருந்த யுத்த நிறுத்த உடன்படிக்கையை மீறி ஜெர்மன் துருப்புகள் ஆக்கிரமிக்காத பிரான்ஸுக்குள் புகுந்து, மத்தியதரைக்கடல்கரைக்குச் சென்றன. இதோடு விஷி அரசாங்கம் ஒழிந்தது.

**லிபியா.**—எல்அலமீன் பிரதேசத்திற்கும், பூகா பிரதேசத்திற்கும் இடையே கடுமையான போர் நடந்து, எல்டாபா, பூகா முதலிய இடங்கள் கைப்பற்றப் பட்டன. பிற்பட்டு எஞ்சியிருந்த ரோமலின் பான்ஸர் பகுதிகள் எகிப்திற்கப்பால் துரத்தியடிக்கப்பட்டன. இன்னும் அவர்கள் துரத்தப்பட்டும் வருகிறார்கள்.

ஞாயிற்றுக்கிழமை இரவு அச்சுநாட்டு மோட்டார்களின் கூட்டம் ஸோலூமுக்கும், காபுஸோ கோட்டைக்கும் இடையேயுள்ள ஹால்பாயா, ஸோலூம் கணவாய் பாதைகள் வழியாகச் செல்லும்பொழுது வெடிகுண்டுகளால் தாக்கப்பட்டன.

டொப்ருக் பார்டியா முதலியவை வசமானதாயும் தெரிகிறது.

**மடகாஸ்கர்.**—நவம்பர் மாதம் 5-ம் தேதியோடு சண்டை நின்றுவிட்டது. சமாதானமும் கையெழுத்தாயிற்று.

**ருஷ்யா.**-ஜெர்மானியரின் பெரும் தாக்குதல்கள் காகஸஸ் பக்கமாகத் திருப்பப் பட்டன. ஆர்டிஜோனிகோட்ஜா (Ordzhonikodza)க்கும் கிராஸ்னிக்கும் ஆபத்து நெருங்குகிறது. டபஸியில் இடைவிடாது விமானத்தாக்குதல் நடைபெறுகிறது. நால்சிக்கிற்குத் தென்கிழக்கில் எதிரி மீண்டும் முன்னேறி இருக்கின்றான். 9-ம் தேதி 14 டாங்கிகள் அடக்கப்பட்டன. ஸ்டாலின்கிராட்டில் எதிரிகள் களைத்துப்போய் சிறு சண்டைகளே செய்துவருகின்றனர்.

**சைனு.**—செங்காய், ஷெங்காங் இரண்டிலும் சீனர் ஜப்பானியரைத் தாக்கி வருகின்றனர்.

**ஸாலமன்—நவம்பர் 1.**—கோகும்பாவில் ஜப்பானிய நிலைகள் தாக்கப்பட்டன.

**நவம்பர் 3.**—மெடினிகாவிற்கு மேற்கில் ஜப்பானிய நிலயங்கள் தாக்கப் பட்டன.

**நவம்பர் 4.**—கூடல்கனூரில் ஹென்டர்ஸன் விமான தளத்தைக் கைப்பற்றச் செய்த முயற்சி பலிக்கவில்லை.

**நவம்பர் 5.**—க்ரூயிஸா முனைக்கு அருகில் எதிரித் தாக்குதலை அமெரிக்கப் படைகள் எதிர்த்தடித்தன.

**நவம்பர் 6.**—மெடினிகாவிற்கு மேற்கில் எதிரித் தாக்குதல்கள் திருப்பி அடிக்கப்பட்டன. கூடல்கனூரின் வடகரையில் கோலி முனையில் மெலிம்பு நதியை அமெரிக்கப் படைகள் கடந்தன. மீண்டும் அமெரிக்கப் படைகள் சில மைல் முன்னேறின.

**நவம்பர் 7.**—மெடபோனு நதிக்கு அருகில் அமெரிக்கத் துருப்புகள் முன்னேறின.

**நவம்பர் 8.**—கூடல்கனுரில் எதிரிப்படைகள் தாக்கப்பட்டன. கோலி முனையும் தாக்கப்பட்டது.

**நியூ கினி.**—கொக்கோடாவிற்கு அப்பால் முன்னேறின நேசதேசப் படைகள் ஒவிவி என்ற இடத்தை அடைந்தன. அங்கே கடும் போர் நடைபெறுகிறது. ஆஸ்திரேலியாவிலிருந்து வந்த அமெரிக்க விமானத்துருப்புகள் பிபுவா என்னுமிடத்தில் புகுந்தன. நியூ கினிக்கு வடகிழக்கில் இருக்கும் குட் எனப் (Good-enough) தீவை நேசதேசப்படைகள் பிடித்தன.

**பலவகைப்பட்டவை.**—A. V. அலெக்ஸாண்டர் நவம்பர் 10உ காமன்ஸ் சபையில் அக்டோபர் 20உவரை மூழ்கடிக்கப்பட்ட அச்சு நாட்டு நீர்மூழ்கிகளின் கணக்கு 530 எனவும், அதற்குப்பிறகு அந்த எண்ணிக்கை 570 ஆகியிருக்கிறது என்றும் சொன்னார்.

## சத்துருவினுடையவும், சத்துருவினல் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில், பிரிட்டிஷ், நேசநேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| **2—11—42.** (திங்கட்கிழமை). | | | | |
| | **ஐரோப்பா (Europe).** | | | |
| | பகலில்.—விமான எதிர்ப்புகள்—வட பிரான்ஸ் (France). | | | 4 விமானங்கள். |
| | **வட ஆபிரிக்கா (North Africa).** | | | |
| | டொப்ருக் (Tobruk) துறைமுகம், விரோதி விமானங்கள் இறங்குமிடங்கள், டாங்கிகள், துருப்புகள் இவைகளின் கூட்டங்கள்.—யுத்தப் பிரதேசத்தில். (எகிப்து Egypt). | | | 7 விமானங்கள். |
| | விரோதிப் படைப்பகுதிகள்,—எகிப்துக் கடற்கரை ரஸ்தாவில் பின்வாங்குகின்றன. | | | |
| | **ருஷ்யா (Russia).** | | | |
| | விமானச் சண்டைகள்.—ருஷ்யப்போர் முனை முழுவதிலும். | | | |
| | **தூரக்கிழக்கு—நியூ கினி (New Guinea).** | | | |
| | லே (Lae)யிலுள்ள விமானக்கூடம், பூனு (Buna). | | | |
| | விரோதி கப்பற்படைப் பகுதிகள்.—பூயின் (Buin). (ஸாலமன்ஸில்). | | | |
| **3—11—42.** (செவ்வாய்க்கிழமை). | | | | |
| | **ஐரோப்பா (Europe).** | | | |
| | தொழிற்சாலைகள்.—மேற்கு ஜெர்மனி (Germany). | | | |
| | **வட ஆபிரிக்கா (North Africa).** | | | |
| | கவசம் பூண்ட வண்டிகள்.—யுத்தப் பிரதேச முழுவதிலும் (Egypt). | | | |
| | கப்பல்கள்.—பெங்காஸி (Benghazi). | | | |
| | துறைமுகம்.—டொப்ருக் (Tobruk). | | | |



| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| **3—11—42.** (செவ்வாய்க்கிழமை)—தொடர்ச்சி. | | | | |
| | **ருஷ்யா (Russia).** | | | |
| | விமானச் சண்டைகள்.—கிழக்குப்போர் முனையில். | | | |
| | டில்லி (Dilli) துறைமுகம், டிமோர் (Timor); லே (Lae), (நியூ கினியில்). | | | |
| | ஜப்பானிய கப்பற்படைப் பகுதிகள்.—கூடால்கனுரு (Gudalcanar)க்கு வடகிழக்கே. (ஸாலமன்ஸில்). | | | |
| **4—11—42.** (புதன்கிழமை). | | | | |
| | **ஐரோப்பா (Europe).** | | | |
| | சுரங்க வெடிகள் போடுவது.—விரோதி சமுத்திரக்கரையோரங்களில். | | | |
| | **வட ஆபிரிக்கா (North Africa).** | | | |
| | விரோதிப் படைகள், டாங்கிகள், மோட்டார்கள்.—எகிப்துக்கருகாமையிலுள்ள கடற்கரை ரஸ்தாவில் பின்வாங்குகின்றன. | | | |
| | எகிப்தில்.—மெர்ஸாமாட்ரு (Mersa-Matruh). | | | |
| | எல்டாபா (Eldaba), பூகா (Fuka), பாகுஷ் (Bagush), இவையாவும் எகிப்திலிருக்கின்றன. | | | |
| | **ருஷ்யா (Russia).** | | | |
| | கிழக்குப் போர்முனை முழுவதிலும் விமானச் சண்டைகள். | | | |
| | **தூரக்கிழக்கு.** | | | |
| | விமான மிறங்குமிடங்கள்.—பூனு(Buna), (நியூ கினியில்). | | | |
| | விமானக்கூடங்கள்.—லே (Lae), ஸாலமுவா (Salamaua) நியூ கினியில், (டில்லி (Dilli)டிமோரில்). | | | |
| | கோலிமுனை (Koli Point) (கூடால்கனுரில்.) | | | |
| **5—11—42.** (வியாழக்கிழமை). | | | | |
| | **ஐரோப்பா (Europe).** | | | |
| | விமானக் கூடங்கள்.—பெல்ஜியம் (Belgium), ஹாலந்து (Holland). | | | |
| | **வட ஆபிரிக்கா (North Africa).** | | | |
| | அச்சுநாட்டுத் துருப்புகள், டாங்கிகள்.—மெர்ஸாமாட்ரு (Mersa Matruh), ஹால்பாயா (Halfaya) கணவாய் (எகிப்தில்) வழியாகவும் பின் வாங்குகின்றன. | | | |
| | துறைமுகங்கள்.—டொப்ருக் (Tobruk), பெங்காஸி (Benghazi). | | | |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படை வெடிப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங் களின் நஷ்டம். |
|---|---|---|---|---|

**5—11—42.** (வியாழக்கிழமை)—தொடர்ச்சி.

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகள், விமானக்கூடங்களிலுள்ள விமானங்கள்.—ருஷ்யப் போர்முனை எங்கும்.

தூரக்கிழக்கு.

விரோதி ஸ்தானங்கள்.-ஒவேவி (Ovivi), (நியூ கினியில்).

ஸலாமுவா (Salamaua), மெபோஸி (Maobisse), எய்லி (Ailey), (டிமோரில்).

கப்பல்கள்.—பூயின் (Buin) (ஸலாமன்ஸில்).

**6—11—42.** (வெள்ளிக்கிழமை).

ஐரோப்பா (Europe).

ஆஸ்னுப்ருக் (Osnabruck), (ஜெர்மனியில).

ஒரு துறைமுகம்.—வடமேற்கு ஜெர்மனி (N. W. Germany)யில் ;

விமானதளம்.-கேயன் (Caen).

விமான எதிர்ப்புகள்.—பொலாயின் (Bologne), செர்பர்க் (Cherbourg).

ஜினோவா (Genova). (இதாலியில்).

வட ஆபிரிக்கா (North Africa

மோட்டார்களின் கூட்டம்.—பக்பக் (Bug Bug), ஸோலூம் (Sollum), ஹால்பாயா (Halfaya) முதலிய இடங்களில்.

கப்பல்கள்.—டொப்ருக் (Tobruk).

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகள்.—கிழக்குப்போர்முனை முழுவதிலும்.

தூரக்கிழக்கு.

விரோதி ஸ்தானங்கள்.—ஒவிவி (Ovivi) (நியூ கினி)க் கருகாமையில்.

தூரக்கிழக்கு.

விமானக்கூடங்கள்.—லே (Lae), ஸலாமுவா (Salamawa) (நியூ கினியில்).

விரோதி கப்பற்படைப் பகுதிகள்.—பூயினு (Buin) க்கருகாமையில்.

**7—11—42.** (சனிக்கிழமை).

ஐரோப்பா (Europe .

இருப்புப்பாதைகள், மற்ற லக்ஷியங்கள்.—ஹாலந்து, பெல்ஜியத்தின் கடற்கரைப் பிரதேசங்களில்.

கப்பல்கள்.—கிரோநேட் (Gironde).

தொழிற்சாலைகள், ரயில்வே கட்டடங்கள்.—பெல்ஜியம் (Belgium), ஹாலந்து (Holland).

ஜினோவா (Genova), (இதாலியில்).



| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படை வெடிப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங் களின் நஷ்டம். |
|---|---|---|---|---|

**7—11—42.** (சனிக்கிழமை)—தொடர்ச்சி.

வட ஆபிரிக்கா (North Africa).

ஹால்பாயா (Halfaya) கணவாய், ஸோலூம் (Sollum), ஸிடிபராணி (Sidi Barrani).

டாங்கிகளின் கூட்டம்.—யுத்தப் பிரதேசத்தில் (எகிப்தில்).

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகள், விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்.—ருஷ்யப் போர்முனை எங்கும்.

தூரக்கிழக்கு.

பூனு (Buna) (நியூ கினியில்).

விமானக்கூடம்.—ஸலாமுவா (Salamaua) (நியூ கினியில்).

டில்லி (Dilli) (டிமோரில்).

**8—11—42.** (ஞாயிற்றுக்கிழமை).

ஐரோப்பா (Europe).

எஃகு தொழிற்சாலைகள், ரயில்வண்டிகள் செய்யுமிடம்.—லில் (Lille) (வட பிரான்ஸில்).

விரோதி விமான தளம்.—அபிவில்லி (Abbeville).

வட ஆபிரிக்கா—(North Africa)

விரோதித் துருப்புகள், டாங்கிகள், மோட்டார்கள் கூட்டம்.—ஹால்பாயா (Halfaya) கணவாயில்.

கப்பல்கள்.—பெங்காஸி (Benghazi) துறைமுகத்தில்.

விரோதியின் வண்டிகள்.—புக் புக் (Bug Bug) என்னுமிடத்தில்.

விஷிக்குச்சொந்தமான கப்பற்படை தளங்கள்.—ஒரான் (Oran), கஸபிளான்கா (Casablanca), ஆல்ஜியர்ஸ் (Algiers) (இவையாவும் பிரெஞ்சுக்குச்சொந்தமான வட ஆபிரிக்காவிலிருக்கின்றன).

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகள்.—ருஷ்யப்போர்முனை முழுவதிலும்.

தூரக்கிழக்கு.

ஜப்பானிய விமானதளம்.—பூனு (Buna), (நியூ கினியில்).

விமானக்கூடம்.—லே (Lae), (நியூ கினியில்).

ஜப்பானிய ஸ்தானங்கள்.-கூடால்கனரி (Gudalcanar)ன் வடகிழக்குக் கடற்கரையில் (ஸாலமன் தீவுகளில்).

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| 9—11—42. (திங்கட்கிழமை). | | | | |
| | **ஐரோப்பா (Europe).** | | | |
| | கப்பல் துறைகள்.—ஸெயின்ட்நாஸேர் (S. Nazaire), லெஹாவர் (Lehavre). | | | |
| | விமான எதிர்ப்புகள்.—வட பிரான்ஸ் (North France). | | | |

## விரோதிகளின் விமானப் படைட்யெடுப்புகளின் விவரங்கள்.

| தேதி. | லக்ஷியங்கள். | விமானங்களிலிருந்து குண்டுகள் போடுவதிஞல் ஏற்படும் சேதம். | விரோதி விமான நஷ்டம். | பிரிடிஷ் நேசதேச விமான நஷ்டம். |
|---|---|---|---|---|
| 3—11—42. (செவ்வாய்க்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain).** | | | |
| | ஒரு இடம்.—இங்கிலாந்தின் தென் மேற்குக் கடற்கரையில் | | | 2 விமானங்கள். |
| | இரண்டு இடங்கள்.—கிழக்கு ஆங்கிலியா (East Anglia). | | | |
| | **ருஷ்யா (Russia).** | | | |
| | ஸ்டாலின்கிராடு (Stalingrad). | | | |
| | **தூரக்கிழக்கு (Far East).** | | | |
| | மோர்ஸ்பி துறைமுகம் (Moresby). | | | |
| 4—11—42. (புதன்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain).** | | | |
| | தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | **ருஷ்யா (Russia).** | | | |
| | ஸ்டாலின்கிராடு (Stalingrad). | | | |
| | நால்சிக் (Nalchik) குக்குத் தெற்கே ஒரு இடம். | | | |
| | **தூரக்கிழக்கு (Far East).** | | | |
| | கூடல்கனரி (Gudalcanar)லுள்ள அமெரிக்க விமானக்கூடம் (ஸாலமன்ஸில்). | | | |
| 5—11—42. (வியாழக்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain).** | | | |
| | இரண்டு இடங்கள்.—இங்கிலாந்தி (England)ன் தென்கிழக்குக் கடற்கரையில். | | | |
| | இரண்டு இடங்கள்.—தெற்கு இங்கிலாந்தி (England)ல் | | | |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean).** | | | |
| | மால்டா (Malta). | | | 1 விமானம் |
| | **ருஷ்யா (Russia).** | | | |
| | ஸ்டாலின்கிராடு (Stalingrad). | | | |
| | **தூரக்கிழக்கு (Far East).** | | | |
| | கூடல்கனர் (Gudalcanar) (ஸாலமன் தீவுகளில்). | | | |



| தேதி. | லக்ஷியங்கள். | விமானங்களிலிருந்து குண்டுகள் போடுவதிஞல் ஏற்படும் சேதம். | விரோதி விமான நஷ்டம். | பிரிடிஷ் நேசதேச விமான நஷ்டம். |
|---|---|---|---|---|
| 6—11—42. (வெள்ளிக்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain).** | | | |
| | இங்கிலாந்தி (England)ன் தென் கிழக்குக் கடற்கரையில் இரண்டு இடங்கள். | | | |
| | **ருஷ்யா (Russia).** | | | |
| | மோஸ்டாக் (Mozdok) பிரதேசம். | | | |
| | **தூரக்கிழக்கு (Far East).** | | | |
| | விமான தளம்.—கூடல்கனர் (Gudalcanar). (ஸாலமன் தீவுகளில்). | | | |
| 7—11—42. (சனிக்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain).** | | | |
| | இங்கிலாந்தி (England)ல் எங்கும் விமான எதிர்ப்பே கிடையாது. | | | |
| | **தூரக்கிழக்கு (Far East).** | | | |
| | கூடல்கனரி (Gudalcanar)ல் (ஸாலமன் தீவுகளில்) அமெரிக்க விமான தளம். | | | |
| 8—11—42. (ஞாயிற்றுக்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain).** | | | |
| | விரோதி விமான நடமாட்டமேயில்லை. | | | |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean).** | | | |
| | மால்டா (Malta). | | | |
| | **ருஷ்யா (Russia).** | | | |
| | ருஷ்யர்களுக்கு வரும் உதவிப் படைகள் வோல்கா (Volga) நதியில். | | | |
| 9—11—42. (திங்கட்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain).** | | | |
| | விரோதி விமான நடமாட்டமேயில்லை. | | | |
| | **ருஷ்யா (Russia).** | | | |
| | ஸ்டாலின்கிராடு (Stalingrad). | | | |
| | **தூரக்கிழக்கு (Far East).** | | | |
| | மோர்ஸ்பி (Moresby) துறைமுகம். (நியூ கினியில்). | | | |

---

## யுத்தக் குறிப்புகள்.

---

**பிரெஞ்சு வட ஆபிரிக்கா.** இவ்வாரத்தில் பிரெஞ்சு வட ஆபிரிக்காவில் நூறு ஆயிரம் அமெரிக்கத் துருப்புகள் வந்திறங்கியதே பெரிய செய்தியாகும். இத்துருப்புகள் அட்லாண்டிக் பக்கமாயும் மத்தியதரைக்கடல் பக்கமாயும் இறங்கியிருக்கின்றன. இவைகளுக்கு பிரிடிஷ் கடற்படையும் விமானப்படையும் உதவியளித்தன. பிரிடிஷ் துருப்புகளும்கூட இறங்கியிருக்கின்றன. அதோடு ரோமலின் படைகள் எகிப்திலிருந்து மேற்கு நோக்கி ஓடுகின்றன என்றும் செய்தி கிடைத்திருக்கிறது. இம்மாதிரியான

திருப்திகரமானச் செய்திகள் கிடைத்து வெகுகாலமாகிவிட்டது. அல்ஜியர்ஸ், ஓரான், கஸபிளாங்கா, முதலிய முக்கிய தளங்கள் பிடிபட்டன. இது சம்பந்தமான விவரங்களை யுத்தச் செய்திகள் என்ற தலைப்பில் இந்த சஞ்சிகையிலேயே காணலாம்.

ஏதோ பேருக்கு விஷித்துருப்புகள் பலஹீனமான எதிர்ப்பு செய்தனவே தவிர, பிரெஞ்சுத் துருப்புகளின் கேந்திர ஸ்தானங்களெல்லாம் நேசதேசங்கள் வசத்தில்தான் இருக்கின்றன.

ஆகவே எல்லாம் சீக்கிரம் முடிந்துவிடுமென்றே காணப்படுகிறது. வட ஆபிரிக்கப் பிரதேசங்கள் சீக்கிரத்தில் கைப்பற்றப்படுமென்றே சொல்லலாம். இதே வேகத்துடன் சண்டை நடந்துகொண்டுபோனால் நமது திட்டங்கள் நிச்சயம், வெற்றியடையும். ஜெர்மானியர் ஆரம்ப காலத்தில் அடைந்த வெற்றிகளால் அவர்களுக்கு ஒரு பிரயோஜனமும் ஏற்படாது.

ஆங்கிலேய-அமெரிக்க ஒத்துழைப்பிற்கு இதுவே ஒரு முக்கிய அத்தாக்ஷியாகும். தரை, கடல், விமானம் மூன்றிலும் எல்லாப் படைகளும் ஒத்துழைக்கின்றன. டைம்ஸ் பத்திரிகை சொல்லுவதாவது:—'குறிப்பிட்ட இடங்களில் போட்ட திட்டப்படி ஒன்றன்பின் ஒன்றாகப் படைகளை இறக்கி, அந்தந்த இடங்களை ஸ்வாதீனப்படுத்தியதிலிருந்து இந்தச் சண்டையின் விசேஷ அம்சம் வெளியாகிறது.'

ஆகவே இந்த ஏற்பாடு ஜாக்கிரதையாக தயாரிக்கப்பட்டு, வெற்றிகரமாக நடத்தப்பட்டு, அந்தந்த இடங்களில் திட்டமாக நடைபெறுகிறது.

இந்த ஆங்கிலேய-அமெரிக்க ஒத்துழைப்பை தற்காப்புப்போரென்றும், முன்னேற்றப்போர் என்றும் சொல்லலாம். வட ஆபிரிக்காவில் நாஸிகள் வந்திறங்குவதையும், ஆபிரிக்கக் கடற்கரையிலிருந்து அமெரிக்காவை அவர்கள் தாக்குவதையும் தடுக்கச் செய்த ஏற்பாடேயாகும். லிபியாவிலிருந்து ரோமல் ஒரு தடவை விரட்டப்படுவானேயாகில் லவாலுடன் ரகசிய ஏற்பாடுகளைச் செய்துகொண்டு ஹிட்லர் மொராக்கோ, அல்ஜீரியா, டூனிஸியா முதலியவைகளை வசப்படுத்தப்பார்ப்பான் என்பது நேசதேசத் தலைவர்களுக்கு நன்றாகத் தெரியும். அதேவிதமாக ஆபிரிக்காவில் இடம் கிடைத்தால் அமெரிக்காவையும் தாக்க அவன் பின் வாங்கமாட்டான். ஆகவே நேசதேசங்களின் ஏற்பாடு தற்காப்பு ஏற்பாடு ஆகும்.

முன்னேற்ற விஷயத்தில் நேசதேசங்களின் திட்டம் என்னவென்றால் மேற்கே ஒரு படையைத் திரட்டி முன்னேறினால் ஜெனரல் மான்ட்காமரியின் படைகளுடன் ஒன்று சேர்ந்து தாக்குதலைச்செய்து ரோமலின் படைகளை அறவே விரட்டலாம். பிறகு மத்தியதரைக்கடலை வசப்படுத்திக்கொண்டு ஐரோப்பாவைப் படையெடுக்க ஹேதுவாய் இருக்கும். ஐரோப்பாவின் பாதுகாப்பிற்கு வட ஆபிரிக்கா ஒரு முக்கிய பிரதேசம். ஹிட்லர் ஐரோப்பாவின் மேற்கே பந்தோபஸ்து செய்துகொண்ட மாதிரி இனிமேல் மத்தியதரைக்கடல் பக்கத்திலும் பாதுகாப்பு செய்துகொள்ளவேண்டும். அதாவது நார்வே முதல் கிரீட் வரையாகும். இது ருஷ்யப் போர்முனையைப்போல் இரண்டு மடங்காகும். பிரான்ஸும் இதாலியும் தாங்களாகத் தோல்வியுற்றோ அல்லது நேசதேசங்களுக்குச் சாதகமாக ஆகியோ இவர்களின் படைகளை அனுமதிக்க நேரும். ஆகவே தற்போது போடப்பட்டிருக்கும் திட்டத்தைப் பார்த்தால், மாரிகாலத்திற்குள் ஹிட்லரின் திட்டம் ருஷ்யாவில் பூர்த்தியடையாவிடில் 1943-ல் அவனது சகாப்தத்தின் முடிவு ஏற்படுமென்றே காணப்படுகிறது. சென்ற யுத்தத்தில் இருந்ததைப்போல் தற்போதும் நான்காவது வருஷம் ஜெர்மானியருக்கு பாதகமாகவே இருக்கிறது.

இவையாவும் வருங்காலத்தில் இருக்கும் சந்தர்ப்பங்கள் ஆகும். பிரகிருதத்திலேயே சில முடிவான விஷயங்கள் ஏற்படும். வெகுகாலமாக நேசதேசங்கள் தயாரித்து வந்த முன்னேற்றப்போர் திட்டம் துவக்கப்பட்டது. இரண்டாம் போர்முனை ஏற்பட்டது. போஸ்டனிலுள்ள பிரெஞ்சு ஸ்தானீகர் பிரான்காயின் பிரயரி அபிப்பிராயப்படி பிரான்ஸின் விடுதலையில் முதல் கட்டம் ஆரம்பிக்கப்பட்டது. டூனிஸியாவின் விடுதலையிலிருந்து பிரான்ஸின் விடுதலை சமீபித்துவிட்டது என்று ஜனாதிபதி ரூஸ்வெல்டு அபிப்பிராயப்பட்டிருக்கிறார்.



டூனிஸியா பேரில் இதாலியர்களுக்கு எப்போதும் ஒரு கண் உண்டு. சமீபகாலம் வரை இதாலியர்களின் வீரகோஷம் 'டூனிஸியா, கார்ஸிகா, நைஸ்' என்றே இருந்தது. நேசதேசப் படைகள் ஸிஸிலியின் தெற்கிலுள்ள கால்வாயை வசப்படுத்தக் கூடிய பைஸர்டா கப்பல் தளத்தின் அருகில் இருக்கின்றன. இனி எகிப்திற்கு நேசதேச ஸப்ளைகள் ஆபிரிக்காவைச் சுற்றிக்கொண்டு போக வேண்டாம். வட ஆபிரிக்காவின் வழியாகவே செல்லலாம். அதற்குள் ரோமல் ட்ரிபோலியிலிருந்து ஸப்ளைகளைப் பெறமுடியாமல் செய்யப்படுவான்.

வி வி வி வி வி வி வி

**விஷியின் முடிவு.** யுத்த சம்பவங்கள் வெகு துரிதமாக நடைபெறுகின்றன. ஓரான், கஸாபிளான்கா நமது வசமாகி விட்டன. ஜீன்பார்ட் தீப்பற்றி எரிகிறது. அட்மிரல் டார்லான் கைதிசெய்யப்படவில்லை. ஆனால் விருந்தினராகவே பாவிக்கப்படுகிறார். வட பிரெஞ்சு ஆபிரிக்காவில் யுத்தம் நின்றுவிட்டது. சமாதானம் கையெழுத்து ஆகிறது. நேசதேசப்படைகள் டூனிஸியாவைக் கடந்து வருகின்றனர். இதற்குள்ளாக ஜெர்மன் படைகள் பிரான்ஸ்வழியே கடந்து மத்தியதரைக்கடலோரமாய் வருகின்றன.

1940-ல் விஷியுடன் செய்துகொண்ட சமாதானத்திற்கு இது முறண்பட்டதாகும். ஆனால் பிரெஞ்சு சாம்ராஜ்யத்தை ஆங்கிலேயரும், அமெரிக்கரும் ஸ்வாதீனப்படுத்திக்கொள்ளாமல் இருப்பதற்காகத்தான் இவ்விதம் செய்வதாக ஹிட்லர் சொல்லுகிறான். ஜெர்மன் விமான மூலமாக படைகள் டூனிஸியாவுக்கு வருவதாகச் சொல்லப்படுகிறது. கார்ஸிகாவை இதாலி ஆக்கிரமித்துக்கொண்டது. டூலானிலிருந்த பிரெஞ்சுக் கடற்படையின் கதி என்னவாயிற்று என்று தெரியவில்லை.

இவ்விதமாக விஷியின் நிலைமை அதோகதிக்கு வந்துவிட்டது. ஆனால பிரான்ஸ் மீடுமீழி வாழவேண்டும். அதன் சக்தி குன்றிப்போயிருந்தபோதிலும் அது மீண்டும் தலையெடுக்கவேண்டும்.

பி. பி. ஸி. யில் விஷி பிரான்ஸை ஹிட்லர் ஆக்கிரமித்துக்கொண்டதுபற்றி ஒரு விமர்சனம் ஒலிபரப்பப்பட்டது.

ஹிட்லர் ஆக்கிரமிக்கப்படாத பிரான்ஸினுள் புகுருவானென்று எதிர் பார்க்கப்பட்டதுதான். ஆனால் பிரெஞ்சு வட ஆபிரிக்காவில் நேசதேசப்படைகள் இவ்வளவு சீக்கிரமாக வெற்றிபெறுமென்று அவன் எதிர் பார்க்கவில்லை.

பிரான்ஸுக்கு மத்தியதரைக்கடல்மார்க்கம் நேசநாட்டுக்கு சுவாதீனமாக இருக்கிறது. பிரெஞ்சு வட ஆபிரிக்காவிலும் அவர்களுக்குப் பிடிப்பு இருக்கிறது. ஆகவே பிரெஞ்சு, இதாலியப் பிரதேசங்கள் இரண்டையும் காபந்து செய்வது ஹிட்லருக்கு சிரம சாத்தியமான காரியமாகும். ஆபிரிக்காவில் நேசதேசங்களுக்கு இவ்வளவு துரிதமாக வெற்றிகிடைத்து வருவதால் பல துறைமுகங்கள் அவர்கள் வசமாகிவிடுமென்றும் ஹிட்லர் எதிர் பார்த்துவிட்டான். ஜிப்ரால்டர், ஓரான், ஆல்ஜியர்ஸ், ட்ரிபோலி, பெங்காஸி, கோரு, டெர்னு, டொப்ருக், அலெக்ஸாண்டிரியா முதலியன.

பிரிடிஷ் விமானப்படையும், அமெரிக்க விமானங்களும் ஒன்று சேர்ந்தால் கடல் மார்க்கங்களுக்கு அதிக பந்தோபஸ்து ஏற்பட்டுவிடும். ஆகவே அச்சுநாட்டு ஸப்ளைகள் அனுப்புவதும் சிரமமாகிவிடும். யூபடகு பயமும் குறைந்துவிட்டது. முக்கியமாக இந்த பாகத்தில் குறைந்து விட்டது. ஆனால் வட அட்லாண்டிக்கில் இன்னும் குறையவில்லை.

இதற்குமுன் பூரா பிரான்ஸையும் ஸ்வாதினப்படுத்தாததற்கு ஹிட்லருக்கு ஒரு ராஜீய அவசியம் இருந்தது. அதோடு ராணுவ முக்கியத்வத்தையும் ஒரு காரணமாகச் சொல்லலாம். அதாவது அதையும் ஸ்வாதீனப்படுத்திக்கொண்டால் அதைக்காபந்து செய்ய ஏராளமான மனிதர்களும் ஆயுதங்களும் தேவையாக இருக்கும்.

ஆகவே இதற்குமுன் ஹிட்லர் இந்தமாதிரி வியாபிக்காதது ஆச்சரியமில்லை. வட ஆபிரிக்காவில் நேசதேசங்களின் வெற்றிதான் தற்போது அவன் பூரா பிரான்ஸையும் வியாபித்துக்கொண்டதற்குக் காரணம். ஜனாதிபதி ரூஸ்வெல்டு அறிவித்தபடி இது 1943-ல் பூர்ணமான இரண்டாம் போர்முனையை ஏற்படுத்த 1942-ல் செய்யப்பட்ட முன்னேற்பாடாகும்.

பூரா பிரான்ஸையும் ஜெர்மானியர் பிடித்ததின் விளைவுகள் பல இடங்களில் ஏற்படலாம். முக்கியமாக பிரான்ஸிலும், வட ஆபிரிக்காவிலும் இதன் பயன்கள் ஏற்படும். அதாவது பிரெஞ்சு மக்களை கோபம் மூட்டி எதிரியை எதிர்க்கும் உணர்ச்சி ஏற்படும்.

மத்தியதரைக்கடல் கரையோரமாக ஜெர்மன் துருப்புகளை ஹிட்லர் இறக்கலாம். இதாலியையும் பூரா ஸ்வாதீனப்படுத்திக்கொள்ளலாம். லாயன்ஸ், மார்ஸெயல்ஸ போன்ற நகரங்களையும் உபயோகித்துக்கொள்ளலாம். பொருளாதாரம், ராஜ்யம் முதலியவைகளில் விஷிக்கு நிச்சயம் "குலைவு ஏற்படும். இப்போதே விஷி வெறும் பொம்மைமாதிரி இருந்தாலும் பிறகு இந்த நிலைமைகூட கிடைக்காது.

வி வி வி வி வி வி வி

**எகிப்து.** வட ஆபிரிக்காவில் மேற்கே நேசதேசத் துருப்புகள் வெற்றிகரமாக இறங்கியது போலவே, கிழக்கிலும் பிரிடிஷ் முன்னேற்றம் வெற்றிகரமாக இருந்துவருகிறது. ஜெர்மனியின் முக்கியத் தலைவனின் கீழிருக்கும் கவசப் படைகளுக்கு ஜெனரல் மான்ட்காமரி பலத்த தோல்வியை உண்டாக்கியிருக்கிறார்.

இங்கே ஏராளமான பிரதேசம் கைவசப்பட்டிருப்பதோடு ஆயிரக்கணக்கில் எதிரிகள் கைதி செய்யப்பட்டிருக்கின்றனர். மேலும், ஏராள டாங்கிகளும், பீரங்கிகளும் கைவசப்படுத்தப்பட்டன. எல் அலமீனில் நடந்துகொண்டிருந்த போர் எதிரியைத் துரத்தியடிப்பதில் முடிந்தது. நான்கு மாதங்களுக்கு முன் பிரிடிஷார் பின்வாங்கிச் சென்ற கலை இப்போது போய்விட்டது.

இதிலிருந்து மான்ட் காமரியின் தலைமையின் விசேஷமும் தெரியவருகிறது. 12 நாள் நடந்த சண்டையில் முதல் 10 நாள் காலாட்படையின் தாக்குதலும் அதற்கு உதவியாக பீரங்கிப் படையும், விமானத் தாக்குதலும் இருந்தது. இதனால் எதிரிப் படையில் பிளவு ஏற்பட்டது. அதே சமயத்தில் கடற்கரை வழியாக எதிரிக்குப் பின்புறமும் தாக்கப்பட்டது. ரோமல் தெற்குப் பக்கம் தாக்குதல் நேருமென்று எதிர்பார்த்தான். ஆனால் மான்ட்காமரி வடக்கே தாக்கினான். எதிரியின் பான்ஸர் படைகளால் சமாளிக்கமுடியவில்லை. தன்னைச் சூழ்ந்து கொள்ளாமலிருக்கும் பொருட்டு ரோமல் பின்வாங்கவே, அதைப் பயன்படுத்திக் கொண்டு மான்ட்காமரி விரட்ட ஆரம்பித்தான். எகிப்து எல்லையிலிருந்து எதிரி ஓடிவிட்டான். நைல் பள்ளத்தாக்கிலிருந்து எதிரி ஓடியதுமட்டுமல்லாது, எதிரியைப் பிடிப்பதற்கும் ஏற்பாடாகிவிட்டது.

வி வி வி வி வி வி வி

**ஸாலமன்ஸ்.** ஸாலமன்ஸ் போரிலிருந்து அமெரிக்கர்களின் ராணுவ தந்திரம் விசேஷமாகத் தெரிகிறது. விமானத்தாக்குதல்களைச் செய்து ஜப்பானிய கடல் பலத்தை முறியடித்து விடலாம். இங்கே நடந்த சண்டை விமானத் தாக்குதலாகவே இருந்ததால் ஜப்பானியக் கடற்படை கழட்டிச் செல்லவேண்டியதாயிற்று. பஸிபிக் தீவு ஒவ்வொன்றும் விமானமேற்றும் கப்பலுக்குச் சமமாக இருக்கிறது. ஜப்பானின் வியாபாரக் கப்பல்களில் ஆறில் ஒருபங்கு சின்னாபின்னமாயிற்று. சீனக் கடலில் அமெரிக்க நீர்மூழ்கிகள் எதிரிகளைத் தகர்த்து வருகின்றன. சீனர்களும் கடற்கரையில் இருக்கும் விளக்கு ஸ்தம்பங்களைத் தாக்குகின்றன. அமெரிக்கர்கள் ஜப்பானிய கப்பற்பலத்தைத் தாக்கப் பெரிய பாம்பர் விமானங்களை உபயோகித்து வருகின்றனர்.



**கொக்கோடா.** நியூ கினியில் கொக்கோடாவை வசப்படுத்திய செய்தியும் கிடைத்திருக்கிறது. ஆஸ்திரேலியாவிற்கு ஸாலமன்ஸும் நியூ கினியும் இரண்டு வாசப்படிக்குச் சமானம்.

நியூ கினியில் ஆஸ்திரேலியாவிற்கு அருகில் மார்ஸ்பி துறைமுகமிருக்கிறது. இந்த இடத்தை அடைய ஜப்பானியர் வெகுவாக முயன்றனர். லே, ஸாலமூவா இரண்டையும் பிடித்தும்கூட மார்ஸ்பி துறைமுகத்தை அவர்களால் அடைய முடியவில்லை. ஏனென்றால் குறுக்கே ஸ்டாலின் மலைகள் நிற்கின்றன. அதற்காக கொக்கோடாவைப் பிடித்து மில்னி குடாவையும், பூனாவையும் அடைந்தனர். இப்படியாக மார்ஸ்பிக்கு 30 மைல் தூரத்திற்கு வந்துவிட்டனர். ஆனால் ஆஸ்திரேலியர்களின் குறுக்கு எதிர்ப்பின் பயனாக எதிரிகள் மில்னிகுடா, கொக்கோடா இரண்டையும் விட்டு ஓடினர். பூனாவிற்கும் ஆபத்தேற்பட்டிருக்கிறது.

வி வி வி வி வி வி வி

**முன் எச்சரிக்கை.** மியூனிச்சில் சாராயக் கிடங்கில் ஹிட்லர் பேசுவதெல்லாம் வீண் வீராப்பும் கோபமுமாக இருக்குமென்று ஏற்கனவேயே சொல்லியிருக்கிறோம். ஆனால் நவம்பர் 8-ல் அவன் பேசியது வீராப்பு ஒன்றுமில்லாமல் பயத்துடன் கதறிய மாதிரியே இருந்தது. தன்னை அணுகிவரும் தோல்வியைக் கண்டு பலவராகப் பிதற்றினான். தான் பிறர்வசமாவதுபற்றியே பயம் கொண்டான். 'முன்பு கெய்ஸர் இங்கே இருந்தான், அவன் எதிரிவசமடைந்தான். நான் அப்படியாகேன்' என்றான். அவனது மின்னல் படையெடுப்பு பலிக்கவில்லை. 'ஸ்டாலின் கிராட்டில் தற்காப்புப்போரை விரும்புகிறேன். ஏனென்றால் அது செலவு பிடிக்காதது. ஸ்டாலின்கிராடு சென்ற யுத்தத்தில் வெர்டூனில் நடந்த சண்டையைப்போலாகாது' என்கிறான். மேலும் பின்வாங்கி ஓடும்படிக்கும் நேர்ந்திருக்கிறது. 'எதிரி முன்னேறினான்'. நாம் பின்வாங்கினோம். இதனால் என்ன? ஒவ்வொரு வாரமும் புதிய வெற்றிகளையடைய முடியாது, என்று சொல்லிக்கடைசியில் பயத்தினால் உளருகிறான். 'ஜெர்மனிக்காக யாவரும் பிரார்த்தனை செய்யுங்கள். இந்த யுத்தம் ஜெர்மனி இருப்பதா, இறப்பதா என்பதை நிர்தாரணம் செய்யப்போவதால், இதை உணர்ந்து நீங்கள் செய்யும் ஒவ்வொரு காரியமும், நினைக்கும் எண்ணமும் ஜெர்மனிக்காகச் செய்யப்பட்ட பிரார்த்தனையாகும்.' என்கிறான். ஏனோ இந்த அழுகை'!

வி வி வி வி வி வி வி

**சமாதான தினம்.** நவம்பர் 11உ சமாதான தினமாகும். அது ஒரு மௌனதினமாகும். அச்சு நாட்டினரால் அழிக்கப்பட்டிருக்கும் இவ்வுலகில் சமாதானம், சந்தோஷம் நிலவ வேண்டியும், இறந்தவர்களின் ஆத்மா சாந்தியடைவதற்காகவும் மௌனமாகப் பிரார்த்தனை செய்ய வேண்டிய தினமுமாகும். 1918ஆம் நவம்பர் 11உல் நாம் அடைந்த வெற்றியின் ஞாபகார்த்தமாக இந்த தினம் கொண்டாடப்படுகிறது. 1942-ல் அதே தினம் வந்தாலும் உலகில் தற்சமயம் அமைதி கெட்டிருக்கிறது. மறுபடியும் சமாதானத்தை நிலைநாட்ட நாம் சண்டை செய்கிறோம். அதாவது நாமும், நமது சந்ததியும் ஸ்வதந்திர உலகில் வாழவேண்டும். ஜனாதிபதி ரூஸ்வெல்டு சொல்லியபடி 'இந்த உலக யுத்தத்தில் நாம் ஈடுபட்டு முடிவான வெற்றி பெற்றால்தான் முதல் உலக யுத்தத்தில் இறந்தோர் விஷயத்தில் நாம் நம்பிக்கை கொண்டதாக ஆகும்.

வி வி வி வி வி வி வி

**பிரிடன்மேல் நடந்த விமானப்போர்.** மாட்சிமை தங்கிய சக்ரவர்த்தியாரின் உத்தரவுப்படி நவம்பர் 15உ பிரிடன் விமானப் போரின் ஞாபக தினமாக அனுஷ்டிக்கப்படும். அப்போது அடைந்த வெற்றியினால் இந்த யுத்தம் சாதகமாகத் திருப்பப்பட்டது. மிஸ்டர் சர்ச்சில் மொழிகளில் இங்கிலாந்து, சாம்ராஜ்யம் உலகம், எங்கும் பிரிடிஷ் விமானிகளுக்கு நன்றி செலுத்தப்பட்டது. அவர்கள் கொஞ்சமும் பின்வாங்காமல், முன்னின்று உண்டான ஆபத்தைத் தடுத்ததால் யுத்தத்தின் வேகம் திருப்பப்பட்டது. 'மனித அனுபவத்தில் நடந்த சண்டையில் இவ்விதமாகக் குறைவான பேர்கள் பெரிய யுத்தத்தை ஜயித்ததில்லை'.

பிரிடிஷ் விமான மந்திரி இலாகாவால் பிரசுரிக்கப்பட்ட அறிக்கையிலிருந்து அந்த விமானிகளைப்பற்றிய வீரத்தனம் வெளியாகிறது.

"இத்தீவுகளைப் படையெடுக்கும்படி உத்தரவு கொடுக்கப்பட்டது. அப்போது ஜெர்மன் விமானிகளுக்கு ஊக்கம் அதிகமாக இருந்தது. அதற்குக் காரணம் என்னவென்றால் வெகு வருஷங்களாகவே ஜெர்மனியில் வாலிபர்கள் விமானிகளாகப் பழக்கப்பட்டிருக்கிறார்கள், என்பதுதான். தங்களுடைய சக்திதான் மேலானது என்றும், எங்கும் தங்களுக்கு வெற்றிகிடைக்கும் என்றும் அவர்களுக்கு எடுத்துச் சொல்லப்பட்டிருந்தது. 1910-ம் வருஷம் வசந்த காலத்தில் அவர்கள் தாக்குதல் செய்யாமலிருந்திருந்தால் அவர்களின் தலைவர்கள் எதிர்பார்த்தபடி முடிந்தேயிருக்கும். இதுவரை தாக்கிய நாடெல்லாம் ஜெர்மன் படைகளுக்கு வசமாகிக்கொண்டே வந்தன. அதில் முக்கியமாக ஜெர்மன் லுப்ட்வாபி விமானப்படை ஈடுபட்டிருந்தது. பிரிடிஷ் சாம்ராஜ்யம் மாத்திரம் தாக்கப்படவில்லை. ஜெர்மன் விமானிகள் போலந்து முதல் இங்கிலீஷ் கால்வாய் வரை வெற்றிகரமாக வந்த மாதிரி பிரிடன் பேரிலும் படையெடுத்து, பிரிடிஷ் ஜனங்களை அடக்கி ஜெர்மன் சைனியத்திற்கு வழியை உண்டாக்கலாமென்றும் நினைத்தார்கள். லுப்ட்வாபிக்கு தினம் 70, 100, 150 கணக்கில் விமானங்கள் நஷ்டமாவதையும் அவர்கள் கவனிக்கவில்லை. ஜெர்மன் விமானிகள் அதிகமான தைரியத்தையும், விடாமுயற்சியையும் காண்பித்தார்கள். ஆனால் அதைவிட மேலான தைரியமும், சாமார்த்தியமும் வாய்ந்த பிரிடிஷ் விமானிகளின் முன்பு அவர்கள் ஜம்பம் சாயவில்லை. தாங்கள் தோற்றுப்போன போதிலும்கூட பிரிடன் பேரில் படையெடுப்பு நேருமென்றே ஜெர்மன் விமானிகள் நினைத்தனர். ஏதோ இடைஞ்சல்கள் அப்பொழுது நேராவிட்டாலும் 1941-ல் நிச்சயம் நேருமென்றும் நம்பியிருந்தார்கள்.

ஆனால் ஜெர்மன் படையெடுப்பே நேராமல் போனதற்கு நமது விமானிகளின் தைரியமே காரணம். எதிரியுடன் நேருக்கு நேர் சண்டை வந்ததுதான் தாமதம். எதிரியின் எண்ணிக்கையைக்கண்டு இவர்கள் சளைக்காது தைரியமாக முன்னின்றனர். தாங்கள் அடைந்த பயிற்சியிலும் விமானங்களிலும், தலைவர்களிடத்திலும் நம்பிக்கை இருந்ததால்தான் அவ்வித உணர்ச்சி பெற்று சண்டை செய்யமுடியும். அவ்வித நம்பிக்கை அவர்களுக்குப் பூர்ணமாக இருக்கிறது.

அக்டோபர் 31உடயோடு இந்த சண்டை முடிந்தது. ஆனால் திடீரென்று முடியவில்லை. கொஞ்சம் கொஞ்சமாகத்தான் முடிவு பெற்றது. ஆனால் பிரிடிஷார் அடைந்த வெற்றி மாத்திரம் நிச்சயமாயும், பூர்ணமாயுமிருந்தது.

பிரிடிஷாருக்கு நேர்ந்த நஷ்டமதிகம். பிரிடிஷ் விமானப்படையில் 375 விமானிகள் இறந்தனர். 358 பேர் காயமடைந்தனர். இந்த சந்தர்ப்பத்தில் அப்போது இருந்தவர்களைப்பற்றி ஒன்றுமட்டில் சொல்லலாம். "மனிதனுக்குப் பூர்ணமான தீர்மானம் இருக்கும் பக்ஷத்தில், ஜீவனோடு கூடியிருக்கும் வரையில் அத்தீர்மானம் குறையாது."

1940-ல் பிரிடன் பேரில் நடந்த விமானப்போரின்" வரலாறு இதுதான். சரித்திரக்காரர்கள் மராதான் (Marathon) டிரபால்கர் (Trafalgar), மார்னி (Marne) போன்ற சண்டைகளுக்கு ஒப்பிடுவார்கள்.

வி வி வி வி வி வி வி

**அமெரிக்கத் தேர்தல்கள்.** சமீபத்தில் நடந்த பொதுத் தேர்தலில் ஜனநாயகக் கட்சிக்கு மெஜார்டி இருந்தாலும் சில ஸ்தானங்களை இழந்தன. ரிபப்ளிக் கட்சி அந்த இடங்களைக் கைப்பற்றின. இது ஆச்சரியமில்லை. இவ்விஷயம் முன்பு நடந்த காலம் தேர்தலிலேயே தெரிந்ததுதான். இதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. யுத்தத்தின் போக்கு ஜனநாயகத்தின் நோக்கங்கள் அடிக்கடி மாறிவருவது சமீபத்தில் வரிகளை உயர்த்தியது, தானியங்களின் விலை உயர்ந்தது, முக்கியமானவர்கள் தேர்தல் ஸ்தானங்களில் இல்லாமல் சைனியங்களிலேயும், தொழிற்சாலைகளிலும் சேர்ந்து கொண்டதும்தான். எது எப்படியானாலும் அச்சுநாட்டினருக்கு ஒரு சந்தோஷமும் ஏற்படாது. ஏனென்றால் ரிபப்ளிக் கட்சிக்காரர்களும் யுத்த முயற்சியை அதிகப்படுத்தும் நோக்கம் கொண்டிருக்கிறார்கள்.



# பிரான்ஸிலுள்ளோருக்கும், ஆபிரிக்காவிலுள்ள பிரெஞ்சு மக்களுக்கும் ரூஸ்வெல்டு விடுத்த செய்தி.

## I

வாஷிங்டன், நவம்பர் 8.

நாஸி ஆட்சியின் கீழ் இராப்பகலாகக் கஷ்டப்படும் ஆபிரிக்காவிலுள்ள பிரெஞ்சு சிநேகிதர்களே!

1918-ம் வருஷத்தில் நடந்த யுத்தத்தில் உங்களுடைய சைனியம், கப்பற்படை இவைகளுக்கு இடையே நான் இருந்துவந்தேன். பிரெஞ்சுக்காரர்கள் பேரில் வெகுநாளாக எனக்கு விசுவாசம் இருந்து வந்திருக்கிறது. எனக்கும், அவர்களுக்கும் மிகவும் நெருங்கின சிநேகம் உண்டு. பிரான்ஸிலும், அதற்கு வெளியிலும் எனக்கு அநேக பிரெஞ்சு சிநேகிதர்கள் இருக்கிறார்கள். உங்களுடைய நிலங்கள், கிராமங்கள். நகரங்கள் பூராவும் எனக்கு நன்றாகத் தெரியும். உங்கள் சிப்பாய்கள், புரொபஸர்கள், தொழிலாளிகள் யாவரையும் எனக்கு நன்றாகத் தெரியும்.

உங்கள் கலைகள், ஜனநாயகக் கொள்கைகள் யாவும் பிரெஞ்சு மக்களுக்குப் புராதனமானவை. ஸ்வதந்திரம், சமஉரிமை, சகோதரத்துவம் ஆகிய கொள்கைகளில் எனக்கு பூரா நம்பிக்கையுண்டு.

பிரெஞ்சு மக்களும், யுனைடெட் ஸ்டேட்ஸிலுள்ள அமெரிக்கர்களும் ஒன்று சேர்ந்து சிநேகப்பான்மையுடன் இதுவரை இருந்து வந்திருக்கிறார்கள். இதுமாதிரி வேறெந்த தேசத்தினர்களும் ஒற்றுமையாக இதுவரை இருந்தது கிடையாது. நேசதேசத்தினருடன் அமெரிக்கர்கள் ஒன்று சேர்ந்து ஸ்வதந்திரக் கொள்கைகளையும், ஜனநாயகக் கொள்கைகளையும் இவ்வுலகத்தில் ஸ்தாபிக்க தங்களால் முடிந்தவரையில் முயற்சித்து வருகிறார்கள்.

உங்கள் விரோதிகளை நசுக்கவே இப்போது நாங்கள் உங்களிடையே வருகிறோம். நீங்கள் சுயேச்சையாக அரசியல் நடத்திவரும் உரிமையை அடியோடு அழிக்கவேண்டுமென்றும், உங்கள் இஷ்டப்படி கடவுளை வணங்கவும் பொதுவாக அமைதியுடனும், பாதுகாப்புடனும் உங்கள் வாழ்க்கையை நடத்தவும் ஆகிய உரிமைகளையும் எடுத்துவிடவேண்டுமென்றும் எதிரி முயற்சிக்கிறான். ஆகையால் அவர்களை அடியோடு அழிப்பதற்காகவே நாங்கள் முக்கியமாக வருகிறோம்.

உங்களுக்கு ஒருவிதமான தொந்தரவும் கொடுக்க எங்களுக்கு எண்ணமில்லை. பிரெஞ்சு ஏகாதிபத்தியத்தில் எந்த பாகத்தையும் பிடிக்க எங்களுக்கு எண்ணமில்லை. ஜெர்மனியின் தொலலையும், இதாலியின் பயமுறுத்தலும் நீங்கியதும் உங்கள் பிரதேசத்தைவிட்டு நாங்கள் போய்விடுவோம். உங்கள் நன்மையையே நாங்கள் கருதுகிறோம். ஆகையால் எங்கள் வேலையில் நீங்கள் தடைசெய்யாமல் இருக்க வேண்டும். உங்களால் முடிந்தவரையில் எங்களுக்கு உதவி புரியவேண்டும். அதற்குப்பதிலாக ஏற்கனவேபோல் உலக அமைதியையும், ஸ்வதந்திரத்தையும், நாங்கள் நிலைநாட்டிவைப்போம். பிரான்ஸ் தேசம் நீடூழி வாழ்க!

## II

# பிரிடனும் அமெரிக்காவும் சேர்ந்து விடுத்த சாஸனம்.

பிரான்ஸ் விடுதலைக்காகவே அமெரிக்கத்துருப்புகள் பிரெஞ்சுக்காரர்களுக்குச் சொந்தமான வடஆபிரிக்காவில் வந்திறங்கியிருக்கின்றனர். பிரான்ஸின் விடுதலைக்கு இதை முதல் படியாக நாம் கருதவேண்டும். வடஆபிரிக்காவிலுள்ள ஜெர்மன் இதாலியச் சைனியங்களை அழிப்பதுதான் முக்கியமான நோக்கம். நாங்கள் பிரெஞ்சுக்காரர்களுக்கு நண்பர்களாகவே இங்கு வந்திருக்கிறோம்.

ஜெர்மனி, இதாலி இவைகளின் பயமுறுத்தல் நீங்கியதும் நாங்கள் உங்கள் பிரதேசங்களை விட்டுப் போய்விடுவோம். பிரெஞ்சு சாம்ராஜ்யமும், அதற்குச் சொந்தமான பிரதேசங்களும் பாதிக்கப்படாமல் அப்படியே இருக்கின்றன.

பிரான்ஸ் விடுதலைக்காக எதிரிகளுடன் போராடுவதற்கு நாங்கள் இங்கு வந்திருக்கிறோம். இதுதான் ஆரம்ப கட்டம். வடஆபிரிக்காவிலுள்ள பிரெஞ்சு மக்கள் தங்களுடன் சேர்ந்து ஒத்துழைக்கவேண்டுமென்று அமெரிக்கப் படைத் தலைவர் ஜெனரல் இஸன் ஹோவர் ஒரு செய்தி வெளியிட்டிருக்கிறார். பொதுவாக எல்லாப் பிரெஞ்சு மக்களுக்கும் இவ்வித வேண்டுகோளை விடுவிக்க இன்னும் சந்தர்ப்பம் வாய்க்கவில்லை. தற்போது பிரான்ஸிலிருப்பவர்கள் ஜாக்கிரதையுடனும், அமைதியாகவும் இருக்கவேண்டும் என்று நாங்கள் அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறோம். தேசத்தார்கள் பூராவும் கிளம்புவதற்கு இன்னும் சந்தர்ப்பம் நேரிடவில்லை. சந்தர்ப்பம் நேரும்பொழுது உங்களுக்கு எச்சரிக்கை கொடுப்பதாகச் சொல்லியிருக்கிறோம். அத்தகைய சந்தர்ப்பம் சமீபகாலத்தில் ஏற்படலாம். எங்கள் வாக்குறுதியைக் காப்பாற்றுவோம்.

---

# நமது நோக்கங்கள்.

## ஹிட்லர் ஆட்சியை அழிக்கவேண்டும்.
## ஹிட்லரின் கொடிய சைனியத்தை அழிக்கவேண்டும்.
## ஹிட்லரின் புதிய திட்டத்தை அழிக்கவேண்டும்.

மிஸ்டர் ஸ்டாலின்.

(ஸோவியத் புரட்சியின் 25-வது வருஷப் பூர்த்தி தினத்தன்று, நவம்பர் 6-ல் பேசியது).

"ஹிட்லர் ஆதிக்கத்தின் கீழிருக்கும் ஜெர்மனியால் ஸ்வதந்திரத்தை விரும்பும் தேசத்தார்கள் சண்டையில் ஈடுபடும்படி நேர்ந்திருக்கிறது. இந்தச் சமயத்தில் ஒன்றையொன்று எதிர்க்கக்கூடிய இரண்டு கட்சிகள் ஏற்பட்டிருக்கின்றன. இதாலியும், ஜெர்மனியும் சேர்ந்து ஒரு கட்சியாகவும், கிரேட் பிரிடன், ருஷ்யா, அமெரிக்கா மூன்றும் சேர்ந்து ஒரு கட்சியாகவும் ஆகி இருக்கின்றன. ஒன்றையொன்று எதிர்த்துக்கொண்டிருக்கும் இரண்டு கட்சிகளும் வெவ்வேறு கூட்டுறவு திட்டங்களின்படி நடந்துகொண்டு வருகின்றன என்பதை மறுதளிக்கமுடியாது.

"இதாலி-ஜெர்மனி கூட்டுவேலை திட்டத்தின் விவரம் பின்வருமாறு:— "ஜாதித் துவேஷம், சில பொறுக்கியெடுத்த ஜாதியாரின் ஆதிக்கத்தை ஏற்படுத்துதல், மற்ற ஜாதியாரது தேசங்களைப் பிடித்து அவர்களை அடிமைப்படுத்துதல், பிடிபட்ட நாட்டினரைப் பொருளாதாரத் துறையில் அடிமைப்படுத்தி, அவர்களது செல்வங்களையும், ஜனநாயக ஸ்வதந்திரங்களையும் அழித்து, எங்கும் ஹிட்லர் கட்சியினரது ஆதிக்கத்தை ஏற்படுத்துதல் ஆகிய இவைகளே."

### நேச நாட்டினரின் திட்டம்.

நேச நாட்டினரின், அதாவது பிரிடிஷ்-ஸோவியத்-அமெரிக்கா கூட்டுவேலை திட்டத்தின் விவரம் அடியில் கண்டிருக்கிறது:—

"ஒரு ஜாதியார் தனித்திருப்பதை ரத்துசெய்தல், எல்லா தேசத்தார்களுக்கும் சமத்துவத்தை ஏற்படுத்தல், அவர்களது பிரதேசத்தைப் பிறர் பிடிக்காமல் பாதுகாத்தல், அடிமைப்பட்ட நாடுகளை விடுதலைசெய்து அவர்களுக்கு ஆளும் உரிமையை வழங்குதல், ஜனங்கள் விரும்பும் ஆட்சிமுறையை ஸ்தாபித்துக் கொள்வதற்கான உரிமையை வழங்குதல், கஷ்டப்பட்ட நாடுகளுக்குப் பொருளாதார உதவிசெய்து, அவை செழிப்படையுமாறு செய்தல், ஜனநாயக ஸ்வதந்திரத்தைத் திரும்ப அளித்து, ஹிட்லர் கட்சியை ஒழித்தல், ஆகிய இவைகளேயாம்.

"இதாலி—ஜெர்மனி கூட்டுத்திட்டத்தினால் ஐரோப்பாவிலும், ருஷ்யாவிலும் ஜெர்மன் வசமான இடங்களில் அச்சு நாட்டுக் கொடுமைக்கிரையாகாமல் குரோதம் ஏற்பட்டிருக்கிறது. அதனால் அங்குள்ளோர் ஜெர்மானியருக்கும், அவர்களுடைய நேச தேசத்தார்களுக்கும் சேதம் விளைவித்து வருகின்றனர். அச்சுநாட்டினர் தங்களுக்கு இழைக்கும் கொடுமைகளையும், துன்பத்தையும் பழிக்குப்பழி வாங்குவதற்காகக் காத்திருக்கின்றனர்".



### அச்சு நாட்டினர் சோர்வடைந்து வருகிறார்கள்.

"இரண்டு கூட்டுறவு கட்சிகளிடத்திலும் இருக்கும் மனிதபலம், பொருளாதாரங்கள், இவைகளைப் பரிசோதித்துப் பார்த்தால் பிரிடன், ருஷ்யா, அமெரிக்கா இவை சேர்ந்த கூட்டுறவு கட்சியில்தான் அனுகூலம் இருக்கிறதென்று நாம் தீர்மானத்திற்கு வரலாம். அதை எவரும் ஆக்ஷேபிக்கமுடியாது.

"அச்சு நாட்டினரின் பலம் நாளுக்கு நாள் பலஹீனமடைந்து வருகிறது. இதற்கு மாறாக நேசநாட்டினரது ஒழுக்கம், ராஜீய பலம், நாளுக்கு நாள் அதிகரித்துவருகிறது. கோடிக்கணக்கான பேர்கள் கஷ்டப்படும் ஜனங்கள்பேரில் அனுதாபம்கொண்டு, ஹிட்லரது கொடுமையை எதிர்த்து வருகிறார்கள்.

"ஆள் பலமும், பொருள் பலமும்கொண்டு பார்க்குமிடத்து நேச நாட்டினருக்கே, அச்சு நாட்டினரைவிட அதிக அனுகூலமான நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

### ஹிட்லரின் சபதம்.

"துருக்கி ஜெனரல் ஒருவருடன் பேசுகையில், ஹிட்லர் 'நாங்கள் ருஷ்யாவை அழிப்போம், அது தலைதூக்கவே தூக்காது' என்று சொன்னான். இது அபத்தமான பேச்சாகும். ருஷ்யாவை எப்படி அழிக்கமுடியாதோ அப்படி ஜெர்மனியையும் அழிக்கமுடியாது. அது நமது பிரச்னையல்ல. ஆனால், ஹிட்லர் ஆட்சியை அழிப்பது சாத்தியம். அது அவசியமுமாகும்.

"ஹிட்லர் முறையிலுள்ள அரசாங்கத்தையும், அதனை நடத்துகிறவர்களையும் அழிப்பதே நமது **முதலாவது நோக்கம்.** ஜெர்மன் ராணுவத்தை அழிப்பது நமது நோக்கமல்ல. அது முடியாதகாரியம்.

"ஆனால் ஹிட்லரின் ராணுவத்தையும், அதன் தலைவர்களையும் அழிப்பதுதான் ருஷ்யாவின் **இரண்டாவது நோக்கம்.**

"ஹிட்லரது அயோக்கியர்கள் ஸோவியத் கைதிகளை நூற்றுக்கணக்காகக் கொன்றும், அவர்களைப் பட்டினியாக மடியவிட்டும் வருகிறார்கள். நமது தேசப் பொதுமக்களை ஸ்திரீ, குழந்தைகள் கிழவர்கள் என்றுகூடப் பாராமல் மிருகத்தனமாகக் கொன்று வருகிறார்கள். இம்மாதிரியாக யூக்ரேன், ஒயிட் ருஷ்யா, பால்டிக் பிரதேசம், மால்டேவியா, கிரிமியா, காகஸஸ் ஆகிய பிரதேசங்களிலுள்ள பொதுமக்களைக் கொடுமையாக நடத்திவருகிறார்கள்.

### கெட்ட முறை.

"ஐரோப்பா எங்கும் தூக்குமேடைகள் நிறைந்திருக்கின்றன. மேலும் பிணையாட்கள் அளிக்கும் கெட்டமுறையை ஜெர்மானியர் ஏற்படுத்தியிருக்கின்றனர். ஜெர்மானியர் ஒரு ஸ்திரீயைக் கற்பழிக்கவோ, அன்றி கொள்ளையிடவோ முடியாதபடி தடுக்கப்பட்டால், அதற்காக அவளுடைய குற்றமற்ற உறவினரைத் தூக்கிலிடுகின்றனர். ஐரோப்பாவைச் சிறைச்சாலையைப்போல் செய்துவிட்டு, இதனை 'புதிய ஏற்பாடு' என்று சொல்லுகிறார்கள்.

"இந்த அக்கிரமங்களைச் செய்தவர்கள், கவர்னர் ஜெனரல் படைத் தலைவர் முதலிய உயர்ந்த பதவிகள் அளிக்கப்பட்டிருக்கிறார்கள். இவர்களது பெயர்கள் கொடுமைக்குள்ளான ஆயிரக்கணக்கான ஜனங்களுக்குத் தெரியும். இக்கொலையாளிகள் தங்கள் குற்றத்திற்கான பொறுப்பிலிருந்தும், தண்டனையிலிருந்தும் தப்பமுடியாது என்பது நிச்சயம்.

"புதிய ஐரோப்பிய ஏற்பாட்டையும், அதன் சிருஷ்டிகர்த்தாக்களையும் அழிப்பது நமது **மூன்றாவது நோக்கம்.** நாம் விடுதலைக்கான பெரிய போரை நேச நாடுகளுடன் சேர்ந்து நடத்துகிறோம். அதில் நாம் வெற்றிபெறுவோம். ஜெர்மன் பாஸிஸ்ட் ஏகாதிபத்திய ஆசைகொண்டவர்கள் மனிதவர்க்க விரோதிகளாவார்கள். அவர்களைத் தோற்கடித்து நாம் வெற்றிபெறுவோம் என்பது திண்ணம்.

# பிரிடன் தாக்கப்பட்டபொழுது அது தனிமையில் நின்று போர்செய்தது.

"நியூயார்க் டைம்ஸ்" பத்திராதிபர், மிஸ்டர் ஆர்தர் ஹேஸ் ஸல்ஸ் பெர்க்கர்.
பால்டிமூர் (மேரிலாந்து), நவம்பர் 5.

"ராணுவ விஷயத்தில் பார்த்தாலும், ஆத்மீக சரித்திரத்தைக் கவனித்தாலும் இந்த யுத்தத்தில் பிரிடன் மகத்தான நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டிருக்

கிறது என்று தெரியவரும். சென்ற இரண்டு வருஷகாலமாக பிரிடன் வெற்றிகரமாக நடவடிக்கை எடுத்துக்கொள்ளவில்லை என்று சொல்வதற்கில்லை. அது மிகவும் நன்றாக நடந்து கொண்டிருக்கிறது.

"1940-ம் வருஷம் ஜூலை மாதத்தில் பிரிடன் தன்னையும், மால்டா, சமீபக் கிழக்கு, மத்தியக் கிழக்குப் பிரதேசங்களையும் வெற்றிகரமாகப் பாதுகாத்துக் கொள்ள முடியுமென்று இவ்வுலகத்திலுள்ள எந்த தளகர்த்தராவது, வேறுயாராவது அப்பொழுது சொல்வதற்கு முடியாமலிருந்தது. அப்பொழுது பிரிடன் தனிமையில் நின்று, மிகவும் தைரியத்துடன் எதிரிகளுடன் போர் செய்தது. இந்த விஷயத்தை நீங்கள் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுமாறு நான் கேட்டுக் கொள்ளுகிறேன். ஆகையால் ஒவ்வொருவரும் தனித்தனியே ஒரு பிரசார நிலயம் போல் இருந்து எல்லோருக்கும் தைரியத்தை ஊட்டுங்கள்."

---

## விஷி ஸர்க்காரின் மூன்றுவது வருஷம்.

### விஷி செல்வாக்கில்லாத அரசாங்கம்.

(அப்ஸெர்வர் என்ற பத்திரிகையிலிருந்து).

யுத்தத்திற்குப் பிற்பட்டு பிரான்ஸில் மூன்று வருஷங்களாக பொருளாதாரத்திலும், அரசியல் நிர்வாகத்திலும் சிதைவு ஏற்பட்டு வருகிறது. ஏற்கனவேயிருந்த பிரஞ்சு அரசாங்கம் மாறிப்போய் விஷி அரசாங்கம் ஏற்பட்டிருக்கிறது. 1940-ம் வருஷம் கோடைகால முதல் இரண்டு வருஷகாலமாக தேசீய முன்னேற்றம் ஏற்படும்படி செய்யப்போவதாக விஷி அரசாங்கம் சொல்லிவந்தது. இப்பால் அங்கு தேசீயமாவது, முன்னேற்றமாவது ஏற்படவில்லையென்று பிரெஞ்சு மக்கள் நன்கு தெரிந்துகொண்டுவிட்டார்கள். 1940-ம் வருஷம் கோடை காலத்தில் அவர்களுக்கு ஏற்பட்ட தோல்வியினால் பீதியடைந்து 3-வது குடியரசை (Republic)ப் பற்றி மிகவும் இழிவாகப் பேசத்தலைப்பட்டார்கள். அந்தக் குடியரசு அரசாள லாயக்கில்லாமலிருக்கிறதென்றும், லஞ்சம் முதலிய இழிவான தொழில்களில் ஈடுபட்டிருக்கிறதென்றும் சொல்லப்பட்டது. இப்பொழுது 1942-ம் வருஷம் கோடை காலத்தில் அம்மாதிரி நிலைமைதான் ஏற்பட்டிருக்கிறது. இரண்டு வருஷங்களுக்கு முன் இந்த யுத்தம் முடிந்துவிடும்போல் காணப்பட்டது. ஹிட்லருக்கு வெற்றி ஏற்பட்டு "புதிய திட்டம்" ஸ்தாபிக்கப்படும் போலவும் காணப்பட்டது. அந்த சமயத்தில் பிடேனின் தலைமையின் கீழ் பிரான்ஸ் ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பிய நாடுகளில் ஒன்றாக வருவதுதான் சிலாக்கியமெனக் கருதப்பட்டது. அப்பொழுதாவது பிரான்ஸைச் சேர்ந்த நாடுகளில் ஏதேனும் சில நாடுகள் அதற்கு மிஞ்சலாம் என்றும் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் இப்பொழுதோ ஜெர்மனிக்கு வெற்றி கிடைத்துவிடுமென்ற நம்பிக்கையாவும் போய்விட்டது. அதற்கு பதிலாக ஜனங்களின் மனதில் பீதியும், அருவெருப்பும் ஏற்பட்டுவிட்டது. வெற்றி கிடைப்பது உண்மையல்லவென்றும், வீண் மனக்கோட்டையென்றும், ஒரு பொழுதும் ஏற்படாதென்றும் தோன்றுகிறது. ஆகையால் தன்னைத்தானே காப்பாற்றிக் கொள்வதற்காக விஷி அரசாங்கம் ஜெர்மனியுடன் கூடச் சேர்ந்தது புத்திசாலித்தனமென்று சொன்னது போக, பின்வருவதை கவனிக்காமல் பித்துப்பிடித்தவன் செய்த காரியமாக முடிந்துவிட்டதென்று இப்பொழுது வருத்தப்படவேண்டியதாயிற்று.

#### ஜனங்களின் கஷ்டங்கள்.

இவ்விதமாகயிருக்கிறது அந்த தேசத்தின் நிலைமை. இப்பொழுது அரசியல் நிர்வாகத்திற்கு லவால் தலைமையெடுத்துக் கொண்டிருக்கிறான். எங்கும் ஒய்வின்மையும், கொடுமையும் பரவியிருக்கின்றன. கிராமாந்திரங்களில் விளையக்கூடிய உணவுப் பொருள்கள்யாவும் ஜெர்மானியருக்காக அனுப்பப்படுகின்றன. இன்னும் அதிகமாக அனுப்பும்படி நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. பல நகரங்களிலுள்ள தொழிற்சாலைகளில் தயாரிக்கப்பட்ட சாமான்களோ, அல்லது விவசாயத்திற்கு லாயக்கான ஆயுதங்களோ விவசாயிகளுக்குக் கிடைக்காது, ஆகையால் அவர்கள் விளைவித்த விவசாயப் பொருள்களை அரசாங்கத்தாருக்குக் கொடுக்க மறுக்கிறார்கள். அரசாங்கத்திற்குச் சேரவேண்டிய பகுதியில் கால் வாசியிலிருந்து அரைவாசி வரையுள்ள விளைவுபொருள்கள் சென்ற வசந்த காலத்தில் வசூல் செய்வ



தற்கு முடியவில்லை. தொழிற்சாலைகளில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளிகளுக்கும் சம்பளம் நிறுத்தம் ஏற்பட்டதால் அவர்களின் நிலைமை அதிகம் பாதிக்கப்பட்டுவிட்டது. குடித்தனச் செலவும் முன்பைவிட 300 முதல் 400 சதவிகிதம் வரை அதிகரித்துவிட்டது. யுத்தத்தில் கைதியாக்கப்பட்ட பிரெஞ்சுத் துருப்புகள் சீக்கிரத்தில் விடுதலையடைவார்கள் என்ற நம்பிக்கையெல்லாம் பாழாய்விட்டது.

மேலும் கிராமாந்திரங்களில் விவசாயிகளின் சங்கியை குறைந்துவிட்டது. பட்டணங்களிலோ வேலையில்லாத் திண்டாட்டம் அதிகமாக எங்கும் பரவியிருக்கிறது. உணவுப் பொருள்கள் தயாரிக்கும் கைத்தொழில்கள் அரைகுறை வேலை திட்டத்தில் நடந்து வருகிறது.

ஜெர்மனியுடன் வர்த்தகம் செய்துவந்த வியாபாரிகளுக்குக் கூட அவர்கள் எதிர்பார்த்ததைக் காட்டிலும் குறைவான தொழில் தான் நடந்தது. 1942-ம் வருஷம் மேமாதம் முதல் பிரெஞ்சு ஏற்றுமதிக்காரர்களை எல்லாத் துறைகளிலும் ஆறு சதவிகிதம் விலையைக் குறைக்கும்படி ஜெர்மானியர் கட்டாயப்படுத்தியிருக்கிறார்கள். இப்பொழுது உற்பத்தி செய்வதில் செலவு அதிகரித்திருக்கும் காரணத்தினால் ஏற்றுமதி விலையையும் அதிகப்படுத்தலாமாவென்பதைத் தீர்மானிக்க ஜெர்மன் ராணுவ அரசாங்கம் தான் தகுதியானது. பிரெஞ்சு வர்த்தகர்களுக்கு கடுதாசு பாங்கு நாணயங்கள் தான் வழங்கப்படுகிறது. நாணயம் அதிகரிக்க அதிகரிக்க கடுதாசு நாணயத்தின் மதிப்பு குறைந்துவருகிறது. அதனால் பொருள்களும் குறைந்து கொண்டு வருகிறது. கடுதாசு நாணயம் 1,200 கோடி மார்க் (Marks)களுக்கு மேலாகிவிட்டது. ஜூன் மாதத்தில் பிரான்ஸில் ஜெர்மானியர்கள் தங்கியிருப்பதற்கு நேரிடும் செலவுக்காக ஏற்பட்ட கணக்கு 16,900 கோடி பிராங்கி (Franks)லிருந்து 18,100 கோடி பிராங்க் (Franks)களாக அதிகரித்துவிட்டது. மொத்தத்தில் ஜெர்மானியர் பிரான்ஸில் ஆக்கிரமித்துக் கொண்டதற்காக கிட்டத்தட்ட 30,000 கோடி பிராங்கு (Franks)கள் பிரான்ஸ் ஜெர்மனிக்குக் கொடுக்க வேண்டியதாகயிருக்கிறது.

ஜெர்மனியின் பாதுகாப்பின் கீழ் அங்கு ராஜீய நிர்வாகம் நடந்து வருகிறது. ஆனால் சதாவாக நிலைத்திருக்கக் கூடிய சக்தி அதற்கில்லை. அது மூன்றுவது குடியரசு ஆட்சியில் உள்ள குறைகளைத் தூஷித்தும், அவமதித்துப் பேசியும் இந்த இரண்டு வருஷப்பொழுதையும் போக்கியது. ஆனால் அபிவிருத்தியடையக் கூடிய விதமாக ராஜீய நிர்வாக முறையை ஏற்படுத்த அதனால் முடியவில்லை. ஸ்வதந்திரத்தை அது கைவிட்டுவிட்டது. மேலும் அந்த நிர்வாகத்தில் பல தோஷங்கள் இருக்கின்றன. ஜனங்களுடைய ஆதரவைத் தேடிக்கொள்ளாமல் ஜெர்மன் பாஸிஸ்டு கட்சி, தேசீய கட்சி இவைகளின் பழக்க வழக்கங்களைப் பின்பற்றியிருக்கிறது. பழைய கட்சி முறை நிர்வாகம், அதிகாரபூர்வமாக ரத்து செய்யப்பட்டுவிட்டது. ஆனால் ஜெர்மனியிலும், இதாலியிலும் இருப்பது போல அரசாங்க ஆதிக்கமுள்ள ஒரே கட்சி முறையை ஏற்படுத்த டீட் (Diet), டோரியாட் (Doriot) இவர்களின் பிரயத்தனங்கள் வீணாகிவிட்டன.

ராணுவ உத்தியோகஸ்தர்களாக இருந்து இப்பால் ரிடையர் ஆகியிருப்பவர்கள் ஒன்று சேர்ந்து ஏற்படுத்திய ஸ்தாபனம் பலஹீனமாயிருக்கிறது. அது இந்த அரசாங்கத்துக்குப் பலத்தைக் கொடுக்க முடியாமல் போய்விட்டது. ஆனால் சாதாரணமாக துரைத்தனம் நடந்து வருவதில் அது சில சமயங்களில் தடுத்துச் சொல்லிக்கொண்டு வருகிறது. மார்ஷல் பிடேனிடம் உள்ள பிரீதிக்காக அவன் அதிகாரத்துக்கு சிலர் கட்டுப்படுகிறார்கள். விஷி அரசாங்கத்தில் அதைத் தவிர வேறு பிரதான்யம் ஒன்றுமில்லை. ஆனால் சில கீழ்தர உத்தியோகஸ்தர்களைப் பாதுகாப்பதற்காக அநேக தடவைகளில் மார்ஷல் பிடேன் நேரே தலையிட வேண்டியிருந்ததினால் இந்த கௌரவமும் குறைந்துவருகிறது. சமீபத்தில் பிடேனை ஹின்டன்பர்க்குடன் டீட் ஒப்பிட்டுச் சொன்னார். அது எதற்காகவென்றால் ஜெர்மனியில் தேசிய கட்சி நிர்வாகம் வருவதற்கு முன்னால் அங்கு நிலைமை எப்படியிருந்ததோ, அதுபோல்தான் பிரான்ஸிலும் தேசீய நிர்வாகம் வருவதற்கு முன் பிடேன் அரசாட்சி இருக்கிறதை ஒப்பிட்டுச் சொன்னார். ஆனால் இத்தகைய தவறுதல் மறுபடியும் ஏற்படாது. பிடேனை விடுவிக்க, ஜெர்மனியில் தோன்றியது போல் பிரான்ஸில் ஒரு சர்வாதிகாரியும் இது வரை தோன்றவில்லை. அப்படி ஒருவரும் தோன்றவும் மாட்டார்.

### அதிகாரத்திற்காகப்போட்டி.

எல்லாம் தெய்வச் செயல் என்று லவால் சொல்லி வருகிறான். மந்திரி சபை நிர்வாகத்திற்கு எதிராக இப்பொழுது நடக்கும் அரசாங்கத்தில் சூழ்ச்சிகள் செய்து வருவதே அவனுடைய முக்கிய குறுநிசயம்.

பிரான்ஸிலுள்ள தொழிலாளிகள் ஜெர்மனியில் போவதற்கும் அங்கு வேலை செயவதற்கும் மறுதளிக்காமல் இருந்திருந்தால் இப்பொழுது யுத்தக் கைதிகளாக இருக்கும் விவசாயிகளின் பெற்றோர்களும், மகன்களும் எற்கனவேயே திரும்பி வந்திருப்பார்கள் என்று சொல்லி அவர்களுக்கு கோபமூட்டப்படுகிறது. லவால் அங்கு அதிகாரத்தைக் கைப்பற்ற பகீரதப் பிரயத்தனம் செய்கிறான். ராணுவ அதிகாரம் டார்லானிடம் இருக்கிறது. டார்லானுக்குத் தெரியாமல் சேனைத் தலைவர்களிடம் பற்றுதல் வைத்துக்கொள்ள அவன் பிரயத்தனப்படுகிறான். இப்பால் போலீஸ் அதிகாரத்தையும், பொதுஜன பாதுகாப்பு அதிகாரத்தையும் டார்லானிடமிருந்து பிடுங்கி தன் வசமாக்கிக் கொண்டிருக்கிறான். ருஷ்யாவுக்கு எதிராக எற்படுத்தின சங்கமும் சமீபகாலத்தில் லவால் ஆதிக்கத்தில் வந்து விட்டது. 1942-ம் வருஷம் கோடைகாலத்தில், அதிகாரமேயில்லாத பிரெஞ்சு அரசாங்கத்தில் அதிகாரம் பெறுவதற்க்கு அங்கு தலைவர்கள் போட்டி போட் வருகிறார்கள்.

---

# சைனாவிற்கு நான்கு பர்மா ரஸ்தாக்கள்.

**விமான மார்க்கம்.**—சைனாவிற்கும், இந்தியா, ருஷ்யா, இவைகளுக்கு மிடையில் அமெரிக்க விமானங்கள் சாமான்களை ஏற்றிக்கொண்டு போக்குவரத்தில் ஈடுபட்டிருக்கின்றன. சுங்கிங்கிலும், இதர சீன ராணுவ கேட்டங்கிகள் முதலியன இருக்கு மிடத்திற்கு அருகிலும், வடகிழக்கு இந்தியாவிலும் பெரிய விமானதளங்கள் கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன. இவ்வித தளங்களிலிருந்தும், ஸைபீரியா, துருக்கிஸ்தானம் முதலிய இடங்களிலிருந்தும் விமானம் மூலம் சாமான்களை அனுப்ப மிக சாதகமாக இருக்கிறது. உயரமான மலைகளைக் கடந்து இந்தியாவிற்கும், அகண்ட மைதானங்களைக் கடந்து ருஷ்யாவிற்கும் இவ்வித விமானங்கள் வெகு எளிதில் செல்லும். இவைகளில் சைனாவிற்குத் தேவையான பெரிய பீரங்கிகள், லேசான டாங்கிகள், கவசமணிந்த மோட்டார்கள் முதலியவைகளையும் ஏற்றிச் செல்ல முடியும்.

**ருஷ்ய மார்க்கம்.**—இது வடமேற்கு சைனாவின் வழியாக ஸைபீரியாவிற்குச் செல்லுகிறது. இதன் மூலமாக கடந்த நான்கு வருஷங்களாக ஏராள ருஷ்ய சாமான்கள் சைனாவிற்கு வந்துசேர்ந்திருக்கின்றன. இதில் கொஞ்ச தூரம் மோட்டார், கொஞ்சதூரம் ரயில், இரண்டிலும் சாமான்கள் அனுப்பப்படும். கான்ஸு மாகாணத்திலுள்ள லான்சவ் வழியாகவும், ஸிங்கியாங் மாகாணத்தின் வழியாகவும் சென்று துருக்கிஸ்தானத்திலுள்ள ஸெர்கூபோலை அடைகிறது. அங்கிருந்து ருஷ்ய இருப்புப்பாதையை அடைகிறது. அந்த இருப்புப்பாதையில் போகவர இரண்டு மார்க்கங்கள இருப்பதால் 7 மடங்கு அதிகமான சாமான்களை அனுப்ப முடிகிறது. சுங்கிங்கிற்குப் போடப்பட்டுள்ள நான்கு மார்க்கங்களில் இதுவே இரண்டாவதாக முக்கியத்வம் உள்ளது. பிரசித்தமான பர்மா ரஸ்தாவில் ஏற்றிச் செல்லக்கூடிய சாமான்களைக்காட்டிலும் அதிகம் இதன் வழியாக அனுப்ப முடியும்.

**அஸ்ஸாம் ரஸ்தா.**—இது உண்மையில் ஹிமாலயச் சிகரங்களைப்பிளந்தே போடப்பட்டிருக்கிறது. வட இந்திய இருப்புப் பாதைகளோடு இந்த ரஸ்தாவைப் பிணைப்பதற்கு பெரிய நதிகளையும் கடக்கவேண்டியிருக்கிறது. சீனாவில் யாங்ஸி மெகாங், ஸால்வீன் என்ற பெரிய நதிகளையும் கடக்கவேண்டியிருக்கிறது. ஓரிடத்தில் ஐராவதி நதியையும் தாண்டவேண்டும். சில நதிகளுக்கு இடையில் 50 மைல் தூரமிருந்தாலும் 10,000 அடி உயரமிருக்கும் மலைச் சிகரங்களிருக்கின்றன. ஓரிடத்தில் பிரம்மபுத்ரா நதியையும் தாண்டவேண்டும்.

**புராதன வர்த்தக மார்க்கம்.**—இது சுங்கிங்கிலிருந்து சற்று வளைசலாக லாஸா என்ற இடத்திற்கு வந்து, அங்கிருந்து ஹிமாலய கணவாய் மூலமாக இந்தியாவிற்கு வருகிறது. முதலில் சுங்கிங்கிலிருந்து சௌடேவிற்கும் அங்கிருந்து மோட்டார் செல்லக்கூடிய மார்க்கம் வழியாக சம்டோ என்ற இடத்திற்குச் செல்லுகிறது. அங்கே 80 மைல் தூரத்திற்கு சற்று உயர்ந்த பிரதேசத்தின் வழியாக லாஸாவிற்கும் அங்கிருந்து பிரம்மபுத்திரா நதியைக் கடந்து டார்ஜிலிங்கிற்கும் வருகிறது.



---

# அன்னியநாட்டு பிரதேச உரிமைகளை விட்டுக்கொடுப்பதற்காக சைனாவின் நன்றி பாராட்டு.

## முதலில் நமது தற்காப்புக்காகவும், அதன் மூலம் உலக விமோசனத்திற்காகவும் நாம் இந்தியப்போரை நடத்துகிறோம்.

மார்ஷல் சியாங் கை ஷேக்—சுங்கிங், நவம்பர் 1.

“இதர நாடுகளுக்குச் சமமாக நமக்கு அந்தஸ்து கிட்டியிருக்கிறது. ஆகையால் இனிமேல் ஏற்படக்கூடிய பெரிய தாக்குதலுக்கு நமது முயற்சிகளைப் பலப்படுத்தியாகவேண்டும். எதிரிகளின் ஆக்கிரமிப்பை ஒழிப்பதற்காக நடக்கும் பொது யுத்தத்தில் நாமும் நமது கடமைகளைச் செய்யவேண்டும்.

“ஏற்றம், தாழ்த்தி வித்தியாசம் கண்டிருந்த உடன்படிக்கைகளெல்லாம் தள்ளுபடி செய்யப்பட்டது சமீபகாலத்தில் ஏற்பட்ட சம்பவங்களில் ஒன்று. அது நமது தேசத்தார்களுக்கு மிகவும் திருப்தியளிக்கக்கூடியதாக இருக்கிறது.

“இப்பொழுது இதைக் குறித்து விசேஷமாக ஒன்றும் சொல்வதற்கில்லை. ஆனால் கிரேட் பிரிடனும், யுனைடெட் ஸ்டேட்ஸும் ஒரே காலத்தில் மனப்பூர்வமாக இந்தக் கோரிக்கையை வெளியிட்டிருப்பதினால், இதன் முடிவில் திருப்திகரமான பயன் உண்டாகுமென்று தோன்றுகிறது.

“இச்சமயத்தில் மற்ற தேசத்தார்களுக்குச் சமமான அந்தஸ்து நாம் அடைந்திருப்பது ஒரு முக்கியமான காரியமென்று நான் நம்புகிறேன்.

“நமது தேசநாடு எதிர் பார்ப்பதற்குக் குறைவில்லாமல் நடந்துகொள்ள நாம் முயற்சி செய்யவேண்டும். நவீன ஸ்வதந்திர தேசத்தார் எப்படி நடந்துகொள்ள வேண்டுமோ அதற்குக் குறைவில்லாமல் நாமும் நடந்துகொள்ள வேண்டும்.

“100 வருஷங்களாக அடிமைத்தனத்தில் பிணைக்கப்பட்டிருந்த தேசத்தார் விடுதலை பெற்றது தேசசரித்திரத்தில் எவ்வளவு முக்கியமானது என்பதை கவனித்துப் பாருங்கள்.

“சீனாவுக்கு ஸ்வதந்திரத்தைப்பெற்று அதற்கு உலகத்திலுள்ள மற்ற நாடுகளுக்கு இருக்கும் சமமான அந்தஸ்தைத் தேடிவைக்க வேண்டுமென்று குடியரசிக்கு ஆதி புருஷனும், புதிய மாறுதலை விரும்பின கட்சிக்குத் தலைவருமான டாக்டர் ஸன் யாட் ஸன் நோக்கம் கொண்டார். சம அந்தஸ்துள்ள தேசத்தாரின் கொள்கையை முதலில் நாம் கடைப்பிடிக்க வேண்டும். அப்படிச் செய்தால்தான் சரியான வாழ்க்கையின் கொள்கைகளை அனுசரிப்பதில் ஏற்படும் பிரச்னைகளைத் தீர்க்கவும், அதில் உண்டாகும் இடையூறுகளைத் தவிர்க்கவும் முடியும்.

“சீன தேசத்தாரின் கௌரவத்தை நிலைநிறுத்தச் செய்யவேண்டுமென்பது எல்லாச் சீனர்களின் ஒரு மனதான வேண்டுகோள். புதிய மாறுதல் வேலையில் சம்பந்தப்பட்டிருந்த சீனர்களுக்கும், அதில் சேராத சீனர்களுக்கும் ஒரே மாதிரியான அபிப்பிராயம்தான். இப்போது வழி பிறந்திருக்கிறது. சந்தர்ப்பத்தின் முக்கியத்வத்தை உணர்ந்து ஒவ்வொரு பிரஜையும் நடந்துகொள்ள வேண்டும். சம அந்தஸ்து வந்துவிட்டது. எனவே இப்பொழுது ஏற்பட்டிருக்கும் பொறுப்பை நாம் ஏற்றுக்கொள்ளவேண்டும்.

### நேசதேசத்தார்களுடன் ஒத்துழைத்தல்.

“நம் நாட்டு நலமுமட்டுமன்றி, உலகத்தின் நலன்களுக்காகவும், நம் தேசத்தாரும் பொறுப்பாளிகள். ஐக்கிய தேசத்தார்கள் படைகளில் சேர்ந்த தனிப்பட்ட ஒரு தொகுதியான நாம் நம்முடைய கடமைகளைப் பூர்த்தி செய்வதிலிருந்து ஒருவித கஷ்டங்களும், பரித்தியாகங்களும் நம்மை நிறுத்திவிடக்கூடாது.

## புதுக்கோட்டை ஸமஸ்தான தேசிய யுத்த முன்னணி நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை

கிராமங்கள் : மாலை 7 & 7.30 மணி, முனிஸிபல் ஆபீஸ் : மாலை 7.45 மணி, C. S. M. பள்ளிக்கூடம் : காலை 10 மணி, ராணி பெண்பாடசாலை & காலேஜ் : காலை 10.15 மணி.

**பிரஸங்கம் 121—(2-வது பிரிவு).**

| | | | |
|---|---|---|---|
| 14—11—42 | முனிஸிபல் ஆபீஸ். | 18—11—42 | காலேஜ் (A) ஆங்கிலம். காலேஜ் தமிழ் பிரான்சு ஸ்கூல். |
| 15—11—42 | குடுமியாமலை. பரம்பூர். | | பனையப்பட்டி. |
| 16—11—42 | நச்சாந்துபட்டி. விராச்சிலை. | | ராங்கியம். |
| 17—11—42 | வெங்களூர். கோனாபட்டு. | 19—11—42 | கொடும்பாளூர். விராலிமலை. |
| 18—11—42 | C.S.M. பள்ளிக்கூடம் ராணி பெண் பாடசாலை. | 20—11—42 | பூங்குடி. சத்தியமங்கலம். |

**பிரஸங்கம் 122—(3-வது பிரிவு).**

| | | | |
|---|---|---|---|
| 21—11—42 | முனிஸிபல் ஆபீஸ். | 25—11—42 | காலேஜ் (A) ஆங்கிலம். காலேஜ் தமிழ் பிராஞ்சு ஸ்கூல். |
| 22—11—52 | ஆலங்குடி. வடகாடு. | | ராமச்சந்திரபுரம். |
| 23—11—42 | அன்னவாசல். கீழக்குறிச்சி. | | ராயவரம். |
| 24—11—42 | குழிபிறை. சுந்தரம். | 26—11—42 | மழையூர். காம்பக்குடி. |
| 25—11—42 | C.S.M. பள்ளிக்கூடம் ராணி பெண் பாடசாலை. | 27—11—42 | வாளரமாணிக்கம். ஏம்பல். |

---

புதுக்கோட்டை தேசிய யுத்த முன்னணி பிரசார கோஷ்டியார்கள் பிற்பகலில் கீழ்க்கண்ட இடங்களுக்கு வருவார்கள். பாண்டு வாசித்துக் கொண்டு, படங்கள் காண்பித்து, துண்டுபத்திரிகைகள் கொடுத்து, பிரசாரம் செய்வார்கள்.

| | | | |
|---|---|---|---|
| 14—11—42 | திருமயம். | 21—11—42 | வெட்டம்விடுதி. |
| 15—11—42 | விராச்சிலை. | 22—11—42 | ஏம்பல். |
| 16—11—42 | அரிமளம். | 23—11—42 | முள்ளங்குறிச்சி. |
| 17—11—42 | கோனாபட்டு. | 24—11—42 | ராமச்சந்திரபுரம். |
| 18—11—42 | மோசிலை-புதுப்பட்டி. | 25—11—42 | ராயவரம். |
| 19—11—42 | ஆலங்குடி. | 26—11—42 | குழிபிறை. |
| 20—11—42 | பாப்பாபட்டி. | 27—11—42 | புதுக்கோட்டை. |

Sri Brihadamba State Press, Pudukkottai. 2,000—17-11-42.

# புதுக்கோட்டை ஸமஸ்தான தேசிய யுத்த முன்னணி நிலயம்.

பிரசுரம்] 1942-ம் ஸூ நவம்பர் மீ 21 உ [ந. 122

பிரஸங்கம் CXXII.

## "ஜயபேரிகை"

காண்டர்பரி ஆர்ச் பிஷப்.

லண்டன், நவம்பர் 13.

எகிப்தில் வெற்றி கிடைத்துவரும் இந்தச் சந்தர்ப்பம் கடவுளுக்கு நன்றி செலுத்தவேண்டியது அவசியமாகும். நமது புனித காரணங்கள் பயனடைய வேண்டுமென்று நாம் கடவுளைப் பிரார்த்திப்பது போலவே, நமது படைகளுக்கு இதுவரை கிடைத்திருக்கும். வெற்றிக்காக நாம் வந்தனங்களையும் கடவுளுக்கு செலுத்தவேண்டியது அவசியமாகும். அந்த சந்தர்ப்பத்தில் மாதாகோவில் மணிகள் அடிக்கப்படும். புதிய உணர்ச்சி பெறவும், நமது நாடும் நேசதேசங்களும் நமது புனித யுத்த காரணங்களும் கடவுளின் அனுக்ரஹத்தைப் பெறுவதைத் தெரிவிக்கும் இம்மணிகள் இதுவரை ஒலிக்கப்படாமலிருந்தன.

---

## ஸ்டாலின்கிராட் இன்னும் எதிர்த்து நிற்கிறது.

**ஸோவியத் யுத்தச் செய்திகள்** என்ற பத்திரிகையில் வெளியான ஒரு வியாசத்தில் யுத்த சரித்திரத்திலேயே ஸ்டாலின்கிராட்டின் பாதுகாப்பு மிகவும் சிரமமான விஷயம் என்று காணப்பட்டிருந்தது. இந்த நகரம் வால்கா நதியை ஒட்டினாற் போல் வெகு தூரத்திற்கு இருக்கிறது. சுயேச்சையாக தந்திரங்களைச் செய்து கொள்ள அங்கு தற்காப்பு செய்துகொண்டிருப்போருக்கு ஒரு கெஜ இடங்கூட தனியே கிடைக்காது. ஆகவே அவர்களும் ஸ்டாலின்கிராட் பிரதேசத்தில் ஒரு அம்சமாக ஆகிவிட்டார்கள்.

வால்கா நதி வழியாக ஒரு படகில் சென்றால்தான் ஸ்டாலின்கிராட் போர் முனை சாதாரணமானதல்லவென்று தெரியும். மேலும் சாதாரண மனிதர்களின் கண்களுக்குப் புலப்படாத சில ராணுவ முக்கியத்வம் வாய்ந்த அம்சங்களும் இருக்கின்றன.

நதியின் எதிர்கரையில் ரயில்வண்டிகளிலிருந்து குண்டுகளும், சுரங்கவெடிகளும் இரவும் பகலுமாக இறக்கப்படுகின்றன. அங்கிருந்து இடைவிடாது படகுகளும் இதர கப்பல்களும் அவைகளை ஏற்றிக்கொண்டு நகருக்குக் கொண்டு வருகின்றன. இரவில்தான் இந்தப் போக்குவரவு அதிகம். துருப்புகளும், உணவும், வைத்திய சாமான்களும், பத்திரிகைகளும் ஏராளமாகக் குவிக்கப்படுகின்றன.

## முதல் தாக்குதல்.

ஆகஸ்டு 23உ ஸ்டாலின்கிராட்டில் ஜெர்மனியர் முதல் தாக்குதலைச்செய்தனர். சுமார் ஆயிரம் விமானங்களுக்கு அதிகமாகவே ஈடுபட்டு நகரின் ¾ பாகத்தை எரித்துத் தள்ளின. இனி அந்த நகரம் அழிந்துவிட்டதென ஜெர்மானியர் நினைத்த சமயத்தில் மறுபடியும் அந்த நகரம் எதிரிகளை எதிர்த்து நின்றது.

“வசமாகுங்கள்” என்று எழுதிய துண்டுக் கடுதாசிகளை ஜெர்மானியர் அந்நகரின்மேல் போட்டனர். ஆனால் அவை பூமியைச் சேருவதற்கு முன்னேயே எரிக்கப்பட்டன. கௌரவமாகவே அந்த துண்டுக் கடிதங்களை ருஷ்யர்கள் எரித்துத் தள்ளினர்.

ஒரு படகில் அந்த நகருக்கு அருகில் நின்று பார்த்தால் எதிரில் ஒரே நெருப்பு ஜ்வாலைதான் காணப்படும். நகரைக் காணமுடியாது. அதில் யாராவது பிழைத்திருக்க முடியுமா என்ற சந்தேகமும் தோன்றலாம்.

ஆனால் சிவப்பு, பச்சை, வெள்ளை முதலிய நிறத்துடன் குண்டுகள் ஜ்வாலைகளைக் கக்கிக்கொண்டு ஆகாயத்தில் கிளம்பும். அங்கு ஜனங்கள் சண்டை செய்துகொண்டேதானிருக்கிறார்கள். எதிர் கரையில் ஒரு போக்குவரத்துக் கப்பல் வந்ததும் அத்துடன் சில படகுகளும் இருக்கும். அதில் துருப்புகள் ஏறிக்கொண்டு எதிரித்தாக்குதலுக்கு இடையிலேயே நகரினுள் செல்லுவார்கள். வால்காவில் கப்பல் மாலுமிகள் ஓயாமல் உதவி புரிவார்கள். அப்படி துருப்புகளை அடிக்கடி இக்கரைக்கும் அக்கரைக்கும் 500 தடவை ஏற்றிச்சென்ற “அப்காஸெட்ஸ்” (Abkhazets) என்ற கப்பலின் காப்டன் கால்யின் என்பவன். இவனது வயது 26.

ஸ்டாலின்கிராட் நகரின் கரை ஓரங்களெல்லாம் எதிரித் தாக்குதலால் கருத்து, கரிபடர்ந்திருக்கும். நதியில் மிதக்கும் தெப்பக் கட்டைகளெல்லாம் எரிந்துபோயின. போர்முனை பூராவுக்கும் திரட்டியிருந்த படைகளை ஹிட்லர் ஸ்டாலின்கிராட் நகரின்மேல் மாத்திரம் பிரயோகித்தார். இரு கட்சியாருக்கும் நடந்த சண்டைகள் மிகவும் கடுமையாயும் அதிக நெருக்கமாயும் நடைபெற்றன. பாதுகாப்பு பள்ளங்களில் கைகலந்த சண்டைகள் சில நிமிஷங்கள்தான் நடைபெறும்.

## தற்காப்பு செய்த ஒருவரின் ரிபோர்ட்டு.

ஒருவர் பின்வருமாறு கூறினர். “வீட்டின் முதல் மாடியில் நாங்கள் புகுந்தோம். இரண்டாம் மாடியில் ஜெர்மானியர் இருக்கின்றனர். யந்திர பீரங்கிகளை அவர்கள் உபயோகிக்கிறார்கள். இருந்தாலும் அவர்களை விரட்டிவிடுவோம்”.

ஆகவே ஜெர்மானியருக்கும் ருஷ்யர்களுக்கும் மத்தியில் ஒரு வீட்டுக்கூரைதான் இருக்கிறது. அதுதான் முன்னணியில் இருக்கிறது. ஒவ்வொரு வீட்டையும் ருஷ்யர்கள் பிடித்துக்கொண்டு அதிலிருந்து சண்டை செய்கிறார்கள்.

ஜன்னல்களின் இடைவழியாக எதிரிகளைப் பார்த்துச் சுடுகிறார்கள். எதிரி குண்டுகள் வீட்டின் செங்கல்களை ஒன்றன் பின் ஒன்றாக இடித்துத்தள்ளும். இருந்தாலும் ருஷ்யர்கள் சண்டையை விடவில்லை. அந்த வீடு பூரா இடிந்து போனாலும் சண்டை நின்றபாடில்லை. வீட்டைக் காப்பாற்றிவந்தமாதிரி இடிந்த பிறகும் காப்பாற்றிவருகிறார்கள். இப்படித்தான் ராஷம்ஜெவ்வின் சிறுபடையினர் புகழடைந்தனர்.



அச்சிறு படையினர் 10 நாள்வரை இரண்டு ஜெர்மன் டிவிஷன்களையும் 100 டாங்கிகளையும் எதிர்த்து நகரினுள் தற்காப்பு செய்துகொண்டிருப்போருக்கு உதவியளித்தனர். பிறகு தாங்களே சண்டையில் இறங்கினர். ஸ்டாலின்கிராட்டில் இருந்தால் ஒன்று வீரனாக இருக்க முடியும் அல்லது பயங்குளியாக ஓடவேண்டும். அங்கிருந்துகொண்டு சண்டையில் ஈடுபடாமலிருக்க முடியாது. ஒரு படைப்பகுதி நிறைய பயந்தவர்கள் இருந்தால் அவர்களால் ஒரு வீட்டினுள் புக முடியாது. ஆனால் தைரியமான ஒருவன் உள்சென்றுவிடுவான்.

## சாமர்த்தியமே தேவை. எண்ணிக்கை வேண்டாம்.

இந்த யுத்தத்தின் சாமர்த்தியத்தினால் வெற்றி பெறுவதுபோல் வெறும் எண்ணிக்கையால் முடியாது. பகல் காலத்தில் எதிரிகளின் பாம்பர்கள் அலைகளைப்போல் வந்துகொண்டிருக்கும். நகரின் ஓரிடத்தில் பொட்டலில் நின்றுகொண்டு ஒரு வார்டன் எச்சரிக்கை மணியை அடிப்பான். ஓரிடத்தில் ஒரு சுரங்கவெடி வெடிக்கும். மணல் புழுதி கிளம்பும். அதற்கு ஒரு ஸெகண்டு கிரமித்து நாம் ஜாக்கிரதையாகத் தலையைத் தூக்கிப்பார்த்தால் அந்த வார்டன் தரைமேல் கிடப்பான். அவனுக்கு உதவி கொடுக்கலாமென்று அவனருகில் சென்று பார்த்தால் அவன் எழுந்து நின்று மணியை மீண்டும் அடிப்பான். ஆனால் வலது கை காயமடைந்ததால் இடது கையால் மணி அடிப்பான். அதாவது தான் காயம் பட்டிருந்தாலும் எப்படியும் தனது வேலையை விட்டு ஒருவரும் போய்விடமாட்டார்கள்.

இதுபோலவேதான் படகுக்காரர்களும். ஒரு தடவை படகு குண்டுகளால் தாக்கப்பட்டதால், திடீரென அதிலுள்ளோர் தண்ணீரில் குதித்தார்கள். அப்படி குதித்த ஒருவனின் மேல் சட்டை கனமாக இருந்ததால் தண்ணீரில் மூழ்கினான். ஆனால் படகுக்காரன் அவனது சட்டையைப் பிடித்து இழுத்து தனது லைப் பெல்டை அவனுக்கு வீசி பின்வருமாறு கூறினான். “இதைப்பிடித்து மிதந்து செல்”. அந்த சமயத்தில் அவன் கூறியதாவது. “அடே எனது இரண்டு கைகளும் போய்விட்டன. இனி என்னால் ஒன்றுமாகாது. நீயே இதை வைத்துக் கொண்டு சண்டைசெய்து ஸ்டாலின்கிராட்டை பாதுகார்”.

பிறகு கொஞ்ச தூரம்சென்று எங்கேயோ மறைந்தான்.

---

# வார யுத்தச் செய்திகள்.

### 14—11—42-லிருந்து 20—11—42-வரை.

**பிரெஞ்சு வட ஆபிரிக்கா.**—நவம்பர் 11உ அட்மிரல் டார்லனின் உத்தரவுப்படி நேசதேசப் படைக்கும் பிரெஞ்சுக்காரர்களுக்கும் பிரெஞ்சு வட ஆபிரிக்காவில் சண்டை நிறுத்தப்பட்டது. நேசப்படைகள் போகி(Bougie)யை வசப்படுத்தி இருக்கின்றனர். இது அல்ஜியர்ஸுக்குக் கிழக்கிலும் டூனிஸ், ஓரான், ரபாட், கஸ்பிளாங்கா முதலிய இடங்களிலிருந்து 100 மைல் தூரத்திலும் இருக்கிறது. ஓரானில் அமெரிக்கப் படைகளுடன் பிரெஞ்சுப் படைகள் சேர்ந்துகொண்டன. இதில் கிழக்குப் பக்கத்தில் போர் செய்யும் படைகள் டூனிஸியா பக்கத்திலும், மேற்குப் பக்கத்தியப் படைகள் அல்ஜியர்ஸிலும் படைகளை ஒன்று சேர்த்துக் கொள்ளுகின்றன. நவம்பர் 13உ போனா ஆக்கிரமித்துக்கொள்ளப்பட்டது. ஜெனரல் அன்டர்ஸனின் கீழுள்ள பிரிடிஷ் படைகள் 90 சதவிகிதம் பைஸர்டா பக்கமாக முன்னேறுகின்றன.

விஷி பிரான்ஸ் வழியாகப் புகுந்த ஜெர்மன் படைகள் நவம்பர் 11உ கோலோனே ஸுர் ஸாவோன் (Chalonis Sur Saone)வைப் பிடித்து லயான்ஸ், மார்ஸெய்ல்ஸ் முதலியவைகளை ஒன்றன்பின் ஒன்றாகப் பிடித்தன. அதே சமயத்தில் இதாலியத் துருப்புகள் (கார்ஸிகா) பாஸ்டியாவையும், நைஸ்ஸையும் பிடித்துக்கொண்டன. டூலூன் நேரே ஆக்கிரமிக்கப்படாதபோயினும் முற்றுகையிடப்பட்டிருக்கிறது. டூலூன் கப்பற்படைத் தலைவனைத் தனது படைகளை ஆபிரிக்காவிற்கு அழைத்துவரும்படி டார்லான் சொன்னதை அவன் கேளாது

பிடேன் சொற்படி நடக்கிறான். ஜெர்மன் பைடர் படைகளும், விமான மூலம் வந்த படைகளும் டுனிஸ்ஸின் விமான தளமான அலோயினு (Alouina)விலும் பைஸர்டாவிலிருந்த ஸிடி அஹமத்திலும் வந்திறங்கின. இப்படைகள் ஸிஸிலியிலிருந்து வந்தன. தற்போதைய யுத்தத்திற்கு கேந்திர ஸ்தானமாக டுனிஸியா தான் இருக்கிறது. நேசதேச முன்னேற்ற பிரிடிஷ் படைகள் எதிரியுடன் கைகலந்துவிட்டன. ரோமல் லிபியாவிலிருந்து டுனிஸியா வந்துசேர்ந்தான். மால்டாவில் இருந்த பிரிடிஷ் விமானங்கள் இந்தப்போரில் அதிகம் ஈடுபடுகின்றன.

மத்தியதரைக்கடலின் மேற்கே யூ படகுகள் அதிகமிருந்தாலும் பிரிடிஷ் கப்பற்படைகள் ஆதிக்கம் கொண்டிருக்கின்றன. யூ படகுகள் கண்டுபிடிக்கப்பட்டு தாக்கப்பட்டு வருகின்றன. ஞாயிற்றுக்கிழமை முதல் மாட்ரிட் நிருபரின் விவரப்படி இதாலியக் கப்பற் படையுடன் பெரிய சண்டை நடைபெறுகிறது. நவம்பர் 15ௗ ஜினோவா பேரில் பிரிடிஷ் விமானப்படை 1,000 பவுண்டு குண்டுகளைப் போட்டன.

**லிபியா.**—மீதமுள்ள ஜெர்மன் ஆபிரிக்கப் படைகள் ஓடுகின்றன. எதிரி பின்வாங்கி ஓடுவதால் சண்டையே நடக்கவில்லை. அவன் ஓடும்போது பிரிடிஷ் விமானப்படையும் கவசமணிந்த பிரிடிஷ் மோட்டார் படையும் தாக்கி வருகின்றன.

ஒன்றன்பின் ஒன்றாக டொப்ருக், பார்டியா, ஸிவாகஜா, மார்டுபா, முதலியன நமது வசமாகின. எதிரிப்படைகள் ஜெடபாயாவிலுள் புகுந்தன. எல் ஆகிலாவில் ஒருக்கால் அவர்கள் எதிர்த்து நிற்கலாம். சமீபத்தில் கிடைத்த செய்தியின்படி பெங்காஸி விழுந்துவிட்டது.

**ருஷ்யா.**—ஸ்டாலின்கிராட், டுவாப்ஸிக்கு வடகிழக்கு, நால்சிக்கிற்கு தென்கிழக்கு இங்கே சண்டை நடைபெறுகிறது. இந்த முனைகளில் எங்கும் எதிரி முன்னேறவில்லை. ஸ்டாலின்கிராட்டில் தற்போது டாங்கிகளே இல்லை.

**ஸாலமன்ஸ்.**—நவம்பர் 13ௗ நடந்த இரண்டாவது கப்பல் போர் நேசதேசங்களின் வெற்றியுடன் முடிந்தது. இதில் ஜப்பானியருக்கு 23 கப்பல்கள் நஷ்டம். அதில் ஒரு சண்டைக்கப்பலும், 5 க்ரூயிஸர்களும், 5 நாசகாரிகளும், 12 போக்குவரத்துகளும், மேலும் ஒரு யுத்தக் கப்பலும், 6 நாசகாரிகளும் சேர்ந்தன.

**நியூ கினி.**—அமெரிக்கர்களுடன் கூடிய ஆஸ்திரேலியர்கள் ஒவிவி, கோராரி, இலிமோ, வெய்ரோபி முதலியவைகளிலிருந்து விரட்டினர். குமூஸி நதியையும் கடந்தனர். மாக் ஆர்தர் நேரே யுத்தரங்கத்தில் போரை நடத்துகிறார்.

**வடபஸிபிக்.**—நவம்பர் 9 அமெரிக்க விமானங்கள் ஹால்ட்ஸ் குடாவை (Attu Island)யும் கிஸ்காவையும் தாக்கின.

**பர்மா.**—பிரிடிஷ் விமானப்படை அக்யாபில் பலமாகத் தாக்கி பல குண்டுகளை நெடுக வீசின.

நவம்பர் 13ௗ பர்மா கப்பற்படை வாலண்டியர் ரிஸர்வைச் சேர்ந்த இரண்டு மோட்டார் லாஞ்சுகள் 6 ஜப்பானிய விமானங்களாலும் 20 பைடர் விமானங்களாலும் தாக்கப்பட்டன. ஒரு முடிவும் ஏற்படவில்லை. அக்யாப்பிற்கு அருகில் பல பர்மிய கிராமங்களை ஜப்பானியர் எரிக்கின்றனர்.

**சைனா.**—ஸாங்காயை நோக்கி பின்வாங்கும் ஜப்பானியப் படைகள் தாக்கப்பட்டன. அங்கிருந்து குயிடி பயிலி, ஷாயுங் என்ற இடங்களை நோக்கிப் பின்வாங்குகின்றன. டாமோஷான் மலைகளிலிருந்தும் ஜப்பானியர் பின்வாங்கினர்.

**பலவகைப்பட்டவை 1.**—கெய்ஸர் கப்பல் கட்டும் துறையில் நவம்பர் 17ௗ ஒரு கப்பலைக் கட்டினார்கள். அது இரண்டு நாள், 23 மணி, 40 நிமிஷத்தில் முடிக்கப்பட்டது.

2. இதுவரை ஜப்பான் ஆறு விமானமேற்றும் கப்பல்களை இழந்தனர். ருயுகாகு, (பவளக்கடல் மே 7ௗ); மொகாஸா (மிட்வே, ஜுன் 4—6); அகாகி (மிட்வே); ஸோர்யு (மிட்வே); ஹிர்யூ (மிட்வே); ருயுஜியி (ஸாலமன்ஸ் ஆகஸ்டு 24).

3. க்ரோஷியாவில் ஒரு பெரும் கலகம் ஏற்பட்டது.



## சத்துருவினுடையவும், சத்துருவினால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில், பிரிடிஷ், நேசதேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

| தேதி. | லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|
| **9—11—42.** (திங்கட்கிழமை). | | | |
| | **ஐரோப்பா (Europe).** | | |
| | இரவில்.—ராணுவ லக்ஷியங்கள் வடமேற்கு ஜெர்மனி (N. W. Germany) ஹாம்பர்க் (Hamburg) ஜெர்மனியில். | | |
| | **வட ஆபிரிக்கா (North Africa).** | | |
| | அச்சு மோட்டார்களின் கூட்டம்.—ஹால்பாயா (Halfaya), ஸோலூம் (Sollum) கணவாய்களிலும், ஸோலூமுக்கு (எகிப்தில்) மேற்கிலிருக்கும் பள்ளத்தாக்கிலும் பெங்காஸி (Benghazi), டொப்ருக் (Tobruk) (லிபியாவில்), ஸார்டீனியாவிலுள்ள காக்ளியரி (Cagliari), ஆல்ஜியர்ஸ், கஸப்ளான்கா, ஓரான். | | |
| | **ருஷ்யா (Russia).** | | |
| | விமானச் சண்டைகள்.—ருஷ்யப் போர் முனை முழுவதிலும். | | |
| | **தூரக்கிழக்கு (Far East).** | | |
| | கப்பல் துறைகள்.—பர்மாவிலுள்ள ரெங்கூனில் (Rangoon). | | 16 விமானங்கள். |
| | விமான தளம்.—அலூஷியன் தீவுகளிலுள்ள ஹாட்ஸ் விரிகுடா. | | |
| | சாமான் கப்பல்கள்.—அலூஷியன் தீவுகளிலுள்ள கிஸ்கா (Kiska)வில். | | |
| | ஜப்பானியக் கப்பற்படைப் பகுதிகள், போக்குவரத்து.—ஸாலமன்ஸில் கூடால்கனாருக்கு (Gudalcanar) வடக்கே. | | |
| **10—11—42.** (செவ்வாய்க்கிழமை). | | | |
| | **ஐரோப்பா (Europe).** | | |
| | பகலில்.—கப்பல் துறைகள்—லெ ஹாவர் (Le Havre). | | |
| | விமான எதிர்ப்புகள்.—செர்பர்க்கி (Cherbourg)லிருந்து பிரான்ஸிலுள்ள பிகாம்பு (Fecamp) வரையிலும். | | |
| | **வட ஆபிரிக்கா (North Africa).** | | |
| | அச்சு நாடுகளின் மோட்டார் போக்குவரத்து.—பார்டியா (Bardia) ஸோலூம் (Sollum) இவைகளுக்கருகாமையில், | | |
| | டொப்ருக்கி (Tobruk)லுள்ள துறைமுகம்.—எஞ்சியிருந்த ரோமலின் சைனியங்கள் கடற்கரை ரஸ்தா வழியாகப் பின்வாங்குகிறார்கள்; ஓரான் (Oran), கஸப்ளான்கா (Casablanca). | | |

தேதி. | லக்ஷியங்கள். | பிரிட்டிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம்.

**10—11—42.** (செவ்வாய்க்கிழமை)—தொடர்ச்சி.

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகள், விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்.—ருஷ்யப் போர்முனை முழுவதிலும்.

தூரக்கிழக்கு (Far East).

விரோதிக் கப்பல்கள்.—ஆக்கியாபி (Akyab)ல்; நியூ கினியிலுள்ள ஒவிவி (Ovivi), லே (Lae), நியூ கினியிலுள்ள ஸலாமுவா (Salamaua), அலூஷியன் தீவுகளிலுள்ள கிஸ்கா (Kiska). — 2 விமானங்கள்.

**11—11—42.** (புதன்கிழமை).

ஐரோப்பா (Europe).

விரோதிக் கடற்கரைகளில் சுரங்க வெடிகள் போடுவது.

வட ஆபிரிக்கா (North Africa).

துறைமுகம்.—டொப்ருக் (Tobruk)கில், பெங்காஸி (Benghazi).

அச்சு நாடுகளுக்குச் சொந்தமான விமான நிலயம்.—மார்டுபா (Martuba), கஸாபிளான்கா (Casablanca), போன் (Bone).

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகள்.—கிழக்குப்போர் முனை முழுவதிலும்.

தூரக்கிழக்கு (Far East).

விரோதி ஸ்தானம்.—ஸாலமன்ஸிலுள்ள கூடால்கனூர் (Gudalcanar).

விரோதிக்குச் சொந்தமான நாசகாரிகள்.—ஸாலமன்ஸிலுள்ள கூடால்கனூரி (Gudalcanar)ல்.

பாதை.—நியூ கினியிலுள்ள பூனுவுக்குச் செல்கின்ற பாதை.

வெடிமருந்து கிட்டங்கிகள், விமான எதிர்ப்பு பீரங்கிகள்.—நியூ கினியிலுள்ள ஸொபூடா (Soputa) பிரதேசத்தில்.

**12—11—42.** (வியாழக்கிழமை).

ஐரோப்பா (Europe).

யூ படகுகள்.—பிஸ்கே விரிகுடாவில்.

வட ஆபிரிக்கா கப்பல்கள்.—பெங்காஸி, கிரீட்டிலுள்ள காண்டியா (Candia).

விரோதிப் படைகள்.—கஸாலாவுக்கு (Gazala) மேற்கே பின் வாங்குகின்றன.

மோட்டார் போக்குவரத்து.—ஸிரீனி (Cyrene)லிருந்து டெர்னு (Derna) வரையில்.



தேதி. | லக்ஷியங்கள். | பிரிட்டிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம்.

**12—11—42.** (வியாழக்கிழமை)—தொடர்ச்சி.

விமான நிலயம்.—போன் (Bone), டுனிஸ் (Tunis).

அச்சுநாட்டுத் துருப்புகள்.—பிஸர்டா (Bizerta)வுக்கருகாமையில் இறங்கின.

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகள்.—கிழக்குப் போர்முனை முழுவதிலும்,

தூரக்கிழக்கு (Far East).

விரோதிப் படைகள்.—கூடால்கனூருக்கு வடக்கே.

ஜப்பானியப் படைகள்.—வெய்ரோபி (Wairopi)யிலிருந்து பூனு (Buna) வரையிலும், ஸாலமன்ஸிலுள்ள பூயின் (Buin).

**13—11—42.** (வெள்ளிக்கிழமை).

ஐரோப்பா (Europe).

கால்வாயில் செல்லும் படகுகள், ரயில்வண்டிகள், இன்னும் மற்ற லக்ஷியங்கள்.—ஹாலந்திலும், பிரிடனிலும்.

இதாலியிலுள்ள, ஜினோவா (Genoa).

வட ஆபிரிக்கா (North Africa).

கப்பல்கள்.—பெங்காஸி (Benghazi).

விரோதிப் படைகள்.—கஸாலா (Gazala)வுக்கு மேற்குப் பக்கமாக பின்வாங்குகின்றன; எல்அகீலா (El Agheila), டுனிஸ் (Tunis).

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகள்.—ருஷ்யப் போர்முனை எங்கும்.

தூரக்கிழக்கு (Far East).

விரோதிப் படைகள்.—கூடால்கனூர் (Gudalcanar).

விரோதிப் படைகள்.—நியூ கினியிலுள்ள வெய்ரோபி (Wairopi).

விமான நிலயம்.—நியூ கினியிலுள்ள லே (Lae).

**14—11—42.** (சனிக்கிழமை).

ஐரோப்பா (Europe).

ஜெர்மன் நீர்மூழ்கிகள்.—லாபாலீஸ் (Lapallice), ஸென்ட் நாஸேர் (St. Nazair). — நஷ்டமில்லை.

வட ஆபிரிக்கா (North Africa).

கப்பல்கள்.—பெங்காஸி (Benghazi), கடற்கரைப் பிரதேசத்தில் டோக்ராவுக்கு (Tokra)க் கிழக்கே.

| தேதி. | லக்ஷியங்கள். | விரோதி விமான நஷ்டம். | பிரிடிஷ் நேசதேச விமான நஷ்டம். |
|---|---|---|---|

**15—11—42.** (ஞாயிற்றுக்கிழமை).

பிரிடன் (Britain).

அன்று பூராவிலும் விமானத் தாக்குதலில்லை.

ருஷ்யா (Russia).

ருஷ்ய ஸ்தானங்கள்—ஸ்டாலின்கிராடு (Stalingrad).

தூரக்கிழக்கு (Far East).

விமான நிலயம் கூடால்கனர் (Gudalcanar) (ஸாலமன் தீவுகளில்).

**16—11—42.** (திங்கட்கிழமை).

பிரிடன் (Britain).

எங்கும் விமானத்தாக்குதலில்லை.

ருஷ்யா (Russia).

ஸ்டாலின்கிராடு (Stalingrad), துயாப்ஸி (Tuapse).

தூரக்கிழக்கு (Far East).

தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை.

---

# யுத்தக் குறிப்புகள்.

---

**ஜெய பேரிகை.** டன்கர்க் சம்பவத்திற்குப் பிறகு ஸ்காத்லாந்தி லிருந்து டோவர் வரையுள்ள பல மாதா கோவில்கள் எதிரிப் படையெடுப்பால் சேதமடைந்த காரணத்தால் அவைகளில் தினசரி மணிகள் ஒலிக்கப்படவில்லை. அதற்குப் பிற்பட்டு 29 மாதங்கள் கழித்து நவம்பர்மீ 15உ வெற்றி மணிகள் ஒலிக்கப்பட்டன. ஆபிரிக்கப் போர்முனையில் கிடைத்துவரும் வெற்றிக்குக் கடவுளுக்கு வந்தனம் செலுத்தப்பட்டது. இம் மாதிரியான மணிகள் முன்பு ஸ்பெயின் கப்பற்படை (Spanish Armada) தோற்றுப்போனபோதும், வாட்டர்லூ சண்டையில் நெபோலியன் தோற்றுப் போனபோதும் ஒலிக்கப்பட்டன. பிரிடிஷ் தீவுகளின் சரித்திரத்தில் இம்மாதிரி மணிகளின் சப்தத்தில் வெற்றி ஏற்படுமென்ற நம்பிக்கை உண்டாகியிருக்கிறது. நவம்பர்மீ 15உ ஒவ்வொரு கிராமத்திலும், அறுவடை மணிகள், நடவு மணிகள் ஒலிக்கப்பட்டு, பி. பி. ஸி. யிலும் ஒலிபரப்பப்பட்டு இந்தியாவிலும் கேட்கப்பட்டது. புதிய மணிகளையும், பழைய மணிகளையும் ஆகாயம் வரை எதிரொலி ஏற்படும்படிக்கும் உலகில் சந்தோஷம் ஏற்பட்டு கவலை நீங்கும் பொருட்டும், ஆயிரம் வருஷம் சமாதானம் நிலவவேண்டியும் ஒலிக்கவேண்டும்.

வி வி வி வி வி வி வி

**கப்பல் வெற்றி.** நவம்பர் 13-ல் ஸாலமன்ஸுக்கு அருகில் நேச தேசங்கள் பெரும் வெற்றியடைந்தனர். 23 ஜப்பானியக் கப்பல்கள் சேதமாயின. ஒரு சண்டைக் கப்பலும், 3 பெரிய க்ரூயிஸர்களும் 2 சிறிய க்ரூயிஸர்களும் 5 நாசகாரிகளும், 8 போக்குவரத்துக் கப்பல்களும, 4 சாமான் கப்பல்களும் சேதம். மேலும் ஒரு சண்டைக்கப்பலும் 6 நாசகாரிகளும் சேதம்.

கர்னல் நாக்ஸ் சொல்லுவதாவது :—‘இரண்டு தடவைகளில் நேச தேசங்கள் இங்கே வெற்றிபெற்றன.’ இனியும் சண்டைநேரலாம்.’



**விசித்திரக் கதை.** பிரெஞ்சு வட ஆபிரிக்காவில் சமீபத்தில் நடை பெற்றுவரும் அமெரிக்க, பிரிடிஷ் ஆதிக்கம் பழையகால கதைகளை நினைப்பு மூட்டுகிறது. பேர்ல் துறைமுக சம்பவத்திற்கு இரண்டு வாரங்களுக்குப் பிறகு யோசிக்கப்பட்டு இவ்வளவு மாத காலமாக ரகசிய மாக வைக்கப்பட்டிருந்திருக்கிறது.

ஐரோப்பாவில் சண்டை செய்ய ஆபிரிக்கா தான் சரியான தளமென்று ஜனாதிபதி ரூஸ்வெல்டு யோசித்திருக்கிறார். ரகசியமாக இதற்கு ஒரு கோஷ்டி வட ஆபிரிக்காவில் பல மார்க்கங்களில் வந்து இறக்கப்பட்டது. கப்பல்கள், நீர் மூழ்கிகள், விமானங்கள் முதலியவைகளில் வந்தன. இவர்கள் பிரெஞ்சுத் தலைவர் களைத் தனிமையில் ஒரு வீட்டில் கண்டு பேசினார்கள். 500 கப்பல்களும் 350 யுத்தக் கப்பல்களும் இதில் ஈடுபட்டு ஒரு ஆள்கூடச் சேதப்படாமல் படைகள் இறக்கப் பட்டன. எதிரி யூ படகுகளால் ஒன்றும் செய்ய முடியவில்லை. தனக்குத் தீங்கு ஏற்படப்போவதாக மட்டில் ஹிட்லர் எதிர்பார்த்திருக்கலாமே தவிர, எப்போ எங்கே என்று அவனால் காணக்கூடவில்லை. அவனது சகாக்களே அவனை ஏமாற்றி யிருக்கிறார்கள்.

வி வி வி வி வி வி வி

**மண்ணைத் தூவுவது.** எதிரிகளுடைய கண்ணில் மண்ணைத் தூவலா மென்று அச்சு நாட்டினர் பார்க்கின்றனர். சமீபத்தில் ஆபிரிக்காவில் நேசப்படைகள் இறங்கியது ஆக்கிரமணமாம். ஸர்வ தேச ஒப்பந்தத்திற்கு விரோதமாம். ஆனால் அங்கிருக்கும் பிரெஞ்சுக்காரர்களை விடுவிக்க நேசதேசங்கள் முற்படுவது உலகத்தாருக்குத் தெரியும். ஜெர்மானியர் இந்த மூன்று வருஷ காலமாகச் செய்துவந்த கொள்ளையின் கணக்கு எல்லையடங் காது. உதாரணமாக அல்ஸியஸ் லொரேனைப்பிடித்ததும், தற்போது விஷிபிரான் ஸினுள் புகுந்ததையும் வைத்துக்கொள்ளலாம். அதுமாதிரி ஜப்பானும் குற்ற வாளிதான். நடுநிலைச் சட்டங்களை எல்லாம் அதுதான் மீறியது. இந்தோ-சைனு தாய்லாந்து, சைனு முதலியவைகளை வசப்படுத்தியதே போதும்.

வி வி வி வி வி வி வி

**வெள்ளைப்பூச்சு.** சமீபத்தில் வட ஆபிரிக்காவிலும், ருஷ்யா விலும் நடப்பது ஜெர்மானியருக்குப் பிடிக் காதுதான். இப்போதுதான் தோல்வியை ருசி பார்க்க ஆரம்பித்திருக்கின்றனர். அதற்காக ரோமல் வெற்றிகரமாகப் பின்வாங்குவதாயும் நேசதேசங்களுக்கு ஒட்டை டாங்கிதான் கிடைப்பதாயும் ஜெர்மனி சொல்லிக்கொள்ளுகிறது.

இதுவரை 500 டாங்கியும், 700—1,000, பீரங்கிகளும் 75,000 பேர்களும் கைப்பற்றப்பட்டன.

இதுபோல் ஸ்டாலின்கிராட் நிலைமையும் ஜெர்மனிக்குச் சாதகமாம். ஏனென்றால் ருஷ்யரின் யுத்த சக்தி குறைந்து, ரிஸர்வ் படைகளை ருஷ்யர்கள் உபயோகிக்கின்றனராம். இதனால் மாஸ்கோ, லெனின்கிராட் இங்கே சண்டை செய்ய சந்தர்ப்பமே நேராதாம்.

உண்மையாதெனில் ஸ்டாலின்கிராட்டிற்கு முன்பு ஜெர்மானியர் தோன்றி 12 வாரங்களாகிறது. அதைப் பிடிப்பதாக ஹிட்லர் சொல்லி 6 வாரங்களா கின்றன. இப்போது இருப்பதைப் பார்த்தால் நாஸிகள் நகரினுள் புகுருவதே முடியாதாம். அப்படி வந்தால் உயிர் தப்ப முடியாது.

வி வி வி வி வி வி வி

**புதிய யுத்தப் பிரதேசம்.** யுத்தம் நடக்கும் பிரதேசங்களைப் பற்றி நாம் தெரிந்து கொள்ளலாம். பின்னால் தேச சரித்திரத்திலும் இவையாவும் குறிப்பிடப்படும். அமெரிக்கர்கள் இறங்கிய மொ ரோகோ, அல்ஜீரியா, டூனிஸ் இவைகளும் சேர்ந்து ஜெர்ஸீரா—எல்—மக்ரிப் (Djerzira—El—Maghril) அல்லது பூகோள சாஸ்திரிகள் சொல்லும் விதமாக மேற்கிலுள்ள தீவு என்று வழங்கப்பட்டது. பிற்பட்டு அதை பார்பரி கடற்கரைப்

பிரதேசம் என்று வழங்கப்பட்டு வருகிறது. ஆல்ஜீரியாவில் சதாகாலமும் கடற் கொள்ளைக்காரர்கள் கூடுவார்கள். பிரெஞ்சு நிர்வாகி லியாண்டே என்பவரின் பெருத்த முயற்சியால் மொரோகோவில் பல நவீன நகரங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஐரோப்பிய, அமெரிக்க நாடுகளைத் தவிர மற்றபடி இவை மிகவும் நாகரீகம் வாய்ந்தவை. உதாரணமாக கஸாபிளான்காவில் அதிக விசாலமான தெருக்களும், ஆகாயமளாவியிருக்கும் கட்டடங்களும் இருக்கின்றன.

டூனிஸை ஒரு ஸ்திரீயாகவும், ஆல்ஜீரியாவை ஒரு புருஷனாகவும், மொரோகோவை ஒரு சிம்மமாகவும் அராபியர்கள் ஒப்பிட்டுச் சொல்வது வழக்கம். டூனிஸியாவில் ரோமர்கள் அரசாட்சியின் சின்னங்கள் இருக்கின்றன. இதைப்போல் வடமேற்கு ஆபிரிக்காவில் இல்லை. அதன் சீதோஷ்ண நிலையைப் பற்றி வர்ணிக்கையில், 'இதற்குமுன் அங்கு ரோமர்கள் கிழத்தனத்தினால்தான் இறப்பார்களே தவிர மற்றபடி அவர்களுக்குச் சாவு கிடையாது' என்று ஜெனகா என்ற கவி எழுதியிருக்கிறார்.

டூனிஸின் முக்கியத் துறைமுகம் பிஸர்ட்டா (Bizerta). அது லிபியாவின் எல்லைப்புறத்திலிருக்கிறது. அது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்திருக்கிறது. டூனிஸியாவின் அரசன் பிரெஞ்சு அரசாங்கத்திற்கு உட்பட்டவன். அதனால்தான் சமீபத்தில் பிரஸிடெண்டு ரூஸ்வெல்டு டூனிஸியா வழியாக அமெரிக்கத் துருப்புகளை அனுப்புவதற்கு அவனை அனுமதி கேட்டார். பிரெஞ்சு ஆபிரிக்கக் குடியேற்ற நாடுகளில் டூனிஸுடன் மொரோகோ பிணைக்கப்பட்டிருந்தாலும், மொரோகோவிற்குத் தனி அரசர் உண்டு. ஆனால் பிரெஞ்சு அதிகாரி ஒருவருக்குக்கீழ் அவ்வரசர் கட்டுப்பட்டவர். பிரெஞ்சு அந்நிய நாட்டு மந்திரி விதிக்கும் கட்டளைகள்படி அங்குள்ள பிரெஞ்சு அதிகாரி நடத்துவார். ஒரான் உள்பட வட ஆல்ஜீயர்ஸ், கான்ஸ்டண்டைன் இவைகள் பிரான்ஸைச் சேர்ந்த நாடுகளாகவே பாவிக்கப்படுகின்றன. அவைகளின் அரசியல் நிர்வாகத்தை பிரெஞ்சு உள்நாட்டு மந்திரியே நேராடி கவனித்துவருகிறார். மற்ற பிரெஞ்சு பிரதேசங்கள் அதாவது ஆபிரிக்காவில் மேற்கிலும் நிரக்ஷரேகை செல்லுமிடங்களிலும் இருக்கக்கூடிய மடகாஸ்கர் போன்ற நாடுகள் பிரான்ஸின் குடியேற்ற நாடுகள்.

வி வி வி வி வி வி வி

**யுத்தம் நடத்தும் பிரெஞ்சு நாடுகள்.** தேசப் படத்தைப் பார்த்தால், இதாலிய லிபியாவிலிருந்து போர்ச்சுகீஸுக்குச் சொந்தமான மேற்கு ஆபிரிக்கா வரையிலும், அட்லாண்டிக் கடலிலிருந்து நைல் நதிக்கு 400 மைல்களுக்குள்ளேயுமுள்ள விசாலமான பிரதேசம் யுத்தத்தில் ஈடுபட்டிருப்பதாகத் தெரியவரும். இதில் ஐந்து குடியேற்ற நாடுகள், அதாவது காமரூன் (Cameroon), சாட், காபன் (Gabon) மத்தியகாங்கோ பிரதேசம், யுபாங்காஷெரி (Ubanga Sheri) அடங்கியிருக்கின்றன. இவையாவும் 1940-ம் வருஷத்தில் டிகாலியின் தலைமையின் கீழிருப்பதாக ஒப்புக்கொண்டிருக்கின்றன. அதற்கு சற்றுக் கீழே பெல்ஜியத்திற்குச் சொந்தமான காங்கோ பிரதேசம் இருக்கிறது. அது இப்பொழுது நேசதேசத்தார்கள் பக்கமிருந்து சண்டை செய்து வருகிறது.

இனிமேல் நடக்கப்போகும் யுத்த காலத்தில் விஷி வட ஆபிரிக்கா, அமெரிக்காவுடன் சேர்ந்து ஒத்துழைத்தால், லிபியா பூராவும் நேசநாடுகளில் ஒன்றாக வந்துவிடும். இதற்குக் கிழக்கிலும், தென் கிழக்கிலும் எகிப்தும், பிரிடிஷ் ஸூடானும் இருக்கின்றன. அதற்குத் தெற்கே ஆபிரிக்காவில் நிரக்ஷரேகை செல்லுமிடங்களும், பெல்ஜியத்திற்குச் சொந்தமான காங்கோவும் இருக்கின்றன. அதற்கு மேற்கே மொரோகோ, ஆல்ஜீரியா, டூனிஸியாபோன்ற பிரெஞ்சு வட ஆபிரிக்க நாடுகள் இருக்கின்றன. அதன் தென்மேற்கே பிரெஞ்சு வட ஆபிரிக்கா இருக்கிறது. அது இன்னும் விஷி ஆதிக்கத்தின் கீழிருக்கிறது. காம்பியா, ஸீயர்ரா (Sierra) லியோன் (Leone), லிபிரியா (Liberia), தங்கக் கடற்கரை (Gold Coast), அட்லாண்டிக் கடற்கரையிலுள்ள நைஜீரியா இவையாவும் விஸ்தாரமான விஷி பிரதேசத்திற்குத் தெற்கேயிருக்கின்றன.



**ஒரு இரண்டாம் போர்முனை.** "என்னை அதிகமாக ஒருவரும் தொந்தரவு செய்ய முடியாது. ஆனால் உண்மையில் நான்தான் பிறரைத்தொந்தரவு செய்கிறேன்" என்று நவம்பர் 11உ மிஸ்டர் சர்ச்சில் காமன்ஸ் சபையில் சொன்னார். ருஷ்யாவிற்குச் சிரமமேற்பட்டிருப்பது என்னமோ உண்மைதான். அதற்கு அவசியமான உதவியும் கோரப்பட்டதுதான். அந்த உதவியைக் கொடுக்கவேண்டுமென்று பிரதம மந்திரிக்கு இருந்த கவலைமாதிரி வேறொருவருக்கும் இல்லை. ஆனால் இங்கிலீஷ் கால்வாய், வடகடல் மூலமாக இரண்டாம் போர்முனையை ஏற்படுத்துவது உசிதமில்லை. ஏனென்றால் எதிரி படைகளைச்சேகரித்து வைத்திருப்பதோடு, நமக்கும் போதுமான தயாரிப்பு அப்போது இல்லை. அதற்காகச் சர்சில் தானும் யோசித்து ஸடாலினுக்கும் ஒரு உறுதி கூறினார். அதாவது 1942-ல் இரண்டாம் போர்முனையை ஏற்படுத்துவதானாலும் வாக்குறுதி கொடுக்கமுடியாதென்றார். ஏனென்றால் இரண்டாம் போர்முனையை ஏற்படுத்தினால் அதிலிருந்து எதிரியின் நிலைமை முடிவாகத் தீர்மானிக்கப்படவேண்டும். இந்த இரண்டாம் போர்முனைப்பேச்சு நடந்து கொண்டிருக்கும்போதே எதிரி கலேயில் 33 டிவிஷனையும், மூன்றில் ஒருபங்கு பாம்பர் படையையும், பல பைடர் படைகளும் நிறுத்திவைக்க நேர்ந்தது. மேலும் நார்வேயில் 10 டிவிஷனையும், 350 விமானங்களையும் வைத்திருக்கிறான். இவ்விதம் எதிரிப்படைகள் ஓரிடத்திலேயே அடைபட்டிருப்பது நமக்கு ஒரு சாதகம்தான்.

வி வி வி வி வி வி வி

**நல்ல வேட்டை** தான் சொன்னவார்த்தைகளை ஜெனரல் மான்ட்காமரி பூர்த்திசெய்தார். அதாவது ஜெர்மானியரையும் இதாலியரையும் தாக்கினார். அக்டோபர் 23-ம் தேதியிலிருந்து நவம்பர் 11-க்குள் எகிப்திய எல்லையில் ஒரு எதிரிகூட இல்லாதபடி துரத்திவிட்டார். கைதிசெய்யப்பட்டவர்களே இருக்கின்றனர். 300 மைல் கடந்து தோல்கண்ட எதிரிப்படைகள் துவம்சம் செய்யப்பட்டன.

பான்ஸர் சைனியம் 15, 21, 19, 164-வது டிவிஷன்கள்.

இதாலிய 10-வது டிவிஷன், பிரஸ்ஸியா டிவிஷன், பெய்ரா டிவிஷன், பால்கோரி டிவிஷன்.

20-வது இதாலியப்படை, அரியடி கவசப்படை, லிட்டாரியோ டிவிஷன், டிரீஸ்டி டிவிஷன்.

21-வது இதாலியப்படை டிரன்டோ டிவிஷன், போலோக்னு டிவிஷன்.

இவ்வளவும் அழிக்கப்பட்டு 75,000 பேர்கள் கைதிசெய்யப்பட்டனர்.

மான்ட்காமரி தனது படையினருக்கு அறிவித்தபடி ஜெர்மானியர் எகிப்தை விட்டுப்போயினர். இருந்தாலும் சிலர் வட ஆபிரிக்காவில் மீதமிருக்கின்றனர். அவர்களைப்பிடிக்க லிபியாவுக்குள் நாம் செல்லவேண்டும். அவர்களைப் பிடிக்க நீங்கள் முன்னேறுங்கள் என்றார்.

வி வி வி வி வி வி வி

**நான்காவது இந்தியப்படை.** இந்த வெற்றியில் நான்காவது இந்தியப்படை புகழ் கிடைக்கும் விதமாக ஈடுபட்டிருக்கிறது. இதே படைதான் 1940-ல் வேவலுடன்கூட இருந்து புகழ் பெற்றது. அது முதல் ஒவ்வொரு சண்டையிலும் ஆபிரிக்காவில் ஈடுபட்டிருக்கிறது.

வி வி வி வி வி வி வி

**குத்தகைக்கடன்.** எகிப்தில் உபயோகிக்கப்படும் யுத்த சாமான்களில் பாதி குத்தகைக் கடன் மசோதப்படிக்கு கொடுக்கப்பட்டது தான். இவைகளைக்கொண்டு வெற்றிபெற ஹேதுவாக இருக்கிறது. உணவு, துணி, ஆயுதங்கள் முதலியவைகள் அமெரிக்கத் துருப்புகள் இறங்கி இருக்கும் பிரெஞ்சு நாடுகளில் இருப்போருக்கும் கொடுக்கப்படும். ஜனாதிபதி ரூஸ்வெல்டு 'நேசநாடுகள் வியாபித்துக்கொண்டிருக்கும் நாடுகளில் உள்ளோர் வேறு ஜீவனோபாயமில்லாமலோ, பட்டினியால் வருந்தியோ போக மாட்டார்கள். முடிந்தவரை அவர்களுக்குஎல்லா ஸப்ளைகளும் கொடுக்கப்படும். அச்சு நாடுகளைத் தொலைப்பதற்காக இவர்களுக்கு ஆயுதங்களும் கொடுக்ககப்படும்' என்றார்.

நவம்பர் 15ல் ஜனாதிபதி ரூஸ்வெல்டு குறிப்பிட்ட விதமாக அமெரிக்கப் படைகள் யுத்தத்தில் ஈடுபட்டதிலிருந்து நேசநாடுகளுக்கு ஸப்ளை குறையுமென்று அச்சு நாட்டினர் எதிர்பார்க்க வேண்டியதில்லை. கடந்த நான்கு மாதங்களாக அயல் நாட்டுப் படைகளுக்கு ஸப்ளை கொடுத்துவரும்போதே நேசநாடுகளுக்கு 27,130 லக்ஷம் டாலர் பொருமானத்திற்குச் சாமான்கள் அனுப்பப்பட்டுள்ளன. அதில் மூன்றில் இரண்டு பங்கைக்கொண்டு எகிப்தில் யுத்தம் நமக்கு சாதகமாக்கப் பட்டது. ருஷ்யாவில் எதிரி தடையுற்றான். அக்டோபரில் மாத்திரம் 9,150 லக்ஷம் டாலர் பொருமானத்திற்கு சாமான்கள் வந்துள்ளன. ஸெப்டம்பரில் 6,430 லக்ஷம் தான். 1943க்கு அனுப்ப வேண்டியவைகள் தீர்மானிக்கப் பட்டிருப்பதில் இவ்வருஷத்தைக் காட்டிலும் இன்னும் அதிகமாக அனுப்ப முடியுமென்று ரூஸ்வெல்டு எதிர்பார்க்கிறார்.

வி வி வி வி வி வி வி

**டார்லான்.** அமெரிக்க படைத் தலைவர் டார்லானை பிரெஞ்சு வட ஆபிரிக்காவில் தலைவனாக அங்கீகரித்திருப்பதாக பி. பி. ஸி. கூறுகிறது. இதை பிடேன் அங்கீகரிக்கவில்லை. பிடேனை டார்லான் அங்கீகரிக்கவில்லை. இந்த ஏற்பாட்டிற்கும் தனக்கும் சம்பந்தமில்லை என்று டிகால் கூறிவிட்டான். ஆகவே டார்லானுக்கு இருக்கும் நிலைமையைப் பரிசீலனை செய்து பார்க்கவேண்டியதுதான். தற்சமயத்தில் டார்லானை அங்கு அமைதி நிலவ வேண்டி அவனை நேசதேசங்கள் அங்கீகரித்திருக்கின்றன. இது அவசரமாக ஏற்பட்டிருக்கும் ராணுவ சந்தர்ப்பத்திற்கும், அரசாங்க முறைக்கும் ஏற்றதாகும். ஆனால் இதைக்கொண்டு வருங்காலத்தில் ஒரு முடிவும் செய்ய முடியாது. தற்போது ராணுவ ஏற்பாடுகளே அவசியமானவை.

டார்லான் இதற்கு முந்தி நடந்துகொண்டதுதான் இவ்விதமான யோசனைகளை உண்டுபண்ணியிருக்கிறது. லவாலுடன் சேர்ந்த இவன் பிரான்ஸில் விரும்பத் தகாத தலைவனாவான். ஒருவனாவது இவனுக்குச் சாதகமாகப் பேசுகிறவன் கிடையாது. ஹிட்லருடன் உறவு கொண்டாடியும் ஜெர்மனியின் கீழ் இவனுக்கு ஒரு பதவியும் கிடைக்கவில்லை. ரேனுட், மான்டல் இவர்களுடன் கலந்து பிரெஞ்சு அரசாங்கத்தை வட ஆபிரிக்காவிற்குக் கொண்டுவர நினைத்தான். வேறொன்றும் முடியாமல் பிடேன்-லவாலுடன் சேர்ந்துகொண்டான். தற்போது நேசதேசங்களுடன் வட ஆபிரிக்காவில் சேர்ந்துகொண்டிருக்கிறான்.

வி வி வி வி வி வி வி

**Lt. ஜெனரல் ஈஸன்ஹோவர்.** பிரெஞ்சு வட ஆபிரிக்காவில் தலைமைப் பதவியிலிருக்கிறார். இவன் ஜெர்மன் வர்க்கத்தைச்சேர்ந்தவன், 1732-ல் இவனது முன்னோர்கள் ஜெர்மன் மதக்கொலைகளைத் தாங்காது வெளியேறினார்கள். தற்சமயத்தில் வெற்றியுடன் ஜெர்மனிக்குப் போக யத்தனிக்கிறான்.

வி வி வி வி வி வி வி

**ஜெனரல்ஜிராட்.** இவரும் வட ஆபிரிக்காவில் நேசதேசங்களுடன் சேர்ந்திருக்கிறான். சமீப காலம் வரை இவன் ஜெர்மனியில் கைதியாக இருந்தான். இவன் எப்படி தப்பினான் என்று ஒருவருக்கும் தெரியாது. ஆனால் இப்படி அவன் தப்பியது முதல் தடவையல்ல. 1914-ல் ஜெர்மனியில் கைதி செய்யப்பட்டபோது ஹாலந்து வழியாக இங்கிலாந்திற்கு வந்தான். அப்போது ஒரு மாமிச வியாபாரியைப் போலவும், குதிரை காஸ்தாரியைப் போலவும், நிலக்கரி எடுப்பவன் போலவும், மந்திரவாதியைப் போலவும் வேஷம்போட்டு தப்பி ஓடினான். ஜெர்மானியரை அடியோடு வெறுப்பான், டிகாலை விரும்புவான்.

வி வி வி வி வி வி வி

**ஜெனரல் ஜுயின்.** வட ஆபிரிக்காவில் விஷிப் படைக்காரர்களுக்குத் தலைமை வகிக்கிறான். இவனும் டார்லானைப் போன்றவன்தான். இவன் நாஸி ஜெயிலிலிருந்து விடுவிக்கப் பட்டான். வேகாண்டிற்குப் பிறகு பதவி கொடுக்கலாமென்று இவன் அனுப்பப் பட்டான்.



**அட்மிரல் ஸர் ஆன்டிரு கன்னிங்ஹாம்.** பிரஞ்சு வட ஆபிரிக்காவில் இருக்கும் படைகளுக்கு உதவி கொடுக்கும் கப்பல் படைக்குத் தலைமை வகிக்கிறார். வாஷிங்டனில் இருக்கும் பிரிடிஷ் கப்பற்படை கோஷ்டியின் தலைவரின் ஆறுமாதங்களுக்கு முன்பு பதவி பெற்றார். ஈஸன்ஹோவர் இங்கே வந்ததும் இவனும் இங்கே நியமிக்கப்பட்டான். வட ஆபிரிக்காப் போருக்கு போடப்பட்ட யுத்த திட்டத்தில் இதுவும் ஒன்றாகும். கடந்த 4 மாதங்களாக ஒரு நடவடிக்கையும் இல்லாதது தற்சமயம் நடக்கும் போருக்குச் செய்யப்பட்ட ஏற்பாடாகும்.

வி வி வி வி வி வி வி

**தென்இந்தியாவும், ராயல் இந்தியக் கடற்படையும்.** டைம்ஸ் ஆப் இந்தியா பத்திரிகையில் வெளிவந்திருக்கும் கீழ்கண்ட மொழிகளைப் படிக்க நமது வாசகர்கள் சந்தோஷம் கொள்ளுவார்கள்.

"ராயல் இந்தியக் கடற்படையில் இருக்கும் சிறிய படையில் சேர பலர் முன்வந்திருக்கின்றனர். இதில் ஒரு விசேஷமென்னவென்றால் தென் இந்தியாவிலிருந்து வந்திருக்கும் ரெக்ரூட்கள் கடல் வாழ்க்கைக்கு உரிய குணங்களைக் காண்பிப்பது தான் திருப்திகரமான விஷயம். ஏற்கனவேயே சிலருக்குப் பல பதக்கங்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன. க்ஷத்திரிய ஜாதியினர்தான் யுத்த சேவைக்கு லாயக்கென்ற கதையை இந்த யுத்தம் மாற்றிவிட்டது. வட இந்தியாவில் சேர்ந்திருப்போரைப் போலவே தென் இந்திய வாலிபர்களும் நடந்துகொண்டிருக்கிறார்கள்".

வி வி வி வி வி வி வி

**பின்லாந்து.** ஹிட்லரின் புதுத் திட்டத்திற்கு இது இணங்கவில்லையென்று தெரிகிறது. இதுவரை ஜெர்மானியுடன் சேர்ந்திருந்ததற்கான பயனை இது அனுபவித்துவிட்டதுபோல் தெரிகிறது. அதாவது சாமான்களும், மனிதர்களும் கொடுத்திருக்கலாம். அதன் சமூக விஷய இலாகா மந்திரியான M. பாகர்ஹோம் நவம்பர் 16-ல் பின் கண்ட விதமாக அறிவித்திருக்கிறார். 'ஐரோப்பிய புது திட்டத்தை ஆதரிக்கவேண்டி பின்லாந்து போரில் ஈடுபடவில்லை. ஆனால் பின்லாந்தினர் ஜனநாயக ஆசை கொண்டுள்ளனர். வேறு ஆட்சி அதற்குப் பிடிக்காது. பின்லாந்துடன் வேறு நாடுகளை ஜயித்து சேர்த்துக்கொள்ளும் ஆசையும் கிடையாது.

வி வி வி வி வி வி வி

**ரப்பர்.** பழைய பொருள்களை திரும்ப சேகரிக்கும் இலாகா டைரக்டரான ஸர் ஜேம்ஸ் மர்கண்டு என்பவர் ஒவ்வொரு வீட்டிலும் ரப்பரைச் சேகரிக்க வேண்டியதின் அவசியத்தை எடுத்துரைத்தார். ஒவ்வொரு வீட்டிலும் 8 ரப்பர் நாடாவைச் சேகரித்தால் அதைக்கொண்டு 1,000 பாம்பர்களுக்கு டயர்களைச் செய்யலாம். 50 டென்னிஸ் பந்து அல்லது 300 தேயிலை கோப்பை ரப்பர் மூக்கு, இவைகளைக் கொண்டு சிறு கப்பலுக்குத் தேவையான ரப்பர் கிடைக்கும். ஒரு ஜதை வெல்லிங்டன் பூட்ஸிலிருந்து ரப்பரை எடுத்து ராணுவச் செட்டை ஒன்று தயாரிக்கலாம்.

---

## அச்சுநாட்டு வீழ்ச்சிக்கு வழி திறக்கப்பட்டது.

**ஸ்டாலின்—நவம்பர் 14.**

ஆபிரிக்காவில் ஆங்கிலேயர், அமெரிக்கர் நடத்தும் போர், ஐரோப்பாவில் ராணுவ நிலையையும், அரசியல் நிலையையும் நேசதேசங்களுக்குச் சாதகமாக மாற்றிவிட்டது. ஜெர்மன் இதாலிய அச்சு நாட்டு ஒற்றுமையிலிருந்து இதாலியை தனியே பிறிப்பதற்கான ஏற்பாடுமாகிறது.

இந்த ஆபிரிக்கா யுத்தம் நடப்பதற்கு பிரிடிஷ் தலைவர்களும், அமெரிக்கத் தலைவர்களும் தான் காரணம். இதன் பயனாக ருஷ்யப் போர்முனை

யில் ஜெர்மன் தாக்குதல் குறையுமென்றும் நினைக்கிறேன். இந்த யுத்தத்தில் எதிர்பார்த்தபடி ருஷ்யச் ஸைனியம் சண்டை செய்யுமென்றே நான் உறுதி கூறுகிறேன்.

ஆபிரிக்கா யுத்தத்தைப் பார்த்தால் நேசதேசங்களுக்கு முன்னேற்றப் போர் நடத்தும் சக்தி வந்து விட்டதென்றும், ஆங்கிலேய—ருஷ்ய—அமெரிக்க ஒற்றுமை பலப்படுத்துவதற்கான நிலைமை வந்து விட்டதென்றும் தெரிகிறது.

அச்சு நாட்டு அதிகாரம் தான் முன்னேறி இருக்கிறது என்று ஹிட்லரின் கீழிருக்கும் ஜெர்மனி நினைத்து வந்த எண்ணங்களை இந்த யுத்தம் முறித்து ஹிட்லரின் ஸகாக்களை தனித்தனியாக பிறித்துவிட்டன.

பிரான்ஸ் விழித்துக்கொண்டு ஹிட்லருக்கு விரோதமாக பிரெஞ்சுத் துருப்புகளை ஒன்று சேர்க்கும் காலம் வந்துவிட்டது. இதாலி தனியே பிரிக்கப்பட்டு ஹிட்லரின் ஜெர்மனி குலையும் காலமும் வந்துவிட்டது. ஜெர்மனியின் முக்கிய உயிர் நிலைகளுக்கு அருகிலேயே இரண்டாம் போர் முனையை ஏற்படுத்தும் சமயமும் ஏற்பட்டுவிட்டது. அது தான் ஹிட்லரின் கொடிய ஆட்சியை அடக்கி நாம் வெற்றி பெறுவதற்கு முக்கியமானது.

---

## எதிரி செய்த ஆரம்பத் தாக்குதலை நாம் செய்கிறோம்.

*ஜெனரல் ஸ்மட்ஸ்.*

லண்டன், நவம்பர் 13.

யுத்தத்தின் பொதுவான போக்கைப் பார்த்தால் நேசதேசங்களுக்கு சாதகமான மாறுதல் ஏற்பட்டு வருகிறது.

முதல் தடவையாக யுத்தத்தின் வேகம் மாறி எதிரியின் ஆரம்பத்தாக்குதல் சக்தி பிடுங்கப்பட்டு அதை நாம் செய்து வருகிறோம். இந்த நிலையை நீடித்து நாம் செய்வோமென்று நினைக்கிறேன்.

அடுத்த வருஷத்தில் நிச்சமாக நாம் முன்னேற்றப்போர் செய்யப்போகிறோம். நமக்குக் கிடைக்கும் யந்திர உதவி, மனித உதவிக்குத் தக்கவாறு பல இடங்களில் ஏற்படும்.

இனிவரும் காலத்தில் மனித வர்க்கத்தை ஒரு பெரிய குடும்பத்தாரைப் போல் பாவிக்கவேண்டும். அதனால் ஒரு பகுதி மட்டில் தலைமை வகிக்க முயற்சித்தால் இறுதியில் தோல்வியடையவேண்டிவரும்.

ஏற்கனவேயிருக்கும் நல்ல ஸ்தாபனங்களை நாம் கெடுக்கமாட்டோம். உதாரணமாக சர்வ தேச சங்கத்தை மீண்டும் ஸ்தாபிப்போம். அதற்காக அமெரிக்கா, கிரேட் பிரிடன், ருஷ்யா இவைகள் வேண்டிய முயற்சிகளை எடுத்துக் கொள்ளவேண்டும்.

1943-ம் வருஷத்தில் பெரிய தாக்குதல் நேரிடலாம். தகுந்த முறையில் அடுத்த வருஷத்திலும் நாம் முன்னேறித்தாக்கி வருவோமானால், 1914-ம்௵ முதல் 1944-ம்௵ வரை, 30-வருஷத்திய யுத்தத்தை நாம் நடத்தியதாகச் சொல்லலாம்.

1943-ம் வருஷத்தில் எதிரிகளுடன் மும்மரமான யுத்தம் நடைபெறும். அதுவே யுத்த முடிவுக்கும் ஆரம்பமாகயிருக்கும்.

ஸிரெனைகாவில் தற்போதைய நிலைமையைக் கவனித்தால் அந்த தீபகற்பத்தைப் பூராவையும் நாம் கைப்பற்றிக்கொள்ளலாம் என்று உறுதிசொல்லலாம். ஏற்கனவேயே நமது வசத்திலிருந்த இடங்களை இன்னும் கொஞ்ச நாட்களில் மீண்டும் நாம் கைப்பற்றிவிடக்கூடும்.

தெற்கு ஐரோப்பாவுக்குப் போக மத்தியதரைக்கடல் ஒரு மார்க்கமாக இருக்கிறது. அதன் மூலம் நேசநாடுகள் புகுவதற்கும், அச்சுநாடுகளின் முக்கிய ஸ்தானங்களை எதிர்க்கவும் சாதகமாகயிருக்கும்.



இப்பொழுது நமக்கு கடல் மார்க்கம் அதிகமாக இல்லை. வட ஆபிரிக்கா மூலம் ருஷ்யாவுக்கு உதவியனுப்புவதுதான் சிலாக்கியமெனத் தெரிகிறது. அதனால் ஏற்படக்கூடிய பயன்கள் என்னவென்று நாம் தெரிந்துகொள்ளக் கூடும்.

அதனால் ருஷ்யாவை எதிர்த்து நடத்தப்படும் எதிரியின் போராட்டம் சற்று குறைந்து விடும். இதிலிருந்து பல நன்மைகள் ஏற்படலாம். ருஷ்ய நிலைமை முன்பைவிட அதிகமாக முன்னேற்றமடையும். ருஷ்யாவிற்கு இருந்த கடுமையான நெருக்கடி இனி தளர்ந்து விடும்.

மேற்கு ஐரோப்பாவில் நாம் நடவடிக்கை எடுத்துக்கொள்ள முயற்சிக்கலாம். ஆனால் அவை பொருத்தமாக இராது. அதனால் வட ஆபிரிக்காவில் பக்க வாட்டில் தாக்குதல் நடத்துவதில் ருஷ்யாவிற்கு பெருத்த உதவியளிப்பதற்கு முடிகிறது.

மேலும் மத்தியதரைக்கடல் மார்க்கம் நமக்கு ஏற்பட்டுவிட்டால் தூரக் கிழக்கில் நடக்கும் யுத்தம் அதிகமாக பாதிப்படையலாம். இதன் மூலம் பர்மாவை மீண்டும் கைப்பற்றுவதற்கும், இந்தியாவை ஜப்பானியர்கள் அடிக்கடி பயமுறுத்தாமலிருப்பதற்கும் ஹேதுவாக இருக்கும். மேலும் சைனாவுக்கும் நாம் உதவிகள் அனுப்பக்கூடும்.

---

## அச்சுநாட்டு விழ்ச்சிக்கு முன் ஏற்பாடு.

*ஜனாதிபதி பீனஸ்.*

லண்டன், நவம்பர் 13.

இந்த யுத்தம் மூன்றாவது கட்டத்தை அடைந்திருக்கிறதென்பது எனது கருத்து. இதுவே கடைசி கட்டமாக இருக்கும்.

ருஷ்யாவை ஜெர்மனி படையெடுத்தபோது முதல் கட்டம் முடிந்தது. அது முதல் இதுவரையிருந்தது இரண்டாம் கட்டமாகும்.

வெகு சீக்கிரத்திலேயே ஐரோப்பாவின் மேற்கே இரண்டாம் போர்முனை ஏற்பட்டு, பெரிய விமானப்போர் உண்டாகும். பிரான்ஸிலும், ஆக்கிரமித்த நாடுகளிலும் புதிய நெருக்கடியான சம்பவங்களும் உண்டாக்கி முடிவில் ஜெர்மனியும் இதாலியும் தோற்கடிக்கப்படும்.

---

## ஜெர்மன் திட்டங்களை குலைத்தது எது? ஸ்டாலின்கிராட்.

*மெயிஸ்கி.*

லண்டன், நவம்பர் 14.

கடந்த ஆறுவாரங்களுக்குள் தான் சரண் அடையப்போவதில்லையென ஹிட்லர் இரண்டு தடவை கூறியிருக்கிறார். ஏன் அவன் அவ்வாறு சொல்லிக் கொள்ளவேண்டும். ஜெர்மன் அரசாங்கத்தில் ஏதோ கெடுதல் ஏற்பட்டிருக்க வேண்டும். தமது இறுதி கதியைப்பற்றி அச்சமேற்பட்டிருக்கவேண்டும்.

1942-ல் கிழக்குப் போர்முனையில் அவன் அடைந்த தோல்விதான் இவ்வாறான தோற்றங்களை உண்டாக்கியிருக்கவேண்டும். சமீபத்தில் சென்ற கோடை காலத்தில் ருஷ்யா தோற்று இருந்தால் இப்போது நிலைமை என்னவாகியிருக்கும்? ஆபிரிக்காவில் கிழக்கிலும், மேற்கிலும் அமெரிக்க, பிரிடிஷ் துருப்புகளுக்குப் பதிலாக ஜெர்மானியரே படைகளை இறக்கி இருப்பார்கள். பிரிடனையும், இந்தியாவையும் தாக்க ஏராளமான எதிரிப்படைகள் திரட்டப்பட்டு இருக்கும். ஆகவே ஜெர்மன் திட்டங்களைக் குலைத்தது எது? ஸ்டாலின்கிராட்டுதான் என்று நான் சொல்லுவேன்.

## எகிப்திற்குள்ள ஆபத்து தவிர்க்கப்பட்டது.

**நஹஸ் பாஷா.**

கெய்ரோ.

ஜனநாயகங்களுக்கு வெற்றி சமீபித்துக் கொண்டிருப்பதற்கு சந்தேகம் இல்லை. அச்சுநாட்டுப் படைகள் எகிப்திலிருந்து துரத்தப்பட்டு லிபியாவிலும் விரட்டியடிக்கப்படுகின்றன.

ஆகவே நமது நாட்டிற்கிருந்த ஆபத்து நீங்கிவிட்டது. எகிப்துக்கும், நேசநாடுகளுக்கும் ஏற்பட்டிருந்த கவலை நீங்கியதால் அவைகளுக்கு பரஸ்பரம் நட்பும் நம்பிக்கையும் உறுதிப்படும்.

---

## அராபியர்களுக்கு இருந்த அச்சுநாட்டு பயம் நீங்கியது.

**இராக் பிரதமந்திரி நூரியஸ்ஸயத்— பாக்தாத் நவம்பர் 12.**

“வட ஆபிரிக்காவிலிருக்கும் அராபியர்களும், பிரான்ஸிலும், வட ஆபிரிக்காவிலும் இருக்கிற பிரெஞ்சுமக்களும், இதுவரை உத்தியோக முறையில் நேசதேசத்தார்களுக்கு எதிராக நடத்திவந்த உத்தியோகஸ்தர்களும் நேசதேச சைனியங்கள் வட ஆபிரிக்காவில் வந்திறங்குவதை மனப்பூர்வமாக வரவேற்கவேண்டும்.’ அராபியர்கள் சம்பந்தப்பட்டமட்டில் அவர்கள் வந்திறங்கியதில் அச்சுநாட்டுத் தொல்லை அடியோடு ஒழிந்துவிட்டது.

பிரான்ஸ் வீழ்வதற்கு முன் வட ஆபிரிக்காவிலிருந்து வரும் அராபியருக்கு ஏஜெண்டுகள் மூலமும், ஒலிபரப்புகளின் மூலமும் இதாலியும், ஜெர்மனியும் வேண்டிய வாக்குறுதிகளை அளித்தன. பிரான்ஸ் வீழ்ந்தது முதல் அச்சு நாடுகள் அராபியரை அடியோடு மறந்துவிட்டன. மேலும் அவர்களில் பலரை ஜெர்மன் ராணுவத்தில் சேர்ப்பதற்குத்தான் அக்கரை எடுத்துக் கொண்டிருக்கின்றன. அச்சு நாட்டினரின் சூழ்ச்சி அராபியருக்குத் தெரியாததல்ல. அதனால் அங்குள்ள அராபியரும், பிரெஞ்சுக்காரர்களும் 100-க்கு 100 சதவிகிதம் நேசநாடுகளின் சார்பில் இருக்கிறார்கள் என்று நான் திண்ணமாகச் சொல்வேன்”.

---

## இதாலியின் விடுதலை ஆரம்பமாயிற்று.

**அமெரிக்க உதவி மந்திரி அடால்ப் A. பேர்லி இதாலிக்குச் செய்தவேண்டுகோள். —நியூ யார்க், நவம்பர் 14.**

இதாலிய பாஸிஸ்ட் கட்சித் தலைவர்கள், தங்கள் நாட்டிற்கு துரோகமாக நடந்துகொண்டு உங்களை ஜெர்மனியருக்கு விற்று, கூலிச்சிப்பாய்களாக ஆக்கி, ஹிட்லருக்காகப் புரியப்படும் சண்டைகளில் ஈடுபடும்படி செய்துவிட்டனர்.

உலகில் எல்லா கொடிய கொள்கைகளும் முடிவில் அழிவதுபோல் இதாலியில் பாஸிஸ்டு கட்சியின் ஆதிக்கம் அழிய ஆரம்பித்துவிட்டது. ஐரோப்பாவில் ஏகாதிபத்திய ஆட்சி முதலில் மத்தியதரைக்கடல் நாடுகளிலிருந்துதான் கிளம்பியது. அதைப்போல் ஸ்வதந்திரமும் அங்கிருந்தே பரவ ஆரம்பித்திருக்கிறது. இதாலியின் கடற்கரைக்கு வெகு அருகில் நேசநாட்டுத் துருப்புகள் வந்துவிட்டன. ஜெனரல் ஐஸன்ஹோவரின் படைகளை இதாலியின் விடுதலைக்கு வந்தவைகளென்றே சொல்லவேண்டும்.

இதாலிய மக்களை அழிக்க எந்த அமெரிக்கனும் விரும்பவில்லை. பாஸிஸ்ட் கொள்ளைக்கூட்டதாரிடமிருந்து இதாலி விடுவிக்கப்பட்டு உலகின் முன்பு தலைதூக்கி நின்றால்தான் நேசநாடுகள் மேற்கொண்ட ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டதாகும்.



இதனால் தண்டனையை விதிக்க முற்படப்பட்டதென்று எண்ணிவிடக்கூடாது. நியாயத்தை நிலைநாட்டுவதுதான் இதன் நோக்கம். பழிவாங்கும் சிந்தனையல்ல. ஆகவே இதாலிய மக்களின் வரும்காலம் இதாலியர்களின் கையிலேயே இருக்கிறது. இருபது வருஷகாலமாக ஸ்வதந்திர இதாலியின் வாய் அடைபட்டுக் கிடக்கிறது. கொலை, பயம், பஞ்சம் முதலியவைகளை விளைவித்திருக்கும் பாஸிஸ்டு கட்சியின் கொள்கைகளை இதாலிய மக்கள் எதிர்த்து நிற்பதற்கு அத்தாக்ஷியாக தங்களுடைய அழிவிற்கு காரணமாக இருக்கும் துரோகிகளையும், அயலார்களையும் நாட்டை விட்டுத் துரத்தவேண்டும்.

---

## மால்டா யுத்தத்தின் நான்காம் கட்டம்.

---

**எதிரி நாட்டில் படையெடுத்து அவர்களை முறியடிப்போம்.**

**விமான உதவி—மார்ஷல் டீத் ராட்னிபார்க்.**

வாலெட்டா நவம்பர் 13.

பிரிடன்மேல் நடந்த விமானப்போர் 5 மாத காலம் நடந்தது. அந்தப் போரின் ஏகதேசத்திற்குச் சமமான மால்டா யுத்தத்தின் நான்காவது கட்டம் 7 தினங்களில் வெற்றி கிடைத்தது.

இனி ஏற்படப்போகும் நேசதேசத் தாக்குதலைப் பயன்படுத்திக்கொண்டு எதிரி நாட்டிலேயே நாம் தாக்குதலைச் செய்து அவனைச் சின்னா பின்னமாக்குவோம்.

அடுத்த வருஷத்திற்குள் ஜெர்மனி நிச்சயம் தோற்கடிக்கப்படும். அதன் பிறகு ஜப்பானும்தான் தோல்வி பெறும்.

---

## போரில் இறந்தவர்களின் ஞாபக தினம்.

**(பிரஸிடென்டு ரூஸ்வெல்டு சமாதான தினக் கொண்டாட்டத்தன்று வாஷிங்டனிலிருந்து, நவம்பர் 11-ல் பேசியது).**

இன்று சமாதான தினக் கொண்டாட்டமாகையால் நாம் முதலாவது உலக யுத்தத்தைப்பற்றிச் சிந்திக்கிறோம். ஆனால் இந்த வருஷத்தில் நாம் நடப்பு யுத்தத்தைப் பற்றியும் அதிகமாகச் சிந்திக்க வேண்டியிருக்கிறது. வரும் காலத்தில் நமக்குப் பல நன்மைகள் ஏற்படுமென்ற நம்பிக்கை நமக்கு இருந்து வருகிறது.

இன்று அமெரிக்கர்களும் பிரிட்டிஷ் சகோதரர்களும் தோளுடன் தோள் சேர்ந்து பிரெஞ்சு நாட்டில் சண்டையிடுகின்றனர். 1918-ம் வருஷத்தில் ஜெர்மனியிலிருந்த அநாகரீகமும், கொடுமையையும் காட்டிலும் நூறு மடங்கு அதிகமாகக் காட்டிவரும் ஜெர்மன் ராணுவத்தை எதிர்த்து நிற்கிறார்கள்.

இப்பொழுது நாஸிகளும் அவர்களது கூட்டாளியான ஜப்பானியர்களும் ஒன்று சேர்ந்து இவ்வுலகத்தையே கைப்பற்ற எத்தனிக்கிறார்கள். சமீபத்தில் கொஞ்ச காலமாக அவர்களின் பிரயத்தனங்கள் வெற்றி பெறுவதுபோல் காணப்பட்டன. பல பெரிய பிரதேசங்களை இதுவரை அவர்கள் கைப்பற்றியும் அதிலுள்ளோரைக் கைதியாக்கியும், கொன்றுமிருக்கின்றனர்.

ஆனால் இப்பொழுது இவர்கள் ஸ்திரமாகக் கைப்பற்றியது ஒன்றுமில்லை என்றே சொல்லலாம். அவர்கள் இறுதியில் தோல்விதான் அடைவார்கள் என்பது தான் நிச்சயம். பிரிடன், ருஷ்யா, சைனா, அமெரிக்கா முதலிய நேசதேசங்களின் படைகள் எதிரிகள் ஆக்கிரமித்த பிரதேசங்களை விடுவிக்க அதிக பலம் பெற்று முன்னேறி வருகின்றன.

# கப்பல் எடை.

5,000 டன் எடையுள்ள ஒரு ஸப்ளைக் கப்பல் மூழ்கடிக்கப்பட்டதென்று ரேடியோ மூலமாகவோ, பத்திரிகைகளைப் பார்த்தோ கேள்விப்பட்டதும் 5,000 டன் எடையென்பது எதைக் குறிக்கிறது என்று வெகு சிலருக்கே தெரியும்.

முதல் முதலில் பிரான்ஸில் சாராயம் ஏற்றிச் செல்லும்போது கப்பலில் ஏற்றக்கூடிய சாராயத்தின் எடையை (tonage) என்று சொல்லிவந்தனர். அப்போது ஒரு டன் என்பது 100 கன அடியாகும். வர்த்தகக் கப்பல்கள் சம்பந்தப்பட்டவரையில் எடை பரிமாணத்திற்கும் டன் எடைக்கும் ஒரு சம்பந்தமும் இல்லை.

மொத்தத்தில் 5,000 டன் எடைகொண்ட கப்பல் மூழ்கடிக்கப்பட்டதென்றால் கப்பலின் எடைதான் குறிக்கப்படும். அது கிட்டத்தட்ட ஒரு டன்னுக்கு 100 கன அடி விஸ்தாரமாகும். அதில் ஏற்றப்பட்டிருக்கும் இதர சாமான்களின் எடைக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை. அதைப்பற்றி பிரஸ்தாபிக்கும்போது 20 அந்தர் ஒரு டன் என்ற கணக்கைத் தான் வைத்துக் கொள்ளவேண்டும். (சுமார் 35 கன அடி பரப்பாகும்) அதாவது அதில் ஏற்றப்பட்டிருக்கும் சாமான், தண்ணீர், ஸ்டோர் நிலக்கரி, எண்ணெய் முதலியன.

கப்பல் இலாகா அறிக்கைகள் கப்பலின் மொத்த (gross) எடைக்குப் பதிலாக சாமான் கப்பல்களில் ஏற்றப்பட்டிருக்கும் சாமான்களின் எடையைத் தெரிவித்தால் அப்போதுதான் பொது ஜனங்களுக்கு வியக்தமாகத் தெரியும்.

---

# சண்டையினால் இறந்த பொதுமக்களின் ஞாபகார்த்தமாக பிரிடிஷ் அரசாங்க யுத்தக் கல்லறை கோஷ்டியால் தயாரிக்கப்பட்டுவரும் தஸ்தாவேஜுகள்.

---

## பொதுமக்களுக்கு ஒரு வேண்டுகோள்.

இந்தியாவில் எதிரியின் தாக்குதலினால் இறந்த பொதுமக்களின் பெயர்களை யுத்தக் கல்லறை கோஷ்டி சேகரித்து வருகிறது.

சென்ற மகாயுத்தத்தின்போது பிரிடனில் ஸ்தாபிக்கப்பட்ட இந்த கோஷ்டியானது உயிரை இழந்த பிரிடிஷ் படையினரின் விவரங்களைச் சேகரித்து வந்தது. முக்கியமாக அவர்களில் பெரும்பான்மையோர் அயல் நாடுகளில் இறந்தவர்களேயாவார்கள். அதன் உதவியால் 20 வருஷத்திற்கு மேற்பட்ட காலமாக அவர்களின் பெயர்கள் ஞாபகத்தில் வைத்துக்கொண்டிருக்க முடிந்தது. தற்காலத்திய யுத்தத்தில் பொதுமக்களும் எதிரிகளின் வெடிகுண்டுகளுக்கிரையாகின்றனர். ஆகையால் பொதுமக்களின் பெயர்களையும், போரில் ஈடுபட்டு உயிர் துறந்தவர்களின் பெயர்களுடன் சேர்த்து ஞாபகார்த்தமாக எழுதிவைத்துக் கொள்வதற்கும் அக்கோஷ்டியாருக்கும் புதிதாகக் கடமை ஏற்பட்டிருக்கிறது.

மாட்சிமை தங்கிய சக்ரவர்த்தியின் பாதுகாப்பிலும், அதிகாரத்திற்குட்பட்டும் மேல்பார்வையில் இருந்து வரும் நாடுகளிலும் இருப்போர் உலகின்பல பாகங்களில் நடக்கும் யுத்தத்தில் காயம்பட்டோ, இறந்தோ போனவர்களைக் குறித்து கணக்கெடுத்துக்கொள்ளும் வேலையும் இந்த கோஷ்டியைப் பொருத்திருக்கிறது.



பிரிடிஷ் இந்தியாவிலோ அல்லது இந்திய சுதேச ஸமஸ்தானங்களிலோ வசிக்கும் இந்தியாவிலுள்ள எல்லாவிதமான பிரிடிஷ் ஸிவிலியன் உத்தியோகஸ்தர்கள், பிரிடிஷ் இந்தியர்கள், இந்தியர்கள், இவர்களைக் குறித்தும், இந்தியாவுக்கு வெளியே அயல் நாடுகளில் வசிக்கும் பிரிடிஷ் இந்தியர்கள், இவர்களைக் குறித்தும் இந்த கோஷ்டி விவரங்களைச் சேகரிக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிறது.

## அடியிற்கண்ட விவரங்கள் குறிக்கப்படும்.

(1) பெயர்; (2) நிரந்தரமாய் வசிக்கும் வீட்டு விலாசமும், ஜாதி, மதம், வகுப்பும்; (3) படிப்பு பட்டங்கள், இதர அந்தஸ்தும், கௌரவமும்; (4) (ஸிவிலியன் தற்காப்பு சேவையிலுள்ள மெம்பர்களாய் இருந்தால்) சேவையின் வகுப்பு, நம்பர், அந்தஸ்து; (5) ஸ்திரீ அல்லது புருஷன்; (6) வயது; (7) மகன் அல்லது மகள், கணவன் அல்லது மனைவி இவர்களின் பெயரும், விலாசமும் தேவையானால் குடும்ப விவரங்களும்; (8) இன்ன தேசத்தவர்; (8) இறந்த தேதியும், இடமும்; (10) எதனால் இறந்தாரோ அது ஏற்பட்ட தேதி; (11) விபத்து ஏற்பட்ட இடம்; (12) புதைத்த இடம் அல்லது எரித்த இடம்; (13) தேவையானால் இன்னும் இதர விவரங்களும்.

## பொதுமக்களுக்கு ஒரு வேண்டுகோள்.

இந்தியப் பொதுமக்கள் இந்திய அரசாங்கத்தின் கீழுள்ள அயல்நாடுகளில் யுத்தத்தில் ஏற்பட்ட காயங்களினால் ஏற்கனவே இறந்தோ அல்லது இறக்கக் கூடியவர்களாகவோ இருந்தால் அவர்களைக் குறித்த விவரங்களைத் தெரிவிக்க பொதுமக்களும் ஒத்துழைக்கவேணுமாய் வேண்டிக்கொள்ளப்படுகிறது. உதாரணமாக பர்மாவில் யுத்தத்தில் நேர்ந்த காயங்களினால் இறந்த இந்தியப் பொதுமக்களைக் குறித்து இப்பொழுது இந்தியாவில் வசித்துவரும் ஜனங்களுக்குத் தெரிந்திருக்கக்கூடுமாதலால் அவர்களைப்பற்றிய விவரங்களை தெரிவிக்கலாம்.

இந்திய அரசாங்கத்தின் கீழிருக்கும் அயல்நாட்டுப் பிரதேசங்களில் யுத்தத்தில் நேர்ந்த காயங்களினால் நிச்சயமாகக் கொல்லப்பட்டதாகவோ, இறந்ததாகவோ தெரியவரும் பிரிடிஷ் இந்தியர்கள் அல்லது இந்தியர்கள் இவர்களை அறிந்தவர்கள் ஆங்காங்குள்ள அதிகாரிகளுக்குத் தெரிவித்து, தேவையான சமாசாரத்தைப் பதிவு செய்து, ஸிவில் டிபன்ஸ் இலாகா (Civil Defence Department) மூலமாகவும், லண்டனிலிருக்கும் இந்திய ஹை கமிஷனர் மூலமாகவும் பிரிடிஷ் யுத்தக் கல்லறை கோஷ்டிக்குப் போய்ச் சேரும்படி செய்யவேண்டியது.

---

## 'வி' டயரி-1943.

(குறிப்பு புஸ்தகம்).

லினன் ரூ. 1—4—0; லீப்ஸ்கின் ரூ. 1—8—0;
மொராக்கோ ரூ. 2—0—0.

லாபம் யுத்தநிதிக்குச் சேர்க்கப்படும்.

கீழ்கண்ட விலாசத்திலிருந்து வாங்கிக்கொள்ளலாம்.—

காரியதரிசி,
தேசிய யுத்த முன்னணி நிலையம்,
புதுக்கோட்டை (தென் இந்தியா).


## பிரஸங்க நிகழ்ச்சி முறை.

### பிரஸங்கம் 122.

| | | | |
|---|---|---|---|
| 22-11-42 | முனிஸிபல் ஆபீஸ் ... மாலை 7.45 | 25-11-42 | ராணி பெண் பாடசாலை. காலை 10.15 |
| ,, | ஆலங்குடி ... ,, 7.00 | ,, | காலேஜ் A & B ... ,, 10.15 |
| ,, | வடகாடு ... ,, 7.30 | ,, | ராமச்சந்திரபுரம் ... மாலை 7.00 |
| 23-11-42 | அன்னவாசல் ... ,, 7.00 | ,, | ராயவரம் ... ,, 7.30 |
| ,, | கீழக்குறிச்சி ... ,, 7.30 | 26-11-42 | மழையூர் ... ,, 7.00 |
| 24-11-42 | குழிபிறை ... ,, 7.00 | ,, | கரம்பக்குடி ... ,, 7.30 |
| ,, | சுந்தரம் ... ,, 7.30 | 27-11-42 | வாராப்பூர்மாணிக்கம் ... ,, 7.00 |
| 25-11-42 | C. S. M. பள்ளிக் கூடம். காலை 10.00 | ,, | எம்பல் ... ,, 7.30 |

### பிரஸங்கம் 123.

| | | | |
|---|---|---|---|
| 14-11-42 | முனிஸிபல் ஆபீஸ் ... மாலை 7.45 | 2-12-42 | ராணி பெண் பாடசாலை. காலை 10.15 |
| 29-11-42 | கீரப்பழனி ... ,, 7.00 | ,, | காலேஜ் A & B ... ,, 10.15 |
| ,, | ஆவூர் ... ,, 7.30 | ,, | கொன்னையூர் ... மாலை 7.00 |
| 30-11-42 | காரையூர் ... ,, 7.00 | ,, | மேலவேகுப்பட்டி. ,, 7.30 |
| ,, | கீழத்தானியம் ... ,, 7.30 | 3-12-42 | வடவாளம் ... ,, 7.00 |
| 1-12-42 | அண்டக்குளம் ... ,, 7.00 | ,, | செம்மட்டிவிடுதி ... ,, 7.30 |
| ,, | இன்னாநூர் ... ,, 7.30 | 4-12-42 | நார்த்தாமலை ... ,, 7.00 |
| 2-12-42 | C. S. M. பள்ளிக் கூடம். காலை 10.00 | ,, | உப்பிலியக்குடி ... ,, 7.30 |

### யுத்தத்திற்கு ஆள் சேர்த்தல்—விளம்பரம்—மாலை 4-மணி.

| | | | |
|---|---|---|---|
| 21—11—42 | வெட்டன்விடுதி. | 28—11—42 | பொன்னமராவதி. |
| 22—11—42 | எம்பல். | 29—11—42 | தீத்தான்விடுதி. |
| 23—11—42 | முள்ளங்குறிச்சி. | 30—11—42 | கொன்னையூர். |
| 24—11—42 | ராமச்சந்திரபுரம். | 1—12—42 | குடுமியாமலை. |
| 25—11—42 | ராயவரம். | 2—12—42 | கீரனூர் புதுப்பட்டி. |
| 26—11—42 | குழிபிறை. | 3—12—42 | ஆலங்குடி. |
| 27—11—42 | புதுக்கோட்டை. | 4—12—42 | பாப்பாபட்டி. |

Sri Brihadamba State Press, Pudukkottai. 2,000—23-11-42.

# புதுக்கோட்டை ஸமஸ்தான
# தேசிய யுத்த முன்னணி நிலையம்.

பிரசுரம்] 1942-ம் ௵ நவம்பர் ௴ 28௳ [ந. 123

பிரஸங்கம் CXXIII.

## மத்தியதரைக்கடல்.

### பிரிடிஷ் 8-ம் படையும், அமெரிக்கர்களும், வெற்றி கொண்டு வருமுடியும்.

(சார்லஸ் P. ஹார்டு Illustrated Weekly of India-வில் எழுதியது).

மத்தியதரைக்கடல் இன்ன நாட்டுக்குத்தான் சொந்தமானது என்று சொல்ல முடியாததால், இந்த யுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் எல்லாக் கட்சிகளுக்கும் அது ஒரு கேந்திர ஸ்தானமாக இருக்கிறது. இக்கடல் வடகடலைப் போல் ஆறு மடங்கு பெரிதுள்ளது. ஆகவே புயல் அடர்ந்த இக்கடலைக் கடந்து வெகுதூரம் செல்வது மிகவும் சிரமம். இவ்வளவு சிரமம் இதில் இருப்பதாக எளிதில் அறிந்துகொள்ளப் படுவதில்லை. ஜிப்ரால்டரிலிருந்து இங்கிலாந்திற்கு உள்ள தூரம் ஜிப்ரால்டருக்கும் மால்டாவிற்கும் இருக்கிறது. அதே விதமான தூரம் மால்டாவிலிருந்து போர்டு ஸெட்டுக்கும் இருக்கிறது. இந்த மார்க்கங்களில் நேசுக இரு திறப்பாளர்களுக்கும் சொந்தமான துறைமுகங்கள் இருக்கின்றன.

ஜிப்ரால்டர் ஜலசந்தியின் அகலம் 14 மைல். அங்கே போதுமான விமான தளங்கள் இல்லை. குறுகிய ஸிஸிலி கால்வாயில் இதாலிய தளமான பான்டிலா ரியோ இருக்கிறது. ஸிஸிலியிலிருந்து பான்டிலாரியோ 62 மைல் தூரம் இருக்கிறது. ஸிஸிலியிலிருந்து டூனிஸ் பக்கம் கடல் மார்க்கம் 40 மைல் தூரம் இருக்கிறது. மால்டாவிற்கும் பான்டிலாரியோவிற்கும் 125 மைலிருப்பதில் மால்டாதான் ஸிஸிலிக்குச் சமீபத்தில் இருக்கிறது. கிரீட்டிற்கும், லிபியா கடற்கரைக்கும் கடல் மார்க்கம் 180 மைலிருக்கிறது. இவ்வளவில் ஸைப்ரஸ் தான் கொஞ்சம் பத்திரமான நிலையில் இருக்கிறது. ஏனென்றால் இது டோடகானீஸிலிருந்தும், கிரீட்டிலிருந்தும் 300 மைல் தூரத்தில் இருக்கிறது.

### நிலைமை மாறியது.

இவ்விதம் நிர்ப்பந்தங்கள் பல இருக்கும் இப்பிரதேசத்தில் இரு திறப்பார்களுக்கும் சிரமம் இருக்கிறது. முன்பு பிரான்ஸ் விழும்வரை மத்தியதரைக்கடலில் நேசதேசங்களின் கடலாதிக்கம் வலுப்பெற்றே இருந்தது. இதாலியின் நடுநிலைமையும் காக்கப்பட்டது. வடஆபிரிக்காவிலுள்ள இதாலிய நாடுகள் இதாலியுடன் அதிக சம்பந்தம் வைத்துக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் இருந்ததால் அந்தக் காலத்தில் பிரிடன் பொருளாதார முற்றுகையை ஏற்படுத்தியிருந்தால் இதாலிய நாடுகளால் ஆபிரிக்காவில் சமாளித்திருக்கமுடியாது.

ஆனால் நேசதேசக் கப்பல்கள் மற்றபாகங்களில் தாராளமாக சஞ்சரித்து வந்தபோதிலும் மத்தியதரைக்கடலிலும் நடமாட்டம் செய்து வந்தன. பிரான்ஸ்

விழுந்ததும் மத்தியதரைக்கடலில் நேசநாடுகளுக்குச் சிரமம் ஏற்பட்டது. அந்த தேதி முதல் மால்டாவிற்குச் செல்லும் ஸப்ளைகள் தான் அதிக சிரமத்துடன் சென்று கொண்டிருந்தன. இதைத்தவிர மற்ற நேசதேசத் துணைக்கப்பல் கூட்டமும், லிபியாவிற்குச் செல்லும் ஸப்ளைகளும் நன்னம்பிக்கை முனையைச் சுற்றிக் கொண்டுதான் சென்றன. இதனால் 14 வாரங்கள் அதிகம் பிரயாணம் செய்ய வேண்டியதாயிற்று.

பிரான்ஸின் வீழ்ச்சி இதாலிக்கு ஒரு விதத்தில் வழியையுண்டாக்கியது. இருந்தாலும் அது மிக சிரமத்திற்குள்ளாக வேண்டியதாயிற்று. வடமேற்கில் பிரின்டிஸியும், தென்கிழக்கில் டொப்ருக்கும், தென்மேற்கில் ட்ரிபோலியும், வடகிழக்கில் ரோட்ஸும், டோடகானீஸும் இதாலி வசத்தில் இருந்தாலும் போக்குவரத்திற்கு அதிக நிர்ப்பந்தங்களிருந்தன. ட்ரிபோலியிலிருந்து, டொப்ருக்கிற்கு தரை மார்க்கம் அதிக தூரமானது. தண்ணீரும் கிடைக்காது. கடல் மார்க்கம் சாவதானமில்லாதது. இயற்கைத் தடைகளுடன் பிரிட்டிஷ் விமானப்படை கப்பல்களின் தாக்குதலுக்கும் உள்ளாக வேண்டியிருந்தது.

ரோட்ஸை ஸைப்ரஸிலிருந்து விமான மூலம் தாக்கமுடியும். ரோட்ஸையும் டோடகானீஸையும் தான் முஸோலினி பலப்படுத்தியிருக்கிறான். இதாலிய ஈ படகுத் தளங்களாக அவ்விரண்டும் அமைக்கப்பட்டன. லிராஸை நீர்மூழ்கி தளமாகவும், மாரிட்ஸாவையும் கலாடோவையும் விமான தளங்களாகவும் அவனால் அமைக்கப்பட்டன.

அதேவிதமாக ஸ்கார்பான்டோவையும் ஸ்டாம்பாலியாவையும் இதாலிய சிறிய கடற்படையையும், நீர்மூழ்கிகளையும் சிறந்த வசதியுள்ள தளங்களாக அமைக்கப்பட்டன.

இந்த இடங்களிருந்துகொண்டு டார்டனல்ஸிலும், ஸூயஸ் வழியேயும், வரும் நேசதேசக்கப்பல்களைத் தாக்கமுடியும். ஆனால் 1940 ஆகஸ்டில் அட்மிரல் கன்னிங்ஹாம் செய்த தாக்குதலுக்குப் பிறகு இதாலி தற்காப்புப் போருக்கு மாறிவிட்டது. விமானமேற்றும் கப்பல்களான இல்லஸ்டிரியஸ், ஈகிள், க்ரூயிஸர்களான இலக்ஸ், ஓரியான் முதலியவைகளைக் கொண்டு இதாலிய விமான தளங்களும் கப்பற்தளங்களும் தகர்க்கப்பட்டன. இம்மாதிரி பல தடவைகளில் செய்யப்பட்டது.

இதாலியின் கடற்படை சம்பந்தப்பட்ட வரையில் அதன் ஸப்ளைக் கப்பல்களும் துணைக்கப்பல்களும் அதிகம் தாக்கப்பட்டதால் சேதமாயின. இருந்தாலும் சிலவிமான தளங்களிலிருந்து கொஞ்சம் வால் காட்டிக்கொண்டிருந்தது.

இதாலிய யுத்தநிபுணர்கள் முதலிலேயே விமானப் படையைக் கொஞ்சம் விருத்தி செய்து வைத்திருந்தார்கள். இதாலிய விமானிகள் தந்திரசாலிகள் என்பதை உலகத்தாருக்குக் காட்ட பால்போ என்பவன் ஐரோப்பாவைக் கடந்து தென்அமெரிக்காவிற்கு விமான மூலம் சென்றான். இவ்விதம் விமானங்களை விருத்தி செய்த மாதிரி நீர்மூழ்கிகளையும் அபிவிருத்தி செய்து வைத்திருந்தார்கள்.

## முறிந்த திட்டம்.

எதிரிகளின் திட்டம் வியக்தமாகக் காணப்பட்டது. அதாவது அலெக்ஸான்டிரியா, போர்ட்ஸெட், முதலியவைகளை விமான மூலம் தாக்கி, மால்டா, ஸைப்ரஸ் ஸூயஸ் முதலியவைகளுக்கு அருகில் பிரிட்டிஷ் கப்பற்படையும் வியாபாரக் கப்பல்களும் வரமுடியாதபடி செய்வதுதான். இதற்காக நீர்மூழ்கிகளையும் ஏராளமாக உபயோகிக்கவும் நினைத்தார்கள்.

ஆனால் அந்தத் திட்டம் முறிந்தது. ஏனென்றால் ஜெர்மனியின் உதவியிருந்தும் கூட மால்டாவிற்கு பிரிட்டிஷ் கப்பற்படை சேராதபடி இதாலிய விமானங்களால் செய்ய முடியவில்லை. அலெக்ஸான்டிரியா, போர்ட்ஸெட் இரண்டையும் தாக்கவும் அவர்களால் முடியவில்லை. நேசநாடுகளின் பலமும் வரவர விருத்தியாகி வருகிறது.

ஆகவே மத்தியதரையில் நேசநாடுகளுக்கு அதிக சாதகமாக இல்லாமலிருந்த நிலைமை மாறி தற்சமயத்தில் நேசநாடுகளுக்குச் சாதகமாகத் திரும்பிவிட்டது.



# வார யுத்தச் செய்திகள்.

## 21—11—42-லிருந்து 27—11—42-வரை.

**வடக்கு ஆபிரிக்கா.**—ஆபிரிக்கப் போர்முனையைக் காக்கவேண்டுமென்று ஜெர்மானியர் ருஷ்யா, நார்வே முதலிய இடங்களிலிருந்து துருப்புகளைத் துரிதமாக கொண்டுவருகிறார்கள். ஐரோப்பாவில் படையெடுப்பு நேருமோ வென்று பயந்து கிரீஸிலுள்ள அச்சுநாட்டுப் படைகள் ஸிலோனிகாவிலும், கஸான்டிராவிலும் பலப்படுத்துகின்றனர். அலெக்ஸான்டிராபோலிஸ்ஸுக்குப் பக்கத்திலுள்ள பிரதேசத்தில் சுரங்கவெடிகள் போடப்பட்டுள்ளன. டோடகானீஸை இதாலியர் பலப்படுத்துகின்றனர். சமீபத்தில் கிடைத்த செய்திகளின்படி டூலோனும் எதிரியால் ஆக்கிரமிக்கப்பட்டு 'அங்குள்ள கப்பற்படையின் ஒரு பாகம் தானாகவே மூழ்கியது.

நவம்பர் மீ 18உ டூனிஸியாவிலுள்ள ஜெர்மன் படைத்தலைவர் அங்குள்ள பிரெஞ்சுபடைத் தலைவனான பார்ரியா என்பவனுக்கு 'நாட்டைவிட்டுச் செல்லும் படி உத்தரவிட்டான். ஆனால் பிரெஞ்சுப்படைகள் அதன்படி நடக்காமல் ஜெர்மானியரையே தாக்கினார்கள். டூனிஸிலிருந்து ட்ரிபோலிக்குச் செல்லும் கடற்கரை ரஸ்தாவைக் கைப்பற்றச் செய்யப்பட்ட ஜெர்மன் முயற்சிகளை பிரெஞ்சு சைனியம் தடுத்துவருகிறது.

டூனிஸ்ஸுக்கு ஒதுக்குப்புறமாக வந்த நேசப்படைகள் பைஸர்டாவிற்கும் டூனிஸ்ஸுக்கு இடையில் உள்ள 50-மைல் இடத்தில் அச்சுநாட்டுப்படைகளை அடைத்திருக்கின்றனர். அங்கேதான் பெரும் சண்டை நடைபெறுகிறது. எல் அகீலாவிற்கும் ட்ரிபோலிக்கும் இடையிலுள்ள ரஸ்தாவைத் துண்டிக்க சாட் ஏரி மூலமாகப் படைகள் இறக்கப்படுகின்றன. பான்டிலாரியோ, போன்முனை முதலிய இடங்கள் வழியாக வரும் அச்சுநாட்டுப்படைகள் நேசதேச விமானங்களால் தடைப்பட்டுள்ளன. மால்டாவிலுள்ள பிரிட்டிஷ்விமானங்கள் ஸிஸிலியின் விமான தளங்களைத்தாக்கின. லிபியா யுத்தம் ஆரம்பித்ததிலிருந்து டேரின் 8 தடவை தாக்கப்பட்டு நவம்பர் 18, 20-ம் தேதிகளில் மறுபடியும் தாக்கப்பட்டது.

பிரெஞ்சு வடஆபிரிக்கா முழுவதும், நவம்பர் 23-ல் டார்லான் அறிவித்தபடி நேசதேசங்களுடன் சேர்ந்துகொண்டது. அதன் விஸ்தீர்ணம் 1,80,00,000 சதுரமைல். அதன் ஜனத்தொகை 150 லக்ஷம் பேர். அதில் டாகர் துறைமுகம் இயற்கை வசதிகளுடன் இருக்கிறது. அங்கே 35,000 டன் எடையுள்ள ரிச்சலியூ, 7,000 டன் எடையில் 3 க்ரூயிஸர்கள், 3,000 டன் எடையில் 3 நாசகாரிகள், பல நீர்மூழ்கிகள் அடங்கிய பிரெஞ்சுக் கடற்படையும் இருக்கிறது.

**ஸிரேனைகாவில்** ஸ்காலிடாமா—ஆன்டிலட் என்ற இடத்திலிருந்து எதிரி பின் வாங்கிவிட்டான். நவம்பர் மீ 20உ பெங்காஸியைக் காலிசெய்து, நவம்பர் மீ 23உ ஜடபாயா, ஜாலோ முதலியவைகளையும் எதிரிகள் காலிசெய்தார்கள்.

கடுமையான சீதோஷ்ண நிலையால் சண்டைகள் தடையுற்றிருக்கின்றன.

எல் அலமீனுக்கும் டெர்னாவிற்கும் இடையில் தரையில் அழிக்கப்பட்ட இதாலிய, ஜெர்மன் விமானங்கள் 500 இருக்கும். இதைத்தவிர சண்டையில் பல விமானங்கள் சுட்டுவீழ்த்தப்பட்டன. டாபாவிற்கும் மிச்சலிக்கும் இடையில் விமானமிறங்கும் 120 தளங்கள் கைப்பற்றப்பட்டன. அச்சுநாட்டுக்கு 75,000 பேர்களும் நேசதேசங்களுக்கு 14,000 பேர்களும் நஷ்டம்.

இதுவரையிலுள்ள முதல் கட்டத்தில் நாம் நிச்சயம் வெற்றிபெற்றோம் என்று ஸர் அலெக்ஸாண்டர் சொல்லுகிறார். எதிரி திணறுகிறான். ஆனால் அவன் 'அடியோடு அழியும் வரை யுத்தத்தில் நாம் வெற்றிபெற்றதாகச் சொல்ல முடியாதென்றும்' சொல்லுகிறார்.

**ருஷ்யா.**—ருஷ்யாவில் சண்டை திடீரென மாறிவிட்டது. எதிரிகள் தாக்கப்படுகிறார்கள். ஸ்டாலின்கிராடுக்கு உதவி கிடைத்துவிட்டது. வடமேற்கிலும், தெற்கிலும் ருஷ்யர்கள் கடிக்குத் தாக்குதலைச் செய்கின்றனர். வடக்கிலிருந்து வந்த ருஷ்யப்படைகள் டான்வளைவிற்கு 25 மைல் தூரத்திற்கு வந்துவிட்டன.

டான் முனையில் டான் நதிப்பக்கமாக கிளெட்ஸ்காயாவிற்கும் கலாச்சிற்கும் இடையில் 6 மைல் முன்னேறியும் இருக்கிறார்கள். ஸ்டாலின்கிராட் முனையில் ருஷ்ய உதவிப்படைகள் வந்திருப்பதாகச் சமீபத்தில் கிடைத்த செய்தி கூறுகிறது. டான், வால்கா நதிகளுக்கிடையில் ஜெர்மானியர் அகப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஸ்டாலின்கிராட்-கார்கவ் இருப்புப் பாதையை ருஷ்யர்கள் பிடித்தனர்.

காகஸஸிலும் எதிரிகளுக்கு சாதக மேற்படவில்லை. ஆர்ட்ஜோனி கிட்ஜி என்ற பிரதேசத்தில் ஜெர்மானியர் துரத்தப்பட்டு நால்சிக்கிற்குத் தென்கிழக்கில் ஓடுகிறார்கள்.

மாஸ்கோவிற்கு மேற்கே ரிஜெவ்விலும் ஜெர்மன் நிலைகளை ருஷ்யப் படைகள் பிளந்துவிட்டன.

**ஸாலமன்ஸ்.**—நவம்பர் 14—15-ல் நடந்த கடல் போரில் கூடல்கனூர் பிரதேசத்தில் ஜப்பானியருக்கு நேர்ந்த நஷ்டம் ஒரு சண்டைக்கப்பலும், 3 பெரிய க்ரூயிஸர்களும், ஒரு நாசகாரியும் மூழ்கடிக்கப்பட்டன. ஒரு க்ரூயிஸரும், ஒரு நாசகாரியும் சேதமாயின. நவம்பர் 18உ அமெரிக்க பறக்கும் கோட்டை விமானங்கள் பூயின் பிரதேசத்தில் (ஸாலமன்ஸில் போகன்வில்லி தீவில் தென் பாகம்) ஜப்பானிய சாமான் கப்பல்களைத் தாக்கின. அதே தினத்தில் நேசதேசப்படைகள் கூடல்கனூரில் கிராஸ் (craz) முனைக்கு மேற்கே முன்னேறின. நவம்பர் 21உ கூடல்கனூரில் எதிரி நிலயங்கள் பல தாக்கப்பட்டன.

**நியூ கினி.**—பூனா—கோனா பிரதேசத்தில் இவ்வாரம் பூரா கடுமையான சண்டை நடைபெற்றது, கோனாவை நேசதேசப்படை பிடித்தது.

**அலூஷியன்.**—அட்டுதீவில் ஜப்பானியர் மீண்டும் படையெடுப்பு செய்தனர்.

**போர்ச்சுகீஸ் டிமோர்.**—லாண்டம் (Lantem) என்ற இடத்தை ஜப்பானியர் ஆக்கிரமித்துக்கொண்டனர்.

**சைனா.**—செகியாங்—கியாங்ஸி இருப்புப் பாதையில் சீனர்களின் நடமாட்டத்தை ஜப்பானியர் தடுத்திருந்தனர். அது மீண்டும் சீனர்களால் ஏற்படுத்தப்படும். நவம்பர் 30உ அமெரிக்கப் போர் விமானங்கள் நவம்பர் 20-ல் ஹங்கௌ, ஸான்சான் கான்டன் முதலியவைகளைத் தாக்கின.

**பிரெஞ்சு இந்தோ-சைனா.**—ஹெய்பாங்கை நவம்பர் 22உ அமெரிக்க விமானங்கள் தாக்கின.

**பர்மா**—தினமும் பிரிடிஷ் விமானப் படை பர்மாவைத் தாக்குகிறது. நவம்பர் 17உ காளமியோவில் கட்டடங்களும் இந்திய சுரங்கவெடிவாரும் கப்பபலும் டச்சு எண்ணெய்க் கப்பலும் ரெங்கூனில் விமானத் தளங்களும், நவம்பர் 18-ல் மெய்க்டிலாவில் விமானத் தளங்களும், நவம்பர் 20-ல் மாக்வி, அக்யாப்பு, நவம்பர் 22-ல் மண்டலேயும், 25-ல் மியின்கியானும், ஹெமோ, மிங்கலாடன், மெய்க்டிலாவும் தாக்கப்பட்டன.

**பலவகைப்பட்டவை.**—1. லவாலின் சார்பாக பிடேன் தனது அதிகாரத்தை விட்டுக்கொடுத்துவிட்டான். இருந்தாலும், தலைமையை பேருக்கு மாத்திரம் வகிக்கிறான். லவாலுக்கு ஸர்வ அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே லவால் ஒரு ஏகாதிபத்ய அதிகாரியாகிவிட்டான். ஆனால் விஷி அரசாங்கமே தான் மறைந்துவிட்டதே.

2. ஜெனரல் டாஸ்டர் டிலாவிஜரீ என்பவர் டீகால் கட்சியில் சேருவதற்கு லண்டன் வந்துவிட்டார். இவர் பிரெஞ்சு விமானப்படையில் உயர்ந்த பதவி யேற்றார்.

3. நவம்பர் 20 கனடா-அலாஸ்கா இருப்புப்பாதை திறக்கப்பட்டது. சாமான் லாரிகள் (Fairbanks) என்ற இடத்திற்குச் சென்றன.

4. அமெரிக்க யுத்தச் செலவு 60,00,00 லக்ஷம் டாலர் ஆகிறது. இது சென்ற யுத்தத்தைப்போல் இருமடங்காகிறது.

5. ஸர் ஸ்டாப் போர்டு கிரிப்ஸ் யுத்த காலமந்திரி சபையை விட்டு விலகி விமான உற்பத்தி இலாகா மந்திரியானார். ஹர்பர்ட் இவருக்கு பதிலாக மந்திரி



சபையில் சேர்ந்துகொண்டார். இனி ஈடன் காமன்ஸ் சபையின் தலைவராக இருப்பார். லார்டு கிரான் போர்ன் பொக்கிஷ மந்திரியானார். அவரது குடியேற்ற நாட்டுமந்திரி ஸ்தானத்தை கர்னல் ஆலிவர் வகிக்கிறார்.

6. அபிஸீனியாவை முன்பு பிடித்த இதாலிய மார்ஷல் படோக்லியோ இதாலியில் ஒரு இயக்கத்தை ஆரம்பித்திருக்கிறார். நேசதேசங்களுடன் தனியாக சமாதானத்தைச் செய்யவிரும்புகிறார்.

7. மேற்கிந்தியத் தீவுகளிலுள்ள பிரெஞ்சு அக்கரைகளை அமெரிக்கா பாதுகாக்கும். அங்குள்ள பிரெஞ்சுக் கடற்படைக்கு ஆயுத பரிகரணம் செய்யப்படும்.

8. இந்து மகா சமுத்திரத்தில் 10,000 டன் உள்ள ஜப்பானியக் கப்பலை மூழ்கடித்தன.

---

## சத்துருவினுடையவும், சத்துருவினால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில், பிரிடிஷ், நேசதேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

| தேதி. | லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|
| **16—11—42.** (திங்கட்கிழமை). | | | |
| | **ஐரோப்பா (Europe).** | | |
| | தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | |
| | **வட ஆபிரிக்கா (North Africa).** | | |
| | பெங்காஸி (Benghazi) துறைமுகத்தில் படகுகள் போக்குவரத்து விமானங்கள். | | 6 விமானங்கள். |
| | **விரோதி ஸ்தானங்கள்.**—ஜெடபாயா (Jedabaya) பிரதேசத்தில். | | |
| | **விமானக்கூடம்.**—டுனிஸ் (Tunis), கப்பற்படை தளம் பிஸர்ட்டாவில் (Bizerta). | | |
| | **ருஷ்யா (Russia).** | | |
| | **விமானச் சண்டைகள்.**—கிழக்குப் போர்முனை முழுவதிலும். | | |
| | **தூரக்கிழக்கு (Far East).** | | |
| | **ஜப்பானியரின் ஸ்தானங்கள்.**—நியூ கினியில், பூனா-கோனா (Buna-Gona) பிரதேசத்தில் கிஸ்கா (Kiska) (அலூஷியன் தீவுகளில்). | | |
| | **ஜப்பானிய உதவிப் படைகள்.**—ஸாலமன் தீவுகளிலுள்ள கூடால்கனூரி (Gudalcanar)ல். | | |
| **17—11—42.** (செவ்வாய்க்கிழமை). | | | |
| | **ஐரோப்பா (Europe).** | | |
| | **இரவில்.**—ரயில் வண்டிகள்—வட பிரான்ஸ் (North France), பெல்ஜியம் (Belgium). | | |
| | **வட ஆபிரிக்கா (North Africa).** | | |
| | **கப்பல் துறைப் பிரதேசம்.**—பெங்காஸி (Benghazi). | | |
| | **விமான நிலயம்.**—பார்ஸ் (Barce). | | |
| | **விரோதிக்குச் சொந்தமான வண்டிகள்.**—பெங்காஸி (Benghazi)க் தெற்கே. | | |
| | **விரோதியின் எண்ணெய்க் கப்பல்.**—ட்ரிப்போலிடேனியா (Tripolitania) கடற்கரைக்கருகாமையில்; ஜெடபாயா (Jedabaya). | | |
| | **விமானக் கூடம்.**—டுனிஸ் (Tunis). | | |

| தேதி. | லக்ஷியங்கள். | பிரிடிஷ் நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|

**17—11—42.** (செவ்வாய்க்கிழமை)—தொடர்ச்சி.

மத்தியதரைக்கடல் (Mediterranean).

விமானக் கூடம்.—ஸிஸிலி (Sicily)யில்.

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகள்—ருஷ்யப் போர்முனை முழுவதிலும், விமானக்கூடங்களிலுள்ள விமானங்கள்.

தூரக்கிழக்கு (Far East).

விமான நிலயங்கள்.—பர்மாவிலுள்ள ரெங்கூன் (Rangoon), மாக்வி (Magwe).

விரோதிகள் நியூ கினியிலுள்ள பூனு பிரதேசத்தில் பின்வாங்குகின்றனர்.

மேயோபியாஸ் (Maobiase), போபனுரோ (Bobonaro). டிமோரில்.

விரோதிக் கப்பல்கள்.—ராபால் (Rabaul) துறைமுகத்தில்.

விமான நிலயங்கள்.—ஸாலமன் தீவுகளிலுள்ள பூயின் (Buin), நியூ கினியிலுள்ள லே (Lae).

**18—11—42.** (புதன்கிழமை).

ஐரோப்பா (Europe).

பகலில்.—நாஸிகளுக்குச் சொந்தமான நீர்மூழ்கிகளின் தளம்—லாபாலீஸ் (Lapallice), லோரியண்ட் (Lorient).

ரயில்வே லக்ஷியங்கள்.—வட பிரான்ஸ் (France), ஹாலந்து (Holland). — 3 விமானங்கள்.

பியாட் (Fiat) விமான என்ஜின்கள் செய்யுமிடங்கள்.—இதாலியிலுள்ள டூரின் (Turin).

வட ஆபிரிக்கா (North Africa).

எஞ்சிய அச்சு நாட்டினர் எல் அகிலா (El Agheila) கடற்கரைவழியாக ஓடிக்கொண்டிருக்கின்றனர் டூனிஸ் (Tunis) பிஸர்டா (Bizerta).

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகள்.—ருஷ்யப் போர்முனை எங்கும்.

தூரக்கிழக்கு (Far East).

விரோதி ஸ்தானங்கள்.—நியூ கினியில் பூனு(Buna) பிரதேசத்தில் உள்ள கட்டடங்கள்—நியூகினியில் லே (Lae) என்னுமிடத்தில் ஒரு விமான நிலயம்.

துறைமுகம்.—நியூ பிரிடனிலுள்ள ராபாலி(Rabaul)ல்.

விமான நிலயம்.—காஸ்மாடா (Gasmata).

கட்டடங்கள்.—பர்மாவிலுள்ள கலீமியோ (Kalemyo).

விமான நிலயம்.—பர்மாவிலுள்ள மீக்டிலா (Meiktila).

**19—11—42.** (வியாழக்கிழமை).

ஐரோப்பா (Europe).

பகலில்.—ரயில்வே என்ஜின்கள், சாமான் வண்டிகள், லாரிகள்-பிரான்ஸ் (France), பெல்ஜியம்(Belgium), ஹாலந்து (Holland). — 2 விமானங்கள். — 2 விமானங்கள்.

| தேதி. | லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|

**19—11—42.** (வியாழக்கிழமை)—தொடர்ச்சி.

வட ஆபிரிக்கா (North Africa).

அச்சுநாட்டுப் போக்குவரத்து.—லிபியாவில், எல் அகிலா (El Agheila)வுக் கருகாமையில்.

விமானக் கூடம்.—டூனிஸ் (Tunis).

கப்பற்படை தளம்.—பிஸர்டா (Bizerta).

ஒரு கப்பல்.—டூனிஸியா (Tunisia)வுக்கருகாமையில்.

மத்தியதரைக்கடல் (Mediterranean).

விமானக் கூடங்கள்.—ஸிஸிலி (Sicily)யில்.

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகள்.—ருஷ்யப் போர்முனை முழுவதிலும்.

தூரக்கிழக்கு (Far East).

கப்பற்படைப் பகுதிகள்.—நியூ கினியில் பூனு(Buna)வுக் கருகாமையில்.

கோயபாங் (Koepang) டிமோரில்.

விமானக்கூடம்.—பர்மாவில் மாக்வி (Magwe) என்னுமிடத்தில்.

**20—11—42.** (வெள்ளிக்கிழமை).

ஐரோப்பா (Europe).

பகலில்.—தரையிலுள்ள லக்ஷியங்கள் வட பிரான்ஸ் (France), ஹாலந்து (Holland).

விரோதியின் துணைக்கப்பல்கள்.—டச்சுக் கடற்கரைக் கருகாமையில்;

விமானங்கள் உற்பத்திசாலை, மற்ற ராணுவ லக்ஷியங்கள்.—இதாலியிலுள்ள டூரின் (Turin).

வட ஆபிரிக்கா (North Africa).

அச்சு நாட்டினரின் கூட்டம் (El Agheila)வில்.

துறைமுகம்.—ட்ரிபோலி (Tripoli).

ஒர்க்ஷாப்புகள், சைனிய வாஸஸ்தலங்கள்.—பிஸர்டா (Bizerta)வில்.

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகள்.—ருஷ்யப் போர்முனை முழுவதிலும்.

தூரக்கிழக்கு (Far East).

ஜப்பானியத் துருப்புகள்.—நியூ கினியில் பூனு (Buna) பிரதேசத்தில்.

துறைமுகம்.—நியூ பிரிடனில் ராபாலி (Rabaul)ல் கோவியங் (Kovieng).

விமான நிலயம்.—பர்மாவில் பொகோகு (Pokoku).

**21—11—42.** (சனிக்கிழமை).

ஐரோப்பா (Europe).

இரவில்.—சுரங்க வெடிகள் போடுவது—விரோதியின் சமுத்திரக்கரையோரங்களில்.

வட ஆபிரிக்கா (North Africa).

அச்சு நாட்டுப் படைகள்.—ஜெடபாயா (Jedabaya), பிரதேசத்தில் டிரிபோலி (Tripoli).

விமான நிலயம்.—டூனிஸு (Tunis)க்கருகாமையில்.

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகள்.—ருஷ்யப் போர்முனை எங்கும். — 34 விமானங்கள். — 60 விமானங்க

| தேதி. | லக்ஷியங்கள். | பிரிட்டிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
| --- | --- | --- | --- |

**21—11—42.** (சனிக்கிழமை)—தொடர்ச்சி.

துூரக்கிழக்கு (Far East).

விரோதியின் கட்டடங்கள்.—கூடால்கனுரி (Gudalcanar)-ல்.
விமானச் சண்டைகள்.—ஸாலமன் தீவுகளில் பூயின் (Buin) என்னுமிடத்தில்.
காவியெங் (Kavieng).
விமானக்கூடங்கள்.—மிங்கலாடான் (Mingaladon), பர்மாவிலுள்ள டோங்கூ (Toungoo).
பர்மாவிலுள்ள மாண்டலே (Mandalay).

**22—11—42.** (ஞாயிற்றுக்கிழமை).

ஐரோப்பா (Europe).

தொழிற்சாலைப் பிரதேசம், போக்குவரத்துக்கு முக்கியமான இடம்.—ஜெர்மனியில் ஸ்டட்கார்ட் (Stuttgart).
சாமான் வண்டி.—வட பிரான்ஸ் (N. France) ... 10 விமானங்கள்.
ஒரு ஸப்ளைக் கப்பல்.—இங்கிலீஷ் கால்வாயில்.

வட ஆபிரிக்கா (North Africa).

விமானக்கூடம்.—பிஸர்டா (Bizerta).
டூனிஸ் (Tunis).
அச்சு நாட்டுத் துருப்புகள்.—எல் அகீலா (El Agheila) பிரதேசத்தில்.

மத்தியதரைக்கடல் (Mediterranean).

விமானக்கூடங்கள்.—காமிஸோ (Comiso), கேலா, ஸிஸிலியிலுள்ள ட்ரபானி (Trapani).
விரோதியின் விமானப் போக்குவரத்து.—ஸிஸிலியிலிருந்து டூனிஸ்வரையில்.

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகள்.—ருஷ்யப் போர்முனை முழுவதிலும்.

துூரக்கிழக்கு. (Far East).

ஜப்பானியத் துருப்புகள்.—கோனு—பூனு (Gona-Buna) பிரதேசத்தில்.
விமானக்கூடம்.-ஸாலமன் தீவுகளிலுள்ள பூகா (Buka) பிரதேசம்.
விமானக் கூடங்கள்.—பர்மா (Burma)வில்.
துறைமுகம், கப்பல்கள்.—ஆக்கியாப் (Akyab).

---

## விரோதிகளின் விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.

| தேதி. | லக்ஷியங்கள். | விரோதி விமான நஷ்டம். | பிரிட்டிஷ் நேசதேச விமான நஷ்டம். |
| --- | --- | --- | --- |

**17—11—42.** (செவ்வாய்க்கிழமை).

பிரிடன் (Britain).

எங்கும் விமானத் தாக்குதலில்லை.

எகிப்து (Egypt).

ஸெயிட் துறைமுகம் (Port Said). ... 1 விமானம்.

ருஷ்யா (Russia).

ஸ்டாலின்கிராடு (Stalingrad).



| தேதி. | லக்ஷியங்கள். | விரோதி விமான நஷ்டம். | பிரிட்டிஷ் நேசதேச விமான நஷ்டம். |
| --- | --- | --- | --- |

**18—11—42.** (புதன்கிழமை).

பிரிடன் (Britain).

விமானத் தாக்குதலில்லை.

ருஷ்யா (Russia).

ஸ்டாலின்கிராடு (Stalingrad).

துூரக்கிழக்கு (Far East).

ஆஸ்திரேலியத் துருப்புகள்.—நியூ கினியில் பூனு (Buna) வுக்கருகாமையில்.

**19—11—42.** (வியாழக்கிழமை).

பிரிடன் (Britain).

பிரிடனில் எங்கும் விமானத் தாக்குதலே இல்லை.

வட ஆபிரிக்கா (North Africa).

ஆல்ஜியர்ஸ் (Algiers), போன் (Bone).

ருஷ்யா (Russia).

ஸ்டாலின்கிராடு (Stalingrad).

துூரக்கிழக்கு (Far East).

விமானதளம்.—ஸாலமன் தீவுகளிலுள்ள கூடால்கனுரி (Gudalcanar)ல்.

**20—11—42.** (வெள்ளிக்கிழமை).

பிரிடன் (Britain).

விமானத் தாக்குதலில்லை.

வட ஆபிரிக்கா (North Africa).

ஆல்ஜியர்ஸ் (Algiers).

ருஷ்யா (Russia).

ஸ்டாலின்கிராடு (Stalingrad).

துூரக்கிழக்கு (Far East).

தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை.

**21—11—42.** (சனிக்கிழமை).

பிரிடன் (Britain).

விமானத் தாக்குதலேயில்லை.

வட ஆபிரிக்கா (North Africa).

நேசநேசத் துருப்புகள் டூனிஸியாவி (Tunisia)ற்குள் பிரவேசித்துக்கொண்டிருக்கும்.

துூரக்கிழக்கு (Far East).

நியூ கினியில் பூனு (Buna)விற்குள் முன்னேறிச் செல்லும் ஆஸ்திரேலியத் துருப்புகள். 2 விமானங்கள்.

**22—11—42.** (ஞாயிற்றுக்கிழமை).

பிரிடன் (Britain).

விமானத்தாக்குதலில்லை.

வட ஆபிரிக்கா (North Africa).

ஆல்ஜியர்ஸ் (Algiers), ஓரான் (Oran).

துூரக்கிழக்கு (Far East).

ஸாலமன் தீவுகளில் கூடால்கனுரி (Gudalcanar)லுள்ள அமெரிக்க ஸ்தானங்கள்.

**23—11—42.** (திங்கட்கிழமை).

பிரிடன் (Britain).

பிரிடனில் எங்கும் விமானத் தாக்குதல் ஏற்படவில்லை.

வட ஆபிரிக்கா (North Africa).

டூனிஸ் (Tunis)ல் நேசதேசத் துருப்புகள்.

ருஷ்யா (Russia).

ஸ்டாலின்கிராடு (Stalingrad).

துூரக்கிழக்கு (Far East).

பூனு (Buna) பிரதேசத்திற்கருகாமையிலுள்ள நேசதேசத்தார்களின் ஸ்தானங்கள்.

# யுத்தக் குறிப்புகள்.

**மத்தியதரைக்கடல் நிலைமை.** இரண்டாம் போர்முனையை ஏற்படுத்த வேண்டுமென்று செய்த வற்புறுத்தலின் பயனாகவே ஆபிரிக்காவில் தற்போதைய சண்டை துவக்கப்பட்டிருப்பதாக அரசியல் வாதிகள் அபிப்பிராயப்படலாம். ரூஸ்வெல்டு தனது செல்வாக்கை நிலைநாட்டிக்கொள்ளவே இந்தச் சண்டையை ஆபிரிக்காவில் துவக்கியிருப்பதாக ஹிட்லர் சொல்லலாம். ஆனால் இதனால் ஏற்படும் கௌரவமெல்லாம் மிஸ்டர் சர்ச்சிலுக்கும், ஜனாதிபதி ரூஸ்வெல்டுக்கும் அவர்களுடைய ராணுவத் தலைவர்களுக்கும் உண்டு. இங்கு நடக்கும் சண்டை எதிரியின்பேரில் ஒரு இடுக்குத் தாக்குதலாக நடைபெறுகிறது.

இங்கு கொண்டுவரப்பட்டுள்ள படைகளை அனேகக்கப்பல்களுடன் கொண்டுவந்ததே நமக்குள்ள பலத்தைத் தெரியப்படுத்துகிறது. மொத்தத்தில் லக்ஷக் கணக்கான டன் எடையுள்ள கப்பல்கள் ஈடுபட்டன. அல்ஜியர்ஸுக்கு 1,000 மைல்களுக்கு மேலுள்ள தூரம் கடக்கப்பட்டது. அப்போது கடல் நெடுக எங்கும் நெளிந்துகொண்டிருந்த எதிரி நீர்மூழ்கிகளில் 13 நீர்மூழ்கிகள் மூழ்கடிக்கப்பட்டன. அமெரிக்கத் துருப்பேற்றும் கப்பல் ஒன்றுக்கே சிறு சேதம். நம் பக்கத்தில் ஒருவருக்குக்கூடசேதம் ஏற்படவில்லை. பிரிடனில் இருந்த விமானப்படையும், ஜிப்ரால்ட்டர் படையுடன் சேர்ந்துகொண்டு அதிகம் உதவிபுரிந்தது. அந்த விமானங்கள் 8,000 மணிகளில் 12,50,000 மைல்கள் பறந்தன. இக்கப்பல்கள் இரவிலேயே தான் அதிகமாகப் பிரயாணம் செய்தன.

இவ்விதமான ஏற்பாட்டைப்பற்றி இவ்வாரத்தில் பொறுப்பு வாய்ந்த பலர் அவரவர்களின் அபிப்பிராயங்களை வெளியிட்டிருக்கிறார்கள். அட்மிரல் கன்னிங்ஹாம் குறிப்பிட்டதாவது:—'வட ஆபிரிக்காவில் அச்சு நாட்டினர் இல்லாமல் செய்யப்பட்டால் மத்தியதரைக்கடல் மூலமாக அனேகக்கப்பல்களின் கூட்டம் தாராளமாகச் செல்லலாம். இதனால் 20 லக்ஷம் டன் கப்பல்களை நாம் மிச்சப்படுத்த முடிகிறது.

மிஸ்டர் அலெக்ஸாண்டர் சொன்னதாவது:—'மத்தியதரைக்கடலில் எதிரி திரும்பப் பிடிக்கமுடியாத இடத்தை நாம் தாக்கினோம். இதிலிருந்து எதிரிக்குத் தொடர்ந்து சில பாதகங்கள் ஏற்படும். ருஷ்யாவிற்கு நேரடி ஆசுவாஸமும் ஏற்படும். ஐரோப்பாவைக் காட்டிலும் பஸிபிக்கில் நிலைமை நமக்கு மிக சாதகமாகவே மாறிவருகிறது. அங்கு கடல் போராகவே இருக்கிறது'. உதவி பிரதம மந்திரி மிஸ்டர் அட்லி சொன்னதாவது:—'மத்தியதரைக்கடலை நாம் பத்திரப்படுத்திவிட்டோம். அதிலிருந்து பெரிய முன்னேற்றப் போரை நாம் தொடுக்க முடியுமென்றும் நினைக்கிறேன்'.

எகிப்திலிருந்து ஜெர்மன் படைகள் அட்லாண்டிக் பக்கமாகத் துரத்த வெகு தூரம் இருப்பதால் இதற்குமுன் செய்யப்பட்ட சண்டைகளில் சிரமமாயிருந்தது. ஆனால் தற்சமயத்தில் இரு பக்கங்களிலும் தாக்குவதால் நிலைமை சுலபமாக்கப்பட்டது. மொராக்கோ, லிபியாவிலிருந்து 1,000 மைல் இருக்கிறது. ஆகவே இருபுறங்களிலும் தாக்கப்படுவதால் எதிரி பிடிபடுவான். நேசதேசக் கப்பல்களும் வெகுதூரம் பிரயாணம் செய்யவேண்டிய சிரமமுமில்லை. பிரெஞ்சு வட ஆபிரிக்காவிலிருந்து எதிரி பெற்றுவந்த ஸப்ளைகளை இனி பெறமுடியாது. கடந்த ஆறு மாதங்களில் 3,65,000 டன் சாராயமும், 5,000 டன் மாமிசமும், 2,00,000 டன் தானியங்களும், 1,35,900 டன் பழங்களும் வட ஆபிரிக்காவிலிருந்து மார்ஸெயல்ஸுக்கு சென்று அவைகளில் 90 சத விகிதம் ஜெர்மனிக்கும் அனுப்பப்பட்டது.

வட ஆபிரிக்காவிலிருந்து அச்சுநாட்டினரை விரட்டினால் மத்தியதரைக் கடலில் மறுபடியும் போக்குவரத்து தாராளமாகச் செய்யப்படும். டுனிஸும் பைஸர்டாவும் நேசதேசங்களின் வசத்தில் இருந்தால் ஸிஸிலி தாக்கப்படும். வட ஆபிரிக்காவிலிருந்து இதாலியைத்தாக்கலாம். அச்சுநாட்டுக் கட்சியிலிருந்து இதாலி பிரிந்துவிடுவதற்கான சமயம் வந்துவிட்டதாகவும் தெரிகிறது. சண்டையிலேயே



இதாலிக்கு அதிகம் உத்ஸாகம் கிடையாது. இதாலியில் நமது படைகள் இறங்குவது சிரமமில்லை. இதாலியைத் தனியே விட்டுவிடுவதா அல்லது அதையும் பாதுகாப்பதா என்று ஹிட்லர் தீர்மானித்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. மீண்டும் ஹிட்லரின் பக்கத்திலிருந்துகொண்டே போராடுவதா என்று முஸோலினியும் தீர்மானித்துக்கொள்ளவேண்டும். ஏனென்றால் ஹிட்லர் தன்னை விட்டுவிட்டு நேசதேசங்களுடன் சமாதானத்தைச் செய்துகொள்ளலாம், அல்லது அவனையே ஹிட்லர் தாக்கினாலும் தாக்கலாம். உண்மையில் பிரிடிஷ் விமானப்படையா அல்லது லுப்ட்வாபியா தன்னைத் தாக்கப்போவது என்று அவன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறான்.

பைஸர்டாவை வசப்படுத்திக்கொண்டால் மற்ற விஷயங்கள் தானாகவே உண்டாகும். அங்கிருந்து பால்கன் நாடுகளை நேசநாடுகள் சுலபமாக அணுகலாம். அந்நாடுகள் ஜெர்மன் ஆட்சிக்கு இணங்க விரும்பவில்லை. ஆகவே ஜெர்மன் சைனியங்களைத் தாக்கலாம். இவ்விதம் கொஞ்சம் கொஞ்சமாக ஆங்கிலேயர்களும் அமெரிக்கர்களும் ருஷ்யாவை அணுகி ஸப்ளைகளைச் சேர்ப்பிக்கமுடியும். தெற்கு ருஷ்யாவில் இருக்கும் ஜெர்மன் சைனியங்களுக்கு ஸப்ளைகள் அணுகமுடியாதபடிக்கும் செய்யலாம். ஆனால் இவ்வளவும் டுனிஸியாவில் தற்போது நேசநாடுகள் செய்துகொண்டிருக்கும் போரைப் பொறுத்திருக்கிறது.

வி வி வி வி வி வி வி

**டிகாலின் ஆக்ஷேபம்.** பிரெஞ்சு வடஆபிரிக்காவின் கவர்னர் ஜெனரலாக டார்லான் நியமிக்கப்படுவதை டிகால் ஆக்ஷேபித்தான். இதற்குக் காரணம் நேசநாட்டுக் கட்சிக்கு டிகால் செய்து வந்த சேவையேயாகும். தனிமையாகவே இருந்து ஸ்வதந்திர பிரெஞ்சுக் கட்சியை டிகால் ஏற்படுத்தி பிரெஞ்சுச் சைனியம் ஒன்று திரட்டி பிரெஞ்சு வடஆபிரிக்கா பூராவையும் கைப்பற்றியிருக்கிறான். ஆபிரிக்காவிற்கும், அமெரிக்காவிற்கும் விமான மார்க்கம் ஏற்பட்டதிலிருந்து எகிப்துக்கு வந்த ஸப்ளைகளெல்லாம் ஸ்வதந்திரப் பிரான்ஸின் மூலமாகவேதான் வந்தது. இதற்காக சாத் பிரதேசத்தில் (Chad Region) லாமி போன்ற இடத்தில் விமான தளங்களும், எண்ணெய் ஸப்ளைகளும், ரேடியோ நிலயங்களும் ஸ்தாபிக்கப்பட்டன. ஆங்கிலேய ஸூடானுக்கு நல்ல ரஸ்தாக்கள் போடப்பட்டன. ஆபிரிக்காவின் மேற்கேயுள்ள டேலா (Doula), பிரஸாவில்லி (Brazaville) போன்ற இடங்களின் மூலமாக சாமான்களை கார்டூமுக்கும், அங்கிருந்து எகிப்திற்கும் கொண்டுவர முடிகிறது. ஸ்வதந்திரப் பிரெஞ்சு நாடுகள் ஈயம், துத்தநாகம், காப்பி, கோகோ, முதலியவைகளை ஸப்ளை செய்திருக்கின்றன. நேசநாடுகளுக்கு உதவ ரப்பர் உற்பத்தி அதிமாக்கப்பட்டிருக்கிறது.

வி வி வி வி வி வி வி

**பிரெஞ்சுக்காரர்களின் மனதை வசப்படுத்தல்.** நேசப்படைகள் வட ஆபிரிக்காவிற்கு பத்திரமாக வந்துசேர்ந்ததோடு அங்கு வந்து இறங்கி 78 மணி நேரத்திற்குள் பிரெஞ்சுக்காரர்களின் திருப்தியும் அடையப்பட்டது. இதிலிருந்தே நேசதேசங்கள் போரிடும் காரணம் தெரியவரும். அடுத்தபடியாக டொப்ருக்கைப் பிடித்ததும் நிலைமை மிக சாதகமாகிவிட்டது. ஜெர்மன் படைகள் டொப்ருக்கிலிருந்து ஓடிய பிறகே நேசதேசங்களின் யுத்த சக்தியில் யாவருக்கும் நம்பிக்கை ஏற்பட்டது. அதோடு பிரெஞ்சு வட ஆபிரிக்காவில் ஹிட்லர் செய்துவந்த அட்டூழியமும் கூட்டக்கொலைகளும் அங்கிருப்போருக்கு அவன் பேரில் அருவெறுப்பை உண்டாக்கியுள்ளன ஆகவே நேசநாட்டுப்படைகள் இறங்கியதும் அங்கிருப்போர், பிரெஞ்சுக்காரர்களும் அராபியர்களும் உடனே நேசதேசத்துடன் சேர்ந்துகொண்டனர்.

வி வி வி வி வி வி வி

**டொப்ருக்.** மிஸ்டர் சர்ச்சில் சொன்னபடி 'டொப்ருக்கைப் பற்றி சரித்திரக்காரர்கள் விவரிப்பார்கள். பிரிடிஷ் 8-ம் படை பழிக்குப்பழி வாங்கியது. அதாவது முன் டொப்ருக்கில் பிரிடிஷார் வசப்பட்டதற்கும், ஜெர்மன் மின்னல் தாக்குதலால் நேர்ந்த கஷ்டங்களுக்கும் தக்கவாறு பழி வாங்கப்பட்டது. மான்ட்காமரி

ரோமலின் படைகளை டாங்கிகளைக்கொண்டே கடுமையாகத் தாக்குகிறான். ரோமல் பின்வாங்கி ஓடும்போதும் அவனது படைகள் பூர்ணமாக அழிக்கப்பட்டன.

மீதியுள்ள எதிரிப்படைகள் முதலில் புகா, மெர்ஸாமெட்ரு, எல்டடம் முதலிய இடங்களில் எதிர்த்து நிற்கவும் முயன்றன. ஆனால் தனது படைகளைச் சீர்படுத்திக்கொள்ளும் யோசனை ரோமலுக்கு இல்லை. போக்குவரத்து கிரமங்களாலேயே அவ்வாறு சிறிது நேரம் தயங்கி பிறகு ஓடினார்கள்.

அங்கே நேசதேசங்களுக்குப் பூர்ண விமானஆதிக்கமிருக்கிறது. எதிரி ஓடும் போது அவனது முன் வரிசைப் படைகளையே தாக்கமுடிகிறது. தரை, கடல் மூலமாக நேசதேசங்களுக்கு ஸப்ளைகள் கிடைக்கின்றன. எதிரியின் லாரிகளும் கிடங்குகளும் நாசமானதால் அவனுக்குப் பெட்ரோல் முதலிய வசதி இல்லாமல் அவஸ்தைப்படுகிறான். கடந்த மாதத்தில் அச்சுநாட்டினர் ஒருவர்கூட மத்திய தரையைக் கடக்கமுடியவில்லை.

**பரிதாபகரமான சம்பவம்** யாதெனில் ஜெர்மானியர் ஓடும்போது இதாலியர்களை தனியேவிட்டுவிட்டு ஓடுகின்றனர். 5 இதாலியக் காலாட்படைகளுக்கு போக்குவரத்தோ இதர ஸப்ளையோ இல்லாமல் பரிதவித்தனர். இதில் ஆயிரக்கணக்கான பேர்கள் பசிதாகத்தால் இறந்தனர். சிலர் தாங்களாகவே சரண் புகுந்தனர். இவர்களை மீட்டுவதற்காக பிரிடிஷ் விமானப்படை சுற்றிப்பார்த்துத் தேடிப்பிடித்துவந்தது.

**மறைமுகமான கொடுமை.** வட ஆபிரிக்காவில் நேசப்படைகள் வெற்றி பெற்று வரும் சமயத்தில் ஹிட்லர் மிகக்கேவலமாக நடந்துகொண்டான். 1940-ல் போர் நிறுத்தம் உடன்படிக்கையை பிடேன் கையெழுத்துச் செய்யும்போது ஹிட்லரின் வார்த்தைகளை நம்பினான். அதன்படி ஹிட்லர் நடந்துகொள்வானென்றும் எதிர்பார்த்தான். அதற்குப் பிற்பட்டு நேர்ந்த கிரம சமயங்களிலெல்லாம் பிடேன் தனது வார்த்தைகளின்படி நடந்துகொண்டான். அல்ஸாஸ்லோரனைப் பிடித்ததோடில்லாமல் ஹிட்லர் ஆக்கிரமிக்கப்படாமலிருந்த பிரான்ஸையும் கைப்பற்றிவிட்டான். இவ்விதம் ஹிட்லரின் கபடச் செய்கையின் கொடுமை தாங்காமலேயே பிடேன் தனது அதிகாரங்களை லவாலுக்குக் கொடுத்துவிட்டான்.

**பிரெஞ்சு ஆபிரிக்க முஸ்லீம்கள்.** இங்கேயுள்ள முஸ்லீம்கள் மொத்தத்தில் 150 லக்ஷம் பேர்கள். விஷியின் ஆட்சியில் இவர்கள் முதலில் பிரான்ஸுக்கும் பிறகு அங்கிருந்து ஜெர்மன் தொழிற்சாலைகளுக்கும், பிறகு ருஷ்யப் போர் முனையில் சண்டை செய்யவும் அனுப்பப்பட்டார்கள். விஷப்புகை உற்பத்தியிலேயே இவர்களில் சிலர் ஈடுபடும்படி வற்புறுத்தப்பட்டனர்.

**ஸ்பெயின்.** தற்சமயம் வட ஆபிரிக்கக் கடற்கரையோரமாக நடைபெறும் சண்டையில் ஸ்பெயின், போர்ச்சுகல் இவைகளின் அக்கரைகளும் உரிமைகளும் சரியாகக் காப்பாற்றப்படுமென்று அமெரிக்காவும், பிரிடனும் எடுத்துச் சொல்லிவிட்டன. இதற்கு ஒரு அத்தாக்ஷியாக, பிரெஞ்சு மொராக்கோவிற்கு தெற்கே ஸ்பெயினின் கோல்டு கோஸ்டு இருந்தும், ஸ்பெயின், மொராக்கோ, ஜிப்ரால்டருக்கு எதிரில் இருந்தும் ஸ்பெயின் போர்ச்சுகல் அவைகளுக்குச் சொந்தமான அஸோரஸ், மடீரா, கனரீஸ், வெர்டமுனை தீவுகள் டாகர் ஜலசந்திக்கு அருகில் இருந்தாலும் நேசதேசப்படைகள் அவைகளை ஒதுக்குப்புறமாக விட்டுவிட்டன. அச்சு நாட்டினர் இந்த நிலையிலிருந்தால் அவர்கள் அந்த இடங்களைக் கைப்பற்றியே இருப்பார்கள்.

முன்பு ஸ்பெயின் அயல்நாட்டு மந்திரியாக இருந்த ஸீனர்ஸுனர் ஸ்பெயினை யுத்தத்தில் ஈடுபடுத்தத் தயாராக இருந்தான். ஆனால் ஸெப்டம்பர் மாதத்தி



லேயே அவன் பதவியிழந்தான். உள்நாட்டுச் சண்டையில் அடைந்த நஷ்டங்களை ஈடுபடுத்தவும் பொருளாதார ஸ்வதந்திரத்தைப் பெறவும்தான் பிராங்கோ முயலுகிறான். அந்த உள்நாட்டுச் சண்டையில் இதாலிக்கு 50,00,000 லிர் (lire) நாணயம் கடன்பட்டது. இதுபோல் ஜெர்மனிக்கும் கடன்பட்டிருக்கிறது. இத்தொகையை ஷைலக் என்பவனின் முறைப்படி கடுமையாகவே இதாலியும் ஜெர்மனியும் வசூலிக்கின்றன. எண்ணெய், ஆல்மண்டு, பழங்கள் இதாலிக்கும், இரும்பு, துத்தநாகம், ஈயம் முதலியவைகள் ஜெர்மனிக்கும் அனுப்பப்படுகின்றன. ஸ்பெயினின் நிலைமையைப் பாராட்டி பிரிடன் மற்றொரு சந்தர்ப்பத்தில் 65,00,000 பவுன் கடன் கொடுத்திருக்கிறது.

பிரிடன் ஸ்பெயினிடமிருந்து ஆரஞ்சு, பாதரஸம் இரண்டையும் வாங்கிக்கொண்டு கோதுமையை ஸப்ளை செய்வதாக 1940-ல் ஒப்புக்கொண்டது. 1941-ல் அமெரிக்க செஞ்சிலுவை கோஷ்டியினர் 40,00,000 டாலர் பொருமான உணவை 10,00,000 ஸ்திரீ புருஷர்கள், குழந்தைகளுக்கு மாட்ரிட் பார்ஸிலோனா பிரதேசத்தில் ஸப்ளை செய்தனர்.

**போர்ச்சுகலின்** திட்டம் தனித்திருப்பதுதான். ஜெர்மனி பேரில் சந்தேகம் கொண்டிருக்கிறது. 1294-ம் வருஷ முதல் பிரிடனுடன் சிநேகமாக இருந்து வருகிறது. அப்போது இந்த இருநாடுகளுக்கும் வியாபார ஒப்பந்தம் ஏற்பட்டது. 1373, 1386, முதலிய வருஷங்களில் செய்யப்பட்ட லண்டன் உடன்படிக்கைகளின்படி பரஸ்பர பாதுகாப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது. ஸ்பெயின் அரசாங்க பாத்தியச் சண்டையிலும், பெனின்ஸுலர் சண்டையிலும் போர்ச்சுகல் படைகள் பிரிடிஷ் படைகளுடன் ஒத்துழைத்தன. டிமோர் தீவை ஜப்பானியர் பிடித்ததும், போர்ச்சுகலை வசப்படுத்தத் தயாரிக்கப்பட்ட ஒரு ஜெர்மன் தஸ்தாவேஜு கண்டுபிடிக்கப்பட்டு அதிலிருந்து அச்சு நாட்டினரின் பேரில் போர்ச்சுகலின் துவேஷத்தை அதிகப்படுத்தியது.

**குண்டுக்கு லக்ஷியங்கள்.** சமீபத்தில் ஜிநோவா பேரில் பிரிடிஷ் விமானங்கள் செய்த படையெடுப்பைப்பற்றி டைம்ஸ் ஆப் இந்தியா பத்திரிகை சொல்லுவதாவது:—அந்நகரில் இருந்த முஸோலினி சிலை தாக்கப்பட்டது. ஸீஸர் போன்றவர்களின் சிலைகளைத் தாக்குவதைக்காட்டிலும் தன்னை கடவுள் என்று சொல்லிக்கொண்டு ஜனங்களை ஏமாற்றிவருவோரின் சிலைகளை அடியோடு ஒழிப்பது நலம். ஆகாயத்திலிருந்து விழும் குண்டுகள் நல்ல வஸ்துக்களையும் அழிக்கலாம். ஆனால் ஹிட்லரின் குண்டுகள் முக்கியமாக, மதம், கலை, சரித்திரம், சட்டம், படிப்பு, முதலியவைகளின் ஞாபகார்த்தமான சின்னங்களைப் பொறுக்கிபார்த்து அழிக்கின்றன. மாதாக்கோவில்கள், பள்ளிக்கூடங்கள், ஆஸ்பத்திரிகள், புஸ்தகசாலைகள், நீதி ஸ்தாபனங்கள், கலா நிலயங்கள் விசேஷமாகத் தாக்கப்படுகின்றன. சமீபத்தில் காண்டர்பரி நகரில் ஜெர்மன் விமானங்கள் உரியா ஹீப்பின் (Uriah Heep) சிறு வீட்டையும் தாக்கியது. குண்டுகளுக்கு எது மேன்மை தாழ்மை என்று கண்டுபிடிக்கும் சக்தி கிடையாது. எது குடிசை, எது அரண்மனை, எவர் வீரர்கள், துஷ்டர்கள், எது உண்மை சரித்திரம், பொய்க்கதை இவைகளைத் தீர்மானிக்கவும் தெரியாது. ஆனால் காண்டர்பரி போன்ற நகரில் மகஸ்தாபனங்களை அழிப்பதற்கும், ஜிநோவா முஸோலினியின் சிலையைத் தாக்குவதற்கும் வித்தியாசம் இருக்கத்தானிருக்கிறது.

**மிகக்கொடுமை.** போலந்தில் யூதர்களைக் கொலைசெய்யும் விவரங்கள் கிடைத்திருக்கின்றன. லண்டனில் உள்ள போலிஷ் அரசாங்கத்திற்குக் கிடைத்த ரிபோர்ட்டிலிருந்து ஹிட்லரின் திட்டப்படி போலந்திலுள்ள யூதர்கள் பாதி கொல்லப்படுவார்களாம். இதற்காகத் தனியே ஒரு ஜெர்மன் படையும் தயாரிக்கப்பட்டிருக்கிறதாம். வாஷிங்டனில் உள்ள டாக்டர் ஸ்டீபன் வைஸ் (Stephen Wise) என்ற யூதத்தலைவர் சொல்லுவதாவது:— ஜெர்மனி ஆக்கிரமித்துக் கொண்டிருக்கும் ஐரோப்பாவிலுள்ள "

யூதர்களை 1942-க்குள் அடியோடு அழிக்க வேண்டுமென்று ஹிட்லர் உத்தரவிட்டிருக்கிறார். வார்ஸாவிலுள்ள யூதர்கள் ஏற்கனவே பாதிப்பேர் கொல்லப்பட்டனர். ஒவ்வொரு யூதனைக் கொல்லுவதற்கு 50 மார்க் வெகுமானமென்று சொல்லப்பட்டிருக்கிறது. அப்பிணங்களை உபயோகப்படுத்தி ஸோப்பு முதலிய சாமான்கள் தயாரிக்கப்படுகின்றனவாம். வயது முதிர்ந்தவர்களும், நொண்டி முடங்களும் கொலைக்களத்திற்கு அழைத்துச்செல்லப்பட்டு சுடப்படுகின்றனர். மற்றவர்களை 40 பேர் கொள்ளும் ரயில் வண்டிகளில் 150 பேர்களாக அடைக்கப்படுகிறது. கீழே சுண்ணாம்பும், எரிமருந்துமாகப் போடப்பட்டுள்ளது. கதவுகள் தாழ்போடப்பட்டுள்ளன. ஆகவே டிரயின் போய்ச்சேர்ந்த இடத்தில் இதில் பாதிப்பேர்தான் உயிருடன் இருப்பார்கள். மீதமுள்ளவர்கள் கூட்டமாகக் கொல்லப்படுவார்கள். இப்படியாக 2½ லக்ஷம் யூதர்கள் ஸெப்டம்பர் மாதத்துடனேயே கொல்லப்பட்டனர். வாலிபர்களும், பலிஷ்டர்களும் அடிமைத் தொழில் புரிவதற்காக விடப்பட்டுள்ளனர்.

வி வி வி வி வி வி வி

**ஸிவில் பாதுகாப்பு.** அதாவது பொதுஜனங்கள் தங்களைத் தாங்களாகக் காப்பாற்றிக்கொள்வது மெத்த அவசியமென்று ஸிவில் பாதுகாப்பு மெம்பரான ஸர் வாஸா பிரஸாத ஸ்ரீ வத்ஸவா நவம்பர் 21-ல் சொன்னார். இதில் அரசாங்க சம்பந்தமில்லாத பொதுஜனங்கள் இதில் அதிகம் ஈடுபடவேண்டும். இளம் சாரணர்களும், டாக்டர்களும் இதில் சேரலாம். இதில் முக்கியமாக விமான எதிர்ப்பு பாதுகாப்பு விதிகளும், ஆபத்திலுள்ளோரை மீட்பதும், சேதமான இடங்களை ரிபேர் செய்வதும் தான் லக்ஷியங்கள். யுத்த பிரதேசத்திலிருந்து தேவையில்லாதவர்களை அப்புறப்படுத்தி, பொதுஜனங்களைத் தைரியப்படுத்தி, எதிரியை எதிர்க்க ஊக்கத்தை உண்டாக்குவதும் நோக்கங்கள். படையெடுப்பில் வீடு இழந்தவர்களுக்கு உதவவேண்டும். ஏ. ஆர். பி. யில் 5 வகை சேவைகளிருக்கின்றன. வார்டன், மெஸ்ஸஞ்ஜர், ஆபத்திலிருப்போரை மீட்கும் கோஷ்டி, காயமடைந்தோரை கவனிப்பது, நெருப்பணைக்கும் கோஷ்டி. ஸ்திரீகளும் இதில் சேர்ந்துகொண்டு வீட்டுக்கு வீடு உபந்யாசம் செய்து உதவலாம்.

வி வி வி வி வி வி வி

**பர்மா.** பர்மாவில் பெயரை ஜப்பானியர் மாற்றிவிட்டனர். ஸ்வதந்திர பர்மா சைனியத்தை 'பர்மா பாதுகாப்பு சைனியம்' என்று மாற்றியிருப்பது கவனிக்கத்தக்கது. யாரைப் பாதுகாப்பதென்றால் ஜப்பானியரைத்தான். இதுதான் ஜப்பானின் அகில ஆசியா திட்டம்.

---

## பேர்ல் துறைமுகத் தாக்குதலுக்குப் பிறகு நவம்பர் 14—15வரை ஜப்பானியக் கப்பற் படைக்கு நேர்ந்த நஷ்ட விவரம்.

| | மூழ்கடிக்கப் பட்டோ, அல்லது அழிக்கப்பட்டோ போனவை. | அநேகமாக அழிக் கப் பட்டவை. | சேத மானவை. |
|---|---|---|---|
| சண்டைக் கப்பல்கள் ... | 2 | ... | 5 |
| விமானமேற்றும் கப் பல்கள். | 6 | ... | 6 |
| க்ருயிஸர்கள் ... | 27 | 2 | 27 |
| நாசகாரிகள் ... | 45 | 4 | 18 |
| மொத்தம் ... | 80 | 6 | 56 |



நவம்பர் 19உ ஸாலமன் சண்டையைப்பற்றி வெளிவந்த அறிக்கையில் ஒரு சண்டைக் கப்பலும், 3 பெரிய க்ருயிஸர்களும் மூழ்கடிக்கப்பட்டன என்றும், ஒரு சண்டைக் கப்பலும், ஒரு க்ருயிஸரும், ஒரு நாசகாரியும் சேதமானதாயும், இவைகளை மேற்பட்ட கணக்குகளோடு சேர்த்துக்கொள்ள வேண்டுமென்றும் குறிப்பிடப்பட்டது.

ஜப்பானின் கடற்படை பலத்தைப்பற்றி 1941-ம் வருஷத்தின் பிராஸியின் கடற்படை அறிக்கையில் குறிப்பிடும்போது ஜப்பானுக்கு 10 சண்டைக் கப்பலும் விமானமேற்றிகள் 15-ம், பல ரகத்தில் 37 க்ருயிஸர்களும், 88 நாசகாரிகளும், 32 சிறுவகை நாசகாரிகளும் டார்பிடோ படகுகளும் இருப்பதாகச் சொல்லப்பட்டது.

---

## நாம் வெற்றியடையும் வரையில் நமது அமெரிக்க வீரர்கள் தங்கள் ஊருக்குத் திரும்பிவரமாட்டார்கள்.

நியூ யார்க், நவம்பர் 20.

பிரிடிஷார் அல்பவிஷயத்திற்குக்கூட முணுமுணுக்கிறதில்லையென்று அங்குள்ள அமெரிக்க வாலிபர்கள் சொல்லுவார்கள். அவர்கள் ஒருபொழுதும் புகார் செய்து நான் கேட்டதில்லை.

சந்தர்ப்பங்கள் எத்தகையதாக இருந்தபோதிலும் மொத்தத்தில் பிரிடிஷ் மக்களுக்கு மகத்தான உணர்ச்சி ஏற்படுகிறது. அத்தகைய உணர்ச்சியை வர்ணிப்பது அசாத்தியம். அத்தகைய உணர்ச்சியினால் ஒருவருக்கு மற்றவரிடத்திலிருக்கும் பற்றுதல் அதிகப்பட்டு, ஒன்றோடொன்று பிணைக்கப்பட்டு, உள்நாட்டிலும், போர்களத்திலும் ஒன்றுசேர்ந்து வேலைசெய்யவும், சண்டைசெய்யவும் அநுகூலமாக இருக்கிறது. நமது அமெரிக்க வாலிபர்களும் அத்தகைய உணர்ச்சியை அடைவார்கள் என்று நான் நம்புகிறேன்.

யுத்தத்தை ஜயிக்க அவர்கள் என்னென்ன செய்யவேண்டுமோ அதைச் செய்து வருகிறார்கள். சுதாவாக பிரிடிஷ்காரர்கள் போலவும், சண்டையில் ஈடுபட்டிருக்கும் நமது வாலிபர்கள் போலவும், இன்னும் அதிகமாக வேலையைச் செய்தும், பரித்தியாகங்களும் செய்துவந்தால் யுத்தத்தைக் குறுகிய காலத்தில் முடித்துவிடலாம். அதன் பயனாக இன்னும் சில உயிர்கள் அழிந்து போகாமல் காப்பாற்றப்படும். அப்படிச் செய்தால் தான் நம் உயிர்களைக் காப்பாற்றுவதைக் காட்டிலும் மேலான காரியத்தைச் சாதிக்கமுடியும்.

நமது சைனியத்தில் சேர்ந்த விமானதளங்கள், கப்பற்படை இலாகாக்கள் மற்றும் சைனியத்தைச் சேர்ந்த ஒவ்வொரு பதவியிலும் இருந்தவரும் அமெரிக்க வீரர்களை நான் பார்வையிட்டேன்.

நமது சைனியத்தைப் பார்க்க எனக்கு மகத்தான பெருமையையும், திருப்தியையும் கொடுக்கிறது. போர்படை அதிகாரிகளிடத்திலும், போர்வீரர்களிடத்திலும் எனக்கு அதிகதிருப்தி ஏற்பட்டிருக்கிறது. நான் அவர்களைப் பெருமையுடன் பாராட்டுகிறேன். என்ன வேலை செய்த போதிலும் அவர்கள் செய்துவரும் முறையே நமக்கு சந்தோஷத்தை அளிக்கிறது. சென்ற மூன்று வருஷங்களுக்கு மேலாகவே பிரிடனுக்கு நேர்ந்தவைகளைப்போல் நாம் சண்டையில் ஈடுபட்டிருக்கும் இந்த ஒரு வருஷத்திற்குள்ளாக நமக்கு ஒன்றும் நேரிடவில்லை. அக்கம் பக்கத்தில் அவர்களுக்கு சிநேகிதர்கள் இருக்கிறார்களாவென்று கேட்டதற்கு, 'எங்களுக்கு ஏராளமான பேர்கள் சிநேகிதர்களாகி விட்டார்கள்', என்று சந்தோஷமாகப் பதிலளித்தார்கள்.

அவர்களுக்கு என்ன விதமான விபத்துகள் நேர்ந்த போதிலும் அவர்கள் அருவெறுப்புகொள்ளமாட்டார்கள். இந்த யுத்தத்தில் ஜயிப்பதற்கு பிரிடிஷார் தங்களால் முடிந்ததையெல்லாம் செய்து வருகிறார்கள். நம் நாட்டின் பேரில்

படையெடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படவில்லை. பிரிட்டிஷாரர்களின் ஜனத் தொகை மிகவும் குறைவு. அவர்களின் போர்முனைகள் பல இடங்களில் வியாபித்திருக்கின்றன. நமக்கும் அவ்வளவு போர்முனைகள் இருந்தபோதிலும் யுத்தத்திற்கு ஆள் சேர்க்கும் பிரச்னை பிரிட்டிஷாரைப் போல் நமக்கு அவ்வளவு சிரமம் இல்லை. ஆனாலும் நாம் யோசிக்கவேண்டிய சிலவிஷயங்கள் இருக்கின்றன. காலம் நமக்கு சுருக்கமாக இருக்கிறது. ஆகையால் தரைப்படை, கப்பற்படை, விமானப்படை இலாகைகளில் சேவைசெய்யும், ஒவ்வொரு அமெரிக்க வீரனுக்கும் இத்தகைய உற்சாகத்தை கொடுப்பீர்கள் என்று நான் நம்புகிறேன்.

நீங்கள் எங்கிருந்தாலும் உங்களுக்கு கடவுள் அருள்புரிவாராக! யுத்தத்தில் ஜயம்பெறும்வரையில் அமெரிக்க வாலிபர்கள் வீடு திரும்பமாட்டார்கள். ஆதலால் அவர்கள் வெற்றியடையானத்தை மேற்கொண்டு, பரித்தியாகங்கள் செய்து, மகத்தான காரியங்களைச் செய்துமுடிப்பார்கள்".

---

# வட ஆபிரிக்காவில் பிரிடன் செய்த மகத்தான போர்.

---

## சரித்திரப் பிரதான்யம் பெரும் நிகறற்ற சம்பவம்.

வெண்டல் வேல்கி—நியூயார்க் நவம்பர் 20.

1940-41ல் இங்கிலாந்தில் மின்னல் படையெடுப்பு நேரிடும் காலத்தில் நான் அங்கு விஜயம் செய்தபொழுது எனக்கிருந்த அநுபவம்கூட அங்கு ஒருவருக்கும் இல்லை. மனிதன் பொருத்திருக்கும் சக்திக்கு மீறி அந்த சமயத்தில் பிரிடிஷ் மக்கள் மிகவும் தைரியமாகவும், பொருமையுடனும் இருந்து வந்தார்கள்.

ஸ்வதந்திரத்தை பாதுகாப்பதற்காக பெருத்த முயற்சிகள் எடுத்துக் கொண்டு இருக்கும் பிரிடிஷ் மக்களுக்கு உதவியாக அமெரிக்கர்கள் தங்களால் முடிந்த வரையில் பண உதவி செய்து இன்னும் அவர்களுக்கு வேண்டிய அநுதாபமும் காட்டுவார்கள் என்று நம்புகிறேன்.

இப்பொழுது நமது படைகள் வட ஆபிரிக்காவில் நடத்திவரும் போரிலிருந்து ஸெப்டம்பர் மாதம் ஆரம்பத்தில் எல்அலமீனில் நடந்த போரில் தளகர்த்தர் மாண்ட்காமரியின் மகத்தான சாமர்த்தியத்தினால் இப்பொழுது இவ்வளவு தூரம் நடக்கிறதென்று தேச சரித்திரத்தில் எழுதப்படும். இதை நான் மிகவும் பெருமையாகப் பாராட்டுகிறேன்.

யுத்தம் முடிந்தவுடன், பிரிடன் இதற்குமுன் வட ஆபிரிக்காவில் நடத்தியதும், இப்பொழுது நடத்திவருவதுமான மகத்தான போரைப்பற்றி அதிக விமரிசையாக எழுதப்படும். இச்சம்பவங்கள் சரித்திரத்தில் அதிகப் பிரதான்யம் பெறும் என்பது நிச்சயம்.

---

# கொடுமை அடியோடு ஒழிந்துவிடும்.

---

## மிஸ்டர் சர்ச்சில் விடுத்த அறிக்கை.

சென்ற சில வருஷங்களாக தேசசரித்திரத்தைப் பார்க்கையில் ஆக்கிரமிப்பு தேசத்தினர் அண்டை நாடுகளைக் கைப்பற்றவும், பக்கத்து தேசத்தார்களின் ஸ்வதந்திரத்தை அழிக்கவும் ஆரம்பித்தபொழுது எங்கிலும் உள்ள நாகரிகத்திற்கு ஆபத்து நேர்ந்திருக்கிறது தெரியவரும்.



யுத்தத்தில் நாம் வெற்றியடைந்தவுடன், நாம் அடைந்த வெற்றிகளைக் காபந்து செய்துகொண்டு, மீண்டும் உலகத்தார்களுக்கு கேடு நேரிடாமலும், புதிய கொடுங்கோலாட்சி நேரிடாமலும் இருக்கும்படி செய்யவேண்டியது நமது முதல் கடமை.

இந்த யுத்தத்தில் இப்பொழுது நாம் கொடுமைக்காரர்களை அழித்துக்கொண்டிருக்கிறோம். நாம் யுத்தத்தில் வெற்றியடைந்தவுடன் நமது படைகளால் மீட்கப்பட்டிருக்கும் உரிமைகளையும், ஸ்வதந்திரங்களையும் பாதுகாக்கவேண்டிய ஊக்கத்தை நாம் எடுத்துக்கொள்ளுவோம்.

## மிஸ்டர் அவெரெல் ஹாரிமான்.

செஞ்சேனையின் பலத்திலும், ருஷ்யர்களிடத்திலும் எனக்கு முழு நம்பிக்கையுண்டு. அவர்களும் என்பேரில் அதிக நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். கூடிய சீக்கிரத்தில் ஹிட்லர் அழிந்துவிடுவான். இத்தகைய காரியத்தை சாதிப்பதில் செஞ்சேனை மிகவும் மகத்தான சேவைபுரியுமென்பது எனக்கு நன்றாகத் தெரியும்.

பொதுக் காரியத்திற்காக ருஷ்யர்கள் செய்யும் சண்டையில் நமக்கேற்பட்டிருக்கும் திருப்திக்கு அறிகுறியாக போதுமான அளவு அவர்களைப் பாராட்ட முடியாதென்று அமெரிக்கர்களும், பிரிடிஷ்காரர்களும் அறிந்திருக்கிறார்கள். ஏற்கனவே பிரிடனில் மிதமாக இருக்கும் உணவிலிருந்து எடுத்து ருஷ்ய ஜனங்களுக்கு அனுப்பிவரப்படுகிறது. நாம் உட்கொள்ளும் இறைச்சியைக் குறைத்து இன்னும் அதிகமாக ருஷ்யர்களுக்குக் கிடைக்கும்படி செய்துவருகிறோம். சென்ற வசந்த காலத்தில் மூழ்கடிக்கப்பட்ட கப்பலில் ஏற்றிவந்த பொருள்களுக்குப் பதிலாக போரில் ஈடுபட்டிருந்த விமானப்பகுதிகள் வசமிருந்த விமானங்களில் சாமான்களை ஏற்றியனுப்ப ஏற்பாடாயிற்று. மற்ற விஷயங்களைக் காட்டிலும் ருஷ்யாவிற்கு ஸப்ளைகள் அனுப்புவதில் முக்கிய கவனம் செலுத்தும்படி பிரஸிடெண்ட் ரூஸ்வெல்ட் கட்டளையிட்டிருக்கிறார்.

கடைசி பீரங்கி வெடிக்கும்வரை ருஷ்யர்களை நாம் கைவிட்டுவிடவில்லையென்ற நம்பிக்கை அவர்களுக்குப் பூராவாக இருக்கும்படி நாம் செய்யவேண்டும்.

## நெருங்கிப் பழகுதல்.

ஸோவியத் ஐக்கிய அரசாங்கமும், யுனைடெட் ஸ்டேட்ஸும், இப்பொழுது ஒன்றுசேர்ந்து கலந்து நடப்பதுபோல், யுத்தத்திற்குப் பிறகும், உலகத்தை சாமர்த்தியமாகத் திருத்தியமைக்க வேண்டுமானால் இத்தகைய ஒத்துழைப்பு நீடிக்கவேண்டுமென்று ஸ்டாலின் விரும்புகிறார்.

---

# இந்து மஹா சமுத்திரத்திலுள்ள பல முக்கியமான தீவுகள்.

"காபிட்டல்" என்ற பத்திரிகையில், டோனல்டு கூரி என்பவர் எழுதியது.

பூகோளப் படத்தில் தெற்கே ஆஸ்திரேலியாவிலிருந்து வடக்கே எகிப்திலுள்ள ஸூயெஸ் கால்வாய் வரை ஒரு நேர் கோடு வரைந்தாலும், அல்லது இந்தியாவிலிருந்து மடகாஸ்கருக்கு கிழக்கேயிருந்து மேற்கே ஒரு நேர் கோடு வரைந்தாலும் அக்கோடுகள் இந்து மஹா சமுத்திரத்திலிருக்கும் பல தனிப்பட்ட தீவு கூட்டங்களில் ஏதேனும் ஒன்று இரண்டு தீவு கூட்டங்களுக்கு இடையே செல்லும். ஸெய்செலீஸ், மால்டைவ், சாகோஸ், கீளிங் முதலிய தீவுகளின் பெயர்கள் நமக்குப் பழக்கப்பட்டவை போல் இருந்தாலும், பெரும்பாலும் அக்கம்பக்கத்திலுள்ள பல தேசத்து ஜனங்களுக்கு அவைகளைப்பற்றி தெரிந்திருக்காது. இந்த யுத்தத்தில் ஒரு முக்கியமான விஷயம் என்னவென்றால் இந்தத் தீவுகள் எல்லாம் மற்ற பிரசித்திபெற்ற இடங்களும் ராணுவ முக்கிய இடங்களாகவேயிருக்கின்றன. வருங்காலத்தில் நடக்கும் சம்பவங்களினால் இப்பொழுது கடல் யுத்தம் அபிவிருத்தியாகி வருவதில் இந்து மஹா சமுத்திரத்திலுள்ள இந்தத்தீவுகளும் வெற்றி பெறுவதற்கு முக்கிய ஆதாரமாக இருக்கும். இந்த யுத்தத்தில் ஈடுபடுபவர்களும், ஈடுபடும்படி நேரிடுகிறவர்களும் அவற்றின் தன்மைகளைப்பற்றி முக்கியமாகத் தெரிந்துகொள்ளவேண்டியது அவசியம்.

ஏற்கனவே சொன்ன பிரகாரம், மேலே சொல்லப்பட்ட தீவுக் கூட்டங்கள் இந்து மஹா சமுத்திரத்தில் கிழக்கேயிருந்து மேற்கேயும், வடக்கேயிருந்து தெற்கேயும் நேர் வரிசையிலிருக்கின்றன. அவைகளைப்பற்றி தனித்தனியாக ஆராய்வோம். ஆதி முதலில், கிழக்கேயிருந்து பார்ப்போம். முதலாவதாக கீலிங் தீவுகள், ஜாவா தீவுகளுக்குத் தென்மேற்கே சுமார் 500 மைல்களுக்கப்பாலிருக்கின்றன. பிரீமான்டில் (Freemantle) என்றவிடத்திலிருந்து வடமேற்கே அவை 1,500 மைல் தூரத்திலிருக்கின்றன. அவைகளை கோகோஸ் தீவுகள் அல்லது போர்னியோ பவளத் தீவுகள் என்றும் சொல்வதுண்டு. அக்கூட்டத்தில் சுமார் 20 சிறு தீவுகளிருக்கின்றன. அவைகளில் கலப்பு ஜாதியார்களில் சிலர் இருக்கிறார்கள். அங்கு ஏராளமான பெரிய நண்டுகளும் கீர்க்கோழிகளும் இருக்கின்றன. தென்னைமரங்கள் அங்கு ஏராளம். அவைகளைக் கடல் மார்க்கத்திற்கும், ஆகாய மார்க்கத்திற்கும் முக்கிய தளமாக பிரிட்டிஷார் வைத்துக்கொள்ளலாம். அங்கிருந்து ஜப்பானின் ஆதிக்கத்திலிருக்கும் மலேயா தீவுகளைக் கைப்பற்ற நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளலாம். அல்லது ஜப்பானியர்கள் அவைகளைத் தளமாக உபயோகித்துக்கொண்டால் இந்து மஹா சமுத்திரத்தில் செல்லும் பிரிட்டிஷ் கப்பல்களுக்கு இடையூறு விளைவிக்கவும், மேற்கு நோக்கி முன்னேறவும் அவர்களால் முடியும்.

இந்து மஹா சமுத்திரத்தின் மத்திய பாகத்தில், கீலிங் தீவுகளிலிருந்து 500 மைல்களுக்கப்பால் மண்ணும், பாறையும் கலந்த அபாஹாரியா என்ற தனிப்பட்ட பாறை ஒன்று இருக்கிறது. அது படத்தை ஒத்து பிரயாணம் செய்யாதவர்கள் சிலருக்கு மட்டில்தான் தெரியும். அதில் யாதொரு போக்குவரத்துக்கும் சௌகரியம் கிடையாது. ஔரோவுக்கும், ஸிலோனுக்கும் செல்லும் விமானங்களும், அல்லது இந்து மஹா சமுத்திரத்தின் மத்தியிலிருக்கும் சாகோஸ் தீவு கூட்டங்களுக்குச் செல்லும் விமானங்களும் அங்கு இறங்கி எண்ணெய் முதலியவை போட்டுக்கொண்டு செல்வதற்கு வசதியாக இருக்கும். ஔரோவும் மிகவும் முக்கியமான பிரதேசம் என்று சொல்ல முடியாது. அதில் பல சிறு தீவுகள் அடங்கியிருக்கின்றன. ஸிலோனுக்குச் செல்லும் கடல் மார்க்கத்தில் அது அபஹாரியாவிலிருந்து 1,000 மைல் தூரத்திலிருக்கிறது. ஸிலோனிலிருந்து 500 மைல்களுக்கு அப்பாலிருக்கிறது. சிறு விமானங்கள் மட்டில் அங்கு தங்கி எண்ணெய் முதலியவைகளை எடுத்துச்செல்ல வசதியாகயிருக்கும். ஆனால் சாகோஸ் தீவுகள் மிகவும் பெரியதாகவும், அதிக உபயோகமுள்ளதாகவும் இருக்கின்றன.

இப்பிரதானமான தீவுகள் தூக்குத்தூக்காய் அங்கு மிங்கும் இருக்கின்றன. அவைகளின் விஸ்தீர்ணம் 76 சதுர மைல்கள். அவை சுமத்திரா தீவுகளுக்கும், ஆபிரிக்காவுக்கும், அல்லது இந்தியாவுக்கும் மடகாஸ்கருக்கும், அல்லது அரபிக் கடலுக்கும், கீலிங் தீவுகளுக்கும் இடையே சமதூரத்திலிருக்கின்றன. டியோகோ கார்ஸியா என்ற இடத்தில் ஒரு நேர்த்தியான இயற்கை துறைமுகம் இருக்கிறது. சமாதான காலத்தில் அங்கு கப்பல்கள் போய் தங்கும். குறுகிய தூரம் செல்லும் கப்பல்கள் அங்கு தங்கி அவைகளுக்கு வேண்டிய நிலக்கரி மற்ற ஸப்ளைகள் எடுத்துச் செல்லும். அச்சமுத்திரத்தைச் சுற்றிலும் பவளக்கொடிகள் நிறைந்த தொடர் ஒன்று இருக்கிறது. அங்கு விமானங்கள் வந்து தங்குவதற்கு, இலாயக்காக இருக்கிறது. அங்கு ஏராளமாக தேங்காய் எண்ணெய் தயாரிக்கப்படுவதால் இத்தீவு கூட்டம் எண்ணெய்த் தீவுகள் என்றும் வழங்கப்படுகிறது. அவைகளில் ஆபிரிக்காவிலிருந்தும், மடகாஸ்கரிலிருந்தும் வந்த ஆயிரக்கணக்கான தோட்ட வேலைக்காரர்கள் வசிக்கின்றனர். சாகோஸ் தீவுகளிலிருந்து மால்டைவ் தீவுகள் வழியாக வடக்கே இந்தியாவுக்குச் செல்ல பாலங்கள் அமைந்தது போலிருக்கின்றன. மேலும் அங்கிருந்து ஸிய்செலீஸ் தீவுகள் வழியாக மேற்கே ஆபிரிக்காவுக்குச் செல்வதற்கும் வசதியாக இருக்கின்றன.

சாகோஸ் தீவுகளுக்கு வடக்கே பெரு மோலுபெக், ஆடன், ஸூயெடிவா போன்ற சிறு பவளத் தீவுகள் இருக்கின்றன. அவைகளுக்கும் வடக்கே கன்னியாகுமாரி வரையில் சங்கிலித் தொடர்போல் பல தீவுகள் இருக்கின்றன. அவைகளுக்கு மால்டைவ் தீவுகள் என்று பெயர். ஸிலோனுக்குக் கிழக்கே அவை ஒரு திண்டுபோல் காணப்படுகின்றன. அவைகள் மிகவும் சிறியவை. அவைகளிலுள்ளோர் அதிக முன்னேற்றமடையவில்லை. அரபியர்களைச் சேர்ந்த சில



முஸ்லீம் ஜாதியினரே அங்கு வசிக்கின்றனர். மீன் பிடிப்பதும், தேங்காய்களைச் சேகரிப்பதும்தான் அவர்களின் முக்கிய வேலைகள். மேலும் யுத்த தந்திரிகள் அத்தீவுகளை நல்ல விமான தளங்களாகவும், தகுதியான கப்பற்படை தளங்களாகவும் உபயோகப்படுத்திக்கொள்ளலாம் என்று வெகு எளிதில் கண்டு பிடித்து விடுவார்கள்.

கப்பற்படைக்கு உதவியாக விமானப்படையை உபயோகிப்பதால் ஜப்பானியர்கள், கடற்சண்டை முறையை அடியோடு மாற்றியிருக்கிறார்கள். இதற்குமுன் இத்தீவுகள் அதிக பிரபலமாக இல்லாதிருந்த போதிலும், கப்பற்படைகளுக்கு போதிய அளவு விமான உதவி கொடுப்பதற்கு இவை உபயோகமுள்ளதாக இருக்கின்றன. இம்மாதிரியாக ஒரு தீவிலிருந்து மற்றொரு தீவிற்குப் போக எளிதாக இருப்பதினால் ஆகாய விமானங்களுக்கு வேண்டிய ஸப்ளைகளைக் கொடுப்பதற்கு முடியும். அவைகளும் நமக்கு குடைபோல் பாதுகாப்பளிக்கவும் கூடும். ஆகையினால் இந்துமஹா சமுத்திரத்திலுள்ள இந்தத் தீவுகளுக்கும் புதிய மவுசு ஏற்பட்டிருக்கிறது.

சாகோஸ் தீவுகளுக்கும், ஸிய்செலீஸ் தீவுகளுக்கும் இடையே மேற்கு நோக்கி ஒரே வரிசையில் பல குன்றுகளும், சங்கிலித்தொடர் போன்ற பாறைகளும், ஏராளமாக பவளச்செடிகள் நிறைந்த பாறைகளும் இருக்கின்றன. அத்தீவுகள் ஒன்றுக்கொன்று 100 மைல்களுக்குக் குறைந்த தூரத்தில்தான் இருக்கின்றன. ஆனால் ஸிய்செலீஸ் தீவுகள் அதிக விஸ்தாரமாக 50,000 சதுர மைல்கள் பரவியிருக்கின்றன. அந்த விஸ்தீர்ணத்தில் 34 முக்கிய தீவுகளும் அடங்கியிருக்கின்றன. அவற்றில் முக்கியமான தீவு மாஹி. அதிலுள்ள துறைமுகத்திற்கு விக்டோரியா துறைமுகம் என்று பெயர். அது அதிக முக்கியத்துவம் வாய்ந்த டீகோ கார்ஸியாவை (Diego Garcia) ஒத்து இருக்கிறது. அங்கு அநேக வருஷங்களாக ஒரு கப்பற்படையின் தளம் இருந்து வந்தது. இன்னும் நிலக்கரி, எண்ணெய் சேமித்துவைக்கு மிடங்களும் அநேகம் இருந்தன. பிரம்மாண்டமான ஆமைகள், இரட்டைத் தேங்காய்கள் காய்க்கும் தென்னை மரங்கள், இன்னும் பல விசித்திரமான சிருஷ்டிகள் அச்செழுமையான பிரதேசத்தில் காணலாம். ஒரு சமயம் ஜெனரல் கார்டன் அங்கு சென்று அந்த அற்புதமான ஊரைப் பார்த்ததும் ஒருக்கால் அது "ஈடனின் தோட்டமோ" வென்று பிரமித்துவிட்டார். இந்து மஹா சமுத்திரத்தில் கிழக்கேயிருந்து மேற்குப் பக்கமாக இருக்கும் தீவுகளின் வரிசையில் ஸிய்செலீஸ்தான் கடைசி தீவுகள். அங்கிருந்து மொம்பாஸாவும் கிழக்கு ஆபிரிக்கக் கடற்கரையும் 800 மைல் தூரத்திலிருக்கின்றன.

இந்த விஷயங்களெல்லாம் இம்மாதிரி நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்பதற்காகச் சொல்லப்பட்டவையல்ல. இந்து மஹா சமுத்திரத்தில் நம்முடைய பிரயத்தனத்தினாலோ அல்லது எதிரியின் பிரயத்தனத்தினாலோ நிச்சந்தேகமாக யுத்தம் வரும். அப்படி வரும்பொழுது இவற்றை ஆதாரமாகக் கவனிக்கலாம். நாம் மடகாஸ்கரைப் படையெடுத்தது, இந்து மஹா சமுத்திரத்தில் நம்மால் நடத்தப்படும் நடவடிக்கைகளுக்கு ஆரம்பமாக இருக்கவேண்டியதற்காகச் செய்யப்பட்டது. அதுபோல் மேற்குப்புறத்தில் தன் போக்குவரத்துகளைப் பலப்படுத்திக்கொள்ள வேண்டுமென்ற நோக்கத்துடன் வங்காளக்குடாக்கடலில் அந்தமான் தீவுகளை எதிரி ஆக்கிரமித்துக்கொண்டான்.

## லிபியாவில் கிடைத்த வெற்றியில் கூர்க்கர்களின் பாகம்.

### நேபால் மகாராஜாவின் பாராட்டுதல்.

வட ஆபிரிக்காவில் கூர்க்கர்களும், பஞ்சாபியர்களும் பிரமாதமாக யுத்தம் செய்து மகத்தான வெற்றியடைந்திருக்கிறார்கள் என்ற விஷயத்தைக் கேட்க சந்தோஷமடைகிறேன். மேலும் அவர்கள் 5,000 இதாலியர்களைக் கைதி செய்தது போற்றத்தகுந்த விஷயம். இந்த யுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் கூர்க்கர்களை

நான் மிகவும் பாராட்டியதாகவும், அவர்களின் முன்னோர்களின் கியாதிக்குத் தகுந்தவிதமாக நடந்துகொண்டு வருகிறார்கள் என்பதைக் கேட்க நான் சந்தோஷமடைவதாகவும் அவர்களிடத்தில் சொல்லுங்கள். பிரிடிஷ் அரசாங்கத்தின் ஆதரவின் கீழிருந்துகொண்டு, இதுவரை அதிக பிரக்யாதியுடன் நடந்துகொண்டிருக்கிறார்கள் என்றும், இனிவரப்போகும் நாட்களில் வெகு கீர்த்தியுடன் நடந்துகொள்வார்கள் என்றும் அவர்களிடத்தில் சொல்லுங்கள்.”

## ராணுவ தளகர்த்தரின் பதில்.

கூர்க்கர்களின் தீரத்தை மெச்சி அவர்களையும் பாராட்டி அனுப்பிய செய்தியை லிபியாவில் எட்டாவது சைனியத்துடன் சேர்ந்திருக்கும் கூர்க்கப்பகுதிகளிடம் சேர்த்துவிடுகிறேன்.

நமது கூர்க்கப்படைகளும், இந்தியத் துருப்புகளும் அதியற்புதமாகப்போர் செய்து ரோமலின் சைனியங்களை முறியடித்துவிட்டார்கள். நம்மவர்களில் இறந்தவர்கள், காயம்பட்டவர்கள் இவர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவு. மேலும் ஏற்கனவே கைதியாக்கப்பட்ட கூர்க்க சிப்பாய்களில் 200 பேர்கள் மீட்கப்பட்டிருக்கிறார்கள். இதற்கு மாறாக எதிரிகளுக்கு மிக்க பலத்த சேதம் ஏற்பட்டிருக்கிறது. ஏராளமான பேர்கள் கைதியாக்கப்பட்டனர். மேலும் அநேக டாங்கிகளும், பல ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டிருக்கின்றன. நமது இந்தியத் துருப்புகள் இனி அடையப்போகும் முடிவான வெற்றிக்கு ஆரம்பமாயுள்ள இந்த வெற்றிகளில் நானும் தங்களுடன் சந்தோஷப்படுகிறேன்.

---

# நவீன யுத்த ரெக்ரூட்.

(முகாம் யுத்த சஞ்சிகை.)

ஒருவர் போர் வீரராக இருந்தால், அவரைப் பற்றி சிலர் எவ்வளவு தப்பெண்ணங்கள் கொள்ளுகிறார்கள் தெரியுமா? இந்த மகா யுத்தம் ஆரம்பமாகி 3 வருஷங்கள் ஆகி விட்டன. இவ்வளவு காலத்திற்குப் பிறகும் கூட, ஒரு போர் வீரராகவோ சிப்பாயாகவோ இருப்பது பற்றி சிலர் பயப்படுகிறார்கள். அது, ஒரு கேவலமான வேலையென்றும், துப்பாக்கியைக் கையில் தூக்கிக் கொண்டு போக வேண்டியதைத் தவிர வேறு வேலை கிடையாதென்றும் நினைக்கிறார்கள். இந்தத் தப்பிதமான எண்ணத்தினால், எவ்வளவு மகத்தான கேடு உண்டாகியிருக்கிறதென்று, இந்த யுத்தம் வெகு தெளிவாக நமக்கு எடுத்துக் காட்டி இருக்கிறது. ஏனென்றால், இன்றைய படைவீரர், சிறந்த புத்திசாலிகளாகவும், கற்றுத் தேர்ந்தவர்களாகவும், பெரிதும் முன்னேற்ற மடைந்தவர்களாகவும் இருக்க வேண்டியதாயிருக்கிறது.

ஒரு ரெக்ரூட் பெறும் பயிற்சி, ஒரு மனோகரமான கல்வி, உடல் நிலையைத் திருத்தியமைப்பது; ஒழுக்க முறையைச் சீர்ப்படுத்துவது. படைவீரருக்குரிய எல்லாத் தகுதிகளும் பெற்றவர் தான் உண்மைப் படைவீரர். பின் வாங்காது போர் புரியும் திறமை இவருக்கு இருக்கவேண்டும். இதற்கு, கல்வியின் உண்மையான தத்துவங்களை அவர் உணர்ந்து கொள்ளவேண்டும். அடுத்தடுத்து நேர்ந்த பல சம்பவங்களை ஒன்றாகத் தொகுத்து, சுருக்கமாகவும் தெளிவாகவும் செய்தி எழுதி யனுப்ப அவர் திறமை வாய்ந்தவராய் இருக்கவேண்டும். நன்றாகப் படித்துத் தேறியவர்கள் கூட, இதைச் சரிவர எழுதுவதில்லை. ஒரு தேசப் படத்தைக் கொண்டு, தான் உள்ள இடத்தையும், தான் போக வேண்டிய பாதையையும் தெரிந்து கொள்ளவேண்டும். அது பற்றி தெளிவாக அறிக்கை எழுதி அனுப்பும் திறமையும் அவருக்கு வேண்டும். இவற்றிற்கு, படிக்கவும், எழுதவும், கணக்குப் போடவும், பூகோளமும் நன்றாகப் படித்திருக்கவேண்டும்.

உடல் நன்றாகத் தேறி, பலமாகவும் கட்டாகவும் இருந்தால், கைகளையும் கால்களையும் நன்றாக வீசி நடக்க முடியும். வழியில் உண்டாகும் தடைகள் எல்லாம் அப்போது ஒரு பொருட்டல்ல. கெடுக் காரமானாலும் லக்ஷியமில்லை.



முகத்தில் ஒரு இன்பக்குறி தாண்டவமாடுகிறது. கண்களில் ஒளி வீசுகிறது. தன் நம்பிக்கை உண்டாகிறது. எல்லா விதப் படை ஆயுதங்களையும் கையாளுவதில் மிகவும் திறமை உண்டாகிறது. கடும் வெயிலிலும் மணிக்கணக்காக ஓயாமல் பள்ளங்களைத் தோண்டிக் கொண்டிருக்கக் கூடும். இடையில் அவர் சிகரெட் பிடிப்பதில்லை. தண்ணீர் குடிப்பதில்லை. அது போலவே மணிக்கணக்காக இரும்பு முள் வேலிகள் அடைக்கலாம். விஷ வாயு தன்னைத் தாக்காதபடி தடுத்துக் கொள்ளலாம். இப்படிப்பட்டவர், எதிரியை எங்கே தாக்கலாமென்று தேடிக் கொண்டிருப்பார். எப்போதும் எச்சரிக்கையாகவே இருப்பார். இவை எல்லாவற்றையும் விட, மிகவும் முக்கியமானதோர் பழக்கம் அவருக்கு அமைந்திருக்க வேண்டியது அவசியம். அதாவது மேல் அதிகாரிகள் எப்படிப்பட்ட கட்டளையிட்டாலும் கொஞ்சம் கூடத் தாமதிக்காமல், முழு மனதோடு சந்தோஷமாக, உடனே அதை நிறைவேற்ற வேண்டும்.

இப்படிச் செய்ய எல்லா ரிக்ரூட்டுகளாலும் முடியாது. அதனால் மிகவும் சிறந்த தகுதியுள்ளவர்களைத்தான் இப்போது சேர்த்துக்கொள்ளுகிறார்கள். இந்தத் தகுதிகள் எல்லாம் ஒரு ரிக்ரூட்டுக்கு ஏற்பட்டு விடுகிறதென்று வைத்துக் கொள்வோம். அப்போது சிவில் வாழ்விலுள்ள அநேகரை விட, இவர் மிகவும் மேலானதாகவும், அதிக சுகாதாரத்தோடும், மிகவும் சந்தோஷமாகவும் இருப்பார்.

இந்தப் பயிற்சி பெறும் காலத்தில், தாம் என்னென்ன செய்ய வேண்டுமென்று கேள்விப்பட்டு அவர் மனம் குழம்பிப் போவதுமுண்டு. ஆனால், அவர்களுக்கு அங்கே நல்ல உணவு கிடைக்கிறது. சிறந்த முறையில் அவர்களை நடத்துகிறார்கள். இவர்களுடைய உபாத்தியாயர்களும் மிகவும் ஊக்கத்தோடும் புத்திசாலித்தனமாகவும், இவர்களுக்குச் சொல்லிக் கொடுக்கின்றனர். இவற்றால் அவருடைய மனக் குழப்பம் மாறுகிறது. மனம் உறுதிப்படுகிறது. மகிழ்ச்சியோடும் ஊக்கத்தோடும் பயிற்சியில் முன்னேறுகிறார்.

“ஒழுக்க”த்தைப் பற்றி இந்த யுத்தத்தில் நாம் வெகுவாகக் கேள்விப்படுகிறோம். ஒழுக்கத்தில் உயர்ந்துள்ள ஒரு படை, ஒழுக்கமில்லாத அதே எண்ணிக்கையுள்ள மற்றொரு படையை வெகு எளிதில் வென்று விரட்டி விட முடியும்.

வங்காளத்தில் ப்ளாஸி யுத்தத்தில் 50,000 பேர்களைக் கொண்ட பெரும் படையை 3,000 பேர்களைக் கொண்ட சென்னைப் படையினரைக் கொண்டு க்ளைவ் பிரபு வெல்லவில்லையா? அவருடைய உத்வேகத்தாலும் ஊக்கத்தாலும், இவருடைய படையின் ஒழுக்க நிலை மிகவும் ஓங்கி யிருந்தது. தம் தலைவர் கட்டளை எதுவானாலும், அதை நிறைவேற்ற அவர்கள் அனைவரும் ஆயத்தமாயிருந்தனர். ப்ளாஸி யுத்தம் நடை பெற்ற போது கடும் மழை, மின்னல், இடி, இவ்வளவு கஷ்டத்திலும் சென்னைப் படையினர் திடுக்கிடத் தக்கபடி வெற்றி பெற்றனர்.

ஒவ்வொரு படைக்கும் தனிப் பெருமையுண்டு. இது பற்றி அந்தப் படையினர் பெருமை யடைகிறார்கள். இதற்கும் அந்தப் படையின் ஒழுக்கத்திற்கும் சம்பந்தமுண்டு. இதனால் தான் ரிக்ரூட்களுக்கு அவரவர் படைகளின் சரித்திரத்தையும் சொல்லிக் கொடுக்கிறார்கள். எப்போதும் ஒவ்வொரு ராணுவ உத்தியோகஸ்தருக்கும் உயர்ந்த நோக்கம் ஒன்று உண்டு. மற்ற படைகளை விட, தன் படை, ஒழுக்கத்திலும் போராடவேண்டும் என்னும் உணர்ச்சியிலும், மிகவும் உயர்ந்திருக்கவேண்டுமென்று விரும்புவது தான் அந்த நோக்கம்.

சலாம் செய்வது, தம் உடுப்புகளைச் சுத்தமாக மடிப்பு குலையாமல் முறைப்படி வைத்திருப்பது, நாள் தோறும் காலையில் க்ஷவரம் செய்து கொள்ளுவது, தாம் இன்ன படையைச் சேர்ந்தவர் என்பது பற்றி பெருமை கொள்ளுவது ஆகியவையையும் ராணுவத்தார் ஒழுக்கம் என்று தான் கூறுகிறார்கள். இது ஆச்சரியந்தான்.

தம் படையின் ஒழுக்கத்தை புதிய ரிக்ரூட்டுகள் வெகு விரைவில் தெரிந்து கொள்ளுகிறார்கள். புகழ்பெற்ற பட்டாளங்களைப் பல துண்டுகளாகப் பிரித்து ஒவ்வொரு பிரிவோடும் பல ரிக்ரூட்டுகளைச் சேர்த்து, தனித் தனிப் படைகளாக

அமைத்திருக்கிறார்கள் என்றாலும் அந்த முன்பு படை [illegible] பிடித்தந்த வீரர்களைப் போலவே, இந்தப் பிரிவுக்குப் படைகளின் வீரர்களும் இருக்கிறார்கள். இதற்குக் காரணம் அந்தப் படை உணர்ச்சி தான்.

கடும் உழைப்பைத் தாங்கத் தக்க உடற்பயிற்சியும், மனம் உறுதி அடையத் தக்க பயிற்சியும் மட்டும் போதுமா? போர் முறைப் பயிற்சியும் வெகுவாக அளிக்கப்படுகிறது. இவை மட்டுமன்றி வழக்கம் போல வகுப்புகளில் நடைபெறும் பாடங்களும், சந்தர்ப்பங்களில் எப்படி எப்படி நடந்து கொள்ளவேண்டும் என்பதற்கான பயிற்சிகளும் தற்காலப் போர் முறைகளைக் குறித்த பாடங்களும் சினிமாப் படங்களைக் கொண்டு சொல்லிக் கொடுக்கப்படுகின்றன. யுத்தத்தின் போக்கைக் குறித்து கேள்விகள் கேட்கவும் விவாதிக்கவும் பள்ளிக்கூட நேரத்தில் ஒரு பகுதியை ஒதுக்கி யிருக்கிறார்கள். அப்போது, ராணுவ நிலைமையைக் குறித்தும், அரசியல் நிலைமையைக் குறித்தும் ராணுவப் பயிற்சியையும் கொள்கையையும் குறித்த எந்த விஷயத்தைப் பற்றியும் அவர்கள் விவாதித்துப் பேசலாம். பெங்களூர் பள்ளிக்கூடம் உள்ளிட, எல்லா ராணுவப் பள்ளிக்கூடங்களிலும் தற்கால ராணுவ சம்பந்தமான புத்தகங்களும் அரசியல் சம்பந்தமான புத்தகங்களும் கொண்ட சிறந்த புத்தக சாலைகளை வைத்திருக்கிறார்கள். இன்னும் பல காதற் கதை புத்தகங்களும் மற்ற பலவகை புத்தகங்களும் அங்கே உண்டு.

திறமையுள்ள கமிஷன் உத்தியோகஸ்தராக ஒருவர் ஆக வேண்டுமானால் 6 மாத கால பயிற்சி மிகவும் கொஞ்சம்தான். எல்லோரும் நல்லெண்ணத்தோடு கடுமையாக உழைத்தால்தான், இப்பயிற்சி வெற்றி தரும். இந்தப் பயிற்சி எல்லா வகைகளிலும் மிகவும் பரந்தது. திறமை சாலியாய் இருந்தால் மட்டுந்தான் இதில் முடியும்.

**இந்த யுத்தத்தில் நாம் வெல்ல வேண்டுமானால், நம் படைகளைத் தலைமை வகித்து நடத்திப் போகும் திறமை சாலிகள் தான் வேண்டும்.**

---

## எ. ஆர். பி. குறிப்புகள்.

(வங்காள ஸ்பெஷல் பிரசார உத்தியோகஸ்தர் மிஸ்டர், ஸெத் ட்ருக்கர், I. C. S. தயாரித்தது.)

A விமானப்படை யெடுப்பு எச்சரிக்கைச் சங்கு ஒலித்ததும் பாதுகாப்பு ஸ்தலங்களுக்குள் சென்றுவிட்டால் ஆபத்து ஏற்படாது.

B எறி குண்டுகளை அணைப்பதற்கு ஒவ்வொரு வீட்டிலும் ஒரு தொட்டி நிறையத் தண்ணீர் வைக்கப்பட்டிருக்கவேண்டும்.

C காதில் கொஞ்சம் பஞ்சைவைத்து அடைத்துக்கொண்டால் குண்டுகளின் சப்தத்தினால் காதுகளுக்கு ஏற்படும் தீங்கு சற்று குறையும்.

D ஒவ்வொருவரும் தன்னுடைய விவரங்களைத் தெரிவிக்க ஒரு அடையாளத்தை (disc) வைத்துக்கொள்ளுவது நலம். அதைக்கொண்டு காயமடைந்தோர் இன்னாரென்று கண்டு பிடித்துவிடலாம்.

E அவரவர்கள் சொந்த நிலங்களில் நெல், கோதுமை துவரை முதலியவைகளை அதிகமாக உற்பத்தி செய்தால் ஏராளமாக உணவு கிடைக்கும்.

F பிரதம சிகிச்சையைப்பற்றி வீட்டிலுள்ளோர் ஒவ்வொருவருக்கும் பழக்கம் இருக்கவேண்டும்.

G வீட்டில் இருக்கும் கண்ணாடிக் கதவுகளைத் துணியாலோ, கடுதாசியினாலோ காபந்து செய்து வைத்திருந்தால் குண்டுகள் வெடித்துத் தெரித்து விழும் துண்டுகளால் கெடுதி ஏற்படாது.

H பறந்து வெடிக்கும் குண்டுகள் விழுங்காலத்தில் தரையில் குப்புறப் படுத்துக் கொள்ள வேண்டும். மார்பை சற்று உயர்த்திக்கொண்டு இரு கைகளாலும் இருகாதுகளையும் மூடிக்கொள்ளவேண்டும்.



I எறி குண்டுகளை மணல் பைகளாலும் தண்ணீராலும் உடனே அணைத்து விடவேண்டும்.

J ஜப்பானியர் நம்மள் யாவரையும் அடக்க விரும்புவதால் நாம் ஏ. ஆர். பி. ஸ்தாபனத்தை சரிவர நடத்தினால் அவர்களால் வெற்றிபெறமுடியாது.

K அயலார்கள் யாவருக்கும் அன்பு, சிநேகம், முதலியவைகளைக் காண்பித்து எதிரியை எதிர்த்து நிற்கும்படி செய்யவேண்டும்.

L லண்டன், எதிரிப்படையெடுப்பு காலத்தில் நடந்து கொண்டவிதமாக ஒவ்வொரு நகரமும் நடந்து கொண்டால் படையெடுப்பினால் ஏற்படும் தீங்குகளைத் தவிர்த்துவிடலாம்.

M நாம் கலவரமடையாமல் ஒன்றுபட்டு நின்றால் ஜப்பானிய விமானப்படையெடுப்பினால் கெடுதிகள் நேரிடாது.

N பாதுகாப்பு ஏற்பாடுகளில் கலந்து கொள்ளாமல் பொய் வதந்திகளைப் பரப்பக்கூடாது.

O இராக் காலங்களில் ஜன்னல்கள் மூலமாக வீட்டிலிருக்கும் வெளிச்சம் வெளியில் எதிரி விமானிகளுக்குத் தெரியாமலிருக்கும்படி விளக்குகளுக்கு மூடி போட வேண்டும்.

P பக்காவான கட்டடங்கள் இல்லாத இடத்தில் இதர பாதுகாப்பு ஸ்தலங்களை அமைக்கவேண்டும்.

Q படையெடுப்பு எச்சரிக்கையைக் கேட்டதும் பாதுகாப்பு ஸ்தலங்களுக்குள் மெதுவாகச் சொல்லவேண்டும். ஓடினால் காயமேற்படும்.

R ஆதாரமில்லாத வதந்திகளைக் கிளப்பிவிடக்கூடாது.

S எறிகுண்டுகளை அணைக்க மணல் மூட்டைகளை அதிகம் வைத்திருக்க வேண்டும்.

T பூமிக்குள் பாதுகாப்பு குழிகள் வெட்டப்பட்டிருந்தால் குண்டுகளால் தாக்கப்படாமல் பாதுகாத்துக்கொள்ளலாம். அவைகள் ஒவ்வொன்றிலும் குறைந்தது 30 பேர்களாவது பத்திரமாய் இருக்கலாம். குழிகளை அசுத்தப்படுத்தக்கூடாது.

U வெடிக்காத குண்டுகளின் அருகில் செல்லக்கூடாது. அது மருந்து கெடித்த பீரங்கிக்குச் சமமானதால் எந்த சமயத்திலும் வெடிக்கும்.

V படையெடுப்புக்குப் பின்னர் சொந்த வண்டிகளைக் கொடுத்து உதவவேண்டும். செய்திகளை அனுப்ப இவைகள் தேவையாக இருக்கும்.

W ஏ. ஆர். பி. வார்டன் இருக்குமிடத்தை நீங்கள் தெரிந்து கொள்ளவேண்டும். உங்களுக்குக் கஷ்டம் வருங்காலத்தில் உங்களுக்கு உதவுவதுதான் அவரது வேலை.

X விமானப் படையெடுப்பு பாதுகாப்பு எச்சரிக்கைகளை நீங்களும் அனுஷ்டித்து பிறருக்கும் போதிக்கவேண்டும்.

Y சிறுவர்களைப் பத்திரம் செய்ய வேண்டியதாகையால் கவனமில்லாமல் தெருக்களில் ஓடவிடவேண்டாம்.

Z மேலே கண்ட குறிப்புகளின்படி யாவரும் நடந்து கொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

---

# ‘வி’ டயரி-1943.

(குறிப்பு புஸ்தகம்).

லினன் ரூ. 1—4—0; ஷீப்ஸ்கின் ரூ. 1—8—0;
மொராக்கோ ரூ. 2—0—0.

லாபம் யுத்தநிதிக்குச் சேர்க்கப்படும்.

கீழ்கண்ட விலாசத்திலிருந்து வாங்கிக்கொள்ளலாம்.—

காரியதரிசி,
தேசிய யுத்த முன்னணி நிலயம்,
புதுக்கோட்டை (தென் இந்தியா).

## பிரஸங்க நிகழ்ச்சி முறை.

### பிரஸங்கம் 123.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 28-11-42 | முனிஸிபல் ஆபீஸ்... | மாலை | 7.45 | 2-12-42 | ராணி பெண் பாடசாலை. | காலை | 10.15 |
| 29-11-42 | கீரப்பழனி ... | ,, | 7.00 | ,, | காலேஜ் A & B ... | ,, | 10.15 |
| ,, | ஆலூர் ... | ,, | 7.30 | ,, | கொன்னையூர் ... | மாலை | 7.00 |
| 30-11-42 | காரையூர் ... | ,, | 7.00 | ,, | மேலவேகுப்பட்டி. | ,, | 7.30 |
| ,, | கீழத்தானியம் ... | ,, | 7.30 | 3-12-42 | வடவாளம் ... | ,, | 7.00 |
| 1-12-42 | அண்டக்குளம் ... | ,, | 7.00 | ,, | செம்மட்டிவிடுதி ... | ,, | 7.30 |
| ,, | இள்ளனூர் ... | ,, | 7.30 | 4-12-42 | நார்த்தாமலை ... | ,, | 7.00 |
| 2-12-42 | C. S. M. பள்ளிக் கூடம். | காலை | 10.00 | ,, | உப்பிலியக்குடி ... | ,, | 7.30 |

### பிரஸங்கம் 124.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 5-12-42 | முனிஸிபல் ஆபீஸ்... | மாலை | 7.45 | 9-12-42 | ராணி பெண் பாடசாலை. | காலை | 10.15 |
| 6-12-42 | திருவரங்குளம் ... | ,, | 7.00 | ,, | காலேஜ் A & B ... | ,, | 10.15 |
| ,, | வம்பன் ... | ,, | 7.30 | ,, | பள்ளிவாசல் ... | மாலை | 7.00 |
| 7-12-42 | திருமயம் ... | ,, | 7.00 | ,, | பில்லமங்கலம் ... | ,, | 7.30 |
| ,, | மேலூர் ... | ,, | 7.30 | 10-12-42 | பு, புதப்பட்டி ... | ,, | 7.00 |
| 8-12-42 | குளவாய்ப்பட்டி ... | ,, | 7.00 | ,, | வேர்தம்பட்டி ... | ,, | 7.30 |
| ,, | கீழையூர் தெற்கு ... | ,, | 7.30 | 11-12-42 | புலியூர் ... | ,, | 7.00 |
| 9-12-42 | C. S. M. பள்ளிக் கூடம். | காலை | 10.00 | ,, | கண்ணங்குடி ... | ,, | 7.30 |

### யுத்தத்திற்கு ஆள் சேர்த்தல்—விளம்பரம்—மாலை 4-மணி.

| | | | |
|---|---|---|---|
| 28—11—42 | பொன்னமராவதி. | 5—12—42 | திருமயம். |
| 29—11—42 | தீத்தான்விடுதி. | 6—12—42 | மருதகோன்விடுதி. |
| 30—11—42 | கொன்னையூர். | 7—12—42 | கீரனூர். |
| 1—12—42 | குடுமியாமலை. | 8—12—42 | வடகாடு. |
| 2—12—42 | கீழாநிலை புதுப்பட்டி. | 9—12—42 | ராயவரம். |
| 3—12—42 | ஆலங்குடி. | 10—12—42 | குழிபிறை. |
| 4—12—42 | பாப்பாபட்டி. | 11—12—42 | புதுக்கோட்டை. |

Sri Brihadamba State Press, Pudukkottai. 2,000—30-11-42.

69409

புதுக்கோட்டை ஸமஸ்தான
தேசிய யுத்த முன்னணி நிலயம்.

பிரசுரம்] 1942-ம் டிஸம்பர்மீ 5உ [ந. 124

JL
W 1194:19(

பிரஸங்கம் CXXIV.

# வெற்றிமணிகள் ஒலித்த வாரத்திற்குப் பிற்பட்டு நடந்தவை.

(மிஸ்ட்டர் சர்ச்சில், லண்டன், நவம்பர் 29).

“மனக்கோட்டைகள் கட்டினாலும், பலவித திட்டங்களைப் போட்டாலும், காரியாம்சையில் ஈடுபடவேண்டும்.

வெற்றியையும் தோல்வியையும் சமமாகப் பாவிக்க வேண்டும்.”

## எல் அலமீன்.

இருவாரங்களுக்கு முன்பாக, எல்அலமீனிலிருக்கும் நமது படைகள் அடைந்த வெற்றியைக் கொண்டாட நாம் வெற்றி மணிகளை அடித்தோம். இது சரித்திரத்தில் விசேஷத்தைப் பெறக்கூடிய ஒரு ராணுவ சம்பவமாகும். இது வரை நம்முடைய குற்றம் குறைகளுக்கிடையில் நாம் வெற்றியை அணுகி வந்திருப்பதை முன்னிட்டு அந்த மணி சப்தத்தின் மூலமாக கடவுளுக்கு வந்தனத்தையும் தெரிவித்தோம்.

இருந்தாலும் நாம் இனித்தான் பூர்ண வெற்றியை அடையவேண்டும். ஆனால் நம்முடைய வாழ்க்கையையும், நம்முடைய லக்ஷியங்களையும் அழிக்கக் கூடிய கடும் விபத்துக்களைத் தாண்டி மனிதவர்க்கத்தின் முன்னணியில் நாம் நிற்பதற்கு நமக்கு அர்ஹதை உண்டாகிவிட்டது. நமக்கு முன்னுடி நேர்ந்த கஷ்டங்களைத் தெரிந்துகொண்டால் தான், இந்த மூன்று வருஷ காலமாக நாம் எப்படி சமாளித்து வந்திருக்கிறோமென்று தெரிந்துகொள்ளலாம்.

நாம் வீண்பெருமையோ அளவுக்கு மிஞ்சிய நம்பிக்கையோ கொண்டு உண்மை நிலையைப்பற்றி அறியாமலிருந்துவிடக்கூடாது. ஆனால் உலகின் விடுதலையையும், க்ஷேமத்தையும் காப்பதில் நாம் கௌரவமாகப் பங்கெடுத்துக்கொள்ளலாம் என்ற எண்ணம் நமக்கு உரிமை இருக்கிறது.

ஆபத்து நெருங்கிய சமயத்தில் பல நாடுகளும், ஜாதியினரும் அடங்கிய நமது சாம்ராஜ்யமும் பிரிடிஷ் தீவுகளும் போய்விடும் போலிருந்தது. ஆனால் நாம் கொஞ்சம் திடமாக நின்றோம். சாம்ராஜ்யம் பூரா எல்லா நாடுகளும் சரியாக நடந்து கொண்டன.

நேசநாடுகள் பூராவும் வெற்றியிலுள்ள நம்பிக்கை என்ற தீபத்தை நாம் அணையவிடவில்லை. ஆகையால்தான் நாம் கொஞ்சம் தலையை நிமிர்ந்து நின்று வெற்றிமணிகளை அடிக்கவும் உரிமை கொண்டோம்.

### வட ஆபிரிக்கா.

ஆபிரிக்காவில் அமெரிக்காவும் பிரிடனும் எவ்வளவோ சிரமங்களைத் தாண்டி அதிகமான வெற்றியை அடைந்திருக்கின்றன. அந்தக் கடல்களில் எங்கும் எதிரி யூ படகுகளும், சீதோஷ்ண நிலையும் பாதகமாக இருந்தது. அப்படி இருந்தும் அங்கு சென்ற லக்ஷக்கணக்கான படைகளை, நவீனமான சாதனங்களுடன் ரகசியமாக, பெரும் கடல்களைத் தாண்டி இறக்கியதே பெரும் ஆச்சரியத்தை அளிக்கிறது.

### இதாலி.

பிராஞ்சு வட ஆபிரிக்காவில் நாம் செய்து வரும் நடவடிக்கைகளிலிருந்து இதாலியிலேயே நாம் சென்று யுத்தத்தை நடத்த முடியும். அப்போதுதான் இதாலிய பாஸிஸ்டு கட்சித் தலைவர்களும், இதாலிய மக்களும் உணருவார்கள். அவர்களை முஸோலினி ஏமாற்றி அவமானத்திற்குள்ளாக்கினன்.

ஏற்கனவேயே இதாலியின் வடபாகங்களிலுள்ள யுத்த சாமான்களைச் செய்யும் தொழிற்சாலைகள் கடுமையாகத் தாக்கப்பட்டிருக்கின்றன.

நாம் செய்துவரும் முயற்சிகளின்படி டூனிஸ்ஸிலிருந்து எதிரி துரத்தப்பட்டால் தெற்கு இதாலியிலுள்ள கப்பற்தளங்களும், யுத்த சாமான்களின் கிடங்குகளும், ராணுவ லக்ஷியங்களும் விமான மூலம் தவிடு பொடியாக்கப்படும்.

இவ்விதமான ஆபத்து தங்களுக்கு வேண்டுமா, வேண்டாமா என்று 4 கோடி இதாலியர்களாகத்தான் தீர்மானித்துக் கொள்ளவேண்டும்.

முஸோலினி ஒருவன் தான் அவர்களுக்கு இவ்வித கஷ்டத்தை உண்டாக்கினன். யுத்தத்தில் சேர வேண்டிய தேவையே இதாலியர்களுக்குக் கிடையாது. அவர்களாக யுத்தத்தில் சேராத போனால் அவர்களை ஒருவரும் தாக்கப் போவதில்லை. சமாதானம், சௌக்கியம், முதலியவைகளை அநுபவித்துக்கொண்டு நடுநிலைமையிலேயே இருக்கவேண்டுமென்று தான் நாம் சொன்னோம்.

### ஆக்கிரமணை ஆசை.

ஆனால் பிரான்ஸுக்கு பிரிடனின் உதவியில்லை என்று தெரிந்துகொண்டு பிரான்ஸை முஸோலினி அப்போது தாக்கினன். சாம்ராஜ்யம் கொண்டிருப்பதாக பைத்தியக்காரத்தனமாக எண்ணிக்கொண்டும், கொள்ளையடிக்கும் ஆசையினாலும், வெகு காலமாகக் கொடுமை ஆட்சியை நடத்தி வந்த கர்வத்தினாலும், வெட்கத்தை உண்டு பண்ணும் இவ்வித காரியத்தில் ஈடுபட்டான்.

ஆனால் நான் கொடுக்கும் எச்சரிக்கை அவன் விஷயத்தில் பயன்படப் போவதில்லை. ஜனாதிபதி ரூஸ்வெல்டு செய்த உபதேசங்களெல்லாம் செவிடன் காதில் ஊதிய சங்கு போலாயிற்று. முஸோலினி எல்லா அறிவையும் கௌரவத்தையும் இழந்தான்.

அவனுடைய சாம்ராஜ்யம் போய்விட்டது. 100 இதாலிய ஜனரல்களும், 3,00,000 இதாலியர்களும் நமது வசத்தில் கைதிகளாக இருக்கிறார்கள்.

இதாலிக்குக் கஷ்டகாலம் நெருங்கி வருகிறது. இது அதன் ஆரம்ப காலம் தான். கார்ஸிகாவுக்குப் போவதும், யூகோஸ்லாவியர்கள் சண்டையிடுவதும், கிரீஸில் வெட்கத்தை அடைவதும், ஜினேவா, டூரின், மிலான் முதலியவைகள் அழிவதுமாக இருக்கிறது. இப்போதுதான் இந்தக் கஷ்டங்கள் ஆரம்பித்திருக்கின்றன.

### ருஷ்யா.

இந்த யுத்தத்திலேயே மிக மகத்தான போர் அரங்கமான ருஷ்யாவில் சம்பவங்கள் வெற்றிகரமாக நடந்து வருகின்றன. வெள்ளைக்கடல் முதல் கருங்கடல் வரை பரவியிருக்கும் போர்முனையில் ருஷ்யர்கள் பல இடங்களில் தாக்குதலைச் செய்துவருகின்றனர்.

மற்றொரு மாரிகாலம் ஹிட்லரின் படைகளை நோக்கி வருகிறது. 180 ஜெர்மன் படைப்பகுதிகள் ருஷ்ய யுத்தத்தில் ஈடுபட்டன. இவைகளில் எத்தனையோ பகுதிகளும், ருமேனியர்களும், இதாலியர்களும் ஈடுபட்டு அவர்களும் அடிபட்டு அழிந்தனர்.



### பிரான்ஸ்.

அடுத்தபடியாக நாம் பிரான்ஸைப்பற்றி கவனிப்போம். இங்கே விஷயங்கள் மிகக் கேவலமாக நடந்து வருகின்றன. வடஆபிரிக்காவில் நாம் யுத்தத்தை ஆரம்பித்தபோது பிரான்ஸில் உடனே ஏதாவது ஏற்படுமென்று நாம் எதிர் பார்த்தது தான். போர் நிறுத்த உடன்படிக்கையை மீறி பிரான்ஸை ஹிட்லர் ஆக்கிரமித்துக்கொண்டு டூலோன் கப்பற்படையைக் கைப்பற்றுவானென்றும் நான் எதிர் பார்த்தது தான்.

இந்த சம்பவங்களை நேசநாடுகள் வரவேற்க வேண்டியதுதான். ஏனென்றால் பேருக்கு மாத்திரம் அரசாங்கம் வகித்த விஷி மறைந்துவிட்டது. இனிதான் பிரான்ஸின் ஒற்றுமையை ஸ்தாபிக்கமுடியும்.

### ஹிட்லரின் கொள்கை.

டூலோன் கப்பற்படை துக்ககரமான முடிவிற்கு வந்துவிட்டது. ஆனால் தனது கௌரவத்தைக் காட்டி, தானே சுட்டுக்கொண்டது. இதிலிருந்து பிரான்ஸ் தலை தூக்கி எழுந்திருக்கவேண்டும்.

### இனிந்நான் கடுமையான சமயம்.

ஏதோ நல்ல நிலைமை வெகுதூரம் தள்ளியிருப்பதாகவும் நினைக்க வேண்டாம். இதுவரை நம்மை பத்திரமாகக் கொண்டு வந்த காரணங்களைப் பரிசீலனை செய்து தைரியமாக முன்னேறுவோம். லக்ஷியம் கைகூடும் வரை முன்னேற வேண்டும்.

இந்த யுத்தம் வெகுகாலம் நீடிக்கும் என்றுதான் எனக்குத் தோன்றுகிறது. இனியும் கஷ்டமான நிலைமையிருக்குமென்றும் சொல்லமுடியும். சிரமமான அநுபவங்களும் நேரலாம். நமது வரிசைகளுக்குள் பிளவை உண்டுபண்ணிக் கொண்டால் நமது படை தளர்ந்து போகும். ஆகவே வெற்றி கிடைத்த பிறகு எப்படி நடந்து கொள்ளுவது என்பதைப் பற்றி தற்சமயம் விவாதிக்கவேண்டாம்.

நமது லக்ஷியங்களை பயம், ஆசை இவைகளை ஆதாரமாகக் கொண்டு அமைக்கக்கூடாது. கடமைகளைச் சரிவரச் செய்தால் தான் பத்திரமும், அமைதியும் ஏற்படும்.

தனது சைனியங்களையும், போலீஸையும் கொண்டு ஹிட்லர் ஐரோப்பா பூராவும் அடக்கி வைத்திருக்கிறான். தனது வேலைகளைச் செய்ய லக்ஷக்கணக்கான அடிமைகளை ஈடுபடுத்தியும் வருகிறான். இவர்கள் யாவரும் வயல், தொழிற்சாலை முதலியவைகளில் வேலை செய்து வருகிறார்கள். கோயரிங்கூட சமீபத்தில் சொன்னபோது, ஐரோப்பா பட்டினி கிடந்தாலும் ஜெர்மனிக்குத் தட்டு ஏற்படாது என்றான். இவ்விதம் அயல் நாடுகளை அடிமையாக்கி பெரும் குற்றத்தைச் செய்கிறவர்களுக்கு நிச்சயம் ஆபத்துதான். இதுவரை பிரிடிஷார் சின்ன ஜெர்மன் சைனியத்தைத்தான் எதிர்த்துத் தாக்கியுள்ளனர். எதிரியின் யூ படகுத் தீங்கும் குறைந்த பாடில்லை. இன்னும் அதிகம் ஆனாலும் ஆகும். இவ்வளவையும் ஞாபகத்தில் வைத்துக்கொண்டு நீங்கள் யுத்த முயற்சியில் ஈடுபடவேண்டும்.

---

## வார யுத்தச் செய்திகள்.

---

### 28—11—42-லிருந்து 4—12—42-வரை.

**ருஷ்யா.**—ஸ்டாலின்கிராட்டில் மார்ஷல் டிமோஷென்கோ கிடுக்குத்தாக்குதலைச் செய்கிறார். கிடுக்கியின் ஒரு பக்கமான வடக்கிலுள்ள ருஷ்யச் சைனியம் ஜெர்மன் அணிகளுக்குப் பின்புறமாக இருந்து தாக்கி டான் நதியை பல இடங்களில் கடந்துவிட்டது. அந்நதியை ஸெராபிமோவிச் (Serafimovich) என்ற இடத்திற்கும் கலாச்சிற்கு இடையே தாண்டி, கலாச்சையும் கைப்பற்றி கிழக்கு நோக்கிப் போகிறது. தெற்கிலுள்ள மற்றொரு ருஷ்யப்படை வால்காவைத் தாண்டி, கெல்மாக்கிலிருந்து தாக்குதலை ஆரம்பித்து ஸ்டாலின்கிராட்—கிராஸ்னடார் இருப்புப்

பாதையைக் கைப்பற்றி டான் நதியை நோக்கி மேற்கு நோக்கிப்போகிறது. இந்த இரு சைனியங்களும் சர்ஸ்க் (Chirsk) என்ற இடத்தில் சந்தித்து விட்டதால் வால்கா டான்பிரதேசத்திலுள்ள ஜெர்மன் சைனியம் அடைபட்டுவிட்டது. பின்வாங்க முடியாமலும், சரண் அடைய விருப்பமில்லாமலும் ஹிட்லர் புதிய உதவிப்படைகளை அனுப்புகிறான். வடகிழக்கு, மேற்கு, தெற்கு மூன்று பக்கங்களிலும் தாக்கப் படுவதால் எதிரிக்கு அழிவு ஏற்படப்போகிறது. ஆகவே ஸ்டாலின்கிராட் போர், ஸ்டாலின்கிராட், கலாச், கசலின்ஸ்கி இம்மூன்று நகரங்களுக்குள் அடங்கிய முக்கோண பிரதேசத்தில் சண்டை நடைபெறுகிறது. டான் நதியின் கிழக்குக் கரையில் கலாச்சிலிருந்து 30 மைல் தூரத்திலும், ஸ்டாலின்கிராட்டிலிருந்து 30 மைல் தூரத்திலும் கசலின்ஸ்கி நகரம் இருக்கிறது.

தொழிற்சாலைப் பிரதேசத்திலும் ஜெர்மானியர் பயனில்லாமல் எதிர்க்கின்றனர். ஏனென்றால் ருஷ்யர்கள் ஒவ்வொரு இடமாக ஸ்வாதீனப்படுத்திக்கொண்டு வருகிறார்கள்.

தென்மேற்குப் பக்கத்தில் ஜெர்மானியர் ருஷ்யர்களின் பின்புறமாக இருந்து கொண்டு குறுக்கு எதிர்ப்புகளைச் செய்கின்றனர். ஆனால் முன்னேற்றப்போர் ருஷ்யர்கள் வசத்தில்தானிருக்கிறது. நகரின் வடமேற்கில் ருஷ்ய விமானப்படை ஓடும் எதிரிகளைச் சிதைக்கிறது.

இதேவிதமாக மாஸ்கோ முனையிலும் ஒரு கிடுக்கித் தாக்குதல் நடைபெறுகிறது. அங்கே ருஷ்யர்கள் ஜெர்மன் தற்காப்புப் பிரதேசங்களைத் துண்டித்து வெலிகியிலூகி (Velikiyeluki) என்ற இடத்தில் ரிஷெவ் பிரதேசத்தில் இருப்புப் பாதையையும் கைப்பற்றிவிட்டனர். இந்தப் பிரதேசத்தில் ஜெர்மானியருக்கு மிகுந்த சேதம் ஏற்பட்டுவருகிறது.

**எல் அகீலா.**—வட ஆபிரிக்காவில் ஸிரெனைகாவில் ஜெடபாயாவிற்கும், எல் அகிலாவிற்கும் மத்தியில் 8-ம் படை இருக்கிறது. எல் அகிலாவில் எதிரியின் வெளிப்புறப் பாதுகாப்புகளைப் பிளந்து கொண்டிருக்கிறது. லிபியா சமவெளிகளைத்தாண்டி விட்டதால் இனி சிரமமான பிரதேசமிருக்கிறது.

**டுனிஸியா.**—பிரிடன் பேரில் நடந்த விமானப்போரைப் போல் கடுமையாகவே டூனிஸ்-பைஸர்டா பிரதேசத்தில் நடைபெறுகிறது. நவம்பர் 27உ டூனிஸூக்கு 10 மைல் சமீபம்வரை நேசதேசப்படைகள் சென்றுவிட்டன. அதுமுதல் பிரிடிஷ் முதல் படை டெபர்பா (Teburba) என்ற இடத்தைப் பிடித்துவிட்டது. இது டூனிஸூக்கு 15 மைல் மேற்கே இருக்கிறது. முக்கிய ரயில்வே ஜங்க்ஷனும், சைனிய, விமானதளமுமான (Dyedeira) டிடீரா என்ற இடத்தையும் பிடித்தது. ஸ்பாக்ஸ் (Sfax) காப்ஸ் (Gabes) என்ற டூனிஸியா எல்லைவரையிலும் நேசதேசத் துருப்புகள் சென்றிருக்கின்றன. போர்டு டே பாஹ்ஸ் (Fahs) என்ற இடம்வரை பிரெஞ்சுப்படை ஒன்று வந்திருக்கிறது. இது டூனிஸூக்கு 35 மைல் தூரத்தில் உள்ள ஒரு ரயில்வே டவுன். டிரிபோலிடானியாவுடன் அச்சுநாட்டுப் போக்குவரவு துண்டிக்கப்பட்டது.

**ஸாலமன்ஸ்.**—நவம்பர் 23உ கூடல்கனாரிலிருந்து பாய்ச்சல் விமானங்களும், பைடர் விமானங்களும் முண்டா (Munda) என்ற இடத்திலுள்ள எதிரி ஸ்தாபனங்களைத் தாக்கின. இது நியூ ஜார்ஜியா தீவின் மேற்கு முனையிலிருக்கிறது. ஹெண்டர்ஸன் விமான தளத்திலிருந்து 180 மைல் தூரத்திலிருக்கிறது.

மவுண்டு அடின் (Mt. Aeten) என்ற இடத்திலுள்ள நம்பூலோவை (Nambulo) அமெரிக்கப்படைகள் தாக்கின. நவம்பர் 30உ கூடல்கனார் பிரதேசம் பூரா ரோந்து பார்க்கப்பட்டது. ஸாலமன்ஸில் மீண்டும் ஒரு கடற்போர் இருப்பதாக டோகியோ சொல்லுகிறது. ஆனால் இது உண்மையல்ல. அது உண்மையானாலும் ஒரு பெரிய சண்டையில் சேர்ந்ததாக இருக்கமுடியாது. ஏனென்றால் நேசதேச அறிக்கைகள் அதைப் பிரஸ்தாபிக்கவில்லை.

**நியூ கினி.**—நவம்பர் 23—24-ல் பூனாவிற்கு (Buna) கிழக்கிலுள்ள என்டயரி (Cape Endarre) என்ற இடத்தை ஜப்பானியர் பயனில்லாமல் தடுத்து வந்தனர்.



நவம்பர் 26—27-ல் பூயினுக்கு அருகிலுள்ள சகிலி விமானதளம் அமெரிக்க விமானங்களால் தாக்கப்பட்டது. கோனாவைத் தாக்க ஆஸ்திரேலியர்கள் மீண்டும் தயாராகி வருகின்றனர். கடற்கரையிலிருந்து கொண்டு ஜப்பானியர் சண்டை செய்யப்பார்க்கின்றனர்.

**அலூஷியன்.**—அட்டுதீவை ஜப்பானியர் சுவாதீனப்படுத்திக்கொண்டனர்.

**சைனா.**—ஸசெங், என்ற இடத்தை வியாழக்கிழமை ஜப்பானியர் தாக்கினர். இது பூகியன் எல்லையிலுள்ள கடற்கரைப்பட்டணம். இதிலிருந்து 3-மணி நேரம் நடந்த பீரங்கிச் சண்டைக்குப் பிறகு அவர்கள் துரத்தப்பட்டனர். கான்டனின் வடகிழக்கு எல்லையில் சீனர்கள் தாக்கினார்கள். வெள்ளிக்கிழமை கான்டனைத் தாக்கியதால் 10,000 டன் எடையுள்ள ஜப்பானியக் கப்பல் மூழ்கடிக்கப் பட்டது. மற்றொன்று சேதமாயிற்று. செகியாங் முனையில் ஜப்பானியர்கள் அதிகச் சேதமடைந்தனர்.

**தாய்லாந்து.**—அமெரிக்க விமானங்கள் நவம்பர் 26உ பாங்காக்கைத் தாக்கின.

**இந்து மகா சமுத்திரம்.**—நவம்பர் 30உ தென் ஆபிரிக்கப் படைகள் ரீயூனியன் என்ற பிரெஞ்சுத் தீவை வியாபித்துக்கொண்டன.

**பர்மா.**—நவம்பர் 30உ 10-வது விமானப் படைப்பகுதிகள் ஜப்பானிய நிலயங்களை இரண்டு தடவைத் தாக்கின. ரெங்கூனிலுள்ள கடற்கரைப் பிரதேசங்கள் தாக்கப்பட்டன. பகல் தாக்குதலில், அண்டமான் தீவில் போர்டுபிளேர் அமெரிக்க விமானங்களால் நேராடி தாக்கப்பட்டது. 250 அடி நீளமுள்ள ஒரு கப்பல் நேராடி தாக்கப்பட்டது. மாயா, கலடன், மாயிதிலா பிரதேசங்களில் பல லக்ஷியங்களைப் பிரிடிஷ் விமானப்படை தாக்கியது. டிஸம்பர் 1உ பிரிடிஷ் விமானப்படை டூங்கூ, அக்யாப் இவைகளைத் தாக்கியது.

---

## சத்துருவினுடையவும், சத்துருவினால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில், பிரிடிஷ், நேசதேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

**23—11—42.** (திங்கட்கிழமை).

### ஐரோப்பா (Europe).

இரவில்.—விரோதி சமுத்திரக்கரையோரங்களில் சுரங்க வெடிகள் போடுவது.

### வட ஆபிரிக்கா (North Africa).

விரோதி ஸ்தானங்கள்.—லிபியாவிலுள்ள எல் அகிலா (El Agheila) வில்.

### மத்தியதரைக்கடல் (Mediterranean).

கப்பல் துறைகள், விமான நிலயம்.—டூனிஸியாவிலுள்ள பிஸர்ட்டா (Bizerta) என்னுமிடத்தில்.

விமான நிலயம்.—ஸிஸிலியிலுள்ள பாலெர்மோ (Palermo) என்னுமிடத்தில்.

ஒரு விரோதியின் கப்பல்.—ஸார்டீனியாவுக் (Sardini) கருகாமையில்.

### ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகள், தரையிலுள்ள விமானங்கள்.—ருஷ்யப் போர்முனை எங்கும்.

### தூரக்கிழக்கு (Far East).

ஜப்பானியரின் ஸ்தானம்.—நியூ கினியில் பூனா—கோனா (Buna—Gona) பிரதேசத்தில் டிமோரில் பெகே (Beco), ரெய்மீன் (Raimean) என்னுமிடங்களில்.

இருப்புப் பாதை பழுதுபார்க்குமிடங்கள்.— பர்மாவிலுள்ள மாண்டலே (Mandalay), நியூ கினியிலுள்ள மூண்டா (Munda).

**24—11—42.** (செவ்வாய்க்கிழமை).

ஐரோப்பா (Europe) (1 பிரிடிஷ் விமானம் திரும்பிவரவில்லை).

ரயில் வண்டிகள், மற்ற ரயில்வே லக்ஷியங்கள்.—வட பிரான்ஸ் (N. France), பிரிட்டானி (Britany).

வட ஆபிரிக்கா (North Africa) (14-அச்சுநாட்டு விமானங்கள் நஷ்டமாயின).

லிபியாவிலுள்ள எல் அகேலா (El Agheila).

கப்பல் துறைகள், கப்பல்கள்.—பிஸெர்ட்டா (Bizerta).

விமான நிலயங்கள்.—கேப்ஸ் (Gabes), தெற்கு டுனிஸியா (Tunisia), ஸிஸிலியிலுள்ள ட்ரிபானி (Tripani).

லிபியாவிலுள்ள ட்ரிபோலி (Tripoli).

ஒரு வியாபாரக் கப்பல்.—ஸிஸிலி (Sicily)க்கருகாமையில்.

ருஷ்யா (Russia).

தரையிலுள்ள விமானங்கள், விமானச் சண்டைகள்.—ருஷ்யப் போர்முனை முழுவதிலும்.

தூரக்கிழக்கு (Far East).

ஜப்பானிய ஸ்தானங்கள்.—நியூ கினியிலுள்ள பூனா-கோனா (Buna-Gona) பிரதேசத்தில்.

விமான நிலயம்.—நியூ கினியிலுள்ள லே (Lae) என்னுமிடத்தில்.

விரோதித் துருப்புகள்.—காவியெங் (Kavieng), லாடெம் (Lautem). டிமோரிலுள்ள கொயபாங் (Koepang).

**25—11—42.** (புதன்கிழமை).

ஐரோப்பா (Europe).

பகலில்.—விரோதிக் கப்பல்கள்—டச்சுக் கடற்கரைக்கருகாமையில் (ஒரு கப்பல் மூழ்கடிக்கப்பட்டது).

இரவில்.—ஸப்ளைக் கப்பல்கள்—நார்வீஜியன் கடற்கரைக்கருகாமையில்.

வட ஆபிரிக்கா (North Africa).

விமானச் சண்டைகள்.—டுனிஸ் (Tunis), (12-அச்சு நாட்டு விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன).

கப்பல் துறைகள்.—டிமோரி (Timor)ல்.

கப்பல்கள்.—ஹோம்ஸ் (Homs) துறைமுகத்தில், ட்ரிபோலி (Tripoli).

சிறு யுத்தக் கப்பல்கள்.—டுனிஸியா (Tunisia)வுக்கருகாமையில்.

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகள், தரையிலுள்ள விமானங்கள்.—கிழக்குப் போர்முனை முழுவதிலும்.

தூரக்கிழக்கு (Far East).

ஜப்பானிய உதவித் துருப்புகள்.—நியூ கினியில் பூனா-கோனா (Buna-Gona), அலூஷியன் தீவுகளிலுள்ள கிஸ்கா (Kiska), நியூ கினியிலுள்ள லே (Lae).

ரயில்வே ஸ்டேஷன்.—பர்மாவிலுள்ள மியியான் (Myingyan).

விமான நிலயங்கள்.—பர்மாவிலுள்ள ஹிஹோ (Heho), மிங்கலாடன் (Mingaladon), மெய்க்டிலா (Meiktila).

**26—11—42.** (வியாழக்கிழமை).

ஐரோப்பா (Europe).

(2 நேசதேச விமானங்கள் சுட்டு வீழ்த்தப் பட்டன; 2 விரோதி விமானங்கள் அழிக்கப்பட்டுவிட்டன).

பகலில்.—சாமான் ரயில் வண்டிகள், படகுகள்—பிரான்ஸ் (France), ஹாலந்து (Holland).

இரண்டு சிறிய ஸப்ளைக் கப்பல்கள்.—டச்சுக் கடற்கரைக்கருகாமையில்.

வட ஆபிரிக்கா (North Africa).

கப்பற்படை தளம்.—பிஸர்ட்டா (Bizerta).

விமான நிலயம்.—டுனிஸ் (Tunis).

விரோதி ஸ்தானங்கள்.—எல் அகேலா (El Agheila).

அச்சு நாட்டினரின் ஸப்ளைக் கப்பல்கள்.—ஸிஸிலியின் கால்வாய்களில்.

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகள்—தரையிலுள்ள விமானங்கள்-ருஷ்யப் போர்முனை எங்கும்.

தூரக்கிழக்கு (Far East).

நியூ கினியில் பூனா-கோனா (Buna-Gona) பிரதேசத்தில்.

விமான நிலயம்.—நியூ ஜார்ஜியாவிலுள்ள முண்டா (Munda)வில்.

சைனாவில் காண்டன் (Canton).

எண்ணெய் சுத்தி செய்யுமிடங்கள்.—தாய்லாந்திலுள்ள பாங்காக் (Bangkok), பர்மாவிலுள்ள மாக்வி (Magwe). (3 பிரிடிஷ் விமானங்கள் திரும்பி வரவில்லை).



**27—11—42.** (வெள்ளிக்கிழமை).

ஐரோப்பா (Europe).

பகலில்.—அச்சு நாட்டினரின் போக்குவரத்து, லக்ஷியங்கள்—வட பிரான்ஸ் (N. France), ஹாலந்து (Holland).

வட ஆபிரிக்கா (North Africa).

கப்பல் துறைகள்.—டுனிஸியாவிலுள்ள பிஸர்ட்டா (Bizerta).

விமானச் சண்டைகள்.—ஸிஸிலியின் கால்வாயில் (2 விமானங்கள்).

போக்குவரத்து விமானங்கள்.—ட்ரிப்போலியில் எலௌடியா (El Outia).

விமான தளங்கள்.—ஸிஸிலி (Sicily).

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகள், தரையிலுள்ள விமானங்கள்.—ருஷ்யப் போர்முனை முழுவதிலும்.

தூரக்கிழக்கு (Far East).

நியூ கினியிலுள்ள பூனா-கோனா (Buna-Cona).

விமான நிலயம்.—நியூ கினியிலுள்ள லே (Lae), டிமோரிலுள்ள நோவாலூஸா (Novalusa), பெகோ (Beco).

ஒரு நீர்மூழ்கிக் கப்பல்.—ஹூவான் விரிகுடாவில்.

**28—11—42.** (சனிக்கிழமை).

ஐரோப்பா (Europe).

பகலில்.—சாமான் ரயில் வண்டிகள், வட பிரான்ஸ் (France), ஹாலந்து (Holland) இவைகளிலுள்ள மற்ற போக்குவரத்துகள்.

இரவில்.—பெரிய இதாலிய பீரங்கி உற்பத்திசாலை-டூரின் (Turin).

வட ஆபிரிக்கா (North Africa).

விமான நிலயம்.—டுனிஸ் (Tunis)ற்கு வடக்கே.

கப்பற் தளம்.—பிஸர்ட்டா (Bizerta).

கேப்ஸ் (Gabes), ஜெர்மனியின் ஸ்தானங்கள்.—எல் அகேலா (El-Agheila), ட்ரிபோலி (Tripoli).

ருஷ்யா (Russia).

(21-ம் தேதியிலிருந்து 28-ம் தேதிவரை அச்சு நாட்டு விமானங்களின் நஷ்டம் 234; ருஷ்ய விமானங்கள் 99 நஷ்டமாயின).

விமானச் சண்டைகள், தரையிலுள்ள விமானங்கள்.—ருஷ்யப் போர்முனை முழுவதிலும்.

தூரக்கிழக்கு (Far East).

நியூ கினியிலுள்ள பூனா-கோனா (Buna-Gona) பிரதேசம்.

விரோதிக்குச் சொந்தமான கட்டடங்கள்.—நியூ ஜார்ஜியாவிலுள்ள எட்முண்டா (Etmunda), டிமோரிலுள்ள பெகோ (Beco), நோவலூஸா (Novalusa).

**29—11—42.** (ஞாயிற்றுக்கிழமை).

ஐரோப்பா (Europe).

2 நேசதேச விமானங்கள் நஷ்டமாயின.

இரவில்.—ரயில்வே போக்குவரத்துகள்—பெல்ஜியம் (Belgium).

ரயில் வண்டிகள்.—வட பிரான்ஸ் (N. France).

ராணுவ லக்ஷியங்கள்.—இதாலியிலுள்ள டூரின் (Turin).

வட ஆபிரிக்கா (North Africa).

நேசதேச விமானங்கள் ஒன்றுவது சேதமில்லை.

துறைமுகம்.—லிபியாவிலுள்ள ட்ரிபோலி (Tripoli).

மின்சார உற்பத்திசாலை.—டுனிஸ் (Tunis)ல்.

துறைமுகம்.—பிஸர்ட்டா (Bizerta).

கப்பல்கள்.—டிரிபோலிடேனியா ((Tripolitania)வுக்கருகாமையில்.

மத்தியதரைக்கடல் (Mediterranean).

விமான நிலயம்.—ஸிஸிலியிலுள்ள காமிஸோ (Camiso).

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகள், விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்.—ருஷ்யப் போர்முனை எங்கும்.

தூரக்கிழக்கு (Far East).

நியூ கினியிலுள்ள பூனா-கோனா (Buna-Gona) பிரதேசத்தில்.

விமான நிலயம்.—டிமோரிலுள்ள லே (Lae), மெபோயிஸி (Maboise).

விமான தளம்.—கேவியங் (Kavieng).

விமான நிலயம்.—பர்மாவிலுள்ள மாக்வி (Magwe).

எண்ணெய் எடுக்குமிடங்கள்.—பர்மாவிலுள்ள நியாகுலா (Nyaughla).

## விரோதிகளின் விமானப்படையெடுப்புகளின் விவரங்கள்.

**24—11—42.** (செவ்வாய்க்கிழமை).

பிரிடன் (Britain).

விமானப்படையெடுப்பேயில்லை.

வட ஆபிரிக்கா (North Africa).

அல்ஜீரியாவிலுள்ள ஆல்ஜியர்ஸ் (Algiers).

**25—11—42.** (புதன்கிழமை).

பிரிடன் (Britain).

விமானப்படையெடுப்பில்லை.

வட ஆபிரிக்கா (North Africa).

நேசதேச விமானதளம்.—அல்ஜீரியன் (Algerian) கடற்கரையில்.

தூரக்கிழக்கு (Far East).

ஆஸ்திரேலியாவிலுள்ள.—டார்வின் (Darwin) துறைமுகம் (ஒரு ஜப்பானிய விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டது.)

**26—11—42.** (வியாழக்கிழமை).

பிரிடன் (Britain).

விமானப்படையெடுப்பேயில்லை.

வட ஆபிரிக்கா (North Africa).

ஓரான் (Oran).

தூரக்கிழக்கு (Far East).

தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை.

**27—11—42.** (வெள்ளிக்கிழமை).

பிரிடன் (Britain).

எங்கும் விமானத்தாக்குதல்களில்லை.

மத்தியதரைக்கடல் (Mediterranean).

வேவு பார்த்தல்.—மால்டா (Malta).

தூரக்கிழக்கு (Far East).

விமானத் தளம்.—ஸாலமன்ஸிலுள்ள கூடால்கனர் (Gudalcanar).

**28—11—42.** (சனிக்கிழமை).

பிரிடன் (Britain).

விமானத்தாக்குதலில்லை.

வட ஆபிரிக்கா (North Africa).

கப்பல் துறைகள்.—ஆல்ஜியர்ஸ் (Algiers).

தூரக்கிழக்கு (Far East).

நியூ கினியிலுள்ள மோர்ஸ்பி (Moresby) துறைமுகம்.

**29—11—42.** (ஞாயிற்றுக்கிழமை).

பிரிடன் (Britain).

பிரிடனில் விமானத்தாக்குதல் நேரிடவில்லை.

வட ஆபிரிக்கா (North Africa).

பிரிடிஷ் ஸ்தானங்கள்.—டுனிஸ் (Tunis) பிரதேசத்தில்.

தூரக்கிழக்கு (Far East).

விமான நிலயமிருக்தும் பிரதேசம்.—ஆஸ்திரேலியாவிலுள்ள டார்வின் (Darwin) துறைமுகம்.

**30—11—42.** (திங்கட்கிழமை).

பிரிடன் (Britain).

பகலில்.—இரவில் விமானத்தாக்குதலில்லை.

வட ஆபிரிக்கா (North Africa).

தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை.

தூரக்கிழக்கு (Far East).

ஏநு விமான நிலயம்.—மில்னே (Milne) விரிகுடாவில்.



# யுத்தக் குறிப்புகள்.

**பாராட்டு.** இவ்வாரத்தில் நவம்பர் 30-ம் தேதியோடு மிஸ்டர் சர்ச்சிலுக்கு 68-வது வயது பூர்த்தியடைகிறது. இவ்வுலகத்தைக் காப்பாற்றி நாகரீகம் நிலவும்படி செய்த அப்பெரியாருக்கு நமது நன்றி பாராட்டுதலை அளிப்போம். அவரை சமய சிந்தாமணி என்று யாவரும் சொல்லுகிறார்கள். அப்பெருமை வார்த்தை அவருக்குப் போதாதென்றே சொல்லவேண்டும். ஏனென்றால் முறியாத தைரியத்தினாலும், தலைமை வகிக்கும் சக்தியினாலும் சமயத்தை அவரேதான் ஏற்படுத்துகிறார். உலகத்தைக் கஷ்டத்திலிருந்து விடுவித்த பெரியார்களுக்குள் இவருக்கும் அழியாப் புகழுண்டு. தனது பிறந்த நாளன்று இவர் செய்த ஒலி பரப்பிலிருந்து சில சாரமான பாகங்களை இச்சஞ்சிகையின் மற்றொரு பாகத்தில் அச்சிட்டிருக்கிறோம். ஊக்கம் கொடுக்கக்கூடிய பேச்சுத் திறமையை நிலைநாட்டி யாவரும் ஒப்புக்கொள்ளும் விதமாக ஆழ்ந்த அபிப்பிராயங்களை வெளியிட்டார். பிரிடன், சாம்ராஜ்யம், உலகம் இவைகளின் க்ஷேமத்தை முன்னிட்டு அவர் நீடுழி வாழ்க.

வி வி வி வி வி வி வி

**டூலான் விபத்து.** பிரெஞ்சு சரித்திரத்திலேயே நவம்பர் 27-ம் ஒரு கரி நாளைப்போல் கருதப்படும். ஏனென்றால் ஆங்கிலேய அமெரிக்க கட்சியுடன் ஒத்துழைக்க முடியாமல் செய்யும் நோக்கத்துடன் ஹிட்லர் டூலானிலுள்ள கடற்படையைக் கைப்பற்ற உத்தர விட்டான். ஆனால் அந்த தினத்தில், பிரெஞ்சுக் கடற்படை தற்கொலை புரிந்து கொண்டது. இந்த சம்பவம் கோரமாகயிருந்தபோதிலும் பிரெஞ்சுப் புகழ் கொஞ்சம் தலைகாட்டியது. எதிரி வசமாவதைக்காட்டிலும் கப்பல்களை மூழ்கடித்துக்கொண்டு கரையிலுள்ள யுத்த தளவாடங்களை எரித்துவிடுவது நல மென்று தீர்மானித்து அவ்விதம் செய்யும்படி அட்மிரல் டிலா போர்டு உத்தர விட்டான். அதில் மூன்று யுத்தக் கப்பல்களும், பல க்ரூயிஸர்களும், நாசகாரி களும், நீர்மூழ்கிகளும் அழிந்தன. கடைசியாக ஹிட்லர் அடைந்தது ஒன்றுமில்லை. எரிந்த பட்டணமும் எரிந்த கப்பல்களும்தான்.

வி வி வி வி வி வி வி

**விஷியின் முடிவு.** டூலான் சம்பவத்தோடு விஷி நாடகம் முடிந்து விட்டது. இனி விஷி அரசாங்கம் இல்லை. அதோடு பிரெஞ்சு சாம்ராஜ்யமும் போய்விட்டது. ஸிரியா, மடகாஸ்கர், வடக்கு, மேற்கு, மத்திய ஆபிரிக்கா எல்லாம் நேசதேசக் கட்சிப்பக்கம் வந்துவிட்டன. இந்தோ-சைனா ஜப்பானின் ஆக்கிரமணத்திலிருக்கிறது. அமெரிக்காவிற்குப் பக்கத்திலுள்ள பிரெஞ்சு நாடுகள் அமெரிக்காவின் மேல்பார்வையிலிருக்கின்றன. பிரான்ஸின் ஒரு பாகம் மாத்திரம் தனியாக இருந்தது. அதன் தலையிலும் ஹிட்லர் கை வைத்துவிட்டான். முன்பு யுத்த நிறுத்த உடன்படிக்கையைச் செய்தபோது விஷி சாம்ராஜ்யத்தை வைத்துக்கொள்ளலாம் என்று பிடேன் நினைத்தான். ஆனால் சாம்ராஜ்யமும் போய்விட்டது. அதற்குச் சாதகமாயுள்ள கப்பற்படையும் போய்விட்டது. சிறுபிள்ளைத்தனமாக முன்பு பிடேன் நடந்து கொண்டதால்தான் இந்தக் கஷ்டம் அவனுக்கு வந்தது. 1940-ல் மிஸ்டர் சர்ச்சில் சொன்ன மொழிகளைக் கேட்டிருந்தால் இந்தத் தூக்கதிக்கு பிடேன் வந்திருக்கமாட்டான். பிரிடிஷ் கப்பற்படை, சைனியம் இவைகளுடன் தானும் சேர்ந்துகொண்டு ஜெர்மனியை எதிர்த்திருக்கலாம்.

தற்சமயத்தில் பிடேன் பேருக்குக்கூட அரசாங்கத்தில் தலைமை வகிக்க வில்லை. அவன் சொந்த அபிப்பிராயங்களைக்கூட வெளியிடுவதில்லை என்று டார்லான் சொல்லிவருகிறான். விஷி ரேடியோ சொந்த அபிப்பிராயங்களை ஒலிபரப்பவில்லை. ஸர்வ அதிகாரமும் லவால் கைக்குப் போய்விட்டது. மிஸ்டர்

விக்ஹாம் ஸ்டீட் சொல்லும்விதமாக, லவாலிடத்தில் சுத்தமான உடுப்பைத் தவிர மற்ற குணங்கள் எல்லாம் ஆபாசம்தான். இனிமேல் லவால் ஹிட்லரின் ஆளாக இருந்துகொண்டு வியவகாரங்களைக் கவனிப்பான்.

பொதுவாக ராஜத்துரோகிகள், அரசியல் வியவகாரங்களில் காத்தாடியின் தன்மையை ஒத்திருப்பார்கள். அதாவது எந்தக் கட்சி வலுவடைந்து வருகிறதோ அந்தப் பக்கத்தில் சேருவதற்கு அவர்களுக்கு நோக்கம். இதற்கு திருஷ்டாந்தமாக டார்லானைச் சொல்லவேண்டும். கொஞ்ச நாளைக்குமுன் ஹிட்லரின் தயவை சம்பாதித்துக்கொள்ள அவன் லவாலுடன் போட்டியாக நின்றது நமக்கு நன்ருகத் தெரியும். இப்பொழுது நேசதேசத்தார்கள் பக்கம் திரும்பிவிட்டான். கிரீஸ் பொம்மை அரசாங்கத்திற்குத் துரோக கவர்னராக இருந்து அதைவிட்டு ஓடிய ஜெனரல் ஸோலாகிகீ (Tsolakighu)யை மற்ருெரு திருஷ்டாந்தமாகச் சொல்லலாம். அவன் செய்த இக்கபடச்செய்கை சரித்திரப் பிரசித்தமானது. உதாரணமாக சென்ற யுத்தத்தில் தன்னுடைய படைப் பகுதியைவிட்டு ஓடி சேனைத் தலைவன் இறந்துபோய் புதைக்கப்பட்டுவிட்டான் என்று பிரசித்திப்படுத்தினன். இதை நம்பி சேனைத் தலைவரின் குடும்பத்தார் இறந்த தலைவருக்காக ஈமச் சடங்குகளைச் செய்துமுடித்தார்கள். ஆனால் அதற்கு மூன்று மாதங்கள் கிரமித்து சேனைத் தலைவர் உயிருடன் திரும்பிவந்தான். இம் மாதிரிதான் ராஜத்துரோகிகள் நடந்துகொள்ளுவார்கள்.

வி வி வி வி வி வி வி

**யுத்த காலத்திய வாயுமானிகள்.** மத்தியக் கிழக்கில் துருக்கியையும், மேற்கு ஐரோப்பாவில் ஸ்பெயினையும் இக்காலத்தில் அரசியல் வாயுமானிகள் என்று சொல்லப்படுகிறது. ஸ்பெயினின் கப்பல், விமானம் இவைகளின் தளங்களை ஜெர்மனியின் உபயோகத்திற்கு கொடுக்க ஸ்பெயின் மறுத்துவிட்டதாக அங்காராவிலிருந்து செய்தி கிடைத்திருக்கிறது. ஸ்பெயினில் பலாஞ்சிஸ்ட் சபை கலைக்கப்பட்டுவிட்டதைப்பற்றி ஒருவரும் ஆயாசப்பட வேண்டியதில்லை. ஏனென்ருல் அக்கட்சியின் விஷமக்காரஞன ஸீனர் ஸுஞர் ஏற்கனவேயே நீக்கப்பட்டான்.

வி வி வி வி வி வி வி

**எதிரி நீர்மூழ்கி 'யூ' படகு.** சமீபத்தில் ஆங்கிலேய அமெரிக்கப் படை ஆபிரிக்காவிலிறங்கியபோது எதிரி நீர் மூழ்கிகளுடன் நேருக்குநேர் 10 நாள் சண்டை நடந்தது. நேசதேச நாசகாரிகளும், சிறு யுத்தக் கப்பல்களும், விமானங்களும் அவைகளை வெற்றிகரமாகத் தாக்கின. போக்குவரத்துக் கப்பல் அல்லது ஸப்ளைக் கப்பல் ஒன்று நஷ்டமானதற்கு எதிரி 'யூ' படகு ஒன்று மூழ்கடிக்கப்பட்டோ, சேதமாக்கப்பட்டோ போயிற்று. கப்பல்களில் அடைந்த நஷ்டத்திற்கு ஒரு டன்னுக்கு இரண்டு டன் வீதம் வடக்கு மேற்கு ஆபிரிக்காவில் லாபம் அடையப்பட்டது.

வி வி வி வி வி வி வி

**ஏமாற்றம்.** பிரிடனின் தலைமையில் சர்ச்சில் இருந்து ஹிட்லரை ஏமாற்றிய மாதிரி ருஷ்யாவில் ஸ்டாலினும் ஹிட்லரை ஏமாற்றியிருக்கிருர். 1942-ல் இரண்டாம் போர்முனை ஏற்படுத்தப்படுமென்றும், டீயப் சம்பவம் வேவு பார்க்கும் முயற்சியாகுமென்றும் சொல்லி ஆபிரிக்காவில் இரண்டாம் போர்முனையை ஏற்படுத்துவதைப்பற்றி சர்ச்சில் யோசித்துக்கொண்டிருந்தார். அதேவிதமாக ஸ்டாலினும் தனக்கு ஸப்ளைகள் போரவில்லையென்று வெளிப்படையாகச் சொல்லிக்கொண்டிருந்தாலும் பிரகிருதமுள்ள மாரிகாலத்தில் சண்டை செய்ய லாயக்கான மனிதர்களையும் சாமான்களையும் கடந்த கோடை காலம் பூராவாக சேகரம் செய்துகொண்டிருந்தான். இந்த இரண்டினலும் ஹிட்லர் ஏமாற்றமடைந்தான். ஆபிரிக்காவின் இருபக்கங்களிலும் ஆங்கிலேயர்களும் ஆபிரிக்கர்களும் படைகளை இறக்கும் சமயம் பார்த்து ருஷ்யாவில் தாக்குதல் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே ருஷ்யாவும் பிரிடனும் சேர்ந்து எதிரியை ஏமாற்ற ஏற்பாடு செய்த விஷயம் புலப்படுகிறது.



1941-ல் நடந்த மாதிரிதான் சில மாறுதல்களுடன் சம்பவங்கள் தற்போது நடைபெறுகின்றன. சென்ற வருஷம் நவம்பர் 22-ல் ருஷ்யாவில் லெனின்கிராட் மாஸ்கோ, யூக்ரேன், கிரிமியா போன்றவைகளில் ஆபத்து அதிகரித்திருந்தது. தற்போது அதே காலத்தில் ஸ்டாலின்கிராடைச் சூழ்ந்துகொண்டு காகஸஸிலும் ஜெர்மானியர் எதிர்த்தனர். ஆனல் மாரிகாலம் வந்ததும் ருஷ்யர்கள் குறுக்கு எதிர்ப்புகளை ஆரம்பித்தனர். ஜெனரல் மான்ட்காமரியும் எல் அகீலா வரை எதிரிகளைத் துரத்திவிட்டான். எகிப்தில் சென்ற வருஷத்தில் ஆச்சின்லெக் பெங்காஸி வரையில் விரட்டினன்.

இதிலொரு வித்தியாசம் என்னவென்ருல் சென்ற வருஷம் டிஸம்பர் 7-ம் தேதி நேசதேசங்களை மற்ருெருபுறம் ஈடுபடுத்த ஜப்பான் சண்டையில் சேர்ந்தது. ஆனல் இவ்வருஷம் அச்சுநாடுகளை அடக்க நேசநாடுகள் புதுப் போர்முனையை உண்டாக்கிவிட்டன. சென்ற வருஷத்தில் ஒரு போர்முனையில் மாத்திரம்தான் சண்டை செய்துவந்ததால் வசந்த காலத் தாக்குதலுக்கு தயார் செய்ய தனது படைகளை உள்நாட்டிற்கு அழைத்துவர ஹிட்லரால் முடிந்தது. ஆனல் இந்த வருஷம் மாரிகாலத்தில் மீண்டும் ஜெர்மன் படைகளின் பலம் குறையும். ஏனென்ருல் அட்லாண்டிக் கடற்கரையைப் பாதுகாப்பதோடு மத்தியதரைக் கடலையும் பாதுகாக்கவேண்டி வந்திருக்கிறது. மேலும் ருஷ்யர்களின் மாரிகால குறுக்கு எதிர்ப்புகளும் இவ்வருஷம் சற்று முன்னடியே ஆரம்பிக்கப்பட்டுவிட்டதால், அங்கிருந்து படைகளைக் கழட்டிக்கொள்ளவும் முடியாது. பிரான்ஸின் வீழ்ச்சியின் பயனக ஆக்கிரமிக்கப்பட்ட பல பாகங்களில் கலகம் முதலியவைகள் ஏற்படும். அவைகளை அடக்கவேண்டிய நிர்ப்பந்தமும் ஏற்படும்.

வி வி வி வி வி வி வி

**டுனிஸியா யுத்தம்.** மும்முரமாகவே நடைபெறுகிறது. இங்கு சண்டை துரிதமாக நடக்கவில்லை என்று குறைகூறுவோர் சமீபத்தில் மிஸ்டர் ஈடன் சொன்ன குறிப்பைக் கவனிப்பது நலம். அதாவது இங்கு சண்டை ஒரு நெருக்கடியான நிலைமையை அடைந்திருக்கிறது. நேசதேசங்களின் போக்குவரத்து ஸப்ளை மார்க்கங்கள் எட்டி இருக்கின்றன. ஆனல் அச்சுநாடுகளுக்கு ஸிஸிலியிலிருந்து பான்முனை 90 மைல்தான் இருக்கிறது. எதிரிக்கு ஸப்ளைகள் விமான மூலமாயும் கடல் மூலமாயும் ஒரு தினத்தில் பல தடவைகளில் வரலாம். ஆனல் நேசநாடுகளின் ஸப்ளை மார்க்கங்கள் எட்டியிருந்தாலும் அமெரிக்கர்கள், பிரெஞ்சுக்காரர்கள் இவர்கள் ஒத்துழைப்பால் பிரிடிஷ் சைனியம் முன்னேற முடிகிறது. மத்தியதரைக் கடலின் மேற்குப் பாகத்தில் நேசதேசக் கப்பற்படைக்கு ஆதிக்கமும் இருக்கிறது.

வி வி வி வி வி வி வி

**மூன்று நோக்கங்கள்.** வட ஆபிரிக்காவில் கிழக்கு, மேற்கு பாகங்களில் செய்யப்படும் நேசதேச முன்னேற்றத்திற்கு வட ஆபிரிக்காவிலிருந்து அச்சுநாட்டினரை விரட்டுவதும், மத்தியதரைக் கடலை ஸ்வாதீனப்படுத்துவதும், அங்கிருந்து ஐரோப்பாவைப் படையெடுப்பதும் தான் முக்கிய நோக்கங்கள். இதற்காக லிபியாவில் ராணுவ முயற்சி எடுத்துக் கொள்ளப்பட்டது. மொரோகாவில் ராணுவ முயற்சி கொஞ்சம், அரசியல் முயற்சி கொஞ்சம் எடுத்துக்கொள்ளப்பட்டன. இதற்காக 1940 முதல் பிரயத்தனம் எடுத்துக்கொள்ளப்பட்டுவருகிறது. 1940, 1941, 1942 இவ்வருஷங்களில் அச்சுநாட்டு ராணுவ பலத்தைக் குறைப்பதேதான் நேசதேசங்களுக்கு லக்ஷியமாக இருந்தது. 1940-ல் வேவல் பெங்காஸி சேருமுன் 1,33,000 பேர்களையும், 1941-ல் ஆச்சின்லெக் 32,000 பேர்களையும், மான்ட்காமரி தற்சமயம் 75,000 பேரையும் கைதி செய்திருக்கின்றனர்.

மற்ருெரு விஷயமும் கவனிக்கவேண்டியிருக்கிறது. ஒவ்வொரு வருஷமும் பிரிடிஷ் சைனியம் முன்னேறிய தூரமும் அதிகமாகிக்கொண்டே போகிறது. 1940-ல் வேவல் இரண்டு மாதத்தில் 500 மைல் முன்னேறினன். 1942-ல் ஆச்சின்லெக் ஒரு மாதத்தில் 400 மைலும், தற்சமயம் அலெக்ஸான்டர் 15

நாளில் 800 மைலும் முன்னேறினான். இதற்கு யந்திரப்படை, தரைப்படை, கடற்படை, விமானப்படை இவைகளின் சக்தியும், ஒற்றுமையும் காரணமாக இருந்தன.

வி வி வி வி வி வி வி

**அச்சுநாட்டுக் குழப்பம்.** நேசநாடுகளின் வெற்றியைக் கண்டு அச்சு நாட்டு ரேடியோக்கள் குழம்பி, நிலைமை தடுமாறி விட்டன. ஒலிபரப்பும் செய்திகளும் தாறுமாறாக இருக்கின்றன. இதாலியர்களும் ஜெர்மானியர்களும் விபரீதமான செய்திகளைச் சொல்லுகின்றனர். ஆபிரிக்காவில் பின் வாங்கும் படைகளுக்கு ரோமலும் ஜெர்மன் தலைவர்களும் தான் காரணமென்று இதாலியர் அபிப்பிராயப்படுகிறார்கள். டங்கர்க்கிற்குப் பிறகு பிரிடிஷாரும் சர்ச்சிலும் எப்படி திடமாக நின்றார்களோ அதே விதமாக தைரியம் கொள்ளவேண்டுமென்று இதாலிய மக்களுக்குச் சொல்லப்படுகிறது. தங்களுக்கு நேர்ந்த அவமானத்தை மறைத்துக்கொண்டு பாலைவனச் சண்டையைப்பற்றி பலமாக ஜெர்மானியர் ஒன்றும் சொல்லவில்லை. நேசதேசத்துக் கப்பல் நஷ்டத்தைப்பற்றி அதிகமாகச் சொல்லுகிறார்கள். இந்த சந்தர்ப்பத்தில் பொது மக்களுக்கு மனஸ்தாபம் ஏற்படுவது சகஜமென்றும் அதைப்பொறுத்துக் கொள்ளவேண்டியதானென்றும் தலைவர்கள் எண்ணிவருகிறார்கள்.

இதை கோடபெல்ஸ் டாஸ்ரீச் என்ற பத்திரிகையில் எழுதியிருக்கிறான். மனோபாவத்திற்கும் பொருமைக்கும் ஒரு வித்தியாசத்தைக் காண்பித்து, திருப்தி யில்லாத மனோபாவம் ஏற்பட்டாலும் ஜெர்மன் மக்கள் கொஞ்சகாலம் கஷ்டம் வரும்போது பொருமையை இழக்காமல் இருக்கவேண்டுமென்றும், அதிருப்தி கொள்ளக்கூடாதென்றும் சொன்னான்.

வி வி வி வி வி வி வி

**நியூ கினி.** ஸெப்டம்பர் 29௳ நியூ கினியில் நேசநாடுகள் ஜப்பானியரைத் தாக்கினார்கள். ஜப்பானியரின் ஸப்ளை தளமான கோனு நேசதேசப் படைகளால் பிடிபட்டதாகச் சமீபத்தில் செய்தி கிடைத்திருக்கிறது. மிகவும் முக்கிய தளமான பூனாவிற்கு (Buna) ஒரு மைல் தூரத்திற்கு நேசப்படைகள் வந்துவிட்டதாகவும் சொல்லப்படுகிறது. ஆகவே மார்ஸ்பி துறைமுகம் ஆஸ்திரேலியா, முதலியவைகளுக்கு நேரக்கூடிய ஆபத்து தடுக்கப்படுவதோடு, நியூ கினியிலிருந்தே ஜப்பானியரை விரட்டியடிக்க வும் தென்மேற்கு பஸபிக்கிலிருந்து விரட்டி விடவும் சாத்தியமாக இருக்கும். பூனாவையும் நாம் பிடித்தால் ஜப்பானியரை ஸாலமுவா, லே முதலிய துறை முகங்கள்தான் மிஞ்சி இருக்கும். அவை பூனாவிலிருந்து 150 மைல் தூரத்திலிருக் கின்றன. மேலும் நியூ பிரிடன் தீவில் ராபாலுக்கு அருகிலும் நேசதேசப் படைகள் வந்துவிட்டன. இதிலிருந்து ஸாலமன் தீவில் நடக்கும் சண்டையில் எதிரிக்கு மிகுந்த ஆபத்தை உண்டாக்கலாம்.

வி வி வி வி வி வி வி

**பெங்கால்.** ராயல் இந்தியக் கப்பற் படையில் பெங்கால் என்ற பெயருள்ள சுரங்க வெடி வாரிக் கப்பல் நவம்பர் 11௳ சில அரிய சண்டைகளைச் செய்து வெற்றிபெற்றது. ஜப் பானியரின் அதிக ஆயுதங்கள் கொண்ட ஜப்பானியக் கப்பல் ஒன்றை அது மூழ் கடித்தது. அதை லப்டினண்டு கமாண்டர் W. J. வில்ஸன் நடத்திச் சென்றார். 6,314டன் எடையுள்ள ஆன்டினு என்ற மோட்டார் கப்பலையும்கூட நடத்திச் சென்றபோது கிகோகுமரு (10,000 டன்), குனிகாவாமரு (6,863 டன்) என்ற இரண்டு ஜப்பானியக் கப்பலைப் பார்த்து, உடனே அவைகளைத் தாக்கியது. பெங்கால் எதிரியின் பெரிய கப்பலை குறிபார்த்துச் சுட்டு வீழ்த்தியது. எதிரியின் கப்பல் மிகவும் பெரிது. அதிக ஆயுதங்கள் கொண்டிருந்தது. அதைச் சுட்டு வீழ்த்தியதுதான் விசேஷம். எதிரிக் கப்பலில் 5·5 அங்குல பீரங்கிகளும், டார்பிடோ பீரங்கிகளும், இரண்டு விமானங்களும் இருந்தன. நமது கப்பலில் ஒரே 4 அங்குல பீரங்கி தான் இருந்தது. இந்த சம்பவம் இந்துமகா சமுத்திரத்தில் நடந்ததாகச் சொல்லப்பட்டாலும், ஜாவாவிற்கு தென்மேற்கே 1,000 மைல் தூரத்தில் நடந்தது.



# மார்ஷல் பிடேன்.

(*The Illustrated London Weekly*).

## பயம்.

பண்டைகாலத்திலும், இப்பொழுதும் வைத்தியர்கள் ஒவ்வொருவர் தேகத் திலும் ஒரே ஒரு நோய் தான் இருப்பதாகவும், மற்ற விதமான நோய்கள் அந்த ஒரே நோயால்தான் ஏற்படுகின்றனவென்றும் சொல்வதுபோல, சில வேதாந்திகள் நல்ல ஒழுக்கமில்லாமல் ஏற்படும் தவறுகளும், பிசகுகளும் பயம் என்ற மூல காரணத்தினால்தான் உண்டாகிறதென்று சொல்லுகிறார்கள். அதை ஒத்தே வெல்லிங்டன் பிரபு "இல்லஸ்ட்ரேடட் லண்டன் நியூஸ்" பத்திரிகையிலிருந்து ஒரு சமயத்தில் தனக்கு 'பயம்' என்பதில்தான் பயமேற்பட்டிருக்கிறதென்று சொன்னார். ஆகையால் மனிதன்-நெஞ்சில் இதைக்காட்டிலும் பரம விரோதி வேறொன்று மில்லை என்பது நிச்சயம். எப்பொழுதும் பின்னால் கெடுதல்கள் நேரிடாமல் தடுப்பதற்கு ஏதேனும் ஒரு இழிவான காரியத்தைச் செய்யும் படிக்கு இது தூண்டிக்கொண்டே இருக்கிறது. அதனால் நேரிடக்கூடிய அபாயம் துப்பாக்கி குண்டாக இருந்தாலும் சரி, அல்லது முற்றிலும் அழிவு ஏற்படக் கூடியதாக இருந்தாலும் சரி, அல்லது சாதாரணமான பயன்கள் நேரிட்டாலும் சரி, பயத்தினால் ஏதேனும் ஒரு காரியத்தைச் செய்ய வேண்டி நேரிடுகிறது. பயத்தின் பயனாகத்தான் பொய்கள் பிறக்கின்றன. ஆனால் ஐயாகோவும், டாக்டர் கோயபெல்ஸும் சொல்லும்பொய்கள் பயத்தினால் ஏற்படக்கூடியவையல்ல. பெரு மையாகச் சொல்லக்கூடிய பொய்களும் இம்மாதிரி பயத்தினால்தான் உண்டாகின் றன. ஒருவன் தன்னுடைய சாமர்த்தியமில்லாத்தனத்தை மறைக்க இம்மாதிரி பொய்யை உபயோகிக்கிறான். முன்காலத்தில் எவனொருவன் எப்பொழுதும் பய மில்லாமல் ஒழுங்குமுறையுடன் இருந்து கொண்டு உண்மையையே பேசி வந் தானோ, அவனைத்தான் நல்ல மனிதன் என்று ஆங்கிலேயர்கள் கருதினார்கள். அதனால் உண்மை பேசுவது என்பது பயமில்லாமலிருப்பதின் வெளித்தோற்றம் என்று இயற்கையாகவே கருதப்பட்டது. அவனுக்கு நேர்ந்திருக்கும் ஆபத்து பெரியதாக இருந்தாலும் சரி, அல்லது சிறியதாக இருந்தாலும் சரி, தைரியசாலி யாக இருப்பவன், உண்மையையே பேசுவான். ஒரு முறை தயங்கினால் மறுபடியும் தயங்கவேண்டி வரும் என்று தெரிந்து அவன், வெல்லிங்டன் பிரபு மாதிரி ஒரு பொழுதும் தயங்கமாட்டான். வரும் அபாயத்தை தைரியமாய் எதிர்த்து நிற்காமல் பயந்து ஓடக்கூடிய பழக்கந்தான் சீக்கிரத்தில் ஒருவனுக்கு ஏற்படக் கூடும். அதை மாற்றுவதும் மிகவும் கடினம்.

## கடுமையான முயற்சி.

விஷி அரசாங்கத்தை உதாரணமாக எடுத்துக்கொள்வோம். மார்ஷல் பிடேன் சரணடைந்ததைக் குறித்து நான் அவனை முன்பின் யோசியாமல் குறை கூறிவிடவில்லை. அவனுக்கிருந்த கஷ்டம் பூராவும் எனக்குத் தெரியும். அவன் கௌரவமுள்ளவன்; மிக்க விசுவாசமுள்ளவன். அவனுக்கு தேசப்பற்று அதிகமாக உண்டு. அவன் இதுவரை எந்த மாதிரி தவறுகள் நேரிடக்கூடாது என்று சொல்லி வந்தானோ அந்தத் தவறுகளிலிருந்து தன் தேசத்தைக் காப்பாற்ற வேண்டி அவனை அரசாங்கத்திற்குத் தலைவனாகத் தேர்ந்தெடுத்தார்கள். அத் தகைய சோதனை நேரத்தில் பெரிய விபத்திலிருந்து பாதுகாப்பதற்கு பிரெஞ்சுக் காரர்கள் யாவரும் அவனையே நம்பியிருந்தார்கள். பயமின்றி செய்யக்கூடிய விஷயம் ஒன்றே ஒன்று தான் இருந்தது. அது தான் சரியான செய்கையும் கூட. அதாவது அவர்கள் எல்லோருமாகச் சேர்ந்து வரும் கஷ்டத்தை அனுபவிக்க வேண்டியது என்பதுதான். மேலும் கஷ்டப்பட்டு, பொருத்திருந்து விடுதலை யடையும் நாளை எதிர் பார்த்துக்கொண்டு இருக்கவேண்டியதே தவிர, தற்போது வேறு வழியில்லை. அதைப் பிடேனும் சரியாக உணர்ந்துகொண்டான். பேச்சில் மட்டில்தான் அவன் அறிந்து கொண்டதாக நமக்குத் தெரிந்தது. செய்கையில் ஒன்றையும் காணோம். தன் தலைமையில் எதிர் பார்த்திருந்த பிரெஞ்சுக்காரர் களுக்கு வேறு வழியில்லை என்பதை அவன் சுட்டிக்காட்டினான். ஆனால் நடை முறையில் அவன் வேறு வழியையும் செய்ய முயன்றான். ஹிட்லரின் தயவை சம்பாதிப்பதாலும், லவாலின் சூட்சிகளினாலும் அவர்களின் சொத்து சுகங்களைக்

காப்பாற்றப் பிரயத்தனப்பட்டான். இம்மாதிரி அவன் 'சரிவர நடந்து கொள்ளாமல் தன் தேசத்தை மிகவும் கேவலமான ஸ்திதிக்குக் கொண்டுவந்து விட்டான்.

## டியப்.

அந்த வேளை முதல் இது வரையிலும் பயமானது அவனையும், அவனைச் சூழ்ந்துகொண்டு ஏமாற்றி வருகிறவர்களையும் மிகவும் கேவலமான நிலைமையில் கொண்டுவந்திருக்கிறது. மார்ஷல் பிடேன் அல்லது அவனைச் சுற்றியுள்ளோர்கள் பிரான்ஸின் பழைய நேசதேசமான பிரிடனுக்கு எதிராகப் பிரெஞ்சுக் கப்பற்படையை உபயோகிக்கவிடாமல் வெகு பிரயாசைப்பட்டுத் தடுத்திருக்கிறார்கள். அவர்களை அடிமையாக்கின ஹிட்லருக்கு இதுவரை கப்பற்படை உதவி கிடைக்காமல் செய்துவந்தார்கள். ஹிட்லருக்கு எதிரிடையாக உபயோகிப்பதற்கு பிரெஞ்சுக் கப்பற்படை ஒன்றுதான் பிடேன் கையில் பாக்கியிருக்கிறது. மற்றபடி இப்பொழுதும் பிரான்ஸ் அடிமை நாடாக இருக்கவும், ஜெர்மனிக்கு பயந்து கொண்டு நடக்கவும் செய்யவேண்டிய காரியங்கள் ஒன்றையும் பிடேன் பாக்கி வைக்கவில்லை. அன்றொரு நாள் பாரிஸிலிருந்து செய்த பிரசாரம் இதற்கு முடிவான உதாரணம். அது டாக்டர் கோயபல்ஸினால்தான் கட்டிவிடப்பட்டிருக்குமென்று யாவரும் எதிர் பார்க்கக்கூடியது. அதாவது டியப் பிராந்தியத்தில் சண்டையில் ஈடுபட்டிருக்கும் ஜெர்மன் தளகர்த்தருக்கு பிரான்ஸிலிருந்து பிரிடிஷ், கனேடிய துருப்புகளை வெகு துரிதமாக துரத்தியடித்ததற்கு மார்ஷல் பிடேன் ஆசிகூறி தந்தியனுப்பினதாகச் சொல்லப்பட்ட செய்திதான். மனிதனின் மனசாக்ஷி இதைக்காட்டிலும் மோசமாக இருக்கமுடியாது. பிரான்ஸின் ஸ்வதந்திரத்தை பிரிடிஷ்காரர்களிடமிருந்து காப்பாற்றுகிறார்களாம். ஜெர்மன் ஆக்கிரமிப்புக்காரர்களால் நிறைந்திருக்கும் பிரெஞ்சு தேசத்தில் ஸ்வதந்திரம் ஏது? தன்னுடைய நேசதேசத்திற்கு இடங்கொடுத்து உதவாமல், அந்த தேசத்தையே எதிரி உபயோகிக்கும்படி விட்டு அங்கிருந்துகொண்டு நேசதேசத்தை வெடிகுண்டுகளால் தாக்கவும், நேசதேசத்தார்கள் முற்றுகையிட்டு பட்டினியாகக் கிடக்கும்படி செய்யவும் அனுமதித்திருக்கும், இந்தப் பிரெஞ்சு அரசாங்கத்திற்கு இம்மாதிரி வாய் கூசாமல் சொல்ல என்ன வாயிருக்கிறது? ஹிட்லர் ஆக்கிரமித்த ஸ்வதந்திர பிரான்ஸிலிருந்து, 1940-ம் ௵த்தில் இங்கிலாந்தின் பேரில் படையெடுக்க ஹிட்லர் பிரயத்தனப்பட வில்லையா? இப்பொழுதும் ருஷ்யப் போர் முடிந்தவுடன் இன்னமும் பிரான்ஸிலிருந்து இங்கிலாந்தைப் படையெடுக்கத் திட்டம் போட்டுக் கொண்டுதானிருக்கிறார்கள். அத்தகைய ஸ்வதந்திரமுள்ள பிரான்ஸிலிருந்து கொஞ்ச நாட்களுக்கு முன் பாம்பர் விமானங்கள் பறந்து வந்து நமது நகரங்களைத் தவிடு பொடியாக்கியும், ஸ்திரீகளையும், குழந்தைகளையும் கொன்றும், முடமாக்கியும் செய்துவிட வில்லையா? இந்த சந்தர்ப்பத்தில் பெருமையான பிரெஞ்சு அரசாங்கமென்று சொல்லத் தகுதியில்லாததும், கொலை காரியங்களுக்காக உபயோகப்படுவதுமான அந்தப் பிரதேசத்தின்பேரில் நாம் படையெடுக்க நமக்கு ஏன் உரிமையில்லை? 1914—18-ம் வருஷம் வரையில் பிரான்ஸின் ஸ்வதந்திரத்தைக் காப்பாற்ற 7½ லக்ஷம் பிரிடிஷ் சைனியங்கள் சண்டையிட்டு, உயிர் துறந்திருக்கிறார்கள். அவர்களைப் பிரான்ஸைப் படையெடுத்தவர்கள் என்று கூறுவது நியாயமாகுமா? அப்படிக் கூறுவதென்றால் டியப் பிராந்தியத்தில் பிரிடிஷ்காரர்களுடன் சண்டையிட்ட தைரியசாலிகளான அநேக பிரெஞ்சுக்காரர்களையும், அவர்களின் வாரிசுகளையும் அம்மாதிரி இழிவு படுத்தியதாகும். அப்படிப் போர் செய்தது கடைசித்தடவை என்று சொல்வதற்கில்லை. அப்பேற்பட்ட டியப் நதிப் பிரதேசம் இன்னும் அடிமை நாடாகவே இருக்கிறது.

## பயங்குள்ளித்தனம்.

1940-ம் ௵த்தில் தன் ஜனங்களைத் தவிக்க விட்டுவிட்டு மார்ஷல் பிடேன் மட்டும் தன்னைக் காப்பாற்றிக்கொள்ள ஆபிரிக்காவிற்கு ஓடியிருக்க வேண்டுமென்று நான் சொல்லவில்லை. அவனுக்கு வயதாகி விட்டது. ஆகையால் போர் நடத்துவதற்கு முடியாது. இருந்தாலும் அவன் பிரான்ஸ் தேசத்திற்கு ஒரு சிறந்த தலைவனாக இருந்தான். ஜெர்மானியர்களிடம் அடிமையாக ஆகும்படி ஆதரவற்ற பிரெஞ்சுக்காரர்களை விட்டுவிட்டு அவன் ஆபிரிக்காவுக்கு ஓடி



யிருந்தானானால், அவர்கள் அவன்பேரில் குற்றஞ் சாட்டும்படி நேரிட்டிருக்கும். அவன் மனசாக்ஷியும் இடங்கொடுத்திருக்காது. அந்த சந்தர்ப்பத்தில் பிரான்ஸ் போரைத்தொடர்ந்து நடத்துவது பிரயோஜனமற்றது. கடினமாகவும், இடியிடிக்கும்போல் தாக்கிவரும் ஜெர்மன் துருப்புகளுக்குமுன் சில மணிகள் நேரம் கூட பிரெஞ்சுத் துருப்புகளால் நிலைத்து நிற்க முடியாது. ஷாம்பேனில் ஜெர்மன் துருப்புகள் பிரவேசித்த பொழுதும், பிரெஞ்சு ராணுவத்தின் உணர்ச்சி குறைந்தவுடன் மார்ஷல் பிடேன் பிரெஞ்சு எதிர்ப்பு நிலைத்து நிற்காது என்று எண்ணினது சரி. இந்த மாதிரி சந்தர்ப்பங்களில் பெல்ஜியம் அரசர், லியோபால்ட் மாதிரி தன் அதிகாரத்தைப் பிறர்களுக்குக் கொடுத்துவிட்டும், இங்கிலாந்திலிருந்தும், ஆபிரிக்காவிலிருந்தும் யுத்தத்தை நடத்தும்படி செய்துவிட்டும், ஜனங்களுக்கு ஏற்படும் துக்கம், பொருள் நஷ்டம், அடிமைத்தனம் இவற்றிலும் பங்கிட்டுக் கொண்டிருந்தானானால் நன்றாக இருந்திருக்கும். அம்மாதிரி நடந்து கொண்டானானால் தன் தேசத்திற்கும், நேசதேசத்தார்களுக்கும் துரோகம் செய்யாதவனாக இருந்திருக்கலாம். அடிமைத்தனமும் மிகவும் குறைவாக இருந்திருக்கும், ஏனென்றால் அவனுக்கும், அவனுடைய தேசத்தார்களுக்கும் என்ன இழிவு நேர்ந்திருந்தாலும் அவர்களுக்கு அடிமை வாழ்க்கை இருந்திருக்காது. அவர்களுக்கு ஏற்பட்ட தொந்தரவும், ஜெர்மானியர் பொருள் பறிப்பதினாலும், கட்டளையிடுவதினாலும் ஏற்படும் நிர்ப்பந்தம் இப்பொழுதுள்ள மாதிரி இருந்திருக்கும். ஆனாலும் இத்தகைய நிலைமையைத் தாங்கள் சம்மதித்துக் கொண்டோம் என்ற கேவலமான உணர்ச்சி இல்லாமலிருக்கும். பெல்ஜியத்து அரசன் லியோபால்டு போல உலகத்தார்களின் மதிப்பையும், தன் நாட்டினரின் மரியாதையையும், பக்ஷத்தையும் பெற்றிருப்பான். பிடேனுக்கு வயதாகி விட்டபடியால் இன்னும் சில வருஷங்களே அவன் உயிருடன் இருக்கமுடியும். ஆகையால் அவன் எதிரியினுடைய கொடுங்கோன்மையினால் உயிர் துறந்திருப்பானானால் அவனுடைய பெயரும் உலகத்தில் நீண்ட காலம் புகழ் பெற்றிருக்கும். தீர்க்க திருஷ்டியுடன் உலகத்தார் பூராவும் நடுநடுங்கிக் கொண்டிருக்கும் சமயத்தில் அச்சமில்லாத முடிவுக்கு வந்த மனிதன் எப்படித் தன்னுடைய நாட்டையும் மீட்டி தன் தேசத்தையும் புனருத்தாரணம் செய்வானோ அவனைப்போல் இவனுக்கும் அழியாப் புகழ் ஏற்பட்டிருக்கும்.

## சந்தர்ப்பம் கை மீறியது.

பிரான்ஸ் இப்பொழுது அம்மாதிரி விடுதலையடைவதற்கும், புத்துயிர் பெறுவதற்கும், மற்றவர்கள் கையை எதிர்பார்த்திருக்கிறது. அம்மாதிரி அவன் நடந்து வந்தானானால் இதுவரை அது விடுதலை பெற்றிருக்கலாம்; அல்லது விடுதலை பெறக்கூடிய சந்தர்ப்பத்தை அடைந்திருக்கலாம். தன் நாடாகிய பிரான்ஸ் சமாதானம் செய்துகொண்டு பெல்ஜியம், ஹாலந்து, நார்வே இந்த தேசங்கள்போல் அதன் சாம்ராஜ்யங்களிலிருந்து யுத்தத்தை நடத்தி வந்திருந்தால், அப்பொழுது பிரான்ஸ் என்ன நிலைமையில் இருக்கும் என்று யோசித்துப் பார்ப்போம்! வட ஆபிரிக்கா யுத்தம் வெகு காலத்திற்குமுன் முடிவடைந்திருக்கும். எகிப்திலுள்ள வேவல் சைனியத்திற்கும், ஆல்ஜியர்ஸிலும், டூனிஸிலுமிருந்த பிரெஞ்சுச் சைனியத்திற்கும் நடுவில் அகப்பட்டுக்கொண்டு ரோமல் உதவிக்கு வருவதற்கு முன்னதாகவே, முஸோலினியின் வட ஆபிரிக்கா சாம்ராஜ்யம் மறைந்து போயிருக்கும். மொராகாவிலிருந்து துருக்கி எல்லைப்புறம் வரை கடற்கரை இடைவிடாமல் நேசதேசத்தார் வசமிருந்தால், இதாலியக் கப்பற்படை பலஹீனமாகப் போயிருக்கும். ஆபிரிக்காவிலுள்ள நமது சைனியம் வேறிடங்களில் நடக்கும் சண்டைகளுக்குக் கொண்டுபோக சௌகரியமாகவும் இருந்திருக்கும். மத்தியதரைக்கடல் வழியாக பிரிடிஷ், பிரெஞ்சுக்கப்பற்படையின் பாதுகாப்பு மூலமாகவும், பிரெஞ்சுஆபிரிக்காவில் தளம் வைத்துக்கொண்டு விமான பாதுகாப்பினாலும் சாரி சாரியாகப் போர் வீரர்களையும், ஸப்ளைகளும் பத்திரமாகக் கொண்டு செல்லலாம். ஒரு நாளும் சிங்கப்பூர் விழுந்திருக்காது. மலேயாவும், டச்சுக்கிழக்கிந்தியத் தீவுகளும், ஏராளமான விளைவுபொருள்களுடன் இப்பொழுதும் நமக்குச் சொந்தமாகவே இருந்திருக்கும். கடற்சண்டையில் ஜப்பானியர்களைத் தோற்கடிக்கக்கூடிய அவ்வளவு மிகுந்தபலம் நமக்கிருந்திருக்கும். காகஸஸ் பிராந்தியத்தில் ருஷ்யர்களின் பக்கத்தில் பிரிடிஷ் சைனியமும் சேர்ந்துகொண்டு

சண்டை செய்துகொண்டிருக்கும். வரவர க்ஷீணித்துக்கொண்டு வரும் இதாலியின்பேரில் படையெடுப்பது சுலபமாக இருந்திருக்கும். பிரான்ஸில் பிரிடிஷார் படையெடுக்கப் போகிறார்கள் என்ற பயமே ஏற்பட்டிருக்காது. ஏனென்றால் அத்தகைய சந்தர்ப்பங்களில் யுத்தத்தில் நாம் ஜயமடைந்து பிரான்ஸை வேறு சுலபமான வழிகளில் விடுதலை செய்திருக்கலாம்.

# பொதுமக்கள் ஏன் பீதியடைய வேண்டும்.

## உண்மையான ஆபத்து எது என்று அறிந்துகொள்ளவில்லை.

**நீதிபதி வாட்ஸ் ஒர்த்** (அகில இந்திய ரேடியோ).

சென்னை ஹைக் கோர்ட்டு நீதிபதி எஸ். வாட்ஸ் ஒர்த், சமீபத்தில், சென்னை ரேடியோ மூலம் ஒரு பிரசங்கம் செய்தார், அதன் சுருக்கமாவது: —

ஒரு கிழவி தெருவின் குறுக்கே தள்ளாடிக்கொண்டு போகிறாள். திடீரென்று அவள் அருகே மோட்டார் கார் சத்தம் கேட்கிறது. திருக்கிடுகிறாள். முன்னே ஓடப் பார்க்கிறாள். அவள் மனம் மாறுகிறது. அவள் கால்கள் பின் இழுக்கின்றன. இதற்கிடையில் அந்த மோட்டார் டிரைவர் பாடு திண்டாட்டமாகி விடுகிறது. அந்த வண்டிக்குள்ள எல்லாத்தடைகளையும் போட்டு அமுக்குகிறார். கிழவிக்கு ஆபத்து நேர்ந்துவிடக் கூடாதே என்பது அவருடைய பெருங் கவலை. சத்தம் கேட்டவுடனேயே கிழவி, அந்த இடத்திலேயே நின்று, சற்று ஆலோசித்திருப்பாளானால், ஆபத்திற்கே இடமிராது, அல்லது மேலும் நெடுக போய்க் கொண்டிருந்தாலும் ஆபத்து ஏற்படாது. இப்படிச் செய்தால், டிரைவர் வண்டியை வளைவாக ஓட்டிக் கொண்டு போய்விடுவார். ஆனால், இப்படிப்பட்ட நெருக்கடியான சந்தர்ப்பங்களில் நாமெல்லோரும் ஓடிப்போகத் தான் பார்க்கிறோம். இது நமது இயற்கை. நம் உயிரைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டும் என்னும் உணர்ச்சி நமக்கு இயற்கையாகவே ஏற்படுகிறது. இதன் பயனாகப் பல சமயங்களில் நாம் நாசந்தான் அடைகிறோம்.

1940-ம் வருஷம் மே மாதம் வட பிரான்ஸிலும் பெல்ஜியத்திலும் இது போலவே தான் நடந்தது. இந்தப் பகுதிகளிலிருந்து. தப்பியோடி சரண் புகுந்தவர்கள் ஓடியதைக் குறித்து வருணித்து எழுதப்பட்டுள்ள பல புஸ்தகங்களை நீங்கள் படித்திருப்பீர்கள். அவை மிகவும் பரிதாபமான கதைகள். ஏனெனில் அவை உண்மைச் சம்பவங்கள். ஒரு நகரத்திற்கு அருகில் ஜெர்மன் படை வருவதற்கு முன்னாலேயே, 'இதோ வந்துவிட்டான்! அதோ வந்துவிட்டான்! ஜெர்மானியன்' என்று பொய் வதந்திகள் கிளம்பின. இதைக் கேட்ட பொது மக்கள் எல்லோரும் பீதி கொள்ளுவது இயற்கைதான். தம் உயிரைக் காத்துக் கொள்ள வேண்டும் என்னும் உணர்ச்சிக்கு அவர்கள் ஆளானார்கள். இதன் பயனாக முடிவில் அவர்கள் நாசமடைந்தார்கள்.

அதாவது, பீதிகொண்ட பொதுமக்கள் ஆயிரக்கணக்கில் ஊரை விட்டு வெளியேறினார்கள். தெருக்கள் எல்லாம் இவர்கள் கூட்டந்தான். கைவண்டிகள், மாட்டு வண்டிகள், ரிக்ஷாக்கள், ஜட்காக்கள், மோட்டார்கார்கள் எல்லாம் தெரு நிறைய அடைத்துக்கொண்டு போயின. இவை நிறைய சாமான்களோடு ஆண்களும் பெண்களும் குழந்தைகளும் அடைந்திருந்தனர். இதனால் போர் முனைக்குப் போகும் படைகள் வேகமாகப் போகக் கூட வில்லை. அவற்றின் வேகம் பெரிதும் தடைப்பட்டது. இந்தக் காரணத்தினால், தடையில்லாமல் ஜெர்மானியர்கள் முன்னேற முடிந்தது.

இப்படித் தப்பியோடுகிறவர்கள் எங்கேனும் நிற்பதாகத் தோன்றினால் எதிரி விமானங்கள் தாழப்பறந்து வெடி குண்டுகளை அவர்கள் மீது எறிந்தன. நிராதரவான ஜனங்களை மிஷின் பீரங்கிகளைக் கொண்டு படு கொலை செய்தார்கள். இவற்றாலும் மேலும் அதிக பீதி ஏற்பட்டது. கணவன் ஒரு புறம், மனைவி வேறொரு புறம்; பெற்றோர்கள் ஒரு புறம்; மக்கள் மற்றோர் புறம் தெருப்பக்கங்களில் மடிந்து கிடந்தார்கள். இந்தக் கொடும் பீதியால் தூண்டப்பட்ட ஆயிரக்கணக்கான மக்கள் மேற்கு நோக்கித் தப்பியோடினார்கள். இவர்கள் இப்படி



ஓடியதனால், அந்நாடுகளைக் காக்கும் பொருட்டு முன்னேறிப் போய்க்கொண்டிருந்த படைகளின் சேதம் தடைப்பட்டது மட்டுமின்றி, அவற்றின் ஊக்கமும் சற்று தளர்ந்தது. முன்னேறிக்கொண்டு வந்த எதிரிப் படைகள், தப்பியோடும் பொதுஜனங்களை மடக்கி மிஷின் பீரங்கிளால் சுட்டு, அவர்களுக்கு இடையே ஒரு வழியைத் தமக்கு உண்டாக்கிக்கொண்டார்கள். இதனால், எத்தனை உயிர்கள் மடிந்தனவென்று யாருக்கும் தெரியாது. ஆனால் ஏராளமான பேர்கள் மடிந்திருக்க வேண்டுமென்பது மட்டும் நிச்சயம். **உயிரைக் காப்பாற்றிக்கொள்ளும் பொருட்டுத் தப்பியோடிய லக்ஷக்கணக்கானவர்கள், தம் வீட்டிலேயே இருந்திருப்பார்களானால், தம் உயிர்களை இழந்திருக்கவேமாட்டார்கள். இது உறுதி.** நேசதேசப் படைகளும் விரைந்துபோய், ஜெர்மன் படைகள் முன்னேறி வரவொட்டாதபடி தடுத்திருக்கக்கூடும்.

எதிரி தாக்குதலுக்குப் பயந்துகொண்டு ஓடிப்போவது மகா ஆபத்தான விஷயம். ஒரு பெருங்குற்றம். ரங்கூனில் முதல் முதல் ஜப்பானிய விமானங்கள் தாக்க ஆரம்பித்தவுடனே, ஏராளமான ஜனங்கள் தெருக்களில் அங்குமிங்கும் பைத்தியக்காரத்தனமாகவும், முட்டாள்தனமாகவும் ஓடினார்கள். இந்த ஒரு காரணத்தினால்தான் அங்கே ஏராளமான பேர்கள் மடியும்படி நேர்ந்தது. தம் வீடுகளிலிருந்த பாதுகாப்பிடங்களில் இவர்கள் மறைந்துகொண்டிருந்திருப்பார்களானால், சேதமே ஏற்பட்டிருக்காது. சென்ற 3 வருஷங்களாக, ஜெர்மானியர்கள் இங்கிலாந்தை விமானங்களைக்கொண்டு தாக்கியதன் பயனாக, எத்தனைப் பேர்கள் சேதமானார்கள் தெரியுமா? லண்டனிலும் அதைச் சுற்றிலும் மட்டும் ஆயிரக்கணக்கான குண்டுகளை எதிரிகள் வீசினார்கள். அவற்றால் விளைந்த சேதத்தை மிகவும் அற்பம் என்றுதான் சொல்லவேண்டும். அந்தப் பகுதிகளில் வசித்தவர்களில் நூற்றுக்கு எத்தனைப் பேருக்குச் சேதம் என்று சொல்லுவதற்கில்லை. ஏனென்றால், அந்தப் பகுதிகளிலிருந்த குழந்தைகளையும் வேலைக்குத் தகுதியில்லாதவர்களையும் அப்புறப்படுத்திவிட்டார்கள், அங்கிருந்த மீதிப் பேர்களில் ஆயிரத்திற்கு ஒருவர் அல்லது 10,000-க்கு ஒருவர்தான் மடிந்திருப்பார்கள்.

இந்தியாவிலுள்ள ஒரு கிராமத்தில் வாந்திபேதி கண்டுவிட்டதென்று வைத்துக்கொள்ளுவோம். சில வாரங்களில் அந்தக் கிராமத்தில் பெரும் பகுதியினர் மடிந்துபோகிறார்கள். இதைச் சர்வ சாதாரணமாகத்தான் பொதுவாக ஜனங்கள் மதிக்கிறார்கள். ஆனால், தாம் வசிக்கும் இடத்திற்கு அருகில் 5 அல்லது 6 வெடிகுண்டுகள் விழுந்துவிட்டாலோ, ஆயிரக்கணக்கான மக்கள் தம் குழந்தை குட்டிகளுடன், மூட்டை முடிச்சுக்களுடன் தம் சொந்த ஊரைவிட்டு ஓடிப் போகின்றார்கள். இதிலிருந்து என்ன விளங்குகிறது? லண்டனிலுள்ளவர்களை விட இந்நாட்டிலுள்ளவர்களுடைய தைரியம் குறைந்தது என்றேற்படுகிறதல்லவா? வாந்திபேதி நோய் கண்டுவிட்டால், இந்தியர்கள் மிகுந்த தைரியத்தோடுதான் இருக்கிறார்கள். இது பற்றி மலையாளத்தில் நடந்த சம்பவமொன்றை நான் மறக்கவேமுடியாது. ஒரு விசாரணைக் கைதியை ஒரு போலீஸ் சேவகர் ரோடு வழியாக 15 மைல்கள் தூரத்திலுள்ள ஒரு மாஜிஸ்திரேட் கோர்ட்டுக்கு நடத்திக் கொண்டுபோனார். நடு வழியில் திடீரென்று போலீஸ் சேவகருக்கு வாந்திபேதி கண்டுவிட்டது. அந்தக் கைதி அப்போது வெகு இலகுவாகத் தப்பிக்கொண்டிருக்கலாம். ஆனால், அவர் செய்ததென்ன? வாந்திபேதியும் ஆகிக்கொண்டிருந்த அந்தச் சேவகரைத் தன் முதுகின்மேல் சுமந்துகொண்டு, பல மைல்கள் தூரம் நடந்து, அங்கிருந்த பட்டணத்தில் ஒரு டாக்டரிடம் கொண்டுபோய்ச்சேர்த்தார். அந்த டாக்டர் அந்தச் சேவகருக்குத் தகுந்த சிகிச்சை செய்து அவருடைய உயிரைக் காப்பாற்றினார். இந்தக் கைதியின் தொண்டைவிடச் சிறந்த தொண்டையோ, தைரியமான செயலையோ நான் கேள்விப்பட்டதே கிடையாது. தைரியமில்லாத காரணத்தால், குண்டுகளுக்குப் பயந்து ஜனங்கள் ஓடுவதில்லை. ஆனால் இப்படிப்பட்ட ஆபத்துகளுக்கு அவர்கள் இதுவரை உள்ளாகிப் பழகாததுதான் காரணம். அப்படிப்பட்ட நிலைமை ஏற்படக்கூடாது என்பதுதான் என் ஆசை. எதிரிகள் சென்னையை விமானங்களிலிருந்து அடிக்கடி தாக்குவதாக வைத்துக்கொள்ளுவோம். அப்போது சென்னை வாசிகளுக்கு இது சர்வ சாதாரணமாகிவிடும். இதுபற்றி எனக்குக் கொஞ்சங்கூடச் சந்தேகமே கிடையாது. அப்போது தம் வேலைகளை நாள்தோறும் வழக்கம்போல் செய்துகொண்டிருப்பார்கள். கொஞ்சமும் கலவரமடையமாட்டார்கள். லண்டனை

எதிரி விமானங்கள் தாக்கியபோது லண்டன் வாசிகள் கொண்டிருந்த மனவுறுதியை உலகமே பாராட்டியது. அவர்களுடைய மனவுறுதியைவிட, இந்தியர்களின் மனஉறுதி கொஞ்சமும் குறைந்ததல்ல.

## பகுத்தறிவை பறி கொடுக்காதீர்கள்.

விமான பலத்தில் கிழக்கரங்கத்திலும் மேற்கரங்கத்திலும் நேசநாட்டுப் படைகள் வெகுவாக பலத்துவிட்டன என்ற எண்ணம் நம் எல்லோருக்கும் ஏற்பட்டிருக்கிறது. நம் கரையோரங்களிலுள்ள ஊர்களை எதிரிகள் தாக்கக் கூடுமென்று சில மாதங்களுக்கு முன்பு எதிர் பார்த்தார்கள். இப்போது அதிர்ஷ்டவசமாக அந்த நிலை மாறிவிட்டது, அப்படிப்பட்ட நிலைமைக்கு இடம் ஏற்படுமானால், அதைத்தடுக்க நாம் தக்க ஆயத்தத்தோடுதான் இப்போது இருக்கிறோம். இந்த யுத்தத்தில் நாம் எதிர்பாராதவைதான், சாதாரணமாக நிகழ்கின்றன. இனி நமது கடற்கரையிலுள்ள ஊர்களுக்கு ஆபத்தில்லை என்று நம்பி எந்தக் காரியத்தையும் செய்வது முட்டாள் தனமாகத்தான் முடியும். இனி எதுவும் நேராதென்ற எண்ணத்தோடு நாம் ஆயத்தமில்லாமலிருப்பதும் ஆபத்தாகத்தான் முடியும். மீண்டும் எதிரிகள் நம் கடற்கரையிலுள்ள ஊர்களைத் தாக்குவதாக வைத்துக்கொள்ளுவோம். ஏ. ஆர். பி. முதலிய பாதுகாப்பு வேலைகளில் இல்லாத சாதாரண பொதுமக்கள் அப்போது என்ன செய்ய வேண்டும்? அவர்கள் கடமையை மூன்றே வார்த்தைகளில் சொல்லிவிடலாம். அதாவது :—

"**இருந்த இடத்திலேயே இருங்கள்**". உள்ள இடத்தைவிட, மேலும் பாதுகாப்புள்ள இடம் எங்கே என்று, தேடிக்கொண்டு வெளியே ஓடாதீர்கள், அருகிலுள்ள கட்டடங்களுக்குள்ளாகவாவது, பாதுகாப்புப் பள்ளங்களிலாவது போய் மறைந்து கொள்ளுங்கள். நம் படைகள் எதிரிகளோடு போராடவேண்டிப் போவார்களானால் வேடிக்கை பார்க்கும் பொருட்டு வெளியே தெருவில் ஓடாதீர்கள். நீங்கள் அப்படி ஓடினால் உங்கள் பேரிலும் ஏதேனும் விழக்கூடும்.

முதல் தாக்குதல் முடிந்தவுடனே, ரயில்வே ஸ்டேஷனுக்கு உங்கள் பெண்டு பிள்ளைகளுடனும் மூட்டை முடிச்சுகளுடனும் ஓடிப்போய் இந்தியாவின் வட கோடிக்குப்போக டிக்கெட்டு கேட்காதீர்கள். இப்படிச் செய்வீர்களானால், உங்களைத் தற்காத்துக்கொள்ள வேண்டுமென்னும் உணர்ச்சிக்கு ஆளாவீர்களே ஒழிய பகுத்தறிவைப் பறி கொடுத்தவர்களாவீர்கள். அப்படிச் செய்வீர்களானால், மோட்டாருக்கு முன்னே தடுமாறி ஆபத்திற்குள்ளாகும் கிழவியின் கதையாகத்தான் முடியும். எதிரி விமானங்கள் அருகாமையில் இருந்தால், ரோடுகளுக்கும் ரயில்வே ஸ்டேஷன்களுக்கும் கண்டிப்பாகப் போகவே கூடாது. மற்ற எல்லா இடங்களையும்விட, உங்கள் வீடே பாதுகாப்புள்ள இடமாகும். உங்கள் வீட்டில் பாதுகாப்புப் பள்ளங்கள் வெட்டியிருந்தால் மேலும் நல்லது. இது சம்பந்தமாக நம் எல்லோருக்கும் ஒரு கடமை உண்டு. நம் நாட்டின் பாதுகாப்பைத் தடை செய்யக் கூடிய எந்தக் காரியத்தையும் நாம் செய்யக் கூடாது. நம் போக்கு வரவு சாதனங்கள் நாசம் அடைவதினால், நம் எதிரிகளுக்குத் தான் மகத்தான நன்மை. ரயில்வேக்கள் வழியாகவும் ரோடுகள் வழியாகவும் பொதுஜனங்கள் ஏராளமாகப் போய்க்கொண்டிருப்பார்களானால், நம்மைப் பாதுகாக்கும் படைகள் எதிர்த்துப் போகும் வேகம், பெரிதும் தடைப்படும். சாதாரணமாகக் கிடைக்கக் கூடிய வெற்றியும் இதனால் கிடைக்காமல் போகக்கூடும்.

## சோல்ஜர்களும் மனிதர்கள்தான்.

தென்னிந்தியாவில் வசிக்கும் நாம் நெடுங்காலமாக யுத்தம் என்பதையே அறியோம். ஆகையால் யுத்தத்தில் நாட்டமுடையவர்களைப் பற்றியோ யுத்தத்திற்கான பொருள்களைப்பற்றியோ நமக்கு எதுவும் தெரியாது. சிப்பாய்களை புலி, சிங்கம் போன்றவர்கள் என்று தான் மதித்திருந்தோம். ஆகவே, அவர்களுடைய சகவாசமே கூடாதென்று ஒதுக்கிக்கொண்டிருந்தோம். இப்போது சிப்பாய்களோடும் சோல்ஜர்களோடும் சகஜமாகி விட்டோம். அவர்கள் யார் என்பதை நாம் இப்போது உணர்ந்துகொள்ளத் தலைப்பட்டு விட்டோம். அவர்களும் நம்மைப்போல சாதாரண மனிதர்கள்தான். நம்மைப் பாதுகாக்கத்தான் அவர்கள் இருக்கிறார்கள் என்பதையும் தெரிந்துகொண்டிருக்கிறோம். அந்தச் சிப்பாய்களும் சோல்ஜர்களும், உங்களில் சிலர் பழக்கப்பட்டிருக்கலாம். ஊர்களுக்கு, அவர்களுடைய சொந்த ஊரில், மனைவி மக்களுண்டு. அவர்களைக்



காணவேண்டுமென்னும் ஆசை அவர்களுக்கு மிக மிக அதிகம். இது இயற்கைதான். இது அவர்களுக்கு அந்நிய நாடு. அவர்களுக்கு தோழர்கள் யாரும் இங்கே கிடையாது, அவர்களை உள்ளன்போடு யாரேனும் நேசித்தால், அதை அவர்கள் இங்கே வெகுவாகப் பாராட்டுகிறார்கள். அவர்கள் இனிது வாழத்தக்க பல காரியங்களை நாம் செய்யலாம். அவர்கள் எல்லோரையும் நம் வீடுகளுக்குத் தருவித்து விருந்து நடத்த முடியாமலிருக்கலாம். ஆனால், நாம் அவர்களைக் காணும் போது அவர்களிடம் அன்பாக நடந்துகொள்ளக் கூடும். இவர்கள் அந்நியர்கள்; வேற்று நாட்டிற்கு வந்திருக்கிறார்கள். அதுவும் நம்மை பாதுகாப்பதற்காக, இவர்கள் பிரிடிஷ் சோல்ஜராக இருந்தாலும் சரி, அல்லது இந்தியச் சிப்பாயாயிருந்தாலும் சரி, அவர்கள் அனைவரிடத்திலும் அன்பாக நாம் நடந்துகொள்ளவேண்டும். நம் அரசியல் போக்குகள் எப்படி இருந்தாலும் கௌரவமுள்ள நம் விருந்தினர் ஆகவே நாம் அவர்களை நடத்த வேண்டும். அரசியல் கொள்கைகளிலோ. மற்ற கொள்கைகளிலோ அவர்களுக்குச் சம்பந்தம் கிடையாது. பொதுவான நோக்கத்திற்காகப் போராட அவர்கள் வந்திருக்கிறார்கள். அந்த நோக்கம் நம் எல்லோருக்கும் எப்படி பொதுவானதாய் இருக்கிறதோ, அது போலவே தான் அவர்களுக்கும் பொதுவானது. இந்த நோக்கம் கைகூடவேண்டுமானால், பலவகை ஆபத்துகளையும் கஷ்டங்களையும் சகிக்க வேண்டியிருக்கிறது. அப்போது தான் கொடுமையை வெல்லலாம். இதற்காகத்தான் தம் வீடு வாசல் மனைவி மக்கள் எல்லாவற்றையும், விட்டு விட்டு, இங்கே வந்திருக்கிறார்கள். ஆகையால், அவர்கள் எந்த வகுப்பினராக இருந்தாலும், நண்பர்களாகவே அவர்களை நாம் வரவேற்போம்.

## இந்தியரின் அருந்தொண்டு.

சில வாரங்களுக்கு முன்பு சென்னையில் ஒரு சம்பவம் நடந்தது. அது எனக்குப் பெரும் மகிழ்ச்சியளித்தது. நடு இரவு, நிலவு இல்லை. இருள் சூழ்ந்திருந்தது. மூன்று பேர்கள் ஒரு ரோட்டில் வழி தெரியாமல் தடுமாறிக் கொண்டிருந்தனர். அந்த ரோடு வழியே ஒரு மோட்டார் கார் வந்தது. அதிலிருந்தவர் இவர்களுடைய திண்டாட்டத்தைக் கண்டார். தன் காரில் ஏற்றிக்கொண்டு தன் வீட்டிற்கு அழைத்துப் போனார். அவர்கள் படுத்துக் கொள்ள படுக்கை தந்தார். மூவரும் நன்கு உறங்கினார்கள். விடிந்தது. அவர்களுக்கு ஒவ்வொரு கோப்பை காப்பி கொடுத்தார். பிறகு அவர்கள் போய்ச் சேர வேண்டிய வழியை அவர்களுக்குக் காட்டினார். இம்மூவரும் சோல்ஜர்கள். பூனமல்லி ஹை ரோடில் திண்டாடிக்கொண்டிருந்தனர். காரில் வந்தவர் ஒரு இந்தியர் டாக்டர். இவர் தனது காரியங்களை முடித்துக் கொண்டு திரும்புகையில் இவர்களைப் பார்த்து வழி தவறிவிட்டார்களா என்றும் ஏதாவது உதவி செய்ய வேண்டுமா என்றும் கேட்டார். அவர்கள் தங்களுடைய நிலைமைகளைத் தெரிவித்தார்கள். இவர் தனது வீட்டினுள் அழைத்து படுக்கப் படுக்கையும், காலையில் காப்பியும் கொடுத்தார். பிறகு அவர்கள் சிநேக பாவத்துடனேயே சென்றார்கள். அவர்களும் இந்தியர்கள் விஷயத்தில் ஒரு சிநேக பாவத்தைக் காட்டினார்கள். ஆகவே அந்த டாக்டர் அன்று செய்த சுச்ருஷை இந்திய ஸ்வதந்திரத்தை முன்னிட்டு செய்யப்பட்டதேயாகும். இந்தியாவில் தேசீயப் பிளவை உண்டுபண்ணும் பிரசாரகர்களைக் காட்டிலும் இவர் மேலானவர்.

தேசீயத்தன்மையென்பது தனது சொந்த நாட்டில் ஒரு அபிமானம் காட்டுவதுதான். மற்றவர்களை வெறுப்பதாக ஆகாது. இவ்வித தேசாபிமானத்தைக் காட்டுவது இந்தியாவை விரும்பும் ஒவ்வொருவரின் கடமையேயாகும். இதனால் இந்தியாவுக்கு நல்லபெயர் ஏற்படும். அதன் பாதுகாப்பு கெடுதலையடையாது. யுத்தம் இந்தியாவை நெருங்குமேயாகில் தேசத்தின் பாதுகாப்புத்தான் முக்கியமாக கவனிக்கப்படவேண்டும். நமது இனத்தாரின் க்ஷேமம் மாத்திரம் கவனிக்கப்படுவது கூடாது. கலவரத்தை விடுவோம். அது இருந்தால் நம்மை மிருகங்களுக்கு சமமாக்கி பெரும்ஆபத்திற்கு உள்ளாக்கிவிடும். எதிரியின் குண்டுகள் விழுந்தால், நாம் அமைதியாக இருந்து பிறருக்கு ஒரு திருஷ்டாந்தமாக இருப்பதும் நம்மைப் பாதுகாக்கும் படைகளுக்கு இடைஞ்சலில்லாமலிருப்பதும் நமது கடமையாகும். அவ்விதமான நிலைமை ஏற்படவேண்டாமென்றுதான் நானும் நினைக்கிறேன். ஆனால் அப்படி எதிரி தாக்குதல் நேர்ந்து குண்டுகள் விழுந்தும் யந்திர பீரங்கிகள் தாக்குதலும் ஏற்பட்டால் அமைதியுடனிருந்து பாதுகாப்புச் செய்து கொண்டு ஊக்கத்துடன் இருங்கள்.

## தேசிய யுத்த முன்னணி.

# கிராம உத்தியோகஸ்தர்களுக்காகவும், உபாத்தியாயர்களுக்காகவும் தயாரிக்கப்பட்ட குறிப்புகள்.

*தேசிய யுத்த முன்னணி என்றால் என்ன?*

நமது சிப்பாய்களுக்கு முடிந்தவரை உதவி செய்து இந்தியாவும் நேச தேசங்களும் வெற்றியடைய இந்தியாவின் எல்லா பாகங்களிலும் ஈடுபட்டிருக்கும் எல்லா வகுப்பினரும், எல்லா மதத்தினரும் ஒன்று சேர்ந்த ஸ்தாபனமாகும்.

*இதில் அங்கத்தினராவதற்குள்ள நிபந்தனைகள்.*

தேசிய யுத்த முன்னணி எடுத்துக்கொண்டிருக்கும் பிரதிக்ஞையை அங்கீகரிக்கும் ஒவ்வொரு ஸ்திரீயும் புருஷனும் இதில் அங்கத்தினராகலாம். அந்தப் பிரதிக்ஞையாவது:—

> "இந்தியாவின் கௌரவ மக்களில் ஒருவனாக இருக்கும் நான் பயங்கொள்ளித்தனத்தை அகற்றி, பயத்தை விளைவிக்கும் வதந்திகளை அடக்கி, இந்தியாவின் கௌரவத்தையும், பத்திரத்தையும் கெடுக்கும் ஒவ்வொரு ஆபத்தையும் எதிர்த்து நின்று, வெற்றி நிச்சயம் கிடைக்கும் என்ற நோக்கத்துடன் ஒவ்வொரு நாளும் ஈடுபடுகிறேன் என்று உறுதி கூறுகிறேன்"

மொத்தமாகவோ வரி விகிதத்திலோ ஒரு விதத்திலும் அங்கத்தினர்கள் பணம் செலுத்தவேண்டியதில்லை. அழகாக அச்சடிக்கப்பட்ட தேசிய யுத்த முன்னணி கொள்கைகளையும், அடையாள பதக்கங்களையும் ஆர்கனைஸர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

*கிராம உத்தியோகஸ்தர்களுக்குள்ள விசேஷப் பொறுப்பு.*

ஒவ்வொரு கிராமத்திலும் உள்ள மிராசுதாரர், கணக்கப்பிள்ளை, உபாத்தியாயர் முதலியோர்தான் அந்தக் கிராமத்தின் உரிய தலைவர்களாவார்கள். சமாதான காலத்திலும் யுத்த சமயத்திலும் இவர்கள்தான் இந்தியப் பொதுமக்களின் ஜீவ நாடிகளாவார்கள். எவ்வித விஷயத்தை ஜனங்களிடையே விருத்திசெய்ய வேண்டுமென்றும், எதை அடக்கவேண்டுமென்றும் அவர்களுக்கு ஏற்பட்ட பொறுப்பாகும். முன்னைவிட தற்போதே அவ்வித கடமையை முழுமனதுடனும் சிரத்தையுடனும் அவர்கள் முடிக்கவேண்டும்.

*கிராம உத்தியோகஸ்தர்களின் கடமைகள்.*

சில விஷயங்களில் கிராம உத்தியோகஸ்தர்களால் என்ன செய்யக்கூடுமென்று அந்த கிராமத்தின் அமைப்பு நிலைமைக்கு ஏற்றவாறு தீர்மானிக்கப்படவேண்டும். ஆனால் பொதுவாகப் பார்க்கும்போது தேசிய யுத்த முன்னணியால் பிரசுரிக்கப்படும் புஸ்தகங்கள், பத்திரிகைகள் முதலியவைகளிலிருந்து யுத்தத்தைப்பற்றிய உண்மை செய்திகளைத் தெரிந்துகொள்ளவேண்டியது அவசியமாகும். இப்புஸ்தகங்களை அந்த கிராமத்து யுத்தப் போர்முனை சங்கத்தின் மூலமாகப் பெற்று அதன் மூலம் உண்மையைப் பரப்பி, பயத்தையும் புரளிகளையும் அடக்கவேண்டும். பொதுவாக கிராம உத்தியோகஸ்தர்களும் செய்யக்கூடிய சில அலுவல்களும், கடமைகளுமிருக்கின்றன. அவைகளாவன:—

(1) தான் நேரில் படையெடுக்க முடியாத நாடுகளை எதிரி பொய்யான வாக்குறுதிகளாலும், தப்பு சமாசாரங்களாலும் வசப்படுத்தப் பார்க்கின்றானென்றும், அவ்வித எதிரியை நாம் எதிர்த்துப் போராடுகிறோமென்றும் தானும் உணர்ந்து பிறருக்கும் எடுத்துச் சொல்லவேண்டும்.

(2) அவ்வித எதிரி மொழிகளுக்கு செவி சாய்க்கும் ஒருவன், சண்டையில் குண்டடியால் காயமடைந்தவனுக்குச் சமானமென்பதையும் பிறருக்கு எடுத்துக் கூறவேண்டும்.

(3) அந்தக் கிராமத்தில் போதுமான உணவுப் பண்டங்கள் இருக்கிறதாவென்றும், நன்றாகப் பாதுகாக்கப்பட்டிருக்கிறதாவென்றும் கவனித்து, அரசாங்கத்தார் அவசியமென்று கூறும் பயிர்களைப் பயிர் செய்யும்படி குடியானவர்களுக்கு எடுத்துச் சொல்லவேண்டும்.



(4) கிராமத்தில் இருக்கும் போக்கிரிகளை அடக்கி போக்கிரிகளான அந்நியர்களையும் துரத்திவிடவேண்டும்.

(5) நமது சிப்பாய்கள் கிராமத்திற்கு வந்தால் அவர்களை சிநேகிதர்களைப் போலவும், காக்க வந்திருப்போர்களென்றும் எண்ணி அவர்களுக்கு முடிந்த உதவியைச் செய்யவேண்டும்.

(6) எதிரிச் சிப்பாய்கள் வந்தால் அவர்களைத் தனியே விட்டுவிட்டு எல்லா ஸப்ளைகளையும் மறைத்துவைத்துக்கொள்ளவேண்டும்.

(7) சிப்பாய்களுக்கு அந்தக் கிராமத்தில் சொந்த வீடு இருந்து, ரஜாவில் அவர்கள் திரும்பி வந்தால் அவர்களை வரவேற்று, விருந்து முதலியவைகளை அளிக்கலாம். கிராமத்தை விட்டு சண்டைக்குச் சென்றால் அவர்களுடைய குடும்பங்களுக்கு ஒரு குறையுமில்லாமல் பார்த்துக் கொள்ளவேண்டும்.

(8) சிப்பாய்களுக்கு அவர்களின் சொந்தக் கிராம சமாசாரங்களைத் தெரிவிக்கக் கடிதங்கள் அனுப்புவதுடன் அவர்களிடமிருந்து கிடைக்கும் கடிதங்களை எழுதப் படிக்கத் தெரியாத அவர்களுடைய சொந்தக்காரர்களுக்குப் படித்துக் காட்டவேண்டும்.

(9) தேசிய யுத்த முன்னணியில் அங்கத்தினர்களை அதிகம் சேர்த்து, அவர்களுக்கு தேசிய யுத்த முன்னணிக்கொள்கைகள் அடங்கிய புஸ்தகங்களையும், பதக்கங்களையும் ஜில்லா உத்தியோகஸ்தர்களிடமிருந்தாவது, கிராம யுத்த முன்னணி ஆர்கனைஸர்களிடமிருந்தாவது வாங்கித்தரவேண்டும்.

(10) யுத்த முன்னணி என்றால் என்னவென்பதைத் துலக்கிக் காட்ட கூட்டங்களும், உபந்யாசங்களும், ஸினிமா, டிராமா முதலியவைகளையும் ஏற்பாடு செய்யப்படவேண்டும்.

(11) யுத்த முன்னணியைப் பற்றிய தகவல்களை பல இடங்களுக்கு அனுப்பி நோட்டீஸ்களும் படங்களும் சரியாக உபயோகிக்கப்படுகின்றனவாவென்று கவனிக்கவேண்டும்.

(12) வதந்திகளை அடக்கவேண்டும். அதைப் பரப்புவோருக்கு எச்சரிக்கை அனுப்பியும், அவர்கள் நிறுத்தாவிடில் அவர்களைப் பற்றி மேலதிகாரிகளுக்கு ரிபோர்ட்டு செய்யவேண்டும்.

ஒரு கிராமத்தை அமைதியாயும், சுத்தமாயும், தைரியமாயும் வைத்துக் கொள்ள கிராம உத்தியோகஸ்தர்களுக்கு எவ்வளவோ மார்க்கங்களிருந்தாலும் மேலே கண்ட குறிப்புகள் இந்தியாவில் உள்ள எல்லா வகையான கிராமங்களுக்கும் அன்வயிக்கும். மேலும் தேவையான அபிப்பிராயங்களுக்கும், மற்ற வேலைகளுக்கும் கிராம உத்தியோகஸ்தர்கள் சமீபத்தில் இருக்கும் தேசியப் போர்முனை ஆர்கனைஸர்களையும், ஜில்லா உத்தியோகஸ்தர்களையும் கலந்துகொண்டு அதன்படி சரியாகநடந்து கொள்ளுவதுதான் தேசத்திற்கும், கிராமத்திற்கும், தங்களுக்கும் தகுந்ததாகும்.

*நீங்கள் கடமைகளைச் செய்யும் விதம்.*

மற்றவர்களைக் காட்டிலும் கிராம உத்தியோகஸ்தர்களுக்கு சில சாதகங்கள் இருக்கின்றன. அந்தக் கிராமத்திலிருப்போருடன் தினம் நெருங்கிப் பழகுவதால் அவர்கள் நெருங்கிய சிநேகிதர்களாக இருப்பார்கள். இந்த சாதகத்தை பயன்படுத்திக்கொண்டு கிராம உத்தியோகஸ்தர்கள் தங்களால் முடிந்தவரை சரீரப் பிரயாசையினாலும் வாய் மொழியினாலும் வசப்படுத்திக்கொள்ளவேண்டும். இதற்காக யுத்தப் பத்திரிகைகளிலிருந்தும் புஸ்தகங்களிலிருந்தும் உண்மை விவரங்களைப்படித்துத் தெரிந்துகொள்ளவேண்டும்.

முன்னால் கண்ட குறிப்புகளில் எவைகளைத் தாங்களாகவே அனுஷ்டிக்கலாமென்பதையும், சிநேகிதர்களின் உதவி எவர்களுக்குத் தேவை யென்பதையும் கிராம உத்தியோகஸ்தர்களே நிர்த்தாரணம் செய்துகொள்ளவேண்டும். இவ்வித தயாரிப்புகளுடன் தங்கள் கிராமத்தை உண்மை விவரங்கள் பெற்ற ஒரு சிறு அரண்போலவே பாவித்து தேசத்திற்கே ஒரு தொண்டு செய்வதாகவே எண்ணிக்கொள்ளலாம்.

விலைவாசிகள் அதிகப்படாமல் பார்த்துக்கொள்ளலாம். கிராமப் பாதுகாப்புச் சங்கங்களில் பலிஷ்டர்களான வாலிபர்களைச் சேர்த்து போக்கிரிகளை அடக்கலாம். இச்சங்கத்திலுள்ளோர் இராக் காலங்களில் கிராமத்தில் ரோந்து செய்யலாம். கிராம உத்தியோகஸ்தர்களுக்கு மற்றபடி உதவி செய்யலாம்.

**உள்ளூர் ஆர்கனைஸர் செய்யக்கூடிய ஸப்ளை.**

உள்ளூரில் இருக்கும் தேசியப் போர்முனை ஆர்கனைஸர்களையோ, ஜில்லா உத்தியோகஸ்தர்களையோ கேட்டு கீழ்கண்டவைகளை கிராம உத்தியோகஸ்தர்கள் வாங்கிக்கொள்ளவேண்டும்.

1. தேசியப் போர்முனை நிபந்தனைகளும், அடையாளங்களும்.
2. வர்ணப் படங்கள், போட்டோக்கள் முதலியன.
3. அச்சடிக்கப்பட்ட சிறு புஸ்தகங்கள், துண்டுக் கடிதாசிகள்.
4. போர்முனை நாடகங்கள்.
5. "யுத்தப் படங்கள்" போன்ற படப் புஸ்தகங்கள்.

**தினம் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டிய விஷயம்.**

எல்லா கிராம உத்தியோகஸ்தர்களும், அவர்களுடைய சிநேகிதர்களும் தேசிய யுத்த முன்னணிக்கு உதவி செய்வதால் இந்தியாவிற்கு வெற்றி கிடைக்க வேண்டுமென்று மனதில் நினைத்து உதவுவதாக மட்டில் ஆகாது. ஆனால் போர் முனையில் முன்னின்று போரிடும் சிப்பாய்களுடன் கூட நின்று சண்டை செய்வதாகவே ஆகும். ஆகவே இந்தியா தனது மக்கள் தேசிய யுத்த முன்னணி தொண்டுகளைத் தினமும் புரிவார்களென்று எதிர்பார்க்கிறது.

## 'வி' டயரி-1943.

(குறிப்பு புஸ்தகம்).

லினன் ரூ. 1—4—0; லீப்ஸ்கின் ரூ. 1—8—0;

மொராக்கோ ரூ. 2—0—0.

லாபம் யுத்தநிதிக்குச் சேர்க்கப்படும்.

கீழ்கண்ட விலாசத்திலிருந்து வாங்கிக்கொள்ளலாம்.—

காரியதரிசி,

தேசிய யுத்த முன்னணி நிலயம்,
புதுக்கோட்டை (தென் இந்தியா).

## பிரஸங்க நிகழ்ச்சி முறை.

### பிரஸங்கம் 124.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 5-12-42 | முனிஸிபல் ஆபீஸ்... | மாலை | 7.45 | 9-12-42 | ராணி பெண் பாட்சாலை. | காலை | 10.15 |
| 6-12-42 | திருவரங்குளம் ... | ,, | 7.00 | ,, | பள்ளிவாசல் ... | மாலை | 7.00 |
| ,, | வம்பன் ... | ,, | 7.30 | ,, | பில்லமங்கலம் ... | ,, | 7.30 |
| 7-12-42 | திருமயம் ... | ,, | 7.00 | 10-12-42 | பொ. புதுப்பட்டி ... | ,, | 7.00 |
| ,, | மேலூர் ... | ,, | 7.30 | ,, | வேந்தம்பட்டி ... | ,, | 7.30 |
| 8-12-42 | குளவாய்ப்பட்டி ... | ,, | 7.00 | 11-12-42 | புலியூர் ... | ,, | 7.00 |
| ,, | கீழையூர் தெற்கு ... | ,, | 7.30 | ,, | கண்ணங்குடி ... | ,, | 7.30 |
| 9-12-42 | C.S.M. பள்ளிக்கூடம். | காலை | 10.00 | | | | |

### பிரஸங்கம் 125. (1-வது பிரிவு)

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 12-12-42 | முனிஸிபல் ஆபீஸ்... | மாலை | 7.45 | 15-12-42 | கீரனூர் ... | மாலை | 7.00 |
| 13-12-42 | பூவரசகுடி ... | ,, | 7.00 | ,, | நார்த்தாமலை ... | ,, | 7.30 |
| ,, | வெங்கடகுளம் ... | ,, | 7.30 | 16-12-42 | அரிமளம் ... | ,, | 7.00 |
| 14-12-42 | பெருங்களூர் ... | ,, | 7.00 | ,, | கீழாநிலைக்கோட்டை. | ,, | 7.30 |
| ,, | ஆதனக்கோட்டை... | ,, | 7.30 | 17-12-42 | உடையாளிப்பட்டி | ,, | 7.00 |
| | | | | ,, | இன்னுகோட்டை ... | ,, | 7.30 |

### யுத்தத்திற்கு ஆள் சேர்த்தல்—விளம்பரம்—மாலை 4-மணி.

| | | | |
|---|---|---|---|
| 5—12—42 | திருமயம். | 12—12—42 | வெட்டம்விடுதி. |
| 6—12—42 | மருதன்கோன்விடுதி. | 13—12—42 | ஏம்பல். |
| 7—12—42 | கீரனூர். | 14—12—42 | வீராலிமலை. |
| 8—12—42 | வடகாடு. | 15—12—42 | பொம்மூர். |
| 9—12—42 | ராயவரம். | 16—12—42 | கரம்பக்குடி. |
| 10—12—42 | குழிபிறை. | 17—12—42 | கீழாநிலைக்கோட்டை. |
| 11—12—42 | புதுக்கோட்டை. | | |

Sri Brihidamba State Press, Pudukkottai. 2,000—7-12-42.

# புதுக்கோட்டை ஸமஸ்தான
# தேசிய யுத்த முன்னணி நிலயம்.

பிரசுரம்] 1942-ம்௵ டிஸம்பர்௴ 12௳ [ந. 125

பிரஸங்கம் CXXV.

## காகஸஸ்.

உலக சரித்திரத்திலேயே மிகவும் கடுமையான சண்டைகள் என்று சொல்லக்கூடியவிதமாக ருஷ்யாவிலுள்ள காகஸஸ் பிரதேசத்தில் தற்சமயம் யுத்தம் நடைபெறுகிறது. ஸ்டாலின்கிராட் நகரம் காகஸஸுக்குப் போகும் மார்க்கத்திலிருக்கிறது. இப்பாகத்தில் ஜெர்மானியர் 10 லக்ஷம் பேர்கொண்ட சைனியத்தைக்கொண்டு தாக்கிவருகின்றனர். காகஸஸிலுள்ள எண்ணெய் தளங்களைக் கைப்பற்றுவதுதான் இவர்களுடைய நோக்கம். அதற்காகப் புரியப்படும் சண்டைகளில் தங்களுக்கு நேரும் நஷ்டங்களை கவனிக்காதவர்கள் போல சண்டை செய்து வருகிறார்கள். ருஷ்யாவில் கிடைக்கும் எண்ணெயில் முக்கால் பாகம் காஸ்பியன் கடற்கரையோரமாயுள்ள பாகுவில்தானிருக்கிறது. இதை ஜெர்மானியர் ஸ்வாதீனப்படுத்தவேண்டுமானால் ஸ்டாலின்கிராட்டையும் கைப்பற்றியாகவேண்டும். ஆனால் ஸ்டாலின்கிராடோ இரும்புக் கோட்டையாக இருந்துவருகிறது.

காகஸஸ் பிரதேசம் ருஷ்யாவின் தெற்கு பாகமாகும். அது கருங்கடலுக்கும் காஸ்பியன் கடலுக்குமிடையே உள்ளது. அது மலைப்பாங்கான ஒரு குறுகிய பிரதேசம். இங்குள்ள மலைகள் செங்குத்தாயும், அடர்ந்த காடுகள் உள்ளதாயுமிருக்கின்றன. அம்மலைத் தொடர்கள் காஸ்பியன் கடலிலிருந்து கருங்கடல் வரை கிழக்கு மேற்கில் குறுக்காக இருப்பதால் வடக்கேயிருந்து தெற்கே சுலபமாகப் போக முடியாமல் தடையாக இருக்கின்றன. இருந்தாலும் இதன் வழியாக ஒரே ஒரு இருப்புப்பாதைதான் இருக்கிறது. அதுவும் மலைகளின் கிழக்கு முனைக்கும் காஸ்பியன் கடலுக்கும் இடையேயுள்ள குறுகிய கடற்கரையோரமாகச் செல்லுகிறது. அம்மலைகளில் மிகவும் உயரமான மலை மவுண்டு எல்பர்ஸ் என்பது. இதன் உயரம் 18,470 அடி. இதுவே ஐரோப்பாவில் மிகவும் உயரமான மலையாகும்.

மாரி காலத்தில் இப்பிரதேசத்தில் கடும் குளிராக இருக்கும். நவம்பர் முதல்கொண்டே பனிவிழ ஆரம்பித்துவிடும். ஜார்ஜியன் மில்டரி ஹைவே என்ற ஒரே மார்க்கம்தான் போக்குவரத்துக்கு லாயக்கானது. அதிலும் பனிக்கட்டிகளை அகற்ற அதிகப் பிரயாசை ஏற்படுமானதால் போக்குவரத்து மிகவும் சிரமமாயிருக்கும்.

இவ்வளவு சிரமங்களிருந்தும் இப்பிரதேசத்தைக் கைப்பற்ற ஹிட்லர் மிகப் பிரயாசை எடுத்துவருகிறான். ஒரு 100 வருஷங்களுக்கு முன்பு இதைப் பிடிக்க யாராவது பிரயத்தனம் செய்தால் அவனைப் பைத்தியக்காரன் என்றே சொல்லியிருப்பார்கள். ஆனால் தற்போது நிலைமை அதிக மாறுபாடு அடைந்திருக்கிறது. நமக்கு எண்ணெய் மிக அத்தியாவசியமாய்விட்டது. லாரிகள், யுத்த யந்திரங்கள் இவைகளுக்குப் பெட்ரோல் வேண்டியிருக்கிறது. யந்திர சாமான்களுக்கு

மசகு எண்ணெய் தேவையாக இருக்கிறது. பெரிய என்ஜின்களுக்கு க்ரூட் ஆயில் உபயோகிக்கப்படுகிறது. விளக்கு முதலியவைகளுக்குக் கிரோஸின் தேவையாகயிருக்கிறது. ஆகவே இந்த நவீன காலத்தில் எண்ணெய் என்பது உருக்கிய தங்கத்திற்குச் சமமாக இருந்துவருகிறது. சண்டையில் பலம் பெறவோ, சமாதான காலத்தில் தொழிற்சாலைகளை அபிவிருத்தி செய்யவோ, எல்லாவற்றிற்கும் எண்ணெய்தான் மூலகாரணமாக இருக்கிறது. அவ்வித எண்ணெய் காகஸஸில் ஏராளமாகக்கிடைக்கிறது. ஹிட்லருக்கோ எண்ணெய் அதிகம் தேவையாக இருக்கிறது. அதனால்தான் காகஸஸைக் கைப்பற்ற எண்ணுகிறான்.

உற்பத்தியாகுமிடத்திலிருந்து எண்ணெயை மற்ற பாகங்களுக்கு எடுத்துச் செல்வது என்பது ஒரு கடினமான பிரச்னைதான். ஆனால் காகஸஸ் பிரதேசத்தில் அதுவும் லகுவாக்கப்பட்டிருக்கிறது. அதிகமான எண்ணெயை வெகுதூரம் எடுத்துச்செல்ல கடல் மார்க்கம்தான் சிக்கனமானது. இதற்குச் சாதகமாக காகஸஸ் பிரதேசத்தில் இரு கடற்கரைகளிலும்தான் கிடைக்கிறது. காஸ்பியன் பக்கத்தில் பாகு, மகச்கலா என்ற இடங்களிலிருந்து வால்கா நதி வழியாக ருஷ்யாவின் உள்நாட்டிற்கு எண்ணெய் எடுத்துச்செல்ல முடியும். கருங்கடல் பக்கத்தில் பாடுமீலிருந்து மத்தியதரைக்கடல் வழியாக உலகின் மற்ற பாகங்களுக்கும், டான்யூப் நதி வழியாக ஜெர்மனிக்கும், நீப்பர், டான் நதிகள் வழியாக யூக்ரேன் பிரதேசத்திற்கும் எண்ணெயை கப்பல்களில் எடுத்துச்செல்ல முடியும். காகஸஸின் மத்தியபாகத்தில் கிடைக்கும் எண்ணெயை இந்த 2 துறைமுகங்களுக்கும் கொண்டுவர லாயக்காக பெருங் குழாய்களை ருஷ்யர்கள் போட்டிருக்கிறார்கள்

1928-ம் வருஷம் வரையில் ருஷ்யாவில் எண்ணெய்தான் முக்கிய ஏற்றுமதியாக இருந்தது. அந்த வியாபாரத்தின் பயனாக தொழிற்சாலைகளைத் துரிதமாக அபிவிருத்தி செய்தனர். ஏற்றுமதி சௌகரியத்தை முன்னிட்டே பாடுமில் எண்ணெய் தளம் ஏற்பட்டது. இதைத்தவிர க்ரான்ஸ்னி, மெய்காப் என்ற இரண்டு இடங்களிலும் எண்ணெய் எடுக்கப்படுகிறது. அங்கிருக்கும் தளங்களிலிருந்து கருங்கடல் பக்கமாயுள்ள டுவாப்ஸி துறைமுகத்திற்கு குழாய்கள் மூலம் எண்ணெய் கொண்டுவரப்படுகிறது. இத்துறைமுகத்தை வசப்படுத்த ஒரு ஜெர்மன் சைனியம் முன்னேறி அதற்கிடையேயுள்ள நோவாராஸிஸ்க் துறைமுகத்தைக் கைப்பற்றி இருக்கிறது.

அதிக பலமாக முஸ்தீப்புடன் கூடிய ஜெர்மன் சைனியத்திற்குக்கூட காகஸஸை ஸ்வாதீனப்படுத்துவதென்பது சிரமசாத்தியமான காரியமாயிருக்கும். ஏனென்றால், ஏற்கனவே சொன்னபடி, மார்க்கங்கள் போதுமான வசதிகளுடன் இல்லை. அவைகளும் செங்குத்தான இடத்தைக் கடந்து செல்லுகின்றன. ஆழமான நதிகளில் போடப்பட்டிருக்கும் பாலங்களை ருஷ்யர்கள் உடைத்து எதிரிக்கு உபயோகமில்லாமல் செய்துவிடுவார்கள். அங்கிருப்பது ஒரு இருப்புப்பாதைதான். அதையும், சமயம் வந்தால், ருஷ்யர்கள் அழித்துவிடுவார்கள். மேலும் உயரமான மலைத்தொடர்களையும் கடக்கவேண்டி இருக்கிறது. இதோடில்லாமல் காகஸஸ் பிரதேசத்திலுள்ள மலை ஜாதியினர் ஓயாமல் கொரில்லாச் சண்டைசெய்து எதிரிகளைத் தடுப்பார்கள். நாஸிகளுக்கு டாங்கிகளும், பீரங்கிகளும், விமானங்களும், குடை விமானப்படையும் இருந்தால் போக்குவரத்து மார்க்கங்கள் இல்லாத இடங்களில் என்ன செய்யமுடியும்? ஆதலால் தைரியம் வாய்ந்த மனிதர்களால் பாதுகாக்கப்பட்ட காடுகள் அடர்ந்த மலைப்பிரதேசத்தை வசப்படுத்துவது எளிதான காரியமில்லை. முன்பு ருஷ்யர்களுக்கு இப்பிரதேசத்தை வசப்படுத்த 70 வருஷங்கள் பிடித்தது. இன்னும் இப்பிரதேசத்தில் ஹிட்லர் 1 மாத காலம்தான் சண்டை செய்யமுடியும். அதற்கு பிறகு மாரிகாலம் வந்துவிடும். அங்குள்ள ருஷ்யர்களுக்கு உதவிப்படையும் போய்ச்சேரும். அப்பேற்பட்டவர்களை ஜெர்மானியர் எதிர்த்து சண்டை செய்யவேண்டி இருக்கும். போதாக்குறைக்கு அங்குள்ள மலை ஜாதியினருக்கு ஜெர்மானியரைக் கண்டால் வெறுப்பு உண்டு. காகஸஸ் பிரதேசத்திலுள்ளோர் எப்படி தைரியம் பெற்று நாஸிகளை எதிர்த்து அடிப்பார்கள் என்பதற்கு ஸ்டாலின் ஒருவனைப் பார்த்தாலேயே தெரியவரும். ஏனென்றால் ஸ்டாலின் காகஸஸ் பிரதேசத்தவரின் இனத்தைச் சேர்ந்தவன். ஆகவே நாஸிகளுக்கு எதுவும் சுலபமாகக் கைகூடுமென்று சொல்வதற்கில்லை.



ஒருக்கால் காகஸஸை ஜெர்மன் சைனியங்கள் ஸ்வாதீனப்படுத்தியதாக வைத்துக்கொண்டாலும், அங்கு ஏற்படும் சிரமங்களை சமாளித்துவிட முடியுமென்று சொல்லமுடியாது. அப்பிரதேசத்தை வசப்படுத்திக்கொண்டு, ஜெர்மன் மானேஜ்மெண்டில், அவர்களும் எண்ணெயை அடையலாமே என்று எதிர்பார்க்கலாம். ஆனால் பூ தகன முறை ஒன்று இருக்கிறதென்பதையும், அதையும் ருஷ்யர்கள் ஒரு யுத்தக் கருவியாகக் கையாண்டு வருகிறார்கள் என்பதையும் நாம் மறந்துவிடக்கூடாது. அப்பிரதேசங்களை ஸ்வாதீனப்படுத்தினாலும் ஒரு சொட்டு எண்ணெய்கூட ஜெர்மானியருக்குக் கிடைக்காதபடி எண்ணெய் தளங்களையும், எண்ணெய்க் கிடங்குகளையும் ருஷ்யர்கள் அழித்துவிடுவார்கள். எதிரிவசம் ஒப்படைப்பதைக் காட்டிலும் அவைகளை அழித்துவிடுவதுதான் ருஷ்யர்களின் நோக்கம். மறுபடி அந்த எண்ணெய்க் கிணறுகளை ரிபேர் செய்தோ, புதிதாகக் கிணறுகளை வெட்டியோ எண்ணெயைக் கண்ணால் பார்ப்பதற்குள் எதிரிக்கு பிரும்மப் பிரயத்தனமாகிவிடும். இந்த மூன்று வருஷ காலமாக எதிரிகள் செய்துவரும் தந்திரங்களும், பலமான எதிர்ப்பும் ருஷ்ய எண்ணெய் தளங்களைக் கைப்பற்றும் பிரயத்தனத்தில் பலிக்கவில்லை. எப்படியிருந்தாலும் வெகு காலமாக ஆசை வைத்திருந்த அப்பிரதேசங்களுக்கருகில் வரவர எதிர்பாராத வேகத்துடனும், வந்தது வரட்டுமென்றும் எதிரிகள் சண்டைசெய்கிறார்கள்.

அதனால்தான் ஸ்டாலின்கிராட் சண்டை எண்ணெய்க்காகப் புரியப்படும் சண்டையென்று சொல்லப்படுகிறது. அப்பட்டணத்தில் வால்கா நதிக்கரையில் ஜெர்மானியர் நிலைத்துவிட்டால் பாகு தளத்திலிருந்து மத்திய ருஷ்யாவிற்குச் செல்லும் எண்ணெயைத் தடுத்துவிடலாம். ஆனால் இந்த மாரிகாலத்திய ஸப்ளைகளை அவர்களால் தடுக்கமுடியாது. ஏனென்றால் மாரிகாலத்திற்கு வேண்டிய எண்ணெய் முன்பே ஸ்டோர் செய்யப்பட்டுவிட்டது. அதோடு வால்காவில் கப்பல் போக்குவரத்துக்கு லாயக்கில்லாமல் பனி உறைந்துவிடும். அடுத்துவரும் கோடைகாலத்தில் ஸ்டாலின்கிராடை ஜெர்மானியர் வியாபித்துக்கொண்டால்தான் ருஷ்யத் தொழிற்சாலைகள் அதிகமாகப் பாதிக்கப்படும். அதனால்தான் அந்நகரில் கடும்போர் நடைபெறுகிறது. ருஷ்யர்களும் கடுமையாயும், தைரியமாயும் சண்டை செய்துவருகிறார்கள்.

காகஸஸை ஜெர்மானியர் ஜயிக்க முடியுமா, முடியாதாவென்று சொல்ல முடியாது. ஜயிப்பதாக வைத்துக்கொண்டாலும் உடனேயே ஏராளமான எண்ணெயை அடைய முடியாது. தற்போது ஜெர்மனிக்கோ எண்ணெய்த்தட்டு அதிகம் ஏற்பட்டிருக்கிறது. இன்னும் சில மாதங்களில் எண்ணெய்த் தட்டினால் மிகவும் சிரமப்படவேண்டிவரும். அதிலிருந்து ஜெர்மனியின் தோல்வி ஆரம்பமாகும்.

---

## வார யுத்தச் செய்திகள்.

### 5—12—42-லிருந்து 11—12—42-வரை.

**ருஷ்யா.**—சென்ற மாரிகாலத்தில் ருஷ்யக் குறுக்கு எதிர்ப்புகள் இங்குமங்குமாக நடந்தன. தற்போது கடந்த வருஷத்தைக்காட்டிலும் சற்று முன்பே ஆரம்பிக்கப்பட்டு, ஸ்டாலின்கிராட்டிலும் மாஸ்கோவிலும் ருஷ்யத் தாக்குதல்கள் சற்றும் வேகம் தணியாமல் நீடித்து நடந்துவருகின்றன. வால்கா நதியில் பனிக்கட்டிகள் போக்குவரத்தைத் தடுத்தாலும் அந்நதி பூராவும் பனியால் உரைந்துவிடவில்லை. மத்திய முனையில் பனியும், பனிப்புயலும் சண்டையைத் தடுத்துவருகின்றன. பனிக்கட்டிகளுக்குமேல் நடப்பதற்கான சாதனங்களுடன் ருஷ்யத் துருப்புகள் காணப்படுகின்றன.

டானுக்கும் வால்காவிற்கும் இடையில் அடைபட்டுள்ள ஜெர்மன் துருப்புகள் விமான மூலம் வரும் ஸப்ளைகளையே ஆதாரமாகக்கொண்டு தற்காப்புச் செய்து

கொண்டிருக்கின்றன. சென்ற வருஷம் ஸ்டாரா ரூஸாவில் ஜெர்மானியருக்கு ஏற்பட்ட கஷ்டம்போல் தற்சமயமும் அவர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. ஸ்டாலின் கிராட்டில் தொழிற்சாலைப் பிரதேசத்தில் பிடித்த இடங்களை ருஷ்யர்கள் பலப் படுத்தி வருகின்றனர். டான் நதியின் இடதுபக்கத்தில் பலமான ருஷ்யத் துருப்புகள் ஜெர்மானியரின் இரண்டாவது பாதுகாப்பு அணியைத் தாக்கிவருகின்றன. ஸ்டாலின்கிராட்டுக்குத் தெற்கிலுள்ள ருஷ்யப்படை தனது நிலயங்களில் ஸ்வாதீனப்படுத்தி வருகிறது. நால்சிக்கிற்கு சுற்றுப்புறத்தில் ருஷ்யர்கள்தான் முன்னேற்றப்போரை நடத்திவருகின்றனர். ஸ்டாலின்கிராட்டை விட்டுவிட ஹிட்லர் விரும்பாததால் சண்டை கடுமையாகவே நடைபெறுகிறது. இஸ்வெஸ்டியா பத்திரிகை கூறும்விதமாக 'எதிரியின் பலம் குறைந்ததாகச் சொல்லுவது சரியல்ல. கொல்லப்படாமல் காயமடைந்து இருக்கும் துஷ்டப் பிராணியைப் போல் எதிரி பயங்கரமாக இருக்கிறான்.'

மத்தியப் போர்முனையில் (மாஸ்கோ) ருஷ்யப் படைகள் ரிஷெவ்-வியாஸ்மா வெலிகியிலூகி பிரதேசத்திலுள்ள எதிரிப் பாதுகாப்பு வரிசைகளுக்குள் புகுந்து பயங்கரமாகச் சண்டை செய்கின்றன. ஜெர்மன் படைகளுக்கு ஸப்ளை வரக்கூடிய தளமான ஸ்மொலென்ஸ்கின் பாதுகாப்பிற்கு ரிஷெவ் மிகவும் முக்கியம். அதை ஜெனரல் ஜுகல் சூழ்ந்துகொண்டு, ஸ்டாலின்கிராட்டில் செய்த தந்திரங்களைக் கையாளுகிறான். 150 மைல்தூரம் தாக்கிச்சென்று 4 இடங்களில் எதிரிப் பாதுகாப்புகளையும் பிளந்துவிட்டான். ஸ்டாலின்கிராட்டிற்கு வடமேற்கில் 75 மைல் தூரத்தில் உள்ள பியிலி (Bielyi) என்ற இடத்தையும் தாக்குகிறான். ரிஷெவ்-லெனின்கிராட், ரிஷெவ்-வியாஸ்மா இருப்புப் பாதையையும் துண்டித்து விட்டான். இதனால் ஸ்மொலென்ஸ்க்கிற்கு அப்பாலும் லாட்வியா எல்லையை நோக்கியும் இருக்கும் ஜெர்மன் போக்குவரத்திற்கு ஆபத்து நேரிட்டிருக்கிறது.

வடக்கே இல்மன் ஏரிக்கு அருகில் ருஷ்யப் படைகள் லெனின்கிராட்டை பிணைக்கும் ஜெர்மன் அணிகளைத் தாக்கிவருகின்றன.

காகஸஸில் ஆர்ட் ஜோனிகிட்ஜி—மாஸ்டக், டுவாப்ஸி பிரதேசங்களில் ருஷ்ய முன்னேற்றம் கடுமையாகிவருகிறது. டுவாப்ஸிக்கு அருகில் சிறுபடைகள்தான் ஒன்றோடொன்று சண்டையிட்டுவருகின்றன.

வாரனேஷ் முனையிலும் ருஷ்யரின் முன்னேற்றம் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகத் தகவல் கிடைத்திருக்கிறது.

**டுனிஸியா.**—தங்களால் முடிந்தவரை துருப்புகள், சாமான்கள், விமானங்கள் முதலியவைகளை ஜெர்மானியர் டுனிஸியாவினுள் புகுத்துகின்றனர். பிரிடிஷ் விமானப்படை, கப்பற்படை முதலியவைகளின் தாக்குதலால் சேதமானது போக மீதமுள்ளவைகளே வந்து சேருகின்றன. ஸிஸிலி வெகு அருகில் இருப்பது எதிரிக்கு ஒரு சாதகம். இவ்வாரத்தின் ஆரம்பத்தில் பிரிடிஷ் படைகள் பைஸர்ட்டாவுக்குத் தெற்கேயுள்ள மடீர், பைஸர்ட்டாவிற்கும் டுனிஸிற்கும் இடையேயுள்ள ஜெடீடா (Djgedeida) முதலியவைகளைப் பிடித்தன. ஜெடிடாவைப் பிடித்ததால் பைஸர்ட்டாவிற்கும் டுனிஸுக்கும் இடையிலுள்ள எதிரிப் போக்குவரத்து துண்டிக்கப்பட்டுவிட்டது. ஆனால், பிற்பட்டு எதிரி ஜெடிடாவைப் பிடித்து பிரிடிஷ் படைகளை டெபர்பாவிற்குப் பின் போகும்படிச் செய்தான்.

ஸஹாரா முனையில் பிரிடிஷ் ஒட்டகப்படை அல்ஜீரிய—ட்ரிபோலி போக்குவரத்து ரஸ்தாவைக் கைப்பற்றியது. லாகௌலடியை நேசதேச விமானங்கள் தாக்கியதால், துறைமுகம், ரயில் வண்டிகள் முதலியவைகளுக்குச் சேதமுண்டாயிற்று. டிஸம்பர் 1—12 தேதியில் பிரிடிஷ் சிறிய கப்பற்படை டுனிஸியாவிற்கு வந்த எதிரி கப்பல் கூட்டத்தைத் தாக்கி 4-கப்பல்களையும் துணைக்குவந்த 3 நாசகாரிகளையும் மூழ்கடித்தன. டிஸம்பர் 4உ அமெரிக்க விமானங்கள் நேபிள்ஸில் ஒரு இதாலியச் சண்டை கப்பலையும், 2 க்ரூயிஸர்களையும் தாக்கின. டூரின் பேரில் மறுபடியும் குண்டு வீசப்பட்டது.



**எல் அகீலா.**—லிபியா பக்கத்தில் ஜெனரல் மான்ட்காமரி எதிரியின் பாதுகாப்புகளைக் கவனித்து வருகிறான். அங்கே எதிரிக்கு 50,000 பேர்களைக் கொண்டு அகீலாவிற்கு 25 மைல் முன்னால் கடற்கரை ஓரமாக மெர்ஸாமெர்காவைச் சுற்றி பலம் செய்து வருவதாகத் தெரிகிறது. பிரிடிஷ் 8-ம் படை பீரங்கிச் சண்டைகளிலும் பாரா வேலையிலும் ஈடுபட்டிருக்கிறது.

**ஸாலமன்ஸ்.**—கூடல்கனலில் இருக்கும் ஜப்பானியப் படைகளுக்கு அனுப்பும் உதவி மீண்டும் தடுக்கப்பட்டது. நவம்பர் 30—டிஸம்பர் 1உ கூடல்கனலுக்கு வடக்கில் சென்ற ஜப்பானியத் துருப்புக் கப்பல்களும், துணைக்கப்பல்களும் தடுக்கப்பட்டன. எதிரிக்கு 2 க்ரூயிஸர்களும், 4 நாசகாரிகளும் 2 துருப்புக் கப்பல்களும், ஒரு சாமான் கப்பல்களும் நஷ்டம். டிஸம்பர் 3உ அமெரிக்க விமானங்கள் நியூ ஜார்ஜியாத் தீவுக்கு அப்பால் ஜப்பானியத் துணைக்கப்பல்கள் தாக்கப்பட்டன.

**நியூ கினி.**—பாபுவா-கோனா, ஸனந்தர முனை, பூனா விமான தளம் இந்த இடத்தில்தான் ஜப்பானியத் தாக்குதல் வலுப்பெற்றிருக்கிறது. குடை விமானப்படையின் மூலம் ஸப்ளைகள் வந்து சேருகின்றன. ஐந்தாம் தடவையாக உதவி கொண்டுவர ஜப்பானியர் முயன்றதும் பலிக்கவில்லை.

**சைனா.**—நவம்பர் 27உ கின்வாவிற்கு தென் மேற்கில் உள்ள ஜப்பானிய நிலைகளை சீனர்கள் தாக்கினர். லோடங்கிலுள்ள சீனர்களை ஜப்பானியர் தாக்கினர். வட அன்வேய் மாகாணத்தில் ஜப்பானியத் துருப்புக் கப்பல் மூழ்கடிக்கப்பட்டது.

**பர்மா.**—டிஸம்பர் 3உ பிரிடிஷ் விமானப்படை தெற்கு பர்மாவில் குண்டு வீசி கலடன் நதியில் இருந்த ஜப்பானிய ஸ்டீமர் ஒன்றை மூழ்கடித்தது. டிஸம்பர் அமெரிக்கப்படை பிலாப்வியைத் தாக்கியது. இது மாண்டலேக்கு 75 மைல் தூரத்தில் இருக்கிறது. டிஸம்பர் 5உ பிரிடிஷ் விமானப்படை மத்திய பர்மாவில் கதா என்ற இடத்திலுள்ள ரயில்வே ஸ்டேஷனைத் தாக்கி நடயிகனில் (Natayigon) இருந்த ஜப்பானியச் சைனிய நிலயங்களையும் தாக்கியது.

**இந்தியா.**—டிஸம்பர் 5உ சிட்டகாங்கில் எதிரித் தாக்குதல் நடந்தது. ஒரு எதிரி விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டது. சேதம் மிகக் குறைவு.

**பலவகைப்பட்டவை.**—1. மார்ஷெல் பிடேனின் அதிகாரம் குறைந்து, லவால் ஆட்சி ஆரம்பமாகிறது. முன்பு பிரெஞ்சு மந்திரியாக இருந்த எட்வார்டு ஹீராட் கைது செய்யப்பட்டான்.

2. ருமேனிய சர்வாதிகாரியான அன்டோனிஸ்கோவைக் கொல்ல ஏற்பாடு செய்ததாகத் தெரிய வருகிறது. சென்ற மாதம் புகாரஸ்டில் ராணுவ ஊர்கோலத்தின் போது இவன் பேரில் ஒரு தடவை சுடப்பட்டது. ஆனால் குண்டு அவன்மேல் விழாமல் பக்கத்தில் இருந்தவர் பேரில் விழுந்து அவர் இறந்தார்.

3. இராக்-இரான் இரண்டிற்கும் ஒரு இருப்புப்பாதை டிஸம்பர் 5உ திறக்கப்பட்டது. இதன் மூலம் சுலபமாக ருஷ்யாவிற்குச் ஸப்ளை அனுப்ப முடியும். இந்திய ஸாப்பர்ஸ், மைனர்கள், ரயில்வே ஆட்கள் முதலியோரை கொண்டேதான் இது போடப்பட்டது.

4. பிரிடிஷ், அமெரிக்கத் துருப்புகள் பிரெஞ்சு ஐவரி கடற்கரையைக் கடந்தன. அமெரிக்கர்கள் லிபரியாவிலிருந்து வந்தனர். பிரிடிஷார் கோல்டு கோஸ்டிலிருந்து வந்தனர்.

5. அமெரிக்கக் கப்பற்படை மந்திரியான கர்னல் நாக்ஸ், டூலானில் இருந்த பிரெஞ்சுக் கப்பற்படையில் 15 சண்டைக் கப்பல்களும் 5 எண்ணெய்க் கப்பல்களும் எதிரி கையில் விழுந்தன. 50 சண்டைக் கப்பல்களும் ஒரு சாமான் படகும் மூழ்கின. இதில் மூன்று சண்டைக் கப்பல்கள் பழுது பார்க்க முடியாதபடி பழுதுபட்டன. 4 நீர் மூழ்கிகள்தான் தப்பி ஓடின.

## சத்துருவினுடையவும், சத்துருவினுல் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில், பிரிட்டிஷ், நேசநேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

**30—11—42.** (திங்கட்கிழமை).

ஐரோப்பா (Europe)—(4 நேசதேச விமானங்கள் நஷ்டம்).

பகலில்.—இருப்புப் பாதைகள், இன்னும் மற்ற லக்ஷியங்கள்—வட பிரான்ஸ் (France), ஹாலந்து (Holland).

வட ஆபிரிக்கா (North Africa).

விமான தளங்கள்.—பைஸர்ட்டா (Bizerta), டுனிஸ் (Tunis).

விரோதி துருப்புகள்.—எல் அகிலா (El-Agheila).

விமானக்கூடம்.— ஸிஸிலியிலுள்ள ட்ராபானி (Trapani).

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகள், விமானக்கூடங்களிலுள்ள விமானங்கள்.—ருஷ்யப் போர்முனை எங்கும்.

ஸாலமன் (Solomons) தீவுகள்.

ஜப்பானியத் துருப்புகள்.—கூடால்கனர் (Gudalcanar), நியூ கினியிலுள்ள பூனு (Buna)வில் சுற்றிவளைக்கப்பட்ட ஜப்பானியத் துருப்புகள்.

கப்பல் துறைகள்.—ரெங்கூன் (Rangoon) அந்தமானிலுள் பிளேர் துறைமுகம் (Port Blair).

**1—12—42.** (செவ்வாய்க்கிழமை).

ஐரோப்பா (Europe).

இரவில்.—சுரங்க வெடிகள் போடுவது—விரோதிக்குச் சொந்தமான சமுத்திரக் கரையோரங்களில்.

வட ஆபிரிக்கா (North Africa).

தேற்கு நோக்கிச் செல்லும் அச்சுநாட்டுக் கப்பல்.—டுனிஸியா (Tunisia)வுக்கருகாமையில்.

கப்பல் துறைகள், விமானக்கூடங்கள்.—பைஸர்ட்டா (Bizerta).

விமானக்கூடம்.—டுனிஸ் (Tunis).

கப்பல்கள் துறைமுகத்திலுள்ள கட்டடங்கள்.—ட்ரிபோலி (Tripoli).

ஒரு ரயில்வண்டி.—கேப்ஸ் (Gabes).

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகள், தரையிலுள்ள விமானங்கள்.—கிழக்குப் போர்முனை முழுவதிலும்.

தூரக்கிழக்கு (Far East).

ஜப்பானியத் துருப்புகள்.—பூனு—கோனு (Buna—Gona) பிரதேசம்.

**2—12—42.** (புதன்கிழமை).

ஐரோப்பா (Europe)—(ஒரு நேசதேச விமானம் திரும்பிவரவில்லை).

பகலில்.—ரயில்வே கட்டடங்கள், எதிரித் துருப்புகள், பீரங்கி ஸ்தானங்கள்.—வட பிரான்ஸ் (France), ஹாலந்து (Holland).

வேவு பார்த்தல்.—பிஸ்கே விரிகுடா (Bay of Biscay)—(3 நேசதேச விமானங்கள்).

வட ஆபிரிக்கா (North Africa).

விரோதியின் கப்பல்கள்.—டுனிஸியா (Tunisia)விற்கருகாமையில்.

விமானக்கூடங்கள்.— பைஸர்ட்டா (Bizerta), டுனிஸ் (Tunis), எல் அகிலா (El Agheila), ட்ரிபோலி (Tripoli).

வட ஆபிரிக்கா (North Africa).

விமானச் சண்டைகள், தரையிலுள்ள விமானங்கள்.—ருஷ்யப் போர்முனை முழுவதிலும்.

தூரக்கிழக்கு (Far East).

விரோதி ஸ்தானங்கள்.—ஸனந்தா (Sananda), நியூ கினியிலுள்ள பூனு—கோனு (Buna—Gona) பிரதேசம்.

விமானக்கூடம்.—நியூ கினியிலுள்ள லே (Lae).

விமானக்கூடம்.—பர்மாவிலுள்ள மாக்வி (Magwe).

ரயில்வே ஸ்டேஷன்கள்.—பர்மாவிலுள்ள கேடு (Gadu), ஹாங்டன் (Hangton),

**3—12—42.** (வியாழக்கிழமை).

ஐரோப்பா (Europe).

பகலில்.—தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை.

இரவில்.—சுரங்க வெடிகள் போடுவது—விரோதிக்குச் சொந்தமான சமுத்திரக் கரையோரங்களில்.

வட ஆபிரிக்கா (North Africa).

பைஸர்ட்டா (Bizerta), டுனிஸ் (Tunis), கேப்ஸ் (Gabes).

ட்ரிபோலிக்குச் செல்லும் துணை காவல் கப்பல்கள்.

ஜெர்மன் ஸ்தானங்கள்.—எல் அகிலா (El-Agheila).

விமானக்கூடம்.—மார்பிள் ஆர்ச் (Marble-Arch).

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகள், தரையிலுள்ள விமானங்கள்.—ருஷ்யப் போர்முனை முழுவதிலும்.



தூரக்கிழக்கு (Far East).

ஜப்பானிய ஸ்தானம்.—நியூ கினியிலுள்ள பூனு—கோனு (Buna—Gona) பிரதேசம்.

ஸாலமன் தீவுகளிலுள்ள பூயின் (Buin).

விமானக்கூடம்.—ஆக்கியாப் (Akyab).

**—12—42.** (வெள்ளிக்கிழமை).

ஐரோப்பா (Europe).

பகலில்.—விமான எதிர்ப்புகள்— வட பிரான்ஸ் (France), பெல்ஜியம் (Belgium), ஹாலந்து (Holland).

கப்பல்கள், கப்பற்படை பகுதிகள், துறைமுகம்.— நேபிள்ஸ் (Naples).

வட ஆபிரிக்கா (North Africa).

கப்பல் துறைகள், விமானக்கூடம்.—பைஸர்ட்டா (Bizerta).

விமானக்கூடம்.—டுனிஸ் (Tunis).

விரோதி ஸ்தானங்கள்.—எல் அகிலா (El-Agheila), ட்ரிபோலி (Tripoli).

தூரக்கிழக்கு (Far East).

ஜப்பானிய ஸ்தானங்கள்.—பூனு—கோனு (Buna—Gona) பிரதேசம்.

விமானக்கூடம்.—வட அயர்லாந்திலுள்ள கேவியங் (Kavieng).

விமானக் கூடங்கள்.—லே (Lae), ஸாலமுவா (Salamaua).

**—12—42.** (சனிக்கிழமை).

ஐரோப்பா (Europe).—(ஒரு விமானம் திரும்பிவரவில்லை).

பகலில்.—ரயில்வே கட்டடங்கள், மற்ற லக்ஷியங்கள்.—வட பிரான்ஸ் (Northern France).

வட ஆபிரிக்கா (North Africa).

கப்பல் துறைகள்.—பைஸர்ட்டா (Bizerta).

விமானக்கூடம்.—டுனிஸ் (Tunis).

இருப்புப் பாதைகள்.—டுனிஸ் (Tunis).

துறைமுகம்.—ட்ரிபோலி (Tripoli), எல் அகிலா (El Agheila).

ருஷ்யா (Russia).—(28—11—42உ முதல் 5—12—42உ வரையுள்ள வாரத்தில் ருஷ்யர்களுக்கு 102 விமானங்களும், அச்சு நாடுகளுக்கு 192 விமானங்களும் நஷ்டம்).

விமானச் சண்டைகள், தரையிலுள்ள விமானங்கள்.—ருஷ்யப் போர்முனை முழுவதிலும்.

ஜெர்மன் துருப்புகள்.—ஸ்டாலின்கிராட் (Stalingrad), ரெஷவ் (Rezev) பிரதேசங்களில் சுற்றி வளைக்கப்பட்டனர்.

தூரக்கிழக்கு (Far East).

விரோதியின் பாதுகாப்பு ஸ்தலங்கள்.—பூனு—கோனு (Bona-Gona) பிரதேசம்.

விமானக்கூடம்.—கேவியங் (Kavieng).

விரோதியின் ஸப்ளைக் கப்பல்கள்.—டிமோரு (Timor)க்கருகாமையில்.

ஒரு ரயில்வே ஸ்டேஷன்.—பர்மாவிலுள்ள காதா (Katha).

ஜப்பானியச் சைனியம் வசிக்கும் குடிசைகள்.—பர்மாவிலுள்ள நடாயிகான் (Natayigon).

**6—12—42.** (ஞாயிற்றுக்கிழமை).

ஐரோப்பா (Europe)—(7 நேசதேச விமானங்கள் திரும்பிவரவில்லை).

பகலில்.—ரேடியோக் கருவிகள் தயாரிக்கும் இடங்கள்—ஹாலந்திலுள்ள இன்ட்ஹோவன் (Eindhoven).

ரயில்வே லக்ஷியங்கள், எதிரிகளின் படகுகள்.—ஹாலந்து (Holland).

மின்சாரம் தயாரிக்கும் சாலை, ரயில்வே லக்ஷியங்கள்.—பிரிட்டனி (Brittany).

அங்குமிங்கும் பைடர் விமான எதிர்ப்புகள்.—வட பிரான்ஸ் (N. France), ஹாலந்து (Holland).

ரயில் வண்டிகள் தயாரிக்கும் தொழிற்சாலை.—லில் (Lille).

விரோதி விமான தளம்.—அபிவில்லி (Abbi-ville).

இரவில்.—முக்கியமான ரயில்வே ஜங்ஷனும், தொழிற்சாலைப் பிரதேசமும்.—ஜெர்மனியிலுள்ள கார்ல்ஸ் ரூர் (Karls-Ruhr).

வட ஆபிரிக்கா (North Africa).

ஸ்வாக்ஸ் (Sfax)க்கும், ஸௌஸே (Sousse)யுக்கும் இடையேயுள்ள இருப்புப்பாதை.

விமானக்கூடம்.—ஸ்வாக்ஸ் (Sfax).

கப்பல் துறைகள்.—பைஸர்ட்டா (Bizerta), டுனிஸ் (Tunis).

பீரங்கி ஸ்தானங்கள்.— மெர்ஸாப்ரகா (Mersa Brega)வுக்கும், டாமெட்டு (Tamet)க்கும் இடையே.

ஸிஸிலி (Sicily) விமானக்கூடம்.—கேலா (Gela).

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகள், விமானக்கூடங்களிலுள்ள விமானங்கள்.—கிழக்குப் போர்முனை முழுவதிலும்.

தூரக்கிழக்கு (Far East).

ஜப்பானிய ஸ்தானம்.—பூனு—கோனு (Buna-Gona) பிரதேசம்.

விமானக் கூடம்.—ரபால் (Rabaul), ஸாலமன்ஸ் தீவுகளிலுள்ள பூயின் (Buin).

## விரோதிகளின் விமானப்படையெடுப்புகளின் விவரங்கள்.

**1—12—42.** (செவ்வாய்க்கிழமை).

பிரிடன் (Britain).

விரோதி விமான நடமாட்டமேயில்லை.

வட ஆபிரிக்கா (North Africa).

முன்னேறிய நேசதேசத் துருப்புகள், டெபர்பா (Teburba) வுக்கருசாமையில்.

தூரக்கிழக்கு (Far East).

விமானக் கூடம்.—கூடால்கனுர் (Gudalcanar).

**2—12—42.** (புதன்கிழமை).

பிரிடன் (Britain).

இரண்டு இடங்கள்.—இங்கிலாந்தின் தென் கிழக்குக் கடற்கரை.

வட ஆபிரிக்கா (North Africa).

டூனிஸியா (Tunisia)வில் விமானச் சண்டைகள் (7 அச்சுநாட்டு விமானங்களும், 4 நேசதேச விமானங்களும் நஷ்டம்.)

தூரக்கிழக்கு (Far East).

தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை.

**3—12—42.** (வியாழக்கிழமை).

பிரிடன் (Britain).

பிரிடனில் விமான நடமாட்டமேயில்லை.

வட ஆபிரிக்கா (North Africa).

ஆல்ஜியர்ஸ் (Algiers).

தூரக்கிழக்கு (Far East).

தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை.

**4—12—42.** (வெள்ளிக்கிழமை).

பிரிடன் (Britain).

ஒரு இடம்.—இங்கிலாந்தின் தென் கிழக்கே.

வட ஆபிரிக்கா (North Africa).

விமானக்கூடம்.-அல்ஜீரியாவிலுள்ள பான் (Bone).

தூரக்கிழக்கு (Far East).

விமானக் கூடம்.—ஸாலமன்ஸிலுள்ள கூடால்கனுர் (Gudalcanar).

**5—12—42.** (சனிக்கிழமை).

பிரிடன் (Britain).

விமானப்படையெடுப்பேயில்லை.

வட ஆபிரிக்கா (North Africa).

விமானத் தளம்.— ஆல்ஜியர்ஸ் (Algiers).

ருஷ்யா (Russia).

ரிஷேவ் (Rzev) பகுதியில் போர் செய்யும் ருஷ்யத் துருப்புகள்.

தூரக்கிழக்கு (Far East).

விமானக் கூடம்.—இந்தியாவிலுள்ள சிட்டகாங் (Chittagong) பிரதேசம்.

**6—12—42.** (ஞாயிற்றுக்கிழமை).

பிரிடன் (Britain).

இங்கிலாந்தின் தென்கிழக்குக் கடற்கரையிலுள்ள இடங்கள்.

வட ஆபிரிக்கா-(North Africa).

விரோதி ஸ்தானம்.—டூனிஸியா (Tunisia) விலுள்ள முன்னணிப் பிரதேசங்கள்.

தூரக்கிழக்கு (Far East).

அமெரிக்கரின் ஸ்தானங்கள்.-பூனு—கோனு (Buna-Gona) பிரதேசம் (ஒரு அச்சுநாட்டு விமானம் சேதமாயிற்று).

**7—12—42.** (திங்கட்கிழமை).

பிரிடன் (Britain).

பகலில்.—கடற்கரைப் பிரதேசம்—தென் மேற்கு இங்கிலாந்து (England).

இரவில்.-இங்கிலாந்தி (England)ன் தென்கிழக்குக் கடற்கரை.

வட ஆபிரிக்கா—(North Africa).

விமானக் கூடம்—பான் (Bone).

---

## யுத்தக் குறிப்புகள்.

---

**ஒரு முக்கிய மாதம்.** 'கடந்த நவம்பர் மாதம் ஒரு பெரிய மாதமாக இருந்ததாக, டிஸம்பர் 5௨ சர்ச்சில் பிராட்போர்டில் சொன்னார். ஆபிரிக்காவிலிருந்து ஸாலமன்ஸ் வரைக்கும், ஸ்டாலின்கிராட்டிலிருந்து நியூ கினி வரைக்கும் வெற்றி கிடைத்திருப்பது ஒரு முக்கிய விஷயம். இவ்வெற்றிகள் மூன்று வருஷங்களுக்குப் பிற்பட்டு கிடைத்திருக்கின்றன. எதிரிகள் ருஷ்யாவை அழித்து, பிரிடனைத் தாக்கி, அமெரிக்கக் கப்பற்படையை ஒழித்துவிடுவதாகச் சொன்னபோது யாவருக்கும் வியப்பை உண்டாக்கியது. ஆனால் உண்மை சம்பவங்களோ இட்டப்படி எதிரிகள் பின் வாங்குவதும், இட்டப்படி சண்டை செய்வதுமாக இருக்கிறார்கள். நேசநாட்டுக் கப்பல் நஷ்டத்தைப்பற்றி பிரமாதமான பொய் சொல்லுகின்றனர். நவம்பர்



மாதத்தில் இம்மாரி திடீர் சம்பவங்கள் நேருமென்று எதிரி எதிர்பார்க்கவில்லை. மாண்ட காமரியின் வீர தைரிய முன்னேற்றமும், நேசதேசப் படைகள் ஆபிரிக்காவில் இறங்கியதும், ரிஷேவ், ஸ்டாலின்கிராட் போன்ற இடங்களில் ருஷ்யர்கள் ஜெர்மானியரை எதிர்த்தடிப்பதும் ஸாலமன்ஸ் வெற்றிகளும் எதிரியை பிரமிக்க வைத்தன. ஆத்மீக பலம், பொருளாதார பலம், முதலியவை 1940-ல் பிரிடனை கைதூக்கிய மாதிரி இச்சமயத்தில் எதிரிகளுக்கு இவை குறைந்துவிட்டன. எதிரிப் பிரசாரம் வாயில் வந்தபடியெல்லாம் நடை பெறுகிறது. எதிரிநாட்டில் சாமான்களின் உற்பத்தி குறைந்துவிட்டது. ஐரோப்பா பூரா பசிப்பனி வாட்டுகிறது. இந்த சந்தர்ப்பத்தில் கீழே டைம்ஸ் ஆப் இந்தியா பத்திரிகையிலிருந்து எடுக்கப்பட்ட ஒரு விஷயம் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதை கவனிப்பது நலம்.

**எலி மாமிசத்தைச் சேர்த்துக் கொள்ளவேண்டும்.** அதிகமாக எலி மாமிசத்தை உபயோகிக்க வேண்டுமென்று ஐரோப்பாவில் வற்புறுத்தப்பட்டிருக்கிறது. உணவு திட்டத்தில் இம்மாதிரி முறையை நாஸி ஜெர்மனி சிறிதுகாலமாக ரகசியமாகக் கையாண்டு வருகிறது என்ற செய்தி நமக்குக் கிடைத்திருக்கிறது.

இம்மாதிரி எலி மாமிசத்தை உணவுப் பொருள்களில் ஒன்றாகச் சேர்த்துக் கொள்வதில் என்ன நன்மைகள் ஏற்படுமென்பதைப்பற்றி ஜெர்மனியில் பலர் சாஸ்திர ஆராய்ச்சி செய்துகொண்டிருக்கின்றனர். ஜெர்மனியில் இதைப் பற்றி ஆராய்ச்சி செய்ததாயும், அவ்வுணவினால் பல நன்மைகள் ஏற்படுகின்றன என்று திருப்திகரமாகக் கண்டுபிடித்திருப்பதாகவும், அதனால் மரக்கறியை உபயோகித்து வந்த பல ஜெர்மானியர், எலி மாமிசத்தைப் புசிக்க அவாக்கொண்டிருக்கிறார்கள் என்றும் ஜெர்மனியில் சொல்லப்பட்டு வருகிறது. அங்கு இவ்வித ஆராய்ச்சியே நடந்திருக்காது என்றே சொல்லலாம். பாரிஸில் வைத்திய சாஸ்திர கல்லூரியில் ஒரு மெம்பர் "பன்றி மாமிசம், முயல் மாமிசம் இவைகளைக் காட்டிலும் புசிப்பதற்கு எலி மாமிசம், அதிக ருசியாக இருக்கிறதென்று" உறுதி கூறியிருக்கிறார். எப்படியிருந்தாலும் கூடிய சீக்கிரத்தில் ஜெர்மனியின் "புது திட்டத்தில்" உணவு திட்டம் மாறுதலடையுமென்று தோன்றுகிறது.

சில துணிவுள்ள ஜெர்மன் பிரசாரகர்கள் இவ்வியக்கம் ஏற்கனவேயுள்ள உணவுப் பொருள்களோடு, புது மாதிரியான மாமிச உணவைச் சேர்த்திருப்பதோடு, பல எலிகளால் உண்டாகும் நோய்களை அழிப்பதற்கும் உதவியாக இருக்குமென்று ஜனங்களை இவ்வியக்கத்திற்கு ஆதரவு அளிக்குமாறு வேண்டிக்கொண்டிருக்கிறார்கள். இவர்களின் புத்தி கூர்மைக்காக அதிக யூகமுள்ள டாக்டர் கோயபெல்ஸ் இவர்களை மிகவும் பாராட்டியதாகத் தெரிகிறது.

வீ வீ வீ வீ வீ வீ வீ

**டூனிஸியா.** பைஸர்ட்டா—டூனிஸ் பிரதேசத்தில் ஜெர்மானியர் 30 மைல் நீளமுள்ள பாதுகாப்பு அரண் ஒன்று கட்டியிருக்கின்றனர். அது இவ்விரண்டு துறைமுகங்களுக்கும் இடையே தெற்கிலிருந்து மேற்கே வளைவாகக் கட்டப்பட்டிருக்கிறது. அது மிகவும் பலமாகக் கட்டப்பட்டிருக்கிறது. பிரதேசம் சிறியதாய் இருந்தாலும், ஒரு பெரிய சைனியம் வைக்கப்பட்டிருக்கிறது. அதற்கு உதவியாக லுப்ட்வாபி விமானப்படையும் இருக்கிறது. இவ்விரண்டு படைகளும் சேர்ந்து நேசதேசப் படைகள் அதிக தூரதமாக முன்னேறவிடாமல் தடுத்துவருகின்றன. அங்கு விமானப்போர் மிகவும் கடுமையாக நடைபெறுகிறது. பிரிடன் பேரில் நடந்த படையெடுப்புக்குப் பிறகு இம்மாதிரி விமானப்போர் நேர்ந்ததேயில்லை. இதிலிருந்து ஜெர்மானியர் டூனிஸியா போரில் அதிக கவனம் செலுத்திவருகிறார்கள் என்று தெரிகிறது. மேலும் ருஷ்யப் போர்முனையில் ஈடுபட்டிருந்த லுப்ட்வாபி விமானப் படையைச் சேர்ந்த சில முக்கியமான பகுதிகள் இங்கு மாற்றப்பட்டிருக்கின்றன. இத்துடன் ஒரு வாரத்திற்குமுன் ஸ்டாலின்கிராட்டில் விமானச் சண்டை நடத்தி வந்த சில ஜெர்மன் விமானிகள் இப்பொழுது டூனிஸியாப் போரில் ஈடுபட்டிருக்கின்றனர் என்று நமக்குக் கிடைத்திருக்கிறது. செய்தியிலிருந்தும் ஜெர்மானியர் டூனிஸியாவில் அதிக அக்கரை கொண்டிருப்பதாகத்

தெரியவரும். உள்நாட்டுப் போக்குவரத்தில் ஜெர்மனிக்குச் சாதகமாக இருப்பதினால் இம்மாதிரி படைப்பகுதிகளை ஒரு முனையிலிருந்து மறு முனைக்குக் கொண்டு செல்ல சாத்தியமாக இருக்கிறது. இவ்வித சாதகம் நேசதேசத்தார்களுக்கு இல்லை. இருந்தாலும் டுனிஸியாவில் விடாமல் போர் செய்கின்றனர். பைஸர்ட்டாவிலுள்ள விமான தளத்தை நேசதேசப்படைகள் வெடிகுண்டுகள் போட்டுத் தகர்த்தன. அதன் பயனாக சில ஜெர்மன் விமானங்கள் ஸிஸிலிக்குப் பின்வாங்கியிருக்கின்றன. தரைச் சண்டையிலும் நேசதேசத்தார் கிழக்குக் கடற்கரையை அடைந்திருக்கின்றனர். அங்கு டுனிஸியாவிற்கு வடக்கிலும் தெற்கிலும் இடையேயுள்ள ரஸ்தாவைத் துண்டித்திருக்கின்றன. அவர்கள் பைஸர்ட்டாவுக்கும், ட்ரிபோலிக்கும் இடையே முன்னேறியிருக்கின்றனர். அவர்களின் முன் வரிசை ட்ரிபோலியிலிருந்து 12 மைல் தூரம் வரை முன்னேறியிருக்கிறது. முன்னேற ஏற சண்டை மிகவும் வலுத்துவருகிறது: எதிரிகளும் அதிக பலமாக முன்னேறுவதைத் தடுத்துவருகின்றனர்.

வி வி வி வி வி வி வி

**வெலிக்கியாலூகியில்** செஞ்சேனை ஜெர்மன் சைனியத்தை முறியடித்த செய்தி அதிக முக்கியமானது. ஏனென்றால் மாஸ்கோவிற்கு வடமேற்கே ருஷ்யர்கள் முன்னேறி வருகின்றனர். வெலிக்கியா ஒரு முக்கிய ரயில்வே ஜங்கிஷன். கிழக்கே மாஸ்கோவையும், மேற்கே ரீகாவையும் அது சேர்க்கிறது. வடக்கே லெனின்கிராட்டுக்குச் செல்லும் இருப்புப் பாதையும், தெற்கே கீவுக்குச்செல்லும் இருப்புப்பாதையும் அங்கு சேருகின்றன. அதன் வழியாக ஜெர்மன் சைனியத்திற்கு உதவிப்படைகளும், ஸப்ளைகளும் கொண்டு செல்வதற்கு ஜெர்மன் இருப்புப்பாதை செல்லுகிறது.

வி வி வி வி வி வி வி

**ஸ்டாலின்கிராட்டுக்கு** ஜார்ஜ் கிராஸ் பதக்கம் கொடுக்க வேண்டுமென்று டைம்ஸ் பத்திரிகை கூறியிருப்பதை யாவரும் அங்கீகரிப்பார்கள். அந்நகரைப் பிடித்துவிடுவதாக ஹிட்லர் கூறியதற்கு இதுவே தகுந்த பதிலாகும். லெனின்கிராட், ஸ்டாலின்கிராட் என்ற நகரங்கள் லெனின், ஸ்டாலின் என்ற தலைவர்களின் பெயரைக் கொண்டிருக்கின்றன, ஸ்டாலின்கிராட்டின் தற்காப்பு முதல்தரமானது. ஸ்டாலின்கிராட்டில் ருஷ்யர்கள் நிலைத்திருக்காவிட்டால் ஆபிரிக்காவில் நேசதேசங்கள் முன்னேற்றப் போரை நடத்தியிருக்க முடியாது. தற்காப்புப் போர் செய்துகொண்டே தான் இருந்திருக்க வேண்டும். இதனால்தான் அதற்கு டைம்ஸ் பத்திரிகை ஜார்ஜ் கிராஸ் பதக்கம் கொடுக்க வேண்டுமென்று சிபார்சு செய்கிறது.

வி வி வி வி வி வி வி

**டார்லான்.** டாகரையும், பிரெஞ்சு ஆபிரிக்க விமானத் தளங்களையும் நேசநாடுகள் உபயோகித்துக் கொள்ள ஒரு ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாக அல்ஜியர்ஸ் ரேடியோ கூறுகிறது. இந்த யுத்தத்தில் பிரெஞ்சு காலனிகளும் சேர்ந்திருப்பதற்கு இது ஒரு அத்தாக்ஷியாகும். அட்மிரல் பாய்ஸன், ஜெனரல் ஜிராட் இவர்களின் கீழ் இருந்த பிரெஞ்சுப் படைகள் ஈடுபடுகின்றன. இருந்தாலும் டார்லான் பேரில் சந்தேகம் நிவர்த்தியானபாடில்லை, தானே பிடேன் ஸ்தானத்தில் சர்வாதிகாரம் ஏற்றுக்கொண்டதாக டார்லான் சில நாட்களுக்கு முன்பு அறிவித்தான். இந்த சந்தர்ப்பத்தில் அமெரிக்க ஜெனரல் ஈஸன்ஹோவர் டார்லானைப் பாராட்டினான். பிரிடிஷ் காமன்ஸ் சபையில் இது சம்பந்தமாக ஒரு பொறுப்பையும் ஏற்க முடியாதென ஈடன் அறிவித்தார். உள்நாட்டுக் கலகம் உண்டாகுமென்று டிகால் எதிர்பார்த்து அதைத் தடுக்க டிகால் பிரெஞ்சுத் துருப்புகள் யாவரும் பிரான்ஸின் விடுதலைக்காகப் போராட வேண்டுமென்று எச்சரிக்கை செய்தார். டார்லானுடன் ஒற்றுமை ஏற்படுத்திக்கொண்டதால் அமெரிக்காவின் ஆத்மீக சக்தி குறைந்தது என்றும், சமாதானத்தை அடைய முடியாதென்றும், வெண்டல் விலகி சொல்லுகிறார். நாஸிகளோடு அவ்வளவு தூரம் ஒத்துழைத்த டார்லானுடன் சகவாசம் செய்வதுகூடாதென ருஷ்யப் பத்திரிகைகளும், லண்டனில் மெய்ஸ்கியும் சொல்லுகின்றனர். பிரிடிஷ் படைகளுக்குப் பின்னால் பிரெஞ்சுச் சைனியம் டார்லானின் கீழிருப்பது பிரிடிஷ் படைக்கு ஆபத்தென்று பட்டவர்த்தனமாகவே காட்ரூ அபிப்பிராயப்படுகிறார்.



**நகுதியில்லாத இடத்தில் கௌரவம்.** வேலூன் கப்பற்படை அழிந்ததற்கு லவால்தான் காரணம் என்று ஜெர்மனிக்கு உட்பட்ட பாரிஸ் ரேடியோ கூறுகிறது. ஆனால் இவ்விதகௌரவம் லவாலுக்குக் கொடுப்பது சரியல்ல. ஒருக்கால் டீட் என்பவனை நாடுவதற்காக லவாலைத் தள்ள ஹிட்லர் நினைக்கிறான் போலும்.

வி வி வி வி வி வி வி

**டிஸம்பர்** 7உ-யோடு பேர்ல் துறைமுகத்தை ஜப்பானியர் தாக்கி ஒரு வருஷம் பூர்த்தியாகிறது. இந்தக் கொடிய சம்பவத்தை நாம் மறக்கமாட்டோம். மறைமுகமாக திடீரென்று தாக்கியதாலேயே அப்போது நஷ்டம் ஏற்பட்டதாக அமெரிக்க அரசாங்க ரிபோர்ட்டு கூறுகிறது. அதோடு சேதமான கப்பல்கள் பழுது பார்க்கப்பட்டு மறுபடி கப்பற்படையில் சேர்ந்து விட்டதாயும் சொல்லப்படுகிறது. 42 சதவிகிதம் அமெரிக்கக் கப்பற்படை அமுக்கப்பட்டதாக ஜப்பானியர் சொன்னாலும் பிற்பட்டு நடந்த பவளக்கடல், மிட்வேதீவு, ஸாலமன்ஸ் முதலிய இடங்களில் நடந்த சண்டைகளில் அதற்குப் பழி வாங்கப்பட்டது. இந்த ஒரு வருஷ காலத்திற்குள்ளேயே அமெரிக்கா சமாளித்ததுதான் விசேஷம். ஜப்பானிய விமானங்களை வீழ்த்துவதோடு கடலிலே சுலபமாக சஞ்சரிக்கவும் முடிகிறது. இவைகளின் வழியாக சாமான்கள், துருப்புகள் முதலியவைகளை எடுத்துச்செல்லவும் முடிகிறது.

ஆனால் அமெரிக்கர்களின் தந்திரம் இன்னும் அதிகமாகவே காணப்படுகிறது. முதலில் ஜப்பானைத் தோற்கடிப்பதைக் காட்டிலும் ஜெர்மானியரைத் தோற்கடிப்பதுதான் முக்கியமென்று எதிர்பார்த்து அமெரிக்கர்கள் அதற்காகப் பிரயத்தனம் எடுத்துக்கொண்டிருக்கின்றனர். ஆசியாவிலோ ஐரோப்பாவிலோ எல்லா எதிரிகளும் முறியும்வரை அமெரிக்கா பின்வாங்காது.

பஸிபிக் சம்பந்தப்பட்ட வரையில் எதிரியின் பலத்தைக் குறைப்பதுதான் முக்கிய நோக்கம். இவ்வருஷத்தில் அமெரிக்கர்களால் ஜப்பானுக்கு 3 சண்டைக் கப்பல்களும், விமான மேற்றும் கப்பல்கள் 6-ம், 28 க்ரூயிஸர்களும், 47 நாசகாரிகளும், 7 நீர்மூழ்கிகளும், 265 இதர கப்பல்களும் இதைத் தவிர ஏராளமான போக்குவரத்துக் கப்பல்களும் நஷ்டம். இதில் பிரிடிஷ், டச்சுப்படைகள் பஸிபிக்கில் விளைவித்த சேதம் சேரவில்லை. கர்னல் நாக்ஸ் சொல்லுவதாவது:— ‘ஜப்பானியக் கப்பல் பலம் மிகவும் குறைந்துவிட்டது. ஸப்ளைகளைத் தொடர்ச்சியாகக் கொண்டிருக்க முடியாது. பஸிபிக்கில் பிடித்துள்ள பல தீவுகளுக்கு, ஆயுதம் முதலியவை அனுப்ப முடியாததால் கஷ்டம் ஏற்படும். ஏனென்றால் அவைகளை அனுப்பப் போதுமான கப்பல் வசதி இல்லை. இவ்விதம் எதிரியின் கப்பல் பலத்தை மெதுவாகக் குறைத்துக்கொண்டே வந்தால் டோகியோவை தாக்குவது சுலபமாகிவிடும்.’

வி வி வி வி வி வி வி

**இதாலியின் நிலைமை ஆட்டம் கொடுத்தது.** இம்மொழிகளால் கர்னல் நாக்ஸ் தற்சமயம் இருக்கும் இதாலியின் நிலைமையை விவரித்தார். முஸோலினியைத் தவிர வேறு ஒருவருக்கும் சண்டை செய்ய மனது கிடையாது. எதற்காக சண்டை செய்கிறோமென்றும் அவர்களுக்குத் தெரியாது. $1\frac{1}{2}$ வருஷ காலமாக மௌனம் சாதித்து விட்டு டிஸம்பர்மீ 2உ பேசினான். ஆங்கிலேய-அமெரிக்க விமானத் தாக்குதலுக்கு லக்ஷியங்களாக இருக்கும் நகரங்களைக் காலிசெய்யும்படி இதாலிய மக்களுக்கு எடுத்துச் சொல்லியிருக்கிறான். தன்னை சர்ச்சில் நாய், நரி என்று சொன்னாரென்று முஸோலினி கோபித்துக்கொள்ளுகிறான். இவனுடைய நடத்தையைப் பார்த்தால் இவனுக்கு அப்பெயர் பொருத்தமானதென்று நமக்குத் தெரியவரும். பிரான்ஸ் விழும் சமயம் பார்த்து இவனும் அதைத் தாக்கினான். பிரான்ஸினால் எதிர்த்தடிக்க முடியாத சமயம் பார்த்து நைஸ், கார்ஸிகா முதலியவைகளைக் கைப்பற்றினான். அபிஸீனியா, லிபியா, கிரீஸ் முதலிய இடங்களில் அவனுடைய அக்கிரமங்களை யார் மறக்க முடியும்.

இவன் கூட்டாளி ஹிட்லர்தான் இவனைக் கவிழ்த்தது. அலெக்ஸாண்டிரியாவில் கிருஸ்துமஸ் விழா கொண்டாடலாமென்று இதாலியர் நினைத்தனர். யாவரும் கைதிகளாகிக் கிடக்கின்றனர். ருஷ்யாவில் சண்டைசெய்யப்போன இதாலியர் பனியில் அவஸ்தைப்படுகின்றனர். இதாலிய நகரங்களை தாக்கப்படுகின்றன. இதாலியின் பாதுகாப்புக்கு ஹிட்லர் விமான எதிர்ப்பு பீரங்கிகளைக் கொடுப்பதாகச் சொல்லியிருப்பதை இதாலிய மக்களுக்கு முஸோலினி சொன்னார். அதிலிருந்து ஜனங்களுக்குத் திருப்தி ஏற்படாது. பலமான நேசதேச விமானத் தாக்குதலை இதாலி பொறுக்க முடியாது. இதாலியில் பொருளாதாரம் குறைந்துவிட்டது. பாதுகாப்புகள் பலஹீனமானவை. ஜனங்களுக்குப் பயம் கண்டிருக்கிறது. யுத்தத்தில் அலுப்பும் ஏற்பட்டிருக்கிறது. எட்டு வருஷ காலமாக இதாலி சண்டையிலீடுபட்டிருக்கிறது. 1935-ல் அபிஸீனிய யுத்தம், பிறகு அல்பேனிய யுத்தம், ஸ்பெயின் சண்டை, கிழக்கு, வட ஆபிரிக்கத் தோல்வி, இப்படியாக நடந்து அதன் சாம்ராஜ்யம் போய்விட்டது. பாஸிஸ்டு ஆட்சி ஜனங்களுக்குப் பிடிக்கவில்லை. இக்கஷ்டங்களுக்கெல்லாம் முஸோலினிதான் காரணம் என்று அவனைக் குறைகூறுகிறார்கள். நேசதேச விமானத் தாக்குதலால் ஏற்படும் பயத்தைக் காட்டிலும் ஜெர்மன் ரகசியப் போலீஸ் பயமே அதிகமாயிருக்கிறது. உணவுத் தட்டு பலமாகிவிட்டது. கிரீஸ், லிபியா, எரிட்ரியா, அபிஸீனியா, கடல் போர் எங்கும் இதாலிக்குத் தோல்வி என்றால் இதாலியருக்கு மிகவும் அவமானமாக இருக்கிறது. இதாலியத் துருப்புகளுக்கு அவமானம் ஏற்பட்டிருப்பதோடு ஜெர்மானியர் அவர்களைக் கேவலமாகவும் நடத்துகிறார்கள். நேசதேசங்களால் பல இதாலிய ஜெனரல்கள் கைதி செய்யப்பட்டனர். இதாலிய மன்னருக்கும் ஜனங்களுக்கும் தற்போதுள்ள ஆட்சி பிடிக்கவில்லை. குடியானவர்களும் தொழிலாளிகளும் சமாதானத்தை விரும்புகிறார்கள். சர்ச்சில் முன்னாடியே சொன்னபடி இதாலிக்கு அச்சுநாட்டை விட்டுத்தனியே போக காலம் வந்து விட்டது. ஸிரெனைகாவில் பிரிடிஷ் படை முன்னேறுவதும், பிரெஞ்சு வட ஆபிரிக்காவில் அமெரிக்கர்களும் ஆங்கிலேயர்களும் இறங்கியிருப்பதும் இந்த நிலைமையை மீண்டும் தெரிவிக்கின்றன.

வி வி வி வி வி வி வி

**தினம் ஒரு விமானப் படையெடுப்பு.** தூரக்கிழக்கில் நவம்பர் மாதத்தில் பிரிடிஷ் விமானப்படை தினமும் எதிரி நாடுகளைத் தாக்கியது. அக்யாப் முதலிய துறைமுகங்களில் இராக்காலங்களில் குண்டுகள் போடப்பட்டன. எதிரியின் நிலயங்களும், கப்பல்களும் தாக்கப்பட்டதோடு, நேருக்கு நேர் சண்டையும் நிகழ்ந்தது. முக்கியமாகத் தாக்கப்பட்ட லக்ஷியங்கள் மிங்கலாடன், மாக்வி, மெய்க்டிலா, டோங்கூ, மாண்டலே, பாங்காக் முதலியன.

அமெரிக்க 10-வது விமானப்படை, சீதோஷ்ண நிலை பாதகமாக இருந்தாலும் தைரியமாக ஈடுபட்டிருக்கிறது என்று ஜெனரல் பிஸ்ஸெல் சொன்னார். இம்மாதத்தில் 21 தடவை தாக்கின. இந்தியாவிலுள்ள அமெரிக்க விமானப்படை பர்மாவில் 10 தடவை தாக்கி 150 டன் குண்டுகளைப் போட்டது. சைனாவிலுள்ள படை இன்னும் 11 தடவை அதிகமாகவே தாக்கியது. 9 எதிரிக் கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டன. 58 எதிரி விமானங்கள் நாசமாக்கப்பட்டன.

இவைகளுக்குப் பிரதியாக ஒன்றிரண்டு விமானங்களையே எதிரி அனுப்பினான். இந்தியாவில் ஒரு குண்டுகூட விழவில்லை. சைனாவிலுள்ள அமெரிக்க விமானத் தளங்கள் மூன்று தடவை தாக்கப்பட்டன. ஓரிரவில் தாக்க வந்த மூன்று எதிரி விமானங்களும் சுட்டு வீழ்த்தப்பட்டன.

இந்திய எல்லைப்புறத்தில் பிரிடிஷ் விமானப்படைக்கு ஆதிக்கம் இருப்பதாலேயே எதிரி நடமாட்டம் இல்லை. மேலும் அவனுக்கு மற்ற இடங்களில் அதிக நஷ்டமடைந்திருக்கிறான். அதோடு வேறு இடங்களிலும் பாதுகாப்பு செய்ய வேண்டியிருக்கிறது.

வி வி வி வி வி வி வி

**ரகசிய கலகம்.** 'உங்களுக்கு சர்க்கரைத் தட்டு ஏற்பட்டிருப்பதற்குக் காரணம் யார் என்று உங்களுக்குத் தெரிந்திருக்கும். பீஹார் மாகாணத்தில் இருப்புப் பாதைகளுக்கு நேர்ந்த சேதத்



தால் மதராஸ் வரையிலுள்ளோருக்குக் கஷ்டம் ஏற்பட்டிருக்கிறது' என்று இந்திய ஸர்க்காரின் போக்குவரவு இலாகா மந்திரி ஸர் எட்வார்டு பென்தால் டிஸம்பர் 4உ யுத்த காலத்திய போக்குவரவு சம்பந்தமான சில ஒலிபரப்புகளை ஆரம்பிக்கும்போது கூறினார். உற்பத்திக் குறைவால் சாமான்களின் தட்டு ஏற்படவில்லை. ரயில்வே வசதிக் குறைவாலும் அல்ல. வியாபாரிகளாலும் இல்லை. ஆனால் சட்ட மறுப்பு இயக்கத்தில் ஈடுபட்ட ரகசியக் கலகக்காரர்களால்தான் என்றும் அவர் சொன்னார். பொதுவாக ரயில்வேக்கள் தான், உணவுப்பொருள்களை ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு எடுத்துச் செல்லவேண்டியிருப்பதால் அவைகளாலும் வியாபாரிகள் கட்டிப்போட்டு வைத்திருப்பதாலும் சாமான்களின் தட்டு ஏற்பட்டிருப்பதாகச் சொல்லுவது சகஜம். ஆனால் அது அல்ல உண்மை காரணம். இவ்விதம் இருப்புப்பாதைகளைத் துண்டித்தது யார்? அதனால் அவஸ்தைப் படுவதும் யார். ரயில்வேக்களில் மூன்றும் வகுப்புகளில் பிரயாணம் செய்யும் எளியவர்களுக்கும்தான் கஷ்டம். ரயில் வண்டி வசதி இல்லாததால் சர்க்கரை வருவதில்லை. உடனே விலை உயருகிறது. ஏழைகளால் வாங்க முடியவில்லை.

வி வி வி வி வி வி வி

**கொடுங்கோல் ஆட்சி.** வங்காளத்தில் புயலால் அவஸ்தைப்பட்ட இடங்களில் சட்ட மறுப்பு இயக்கம் நடந்து வருகிற தகவல் கிடைத்திருக்கிறது. அங்கிருப்போருக்கு பேருதவி செய்ய வேண்டியிருந்தும் அதை கவனியாது விஷமச் செய்கைகளில் சிலர் ஈடுபட்டிருப்பது வருந்தத்தக்க விஷயமாகும். இதில் திருப்திகரமான விஷயம் என்னவென்றால் ஸர்க்கார் உதவி ஏற்படுவதற்கு முன்னேயே, வெள்ளத்தினால் சேதப்பட்டவர்களுக்கு பிரிடிஷ் துருப்புகள் உணவு, பால் முதலியவைகளைக் கொடுத்து உதவினர். இந்த சமயத்தில் சில கலகக்காரர்கள் அப்பிரதேசத்திற்கு போக்குவரத்து வசதி இல்லாமல் செய்து கொடுங்கோல், கொலை நிர்ப்பந்த வரி வாங்குவது முதலியவைகளில் ஈடுபட்டனர். வெள்ளத்தால் ஏற்பட்ட சேதம் பாதி. இந்தக் கலகக்காரர்கள் உண்டாக்கிய சேதம் பாதி. போக்குவரத்து மார்க்கங்கள், தந்திக் கம்பிகள் முதலியவைகளை அறுத்து, போலீஸ் ஸ்டேஷன், போஸ்டாபீஸ், படகுகள் முதலியவைகளை அழித்தனர். ஆபீஸ்கள், ஜெயில்கள், இங்கே அவர்களே அமுல் செய்ய ஆரம்பித்தனர். உணவுக் கிட்டங்கிகள் கொள்ளையிடப்பட்டன. ஸர்க்கார் கட்டடங்களைக் காலி செய்யும்படி நிர்ப்பந்த மேற்பட்டது. சவுக்கிதார்களையும், டபேதார்களையும் தாக்கினர். வீடுகள் எரிக்கப்பட்டன. குமாஸ்தாக்களும், போலீஸ்காரர்களும் அடிக்கப்பட்டனர். இவைகளே அங்கு நடந்த கொடிய முறைகளின் சுருக்கமாகும்.

வி வி வி வி வி வி வி

**சைனா-பிரிடன் ஒற்றுமை.** பிரிடிஷ் பார்லிமெண்டு கோஷ்டி சுங்கிங்கிற்கு விஜயம் செய்ததுபற்றி சைனாவில் விசேஷ உத்ஸாகத்தை உண்டாக்கியிருக்கிறது. சுமார் 700 வருஷங்களாக பார்லிமெண்டு அங்கத்தினர்களடங்கிய தூதுகோஷ்டி அயல் நாடுகளுக்குச் சென்றதே இல்லை. இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு சைனா அத்தூதுகோஷ்டியை மனமார வரவேற்றிருக்கிறது. சைனா தனது முன்னேற்றத்திற்காக, பிரிடன் செய்துவரும் உதவியை அங்கீகரித்தும் இருக்கிறது. மேலும் ஆபிரிக்காவில் ஆங்கிலேயர்களும், அமெரிக்கர்களும் செய்துவரும் சண்டையின் பயனாக பர்மா ரஸ்தா திறக்கப்பட்டு தூரக்கிழக்கில் சண்டை ஜயிக்கப்படும் என்றும் சைனா அறிந்துகொண்டிருக்கிறது.

வி வி வி வி வி வி வி

**ரீயூனியன் தீவு.** இது இந்து மாக சமுத்திரத்தில் இருக்கிறது. இதன் விஸ்தீர்ணம் 970 சதுர மையில், 1,97,933 பேர் வசிக்கிறார்கள். இதை நேசநாடுகள் வியாபித்துக் கொண்டதால் கேப்டவுன் முதல் மெல்போர்ன் வரை பத்திரமாக்கப்பட்டது. இனி அச்சுநாட்டு விஷமம் அங்கே பலிக்காது. டிஜிபோடியைத் தவிர மற்ற பிரெஞ்சுக் காலனிகள் பூரா நேசநாடுகளுடன் சேர்ந்துகொண்டு யுத்தத்தில் ஈடுபட்டிருக்கின்றன.

## இந்தியாவிலுள்ள துருப்புகளுக்கு மிஸ்டர் சர்ச்சில் அனுப்பிய செய்தி.

**டிஸம்பர் 8.**

இன்றோடு ஜப்பான் யுத்தத்தில் ஈடுபட்டு ஒரு வருஷம் பூர்த்தியாகிறது. தாத்காலிகமான வெற்றிகளையும் அடைந்திருக்கிறது. பாபச் செய்கையில் ஈடுபட்டிருப்போருக்கு இப்படித்தான் ஆரம்பத்தில் வெற்றி கிடைப்பது போல் காணப்படும். ஆனால் ஜப்பானின் செய்கையின் காரணமாக பிரிடிஷ், அமெரிக்கர், சீனர், ருஷ்யர் போன்ற பெரிய பலம் கொண்ட தேசத்தினர் ஒன்று சேர்ந்திருக்கின்றனர். ஆகவே ஜப்பானை பழி வாங்கும்காலம் வந்துவிட்டதென்றே சொல்லலாம்.

கொடுமை, ஆக்கிரமணம் முதலியவைகளை எதிர்க்க இந்தியர், பிரிடிஷ், அமெரிக்கர், ஸிலோன் தேசத்தினர் யாவரும் இந்தியாவில் ஒன்று சேர்ந்திருக்கின்றனர். உங்களது அலுவல் யாதெனில் சமயம் பக்குவமாகி முன்னேறித் தாக்கும் வரை இந்தியாவையும் லங்கையையும் பாதுகாப்பதுதான். மேற்கே பிரிடன்ன திரிகளைத் தடுத்துவருவது போல கிழக்கே எதிரிகளை இந்தியா தடுக்க வேண்டும். முன்னேறித் தாக்கி, முன்பு அமைதி நிலவியிருந்த நாடுகளிலிருந்து எதிரிகளை விரட்டியடிக்கும் வரை நீங்கள் ஓயாது தயார் செய்து கொண்டிருக்க வேண்டும். உங்கள் வசத்தில்தான் அந்நாடுகளின் பாதுகாப்பு ஒப்படைக்கப் பட்டிருக்கிறது.

மற்ற பிரதேசங்களில் நமது படைகள் வெற்றிகள் அடைந்து வருகின்றனவே, அவைகளில் நாம் கலந்து கொள்ளவேண்டாமா, எவ்வளவு காலம் சண்டை செய்யாமலிருப்பது என்று நீங்கள் நினைக்கலாம். ஆனால் நீங்கள் தரை, கடல், விமானம் முதலியவைகளில் ஈடுபட்டிருப்பது நேசதேசங்களின் பொதுவான முயற்சியின் ஒரு முக்கியமான அம்சம் என்பதை மறந்துவிடக்கூடாது. மற்ற பிரதேசங்களிலுள்ளோர் முதலில் வெற்றிபெறலாம். ஆனால் இந்தியாவில் இருக்கும் பெரும் படைகள்தான், நமது சத்துருக்களின் பூரா நாசத்தையும் உண்டாக்கும் விதமாக ஈடுபடப்போகின்றன.

---

## பழிவாங்கும் காலம் சமீபித்துவிட்டது.

**மிஸ்டர் சர்ச்சில், லண்டன், டிஸம்பர் 7.**

சரியாக ஒரு வருஷத்திற்கு முன்பு, சரித்திரத்திலேயே முதல்தரமான ஆக்கிரமணச் செய்கை என்று சொல்லக்கூடிய அக்கிரமம் நடந்ததை நாம் பார்த்தோம். அதாவது ஜப்பான் தனது ஆசைகளை நிறைவேற்றுவதற்காக, நமக்கு அப்போது இருந்த சிரமங்களைப் பயன்படுத்திக்கொண்டு, துணிகரமாக ஹாங்காங், மலேயா முதலிய நாடுகளைத் தாக்கியது,

அந்த சமயத்தில் நாம் தனியாக ஐரோப்பாவில் இரண்டு பெரும் வல்லரசுகளுடன் போர் புரிந்து கொண்டிருந்தோம். ஆகவே நமது படைகளை, மலேயா, போர்னியோ முதலிய பிரதேசங்களைப் பாதுகாக்க அனுப்பமுடியாது என்று தெரிந்துகொண்டு ஜப்பான், கொடுமை பேராசை, கபடம் முதலிய தன்மைகளுடன் தாக்கியது. மலேயா, போர்னியோ முதலிய நாடுகளைப் பாதுகாக்க நமக்கு பொறுப்பு இருந்தது.

ஜப்பான் அந்த நாடுகளைப் படையெடுத்து, அங்கிருந்த சைனியங்களைக் கொன்று, பொதுமக்களை கைதியும் செய்தது. இந்த ஒரு வருஷகாலமாக அங்கே அவஸ்தைப்பட்டுக் கொண்டிருக்கும், மலேயர், இந்தியர், பர்மியர், சீனர், டச்சு, பிரிடிஷ் முதலியோர்ரைப் பற்றிதான் நாங்கள் கவலைகொண்டிருக்கிறோம். இதில் திருப்திகரமான விஷயம் என்னவென்றால், நேசநாடுகள் தாக்கவிரும்பும் இடங்களிலெல்லாம் சரியான பின்உதவி இருந்துவருகிறது.



அப்போது, மிக சிரமங்களுக்கு இடையில், ஆயுத பலமில்லாமல் நாம் ஈடுபட்டோம். இப்போது எல்லா பலத்துடனும் இருக்கிறோம். ஆகவே ஜெர்மனி, இதாலி இரண்டுக்கும் வந்திருக்கும் ஆபத்தைப்போல் ஜப்பானுக்கும் வரப் போகிறது.

### ஓய்வே கிடைக்காது.

ஜப்பானுக்கு ஓய்வு கிடைக்காது. நேசநாடுகளின் பலம் விருத்தியடைந்து வருவதால் ஜப்பான் பிடித்த நாடுகளை சீக்கிரமே கைப்பற்ற முடியும். ஜப்பானுக்கும் தகுந்த தண்டனையும் விதிக்கப்படும். தண்டனை விதிக்கும் காலம் நெருங்கிவிட்டது,

இந்த செய்தியைத்தான் நீங்களும் எதிர்பார்த்திருக்கிறீர்கள். அதைத்தான் நானும் சொல்லுகிறேன். ஜப்பானியரின் கண்முன்பாக நாம் யாவரும், மலேயர், இந்தியர், பர்மியர், சீனர், டச்சு, பிரிடிஷ், ஒன்று சேர்ந்து நாகரீக உலகை அமைக்க ஒன்று சேர்ந்தோம். அந்த முன்னேற்றத்திற்குத் தாத்காலிகமான தடை ஏற்பட்டிருக்கிறது. அவ்வளவுதான்.

ஜப்பானிய ஆக்கிரமணம் நிச்சயம் முறிந்துவிடும். அப்படி அது முறிந்ததும் மறுபடி நாம் ஒற்றுமையுடன்கூடி யாவருக்கும் சந்தோஷம் ஏற்படக்கூடிய விதமாக ஈடுபடுவோம். நீங்கள் தைரியம் கொள்ளுங்கள். நாங்கள் நிச்சயம் உதவுவோம்.

---

## வெற்றியை நோக்கியே முன்னேறுகிறோம்.

**மிஸ்டர் சர்ச்சில், பிராட்போர்டு, டிஸம்பர் 5.**

கடந்த $1\frac{1}{2}$ வருஷகாலமாக ருஷ்யர்கள் எதிரிகளை எதிர்த்துப் போராடி வந்திருப்பதில், சமீபத்தில் ருஷ்யர்களுக்கு அவ்வித சிரமம் அதிகம் ஏற்படாமல் இருப்பதற்காக பிரிடிஷ்காரர்களும், அமெரிக்கர்களும் சேர்ந்து எதிரியை மற்றோரிடத்தில் ஈடுபடுத்தியிருக்கிறார்கள். இவ்விஷயம் எனக்கு அதிக மகிழ்ச்சியை உண்டுபண்ணுகிறது.

ருஷ்யர்கள் தங்கள் தேசத்தைப் பாதுகாத்துக்கொண்டும், நாம் நம்முடைய நாடுகளைப் பாதுகாத்துக்கொண்டும் வருவதில் நம்மிருவரும் சேர்ந்து, தேசம் என்ற லக்ஷியத்தைக் காட்டிலும் பெரியதானதும், பொதுவானதுமான லக்ஷியத்திற்காகப் போராடுகிறோம்.

அதுதான் ஸ்வதந்திரம். நியாயம் என்று சொல்லப்படுகிறது. இவ்விரண்டையும் அடைவதற்காகவே நாம் போராடுகிறோம். வலியாரையும், கொடிய ஆட்சி புரிவோரையும், மிருகத்தன்மை, கொடுங்கோல்முறை முதலியவைகளைக் கையாளுகிறவர்களையும் எதிர்த்து நியாயம், தயவு, தாக்ஷண்யம் முதலியவைகளை நிலைநாட்டி எளியோரைக் காப்பதே நமது நோக்கம்.

இதற்காகப் போராடும் நாம் நிச்சயம் வெற்றியை நோக்கி முன்னேறுகிறோம்.

அந்த வெற்றி கிட்டியதும், நீங்கள் யாவரும் சந்தோஷ வாழ்க்கையை, ஒழுங்குமுறையுடன் நடத்தமுடியும். ஆனால் எப்படி எதிரிகளை எதிர்த்து, யுத்த சிரமங்களைப் பொறுத்துக்கொள்ளுவதற்கு யாவரும் முற்பட்டு, ஒன்றுபட்டு இருக்கிறீர்களோ அதேவிதமாக அந்த வெற்றியின் பயன்களை அடைவதற்கும் எல்லாக் கட்சியினரும் ஒற்றுமைபட்டு, தங்கள், தங்கள் கடமைகளைச் செய்ய வேண்டும்.

நமது சத்துருக்களும் பலிஷ்டர்கள்தான். அவர்களிடம் லக்ஷக்கணக்கான துருப்புகள் இருக்கின்றன. தங்கள் வசத்தில் இருக்கும் லக்ஷக்கணக்கான கைதிகளை அடிமைத் தொழில் செய்யவும் உபயோகிக்கிறார்கள். ஜயித்த இடங்களில்

செழிப்பான பிரதேசத்தையும் கைவசப்படுத்தி, ஏராளமான ஆட்களையும் உபயோகப்படுத்தியிருக்கிறார்கள்.

அவர்களும் ஏதோ ஒரு திட்டத்தைத்தான் போட்டிருக்கிறார்கள். அதுதான் நாஸிக் கொடுங்கோல் திட்டம். கடவுளுக்குச் சமமென்று கூறி, ஹிட்லரை மேல் ஸ்தானத்தில் வைத்துக்கொண்டு அவனிஷ்டப்படி நடக்கவேண்டுமென்று நிர்ப்பந்தம் செய்வதுதான்.

ராஜாங்க விஷயத்தில் தனிப்பட்ட பொதுமக்களுக்கு இருக்கும் வாக்குரிமையை அடக்கும் நோக்கமும் இருக்கிறது.

இவ்வித எதிரி திட்டம் குலைந்துவருகிறது என்று நாம் நினைக்கலாம். இருந்தாலும் எதிரி இன்னும் பலத்துடன் இருக்கிறான். நம்மைக் களைக்க வைக்கலாமென்று அவன் எண்ணம் கொண்டிருக்கிறான்.

எதிரிகளின் நோக்கம் இந்த யுத்தத்தை நீடிக்கச் செய்வதுதான். அப்படிச் செய்தால் நேசநாடுகளுக்குள் மனஸ்தாபம் உண்டாகி பிளவு ஏற்பட்டு ஜனநாயகங்கள் சிதறிப்போகுமென்று எதிர்பார்க்கிறார்கள். ஆனால் இந்த எண்ணம் பலிக்காது என்று நாம் கூறுகிறோம்.

---

## எதிரியைப் பூரா தோற்கடிக்க இதுவே சமயம்.

***மிஸ்டர் பெவின்***, *லண்டன் டிஸம்பர் 7.*

நாம் யுத்த அரங்கத்தில் இப்பொழுது சரியான ஸ்தானத்தில் நிற்கிறோம். எதிரியை முதலெடுப்பில் நாம் தோற்கடிக்க முடிந்தது. சிறிது காலத்திற்குள் எதிரி மீண்டும் கிளம்பியிருக்கிறான். இருந்தாலும், அவன் மிக்க பலமடைந்துவிடவில்லை. அவன் தடுமாறிக்கொண்டிருக்கிறான். அவனை அடியோடு முறியடிப்பதற்கு இதுதான் தகுந்த சமயம்.

நம் தேசத்தில் எல்லா பாகங்களிலும் இருக்கும் யுத்த தளவாடங்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகளில் ஸ்திரீ புருஷர்கள் யாவரும் ஈடுபட்டு இன்னும் தீவிரமாக உழைப்பதற்கு இதுதான் தக்க சமயம். அதன் பயனாக விமானப்படை, கப்பற்படை, சைனியம் இவைகளில் சேவைபுரியும் நமது வாலிபர்களுக்குத் தேவையான பொருள்களையடைவதற்கு சாத்தியமாக இருக்கும்.

பல தொழிற்சாலைகளில் ஈடுபட்டிருக்கும் மனிதர்களுக்குப் பதிலாக ஸ்திரீகளில் அநேகர் சேர்ந்து அதிகத் திறமையுடன் வேலை செய்யாமலிருந்திருந்தால் நமது படைகளுக்கு அதிகமான ஆட்களைத் திரட்டியிருக்க முடியாது. இந்த யுத்தத்தின் சரித்திரம் பிறகு எழுதப்படுகையில் முக்கியமாக ஸ்திரீகள் உழைப்பாலேயே நமக்கு வெற்றி கிட்டியதென வரையப்படும்.

---

## சட்ட மறுப்பு இயக்கமும் அதன் விளைவும்.

***மேன்மை தங்கிய பம்பாய் கவர்னர்—பம்பாய்,*** *நவம்பர் 25.*

காங்கிரஸ் நடத்திவரும் சட்ட மறுப்பு இயக்கத்தினால் அரசாங்க நிர்வாகத்தைக் குலைக்கமுடியாது. ஆனால் அதன் பயனாகக் கொலை, பலாத்காரம், தீமூட்டுதல், கொள்ளை முதலிய அட்டூழியங்களே ஏற்படுகின்றன. ஆகையால் இத்தீமைகள் ஏற்படாமல் நாம் பார்த்துக்கொள்ளவேண்டியது அவசியம்.

இவ்விஷயங்களை ஜனங்கள் எவ்வளவு சீக்கிரத்தில் உணருகிறார்களோ அவ்வளவு சீக்கிரத்தில் இவ்வியக்கம் ஒழிந்துவிடும். இந்த இயக்கத்தில் பெரும்பாலாக ஒருவருக்கும் நன்மையே கிடையாது. ஆனால் சாதாரணமான ஜனங்களில் அநேகருக்கு சில தீங்குகள் உண்டாயிருக்கின்றன.



ஒவ்வொரு நாட்டிலும், பல லக்ஷக்கணக்கான ஜனங்களுடன் சேர்ந்துகொண்டு, தியாகம் செய்து எவ்வளவோ லக்ஷக்கணக்கான பேர்களுக்கு தீங்குகள் நேரிடாமல் தடைசெய்யவும், பல நூறு வருஷங்களாக உலகத்தாருக்கு பலதீமைகள் ஏற்பட்டு வருவதில் அவைகளிலிருந்து உலகத்தை விடுவிக்கவும், நாமும் எடுத்துக் கொள்ளவேண்டிய பெருத்த முயற்சிகளுக்குப் பதிலாக ராஜத்துரோகமான நடவடிக்கைகளில் நம்மில் சிலர் இந்த மாகாணத்தில் சிலபாகங்களில் ஈடுபட்டுமிருக்கின்றனர். அவ்விதம் நடவடிக்கை நடத்துவதில் நமக்கு ஒருவித அனுகூலமும் ஏற்படாது. விபரீதங்கள்தான் ஏற்படும். இம்மாதிரியான சந்தர்ப்பங்களில், இந்த தேசத்திலுள்ள ஒவ்வொருவனுடைய எதிர்காலமும் இந்த உலக யுத்தத்தின் முடிவைப் பொருத்திருக்கும்பொழுது, நான் சில முக்கிய விஷயங்களை இங்கு குறிப்பிட விரும்புகிறேன். அவைகளில் இரண்டு விஷயங்களே இந்தியாவில் இந்த சந்தர்ப்பத்தில் மிகவும் முக்கியமானவை.

எந்த நம்பிக்கை, அல்லது நோக்கத்தைக் கொண்டு இந்த இயக்கம் ஆரம்பிக்கப்பட்டாலும், இது முக்கியமாக எதிரிகளுக்குத்தான் உதவிசெய்கிறது. எதிரியின் வேலைக்கு இன்னும் அதிகமான ஊக்கத்தைக் கொடுக்கிறது. இம்மாதிரி நடவடிக்கைகள் அச்சுநாட்டு வல்லரசுகளுக்கு அதிக உதவியாக இருந்திருக்கின்றன. அவர்களின் கொடிய முறைகளால் ஐரோப்பாவிலும், ஆசியாவிலும் பல கோடிக் கணக்கான மக்கள் உயிர்துறந்தோ, காயம்பட்டோ விட்டனர்.

### ஒரே ஒரு வழிதான் இருக்கிறது.

இத்தீமைகளை விளைவிக்காமல் தடுப்பதற்கு மேற்சொல்லிய நடவடிக்கைகளை அடக்குவதுதான் தகுதியான முறை. அந்நடவடிக்கைகள் இப்பொழுது தடுக்கப்பட்டு வருகின்றன. இனிமேலும் அவை கடுமையாகத் தடுக்கப்பட்டுவரும். இதைத் தவிர வேறு எந்த முறையை அனுஷ்டித்தாலும், தினசரி இந்த மூன்று வருஷகாலமாக லக்ஷக்கணக்கான ஜனங்கள் சமாதானத்தை நிலைநாட்டுவதற்காக எதிரியுடன் சண்டை செய்து மடிகின்றனரோ, அந்த நல்ல காரியத்திற்கு ஹானி ஏற்பட்டுவிடும். மேலும் இந்த தேசத்தைக் காப்பாற்றுவதற்காக உங்கள் மக்களும், சகோதரர்களும் ஆயுத பாணிகளாக நின்று யுத்தம் புரிவதில் பின்னாலிருந்து துரோகம் செய்வது மாதிரியாகிவிடும்.

மற்றொரு விஷயம் நாளுக்கு நாள் நமக்கு நிதர்சனமாகத் தெரிகிறது. ராஜத்துரோகமான நடவடிக்கைகளினால் ஜனங்கள்தான் பாதிக்கப்படுகிறார்களே ஒழிய, அரசாங்கத்திற்குக் கெடுதி ஒன்றுமில்லை, அரசாங்கம் இவ்வித அல்பத் தொந்திரவுகளை அதிகமாகப் பொருட்படுத்தமாட்டா. மேலும் இந்த நடவடிக்கைகளினால் அரசாங்க நிர்வாகத்தில் தற்போது ஒருவிதமான கெடுதலும் ஏற்படவில்லை. ஆனால் சட்ட மறுப்பு இயக்கம் ஆரம்பமாவதற்கு முன் கவர்ன்மெண்டார் எவ்வளவு பலமாக நிர்வாகத்தை நடத்திவந்தார்களோ அதே போலவேதான் இப்பொழுதும் நடத்திவருகிறார்கள்.

---

## பிரிடிஷ் சைனியத்தில் பெரிய ஜெனரல்.

---

## பெரும் சண்டைகளை எதிர்பார்த்து தகுந்தவிதமாகத் தாக்குகிறார்.

(***ஸிட்னி ஹார்னிப்ளோ*** *எழுதியது.*)

இப்போது ஆபிரிக்கப் போர்முனையில் நேசநாட்டுப் படைகளுக்குத் தலைவராக இருப்பவர் ஜெனரல் மான்ட் காமரி. இவருடைய தகப்பனார் ஒரு பிஷப். பாட்டனார் பஞ்சாப் மாகாணத்தில் லெப்டினென்ட் கவர்னராக இருந்தவர். இந்த இருவருடைய இயல்புகளும் மான்ட் காமரியிடம் சிறந்திருந்தன. இப்போது அவருக்கு வயது 54.

தன் 20-வது வயதிற்குள்ளாகவே கல்வியையும் ராணுவப் பயிற்சியையும் முடித்துக்கொண்டு இரண்டாவது லெப்டினெண்டாகப் படையில் சேர்ந்தார்.

சென்ற மகா யுத்தத்தில் முதல் முதல் பிரான்ஸில் போய் அடி வைத்தது மான்ட் காமரி தான். உடனே அவருக்கு 'டெம்பரரி காப்டன்' பதவி கிடைத்தது, 3 வருஷங்கள் மேற்குப் போர்முனையில் சேவகம் செய்தார். இரண்டு முறை அப்போது அவர் காயப்பட்டார். இவர் திறமையைப் பாராட்டி படைத் தலைவருக்கு 6 கடிதங்கள் எழுதப்பட்டன. பிறகு டி. எஸ். ஓ. என்ற வீரப் பதக்கமும், 'பிரெஞ்சு க்ராஸ் டி கார்' என்னும் வீரப் பதக்கமும் பெற்றார். அந்த மகா யுத்தம் முடிய சில மாதங்களுக்கு முன்பு வரை, டெம்பரரி லெப்டினென்ட் கர்னலாகவும், முதல் கிரேட் ஜெனரல் ஸ்டாப் ஆபீஸராகவும் இருந்துவந்தார். ரைன், ஐயர்லாந்து, இங்கிலாந்து, இந்தியா ஆகிய நாடுகளில் ஸ்டாப் ஆபீஸராக வேலை பார்த்தார். பிறகு ஸ்டாப் கல்லூரியிலும் கொஞ்சகாலம் வேலை பார்த்தார். பிறகு, கம்பர்லியிலும் குவெட்டாவிலும் உள்ள படைப் பயிற்சிசாலைகளில் உபாத்தியாயராக இருந்தார்.

1937-ம் ஆகஸ்டு மீ இவருக்கு பிரிகேடியர் பதவி கிடைத்தது. பிரிடனிலுள்ள தென் பகுதிப் படைகளுக்குத் தலைவரானார். 1938-ம் மேஜர் ஜெனரல் ஆனார். தற்போதைய யுத்தம் ஆரம்பமானபோது 3-வது டிவிஷன் படைக்குத் தலைமை தாங்கி பிரான்ஸுக்குப் போனார். அங்கே போர் நடைபெறும் வரை இருந்தார். அங்கே டன்கர்க்கை விட்டுத் திரும்பிய பிறகு, பிரிடனிலேயே ஒரு படைக்குத் தலைவராயிருந்தார். அதன் பிறகு இங்கிலாந்தில் தென்கிழக்குப் படைத் தலைமையை ஏற்றுக்கொண்டார். இப்போது ஆபிரிக்கப் பாலைவனத்தில் உள்ள 8-ம் படைக்குத் தலைமை தாங்கி நடத்துகிறார்.

## இவர் இயல்புகள்.

இவர் பிரிடனின் தென்கிழக்குப் படைகளின் ஜெனரல் ஆபீஸர் கமாண்டிங்காக இருக்கும்போது, 40 வயதிற்குட்பட்ட ஒவ்வொரு உத்தியோகஸ்தரும் குமாஸ்தாவும் காலை 7 மணிக்குள்ளாக உடற்பயிற்சி செய்வதற்கு ஆயத்தமாக வந்திருக்கவேண்டும். ஒரு சாதாரண சோல்ஜர் முதல் பிரிக்கேடியர் வரை வாரம் ஒரு முறை காடு மலைகள் வழியாக ஆறு மைல் தூரம் ஒரே மூச்சாக ஓட வேண்டும். ஜெனரல் மான்ட் காமரி, ஜெனரல் பதவி வகித்தாலும், தானும் இப்படி இவ்வளவு தூரம் ஓடினார். ஆகவே, மற்றவர்கள் முணுமுணுக்க இடமே இல்லை.

எதிரி மகா கொடியவன்; ஈவிரக்கமில்லாதவன் என்று இவருக்கு நன்றாய்த் தெரியும். அதனால் தான், தன் படையினரை இவ்வளவு கடுமையான முறைகளில் பழக்குகிறார். இவ்வளவு கடுமையான பயிற்சிகளுக்குப் பிரிடிஷ் சோல்ஜர்கள் இதுவரை ஆளானதே கிடையாது. இந்தப் பயிற்சிகளை மேலும் கடுமையாக்குவதற்கு புதுப் புது முறைகளைக் கண்டு பிடிக்கிறார். இந்தப் பயிற்சிகளுக்கு உள்ளாகிறவர்கள், இதைவிட, போர்முனைக்கே போய்விடலாமென்று கருதுவதுமுண்டு.

இவர் தன் ஆபீஸில் ஒரு மணி நேரந்தான் உட்காருவது வழக்கம். மற்ற நேரங்களில் தன் படைகளுடன் இருப்பதைத்தான் அவர் விரும்புகிறார். இதற்காகத் தன் ஆபீஸில் காலை 6-மணி முதல் 7-மணிக்குள்ளாக தன் வேலைகளையெல்லாம் முடித்துக்கொள்ளத் தக்க ஏற்பாடுகள் செய்திருந்தார். குளிர் மிகுந்த இரவுகளில் தன் சொந்தப் படுக்கையில் எப்படித் தூங்குவாரோ, அதுபோலவே ஒரு வேலிக்கு அடியிலும் படுத்துத் தூங்குவார்.

இரவுகளில் 9-மணிக்கு மேல் அவர் விழித்துக் கொண்டிருப்பதில்லை. விடியற்காலையில் அனைவருக்கும் முன்பே விழித்துக் கொள்ளுகிறார்.



இவர் சிகரெட்டு, சுருட்டு முதலியவற்றைப் பிடிப்பதில்லை. சாராய வகைகளை உபயோகிப்பதில்லை. 23 முதல் 30 வயது வரை தான், ஒரு சோல்ஜர் மிகச் சிறந்த முறையில் போராடக்கூடுமென்று கருதுகிறார். நல்ல அறிவும், சுறுசுறுப்பும், கஷ்டங்களைச் சகிக்கத் தக்க உடலும் உடையவர்கள் தான் நல்ல சோல்ஜர்களாகலாம். ஒரு கம்பெனி தலைவருக்கு 35 வயதிற்கு மேல் இருக்கப்படாது. ஒரு பிரிகேடியர் 40 வயதிற்கு மேல் இருக்கப்படாது. தன் படையைச் சேர்ந்தவர்கள் நல்ல சுகத்துடனும், அறிவோடும், தைரியத்தோடும், கடுமையான ஒழுக்க முறைகளில் பண்பட்டவராக இருக்கவேண்டுமென்றும் அவர் எதிர்பார்க்கிறார். இவர் மதப்பற்றுடையவர். கடுமையான ஒழுக்கமுடையவர்; என்றாலும் மிகுந்த இறக்க சித்தமுடையவர். உஷாராகவும், சுறுசுறுப்பாகவும் இருக்கிறார். கொஞ்சமும் களைப்பில்லாமல் தன் படைகளிடம் கடுமையாக வேலை வாங்குகிறார். அவருடைய ஊக்கத்திற்கும் சக்திக்கும் அளவே கிடையாது. தன் 20-வது வயதில் படையில் சேர்ந்தபோது எவ்வளவு சுறுசுறுப்பாக இருந்தாரோ, அது போலவே இப்போது 54-வது வயதிலும் இருக்கிறார்.

---

# தென் பஸிபிக்கில், மார்ஸ்பி துறைமுகம், மால்டா தீவு போன்றது.

---

## ஜப்பானிய முன்னேற்றத்தை மார்ஸ்பி தடுத்தவிதம்.

(H. C. ஸ்டாடஸ்பரி, Illustrated weekly of India பத்திரிகையில் எழுதியது.)

போர்ட் மார்ஸ்பி எங்கே இருக்கிறதென்று ஒரு வருஷத்திற்கு முன்பு கேட்டால் அது ஒருவருக்கும் தெரிந்திருக்காது. தற்சமயத்தில் அது உலகப்பிரசித்தமாகிவிட்டது. அதன் அமைப்பின் முக்கியத்வத்தைப்பற்றி தெரியாதவர்கள் தற்சமயம் இருக்கமாட்டார்களென்றே சொல்லலாம்.

ஜப்பானியர்களின் கடும் விமானத்தாக்குதல்களால் அது சற்றும் களைக்காமல் எதிர்த்துநின்றது. இவ்விதம் ராபால், ஸாலாமுவா, லே, முதலிய இடங்களோடு பிணைத்துவிட ஜப்பானியர் செய்த பிரயத்தனங்களுக்கு மார்ஸ்பி இணங்காமல் இருக்கிறது. இதற்கு என்ன காரணங்கள் இருக்கின்றன என்பதைப்பற்றி யாவரும் ஆலோசித்து வருகின்றனர்.

இதைப் பரிசீலனை செய்ய 1918-ம் வருஷம் முதல் நடந்த சம்பவங்களைக் கவனிப்போம். வெர்ஸேல்ஸ் உடன்படிக்கையின்படி ஆஸ்திரேலியா வசத்தில் நியூ கினி ஒப்படைக்கப்பட்டது. அதில் ஜப்பானியர் பிரவேசிக்க அனுமதிக்கப்பட்டனர். இவ்விதம் கொஞ்சம் கொஞ்சமாக ஜப்பானியர் கிழக்குப் பக்கத்தில் அடிவைக்காத நகரமே கிடையாது என்று சொல்லலாம். வியாபாரிகளென்று பெயர் வைத்துக்கொண்டு ஜப்பானியர் ரகசியமாக ஒற்றர்களின் வேலையில் ஈடுபட்டிருந்திருக்கின்றனர்.

### ஒரு பெரிய வித்தியாசம்.

பாபூவா (Papua) என்பதும் ஆஸ்திரேலியாவிற்கு உட்பட்ட நாடுதான். ஆனால் அங்கே குடியேறும் சட்டம் மிகக் கடுமையாக அமுலில் இருப்பதால் ஒரு ஜப்பானியர் கூட உள்ளே வந்துபோக அனுமதிக்கப்படுவதில்லை. இவ்விதம் ஆஸ்திரேலியாவில் கூட இல்லை என்று சொல்லலாம்.

போர்ட் மார்ஸ்பியின் விசித்திரமான அமைப்பினாலும், பிரதேசத்தின் தன்மையினாலும்தான் அதற்குப் பத்திரமான நிலை இருக்கிறதாகக் காணப்பட்டது. பாபூவாவும், நியூ கினியும் சேர்ந்து நீண்டு குறுகிய தீவாகும். இவைகளின் இடையே

ஒரு மலைத்தொடர் குறுக்காக இருக்கிறது. அதன் உயரம் 15,000 அடி. இந்த மலைக்கு வடக்கே நியூ கினியும், தெற்கே பாபூவாவும் இருக்கிறன. இந்தப் பெரிய மலைச்சாரலின் இருபக்கங்களிலும் மணல், மலைக்குன்றுகளும், சுண்ணாம்புப்பாறைகளுமிருக்கின்றன. அங்குள்ள வாசிகளுக்கு அடிக்கடி சண்டை சச்சரவுகள் உண்டாவதால் சாட்டுப்பாதைகள் கூட கிடையாது.

நியூ கினியில் உள்ள முக்கிய பட்டணங்களெல்லாம் கடற்கரையோரமாக இருப்பதால், கடல் விமானம் மூலம் ஜப்பானியரால் தாக்கப்படக்கூடியவைகளாக இருக்கின்றன. ஆனால் போர்ட் மார்ஸ்பி அம்மலைத்தொடரின் அடி வாரத்தில் இருப்பதால் அந்நகரை அணுகி வரவேண்டுமானால் அம்மலையைத்தாண்டித்தான் வரவேண்டும்.

தரைவழியாக வருவதற்கும் இரண்டு மார்க்கங்களிருக்கின்றன. முதல் மார்க்கம் பள்ளத்தாக்கின் வழியேயும், மற்றொன்று 125 மைல் தூரத்திலுள்ள பூனா வழியாகவும் தான் வரமுடியும். முதலாவதான மார்க்கம் மிகவும் குறுகலாயும், செங்குத்தான வழியாக வரவேண்டியுமிருக்கிறது. படைகளுக்கு உணவு முதலியவைகளும் கிடைக்காது.

இரண்டாவது மார்க்கம் ஒவன் ஸ்டான்லி மலைத்தொடரை கொகோடா என்ற இடத்தில கடந்து வருகிறது. இந்த இடம் மார்ஸ்பியிலிருந்து 65 மைல் தூரத்திலிருக்கிறது. கடல் மட்டத்திற்குமேல் 6,000 அடி உயரமிருக்கிறது. அடர்ந்த புதர்கள் முதலியவைகளிருப்பதால் இம்மார்க்கம் சாவதானமுள்ளதல்ல.

கடல் மார்க்கமாக வருவதும் சுலபமல்ல. இக்கஷ்டத்தை ஜப்பானியர் விரும்புவதில்லை. இத்துறைமுகத்தின் கிழக்கே (Great barrier reef) ஆஸ்திரேலியா மலைத்தொடர் இருக்கிறது.

இந்த நிலையில் ஜப்பானியர் மார்க்கம் பள்ளத்தாக்கு வழியாக வரமுடியாமல் விமானத்தாக்குதலைச் செய்துபார்த்தனர். அதுவும் பலிக்காது போயிற்று.

அதற்குக் காரணம் இயற்கை தடைகள்தான். இந்நகரை விமானமூலம் தாக்குவதானால் விமானங்கள் 7,000 அடி உயரம் பறக்கவேண்டும். இந்த இடம் மலையடிவாரத்தில் மிகச்சிறிதாக அமைந்து இருப்பதால், வேகமாகப் பறந்து வரும் விமானங்கள் அந்நகருக்குமேல் சரியாக வரமுடிவதில்லை. மெதுவாகப் பறந்துவந்தாலோ புதர்களில் மறைந்து வைக்கப்பட்டிருக்கும் விமான எதிர்ப்பு பீரங்கிகள் சுட்டுவீழ்த்திவிடும்.

அந்த சிறிய இடத்தை அவசியம் பிடித்துவிடவேண்டுமென்று ஜப்பானியர் விரும்பினாலும் அதனால் அவர்களுக்குப் பிரயோஜன மேற்படாதபடி பூ தகன முறைக்கு ஒரு நொடியில் உள்ளாக்கப்படும். அந்நகரம் அத்தீவில் தண்ணீர் தட்டான இடத்தில் இருக்கிறது. ஒவ்வொரு வீட்டிலும், மேல்புறத்தில் இரும்புத் தொட்டிகளில் தண்ணீர் வைக்கப்பட்டிருக்கிறது. அதில் மழைத்தண்ணீர் தேங்க வசதியும் செய்யப்பட்டிருக்கிறது. அரசாங்கத்தார் மலையில் ஓரிடத்தில் தண்ணீரைச் சேமித்துவைத்திருக்கிறார்கள். அந்த ரிஸர்வாயரும், தண்ணீர் தொட்டிகளும் உடைபட்டால் எதிரிகளுக்குத் தண்ணீர் கிடைக்காது.

பாபூவாவின் கரைபூராவும் புதர்களும் சகதிப்பாங்கான இடங்களும், கொசுத் தொந்தரவும் தான் இருக்கின்றன. இதற்குத் தென்மேற்கில் 3,000 சதுர மைல் விஸ்தீரணமுள்ள பிளை நதியின் (Fly River) டெல்டா பிரதேசம் இருக்கிறது.

கொக்கோடா ஒன்று தான் வசதியான இடம். போர்ட் மார்ஸ்பியை ஜப்பானியர் பிடித்தால் ஆஸ்திரேலியாவின் வடகரை பூராவும் விமானத் தாக்குதலுக்கு உள்ளாக்கப்படும். அதனால் அது முன்பைவிட அதிகமாகவே தைரியத்துடன் எதிர்த்துவருகிறது.



# கேவலமான நிலைமை.

## 'யாவராலும் வெறுக்கத்தக்க பாழான நிலைமை'.

("19-வது நூற்றாண்டும், அதற்குப்பிற்பட்டும்" என்ற பத்திரிகையிலிருந்து எடுக்கப்பட்டது).

பிரிடிஷ் சாம்ராஜ்யத்திற்கு முடிவு ஏற்பட்டுவிட்டால் இந்தியாவில் மட்டுமல்ல, பழைய உலகம் பூராவிலும் அராஜகம் ஏற்பட்டுவிடும். ஆஸ்திரேலியா, நியூஸீலாந்து இந்நாடுகள் மட்டும் அழிவதோடு நில்லாமல் சைனா, ருஷ்யா, ஆபிரிக்கா, ஐரோப்பா பூராவும் அழிந்துவிடும். ஆசியாவில் ஜப்பானிய சாம்ராஜ்யம் ஏற்பட்டு சமாதானம் நிலவாது. ஐரோப்பாவிலும் ஜெர்மனியின் சாம்ராஜ்யம் ஏற்பட்டு சமாதானம் நிலைத்திருக்காது. ஏனென்றால் ஒரு இடத்திலும் சமாதானமேயிருக்காது. ஜப்பானியர்களும், ஜெர்மானியர்களும் யுத்தத்தைக் கிளப்பிவிடலாமே தவிர அவர்களால் சமாதானத்தை ஏற்படுத்த முடியாது. ஜெர்மானியரால் சமாதானத்தை ஏற்படுத்தக் கூடுமானால் இந்தக் காலத்திற்குள் யுத்தத்தில் அவர்கள் வெற்றி பெற்றிருப்பார்கள். ஹிட்லரின் சர்வாதிகாரத்தின் கீழ் நடந்து வரும் கொடுமையான அரசாட்சியின் நிலைமை அராஜகத்தைக் காட்டிலும் முற்றிலும் கேவலமானது. இப்பொழுது ஜெர்மானியர் தங்களால் ஜயிக்கப்பட்டிருக்கும் தேசத்தார்களை அடிமையாக்கி, மிகவும் கொடுமையாக நடத்தி வருகிறார்கள். ஜெர்மானியரும், ஜப்பானியரும் வெற்றி பெற்றார்களானால் அதன் முடிவில் சமாதானம் ஏற்படாது; மிகவும் கேவலமான சமாதான நிலைமை கூட உலகத்தில் ஏற்படாது. ஆனால் முடிவில்லாத போர்கள் தான் எல்லாவிடங்களிலும் நேரிடும். அடிக்கடி ராணுவப் படையெடுப்புகள் இருக்கும். ஜனங்கள் ஆயுத பாணிகளாகக் கிளம்பி சண்டை செய்வார்கள். வேலை நிறுத்தம், கொலைகள், அரசியல், பொருளாதாரத் துறைகளிலும், பொதுவாழ்க்கையிலும் நெருக்கடிகள் ஆகிய இவைகளே நேரிடும். அதனால் பிரிடிஷ் சாம்ராஜ்யத்திற்குப் பதிலாக ஏற்படக்கூடியது என்னவென்றால், பைபிளில் சொல்லப்பட்டிருக்கிறபடி எல்லாவற்றையும் பாழாக்கக் கூடியதும், யாவராலும் வெறுக்கத்தக்கக் கூடியதுமான நிலைமை தான் ஏற்படும்.

# பேராபத்து.

சமீபத்தில் டோகியோவில் ஆசியா அபிவிருத்தி சங்கத்தின் முதல் மகாநாடு கூடிற்று. அந்த மகா நாட்டில் மேற்சொல்லிய சங்கத்தின் ஜப்பானியத் தலைவர், தளகர்த்தர் ஹெயாஷி பின்வருமாறு சொன்னார்: "புதிய உலக திட்டத்திற்கு ஆதாரம் பொது க்ஷேமம் தான். அதன் மூலம் உலகத்திலுள்ள எல்லா தேசத்தார்களுக்கும், ஜனங்களுக்கும் நன்மையே கோரப்படுகிறது. யுத்தத்திற்கு முன் பிலிப்பைன் தீவுகளில் அவைகளுக்கு வேண்டிய சக்கரை தயாரிக்கப்பட்டு வந்தது. தேவையானது போக மீதமிருந்ததை அயல் நாடுகளுக்கும் ஏராளமாக ஏற்றுமதி செய்யப்பட்டு வந்தது. பிலிப்பைன் தீவுகளிலிருந்து ஜப்பானுக்குச் சக்கரை ஏற்றுமதி செய்யவேண்டிய தேவையில்லை. ஏனெனில் ஜப்பானால் ஜயிக்கப்பட்ட ஜாவாவிலிருந்து அதற்கு வேண்டிய சக்கரையைப் பெற்றுக்கொள்ளலாம். ஆனால் ஜப்பானுக்குப் பருத்தி தேவையாக இருக்கிறது. ஆகையால் பிலிப்பைன் தீவுகளில் தான் பருத்தி விளையச் செய்ய வேண்டும். ஆகையால் பிலிப்பைன் தீவுகளில் இருக்கும் ஜப்பானிய ராணுவ அதிகாரிகள் ஜப்பானுக்குத் தேவையான பருத்தியில் 30 சதவிகிதத்தை 5 வருஷ காலத்திற்குள் அத்தீவுகளிலிருந்து கிடைக்கும்படி செய்வதற்காக, கரும்புக்குப் பதிலாக பருத்தியை விளையச் செய்யும் திட்டத்தை அமுலுக்குக்கொண்டு வந்திருக்கிறார்கள். இந்த வகையில் கிடைக்கக் [illegible]தியும், சைனாவில் திட்டம் போடப்பட்டிருப்பதில் அங்கிருந்து [illegible] பருத்தியும் ஜப்பானுக்[illegible] கிடைத்துவிட்டால், ஜப்பானுக்கு [illegible] ஏற்றுமதி செய்யப்[illegible]

பருத்தி பூராவும் அவசியமில்லாமல் போய்விடும். ஆனால் இந்திய வர்த்தக ஸ்தலங்களில் சைனாவிலும், பிலிப்பைன் தீவுகளிலும் ஜப்பானியர்கள் ஜனங்களை அதிகமாக ஹிம்ஸித்து விளை வித்த பருத்தியிலிருந்து தயாரிக்கபட்ட மலிவான துணிகள் நிறைந்து விடும். அதனால் இந்தியாவிலுள்ள விவசாயியும், வியாபாரியும் அதிகமாக நஷ்டமடையும்படி நேரிட்டுவிடும். வெகு வருஷங்களாக அதிக விலை கிடைக்கும்படிக்கும், உன்னத நிலைமையில் வாழ்க்கையை நடத்துவதற்கும் நாம் இடைவிடாது கஷ்டப்பட்டு, உழைத்து வந்திருக்கிறோம். இப்படிப்பட்ட இரண்டு பயன்களும் கிட்டும் சந்தர்பத்தில் போராபத்திற்குள்ளாகிவிடும். ஆனால் அவற்றைக் காப்பாற்ற நாம்மல் முடியும். அதற்கு நீங்களும், நாமும் ஒரு மனதுடன் எதிரிகளை எதிர்ப்பதற்குத் திடமான தீர்மானம் செய்யவேண்டும்.

---

## பிரிடிஷ் தீவுகளைப் பாதுகாப்பதில் இந்தியர்களின் சேவை.

(மதராஸ் சஞ்சிகையிலிருந்து எடுக்கப்பட்டது).

இந்தியாவிலிருந்தும், மற்ற கிழக்கிந்திய நாடுகளிலிருந்தும் வந்த ஸ்திரீ புருஷர்கள் விசேஷமாக பிரிடிஷ் தீவுகளின் பாதுகாப்பில் ஈடுபட்டிருக்கிறார்கள். சில சமயங்களில் பிரதானமான பங்கும் எடுத்துக்கொண்டிருக்கிறார்கள் என்று அராபிய நியூஸ் ஏஜென்ஸி வெளியிட்டிருக்கிறது.

முக்கியமாக எவ்வளவோ நூற்றுக்கணக்கான ஸ்திரீகள் போர் அல்லாத மற்ற தொழில்களில் ஈடுபட்டிருக்கின்றனர். ஆனால் கிழக்கு பாகத்திலிருந்து வந்த அநேக மனிதர்கள் சைனியங்களில் சேவை புரிகிறார்கள்.

யுத்தம் ஆரம்பித்தபொழுது இங்கிலாந்தில் மாணவர்களாகயிருந்த பல வாலிபர்கள் பிரிடிஷ் விமானப்படையில் சேருவதற்கு அதிக ஆசைகொண்டிருந்தார்கள். விமானப்படையில் சேர்ந்த அநேகர் மிகவும் பிரக்யாதியடைந்து விட்டார்கள். உயர்தர உத்தியோகங்களுக்கு அவர்களிலிருந்து 40 பேர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள்.

போரில் சேர ஆசைப்பட்ட மாணவர்கள், கப்பற்படை வீரர்கள் இன்னும் மற்றவர்கள் 'இந்தியன் பயோனியர் கோர்' பகுதியில் சேர்ந்தார்கள். அப்பகுதி புகழத்தக்க கீர்த்தி பெற்றிருக்கிறது. அதில் சேர்ந்தவர்களுக்கு பிரிடிஷ் ஸர்வீஸில்ஏற்பட்ட சம்பள விகிதப்படி தான் கொடுக்கப்பட்டுவருகிறது. ஜெர்மன் லுப்ட்வாபி விமானப்படை லண்டன் நகரைத் தாக்கியபொழுது அவர்களுக்குக் கொடுத்த சம்பளம் தகுதியாக இருக்கும் விதமாக நடந்து கொண்டார்கள்.

தலைக்கு உடையில்லாமல் வேலைசெய்ய அனுபவமுள்ளவர்களாக இருந்தபடியால் முழு உடையையும் தரித்துக்கொண்டு வேலை செய்யும் பிரிடிஷ்காரர்களைக் காட்டிலும் அதிக துரிதமாக வேலைபார்த்து, இடிந்த கட்டடங்களை அப்புறப்படுத்தி யாவரும் வியக்கும்படி நடந்துகொண்டாகள். அவர்களுக்குக் கியாதி அதிகரித்துவிட்டதினால் துரஸ்து செய்யக்கூடிய கனமான யந்திரஙகளை உபயோகப்படுத்த முடியாமலிருக்கும் இடங்களுக்கு இவர்களை அனுப்புவது மிகவும் சாதாரணமாய் விட்டது.

இந்தியாவிலிருந்து வந்த அநேக டாக்டர்கள் பிரிடிஷ் ராணுவ வைத்தியப் படையில் வேலை செய்துவருகிறார்கள். தங்கள் தாய் நாட்டிற்குத் திரும்பிப் போக முடியாத அநேக மாணவர்கள் அங்கேயே கவர்ன்மெண்டு இன்ஜினியரிங் கல்லூரியில் பயிற்சி பெற்றிருக்கிறார்கள். இப்பொழுது அவர்களில் பெரும்பாலோர் யுத்த தளவாட உற்பத்தி சாலைகளில் வேலைக்கமர்ந்து வாரமொன்றுக்கு 7 பவுன் வீதம் சம்பாதித்து வருகிறார்கள்.

சமாதான காலஙகளில் அங்கு கல்வி கற்கச் சென்றிருக்கும் மாணவர்களில் பணத்தேவை ஏற்பட்டிருப்பவர்களுக்கு சில ஸ்தாபனங்கள் பண உதவி செய்வதுமுண்டு. அந்த ஸ்தாபனங்களின் ஆதரவின் கீழுள்ள பல மாணவர்கள்



இப்பொழுது நீண்டகாலமாகவே அதிகப்பணம் சம்பாதித்து வருவதால் அவைகள் அவர்களுக்கு முன்போல பணவுதவி செய்யத்தேவை ஏற்படவில்லையென்று வெளிப்படுத்திருக்கின்றன.

அயல்நாட்டு உதவிப்படையில் இதுவரையில் கீழ் திசையிலிருந்து வந்த ஒரே ஒரு பெண்தான் வேலை பார்க்கிறாள். அவள் இந்தியாவிலிருந்து வந்தவள். ஆனால் நெருப்பு அணைப்பு, ராணுவ சிகிச்சை, தேவையான பொருள்களைப் பகிர்ந்து கொடுப்பது இத்தகைய இலாகாக்களில் அநேக ஸ்திரீகள் வேலைக்கமர்ந்திருக்கின்றனர். லண்டனிலும், லிவர்பூலிலும் மின்னல் படையெடுப்பு ஏற்பட்ட காலங்களில் இந்த ஸ்திரீகள் அரிய பெரிய சேவை புரிந்தனர். அவர்கள் கோஷ்டி கோஷ்டியாகச், சேர்ந்து டாக்டர்களாகவோ, அல்லது வைத்திய கல்லூரியின் மாணவர்களாகவோ இருக்கும் தங்கள் பந்துக்களின் சொற்படி வேலை பார்த்து வந்தார்கள்.

---

## இந்தியர்களுக்கு ராணுவப் பயிற்சி.

### இந்திய ராணுவக் கல்லூரி.

(டைம்ஸ் ஆப் இந்தியா பத்திரிகையிலிருந்து எடுக்கப்பட்டது.)

ராணுவத்தில் சேருகிறவர்களுக்கு சிரமங்களைச் சகித்துக்கொள்ளும் சக்தி மெத்த அவசியமென வற்புறுத்தப்படுகிறது. இதற்கு லாயக்காக டேராடூனுக்கு சுற்றுப்புறத்திலுள்ள மலை, பள்ளத்தாக்கு முதலிய இடங்களில் போதுமான பயிற்சி கொடுக்கப்பட்டு, காட்டுச் சண்டைக்கு லாயக்காகவும் தயார் செய்யப்படுகிறார்கள். சமீபத்தில் பயிற்சிக்கு வந்த ஒரு கூட்டத்தார் காட்டுக்குள் சென்று, உணவு, படுக்கை முதலியவைகளில்லாமல் இரவு பூராவும் அலைந்து திரிந்து, வழி தடுமாறி, மறுநாள் மாலையில் கல்லூரியை அடைந்தார்கள். நவீன யுத்த முறையில் குதிரைப்படை அதிகம் இல்லாததால் குதிரையேற்றம் கற்றுக்கொடுக்கப்படுவதில்லை.

கயற்றின்மேல் நடப்பது, சிறு கட்டைகளின்மேல் நடப்பது, கயற்றின் உதவியால் அகழ்களைக் கடப்பது முதலிய பயிற்சிகளைக் கொடுத்து அவைகளில் ஏற்படக்கூடிய தடைகளை மீறிச்செல்ல தயார் செய்யப்படுகிறார்கள். ஒரு பள்ளத்தைத் தாண்டும்போது கீழே ஒரு சாதாரண வெடி வெடிக்கும். அதிலிருந்து கிளம்பும் புகையிலிருந்து சமாளிப்பதற்காக முகமூடிகள் அணியும் விதம் சொல்லிக்கொடுக்கப்படுகிறது.

ஒரு வீட்டினுள் கண்களுக்கு எரிச்சல் உண்டாக்கக்கூடிய வெடியைப்போட்டு அதன் வழியாக இவர்கள் செல்ல அனுமதிக்கப்படுவார்கள்.

இப்பயிற்சி ஆரம்பமானதுமுதல் பஞ்சாபிலிருந்து வந்தவர்கள் பாதி இருக்கும். அடுத்தபடியாக, ஐக்கிய மாகாணம், பம்பாய், வடமேற்கு மாகாணம், மதராஸ், பெங்கால், மத்திய மாகாணம், சிந்து, பலுஜிஸ்தானம், அஸ்ஸாம், பீஹார் முதலியன. ஸமஸ்தானங்களுக்குள் மைசூர் முதலாவது. அடுத்தபடியாக ஹைதராபாத், காஷ்மீரம், பாடியாலா, திருவனந்தபுரம், ராஜபுதன ஸமஸ்தானஙகள் முதலியன. ஒரு குறிப்பான இடத்திலிருந்து வந்தவர்களைத் தான் சாமர்த்தியமுள்ள ஆபீஸர்களாக ஆகிறார்களென்று சொல்லமுடியாது. முக்கியமாக ஆபீஸர்களுக்கு ஆத்ம சக்தி அதிகம் இருப்பதோடு, தைரியம், பலம், முதலியவைகளும் இருக்கவேண்டும்.

**'வி' டயரி-1943.**

(குறிப்பு புஸ்தகம்).

லினன் ரூ. 1—4—0; ஷீப்ஸ்கின் ரூ. 1--8—0;
மொராக்கோ ரூ. 2--0—0.

லாபம் யுத்தநிதிக்குச் சேர்க்கப்படும்.

கீழ்கண்ட விலாசத்திலிருந்து வாங்கிக்கொள்ளலாம்.—

காரியதரிசி,
தேசீய யுத்த முன்னணி நிலயம்,
புதுக்கோட்டை (தென் இந்தியா).

## பிரஸங்க நிகழ்ச்சி முறை.

### பிரஸங்கம் 125. (1-வது பிரிவு)

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 12-12-42 | முனிஸிபல் ஆபீஸ்... | மாலை | 6.00 | 15-12-42 | ரேஞூர் ... | மாலை | 7.00 |
| 13-12-42 | பூவரசகுடி ... | ,, | 7.00 | ,, | நாஞ்சூர் ... | ,, | 7.80 |
| ,, | வேங்கடகுளம் ... | ,, | 7.30 | 16-12-42 | அரிமளம் ... | ,, | 7.00 |
| | | | | ,, | கீழாநிலைக்கோட்டை. | ,, | 7.30 |
| 14-12-42 | பெருங்களூர் ... | ,, | 7.00 | 17-12-42 | உடையாளிப்பட்டி | ,, | 7.00 |
| ,, | ஆதனக்கோட்டை... | ,, | 7.30 | ,, | கிள்ளுகோட்டை ... | ,, | 7.30 |

### பிரஸங்கம் 126. (2-வது பிரிவு.)

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 19-12-42 | முனிஸிபல் ஆபீஸ்... | மாலை | 7.45 | 21-12-42 | வெங்களூர் ... | மாலை | 7.00 |
| 20-12-42 | குடுமியாமலை ... | ,, | 7.00 | ,, | கோனுபட்டு ... | ,, | 7.30 |
| | பரம்பூர் ... | ,, | 7.30 | 22-12-42 | பனையப்பட்டி ... | ,, | 7.00 |
| | | | | ,, | ராங்கியம் ... | ,, | 7.30 |

### யுத்தத்திற்கு ஆள் சேர்த்தல்—விளம்பரம்—மாலை 4-மணி.

| | | | |
|---|---|---|---|
| 12—12—42 | வெட்டம்விடுதி. | 19—12—42 | பொன்னமராவதி. |
| 13—12—42 | எம்பல். | 20—12—42 | கொடும்பாளூர். |
| 14—12—42 | விராலிமலை. | 21—12—42 | அரிமளம். |
| 15—12—42 | பெரம்பூர். | 22—12—42 | கோனுபட்டு. |
| 16—12—42 | காரம்பக்குடி. | | |
| 17—12—42 | கீழாநிலைக்கோட்டை. | | |

Sri Brihadamba State Press, Pudukkottai. 2,000—14-12-42.

புதுக்கோட்டை ஸமஸ்தான
# தேசீய யுத்த முன்னணி நிலயம்.

பிரசுரம்] 1942-ம் வருஷம் டிஸம்பர் மீ 19உ [ந. 126

பிரஸங்கம் CXXVI.

## இதாலி.

*(B. B. C. பேச்சு.)*

இவ்வளவு வருஷகாலமாக இந்த யுத்தத்தில் இதாலி ஈடுபட்டு அடைந்த லாபம் என்னவென்றால் பிரெஞ்சுக் கடற்கரையில் விடுமுறை வாசஸ்தலமான மென்டோன் (Mentone) என்ற இடத்தைச் சுற்றி உள்ள சிறிது பிரதேசமும், கிரீஸின் மேற்குப் பொட்டல் வெளியான இரண்டு ஜில்லாக்களும் தான். ஒரு இதாலிய இராஜகுமாரன் க்ரோஷியாவிற்கு அரசனாகச் செய்யப்பட்டான். ஆனால் அந்த நாட்டுக்குள் செல்லத் துணிய வில்லை. இதாலியின் யுத்த சாமான்களின் உற்பத்தி, மூன்று வருஷங்களுக்கு முன்னிருந்ததில் பாதி தான் இருக்கிறது. அதன் ஆபிரிக்க நாடுகள் சின்னபின்னமாகப் போய்விட்டன. எல்லாவற்றையும் விட அதிகக் கேவலமாக இதாலியே ஜெர்மன் ஆதீனத்திற்கு உட்பட்டுவிட்டது.

தற்சமயத்தில் இந்தப் பிரச்னை தான் மிகக் கடுமையாக இருக்கிறது ஏனென்றால் ஜெர்மானியரின் ஆட்சியால் இதாலியரின் வாழ்க்கையே பாதிக்கப் படும். நாஸி உத்தியோகஸ்தர்கள் இதாலியில் மந்திரி ஸ்தானங்களைக்கூட வகிப் பார்கள் போலிருக்கிறது. 50, 100 பேர்களடங்கிய கூட்டங்களாக ஜெர் மன் ரகசியப் போலீஸார் இதாலியில் பல இடங்களில் காணப்படுகின்றனர். இவர்களுக்கெல்லாம் குடியேற்ற நாட்டுப்பழக்கம் கொடுக்கப்படுகிறது. இதாலியி யிலுள்ள முக்கியமான யுத்தத் தொழிற்சாலைகளிலும், ரசாயன சாமான்கள் செய்யு மிடங்களிலும் ஜெர்மன் இன்ஜினியர்கள் முக்கிய ஸ்தானங்களை வகிக்கின்றனர். இதாலிய நாணயம் ஜெர்மன் நாணய மதிப்பைக் காட்டிலும் குறைவாகப் பாவிக்கப் பட்டிருப்பதால் இதாலியருக்கு அத்யாவசியமான சாமான்களை ஜெர்மானியர் வாங்கிக்கொண்டு போய்விடுகின்றனர். இதாலியத் தொழிற்சாலை யந்திரங்களை யெல்லாம் ஜெர்மன் இதாலியக் கமிட்டி கணக்கெடுத்திருக்கிறது. இவைகளை அப்படி ஜெர்மனிக்கு மாற்றிவிடுவார்களென்றும் சொல்லப்படுகிறது.

### இதாலிய வியாபாரிகளுக்கு அதிக பயம்.

இதாலியில் நாஸிகள் எடுத்து வரும் நடவடிக்கைகளால் தங்களுக்கு அதிக பாதகம் ஏற்படுமென்று இதாலிய வியாபாரிகள் பைஸா என்னுமிடத்தில் கூடி ஆலோசித்தனர். முன்பு முஸோலினி கட்டிய பெரும் தொழிற்சாலைகள் ஜெர் மனிக்கு எடுத்துச் செல்லப்படுமோ வென்று சிலர் பயந்தனர். இப்படி இவர்கள் பயப்படுவது சரிதானென்று சமீபத்தில் நாஸிகள் சொன்ன மொழிகளிலிருந்தும் தெரிந்துகொள்ளலாம். உதாரணமாக ரகசியப் போலீஸ் தலைவன் வெர்னர் பெஸ்டு என்பவன் வரும் கால ஐரோப்பாவில் ஜெர்மனிக்குள்ள பங்கை விவரித்து, இதாலியை ஜெர்மன் குடியேற்ற நாடுகளில் ஒன்றாக பாவித்து போட்டிருந்த படத்தை இதாலியரும் தெரிந்து கொண்டுதானிருக்கவேண்டும்,

இதாலியில் இருக்கும் உண்மை நிலைகளை நாஜிகள் உணரவில்லையென்று பாஸிஸ்ட் பத்திரிகைகள் பிரஸ்தாபித்தும் பார்த்தன. இதாலிக்குச் சொந்தமான சாமான்களை ஜெர்மனி பிடுங்கிக் கொள்ளுவதால் பிரஜைகளுடன் இதாலி செய்துகொண்ட உடன் படிக்கைகளைப் பூர்த்தி செய்ய முடியாதென்றும் கூறப்படுகிறது. ஜெர்மனியில் கிழக்குப் பிரஷ்யாவிலும், ரூர் சுரங்கங்களிலும், ரைன்லாந்து தொழிற்சாலைகளிலும் 6,00,000 இதாலியர் வேலை செய்கின்றனர். குமாஸ்தா வேலை முதலியவைகளுக்கும் ஜெர்மனியில் இதாலியர்களே நியமிக்கப்படுகின்றனர்.

சென்ற யுத்தத்தின் முடிவில் பல இதாலியர்கள் அமெரிக்காவிற்குச் சென்றமாதிரி தற்சமயத்தில் பல இதாலிய ஸ்திரீ புருஷர்கள் ஜெர்மனியில் பிழைக்கச் செல்லுகின்றனர். ஆனால் முன்பு அமெரிக்காவிற்குப் பிரியமாகச் சென்றார்கள். தற்போது விருப்பமில்லாமல் பலாத்காரத்தின் பேரில் ஜெர்மனிக்குச் செல்ல வேண்டியிருக்கிறது.

### உணவுப் பிரச்னை மிகக் கடுமை.

ஐரோப்பாவில் கிரீஸ், பின்லாந்து போன்ற நாடுகளைத் தவிர இதாலியில் தான் உணவுப்பிரச்னை மிகக் கடுமையாக இருக்கிறது. இதாலிக்கும், ஜெர்மனிக்கும் இவ்விஷயத்திலுள்ள ஏற்றுமை வேற்றுமைகளை கவனிப்போம். ஜெர்மனியில் ஒரு ஸ்திரீ பெறுவதில் பாதி ரொட்டி தான் இதாலிய ஸ்திரீ பெறுகிறாள். அதே மாதிரி மாமிசம் மூன்றில் ஒரு பங்கு, சர்க்கரை பாதி, கொழுப்பு பாதி, இந்த அளவில் தான் கொடுக்கப்படுகிறது. ரொட்டி இன்னும் குறைக்கப்பட்டிருக்கிறது. உருளைக்கிழங்கும் ஒரு இதாலியனுக்குத் தினம் ஒரு கிழங்கு வீதம் தான் கொடுக்கப்படுகிறது.

தொழிற்சாலைப் பிரதேசங்களில் தான் உணவுத்தட்டு அதிகம் பாதிக்கிறது. இவ்விஷயத்தை மிலானில் முஸோலினியே ஒப்புக்கொண்டிருக்கிறான். உலைவைப் பற்றிப் பேசுகிறவர்களுடன் ஒத்துப் போகும்படி இதாலியப் பத்திரிகைகள் எச்சரிக்கின்றன. ரோமில் ஒரு நாள் பழங்களோ, காய்கறியோ கிடைக்கவில்லை. அடுத்த நாள் டூரினிலும், ஜினோவாவிலும் மாமிசம் கிடைக்கவில்லை.

உண்மையில் சரியாக உணவைப் பங்கிட்டுக் கொடுக்க இவ்வருஷம் ஆகஸ்டு மாதத்தில் தான் உத்தியோகஸ்தர்கள் நியமிக்கப்பட்டனர். இவ்விதம் கஷ்ட நிலைமை இருப்பது பற்றி கேபினெட்டில் உள்ள பாஸிஸ்ட் அறிக்கைகள் ஒன்றில் பின் வருமாறு பதில் கூறப்பட்டது. 'இந்த யுத்தம் எவ்வளவு காலம் நடக்கும் என்பதைப் பற்றி நாம் சரியாக தீர்மானித்துக் கொள்ளவில்லை. அதன் பயனாக நமக்கு முக்கியத் தேவையான அம்சம் கவனிக்கப்படவில்லை' என்றிருந்தது.

இந்தக் காரணம் உண்மையானால் இதாலியில் அதிருப்தி ஏற்பட்டிருப்பது பொருத்தம் தான். ஆனால் திருட்டுத்தனமாக வியாபாரம் நடப்பது மாத்திரம் சரியாக நடக்கிறது. தினமும் ஏராளமான மாமிச வியாபாரிகளும், சாராய வியாபாரிகளும், ஹோட்டல்காரர்களும் அதிக லாபம் அடையப் பார்த்ததாகக் குற்றம் சாட்டப்பட்டு விசாரணைக்கு கொண்டுபோகப்படுகிறார்கள். ஹோட்டல்கள் உணவு முதலியவைகளை அதிக விலைக்கு விற்கின்றன. அரசாங்கத்தார்கள் நியமிக்கப்பட்ட குடியானவர்களும் கள்ளத்தனமாக அதிக விலைக்கு விற்கிறார்கள். இதை கவனிப்பது தான் சரியாகப் போகிறது. மொத்தத்தில் பஞ்சம் முதலியவை இதாலியில் அதிகமாகிவிட்டது.

### பாஸிஸ்ட் கக்ஷி புதுப்பிக்கப்படுகிறது.

தங்களுக்கு கிடைத்துள்ள அதிகாரத்தை பாஸிஸ்ட் உத்தியோகஸ்தர்கள் அதிகமாக உபயோகிக்கின்றனர். உணவுச் சீட்டுகளுக்குப் பதிலாக போலிச் சீட்டுகளை உபயோகிக்கின்றனர். உணவுப்பண்டங்களைத் தாங்களே சேமித்து விற்கின்றனர். இவ்விதமாக பாஸிஸ்ட் கக்ஷியின் கௌரவத்தை இதாலியிலேயே இழந்தனர். இதை விசாரிக்க முஸோலினி ஒரு மாதத்திற்கு முன் எல்லா தலைவர்களையும் வரவழைத்துப் பேசினான். அதன் பயனாக 66 ஆயிரம் மெம்பர்களையும் சில உத்தியோகஸ்தர்களையும் கக்ஷியிலிருந்து விலக்கினான். 15 நாள் கழித்து இரண்டு ரீஜனல் இன்ஸ்பெக்டர்களையும் 5 மாகாணத் தலைவர்களையும் நியமித்தான்.



இருந்தாலும் நெருக்கடி தீர்ந்தபாடில்லை. பாஸிஸ்ட் கக்ஷியின் உதவி காரியதரிசியான கார்லோ ரவாஸியோ சில நாட்களுக்கு முன்பு சொன்னதாவது 'கக்ஷியினரே, தற்சமயத்தில் கக்ஷியிலேயே அதிக மாறுதல் ஏற்பட்டிருக்கிறது' என்று சொன்னான்.

பாஸிஸ்ட் கக்ஷியில் அங்கத்தினர்களை விலக்கும் வேலையை விடுஸோனி என்பவன் கவனித்து வருகிறான். இவன் முஸோலினியின் காரியதரிசி. இவன் 'இதாலியரின் புகழ்' 'வசிக்க இடம்' 'இதாலிய சாம்ராஜ்யம்' போன்ற பாஸிஸ்ட் கக்ஷியின் கொள்கையிலேயே ஊறினவன். இதாலியில் பாஸிஸ்ட் கக்ஷியினர் தான் அதிகம் ஏமாந்தவர்கள். அவர்களுக்கு சாமர்த்தியம் கிடையாது. லஞ்சம் வாங்கும் பழக்கம் அவர்களுக்குண்டு. முஸோலினிக்கே இவர்களால் ஆபத்து ஏற்படலாம். இதற்காக விடுஸோனி என்பவனையே காரியதரிசியாக நியமித்து யாவரையும் திருப்தி செய்யப்பார்க்கிறான். இந்த யுத்தத்தில் இதாலியருக்கு விருப்பமில்லை என்பது பின்கண்ட இதாலிய விளம்பரத்திலிருந்து தெரியவரும் "இந்த யுத்தத்தில் இங்கிலாந்து ஜயித்தால் நமக்கு நஷ்டம் தான். ஜெர்மனி ஜயித்தால் நாம் அடியோடு போய்விடுவோம்."

### முஸோலினியின் படை எங்கே?

இதாலியின் முதல் தரைப் படைகள் 75 டிவிஷன்களாகும். அதாவது 10 லக்ஷம் பேருக்கு கொஞ்சம் அதிகமாகும். இதில் கடந்த இரண்டரை வருஷ காலமாக நடந்த யுத்தத்தில் இதாலி தன் பாதி பலத்தையும், ஆபிரிக்க ஸாம்ராஜ்யத்தையும் இழந்தது.

அக்டோபர் 25-ல் ஜெனரல் அலெக்ஸாண்டர் போரைத் துவக்குவதற்கு முன் நம்மிடம் 2,62,000 இதாலியக் கைதிகள் இருந்தனர். இப்போது 3,00,000 பேர்கள் இருக்கின்றனர். இதில் 80 ஜெனரல்களும் 12 டிவிஷன்களும் அடங்கியிருக்கின்றன.

தனது அளவுக்கு மீறி ஒரு சைனியமும் இவ்வளவு சிரமப்பட்டிருக்காது. இருந்தாலும் இதாலியின் பாதுகாப்பிற்கு இது போதுமானதென்று தான் நினைக்கலாம்.

இதாலியிலேயே 25 டிவிஷன் துருப்புகள் இருக்கின்றன. இதைத் தவிர 7,50,000 இரண்டாம் தரமான படைகளும் இருக்கின்றன.

10 டிவிஷன் ருஷ்யாவிற்குச் சென்று அழிந்தன. அல்பானியாவிலிருந்து டோடகானிஸ் வரை 30 டிவிஷன்கள் போலீஸ் வேலையைச் செய்து வருகின்றன: மீதியுள்ள 10 முதல் 11 டிவிஷன்கள் தான் ஆபிரிக்காவில் இருக்கின்றன. இவைகளில் அநேகமாக நொண்டி, முடம் முதலியவர்களும் அடங்கித்தானிருப்பார்கள்.

ஜெனரல் வேவல் லிபியாவில் போர் செய்தபோது.—தேர்ச்சிபெற்ற படை 4 டிவிஷன்களும், 4 சாதாரண டிவிஷன்களும், 2 குடியேற்ற நாட்டுப் படைகளும் பிடிபட்டன.

எரிட்ரியா, கிழக்கு ஆபிரிக்கா, அபிஸீனியா.—இங்கே 12 இதாலியப் படைகளும், 25 குடியேற்ற நாட்டு டிவிஷன்களும் சிதறியிருக்கின்றன.

கிரீஸின் சண்டையில்.—11 இதாலிய டிவிஷன்கள்.

ஜெனரல் ஆசின்லக் செய்த சண்டைகள்.—இரண்டு இதாலிய டிவிஷன்கள்.

ஜெனரல் அலெக்ஸாண்டர் செய்த சண்டையில்:—8 இதாலிய டிவிஷன்கள்.

ருஷ்யா, பால்கன் சண்டைகள்.—5 டிவிஷன்கள். இவ்விதமாகத் தான் இதாலியப் படைகள் கலைந்து போயின.

## வார யுத்தச் செய்திகள்.

### 12—12—42-லிருந்து 18—12—42-வரை.

ருஷ்யா.—மாரிகால நிலைமை இருந்து வந்தாலும் ருஷ்யப்போர்முனை பூராவும் சண்டை நீடித்து நடந்து வருகிறது. முக்கியமாக ஸ்டாலின்கிராட்டிலும், மாஸ்கோ முன்பாகவும் சண்டை நடக்கிறது.

ஸ்டாலின்கிராட் தொழிற்சாலைப் பிரதேசத்தில் 1,30,000 ஜெர்மானியர் அடைபட்டிருந்தனர். … டைகளே நடைபெறுகின்றன. அங்கிருக்கும் அரண் … புக விடாமல் அவ்வீடுகள் அழிக்கப்படுகின்றன. வால்கா, டான் … டையில் அடைபட்டிருக்கும் ஜெர்மன் படைகள் ஸப்ளைகளை மேற்… பார்த்துக்கொண்டிருக்கின்றன.

கோடலினிகோவோவில் ருஷ்யர்கள் பலமடைந்து வருவதால் ஜெர்மானியர் கடுமையாகத் தாக்கி வருகின்றனர். ரிஸர்வ் ப… களைக் … கொண்டுவந்து குறுக்கு எதிர்ப்புகளையும் செய்து வருகின்றனர்.

மாஸ்கோ முன்பாக ரிஷெவ்-வெலிகியிலூகி என்ற இரண்டு இடங்களிலும் கடுமையான சேதோஷ்ண நிலையில் பெரும் சண்டை நடைபெறுகிறது. இந்த இரண்டு நகரங்கள் வழியாகத்தான் ஜெர்மானியர் ஸ்மொலென்ஸ்கிற்கு வர முடியும். ஆகவே வந்ததுவரட்டுமென்று பிடிவாதமாக ஜெர்மானியர் குறுக்கு எதிர்ப்புகளைச் செய்கின்றனர்.

மர்மான்ஸ்க் முனையிலும், வடக்கு நார்வே வழியாகவும் ஜெர்மன் உதவிகள் வந்து கொண்டிருக்கின்றன. இ… டு போர் நடத்தப்போகிறார்களா அல்லது பாதுகாப்பு செய்யப் … என்று தெரியவில்லை.

இல்மன் ஏரிப் பிரதேசத்தில் ருஷ்யர் எதிரி அணியில் பிளவை உண்டு பண்ணியதாகத் தெரிகிறது.

வாரனேஷ் முனையில் ருஷ்யப்படைகள் சில முக்கிய இடங்களைப் பிடித்தன.

டுவாப்ஸிக்கு வடகிழக்கிலும் சில இடங்களைப் பிடித்தன.

**எல் அகீலா.**—மெர்ஸா பிரிகா என்ற இடத்திலிருந்து கடற்கரை ஓரமாக 25 மைல் தூரத்திற்கு ரோமல் படைகளை நிறுத்தியிருக்கிறான். தரைச் சுரங்க வெடிகளையும், யந்திர பீரங்கிகளையும் முன்னால் போட்டிருக்கிறான். பின்புறம் டுனிஸியா பக்கமாக பீரங்கிகளையும், டாங்கி எதிர்ப்பு பீரங்கிகளையும் வைத்துக் கொண்டிருக்கிறான். ஆகவே எல் அலமீனில் இருந்ததுபோலவே இங்கும் பாதுகாப்புச்செய்து கொண்டிருக்கிறான். ஆனால் எல் அலமீனில் தாக்கிய மாதிரியே மான்ட்காமரி மெர்ஸா பிரிகா என்ற இடத்திலும் கடற்கரைப் பிரதேசத்தையும் எல் அகிலாவிற்கு 90 மைல் மேற்கேயுள்ள இடத்தையும் தாக்கினார். மெர்ஸா பெர்காவிற்கு 15 மைல் தெற்கேயுள்ள பெஸ்ஸெடாவையும் தாக்கினார். சண்டை செய்வதைக் காட்டிலும் பின் வாங்குவதே மேல் என்று ரோமல் தீர்மானித்து டிஸம்பர் 13-ம் தேதி முதல் பின் வாங்கிக்கொண்டே போகிறான். இதுவரை சுமார் 40 முதல் 90 மைல் தூரம் போயிருக்கலாம். 8-ம் படையின் முன்னேற்றத்தைத் தாமதப்படுத்த சுரங்க வெடிகளைப் பாவிக்கொண்டிருக்கிறான். ஆனால் 8-ம் படை அவைகளை லக்ஷியம் செய்யாது. முன்னேறிக்கொண்டுதானிருக்கின்றன.

**டுனிஸியா.**—டுனிஸியாவில் ஜெனரல் நெரிங் போரைத் துவக்கும் போது இருந்த பிரிடிஷ் முதல்படை 8-ம் படையைப்போல் அவ்வளவு பலமுள்ளதாக இல்லை. ஆதலால்தான் பிரிடிஷ்படை சற்று பின் வாங்கநேர்ந்தது. உதவிப்படை வரட்டுமென்று பிரிடிஷ்படை காத்திருந்தால், டுனிஸியாவில் ஜெர்மானியர் நிலைத்திருப்பார்கள். அதோடு நேசப்படைகளை அல்ஜீரியாவுக்குத் துரத்தியும் இருப்பார்கள். ஆனால் பிரிடிஷ்படை தயங்காமல் தாக்கின. தற்சமயத்தில் நெரிங் மெட்ஜெஸ்எல்பாப் என்ற நகரைப் பிடிக்கப்பார்க்கிறான். ஆனால் நேசப்படைகள் அதை விடாமல் காக்கின்றன. டெபர்பா, மாஸிகால்ட் என்ற இரண்டு இடங்களிலிருந்து செய்யப்படும் எதிரி டாங்கித் தாக்குதலை ஜெனரல் ஆண்டர்ஸன் தடுத்து விட்டான்.

மத்திய டுனிஸியாவில் ஸிடிபௌஸ… முக்கிய இடத்தை பிரெஞ்சுப் படைகள் பிடித்தன.

ஸ்பாக்ஸ் (Sfax), ஸௌஸி (Sousse) என்ற இடங்களிலிருந்த பிரெஞ்… கொரில்லாப்படை ஜெர்மன் து…

வட ஆபிரிக்கப் போர் … டலில் பிரிடிஷ் நீர்மூழ்கிகள்



க்ரூயிஸர் மூழ்கடிக்கப்பட்டது; 4 தாக்குண்டன; நாசகாரிகள் ஒன்று மூழ்கடிக்கப்பட்டது, ஒன்று அநேகமாக மூழ்கடிக்கப்பட்டிருக்கலாம்: ஒன்று சேதமாக்கப்பட்டது: மூன்று தாக்கப்பட்டன. எண்ணெய்க்கப்பல்கள் 4 மூழ்கடிக்கப்பட்டன; ஸப்ளைக்கப்பல்கள் 9 மூழ்கடிக்கப்பட்டன; 1 அநேகமாக மூழ்கடிக்கப்பட்டது; 5 சேதமாயிற்று. சாமான்கப்பல்கள்: டுனிஸியாவிற்கு துருப்போ, சாமானோ ஏற்றிச்சென்ற 4 கப்பல்கள் தாக்கப்பட்டன. 62 அச்சுநாட்டுக்கப்பல்கள் கடந்த 6 மாதங்களில் மூழ்கடிக்கப்பட்டதாக டிஸம்பர் 15-ல் மத்தியக்கிழக்கு மந்திரியான ரிச்சர்டு கேஸி அறிவித்தார். இதைத் தவிர சேதமான கப்பல்களின் கணக்கும் இருக்கிறது. 'வர வர இக்கணக்கு அதிகரித்து வருகிறது' என்றும் அவர் சொன்னார்.

**நியூ கினி.**—கோனாவில் அடைந்த வெற்றிகளுக்குப் பிறகு மெக்ஆர்தரின் படைகள் பூனாவையும் டிஸம்பர் 14உ திங்கட்கிழமை கைப்பற்றின. இதோடு பாபூவா பூராவும் வசமடைந்ததென்றே சொல்லலாம். பூனாவில் மும்பாரி (MUMBARI) குமுஸி (KUMASI) என்ற இடங்களில் படைகளை இறக்க வந்த இரண்டு ஜப்பானிய க்ரூயிஸர்களும் மூன்று நாசகாரிகளும் நேசதேச விமானங்களால் தடுக்கப்பட்டன. 15உ பூனா, என்டயாடரி (Endaiadere) என்ற இடங்களில் சண்டை பலமாக நடந்தது. ஸனநந்தா (Sananauda) என்ற இடத்தில் நேசப்படைகள் மீண்டும் முன்னேறின.

**ஸாலமன்ஸ்.**—டிஸம்பர் 9உ பெய்ஸி (Faisi) துறைமுகத்திலுள்ள கப்பல்களை அமெரிக்க விமானங்கள் தாக்கின. மூண்டா (Munda) என்னுமிடத்திலுள்ள விமானத் தளங்களையும் தாக்கின. டிஸம்பர் 12உ ஒரு ஜப்பானிய எண்ணெய் கப்பல் தாக்கப்பட்டது. மற்றொன்று வட ஸாலமன்ஸில் சேதமாக்கப்பட்டது.

டிஸம்பர் 13உ அமெரிக்க விமானங்கள் கூடல்கனாலில் இரண்டு ஜப்பானிய ரங்கி நிலைகளைத் தாக்கின. பூயினும் மூண்டாவும் தாக்கப்பட்டன.

**சைனா.**—ஹாயிசல்விற்கு தென்மேற்கில் படைகளை இறக்க வந்த மூன்று ஜப்பானியக் கப்பல்கள் திருப்பியடிக்கப்பட்டன. மத்திய ஹூபேமாகாணத்தில் எதிரித் தாக்குதல்கள் திருப்பியடிக்கப்பட்டன. ஸால்வீனைக் கடந்து யூனானில் புகமுடியாமல் ஜப்பானியர் தடுக்கப்பட்டனர்.

**பர்மா.**—டிஸம்பர் 11உ ரெங்கூன் துறைமுகத்தையும், போர்டு பிளேரில் ஒரு கப்பலையும் பிரிடிஷ் விமானப்படை தாக்கியது. டிஸம்பர் 13உ மாக்வி விமான தளமும் தாக்கப்பட்டது.

டிஸம்பர் 14உ மயோஹாங்கும், 15உ ஹூகாங்கி, மயன்க்வான் இரண்டும் தாக்கப்பட்டன.

**இந்தியா.**—டிஸம்பர் 10, 15-ம் தேதிகளில் சிட்டகாங் மூன்று தடவை தாக்கப்பட்டது. சேதம் மிகக் குறைவு. பொதுஜனங்கள் அமைதியாகப் பாதுகாப்பு ஸ்தலங்களுக்குச் சென்றனர். ஒவ்வொரு நாளிலும் எதிரிக்கு மூன்று விமானங்கள் நஷ்டம். 15உ இன்னும் பல எதிரி விமானங்கள் சேதமாயின.

**பலவகைப்பட்டவை.**—(1) பிரான்ஸில் லவாலின் கீழ் தனிப்பட்டி கட்சி ஆட்சி ஸ்தாபிக்கப்படும். இதற்கு பாஸிஸ்ட் கக்ஷியைச் சேர்ந்த டீட் உதவி செய்கிறான்.

(2) ஜெர்மனியில் ஜெனரல் வான்ஹால்டரின் ஸ்தானத்திற்கு ஜீட்ஜலர் நியமிக்கப்பட்டான்.

(3) இந்தியாவில் ஜனாதிபதி ரூஸ்வெல்டின் பிரதிநிதியாக வில்லியம் பிலிப்ஸ் நியமிக்கப்பட… , இவருக்கு ஸ்தானீகரின் பதவி உண்டு. இதற்குக் காரணமாக இ… ல் அமெரிக்கப் படைகளிருப்பதும், இந்தியப் பிரச்னையில் அமெரிக்கர்களுக்குள்ள அக்கரையும் சொல்லப்படுகின்றன.

(4) ஜெர்மன் மாகாண கக்ஷித்தலைவர்களுக்கு ரீஷ் பாதுகாப்பு கமிஷனர் பதவி கொ… ப்பட்… ன்றன. அரசாங்கம், ராணுவம் இரண்டு அதிகாரங்களும் உண்டு.

( … ) மாதங்களுக்கு ஏதன்ஸ் வாசிகளான 10,00,000 பே… கொல்லப்பட்டதாக கிரீஸ் செய்தி இலாகா ம…

## சத்துருவினுடையவும், சத்துருவினுல் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில், பிரிடிஷ், நேசதேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

**7—12—42.** (திங்கட்கிழமை).

ஐரோப்பா (Europe)—(6 நேசதேச விமானங்கள் திரும்பிவரவில்லை).

3 எதிரி கப்பல்கள்.—பிரிடானி (France).
ராணுவ முகாம்களும், கப்பல்களும்.—நார்மண்டி (Normandy), ஹாலந்து, பெல்ஜியம் (Low Countries).
இரவில்.—சுரங்கவெடி பாவுவது—எதிரிக் கடற்கரை.

வட ஆபிரிக்கா (North Africa).—(2 நேசதேச விமானங்கள் திரும்பிவரவில்லை).

விமானமிறங்குமிடம்.—மார்பிள் ஆர்ச் (Marble Arch)—(10 எதிரி விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன).
மிஸுராடா (Misurata) லிபியாவில்.
விமானத் தளம்.—ஹோம்ஸ் (Homs)க்கு அருகில்.
கப்பல் துறைமுகங்களும், கடல் விமானத்தளமும்.-பிஸர்ட்டா (Bizerta).
டூனிஸ்-கேபஸ் (Tunis-Gabes) இருப்புப் பாதை.
போக்குவரத்து விமானங்கள்.—லம்பேடூஸா (Lampedusa).—(3 அச்சு நாட்டு விமானங்கள் சேதமாயின).

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகள், விமானங்கள்.—ருஷ்யப் போர்முனை முழுவதிலும்.

தூரக்கிழக்கு (Far East).

விரோதி ஸ்தானம்.—பூனா-கோனா (Buna-Gona) பிரதேசம்.
விமான நிலயம், துறைமுகம்.—வட பிரிடனிலுள்ள காஸ்மேடா (Gasmata).
வெடி மருந்து கிடங்குகள்.—வட அயர்லாந்திலுள்ள கேவியங [illegible]).
விமானக்கூடம்.— நியூ [illegible] யுள்ள லே (Lae).

**[illegible]—12—42.** (செவ்வாய்க்கிழமை).

ஐரோப்பா (Europe)-(1 நேசதேச விமானம் திரும்பி வரவில்லை).

பகலில்.—தொழிற்சாலைகள், ரயில்வே கட்டடங்கள்.—ஹாலந்து (Holland), வடமேற்கு ஜெர்மனி (N. W. Germany).
ரயில்வே லக்ஷியங்கள், படகுகள், விமான தளங்கள்.-வட பிரான்ஸ் (N. France), பெல்ஜியம் (Belgium).
இதாலியிலுள்ள டூரின் (Turin).

வட ஆபிரிக்கா (North Africa).

விமானக்கூடம்.—மார்பிள் ஆர்ச் (Marble-Arch).
விரோதி [illegible] அகீலா (El-Agheila), ட்ரிபோலி (Tripoli[illegible]
கப்பல் து[illegible] பிஸர்ட்டா (Bizerta).
விரோதி [illegible]யம்.—டூனிஸ்(Tunis), கேபஸ் (Gabes).

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகள், தரையிலுள்ள விமானங்கள்.—கிழக்குப் போர்முனை முழுவதிலும்.

தூரக்கிழக்கு (Far East).

ஜப்பானியரின் ஸ்தானம்.—நியூ கினியிலுள்ள பூனா (Buna).
ஒரு விமானக்கூடம்.—நியூ கினியிலுள்ள லே (Lae).
ராபால் (Rabaul) பிரதேசத்தில்.
வேவு பார்த்தல்.—(இரண்டு விரோதி விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன).
வட பிரிடனிலுள்ள காஸ்மாடா (Gasmata).

**9—12—42.** (புதன்கிழமை).

ஐரோப்பா (Europe).

ரயில் வண்டிகள், சாமான் வண்டிகள், படகுகள், விமானக்கூடங்கள், பல சிறு கப்பல்கள்.—வட பிரான்ஸ் (N. France), ஹாலந்து பெல்ஜியம் (Low-Countries)
[illegible]லைகள்.—ஹாலந்து (Holland).
[illegible]லைப் பிரதேசம்.—இதாலியிலுள்ள டூரின் (Turin).

வட ஆபிரிக்கா (North Africa).

விமானமிறங்கும் இடங்கள்.—எல் அகீலா (El Agheila)விற்குப் பின்னுள்ள விரோதி ஸ்தானங்கள்.
விமானக் கூடம்.—ஹோம்ஸ் (Homs), ட்ரிபோலி (Tripoli).
கப்பல் துறைகள்.—[illegible] கௌலெட் (La-Goulette).
வி[illegible]
[illegible] விலுள்ள ஸௌஸிக் (Sousse) கருகாமையில்.

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகள், தரையிலுள்ள விமானங்கள்.—கிழக்குப் போர்முனை மு[illegible]

தூ[illegible] (Far East).

ஜப்பானிய[illegible] பூனா-கோனா (Buna-[illegible]
வ[illegible]விலுள்ள லே (Lae).



**10—12—42.** (வியாழக்கிழமை).

ஐரோப்பா (Europe).

பகலில்.—விரோதிக்குச் சொந்தமான கப்பல்கள்.—பெல்ஜியம் (Belgium) கடற்கரைக்கருகாமையில்.
வட பிரான்ஸிலுள்ள ரயில்வே லக்ஷியங்கள்.
ஒரு ரயில்வே பாலம்.—பாரிஸுக்கு (Paris)க்கு 40 மைலுக்கு மேற்கே.

வட ஆபிரிக்கா (North Africa).

கப்பல் துறைகள்.—பிஸர்ட்டா (Bizerta).
விமானக்கூடம்.—டூனிஸ் (Tunis).
விமானமிறங்குமிடங்கள்.—எல் அகீலா (El-Agheila)வுக்கு மேற்கே பின்புறமாக லிபியாவிலுள்ள மிஸுராடா (Misurata).

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகள், தரையிலுள்ள விமானங்கள்.—ருஷ்யப் போர்முனை முழுவதிலும்.

தூரக்கிழக்கு (Far East).

வேவு பார்த்தல்.—நியூ பிரிடனிலுள்ள ராபால் (Rabaul).
நியூ கினியிலுள்ள பூனா-கோனா (Buna-Gona) பிரதேசம்.

**11—11—42.** (வெள்ளிக்கிழமை).

ஐரோப்பா (Europe).

பகலில்.— கப்பல்கள்— பெல்ஜியம் (Belgium) கடற்கரைக்கருகாமையில்.
ரயில்வே லக்ஷியங்கள்.—வட பிரான்ஸ் (Northern France).
கப்பல்கள், கப்பற்படை பகுதிகள், துறைமுகம்.—இதாலியிலுள்ள நேபிள்ஸ் (Naples).
டூரின் (Turin).

வட ஆபிரிக்கா (North Africa).

விமான எதிர்ப்புகள்.—எல் அகீலா (El-Agheila),
விமானமிறங்குமிடங்கள்.—எல் அகீலா (El-Agheila)விற்குப் பின்புறம்.
விமானக்கூடம்.—டூனிஸ் (Tunis), பிஸர்ட்டா (Bizerta),

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகள், தரையிலுள்ள விமானங்கள்.—போர்முனை முழுவதிலும்.

தூரக்கிழக்கு (Far East).

ஜப்பானியருக்குச் சொந்தமான துணைக் கப்பல்கள்.—ஸாலமன் தீவுகளிலுள்ள கூடால்கனுருக் (Gudalcanar)கருகாமையில்.
நியூ ஜார்ஜியாவிலுள்ள மூண்டா (Munda).
விமானக்கூடம்.—லே (Lae).
ரெங்கூனிலுள்ள கப்பல் துறைகள்.
அந்தமான் தீவுகளிலுள்ள பிளேர் துறைமுகம் (Port Blair).

**12—12—42.** (சனிக்கிழமை).

ஐரோப்பா (Europe)—(1 நேசதேச விமானம் திரும்பி வரவில்லை).

பகலில்.—லக்ஷியங்கள் பிரான்ஸிலுள்ள ரோவன் (Rouen).
விமான தளங்கள், கால்வாயில் செல்லும் படகுகள்.—ஹாலந்து (Holland).

வட ஆபிரிக்கா (North Africa).

விரோதி ஸ்தானம்.—எல் அகீலா (El-Agheila) பிரதேசம்.
விமானமிறங்குமிடங்கள்.—எல் அகீலாவிற்கு (El Agheila)ப் பின்புறம்.
விமானக்கூடம்.—டூனிஸ் (Tunis).
கப்பல் துறைகள், பண்டகசாலைகள்.—பிஸர்ட்டா (Bizerta).
விமானக்கூடங்கள்.—ஸிஸிலி (Sicily).

ருஷ்யா (Russia)—(5—12—42 முதல் 12—12—42) வரை முடிவடைந்த வாரத்தில் ருஷ்யர்களுக்கு 156 விமானங்களும், அச்சுநாட்டினருக்கு 407 விமானங்களும் நஷ்டமாயின).

விமானச் சண்டைகள், தரையிலுள்ள விமானங்கள்.—ருஷ்யப்போர்முனை எங்கும்.

தூரக்கிழக்கு (Far East).

ரயில் வண்டிகள் தங்குமிடங்கள்.—பர்மாவிலுள்ள மாண்டலே (Mandalay).
ரயில்வே ஸ்டேஷன்.—பர்மாவிலுள்ள நாபா (Naba).
ஜப்பானிய ஸ்தானம்.—பூனா-கோனா (Buna Gona) பிரதேசம்.
விமானக்கூடம்.—ஸாலமன் தீவுகளிலுள்ள பூயின் (Buin).

**13—12—42.** (ஞாயிற்றுக்கிழமை).

ஐரோப்பா (Europe).

பகலில்.—படகுகள், சிறு கப்பல்கள், சரக்குப்பேற்றிச்செல்லும் ரயில் வண்டிகள். பிரான்ஸ் (France) ஹாலந்து, பெல்ஜியம் (Low Countries).
எதிரியின் கப்பல்கள்.-நார்வே (Norway), கடற்கரைக்கருகாமையில்.

வட ஆபிரிக்கா (North Africa).

விமானக்கூடம்.—மார்பிள் ஆர்ச் (Marble Arch).

ரோமலின் தலைமையின் கீழுள்ள படைகள். எல் அகிலாவுக் (El Agheila) கருகாமையில்.

ஸௌஸி (Sousse).

விமானதளம்.—டுனிஸ் (Tunis).

துறைமுகம்.—ஸிஸிலியிலுள்ள பாலர்மோ (Palermo).

ருஷ்யா (Russia).

விமானச்சண்டைகள், தரையிலுள்ள விமானங்கள்.—போர்முனை முழுவதிலும்.

தூரக்கிழக்கு (Far East).

விரோதி ஸ்தானங்கள்.—(2 ஜப்பானிய விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன).

விமானக்கூடங்கள்.—லே (Lac), ஸலாமௌா (Salamaua).

14—12—42. (திங்கட்கிழமை).

ஐரோப்பா (Europe).

பகலில்.—ரயில்வே ஸ்தானங்கள்—வட பிரான்ஸ் (North France), பெல்ஜியம் (Belgium).

## விரோதிகளின் விமானப்படையெடுப்புகளின் விவரங்கள்.

8—12—42. (செவ்வாய்க்கிழமை).

பிரிடன் (Britain).

பிரிடனில் எங்கும் விமானத்தாக்குதலே நேரிடவில்லை.

வட ஆபிரிக்கா (North Africa).

நேசதேசத்தாரின் முன்னணிப் பிரதேசங்கள்—டுனிஸியா (Tunisia).

ருஷ்யா (Russia).

ருஷ்யஸ்தானங்கள்—மத்தியப் பிரதேசத்திலும், ஸ்டாலின்கிராட் (Stalingrad) பிரதேசத்திலும்.

தூரக்கிழக்கு (Far East).

தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை.

9—12—42. (புதன்கிழமை).

பிரிடன் (Britain).

எங்கும் விமானத்தாக்குதல் நேரவில்லை.

வட ஆபிரிக்கா (North Africa).

அல்ஜீரியாவிலுள்ள போன் (Bone).

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகள், ஸ்டாலின்கிராட் (Stalingrad) பிரதேசம்.

தூரக்கிழக்கு (Far East).

இந்தியாவில் சிட்டகாங் (Chittagong) ல் (3 விரோதி விமானங்கள் சேதமாயின).

10—12—42. (வியாழக்கிழமை).

பிரிடன் (Britain).

பிரிடனின் கிழக்குக் கடற்கரையிலுள்ள ஒரு இடம்-1 அச்சுநாட்டு விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டது.

வட ஆபிரிக்கா (North Africa).

டுனிஸியாவிலுள்ள டெபர்பா (Teburba).

தூரக்கிழக்கு (Far East).

விமான தளம்—ஸாலமன் தீவுகளிலுள்ள கூடால்கனார் (Gudalcanar).

11—12—42. (வெள்ளிக்கிழமை).

பிரிடன் (Britain).

கடற்கரைப் பிரதேசங்கள்—வடகிழக்கு இங்கிலாந்து (N. E. England).

வட ஆபிரிக்கா—(North Africa).

டுனிஸியாவிலிருக்கும் டெபர்பா (Teburba), மெட்ஜெஸ் எல்பாப் (Medjez El Bab),

தூரக்கிழக்கு (Far East).

தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை.

12—12—42. (சனிக்கிழமை).

பிரிடன் (Britain).

விமானத் [illegible].

வட ஆ[illegible]rth Africa).

நேசதேசத்தாரின் முன்னணிப் பிரதேசங்கள்—டுனிஸியா (Tunisia).

ருஷ்யா (Russia)

ருஷ்ய ஸ்தானங்கள்.—ரிஷவ் (Rzov)க்கு மேற்கே.

தூரக்கிழக்கு (Far East).

விமான நடமாட்டமே யில்லை.

13—12—42. (ஞாயிற்றுக்கிழமை).

பிரிடன் (Britain).

விமான நடமாட்டமேயில்லை.

ருஷ்யா (Russia).

ஸ்டாலின் கிராட் (Stalingrad) பிரதேசம்.

தூரக்கிழக்கு (Far East).

வேவு பார்த்தல்—ஸாலமன் தீவுகளிலுள்ள கூடால்கனார் (Gudalcanar).

14—12—42. (திங்கட்கிழமை).

பிரிடன் (Britain).

பிரிடனின் வட கிழக்குக் கடற்கரை (2 அச்சு நாட்டு விமானங்கள் சேதமாயின.)

வட ஆபிரிக்கா (North Africa).

மெட்ஜஸ் எல் பாப் (Madjez El Bab)

ருஷ்யா (Russia).

விமானச் ச[illegible] ஸ்டாலின்கிராட் பிரதேசம், (42 ஜெர்மன் விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன.)

தூரக்கிழக்கு (Far East).

தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை.



# யுத்தக் குறிப்புகள்.

**இரண்டு வெற்றிகள்.** எல் அகீலா.—இவ்வாரத்தில் இரண்டு முக்கிய சம்பவங்கள் நடந்திருக்கின்றன. 13௳ ஞாயிற்றுக்கிழமை முதல் எல் அகீலாவை விட்டு ரோமல் வெகுதூரிதமாக பின் வாங்கி ஓடிக்கொண்டிருக்கிறான். இரண்டாவதாக 14௳ திங்கட்கிழமை பூனு (Buna) நேசதேச வசமாயிற்று. இவைகளில் முதல் சம்பவம் ரோமல் நிகரற்றவன் என்ற கதையை பொய்யாக்கிறது. இரண்டாவது சம்பவம் ஆஸ்திரேலியாவிற்கு அருகில் ஜப்பானியரை அணுக முடியாதபடி செய்தது.

எல் அகிலா என்பது ஆபிரிக்கப் பாலைவனத்தில் ஒரு சிறிய கிராமம். அது கடந்த இரண்டு வருஷங்களாக நடந்த சம்பவங்களால் சரித்திரப் பிரசித்தமாகி விட்டது. 1941-ம் வரு பிப்ரவரியில் வேவல் அதுவரை முன்னேறினார். அதை 1941-ம் வரு மார்ச்சில் பிரிடிஷ் துருப்புகள் காலி செய்தன. பிறகு 1942-ம் வரு ஜூனில் ரோமல் திரும்பப்பிடித்தான். இங்கிருந்து எல் அலமீன் வரையிலும் முன்னேறினான். ஆனால் தற்சமயம் எல் அகீலாவிலிருந்தும் மேற்கே துரத்தப் பட்டான். இப்போது நடக்கும் சண்டையில் நேருக்கு நேர் பிரிடிஷ் படைகளுடன் ரோமல் எதிர்த்து நிற்கவேயில்லை. திடீரென அங்கிருந்து ஓட்டம் பிடிக்கிறான். சமயத்திற்கு ஏற்றவாறு நடந்து கொள்ளுவதுதான் சரியான பலத்தைக் குறிக்குமென்று ரோமல் நினைக்கிறான் போலும்.

இம்மாதிரி இங்கிருந்து எதிரி ஓடுவான் என்று இரண்டு வாரங்களுக்கு முன்பேயே மாண்ட்காமரி கூறிவிட்டார். இனி 'நடக்கும் சண்டைதான் முடிவாக இருக்கும். யுத்தத்தின் போக்கையும் திருப்பும். ஆபிரிக்காவிலிருந்தே எதிரிகளை விரட்டுவோம்' என்றார்.

ஞாயிற்றுக்கிழமை காலையில் பிரிடிஷ் 8-வது படை மெர்ஸா மெர்கா என்ற இடத்தில் புகுந்தது. அதேசமயத்தில் பிரிடிஷ் காவல்படை 15 மைல் தூரத்தில் உள்ள பெஸ்ஸ-டா என்ற இடத்தையும் தாக்கியது. மிச்சமாக இருந்த டாங்கி, பீரங்கி, போக்குவாத்து சாதனங்கள் முதலியவைகளைச் சுருட்டி வாரிக் கொண்டு ரோமல் ஓட்டம் பிடித்தான். எல் அகீலாவிலிருந்து வெகுதூரம் மேற்கே சென்று விட்டான். இனி 380 மைல் தூரத்திலுள்ள மிஸுராடாவில் நிலைக்கிறானோ அல்லது அங்கிருந்து 120-மைல் தூரத்திலுள்ள ட்ரிபோலியில் நிலைக்கிறானோ. அப்படிப் பின்வாங்கும்போது பின் பந்தோபஸ்துக்காக சிறு மணல் குன்றுகளை இயற்கைத் தடைகளாக உபயோகித்துக்கொள்ளலாம்.

பூனு என்பதும் ஒரு கிராமம் தான். ஆனால் அதிக முக்கியமான இடத்தில் இருக்கிறது. இது மெக் ஆர்தரின் படைக்கு வசப்பட்டது. இதை கைவசப் படுத்தி வைத்துக்கொள்ள ஜப்பானியர் கொஞ்சம் பாடுபட்டனர். ஆனால் முடியவில்லை. இரண்டு ஜப்பானிய க்ரூயிஸர்களும், 3 நாசகாரிகளும் மும்பாரி, குமுஸி என்ற இரண்டு இடங்களில் படைகளை இறக்க முயன்றன. அவைகள் மூழ்கடிக்கப்பட்டன.

கோனாவைப் பிடித்த சில நாட்களுக்குப் பிறகு பூனுவும் பிடிபட்டதால் நியூ கினியின் தென் கிழக்குப் பாகமான பாபுவாவை பூராவாக வசப்படுத்தியாச்சுது. பஸிபிக்கில் எதிரி கையிலிருந்து பிடுங்கப்பட்ட இடங்களில் இதுவே முதலாவதாகும். பூனுவைப் பிடித்ததால் அதிகமான சாதகம் ஏற்பட்டிருப்பதாகச் சொல்லமுடியாது. சண்டை இன்னும் நடக்கிறது.

லண்டன் டைம்ஸ் பத்திரிகை இதிலிருந்து ஜப்பானின் குலைவு நிச்சயம் என்கிறது. அது சொல்லுவதாவது:—

'விமானாதிக்கம் முக்கியமென்று மறுபடி ஊர்ஜிதமாகிறது. கடல் மார்க்கங்களின் வழியாக ஆயுதங்களை எடுத்துச் செல்லவும் முடிகிறது. திட்டமாகத் தயாரிக்கப்பட்ட குறுக்குத் தாக்குதல்களின் மூலமாக ஜப்பானியரை வசப்படுத்தலாம்.'

பாபூவா, கூடல்கனல் இரண்டும் இந்தியாவிலிருந்து நீண்டு செல்லும் பூமியின் இரு முனைகளாகும். இதைவிட டிமோரிலிருந்து ஆஸ்திரேலியாவிற்கு ஆபத்து உண்டாகலாமே என்று சொல்லாம். ஆனால் 'நேசதேசங்களின் பலமும் தைரியமும் விருத்தியடைய அடைய ஜப்பானின் பலம் நிச்சயம் முறியும் என்பதற்கு இந்த இரண்டு இடங்களையும் பிடித்ததை அத்தாக்ஷியாக வைத்துக் கொள்ளலாம்!'

வி வி வி வி வி வி வி

**நற்செய்தியும், எச்சரிக்கையும்.** 7, 8 மாதங்களுக்கு முன்னிருந்ததைவிட தற்சமயம் இந்தியாவிற்கு ஜப்பான் படையெடுப்பு பயம் குறைந்து வருகிறது என்று அறிய நாம் சந்தோஷப்படுகிறோம். இவ்விஷயத்தை மேன்மை தங்கிய மதராஸ் கவர்னரும், ரூதர்போர்டும் சொல்லியிருக்கிறார்கள். அதோடு ஜெனரல் வேவலும் சமீபத்தில் சென்னையில் திங்கட்கிழமை சொல்லியுள்ளார். சமீபத்தில் ஸாலமன்ஸ், நியூகினி, வட ஆபிரிக்கா முதலிய இடங்களில் நடந்த சண்டைகளே இதற்கு ஆதாரம். ஜப்பானியக் கடற்படை தென் மேற்குப் பஸிபிக்கில் அடைபட்டிருப்பது காரணமென்று மிஸ்டர் ரூதர்போர்டு சொன்னார்.

தனது சுற்றுப் பிரயாணத்தை முடித்துக்கொண்டு வந்த ஜெனரல் வேவல், ஸிலோன் தாக்கப்பட்டால் தென் இந்தியப்படையே அதை எதிர்க்க வல்லமை உள்ளது என்றார். இந்தியாவிற்கு ஜப்பானியர் வந்தால் சரியானபடி வரவேற்கப்படும் என்றும் சொன்னார். ஆனால் இதைக்கொண்டு நமது முயற்சிகளைத் தளர விடக்கூடாது. ஜப்பானியருக்குச் சங்கட நிலை ஏற்பட்டால் இந்தியா பக்கமும் திரும்பலாம். உதாரணமாக ஸிட்டகாங் தாக்குதலைக் காணலாம். ஆகவே அதற்காக நாம் உஷாராக இருப்பதுதான் சரி.

இதைத்தான் எல்லூரில் பேசும்போது ரூதர்போர்டு குறிப்பிட்டிருக்கிறார்.

'கலகங்களால் ஸ்வதந்திரத்தை அடைய முடியாது. யுத்தம் நடக்கும் தற்சமயத்தில் இவ்வித கலகங்களில் ஈடுபடுவது துரோகமேயாகும். இவைகளைத் தூண்டுவோர் இந்திய ஸ்வதந்திரத்திற்குப் பதிலாக அடிமைத்தனத்தைத்தான் ஏற்படுத்தலாம். உலக சரித்திரத்திலேயே இம்மாதிரி சம்பவங்கள் நடந்ததேயில்லை.

வி வி வி வி வி வி வி

**ஒருமாதம் முன்னால்** டூனிஸில் நேசதேசப் படை மெதுவாக இருப்பதாக நினைப்போர் அமெரிக்க யுத்த மந்திரி மிஸ்டர் ஸ்டிம்ஸன் சொன்னதைக் கேட்கவேண்டும். வட ஆபிரிக்காவில் நேசதேச முன்னேற்றம் ஒரு மாதம் முன்னாடியே ஆரம்பிக்கப்பட்டது. அட்மிரல் டார்லான் பிரெஞ்சுக்காரரின் உதவியைப் பெறும்படி செய்ததும் இன்னும் துரிதமாகவே முன்னேறப்பட்டது. முன்னேறும்போது, போதுமான விமான தளங்களோ போக்குவரத்துச் சாதனங்களோ கிடையாது. அந்த சமயத்தில் அப்படித் துரிதமாக முன்னேறாமல் இருந்தால் டூனிஸில் அச்சு நாட்டினர் பலமடைந்திருப்பார்கள் தற்போதய நிலையில் எதிரியின் போக்கைத் தடுத்து விமான தளங்களைப்போட்டு இதர முஸ்தீப்புகளைச் செய்வதுதான். ஆகவே முதலில் எதிர்பார்த்ததைவிட தற்போது எல்லாம் சாதகமாகவே இருந்துவருகின்றன.

வி வி வி வி வி வி வி

**பழைய நண்பன்.** மெடகாஸ்கரை பிரிடிஷ் படைகள் பிடித்து போர் புரியும் பிரெஞ்சுக் கக்ஷியினிடம் கொடுத்ததைப்பற்றி டிகால் பிரிடனை பழைய நண்பன் என்று சொன்னான். பிரெஞ்சு சாம்ராஜ்யத்தை முன்போல ஸ்தாபிப்பதாகக் கொடுத்த வாக்குறுதிகளைப் பூர்த்தி செய்யவே பிரிடன் இம்மாதிரி நடந்துகொண்டது. மாராகஸ், அகடீர், கஸபிளாங்கா முதலிய இடங்களில் போர் புரியும் பிரெஞ்சுக் கக்ஷியின் படைத்தலைவரான ஜெனரல் காட்ரூவிற்கு விசேஷ மரியாதைகள் வழங்கப்பட்டதாகவும் சொல்லப்படுகிறது. அந்த சந்தர்ப்பத்தில் ஜெனரல் ஜிராட், நோகஸ், மிஷிலியர், பாடன் முதலியோர் இருந்தனர். இதிலிருந்து லவாலுக்கு விரோத



மாக பிரெஞ்சுக் கக்ஷி ஒத்துழைக்கிற விஷயம் தெரிகிறது. டார்லான் சம்பந்தம் இருந்தாலும் இல்லாவிடினும் இவர்களுக்கு லக்ஷியம் ஒன்றுதான். பிரான்ஸிலிருந்து லவால் செய்யும் தடபுடல் மிகக் கேவலமாகக் காணப்படுகிறது. 'நான் பழைய காலத்து லவால் இல்லை. புதிதாகவே இருக்கின்றேன்' என்றான் லவான். உண்மை தான். இவன் தற்சமயம் ஜெர்மனிக்கு அடிமையாகி பிரான்ஸின் சத்துருவாக இருக்கிறான். ஜெர்மனியின் வெற்றியினால்தான் பிரான்ஸ் முன்னேற முடியுமாம், என்ன கேவலமான யோசனை.

வி வி வி வி வி வி வி

**ஜெர்மனியும், பிரான்ஸும்.** 'கடந்த இரண்டு வருஷகாலமாக பிரான்ஸுக்கு தயவு, தாக்ஷிண்யம் காண்பித்து பிரெஞ்சு மக்களுக்கு ஸ்வதந்திரம் கொடுத்ததாக பெர்லினிலிருந்து ஹிந்துஸ்தானி பாஷையில் மிகத் துணிகரமாக ஒலிபரப்பப்பட்டது. ஜெர்மனி செய்த நன்மைகளை கவனிப்போம். பிரான்ஸின் ராணுவத்தையும், தொழிற்சாலைகளையும் கலைத்து, வியவசாய நாடாகச் செய்தது. விளைச்சல்களை ஜெர்மனிக்கு அனுப்பவேண்டும். வேலைக்காரர்களை ஜெர்மன் தொழிற்சாலைகளுக்கு வேலைசெய்ய அனுப்பவேண்டும். 1942-ன் முதல் பாதியில் 3,150 லக்ஷம் பவுன் பிரான்ஸிலிருந்து பிடுங்கப்பட்டது. இது பிரான்ஸிலுள்ள ஜெர்மன் சைனியத்தின் செலவைப்போல் 3 மடங்கும், பிரான்ஸின் வரவு செலவைப்போல் $1\frac{1}{2}$ மடங்கும் ஆகிறது. பிரெஞ்சு ஜனசபை கலைக்கப்பட்டது. பிரெஞ்சு பத்திரிகைகள் தடைப்பட்டன. தலைவர்கள் கைது செய்யப்பட்டனர். கடைசியாக விஷி பிரான்ஸும் ஆக்கிரமிக்கப்பட்டது. டூலான் கப்பற்படை மூழ்கியது. இவ்வளவும் பிரான்ஸுக்கு ஜெர்மனி செய்த நன்மைகளாம்.

வி வி வி வி வி வி வி

**மால்டா.** இருந்திருந்து ரோம் ரேடியோ ஆகஸ்டு மாதத்தில் ஒரு உண்மையை வெளியிட்டது. அதாவது மால்டாவைப் பிடிக்காததால் இதாலிய விமானப்படையின் கௌரவம் குறைந்துவிட்டதாம். லுப்ட்வாபியின் கௌரவமும் போய்விட்டது என்று நாம் சொல்லுவோம். இந்த அவமானம் அப்படைகளுக்கு எப்போதும் இருக்கும். 30 மாதகாலமாக எதிரிப்படைகளைச் சிதைக்கவைத்ததோடு தற்சமயம் மால்டா முன்னேற்றப்போர் செய்யத்தகுந்த தளமாயும் இருந்துவருகிறது. வட ஆபிரிக்காவில் முதல் நேசதேசப்படை இறங்கியதும் மால்டாவிலிருந்த விமானப்படை எதிரியின் 4 கப்பல்களை மூழ்கடித்து 11 கப்பல்களைச் சேதமாக்கின. 40 விமானங்களைச் சேதமாக்கியது. எதிரி நாட்டில் தரையிலேயே இருந்த 82 விமானங்களை நாசமாக்கியது. மால்டாவிலிருந்துகொண்டு பிரிடிஷ் விமானப்படை கிரீஸ் (350 மைல்), நேபிள்ஸ் (350 மைல்), டிரிபாலிடானியா (200 மைல்), ஸிஸிலி (80 மைல்), இவைகளைத் தாக்குகிறது. அங்கிருக்கும் பாம்பர்கள் டூனிஸியா, நேபிள்ஸ், பிரின்டிஸி, கடானியா, ஸிரகூஸ், லிகடா, மர்ஸாலா, பாலர்மோ முதலியவைகளைத் தாக்குகின்றன.

வி வி வி வி வி வி வி

**ஹிட்லர் படுகொலை.** ஹிட்லர் செய்துவரும் கொலை சம்பவத்திற்குச் சமமான சம்பவம் இதுவரை நடந்ததேயில்லை. இட்டமாக யூதர்களைக் கொல்லுவது அதில் ஒரு அம்சமாகும். 1939-ல் போலந்தில் இம்மாதிரி கொலையைச் செய்தான். இதுவரை படையெடுத்த ருஷ்யாவிலும் ஸெக்கோஸ்லாவியா, கிரீஸ், ஸெர்பியா முதலிய இடங்களிலும் இதேவிதமாகப் பலரைக் கொலைசெய்திருக்கிறான். அநேகமாக ஐரோப்பாவில் கொலைகள் நடக்காத இடமேயில்லை யென்று சொல்லலாம்.

டைம்ஸ் பத்திரிகை இதற்கு ஒரு தாத்காலிகமான பரிகாரமாக ஏதாவது செய்யவேண்டுமென்கிறது. அதாவது அந்தந்த நாடுகளில் இருப்போருக்கு வெளியேற உதவலாம். ஆனால் யுத்தம் முடிந்து வெற்றி கிடைத்த பிறகே நிரந்தரமான உதவி கொடுக்கமுடியும். ஆனால் எதிரிகள் செய்துவரும் கொடுமைகளைக்கொண்டு அங்குள்ளவர்கள் யுத்தத்தில் ஈடுபடலாம்.

முடிவில் இக் கொலைகளுக்குக் காரணமாக இருக்கும் யாவருக்கும் நிச்சயம் தண்டனை விதிக்கப்படுமென்று நாம் உறுதி கொடுப்போம்.

வி வி வி வி வி வி வி

**அமெரிக்காவில் சாமான்களின் உற்பத்தி** அபரிமிதமாக இருந்து வருகிறது. அமெரிக்க யுத்த இலாகா அறிவித்த பிரகாரம் 49,000 விமானங்களும், 32,000 டாங்கிகளும், தாழுகச் சுடும் பீரங்கிகளும், 17,000 விமான எதிர்ப்பு பீரங்கிகளும், 82,00,000 டன் வியாபாரக் கப்பல்களும் அமெரிக்காவில் கட்டி முடிக்கப்படும். இந்த யுத்தத்தில் அமெரிக்கா இறங்கியதும் ஜனாதிபதி ரூஸ்வெல்டு போட்ட திட்டத்தோடு இந்தக் கணக்கை ஒப்பிட்டுப் பார்த்தால் விமானத்தில் 11,000 குறையுமே தவிர 2,00,000 டன் கப்பல்கள் அதிகமாக இருக்கிறது. இதற்குக் காரணம் யாதெனில் இவ்வருஷ மத்தியில் பைடர்களைக் கட்டுவதற்குப் பதிலாக வெகுதூரம் செல்லக்கூடிய பாம்பர்கள் கட்டப்பட்டன. இவைகளைக்கட்ட அதிகக் காலம் பிடித்தது. கப்பல் உற்பத்தி வெகு துரிதமாக நடைபெற்றது. 11 மாதங்களில் அமெரிக்க தளங்களில் 68,90,000 டன் எடையில் 625 கப்பல்கள் கட்டப்பட்டன. 1938-ல் உலகம் பூராவும் 30,33,593 டன் கப்பல்கள்தான் கட்டப்பட்டன. 1921 முதல் 1938-ல் தான் அதிகம். பேர்ல் துறைமுகச் சம்பவத்திற்குப் பிறகு புதிதாக 400 லிபர்டி கப்பல்கள் கட்டப்பட்டன. கப்பல் கட்டும் காலமும் 46-லிருந்து 3½ நாட்களுக்குக் குறைந்தது. தினசரி 3½ கப்பல்கள் என்ற திட்டமும் நான்காக மாறும். கப்பல் உற்பத்தி விஷயம் மிக ரகசியமானாலும் அமெரிக்கக் கப்பல் இலாகா தலைவர் அட்மிரல் லேங் கூறியபடி கப்பல்கள் இரட்டிப்பு மடங்காகக் கட்டப்படும். சில நாட்களுக்கு முன் மிதக்க விடப்பட்ட பங்கர்ஹில் என்ற கப்பல் 15 வாரங்களில் கட்டப்பட்டது. மிகப் பெரிய சண்டை கப்பலான நியூ ஜேர்ஸி அதற்கு அடுத்த நாள் மிதக்கவிடப்பட்டது. இது திட்டத்திற்கு 18 மாதம் முன்னதாகவே கட்டி முடிக்கப்பட்டது.

ஜெர்மனி, இதாலி இந்த இரண்டு நாடுகளிலும் சேர்ந்து கட்டப்படும் விமானங்களைக் காட்டிலும் அதிகமாகவே அமெரிக்காவில் கட்டப்படுகின்றன.

1943-க்கு அமெரிக்க திட்டம் பின்வருமாறு:—81,000 விமானங்களும், 53,000 டாங்கிகளும், 29,000 விமான எதிர்ப்பு பீரங்கிகளும். ஐரோப்பியப் போர் முனைக்கு அனுப்பப்பட்ட அமெரிக்கத் துருப்புகளின் உதவி கமான்டரான ஜெனரல் R. P. ஹார்டில் அமெரிக்கா பேரில் ஜெர்மனி யுத்தம் தொடுத்து ஒரு வருஷம் பூர்த்தியடைந்த டிஸம்பர் 11ல் பின் வருமாறு சொன்னார். நமது பெரிய நேசநாடுகளுடன் பொது விரோதியை எதிர்த்துச் செல்லுகிறோம். நம்முடைய ஒவ்வொரு அடிவைப்பும் ஹிட்லரின் முடிவான அழிவைத் தெரிவிக்கிறது. கடந்த 12 மாதங்களில் அமெரிக்காவில் வெள்ளக்கணக்கில் கப்பல்களும், விமானங்களும் டாங்கிகளும். பீரங்களும் கட்டப்பட்டன. இவைகளைக்கொண்டு நாம் எதிரியைத் தாக்குகிறோம். நேசநாடுகள் தனக்கு எதிரில் ஒன்று சேர்ப்பது பற்றி ஹிட்லர் கவலைப்படுகிறான் என்பதைத் தெரிந்து நாம் ஆச்வாஸம் கொள்ளுவோம். தன்னையும், திக்கற்ற தனது ஜனங்களையும் ஹிட்லர் இவ்வித கஷ்டத்திற்கு உள்ளாக்கியிருக்கிறான்!

வி வி வி வி வி வி வி

**ருஷ்யாவுக்கு நேர்நேர உதவி.** பொய் பிரசாரத்தை செய்துவரும் ரோம் ரேடியோவில் 'ஆங்கிலேயரும் அமெரிக்கரும் அதிகமான வாக்குறுதிகளைக் கொடுத்தாலும் ருஷ்யாவிற்கு பேருக்குத்தான் உதவியனுப்பியிருக்கின்றனர்' என்று சொல்லப்பட்டது. ஆனால் பிரிடனிலிருந்தும், அமெரிக்காவிலிருந்தும் கடந்த 12 மாதங்களாக ஆர்டிக் மார்க்கமாக மட்டில் அனுப்பப்பட்ட சாமான்களின் விவரம் பின்வருமாறு:—

விமானங்கள் 3,052; டாங்கிகள் 4,084; மோட்டார் வண்டிகள் 30,031; விமான எண்ணெய், பெட்ரோல் எண்ணெய் 52,000 டன்கள், இன்ஜின் எண்ணெய் 66,000 டன்கள், யந்திர சாமான்களும் உலோகங்களும் 8,31,000 டன்கள்.



**பர்மா திரும்பப் பிடிக்கப்படும்.** பர்மாவைத் திரும்பப் பிடிக்கும் யோசனை இருந்துவருவதாக முன்பு ஜெனரல் வேவல் சொன்னதையே பிரதம மந்திரியும் இந்தியத் துருப்புகளுக்கு சென்ற வாரம் அனுப்பிய செய்தியில் கூறியிருக்கிறார். அச்செய்தியில் அவர் சொன்னதாவது, அமைதி நிலவியிருந்த நாடுகளை எதிரி பிடித்திருக்கிறான். அங்கிருந்து அவனை விரட்ட யாவரும் ஓயாது முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும். ஜெனரல் வேவல் மறுபடியும் கூறியதாவது. 'பர்மாவில் நாம் அடைந்த தோல்வி பழி வாங்கப்படும். அதற்கான சமயத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன்' என்றார். இதற்காக நடந்துவரும் பெரும் முயற்சிகளையும் நாம் கண்டுவருகிறோம். 'இந்தியர், பிரிடிஷ், அமெரிக்கர், சீனர், பர்மியர், நேபாளர், ஆபிரிக்கர், லங்கையர் யாவரும் ஒன்றுசேர்ந்த படை இந்தியாவில் இருந்துவருகிறது. 'கொடுமை, ஆக்கிரமணம் முதலியவைகளை அடக்குவதற்கு உலகம் முற்பட்டு வருகிறதென்பதற்கு இதுவே அத்தாக்ஷியாகும்' என்று பிரதம மந்திரி சொல்லியுள்ளார். நேசதேசப்படைகள் பர்மாவில் வேவு பார்த்தும் வருகின்றன. காட்டுச்சண்டைகளில் பயிற்சி பெற்றும் இருக்கின்றனர்.

ஆனால் ஜப்பான் என்ன செய்துகொண்டிருக்கிறதென்று பார்ப்போம். சென்ற வருஷம் ஸால்வீனைக் கடக்க முடியாததால் இவ்வருஷம் அதைக்கடந்து குன்மிங்கைத் தாக்கலாம். ஏனென்றால் தற்சமயம் இந்தியாவிற்கும் சைனாவிற்கும் இடையில் போக்குவரத்திற்கு லாயக்காக இருப்பது இது ஒன்றுதான். இதற்காக பர்மா—யூனான் மாகாணத்தில் 7 டிவிஷன் படைகளைச் சேமித்து வைத்திருப்பதாயும் அதற்காக ரப்பர் படகுகள் முதலிய சாதனங்களைக் கொண்டிருப்பதாயும் சொல்லப்படுகிறது.

வி வி வி வி வி வி வி

**ஸத்துள்ள உணவு.** யுத்த காலத்தில் பலவித ஜோலிகளை கவனிக்க வேண்டியிருந்தும் பிரிடன் பொதுஜனங்களின் நன்மையையும் கவனித்துவருகிறது. யுத்தத்திற்கு முன்பு பொது ஜனங்களின் ஆரோக்யத்தை பிரிடிஷ் வைத்திய சங்கம் கவனித்துவந்தது. தற்சமயத்தில் உணவு இலாகாதான் அதைக் கவனித்துவருகிறது. ரஸாயன சாஸ்திர முறைப்படி எது சரீரத்திற்கு ஹிதத்தையும் பலத்தையும் தரக்கூடியது என்பதை ஆலோசித்து, வருங்காலத்தில் ஜனங்கள், ஆரோக்யத்துடன் வசிக்கக் கூடிய விதமாக உணவைப் பிரித்து யாவருக்கும் கொடுத்துவருகிறது. முதலாவதாக குழந்தைகளே கவனிக்கப்படுகின்றனர். உள்நாட்டில் கிடைக்கும் பூரா சாமான்களையும், வெளிநாடுகளிலிருந்து வருகிறதில் .90 சதவிகிதத்தையும் உணவு இலாகா வாங்கிக்கொண்டு பிறகு ஜனங்களுக்குப் பிரித்து தருகிறது. ஆரஞ்சு முதலிய பழங்களைக் காட்டிலும் ஆரஞ்சு பழ ரஸமே விரும்பப்படுகிறது. ஏனென்றால் பழங்களைக் கொண்டுவருவதைக் காட்டிலும், ரஸத்தை அதிகமாக கப்பல்களில் கொண்டுவரலாம். மேலும் அதுதான் அதிக நன்மையைச் செய்யக் கூடியது. இவ்விஷயத்தில் நிபுணர்களடங்கிய கமிட்டி உணவு இலாகா மந்திரிக்கு தாராதரத்தை எடுத்துப்போதிக்கிறது. 1940 ஜூன் முதல் லார்டு ஹாரடன் என்ற வைத்தியர் நியமிக்கப்பட்டிருக்கிறார். அதிக மஸ்தான பதார்த்தங்கள் எது என்று நிர்த்தாரணம் செய்யப்பட்ட பிறகே ஜனங்களுக்கு எடுத்துச்சொல்லப்படும். இயற்கை உணவுகளான காய்கறி, காட்லீவர், கோதுமை மாவு முதலியவைகளே கொடுக்கப்படுகின்றன. இவைகளுடன் போஷிச்சரக்குகள் சேராமல் கவனிக்கப்படுகிறது. மாமிசமும், பாலும் நேராடி உணவு இலாகாவால் பிரித்துக் கொடுக்கப்படுகிறது. போக்குவரத்துச் சிரமங்களை குறைப்பதற்காக உற்பத்தி பிரதேசங்களைச் சுற்றிலும், இறக்குமதி துறைமுகங்களிலுமே முதலில் விநியோகம் செய்யப்படும். அவரவர்களுக்குத் தேவையானபடி பண்டங்களையும் வாங்கிக்கொள்ளலாம். அதிக மஸ்தான பதார்த்தங்கள்தான் இறக்குமதி செய்யப்படுகிறது. 86 சதவிகிதம் குழந்தைகளுக்குப்பால் இந்த இலாகா மூலமாகவே கொடுக்கப்படுகிறது. அதில் 26 சதவிகிதம் இனாமாகக் கொடுக்கப்படுகிறது. இரண்டு வயதுக்குள்ளிருக்கும் குழந்தைகளுக்கு பழ ரஸமும், காட்லீவர் எண்ணெயும் இனாமாகக் கொடுக்கப்படுகிறது. 30 லக்ஷம் பையன்களும் பெண்களும்

பள்ளிக்கூடத்தில் பால் பெறுகிறார்கள். பெரிய தொழிற்சாலையில் வேலை செய்கிறவர்களும், நொண்டி, முடங்களும், நர்ஸ்களும், மாமிச ஆகாரம் சாப்பிடாதவர்களும் முதலில் கவனிக்கப்படுவார்கள். இதைத்தவிர விசேஷ முகாம்களும் ஏற்பட்டிருக்கின்றன. படிப்பும், உணவும் முக்கியமாக கவனிக்கப்படுவதால் வருங்காலம் நன்றாக கவனிக்கப்படுகிறதென்று லார்டு வூல்டன் சொன்னது மிகையாகாது.

'இதில் ஒரு விஷயம் மாத்திரம் நிச்சயம். நேசநாடுகளின் ஒத்துழைப்பினால் வருங்காலத்திற்குவேண்டிய கவனம் செலுத்தப்படும்' என்றும் அவர் சொன்னார். அதை ஸர் வில்லியம்ஜோவிட் விவரிக்கும்போது உலகத்தில் யாவரின் வாழ்க்கையையும் உயர்த்தவேண்டும். அதற்காக உணவு முதலில் கவனிக்கப்படும். இதற்காக பிரிடன், அமெரிக்கா போன்ற நாடுகளின் உணவுகள் சேகரிக்கப்படும். அட்லாண்டிக் சாஸனத்தில் இதுவும் ஒரு அம்சமாகும்.

வி வி வி வி வி வி வி

**விமான பரிபாஷைகள்.** விமான யுத்தத்தில் புழங்கப்படும் சில பரிபாஷைகளைச் சொல்லுவோம். மின்னல் படையெடுப்பு நேர்ந்தால் குழந்தைகள் வாக்கீஸ் (Vackeis) அதாவது இதர நாடுகளுக்கு அனுப்பப்படுகிறார்கள். வாலிபர்கள் வாடுகிறார்கள் (browned). அந்தச் சமயத்தில் படையெடுப்பு எச்சரிக்கை ஊதும் சங்கு சப்தத்தை மோனு அல்லது (wailing winnie) என்பார்கள். க்ளாரா (clara) என்பது படையெடுப்பு பயம் நீங்கியது என்ற சங்கு சப்தம் செய்கிறவன் இரவில் எதிரி விமானங்களைக் கண்டுபிடிக்கும் விளக்கு வெளிச்சத்தை வாணங்கள் (Fire-works) என்றும், எதிரி விமானத்தை ஜெர்ரி (jerry), பலூனை எலிப்பொறி (rat-trap) என்றும், விமான எதிர்ப்பு பீரங்கியைப் பறக்கும் யானை என்றும் (flying-elephant), விமான குண்டுகளைப் பறக்கும் பன்றிகளென்றும் (flying pigs), ஜெர்மன் விமானங்கள் குண்டு வீசுவதை முட்டையிடுவதென்றும் (laying eggs), படையெடுப்புச் செய்துதிரும்பும் பிரிடிஷ் விமானப் படையை, அறிமுகச் சீட்டுக் கொடுத்துவிட்டு வருவதாயும் (leaves visiting cards) சொல்லப்படுகிறது. எர்க் (erk) என்பது விமானஇன்ஜினியரையும், ஆப் (op) என்பது ஆபரேடரையும், வோம் (Wom) என்பது ரேடியோ ஆபரேடரையும், ஸ்னூப்ஸ் (snoops) என்பது ஸர்வீஸ் போலீஸ் ஆட்களையும், குறிக்கும். கு (cumulus) மேகசஞ்சாரத்தையும், மக் (dirty weather) கெடுதலான சீதோஷ்ணத்தையும் தெரிவிக்கும். வானசாஸ்திரிக்கு (Mets) மெட்ஸ் என்று பெயர். ஸ்பிட்ஸ் (Spit fires), ஹரீஸ் (Hurricanes), லிஸ்ஸி (Lysander), மாகி (Mies Magister), விம்பி (Wellington) என்ற பல விமானங்களுக்கு பெயர். ஹி, மி, You, முதலியவை ஹீங்கல், மெஸ்ஸர்ஷ்மிட், யூங்கர் என்ற விமானங்களுக்குப் பெயர்.

---

## எதிரி பலம் இழந்து வருகிறான்.

(அமெரிக்கப் போர் விமானப்படைத் தலைவர் ஜெனரல் ஹென்ரி ஆர்னால்டு).

ராண்டால்ப் பீல்டு டிஸம்பர், 13.

நமது விமானப்படையைச் சேர்ந்த பாம்பர்களும் பைடர்களும் செல்லும் தூரம், வேகம், தாக்கும் சக்தி, குண்டுகளை ஏற்றிச்செல்லுவது இவைகளில் அபிவிருத்தியடைந்து வருகின்றன. இவைகளைக்கொண்டு எதிரிகள் பலமாகத் தாக்கப்பட்டு வருகிறார்கள்.

இதைத் தவிர ரகசியமான ஆயுதங்களும் தயாராகி வருகின்றன. இவைகளைக் கொண்டும் நாம் எதிரிகளைத் தாக்கும்போது அவர்களுக்கு மனம் கசப்பாகத் தானிருக்கும்.

இவ்வருஷம் பிப்ரவரி 1முதல் டிஸம்பர் 5வ வரை நடந்த சண்டைகளில் அமெரிக்கப் போர் விமானங்கள் 928 அச்சுநாட்டு விமானங்களைச் சுட்டுத்தள்ளின. 276 விமானங்கள் அநேகமாகச் சேதப்பட்டிருக்கும். அமெரிக்காவிற்கு 130 விமா



னங்கள் சேத மடைந்தன. 104 விமானங்கள் திரும்பி வரவில்லை. ஆகவே எதிரிக்கு நேர்ந்த நஷ்டத்தில் நாலில் ஒரு பங்குதான் நமக்குச் சேதமேற்பட்டிருக்கிறது.

### உற்பத்தி அதிகரிக்கிறது.

இன்றுவரை ஜெர்மனி பேரில் 1,063 தடவை பறந்து 293 ஜெர்மன் விமானங்கள் அழிக்கப்பட்டன. விமானங்கள் அநேகமாகச் சேதமடைந்திருக்கும்.

ஜெர்மன், ஜப்பானிய விமானப் படைகளின் பலம் குறைந்து வருகிறது. நாம் தற்சமயம்தான் விமான உற்பத்தியிலும், மாலுமிகளைத் தயார் செய்வதிலும் உச்ச நிலையை அடைந்து வருகிறோம். அமெரிக்க விமான உற்பத்தியானது ஜெர்மனி, ஜப்பான் இரண்டும் சேர்ந்து உற்பத்தி செய்வதைக் காட்டிலும் அதிகமாக இருக்கிறது.

அமெரிக்கப் போர் விமானப்படை எதிரியின் 51 கப்பல்களை மூழ்கடித்து விட்டன. 21 கப்பல்கள் அநேகமாக மூழ்கடிக்கப்பட்டிருக்கும். 155 கப்பல்களும் சேதமாக்கப்பட்டிருக்கும்.

அமெரிக்க பாம்பர்களும், பைடர்களும் 8 போர் அரங்கங்களில் ஈடுபட்டு வருகின்றன. தினமும் பலமடைந்து வருகின்றன. இன்னும் சில மாதங்களில் தினமும் இவ்விமானங்கள் குண்டு போடுவதை ஜெர்மானியரும், இதாலியரும் தாங்க முடியாது போய்விடும்.

அவர்களுடைய நீர்மூழ்கித் தளங்களையும், நீர்மூழ்கிகளையும், போக்குவரத்துகளையும், தொழிற்சாலைகளையும், யுத்த சாமான்களையும், விமானம், டாங்கி செய்யப்படும் தொழிற்சாலைகளையும் தாக்குவோம். இனித்தான் இந்த யுத்தம் என்னவென்பதை எதிரிகள் உணருவார்கள்.

---

## பிரிடன் செய்தது என்ன?

(இந்தியன் நியூஸ் லெட்டர் என்ற பத்திரிகையிலிருந்து எடுத்தது.)

நியூ யார்க்கில் வெளிவரும் லிபர்டி (Liberty) என்ற பத்திரிகையில் பிரிடிஷ்காரர்கள் யுத்தத்திற்காக இதுவரை என்ன முயற்சிகள் எடுத்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதையும், இப்பொழுது என்ன செய்துகொண்டிருக்கிறார்கள் என்பதையும் பற்றி வால்டர் கேரிக் ஒரு வியாசம் எழுதியுள்ளார். அவர்கள் இதுவரை பெருத்த முயற்சிகள் எடுத்துக்கொள்ளாவிடில் ஹிட்லர் இப்பொழுது இங்கிலாந்தைக் கைப்பற்றியிருப்பான். மேலும் அவன் கனடாவில் இருந்துகொண்டு யுனைடெட் ஸ்டேட்ஸை படையெடுப்பதற்கு தன் சைனியங்களுக்கு உற்சாக மூட்டிக் கொண்டுமிருப்பான். இந்த இரண்டு வருஷங்களுக்கு மேலாகவே நாஜிகள் இங்கிலாந்திற்கு 18 மைல் தூரத்தில் இருந்துகொண்டு அதை சதா காலமும் வெடிகுண்டுகள் போட்டு தாக்கி வந்திருக்கிறார்கள். இவ்விஷயம் நமக்கு நன்றாகத் தெரிந்ததுதான். இந்த யுத்த காலத்தில் நாம் பிரிடனுடன் கூட்டாளியாக இருந்து ஒத்துழைக்கிறோம். வரப்போகும் சமாதானத்திலும் நாம் கூட்டாளியாக இருப்போம். ஆதலால் இதுவரை பிரிடன் செய்ததைப்பற்றியும் இப்பொழுது செய்து வருகிறதைப்பற்றியும் நாம் ஒவ்வொருவரும் தெரிந்துகொள்ள வேண்டியது அவசியம். இப்பொழுதுதான் எல்லா நாடுகளும் போரில் ஈடுபட்டிருக்கின்றன. இந்த யுத்தத்தில் வெற்றியடைவதற்கு பிரிடனில் எல்லாவித பொருள்களும் சேகரிக்கப்படுகின்றன. மேலும் யுத்த சேவைக்காக அங்கு அநேகர் திரட்டப்படுகிறார்கள். மூன்று பேர்களுக்குஇரண்டு பேர்கள் வீதம் புருஷர்கள் மாத்திரம் அல்ல ஸ்திரீகளும், குழந்தைகளும்கூட, அதாவது திட சரீரமுள்ள 14 முதல் 65 வயது வரையுள்ள பேர்கள் நாள் முழுவதும் போர் படையிலும்,

பொதுஜனப் பாதுகாப்பிலும், யுத்தக் கைத்தொழிலிலும் வேலை பார்த்து வருகிறார்கள். 18½ வயது முதல் 51 வயது வரை திட சரீரமுள்ள புருஷர்கள் போர்ப் படையில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். ஆனால் முக்கியமான கைத்தொழில்களுக்கு வாலிபர்கள் தேவையானால் அவர்களைப் படைக்குச் சேர்க்கப்படுவதில்லை. மேலும் 70 லக்ஷம் பிரிடிஷ் ஸ்திரீகளையும் வேலைக்குச் சேர்த்துக் கொள்ளுவதாக பதிவு செய்யப்பட்டிருக்கிறது. 20 வயது முதல் 30 வயது வரையுள்ள விவாகமாகாத ஸ்திரீகளை தரைப்படை, கப்பற்படை, விமானப்படை இவைகளுக்கு உதவியாக ஏற்பட்டிருக்கும் படைகளில் வேலை செய்ய அனுப்பப்பட்டிருக்கிறார்கள். ஏற்கனவே யுத்த தளவாட உற்பத்திசாலைகளில் 55,00,000 பேர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். கோடிக்கணக்கான குடித்தன ஸ்திரீகள் ஒழிந்த வேலையில் யுத்த சாமான்களைச் செய்து வருகிறார்கள். இதைத் தவிர நடக்க சக்தியுள்ள ஒவ்வொருவனும், விமானத் தாக்குதல் காலங்களில் ஏதாவது ஒரு வேலை பார்க்கப் பயிற்சியளிக்கப்படுகிறான். இப்பொழுது 15,00,000 பேர்கள் ஸிவில் பாதுகாப்பு வேலையிலும், 44,00,000 பேர்கள் நெருப்பணைப்பு கோஷ்டிகளிலும், 20,00,000 பேர்கள் எதிரிகள் படையெடுப்பைத் தடுக்க உள் நாட்டுப் பாதுகாப்பு வேலையிலும் அமர்ந்திருக்கிறார்கள். இவர்கள் யாவரும் பொதுஜன சேவகர்கள். பகல் காலத்தில் யந்திர சாலையிலோ, சுரங்கங்களிலோ, வயல்களிலோ அன்றாடம் தங்கள் வேலையைச் செய்துவிட்டு, பாக்கி அவகாசத்தில் மேற்சொல்லிய அலுவல்களைச் செய்கிறார்கள். யுத்த காரியமாக வேலை பார்த்து வரும் 65,00,000 பேர்கள் தங்கள் வேலையை விட்டுவிட்டுப் போகவும் முடியாது. ஸர்க்கார் அனுமதியன்னியில் அவர்களை வேலையிலிருந்து நீக்கவும் முடியாது. அங்கு முன்பு ஏற்பட்ட விமானத் தாக்குதல்கள் ஏற்பட்டதின் பயனாக ஐந்து வீடுகளுக்கு ஒரு வீடு வீதம் அநேக வீடுகள் அழிக்கப்பட்டிருக்கின்றன. 44,000 பொது மக்களுக்கு மேல் கொல்லப்பட்டிருக்கின்றனர்.

### ருஷ்யர்களுக்கு உதவி.

போர் அரங்கத்தில் ஏற்படும் சிரமங்களுக்கு ஏற்றவாறு பிரிடிஷ்காரர்கள் என்னதான் செய்கிறார்கள் என்று கவனிப்போம். சென்ற வருஷத்தில் பிரிடனுக்கு 2,500 விமானங்கள் அனுப்பப்பட்டது. பிரிடன் நேசதேச யுத்தப் போர் முனைகளுக்கு 9,781 விமானங்களை அனுப்பியது. 200 டாங்கிகள் பிரிடனுக்கு அனுப்பினதற்கு அவர்கள் 3,000 டாங்கிகள் வரை பல போர்முனைகளுக்கு அனுப்பியிருக்கிறார்கள். சென்ற வருஷத்தைக் காட்டிலும் இந்த வருஷத்தில் நாம் அதிகமாக உதவி செய்கிறோம். இனிமேல்தான் நாம் மிகவும் அதிகமாக உதவி செய்யவேண்டி வரும். பிரிடிஷாரும் இப்படித்தான் பிறருக்கு உதவ வேண்டும். சென்ற 12 மாத காலத்தில் பிரிடனின் விமான உற்பத்தி இரட்டித்து விட்டது. உடைகளைத் திட்டப்படுத்தியிருப்பதில் சாதாரணமாக ஒவ்வொரு பிரிடிஷாரும் ஒரு ஜோடி பூட்ஸ்களை இரண்டு அல்லது மூன்று வருஷங்களுக்குக் குறையாமல் வைத்துக்கொள்ளவேண்டும். இம்மாதிரி ஏற்பாட்டிற்குக் காரணம் பிரிடன் ருஷ்யாவிற்கு 40,00,000 ஜோடிகளை அனுப்பி உதவி செய்திருப்பதுதான். யுனைடெட் ஸ்டேட்ஸிலிருந்து இங்கிலாந்திற்கு ஏற்றுமதியாகியிருக்கும் ஒவ்வொரு விமானத்துக்கும் பிரிடனில் தயாரிக்கப்படும் 4 விமானங்கள் வீதம் ருஷ்யாவிற்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. 8 மாதங்களில் செஞ்சேனைக்கு 2,000 டாங்கிகளை பிரிடன் அனுப்பியிருக்கிறது. பிரிடனிலிருந்தும், அமெரிக்காவிலிருந்தும் வரும் ஸப்ளைகளைப் பர்ஸியன் குடாக்கடலிலிருந்து காகஸஸுக்கு அனுப்புவதற்கு பர்ஸியா வழியாகப் போடப்பட்டிருக்கும் இருப்புப்பாதை மூலமாகத்தான் கொண்டு செல்லவேண்டும். இந்த இருப்புப்பாதையைப் போட்டது அமெரிக்க இஞ்ஜினியர்கள். சாமான்களை ஏற்றிச் செல்வதற்குத் தேவையான 1,000 சாமான் வண்டிகளை ஒரு வருஷ காலத்தில் செய்யவேண்டிய வேலையை பிரிடிஷ் ரயில்வே தொழிலாளிகள் 10 மாதங்களுக்குள் செய்து முடித்தனர். இம்மாதிரி ஏற்றிச் செல்வதற்கு அனுகூலமாக பர்ஸியன் குடாக்கடலில் பிரிடிஷார் ஒரு யந்திரசாலை கட்டியிருக்கிறார்கள். அதில் பிரதிமாதமும் 200 பெரிய வண்டிகள் தயாரிக்கப்படுகின்றன. அவற்றைக்கொண்டு ஸோவியத் துருப்புகளுக்கு ஸப்ளைகள் முழுவதும் கொண்டுசெல்லப்படுகிறது. இவற்றையெல்லாம் காட்டிலும் மேலாக பிரிடன் 20,00,000 பேர்களடங்கிய தரைப்படையை வைத்து பரி



பாலித்து வருகிறது. மேலும் பிரிடனிலிருக்கும் ஸ்வதந்திர பிரெஞ்சு அரசாங்கம் நார்வே அரசாங்கம், போலந்து அரசாங்கம், நெதர்லாந்து அரசாங்கம் இவைகளின் ராணுவப்படை, கப்பற்படைப் பகுதிகளுக்கு ஆயுத முஸ்தீப்பு கொடுத்தும், அவர்களுக்கு நேரிடும் செலவையும் செய்து வருகிறது. பிரிடிஷ் கப்பற்படை எடுத்து வரும் நடவடிக்கைகள் சாமானியமானவை அல்ல.

---

## அச்சுநாட்டுப் பிரசாரம்.

யுத்த தந்திரத்தைக் கவனித்து வருகிறவர்களுக்கும் எதிரி பிரசாரத்தைக் கவனித்து வருகிறவர்களுக்கும் நவம்பர் மாதம் ஒரு முக்கியமான மாதமாகவே காணப்படும். இந்த மூன்று வருஷ காலமாகத் தங்களுக்கு வெற்றிகிடைத்த சந்தர்ப்பங்களில் கோயபெல்ஸ் நடத்திவந்த பிரசாரம் எத்தகையதென்று நமக்குத் தெரியும். ஆனால் தோல்வி ஏற்பட்டுவரும் தற்சமயத்தில் அப்பிரசாரம் எப்படி நடைபெறுகிறதென்று கவனிப்போம். ஒன்று மாத்திரம் நிச்சயம். வட ஆபிரிக்காவில் நேசதேசத்தாக்குதல் ஆரம்பமாகுமென்றும், பிரிடிஷ் 8-ம் படை ரோமலை விரட்டியடிக்குமென்றும், நேசதேசப் படைகள் பிரெஞ்சு ஆபிரிக்காவில் இறங்குமென்றும், இவைகளின் பயனாக ஐரோப்பாவிற்குத் தெற்கே படைகளைத் திரட்டும் அவசியமேற்படுமென்றும் எதிரிகள் எதிர்பார்க்கவேயில்லை. இவ்வித திடீர் சம்பவங்கள் நேருமென்றும் எதிரிப் பிரசாரங்களும் எதிர் பார்க்கவில்லை.

### தோல்விகள் மறுக்கப்படுகின்றன.

தங்களுக்குத் தோல்வி ஏற்பட்டுவருவதை எதிரிகள் முழுப்போடாக மறுக்கின்றனர். ஏன் அவர்கள் இவ்விதம் செய்கிறார்கள் என்பதற்கு காரிய காரணங்களுடன் சென்ற வாரமே எடுத்துச் சொல்லப்பட்டது. அதற்குப் பிற்பட்டு பல சம்பவங்கள் நிகழ்ந்திருக்கின்றன. இவைகள் ஜெர்மனிக்குப் பாதகமாக ஆகிவிட்டதால் ஒன்றுமே நடக்கவில்லை என்றும் சொல்ல முடியவில்லை. மேலும் பல சிறிய சம்பவங்களை ஒன்றுசேர்த்து, தோல்வி என்ற பெயரில்லாமல் மழுப்பியும் வருகின்றனர். செப்படுவித்தைக்காரன் ஒரு கையைப் பிரமாதமாக ஆட்டிக் கொண்டு அதை நாம் கவனித்துக் கொண்டிருக்கும்போது மற்றொரு கையால் விஷயத்தை ஏமாற்றி வருவதுபோல் நாஸிகளும் ஆடம்பரங்களால் சில விஷயங்களைச் சொல்லி உண்மையை மறைத்துக் காட்டுகின்றனர். உதாரணமாக யூ படகுத் தாக்குதலைப்பற்றி பிரமாதமாகப் பிரசாரம் நடத்துகிறார்கள். இந்த சந்தர்ப்பத்தில் ஜனங்கள் வட ஆபிரிக்காவில் நேசநாடுகளின் முன்னேற்றத்தைப் பற்றி கவனிக்கமாட்டார்கள் என்பது நாஸிகளின் கருத்து.

ஆகவே தங்களுக்குத் தோல்வி கிடைக்கும் சந்தர்ப்பங்களில் எல்லாம் யூ படகுச் சண்டையைப்பற்றித்தான் பிரஸ்தாபிப்பார்கள். தங்களுடைய வார்த்தைகளை நிறைவேற்ற முடியாத சந்தர்ப்பங்களிலும், தோல்வி கிடைக்கும்போது விசேஷச் செய்திகள் ஒலி பரப்பப்படுமென்பார்கள். அதாவது யூ படகுத் தாக்குதலைத் தான் பிரஸ்தாபிப்பார்கள். ஆகவே ஜெர்மன் செய்திகளைக் கேட்போர் இந்தத் தந்திரத்தை நன்றாகத் தெரிந்துகொள்ள வேண்டும்.

இம்மாதிரி சென்ற வாரத்தில் அவ்வித விசேஷச் செய்திகள் எதிரி நிலயங்களிலிருந்து அதிகமாக ஒலிபரப்பப்பட்டன. ரோமல் அதிகம் பின்வாங்கி நேசப்படைகளும் பைஸர்டாவை நோக்கி முன்னேறியபோது யூ படகைப்பற்றி அடிக்கடி ஒலிபரப்பினார்கள். ஜெர்மனியின் உள்நாட்டிற்குச் செய்யப்பட்ட ஒலிபரப்புகளில் இன்னும் அதிக தடபுடல் காணப்பட்டது. கடந்த சனிக்கிழமை

யூ படகுகளால் மூழ்கடிக்கப்பட்ட கப்பல்களைப்பற்றி பிரத்யேகமாகவும் ஒலி பரப்பப்பட்டது. இதுபோலத்தான் அயல்நாடுகளுக்குச் செய்யப்படும் ஒலி பரப்புகளும். ஒரு விஷயம் மாத்திரம் நிச்சயம். ஏராளமாகப் படைகளை, ஆபிரிக்காவில் இறக்கியதுபோல் கொண்டுவரும் சந்தர்ப்பங்களில் நேசதேசக் கப்பல்களுக்கு நஷ்டம் ஏற்படுவது சகஜமானாலும், கேட்போர் இதை மாத்திரம் கேட்டுவிட்டு வட ஆபிரிக்காவில் நேர்ந்த ஜெர்மன் நஷ்டங்களைக் கேட்காமல் இருக்கமாட்டார்கள். இவ்விஷயம் நாஸிப் பிரசாரகர்களுக்குத் தெரிவதில்லை.

### உண்மை சம்பவங்களே ருஜுவாகின்றன.

இந்த நாஸி தந்திரம் ஒரு சமயம் பலித்திருக்கலாம். யூ படகு சண்டை என்பது பொய் பிரசாரத்திற்கு சாதகமாகக் காணப்படுகின்றன. அதைக் கேட்கும்போது மற்ற விஷயங்கள் கவனத்திற்கு வராமல் இருந்தாலும், உண்மை நடப்புகளைப் பின்னால் தெரிந்துகொண்டதும் நாஸிகள் சொன்னது பொய் என்று தெரிந்துவிடும். ஆபிரிக்கச் சண்டையின்போது நாஸிகள் சொன்ன விஷயங்களைக் கவனித்தால் நாஸிகள் இவ்வளவுகாலம் சொல்லிவந்த பொய் வதந்திகள் தெரிய வரும். ஜெர்மனியில் உள்ளோரும், வெளிநாடுகளில் உள்ளோரும் பின்கண்ட கேள்வியைக் கேட்பதாக வைத்துக்கொள்ளுவோம். அதாவது இந்த மூன்று வருஷகாலமாக நாஸிகள் மூழ்கடித்ததாகச் சொல்லும் நேசநாடுகளுக்குச் சொந்தமான கப்பல்களின் கணக்கு உண்மையாயிருக்கும் பக்ஷத்தில் ஆபிரிக்காவில் இவ்வளவு துருப்புகளை இவ்வளவு கப்பல்களில் எவ்விதம் கொண்டுவந்திருக்க முடியும். ஆகவே நாஸிகளின் பிரசாரம் பொய்யென்று தீர்மானித்து ஆபிரிக்கச் சம்பவங்களை யாவரும் கவனிக்கத் தொடங்குவார்கள்.

### நேசதேச வெற்றிகள் குறைத்துக் கூறப்படுகின்றன.

ஆகவே நாஸிப்பிரசாரம் இதற்கேற்றவாறு தற்சமயம் நடத்தப்படுகின்றது. 'ஐரோப்பா பக்கம் நேசநாடுகள் வரமுடியாதபடி செய்யப்பட்டது' என்று ஜெர்மன் ரேடியோவில் ஞாயிற்றுக்கிழமை சொல்லப்பட்டது. அடிக்கடி நாஸி ஒலிபரப்புகளில், ஐரோப்பாவின் தெற்குப்பக்கம் பலப்படுத்தப்பட்டதென்றும், 'ஐரோப்பா என்ற கோட்டை தெற்குப் பக்கத்திலும் எதிரித் தாக்குதலுக்குட்படாமல் செய்யப்பட்டதென்றும் சொல்லுகிறார்கள். இதிலிருந்து தெற்கு பாகம் பலக்குறைவானதென்று மாத்திரம் தெரிகிறது. ஆனால் நாஸிகளோ 'அது பலக்குறைவாக இல்லை. எவ்வித தாக்குதலையும் சமாளிக்கக்கூடியதாக இருக்கிறதென்று' சொல்லி வருகிறார்கள். அதாவது வட ஆபிரிக்காவில் பூராவாக நேசநாடுகள் பலம் பெற்றாலும் ஐரோப்பாவினுள் அவர்களால் வரமுடியாது. அச்சுநாட்டுப்பலம் தளரவில்லை, என்று சொல்லுகிறார்கள். இதுதான் அச்சு நாட்டுப் பிரசாரத்தின் திட்டம். அதாவது ஓரிடத்தை நேசநாடுகள் பிடித்துக் கொண்டாலும் தங்களுக்கு ஆபத்தில்லை என்று சொல்லிக்கொள்ளுவது.

### பழைய தந்திரங்கள்.

ஆனால் இவ்விதமாகப் பிரசாரத்தை நடத்த அவர்களுக்கு ஒரு சாமர்த்தியம் வேண்டியதுதான். ஆனால் ருஷ்யா முதலிய இடங்களில் சண்டை செய்யும் சிரமத்தைக் காட்டிலும் இவ்வித பிரசாரத்தில்தான் அதிக கவனத்தைச் செலுத்துகிறார்கள். இவ்விதம் எவ்வளவுகாலம் சமாளிக்கமுடியும். ஆரம்பத்தில் தங்களுக்குக் கிடைக்கும் வெற்றிகளை ஆதாரமாகக்கொண்டு ஜனங்களை ஏமாற்றுவதுதான். ஏன் தங்களுக்கு நீடித்து வெற்றி கிட்டவில்லை என்பதை அதிகம் விவரிக்கமாட்டார்கள். ஆகவே அவர்களது பிரசாரத்தைக் கேட்கும்போது அதன் கருத்தை நாம் ஆராய்ந்து பார்ப்பது நலம். செப்பிடு வித்தைக்காரனுக்குத் தினம் ஒரேவிதமான கூட்டத்தை ஏமாற்றுவது ஆபத்துத்தான். திருடனுக்கும் ஒருவனையே கொள்ளையிடுவதும் கஷ்டம்தான். ஆகவே ஜெர்மன் பிரசாரம் முறியும்காலம் சீக்கிரமாகவே வந்துவிடும் என்றுதான் நாம் சொல்லமுடியும்.



## ருஷ்யச் சிப்பாய்களுக்கு உதவியாக ஸ்திரீகள் விமான ஓட்டிகளாகவும், மெகானிக்களாகவும் சேவை புரிந்து வருகிறார்கள்.

**(இல்லஸ்டிரேடட் வீக்லி ஆப் இந்தியா பத்திரிகையிலிருந்து எடுக்கப்பட்டது).**

ருஷ்யா எல்லா விதத்திலும் ஒரு பலமான வல்லரசு நாடு என்றே சொல்லலாம். அங்கு அளவு கடந்த போர் வீரர்களும், பல தொழிலாளிகளும் இருக்கிறார்கள். இதைத் தவிர எவ்வளவோ ஆயிரக்கணக்கான ஸ்திரீகள் விமான ஓட்டிகளாகவும், மெகானிக்களாகவும் பயிற்சி பெற்று போரில் ஈடுபட்டிருக்கிறார்கள். இன்னும் பல லக்ஷக்கணக்கான ஸ்திரீகள் எல்லாவித தொழில்களுக்கும் லாயக்காகத் தயாராகி வருகிறார்கள். ஆகையால் இந்த யுத்தத்தில் 1 20,00,000 ருஷ்ய வீரர்கள் ஈடுபட்டிருப்பதோடு 1 கோடி ஸ்திரீகளும் அவசியமான சமயங்களில் ஈடுபடத் தயாராக இருக்கிறார்கள்.

"சென்ற யுத்தத்தில் ருஷ்ய சிப்பாய்கள் திருப்திகரமாக நடந்துகொள்ளாததினால், இந்தத் தடவை ஸ்திரீகளும் யுத்த சேவைக்கு அனுப்பப்படுவார்கள்" என்று நிஷ்டூரமாக ஒருவர் பேசினார். ஸ்திரீகளும் ஈடுபடுவார்கள் என்னும் விஷயத்தில் அவரது அபிப்பிராயம் சரியானதுதான். ருஷ்ய ஸ்திரீகள் நல்ல திடசாலிகள். போர்வீரர்களாகவும் சேர்ந்து சண்டை செய்ய வல்லமை வாய்ந்தவர்கள். இந்த விஷயம் ஜெர்மானியர் ஏற்கனவே அறிந்ததுதான். அவர்கள் உதடுகளுக்குச் சிகப்பு வர்ணம் பூசிக்கொண்டும், முகங்களுக்கு பவுடர் தடவி அழகுபடுத்திக் கொள்ளுகிறவர்களல்ல. அவர்கள் இயற்கையிலேயே கடினமான வேலைக்கு லாயக்காக இருக்கிறார்கள்.

ருஷ்ய அரசாங்கத்தில் ஸ்திரீ புருஷர் என்ற வித்தியாசமில்லாமல் எல்லோரும் சைனியத்தில் சேர்க்கப்படுகிறார்கள். இதைத் தவிர தகரவேலைக்காரராகவோ, தையல் வேலைக்காரராகவோ, சிப்பாயாகவோ அல்லது மாலுமியாகவோ அவரவர்கள் இஷ்டப்படி சேவை செய்ய ஸ்திரீகளுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. ஸ்திரீகளைச் சமமாக பாவிப்பதற்காக புருஷர்கள் பொறாமை கொள்வது கிடையாது. புருஷர்களுக்கும், ஸ்திரீகளுக்கும் ஒரு விதமாகத்தான் சம்பளம் கொடுக்கப்படுகிறது. இம்மாதிரி சமத்துவத்தை ஏற்படுத்த பல நாடுகள் அநேக வருஷங்களாக முயற்சித்தும், அவ்வித லக்ஷியத்தை அடைய முடியவில்லை.

பொதுவாகச் சொல்லுமிடத்து, மற்ற நாடுகளிலுள்ள ஸ்திரீகளைப் போல் ருஷ்ய ஸ்திரீகள் அலங்காரப்படுத்திக்கொண்டும், ஜோடுகள் தரித்தும் சும்மா திரிவது கிடையாது. அவர்கள் புருஷர்களைப் போல் வேலை செய்கிறார்கள். அநேகமாக ஸ்திரீகள் புருஷர்களுக்கு உதவியாக வேலை செய்கிறார்கள்.

ஆகையால் ருஷ்ய ஸ்திரீகள் சுரங்கங்கள், வயல்கள், தொழிற்சாலைகள், ராணுவம் முதலியவைகளில் ஈடுபட்டிருப்பதை நாம் காணலாம். அன்றாடம் பகலில் வேலை செய்து முடித்தவுடன் அவர்கள் தங்கள் வீடுகளில் வீட்டு வேலையையும் கவனிக்கிறார்கள். ருஷ்யாவில் வேலை செய்யாமல் ஒரு ஸ்திரீயோ, ஒரு பெண்ணோ இருப்பாளானால் அவளை ஒரு சோம்பேறி என்று கருதுவார்கள். அம்மாதிரி சோம்பேறிகளாகத் திரிய ருஷ்ய அரசாங்கம் அனுமதிக்காது. சுக வாழ்க்கையில் சந்தோஷம் ஏற்படுவது போல், சரீரப் பிரயாசை செய்து நாம் ஈடுபட்டிருக்கும் எந்தத் தொழிலிலும் அவ்வித சந்தோஷம் ஏற்படும். இந்தத் தத்துவத்தை நம் தேசத்தார் யாவரும் நன்குணர்ந்து அதன்படி நடப்பார்களானால் அநேக பெரிய காரியங்களைச் சாதித்துவிட முடியும். மேலும் எங்கு

கண்டாலும், ஸ்திரீ, புருஷர் ஒவ்வொருவரும் அவரவருக்கிட்ட வேலையைச் சரிவர, யாதொரு பழுதன்னியில் செய்து முடிக்க முடியும்.

ருஷ்யச் சைனியத்தில் சேர்ந்த சாதாரண யந்திர வேலையில் பயிற்சி பெற்ற ஒவ்வொரு ஸ்திரீயும் முக்கியமானவள் என்றே சொல்லலாம். டாங்கிகள், விமானங்கள் இவைகளைக் கட்டவும், கட்டி முடிந்ததும் அவைகளை நடத்திச் செல்லவும் அவள் பயிற்சி பெற்றிருக்கிறாள். இம்மாதிரி அங்கு உபயோகத்திலிருந்து வரும் வகுப்பைச் சேர்ந்த பல லக்ஷக்கணக்கான டாங்கிகள் தயாரிக்கப்பட்டிருக்கின்றன.

முன்பு நிலங்களை உழ உபயோகிக்கப்பட்டு வந்த யந்திரங்கள் யுத்தம் வந்ததும் சொற்ப அவகாசத்திற்குள் டாங்கிகளாக மாற்றியமைக்கப்பட்டு யுத்த ஆரம்ப நாட்களில் போரில் ஈடுபட்டு வந்தன.

---

# பிரிடிஷ் விமானப்படையில் நாலு என்ஜின்கள் கொண்ட பாம்பர் விமானங்கள்.

## லங்காஸ்டர் விமானங்களின் தாக்குதல்களினால் ஜெர்மனியில் எங்கும் ஆபத்து.

(பீடர் மேஸ்பீல்டு எழுதியது).

இப்பொழுது உலகத்திலேயே அதிக பலம் வாய்ந்த பாம்பர் விமானங்களில் நாலு என்ஜின்கள்கொண்ட 'புதிய அவரோ-லங்காஸ்டர்' என்ற விமான வகைதான் அதிகப் பிரக்யாதி பெற்றது. அது மிகவும் கனமானது. நாலு முக்கிய அம்சங்களில் அது கியாதி அடைந்திருக்கிறது.

முதன்முதலாக அதன் வேகம் மிகவும் அதிகம். அதில் அதிக சுமை ஏற்றப்பட்டிருந்தாலும் மணிக்கு 300 மைல்களுக்குக் குறையாமல் செல்லும். அதன் பயனாக அதைப்பிடிப்பதென்றால் அச்சுநாட்டு பைடர் விமானங்கள் மிகவும் பிரயாசைப்பட்டு அதிவேகமாகச் செல்லவேண்டிவரும். அப்படியும் நீண்ட தூரம் வரை சென்றால்தான் அதைப்பிடிப்பதற்கு முடியும். அதற்குள் எதிரி விமானங்களுக்கு எண்ணைத்தட்டு ஏற்பட்டுவிடும். பகற்காலங்களில் வெகுதூரம் வரை சென்று எதிரி நாடுகளைத் தாக்குவதற்கு லங்காஸ்டர் விமானங்கள் உபயோகப்படுகின்றன.

### அதிகமான வெடிகுண்டுகளின் சுமை.

அடுத்தபடியாக அவை அதிக கனமான வெடிகுண்டுகளை ஏராளமாக ஏற்றிச் செல்லக்கூடும். குண்டுகளை ஏற்றிச்செல்வதற்கான அறை மட்டில் 33 அடி நீளமுள்ளது. அதில் 15,800 பவுண்டு நிறையுள்ள குண்டுகளை ஏற்றலாம். பெரிய மஞ்சள் நிறமுள்ள 4,000 பவுண்டு நிறையுள்ள வெடிகுண்டுகளும், 500 பவுண்டு நிறையுள்ள வெடிகுண்டுகளும், இன்னும் எரிகுண்டுகளும் அடுக்கிவைக்கப்படுகின்றன. 2,000 பவுண்டு நிறையுள்ள குண்டுகள் அரை டஜனும், 500 பவுண்டு நிறையுள்ள வெடிகுண்டுகளையும் சேர்த்து வைக்கலாம்.

மேற்சொல்லிய கனமான சுமையை ஏற்றிக்கொண்டு அது ஆயிரமைல்களுக்கும் அப்பால் செல்லும் சக்திவாய்ந்தது. இன்னும் அதில் ஏற்றப்பட்ட சுமை மிகவும் குறைக்கப்பட்டால் 3,000 மைல்கள் தூரம் வரை அது செல்லும். அதனால் லங்காஸ்டர் விமானங்களின் தாக்குதல்களுக்குத் தப்பிய இடமே ஜெர்மனியில் எந்த பாகத்திலும் இல்லை என்றே சொல்லலாம்.



எதிரி விமானங்களுடன் சண்டை நேர்ந்தால் தன்னைப் பாதுகாப்பதற்குப் பலமான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. இதுதான் அதன் மூன்றாவது அம்சம். அதில் 4 பெரிய யந்திர பீரங்கி ஸ்தானங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அவைகளுக்கு இடையே 10 பீரங்கிகள் வைக்கப்பட்டிருக்கின்றன. 300 மைல் வேகத்துடன் செல்லும் எதிரி விமானத்தை நோக்கி குறிப்பாக ஒரு நொடியில் சுட்டு வீழ்த்த முடியும். பின்புறத்தில் வைக்கப்பட்டிருக்கும் 4 பீரங்கிகளுக்கு இரு பக்கங்களிலும் அமைக்கப்பட்டுள்ள நீண்ட குழாய்கள் நிறைய வெடிகுண்டுகள் போடப்பட்டிருக்கின்றன. அதனால் வெகு தூரம் செல்லும் சந்தர்ப்பங்களிலும், வெடி மருந்து ஸப்ளையில் தட்டு ஏற்பட்டு விடுமென்ற பயமே ஏற்படாது.

### பைடர் விமான எதிர்ப்புகளை முறியடிக்கக்கூடும்.

லங்காஸ்டர் விமான அமைப்பில் பல மற்ற பாகமே கிடையாது. ஆனால் சக்கரங்கள் அமைந்துள்ள இடம் மட்டில் பந்தோபஸ்து இல்லாததுபோல் காணப்படலாம். ஆனால் எதிரி விமானங்கள் இச்சிறிய இடத்தைக் குறிபார்த்துத் தாக்குவது மிகக்கடினம்.

ஒரு சமயத்தில் அரை டஜன் லங்காஸ்டர் விமானங்கள் ஒரு ஸ்டேஷனை விட்டுப்புறப்பட்ட சில மணிகள் கிரமித்து திரும்பி வந்தன. அத்தாக்குதலில் 4 ஜெர்மன் பைடர் விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன. நமது விமானங்கள் எல்லாம் பத்திரமாய் திரும்பி வந்தன.

சில விமானங்களில் துப்பாக்கி குண்டுகள், பீரங்கிக் குண்டுகள் தைய்த்து அநேக பெரிய ஓட்டைகளும் ஏற்பட்டிருந்தன. இம்மாதிரி எவ்வளவு குண்டுகள் பட்டாலும் அவை அழிந்து போகாது. ஏனென்றால் அதன் முக்கியமான பாகங்களில் கவசம் போடப்பட்டிருக்கிறது. மொத்தத்தில் ஒவ்வொன்றிலும் அரை டன் நிறையுள்ள பலமான தகடுகள் போடப்பட்டிருக்கின்றன. அநேகமாக விமானம் பூராவும் மூடப்பட்டு இருப்பதும் உண்டு.

யந்திர துப்பாக்கிகளினால் அவ்விமானத்தைச் சுட்டு வீழ்த்த முடியாது. பெரிய பீரங்கிக் குண்டுகள் அதன் பல மற்ற பாகத்தில் பாய்ந்தால் தான் அதைச் சேதப்படுத்தமுடியும்.

நான்காவது விஷயம் அதன் உற்பத்தியை குறித்தது. இதை உற்பத்தி செய்வதற்கு முன் மிகவும் ஜாக்ரதையாகத் திட்டம் போடப்பட்டிருக்கிறது. இப்பொழுதுள்ள விமானங்களில் லங்காஸ்டர் விமானந்தான் சுலபமாகத் தயாரிக்கப்பட்ட கனமான பாம்பர் விமானம். இதைச் செய்து முடிப்பதற்குச் சொற்ப அவகாசம்தான் பிடிக்கிறது. இப்பொழுது வேறு எந்த விமானமும் இந்த அவகாசத்திற்குள் செய்யப்படுவதில்லை. இதைத் தயாரிக்கும் தொழிற்சாலையில் 40 சதவிகிதம் சிறுமிகளே வேலை பார்க்கிறார்கள். இதைத் தயரிப்பதில் எவ்வளவு அவகாசம் மீதப்படுத்த முடிகிறது என்பதைத் தெரிந்துகொள்ள அச்சு நாட்டினர் விரும்புகிறார்கள். அவ்விவரம் அவர்களுக்கு அனுகூலமாக இருக்குமாதலால் அதைக்குறிப்பிடுவது அவ்வளவு சாவதானமில்லை.

### எங்கும் இது தயாரிக்கப்படுகிறது.

யுனைடெட் ஸ்டேட்ஸில் உற்பத்தி செய்யக்கூடியதை ஒப்பிட்டுப் பார்த்தால் இங்கிலாந்தில் லங்காஸ்டர் விமானங்களைத் தயாரிப்பதில் சில கஷ்டம் இருக்கிறது. ஏனென்றால் ஒரு மத்திய ஸ்தாபனத்தில் விமானங்கள் தயாரிப்பதற்குத் தனிப்பட்ட பெரிய யந்திரங்களை அமெரிக்காவில் தயாரிக்கலாம். கிரேட் பிரிடனில்

எதிரித்தாக்குதல் அபாயத்தினால் அம்மாதிரி ஸ்தாபிக்கமுடியாது. இம்மாதிரி கூட்டமாக ஒரே இடத்தில் விமான உற்பத்திசாலைகள் இருப்பது எதிரி விமானங்களுக்கு முக்கிய இலக்காகயிருக்கும்.

ஆகையால் விமானத் தொழிற்சாலைகள் விஸ்தாரமான இடங்களில் பரவியிருப்பதால் ஏதேனும் ஒரு இடத்தில் குறி தவறாமலும், கடுமையாகவும் எதிரித் தாக்குதல் நேர்ந்தால், விமான உற்பத்திக்கு அதிக தடை ஏற்படாது. இருந்த போதிலும் ஆங்காங்கு தயாரிக்கப்பட்ட பல விமான பாகங்கள் திரட்டப்பட்டு பெரிய ஸ்தாபனங்களுக்குக் கொண்டுவரப்படுகிறது. உடனே அதிசீக்கிரத்தில் அவை யாவும் பொருதப்பட்டு விமானங்களாகத் தயாரிக்கப்படுகின்றன.

பிரிடிஷ் விமானப் படைக்கு லங்காஸ்டர் விமானம் மிக்க உபயோகமாக இருக்கிறது. இம்மாதிரி உயர்வான விமானம் வேறொன்றுமில்லை யென்று தேர்ச்சிபெற்ற விமானிகள் அபிப்பிராயப்படுகிறார்கள். அதை ஓட்டிச் செலுத்துவது மிகவும் சுலபமாக இருக்கிறது. அதில் ஒரு பக்கத்திலிருக்கும் இரண்டு மோட்டார்களும் வேலை செய்யாமல் போனாலும் கூட மற்றொரு பக்கம் இருக்கும் இஞ்ஜின்களால் அது நன்றாய் பறந்து செல்லுகிறது.

### அதில் எல்லாவித சௌகரியமும் இருக்கிறது.

ஒரு சமயம் எதிரியால் தாக்கப்பட்ட லங்காஸ்டர் விமானமொன்று சமுத்திரத்தில் விழ நேர்ந்தது. தண்ணீரின் மேலேயே மூன்று தடவை எழும்பிக் குதித்து, பின்பு ஒரே பக்கத்திலுள்ள 2 மோட்டார்கள் மட்டில் வேலை செய்து வந்ததால் யாதொரு தடையுமன்னியில் அது வடகடல் வழியாக தன் நாட்டிற்குப்பறந்து சென்றது.

இவ்விமான அமைப்புக்குத் திட்டம் போட்ட தலைவர் மிஸ்டர் ராய்சாட்விக் அவர் சரித்திர பிரசித்தி பெற்ற விசேஷமான விமானத்தைத் தயார் செய்திருக்கிறார். லங்காஸ்டர் விமானம் வெகுத்திறமையாகவும், அதிர்ஷ்ட வசத்தினாலும் நன்றாக அமைந்துவிட்டது. அதில் எல்லாவித சௌகரியங்களுமிருக்கின்றன. அதில் சேர்ந்திருக்கும் அமைப்புகள் ஆச்சரியத்தைக் கொடுக்கக் கூடியதாகயிருக்கிறது. விமான தளகர்த்தர் ஸர் ஆர்தர் ஹாரிஸ் நாஸிகளுக்கு எச்சரித்திருக்கிறபடி ஜெர்மனியை பூண்டோடு அழித்துவிட, இந்த லங்காஸ்டர் விமானங்கள், நேசதேசத்தார்கள் உபயோகித்துவரும் மற்ற நாலு மோட்டார்களுள்ள பெரிய பாம்பர் விமானங்களுடன் ஈடுபட்டு வருகின்றன.

---

## முஸோலினியின் கொள்கைகள்.

1. "சமாதானம், லாபம் அடைவது முதலியவைகளைக்காட்டிலும் ஹிம்சை அடைவதை மேலாகச் சொல்லலாம். அதேவிதமாக வெறும்பேச்சைக் காட்டிலும், துப்பாக்கி, யந்திர பீரங்கி, யுத்தக்கப்பல்கள், விமானங்கள், பீரங்கிகள் முதலியவைகளைக்கொண்டு காரியத்தைச் சாதிப்பதும் நலம்தான்."

2. "ஸ்திரீக்கு சந்ததி விருத்திசெய்வது என்ற குணம் இருப்பதுபோல் புருஷனுக்கு யுத்தம் செய்வது என்பது ஒரு குணம். உலகில் நிரந்தரமான சமாதானம் இருக்கும் என்பதை நான் ஒப்புக்கொள்ளவில்லை."



3. "80,00,000 பேர்களை ஈடுபடுத்தி நான் வெற்றியடைய விரும்புகிறேன்."

4. "மெகய்வில்லி என்பவர் தங்கம், இரும்பு என்ற இரண்டுக்குள் இரும்பை விரும்பினார். தங்கம், பீரங்கி என்ற இரண்டுக்குள் பீரங்கிதான் என்று முன்னமேயே நாங்கள் தீர்மானித்து விட்டோம்."

---

## யாவரும் சத்துருக்களே.

டோகியோவில் இரண்டு ஸ்விட் ஜார்லாந்தைச் சேர்ந்த இரண்டு பத்திரிகை நிருபர்கள் கைதி செய்யப்பட்டபோது தாங்கள் நடுநிலை நாட்டைச் சேர்ந்தவர்கள் என்கிறார்களாம்.

அதற்கு டோக்கியோ போலீஸ் ஆபீஸர் 'இல்லை; நீங்கள் நடுநிலை விரோதிகள்' என்றான்.

"அமெரிக்காவையும் பிரிட்டனையும் எப்படி பாவிக்கிறீர்கள்" என்று அந்த நிருபர்கள் கேட்டார்கள்.

"அவர்கள் யுத்த சத்துருக்கள்" என்று பதில் கிடைத்தது.

"ஜெர்மானியர்களும், இதாலியர்களும் எப்படி" என்று கேட்டார்கள்.

"அவர்கள் சிநேகமான விரோதிகள்" என்று போலீஸ் ஆபீஸர் பதில் சொன்னார்.

---

## பழைய சாமான்களைச் சேகரிக்கவும்.

உங்கள் வீடு அல்லது ஆபீஸ் முதலியவைகளைச் சுத்தப்படுத்தினால் ஏராளமாக அப்புறப்படுத்த வேண்டிய குப்பையிலிருந்து இரும்பு முதலிய சிறு துண்டுகள், உபயோகமில்லாத கடுதாசுகள், ரப்பர் துண்டுகள் முதலியவை கிடைக்கும். இம்மாதிரி மூலை முடுக்குகளைத் துப்புறப்படுத்துவதில் சாமான்களை ஒழுங்காகவும் வைத்துக்கொள்ள முடிவதோடு, பழைய சாமன்களைக் கொண்டு யுத்தப் பொருள்கள் தயாரிப்பதற்கு உதவி செய்யவும் சாத்தியமாக இருக்கிறது. ஏதாவது ஒரு மூலையில் நாம் கவனிக்காமல் போட்டிருந்த இரும்பு முதலிய சிறு துண்டுகள் யாவும் அத்யாவசியமான யுத்தப் பொருள்கள் தயாரிப்பதற்காக நேரிலேயே நாம் அனுப்பலாம். மேலும் சாமான்களின் உற்பத்திக்குத் தேவையான மூலப் பொருள்களை அன்னிய நாடுகளிலிருந்து இறக்குமதி செய்ய வேண்டிய அவசியமும் ஏற்படாது. அதோடு கப்பல்களில் தேவையான மற்ற பொருள்களை ஏற்றிக் கொண்டு வருவதற்கு இட வசதியும் ஏற்படும்.

---

## 'வி' டயரி-1943.

(குறிப்பு புஸ்தகம்).

லினன் ரூ. 1—4—0; ஷீப்ஸ்கின் ரூ. 1—8—0;
மொராக்கோ ரூ. 2—0—0.

லாபம் யுத்தநிதிக்குச் சேர்க்கப்படும்.

கீழ்கண்ட விலாசத்திலிருந்து வாங்கிக்கொள்ளலாம்.—

காரியதரிசி,
தேசீய யுத்த முன்னணி நிலயம்,
புதுக்கோட்டை (தென் இந்தியா).


## பிரஸங்க நிகழ்ச்சி முறை.

### பிரஸங்கம் 126. (2-வது பிரிவு.)

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 19-12-42 | முனிஸிபல் ஆபீஸ் | ... மாலை | 6.00 | 21-12-42 | வெங்களூர் | ... மாலை | 7.00 |
| 20-12-42 | குடுமியாமலை | ... ,, | 7.00 | ,, | கோனுபட்டு | ... ,, | 7.30 |
| | பாம்பூர் | ... ,, | 7.30 | 22-12-42 | பனையப்பட்டி | ... ,, | 7.00 |
| | | | | ,, | ராங்கியம் | ... ,, | 7.30 |

**23—12—42 முதல் 2—1—43 முடிய கிரிஸ்துமஸ் விடுமுறைநாட்கள்.**

### யுத்தத்திற்கு ஆள் சேர்த்தல்—விளம்பரம்—மாலை 4-மணி.

| | | | |
|---|---|---|---|
| 19—12—42 | பொன்னமராவதி. | 21—12—42 | அரிமளம். |
| 20—12—42 | கொடும்பாளூர். | 22—12—42 | கோனுபட்டு. |

**23—12—42 முதல் 2—1—43 முடிய கிரிஸ்துமஸ் விடுமுறைநாட்கள்.**

Sri Bribadamba State Press, Pudukkottai. G.S.C. 2,000—21-12-42.

### நோட்டீஸ்.

கிருஸ்த்மஸ் விடுமுறையை முன்னிட்டு 2—1—1943வ இவ்வறிக்கை பிரசுரிக்கப்படமாட்டாது. அடுத்த பிரசுரம் 9—1—1943ம் தேதியன்று வெளிவரும். —பத்திராதிபர்

# புதுக்கோட்டை ஸமஸ்தான
# தேசீய யுத்த முன்னணி நிலயம்.

பிரசுரம்] 1942-ம் ஞு டிஸம்பர்மீ 26வ [ந. 127

பிரஸங்கம் CXXVII.

## 1942.

நமது வாசகர்களுக்கு சந்தோஷ வாழ்க்கையும் நேச நாடுகளுக்கு முடிவான வெற்றியும் கிடைக்கவேண்டுமென்று புது வருஷ ஆரம்பத்தில் நாம் விரும்புவோம். இவ்வுலகம் பூராவும் மிகப் பெரியதொரு யுத்தத்தில் ஈடுபட்டிருப்பதில் தற்போதய சண்டையை கவனித்தால், அலெக்ஸாண்டர், ஸீஸர், நெபோலியன் போன்றவர்கள் செய்த சண்டைகளெல்லாம் பெரியவைகளாகக் காணப்படா! ஏனென்றால் இந்த மகா யுத்தத்தில் எல்லா நாடுகளும் ஒன்றை ஒன்று எதிர்த்து நிற்கின்றன. மூன்று வருஷங்கள் கடந்தும் இன்னும் ஓய்வதற்கான ஹேஷ்யங்கள் ஒன்றும் தென்படவில்லை. முன்பைக்காட்டிலும் தற்சமயத்தில்தான் யுத்த சாமான்களை அதிகம் உற்பத்தி செய்துகொண்டு புதிது புதிதாக போர் அரங்கங்களை ஏற்படுத்துகின்றன. ஆகவே தேவாஸுர யுத்தம் போன்ற, இதன் கருத்து என்னவென்று தெரியவில்லை.

ஆனால் ஒன்று மாத்திரம் நிச்சயம். ஒரு நாட்டின் வெற்றியையோ, ஒருவனுடைய புகழையோ லக்ஷியமாகக்கொண்டு நேசநாடுகள் இதில் ஈடுபடவில்லை. நாடுகளைப் புதிதாகப் பிடிக்கும் ஆசையும் இவர்களுக்கு இல்லை. சாதாரணமாகப் படைகள் சண்டையில் மோதிக்கொள்ளுகின்றன என்று சொல்லுவதைக்காட்டிலும், ஆத்மீக சக்திபோன்ற நாகரீகத்தின் உயர்ந்த லக்ஷியங்கள், இதிலிருந்து சாதிக்கப்படும். முடிவு மாத்திரம் சாதாரணமாக இருக்காது. நஷ்டங்களும் அதிகம் ஏற்படும். நாகரீகம், காட்டுமிருண்டித்தனம், தர்மம், அதர்மம், ஸ்வதந்திரம் அடிமைத்தனம், தேவர்கள், அசுரர்கள் என்ற இவைகளில் எவை மிஞ்சப் போகின்றது என்பதுதான் பிரச்னை. அதனாலேயே இந்த யுத்தம் உலகத்தையே கவர்ந்திருக்கிறது. ஆகவே இந்த யுத்தம் முடிந்ததும் நேசநாடுகள் நிச்சயம் இவ்வுலகில் நம்பிக்கை, தர்மம், சமாதானம், நல்லெண்ணம் முதலியவைகளை ஏற்படுத்துவார்கள்.

கடந்த மூன்று வருஷங்களில் 1942-ம் வருஷம் ஆரம்பத்தில் பேர்ல் தீவு சம்பவம், மலேயா, பர்மா, கிழக்கிந்தியத் தீவுகள், பிலிப்பைன்ஸ் முதலியவைகள் எதிரிகள் வசமாகி, இந்தியா, ஆஸ்திரேலியா முதலியவைகளுக்கு பயமும் ஏற்பட்டது. அதே விதமாக மேற்கில், கோடைகாலத்தில் ஜெர்மானியர்கள் அடைபட்டிருந்தாலும், பிறகு டானட்ஸ், டான் முதலியவைகளை ஆக்கிரமித்து வால்கா, காகஸஸ் பிரதேசங்களையும் பயமுறுத்தினர். அதேவிதமாக ஆபிரிக்காவில் எதிரிகள் டொப்ருக்கைப் பிடித்து எல்அலமீன் வரை முன்னேறி ஸூயஸ், எகிப்து முதலியவைகளுக்கும் ஆபத்து ஏற்படும்போல் இருந்தது. கடலில் யூ படகு தாக்குதலும் இருந்தது. ஆனால் இவ்வருஷம் முடிவில் நிலைமை திருப்திகரமாக இருக்கிறது.

ஜப்பானியருக்கு மிட்வே சண்டை முதல், தொடர்ச்சியாக, பவளக்கடல், ஸாலமன்ஸ் முதலிய இடங்களில் தோல்வி ஏற்பட்டு வந்திருக்கிறது. நியூ கினியில் ஆஸ்திரேலியர் கடுமையாகச் சண்டை செய்தும் வருகின்றனர். இந்தியாவிலுள்ள, பிரிடிஷ், அமெரிக்கப்படைகள் பர்மாவில் முன்னேற ஆரம்பித்திருக்கின்றன. சைனாவின் கிழக்கு மேற்கு எல்லைகளில் முன்னேறிய ஜப்பானியரும் திருப்பியடிக்கப்பட்டனர்.

மேற்கே 'ஆச்சரியத்தை உண்டாக்கும் ருஷ்யப் படைகள்' வெற்றியடைந்து வருவதும் வியக்கத்தக்க விஷயமே. ஸ்டாலின்கிராட் எதிரியிடம் வசப்படாததோடு எதிரியை முறியடிக்கப்பார்க்கிறது. ஸ்டாலின்கிராட் விழவில்லை. வால்காவில் உஷ்ணம் குறைந்து பனி ஏற்பட்டிருக்கிறது. கடந்த சில வாரங்களாக ருஷ்யர்கள் தொடர்ந்து முன்னேறித் தாக்குகின்றனர். ஆகவே இவைகள் எல்லாவற்றையும் ஒன்று சேர்த்துப் பார்க்கும்பொழுது சென்ற வருஷம் மாஸ்கோ முன்பாக ருஷ்யர்களுக்கு இருந்ததைவிட தற்சமயத்தில் ஜெர்மானியருக்குத்தான் அதிக கேவலநிலை ஏற்பட்டிருக்கிறது. ருஷ்யப் போர்முனை பூராவிலும் எதிரிகள் அழிகின்றனர். ருஷ்யர்கள் எதிரிகளை அழிப்பதைத்தான் விரும்புகிறார்கள். ஏனென்றால் எதிரிகள் அழிபட்டால் தங்கள் பிரதேசம் தானாகவே வசமாகிவிடும் என்று எண்ணுகிறார்கள்.

இவ்வளவில் நவம்பர், டிஸம்பர் மாதங்களில் ஆபிரிக்காவில் நிகழ்ந்தது தான் எதிர்பாராதது. எகிப்திலுள் முஸோலினியையும் அழைத்துக் கொண்டு செல்லலாமென்று ரோமல் நினைத்தான். ஆனால் பாவம் காலம் மாறிவிட்டது. பிரிடிஷ் 8-ம் படை ரோமலை தினம் 20 மைல் வீதம் விரட்டிச் செல்லுகிறது. எகிப்திற்கு 1,200 மைல் அப்பால் துரத்தப்பட்டிருப்பதில் ஸிரேனைகாவை விட்டும் ஓடும்படி நேர்ந்தது. மான்ட் காமரி துரத்தி வருகையில் அவன் ட்ரிபாலிடேனியா வழியாக ஓட்டம் பிடிக்கிறான். அவனைப் பிடித்துக்கொடுப்பவர்களுக்குப் பரிசளிப்பதாகவும் சொல்லப்பட்டிருக்கிறது.

மேற்கு ஆபிரிக்காவில் நவம்பர் 8-ம்உ பிரிடிஷ் அமெரிக்கப் படை, எதிரி யூ படகுகளை எதிர்த்து இறங்கியது. அங்குள்ள பிரெஞ்சுப் படைகள் நேசக் கக்ஷியில் சேர்ந்தன. டூனிஸ், பிஸர்ட்டா முதலியஇடங்களை நேசதேச விமானங்கள் பொடி செய்கின்றன. இதற்காகப் பயந்து ஹிட்லர் விஷி பிரான்ஸையும் ஆக்கிரமித்துக்கொண்டான். டூலானிலிருந்த பிரெஞ்சுக் கடற்படை தற்கொலை புரிந்து கொண்டது.

மேலும் 1942-ல் ஒரு நல்ல மாறுதல் ஏற்பட்டுத்தான் இருக்கிறது. நேசப் படைகள் மெதுவாக முன்னேற்றப் போருக்கு லாயக்காகிவிட்டன. எதிரி தற்காப்புப் போர் நிலைக்குத் திரும்பிவிட்டான். இந்த மாறுதலை ஹிட்லர், மாரிகால யுத்த உதவியைக் கோரியபோது செய்த பிரசங்கத்திலேயே காணலாம். மின்னல் படையெடுப்பு முறையை கைவிட்டுவிட்டு ஆக்கிரமித்த ருஷ்யாவை பலப்படுத்த ஆரம்பித்திருக்கிறான். நேசப்படைகளின் நீண்ட கால முற்றுகையைச் சமாளிக்கவே இம்மாதிரி செய்திருக்கிறான்.

நேசப்படைகளும் முக்கியமாக விமானப் போரில் முன்னேற்றப் போரைத் துவக்கியிருக்கின்றன. எதிரியின் யுத்தத் தொழிற்சாலைகளைத் தவிடுபொடியாக்குவதில் நேசதேச விமானங்கள் குறிதவறாமல் தாக்கி வருகின்றன. இதையே இரண்டாம் போர்முனை என்று சொல்லலாம்.



இந்த வருஷத்தின் முடிவில், கிழக்கிலும், மேற்கிலும் மூன்றும் போர்முனை, நான்காம் போர்முனையே உண்டாகும்போல் இருக்கிறது. இதில் கடல் போரில் யூ படகுத் தாக்குதல் சமாளிக்கப்பட்டு வருவதோடு, ஆபிரிக்காவில் இதாலியப் படைகள் சின்னாபின்னமாகப் போயின. அதோடு இதாலியே படையெடுக்கப்படும் போல் இருக்கிறது. அநேகமாக ஆபிரிக்கா விடுவிக்கப்பட்டது. மத்திய தரைக்கடல் மார்க்கமாகச் செல்ல லாயக்காகச் செய்யப்பட்டிருக்கிறது. நார்வே முதல் கருங்கடல் வரை கடற்கரையை எதிரி பலப்படுத்துகிறான்.

ஆனால் முன்னேற்றப் போர் இன்னும் துவக்கப்படவில்லையாயினும் அதற்கு லாயக்கான ஏற்பாடுகள் நடை பெறுகின்றன. நமது ஆயுதங்கள் அதிகமாக இருந்தாலும் உற்பத்தி குறையவில்லை. எதிரி ஏற்கனவேயே உச்ச நிலையை அடைந்து விட்டானாகையால் இனி அவனுக்கு இறங்கும் காலம் தான். அமெரிக்காவும் பிரிடனும் சேர்ந்து ஏராளமாகப் படைகளைத் திரட்டி ஆயுதங்களையும் உற்பத்தி செய்துவருகின்றன. ஆகவே 1943-ல் முன்னேற்றப் போர் ஏற்படும்.

பிரிடன், அமெரிக்கா, ருஷ்யா, சைனா, குடியேற்ற நாடுகள் இந்தியா முதலியவை பலம் பெற்றுவருகின்றன. நேசநாடுகள் பலமடைந்துவருவதில் ருஷ்யாவின் பலமும், சைனாவின் மனித சக்தியும், குடியேற்ற நாடுகள், இந்தியா முதலியவைகளின் ஒத்துழைப்பு இருப்பதோடு, நாம் தர்ம காரணங்களுக்காகப் போராடுகிறோம். வெற்றி கிடைக்கும்வரை பின்வாங்குவதில்லை என்று நேச நாடுகள் தீர்மானித்து ஈடுபட்டிருக்கின்றன.

இதனால்தான் வான்டரோபோ என்னுமிடத்தில் ஸ்மட்ஸ் பேசும்போது 'வெற்றி நமக்கு நிச்சயம்'. நாம் எதிர்பார்ப்பதைவிட சீக்கிரத்திலேயே கிடைக்கும். திடீரென்றும் கிடைக்கும். கிடைக்கப்போகிறது என்று நமக்குத் தெரிவதற்கு முன்னாடியே கிடைக்கும்.

இந்த சந்தர்ப்பத்தில் நம் நாட்டு மக்களுக்கு ஒரு வார்த்தை. ஸ்வதந்திரம் உரிமை, நியாயம் முதலியவைகளைக் காக்கும் நாடுகளுடன் சேர்ந்திருப்பது இந்தியாவிற்கு ஏற்பட்டிருக்கும் ஒரு அரிய சந்தர்ப்பமாகும். பிரிடனின் படைகளால் காப்பாற்றப்பட்டு இருப்பதென்பதும் ஒரு உரிமையே. இந்த சந்தர்ப்பத்தில் தன்னால் முடிந்தவரை பாடுபட்டு வெற்றியடைய முயலுவதென்பதும் இந்தியாவின் கடமையாகும். இதுவே விசுவாஸத்தையும் நன்றியையும் காண்பிப்பதாகும். வரும் காலத்தில் ஒரு மேன்மையடைய ஹேதுவும் ஆகும்.

இவ்விஷயத்தில் இந்தியா தனது கடமையை மறக்காது. முற்காலத்திய புகழுக்கு ஏற்றவாறு தற்போதும் நடந்துகொண்டு வருங்காலத்தில் முன்னேற்றத்தையும் எதிர்பார்க்கும்.

---

## வார யுத்தச் செய்திகள்.

### 19—12—42-லிருந்து 25—12—42-வரை.

**ருஷ்யா.**—டான் மத்தியபாகத்தில் ருஷ்யர் செய்துவரும் முன்னேற்றமே இவ்வாரத்தில் முக்கிய சம்பவமாகும். இதன் மூலம் தெற்கிலிருக்கும் ஜெர்மன் சைனியத்தைத் தனியேப் பிரித்து ஸப்ளைகள் போகவொட்டாமல் செய்வதே நோக்கமாகும். இந்த முன்னேற்றத் தாக்குதல் வாரனேஷிற்குத் தெற்கில் ஒரு கிடுக்கித் தாக்குதலாக நடைபெறுகிறது. ஒரு ருஷ்யச் சைனியம் வாரனேஷிற்குத் தெற்கில் புறப்பட்டு டானைக் கடந்து வாரனேஷ்—ராஸ்டவ் ரயில்பாதையை கன்டிமிரோவ்கா என்ற இடத்தில் துண்டித்தது. மற்றொரு சைனியம் அதற்கும் தெற்கில் புறப்பட்டு, பகோவ்ஸ்காயா என்ற இடத்தில் எதிரி வரிசைகளைப் பிளந்து டான் வளைவை நோக்கி முன்னேறுகிறது. பொகுசர் என்னுமிடத்தில் எதிரியுடன் போர் நடந்ததில் எதிரி தோற்கடிக்கப்பட்டான். இது வாரனேஷுக்குத் தென்கிழக்கில் 140 மைல் தூரத்திலும், ஸ்டாலின்கிராட்டிற்கு வட

மேற்கில் 180 மைல் தூரத்திலும் இருக்கிறது. இந்த இரு படைகளும் மில்லரோவோ என்னுமிடத்தை நோக்கி முன்னேறுகின்றன. கார்கவ்—கமன்ஸ்காயா ஸ்டாலின்கிராட் இருப்புப் பாதைக்கும் ஆபத்து ஏற்பட்டிருக்கிறது.

மற்ற ருஷ்ய முனைகளில் அவ்வளவு விசேஷ சம்பவங்கள் ஏற்படவில்லை. ஸ்டாலின்கிராட்டிலும், அதைச் சுற்றிலும் சண்டை நடந்துகொண்டுதானிருக்கிறது. மத்திய முனையில் பிடித்த இடங்களை ருஷ்யர்கள் பலப்படுத்தி வருகின்றனர். காகஸஸில் டொராக் பிரதேசத்தில் மற்றொரு தாக்குதல் ஏற்பட்டு எதிரி திருப்பியடிக்கப்படுகிறான்.

**ட்ரிபோலிடேனியா.**—61 நாட்களுக்கு முன் ஆரம்பிக்கப்பட்ட தாக்குதலை மாண்ட் காமரி விடாமல் துரிதமாகவே நடத்திவருகிறார். தினம் 20 மைல் வீதம் 1,200 மைல் முன்னேறியிருக்கிறார். டிஸம்பர் 17உ ட்ரிபோலிடானியாவினுள் புகுந்து வாடிமட்ராடின் என்ற இடத்தில் ரோமலின் படைகள் இருபிளவாகத் துண்டிக்கப்பட்டன. இது எல் அகிலாவிற்கு மேற்கே 50 மைல் தூரத்திலிருக்கிறது. அதிலிருந்து எதிரிகள் மார்பிள் ஆர்ச், நோபிலியா என்னுமிடங்களுக்கு அப்பாலும் துரத்தப்பட்டனர். இப்பிரதேசத்திற்கு கிழக்கிலுள்ள எதிரிப் படைகள் தகர்க்கப்பட்டன. சமீபத்தில் கிடைத்த செய்திகளின்படி ஸுல்தான் என்னுமிடத்திற்கு அப்பால் 5 மைல் தூரத்தில் இன்று மான்ட்காமரி பீரட் ஹஸுன் என்ற இடத்தை நோக்கி முன்னேறிக்கொண்டிருக்கிறார். இது ஸர்டியிலிருந்து 50 மைல் மேற்கே இருக்கிறது. ரோமலின் பின் பாதுகாப்புகள் துளைக்கப்படுகின்றன. மிஸுராடா என்னுமிடத்திற்கு ரோமலின் படைகள் போய்ச் சேர்ந்ததாகச் சொல்லப்படுகிறது. இங்கிருந்து ட்ரிபோலி 120 மைல்.

**டூனிஸியா.**—மெட்கஸ்-எல்பாப் பிரதேசத்தில் காவல் படைகள் ஒன்றுக்கொன்று மோதிக்கொண்டதாகத் தெரிகிறது. நேசதேச நிலைகள் பலப்படுத்தப்படுகின்றன. ஸ்பாக்ஸ் பல தடவை தாக்கப்பட்டது.

பிரெஞ்சுத் துருப்புகள் கெய்ரோவன் (Kairouan) என்பதற்கு மேற்கேயுள்ள இடத்தை ஆக்கிரமித்துக்கொண்டு பான்ட்டு பாஸ் (Pont Du Fahs) என்ற இடத்திற்குத் தெற்கேயும், தென்கிழக்கேயுமுள்ள விரோதி ஸ்தானங்களைப் பிடித்துக்கொண்டன.

ஓரான், கஸாபிளாங்கா, வட ஆபிரிக்கா, மேற்கு ஆபிரிக்காவிலுள்ள துறைமுகங்களிலிருக்கும் பிரெஞ்சுக்காரர்களுக்குச் சொந்தமான கப்பல்கள் யாவும் நேசதேசத்தார் வசம் வந்துவிட்டன.

பிரெஞ்சு வட ஆபிரிக்கச் சைனியத்தில் ஜெனரல் ஜிரார்டு தலைமையின் கீழுள்ள ஒரு விசேஷப் பகுதியும் சேர்ந்திருக்கிறது. அதற்குத் தேவையான நவீன ராணுவ முஸ்தீப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது.

**பஸிபிக்.**—(1) **நியூ கினி**—பூனா பிராந்தியத்தில் பூனா மிஷன் என்ற இடத்திலும், விமானத் தளத்திலும்தான் நேசதேசத்தார்கள் முக்கியமாக முன்னேறுகின்றனர். கோனா பிரதேசத்தில் ஆஸ்திரேலியத் துருப்புகள் சதாகாலமும் வேவு பார்த்தவண்ணமிருக்கின்றன. ஸதானந்தா பிரதேசத்தில் கடற்கரையிலுள்ள ஜப்பானியரின் பலமான ஸ்தானத்திலிருந்து 3 மைல்கள் வரையுள்ள பிரதேசத்தில் யுத்தம் நடந்துவருகிறது. கொஞ்ச நாட்களுக்கு முன் நியூகினிக் கருகாமையிலுள்ள விடியாஸ் (Vitiaz) ஜலசந்தியில் ஒரு ஜப்பானிய க்ரூயிஸர் மூழ்கடிக்கப்பட்டது. என்டையடேரி (Endaiadere) முனை கைப்பற்றப்பட்டது. மோர்ஸ்பி துறைமுகத்தில் 69-வது தடவை விமானப் படையெடுப்பு நேரிட்டது.

(2) **ஸாலமன்ஸ்**—கூடல்கனரில் காட்டு அரண்களில் ஜப்பானிய நிலைகளை அமெரிக்க கொரில்லாப் படைகள் கலைத்துவிட்டன.

(3) **நியூ ஜார்ஜியா.**—டிஸம்பர் 20, 21-ம் தேதிகளில் முண்டா பிரதேசம் தாக்கப்பட்டது.

(4) **சுமத்ரா.**—வங்காளக்குடாக்கடலில் ஒரு பெரிய கடற்படை டிஸம்பர் 20, 21உ சுமத்ரா தீவில் ஸபாங் என்ற இடத்தைத் தாக்கியது.



**அலூஷியன்.**—டிஸம்பர் 20உ அமெரிக்க பாம்பர்கள் பைடர்களின் உதவியுடன் கிஸ்கா தீவில் கடற்கரையோரமாயுள்ள ஜப்பான் நிலைகளைத் தாக்கின.

**சைனா.**—கடந்த வாரத்தில் சீனத் துருப்புகள் குறுக்கு எதிர்ப்புகளைச் செய்து ஹூபே மாகாணத்தில் ஹாங்கவ்விற்கும் இசாங்கிற்கும் இடையில் ஜப்பானிய முன்னேற்றத்தைத் தடுத்தனர். டிஸம்பர் 12உ அமெரிக்க விமானப்படைகள் யூனன் மாகாணத்தில் டெங்சாங்கில் தாக்கின. டிஸம்பர் 14உ ஹனாயில் ஜிலியன் விமான தளம் தாக்கப்பட்டு சேதமாகியது. ஹூபே மாகாணத்திலிருந்த சீனப் படைகள் ஹோப்ஸூ (Hopsuch)-வைத் திரும்பப்பிடித்தன. பர்மா, யூனன் எல்லைப்புறத்தில் ஒகங்டங்கிலிருந்த ஜப்பானியப்படைகள் நான்லீ நதியைக் கடந்தபிறகு தடைபட்டன. யூசவ்விலும் ஜப்பானிய முன்னேற்றம் திருப்பியடிக்கப்பட்டது.

மேற்கு பர்மாவில் அர்க்கான் எல்லையைக்கடந்து செல்லும் பிரிடிஷ் படைகள் மாங்டா—பூதிடாங் பிரதேசத்தை வசப்படுத்தின. இது அக்யாபிற்கு வடமேற்கில் 60 மைல் தூரத்திலிருக்கின்றன. எதிரி தனது நிலைகளை கலைத்துக் கொண்டு, சண்டைசெய்யாமலே பின்வாங்குகிறான். நம்படைகள் முன்னேறிக்கொண்டே போகின்றன. இவ்வாரத்தில் எதிரி நாட்டில் பின்கண்ட பிரதேசங்கள் தாக்கப்பட்டன. (டிஸம்பர் 18) ரதிடாங் தாக்கப்பட்டது. இது மாங்டாவிற்கும் அக்யாபிற்கு மத்தியில் உள்ளது. அக்யாப் பிரதேசம், டாங்கு (டிஸம்பர் 19); லாஷியோ, டோங்கூ (டிஸம்பர் 20), (மாக்வி, பேனாங், யவ, (டிஸம்பர் 23) தாக்கப்பட்டன.

**இந்தியா.**—டிஸம்பர் 16உ ஜப்பானிய விமானங்கள் சிட்டகாங்கையும் பென்னி(Fenny)யையும் (வங்காளம்) தாக்கின. டிஸம்பர் 20உ இரவு 10.30 மணிக்கும், டிஸம்பர் 21உ காலையிலும், டிஸம்பர் 22-23உ நடுஇரவிலும் டிஸம்பர் 24-ம் தேதி இரவிலும் கல்கத்தா தாக்கப்பட்டது. இந்தச் சந்தர்ப்பங்களில் ஆள் சேதமும், பொருள் சேதமும் குறைவு.

**பலவகைப்பட்டவை.**—1. எதிரி நாடுகளில் கபடமான நடமாட்டம் இருந்து வருகிறது. மார்ஷல் கவல்லரோ, பீல்டு மார்ஷல் கீடல், கயானே, லவால், கோயரிங், ரிப்பன்டிராப் யாவரையும் ஹிட்லர் அழைத்துப் பேசினான். முஸலோனி அழைக்கப்படவில்லை.

2. ஸ்பெயினும், போர்ச்சுகலும் ஒற்றுமையை ஏற்படுத்திக்கொண்டிருக்கின்றன. இதைப்பற்றி போர்ச்சுகீஸ் பிரதம மந்திரி சொன்னதாவது: ‘இந்த இரு நாடுகளும் ஒருவகைப்பட்ட யோசனைகளைப் போடுவதால் யாவருக்கும் நன்மை யேற்படும்.’ ஸ்பெயினின் அயல்நாட்டுமந்திரி ஸீனர் ஜார்டானா சொன்னதாவது. ‘இந்த ஒற்றுமை உலகிலேயே ஒருமுக்கியமானதும் சாதகமானதுமான தன்மையை உண்டுபண்ணும்.’

3. கிருஸ்துமஸ் தினக்காலையில் பிரிடனில் மாதாக்கோவில் மணிகள் ஒலிக்கப்படும். இவைகளுக்கு இருந்த தடை நீங்கிவிட்டது.

---

## சத்துருவினுடையவும், சத்துருவினால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில், பிரிடிஷ், நேசதேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

**14—12—42.** (திங்கட்கிழமை).

ஐரோப்பா (Europe).

இரவில்.—சுரங்கவெடிகள் பாவுவது—விரோதிக்குச் சொந்தமான சமுத்திரங்களில், இதாலியிலுள்ள நேபிள்ஸ் (Naples).

**வட ஆபிரிக்கா (North Africa).**

கப்பல்கள், இறக்குமதி ஸ்தலங்கள்—டூனிஸ் (Tunis), லெகௌலெட் (Le Goulette).

இருப்புப் பாதை ஸௌஸி (Sousse)-க்கும் ஸிவாக்ஸு (Sfax)-க்கும் இடையே,

கரையோரம் ஒதுங்கின கப்பல்—ஸௌஸி (Sousse)-க்கருகாமையில்.

அச்சுநாட்டு துருப்புகள். ட்ரிபோலி (Tripoli) பக்கம் பின்வாங்குகின்றன.

நோபீலியா (Nofilia) அச்சுநாட்டு விமானங்கள் இறங்குமிடங்கள்—லிபியா (Libya)வில் பின்வாங்கும் அச்சுநாட்டுப் படைகளுக்குப் பின்புறம்.

**ருஷ்யா (Russia).**

விமானப் போர்கள், தரையிலுள்ள விமானங்கள்—ருஷ்யப் போர்முனை எங்கும்.

**தூரக்கிழக்கு (Far East).**

ஜப்பானியத் துருப்புகள்—பூனு (Buna) பிரதேசம்.

விமானக்கூடம்—ஸாலமன்ஸிலுள்ள காஸ்மாடா (Gasmata).

இருப்புப் பாதைகள், சேருமிடம்.—பர்மாவிலுள்ள மியோஹாங் (Myohaung).

**15—12—42.** (செவ்வாய்க்கிழமை).

**ஐரோப்பா (Europe)**—(3 அச்சு நாட்டு விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன).

பகலில்.—ரயில் இஞ்சின்கள், ஒரு சாமான் வண்டி, படகுகள்—பிரான்ஸி (France)லும், பெல்ஜியத்தி (Belgium)லும்.

படகுகள்.—டச்சுக் கடற்கரைக்கருகாமையில்.

**வட ஆபிரிக்கா (North Africa).**

கப்பல் துறைகள்.-டேனிஸ் (Tunis), லா கௌலெட் (Le Goulette).

கேப்ஸ் (Gabes).

விமானமிறங்குமிடம்—டாமெட் (Tamet).

விமானதளம்.—காஸ்டல் பெனிடோ (Castel Benito).

துறைமுகம்.—டிரிபோலி (Tripoli).

**ருஷ்யா (Russia).**

விமானச் சண்டைகள், தரையிலுள்ள விமானங்கள்.—யுத்தரங்கம் முழுவதிலும்.

**தூரக்கிழக்கு (Far East).**

ஜப்பானியஸ்தானம்.-பூனு மிஷன் (Buna-Mission) பிரதேசத்தில்.

விமானக்கூடங்கள்—நியூ கினியிலுள்ள லே (Lae).

நியூபிரிட்டனிலுள்ள காஸ்மாடா (Gasmata).

ஒரு காவற்படை—பர்மாவிலுள்ள ஹுகாங் (Hukawng) பள்ளத்தாக்கில்.

ஒரு சிறு கிராமம்—பர்மாவிலுள்ள மெயிங்வான் (Maingkwan).

**16—12—42.** (புதன்கிழமை).

**ஐரோப்பா (Europe).**

பகலில்.—தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை.

இரவில்.—சுரங்கவெடி பாவுவது—விரோதிக்குச் சொந்தமான சமுத்திரக்கரையோரங்களில்.

**வட ஆபிரிக்கா (North Africa).**

கப்பல் துறைகள்.—டேனிஸ் (Tunis), பிஸர்ட்டா (Bizerta),

விமானதளம்.—டேனிஸ் (Tunis)-க்கும் கேப்ஸு (Gabes)க்கும் அருகாமையில்

விரோதியின் யுத்தக் கப்பல்.—டேனிஸ் (Tunis)க்கருகாமையில்.

பின்வாங்கும் அச்சுநாட்டுப் படைகளில் மீதமுள்ளவை—லிபியாவிலுள்ள நொபிலியா (Nofilia)விற்கு மேற்குப் புறத்தில்; ட்ரிபோலி (Tripoli).

விமானமிறங்குமிடம்.—லாம்பெடுஸா தீவு (Lampedusa).

**ருஷ்யா (Russia).**

விமானச் சண்டைகள், தரையிலுள்ள விமானங்கள்.—ருஷ்யப் போர்முனை முழுவதிலும்.

**தூரக்கிழக்கு (Far East).**

ஜப்பானியப் படைகள்.—பூனு (Buna) பிரதேசம்; விமான தளம்—ஸாலமன்ஸிலுள்ள பூயின் (Buin)தீவு.

விமானக் கூடம்—நியூகினியிலுள்ள லே (Lae).

ஜப்பான் ஆக்கிரமித்த கிராமங்கள்.—பர்மாவிலுள்ள மாங்டா-புதிடாங் (Maungdaw-Buthidaung) பிரதேசம்.

**17—12—42.** (வியாழக்கிழமை).

**ஐரோப்பா (Europe).**

பகலில்.—ரயில்வே லக்ஷியங்கள்—வடபிரான்ஸ் (Northern France).

இரவில்.—லக்ஷியங்கள்—வடமேற்கு ஜெர்மனி (Germany) (18 அச்சுநாட்டு விமானங்கள் நஷ்டம்.)

**வட ஆபிரிக்கா (North Africa).**

கப்பல் துறைகள்.—டேனிஸ் (Tunis), பிஸர்ட்டா (Bizerta); இருப்புப்பாதை ஸௌஸிக் (Sousse)க்கருகாமையில்.

அச்சு நாட்டுப்படைகள்.—ஸர்டி (Sirte)க் கருகாமையில்.

விமானமிறங்கும் இடங்கள்—லிபியாவிலுள்ள ஸர்டிக் (Sirte)கு மேற்கே.

**ருஷ்யா (Russia).**

விமானச் சண்டைகள், விமானக்கூடங்களிலுள்ள விமானங்கள்.—ருஷ்யப் போர்முனை முழுவதிலும்.

**தூரக்கிழக்கு (Far East).**

ஜப்பானியத் துருப்புகள்.-குமிஸி (Kumisi)ப் பிரதேசத்தில்.

ஜப்பானிய படைகள் பூனுமிஷன் (Buna mission) பிரதேசம்.

ஸலாமுவா (Salamaua) (நியூகினியில்). வடஐயர்லாந்திலுள்ள ஹனோவ (Hanover).

டிமோரிலுள்ள மிண்டலோ (Mindelo).

விமானக்கூடம்—மாக்வி (Magwe).



**18—12—42.** (வெள்ளிக்கிழமை).

**ஐரோப்பா (Europe).**

தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை.

**வட ஆபிரிக்கா (North Africa).**

துறைமுகம்.—பிஸர்ட்டா (Bizerta), விமான தளம் டேனிஸ் (Tunis).

இருப்புப்பாதை.—மாடியூர் (Mateur).

இருப்புப் பாதையிலுள்ள ஸ்டேஷன்.—ஸௌஸி (Sousse).

பின்வாங்கும் அச்சு நாட்டுப்படைகள்.—லிபியாவிலுள்ள ஸர்டி (Sirte)க்கு மேற்கே.

**ருஷ்யா (Russia).**

விமானச் சண்டைகள், தரையிலுள்ள விமானங்கள்.—ருஷ்யப்போர்முனை முழுவதிலும்.

**தூரக்கிழக்கு (Far East).**

நியூஜார்ஜியாவிலுள்ள மூண்டா (Munda) பிரதேசம்.

விரோதிக்குச் சொந்தமான கட்டடங்கள் டிமோரிலுள்ள மொயபிஸ் (Moabisse), மிண்டலோ (Mindelo), பூனு (Buna) பிரதேசம்.

ஜப்பான் ஆக்கிரமித்த கிராமம்—பர்மாவிலுள்ள ராதிடுங் (Rathedung).

**19—12—42** (சனிக்கிழமை).

**ஐரோப்பா (Europe)**—(6 நேசதேச விமானங்களும் 32 அச்சுநாட்டு விமானங்களும் நஷ்டமாயின.)

பகலில்.—விமானதளங்கள்—ஹாலந்து, பெல்ஜியம் (Lowcountries), வட பிரான்ஸ் (Northern France).

**வட ஆபிரிக்கா (North Africa).**

கப்பல் துறைகள்.—பிஸர்ட்டா (Bizerta), டேனிஸ் (Tunis),

போக்குவரத்து, கட்டடங்கள் — பியூராட் (Buerat).

எண்ணெய் கிணறுகள்—லெகௌலெட் (Le Goulette), ஸிஸிலியிலுள்ள காமிஸோ (Comiso) வில் விமானக்கூடம்.

**ருஷ்யா (Russia)**—(12—12—42 முதல் 19—12—42) வரையோடு முடிவடையும் வாரத்தோடு 166 ருஷ்ய விமானங்களும், 322 அச்சுநாட்டு விமானங்களும் நஷ்டமாயின).

விமானச் சண்டைகள், தரையிலுள்ள விமானங்கள்.—ருஷ்யப் போர்முனை முழுவதிலும்.

**தூரக்கிழக்கு (Far East).**

நியூ கினியிலுள்ள பூனு (Buna) பிரதேசம், ஸாலமன்ஸிலுள்ள மாடாங் (Madang).

விமானக்கூடம் ஸாலமன்ஸிலுள்ள பூயின் (Buin).

பர்மாவிலுள்ள டோங்கூ (Toungoo) பிரதேசம்.

**20—12—42.** (ஞாயிற்றுக்கிழமை).

**ஐரோப்பா (Europe)**—(6 நேசதேச விமானங்கள் திரும்பிவரவில்லை).

பகலில்.—விமானதளம்—ரோமலி ஸேஸர் ஸினே (Romilly-Sur-Seine).

விமான எதிர்ப்புகள்.—வட பிரான்ஸில் லெஹாவரி (Lehavre) லிருந்து கிராவிலைன்ஸ் (Gravelines) வரையுள்ள பிரதேசத்தில்.

**வட ஆபிரிக்கா (North Africa).**

கப்பல் துறைகள்.-பிஸர்ட்டா (Bizerta).

விமானத்தளம்—டேனிஸ் (Tunis), கேப்ஸ் (Gabes).

எஞ்சிய அச்சுநாட்டுப் படைகள்—ஸர்டி (Sirte), ட்ரிபோலி (Tripoli).

விமானக்கூடம்—ஹோம்ஸ் Homs).

**ருஷ்யா (Russia).**

விமானச் சண்டைகள், தரையிலுள்ள விமானங்கள்.—ருஷ்யப் போர்முனை முழுவதிலும்.

**தூரக்கிழக்கு (Far East).**

ஜப்பானியப் படைகள்-பூனு-மிஷன் (Buna-Mission) பிரதேசம்,

இறக்குமதி ஸ்தலம்.—மாடாங் (Madang).

விமானக்கூடம்.—லே (Lae), துறைமுகம் பர்மாவிலுள்ள அக்கியாப் (Akyab).

## விரோதிகளின் விமானப்படையெடுப்புகளின் விவரங்கள்.

**15—12—42.** (செவ்வாய்க்கிழமை).

**பிரிடன் (Britain).**

பகலில்.—ஒரு பட்டணம்—கிழக்கு ஆங்கிலியா (East Anglia), இங்கிலாந்தின் தென்கிழக்குக் கடற்கரையில்.

ஒரு இடம்.-ஒரு அச்சுநாட்டு விமானம் சேதமாயின. ஒரு பிரிடிஷ் விமானம் திரும்பி வரவில்லை.

**ருஷ்யா (Russia).**

விமானச் சண்டைகள்.—ஸ்டாலின்கிராட் (Stalingrad), ரெஷவ் (Rzev) பிரதேசங்கள்.

**தூரக்கிழக்கு (Far East).**

நியூ கினியிலுள்ள மோர்ஸ்பி துறைமுகம் (Moresby), இந்தியாவிலுள்ள சிட்டகாங் (Chittagong) பிரதேசம் (3 ஜப்பானிய விமானங்கள் சேதம்).

**16—12—42.** (புதன்கிழமை).

**பிரிடன் (Britain).**

இங்கிலாந்தின் தெற்கு, தென்கிழக்குக் கடற்கரையோரங்களிலுள்ள இடங்கள்.

**ருஷ்யா (Russia).**

ருஷ்யத் துருப்புகள்.—ஸ்டாலின்கிராட் (Stalingrad) பிரதேசத்தில் முன்னேறுகின்றன.

**தூரக்கிழக்கு (Far East).**

நியூ கினியிலுள்ள மோர்ஸ்பி (Moresby) துறைமுகம், இந்தியாவிலுள்ள சிட்டகாங் (Chittagong), பென்னி (Fenny).

**17—12—42.** (வியாழக்கிழமை).

**பிரிடன் (Britain).**

பிரிடனில் எங்கும் விமான நடமாட்டமேயில்லை.

**வட ஆபிரிக்கா (North Africa).**

வேவுபார்த்தல்.—லிபியாவிலுள்ள பெங்காஸி (Benghazi) (ஒரு அச்சு நாட்டு விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டது.)

**ருஷ்யா (Russia).**

ருஷ்ய ஸ்தானங்கள்.—ரிஷெவ் (Rzev), ஸ்டாலின்கிராட் (Stalingrad) பிரதேசங்கள்.

**18—12—42.** (வெள்ளிக்கிழமை).

**தூரக்கிழக்கு (Far East).**

விமான தளம்—ஸாலமன்ஸிலுள்ள கூடால்கனர் (Gudalcanar).

**பிரிடன் (Britain).**

விமான நடமாட்டமேயில்லை.

**வட ஆபிரிக்கா (North Africa).**

நேசதேசப் படையின் முன்னணி ஸ்தானங்கள்—டூனிஸ் (Tunis). பிரதேசம்.

**ருஷ்யா (Russia).**

ருஷ்யத் துருப்புகள்—மத்திய தெற்குப் பகுதிகளில்.

**தூரக்கிழக்கு (Far East).**

விமானத் தளம்.—ஸாலமன்ஸிலுள்ள கூடால்கனர் (Gudalcanar).

**19—12—42.** (சனிக்கிழமை).

**பிரிடன் (Britain).**

தென்கிழக்கு இங்கிலாந்து (England) (3) அச்சுநாட்டு விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன.

**வட ஆபிரிக்கா—(North Africa).**

நேசதேச விமானதளம்.—போன் (Bone).

**ருஷ்யா (Russia).**

விமானச் சண்டைகள், ஸ்டாலின்கிராட் பிரதேசம்.

**தூரக்கிழக்கு (Far East).**

தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை.

**20—12—42.** (ஞாயிற்றுக்கிழமை).

**பிரிடன் (Britain).**

கடற்கரைப் பிரதேசங்கள்—வடகிழக்கு இங்கிலாந்து (N. E. England).

**வட ஆபிரிக்கா (North Africa).**

விமானச் சண்டைகள்-டூனிஸியா (Tunisia).

**தூரக்கிழக்கு (Far East).**

இந்தியாவிலுள்ள கல்கத்தா (Calcutta), இந்தியாவிலுள்ள சிட்டகாங் (Chittagong) பிரதேசம்.

**21—12—42.** (திங்கட்கிழமை).

**பிரிடன் (Britain).**

தென்கிழக்குக் கடற்கரைப் பிரதேசம்.—இங்கிலாந்து (England).

**வட ஆபிரிக்கா (North Africa).**

நேசதேசத் துருப்புகள்.—மெட்ஜெஸ்பாப் (Med-Jez-Bob) பிரதேசம்.

**தூரக்கிழக்கு (Far East).**

கல்கத்தா (Calcutta) பிரதேசம் (இந்தியா).

---

# யுத்தக் குறிப்புகள்.

---

**டான் நதியின் மத்திய பாகத்தில் போர்.** இப்பிரதேசத்தில் ருஷ்ய முன்னேற்றம் தொடர்ந்து கடுமையாக நடந்து வருவதாகச் செய்தி கிடைக்கிறது. அதாவது ஸ்டாலின்கிராட்டை நோக்கி வரும் ஜெர்மன் படையின் வடக்குப் பக்கத்தில் இத்தாக்குதல் நடைபெறுகிறது. வாரனேஷ்-ராஸ்டவ் ரயில்வேலைன் மில்லரோவோவிற்கு வடக்கில் 25-மைல் தூரத்தில் துண்டிக்கப்பட்டது. இதனால் ஜெர்மன் போக்குவரத்துக்கு ஆபத்து ஏற்பட்டிருக்கிறது. ஜெர்மானியரின் நிலைமை கவலைக்கிடமாக இருக்கிறதாகச் சொல்லப்படுகிறது. காகஸஸ் பாகத்திலுள்ள ஜெர்மன் படைகளைப் பிரிப்பதே ருஷ்யர்களின் நோக்கம். ராய்டர் ராணுவ நிருபர் சொல்லுவதாவது 'வாரனேஷுக்குத் தெற்கில் 150 மைல் தூரத்தில் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் புதிய ருஷ்ய முன்னேற்றத்தினால் எதிரிகளுக்கு அதிக சிரமம் ஏற்பட்டிருக்கிறது. கார்கவ்-கமஸ்காயா, ஸ்டாலின்கிராட் இருப்புப் பாதைக்கும்



ஆபத்து ஏற்பட்டிருக்கிறது. இதனால் ஸ்டாலின்கிராட், ராஸ்டவ், காகஸஸ் இந்தப் பிரதேசங்களில் சிரமம் ஏற்படும். மார்ஷல் டிமோஷன்கோவின் படைகள் முன்னேற வசதி ஏற்பட்டிருக்கிறது. ஜெர்மன் படைகளை அடைத்து விடலாம். இப்படியே ருஷ்யர்கள் முன்னேறினால் எதிரிகளால் இனி சமாளிக்க முடியாது. மத்திய முனையிலும் வடக்கிலும் அதிக சிரமம் ஏற்படும். இதற்கான சின்னங்கள் காணப்படுகின்றன.

வி வி வி வி வி வி வி

**ஸ்டாலினின் 63-வது பிறந்த நாள்.** பிரிடனின் டிஸம்பர் 20உ ஒலிபரப்புகள் மூலம் கொண்டாடப்பட்டது. டான் நதியில் முன்னேற்றப்போர் நடக்கும் இந்த அரிய சந்தர்ப்பத்தில் இவரது பிறந்த நாள் வருவது ஒரு சுப சூசகம். ருஷ்யாவிற்கும் உலகிற்கும் நெருக்கடியான இந்த சந்தர்ப்பத்தில் ஸ்டாலின் ஒரு பெரிய தலைவராக விளங்குகிறார். லண்டன் கவுன்டி கவுன்ஸிலின் தலைவரான J.J. பிளேக் 'நேசநாட்டு மக்கள் நாகரீகத்தை நிலைநாட்ட முயலுவதற்கு ஸ்டாலினின் உணர்ச்சி கொடுக்கும் தலைமை முக்கிய காரணமாக இருக்கிறது' என்றார்.

வி வி வி வி வி வி வி

**பர்மாவினுள் முன்னேற்றம்.** பர்மாவைத் திரும்பப் பிடிப்பதாக வேவல் சொன்னதற்கு அறிகுறியாக அக்யாபை நோக்கி பிரிடிஷார் முன்னேறுகிறார்கள். தற்சமயத்தில் கல்கத்தாவிற்கு ஏற்பட்டிருக்கும் பயத்தை தவிர்த்து, மீண்டும் சில கேந்திர ஸ்தானங்களைக் கைப்பற்றுவதுதான். இதுவரை ஒரு பெரிய போர் ஏற்படவில்லை. எதிரி பின் வாங்கிக்கொண்டே போகிறான்.

அக்யாப், டைம்ஸ் பத்திரிகை கூறும் விதமாக ஒரு பெரிய ராணுவ முக்கியத்வம் வாய்ந்ததில்லாததாயினும் அதை நாம் வசப்படுத்தினால் எதிரிகளுக்கு இந்தியாவிற்கு அருகில் ஒரு முக்கிய துறைமுகமும், விமானதளமும் கிடைக்காது போகும். அரக்கானிலிருந்து ரோமிற்கு ஒரு நல்ல மார்க்கமிருக்கிறது.

வி வி வி வி வி வி வி

**முதல் தாக்குதல்.** சிட்டகாங்கில் 7-வது தடவை தாக்குதல் ஏற்பட்டது. டிஸம்பர் 20, 21, 23 தேதிகளிலும் 24உ கல்கத்தாவிலும் தாக்குதல் ஏற்பட்டது. இம்மூன்று தினங்களிலும் ஜப்பானிய விமானங்கள் இரவில் வந்தன. இதிலிருந்து நகரின் பாதுகாப்பு பலமாக இருக்கிறதென்று தெரிகிறது. குண்டுகளும் நகரின் வெளிப் பிரதேசங்களிலேயே விழுந்தன. நகரில் யாவரும் அமைதியாக இருந்தனர். சேதம் மிகச்சொற்பம். ஏ. ஆர். பி. திறமையுடன் வேலை செய்தது. விளக்கணைப்பும் பூர்ணமாக இருந்தது. வேலைக்காரர்கள் வழக்கம் போல் தொழிற்சாலைகளுக்கும் மில்லுகளுக்கும் செல்லுகின்றனர் என்று தொழில் இலாகா மந்திரி சொல்லியிருக்கிறார்.

வி வி வி வி வி வி வி

**மத்தியதரைக்கடல்.** நவம்பர் 8-ம் தேதி நேசப்படைகள் ஆபிரிக்காவில் இறங்கிய பிறகும், எல் அகிலாவுக் கப்பால் ரோமல் துரத்தப்பட்ட பொழுதும், மத்தியதரைக்கடல் நிலைமையில் சற்று மாறுதல் ஏற்பட்டிருக்கிறது. அங்குள்ள நேசதேச அயல் நாட்டுக்கப்பற் படையின் தலைவரான ஸர் ஆண்ட்ரூ கன்னிங்ஹாம் பத்திரிகை நிருபர்கள் கூட்டத்தில் பின்வருமாறு சொன்னதாவது:—'டூனிஸியாவுக்குப் பக்கத்தில் அச்சு நாட்டுக்கப்பல் தினம் ஒன்று வீதம் மூழ்கடிக்கப்படுகிறது. பிரிடிஷ் 1-வது, 8-வது படைகளுக்கும், மால்டாவுக்கும் ஸப்ளைகள் சரியாகச் செல்லுகின்றன. இதனால் அச்சுநாடுகளைக்காட்டிலும் நேசப்படைகள் அதிகம் பலம் பெற்று வருகின்றன. டாக்கரிலுள்ள பிரெஞ்சுக் கப்பல்கள் கடற்கரைப் பாதுகாப்புக்கு உபயோகப்படுகின்றன. அலெக்ஸாண்டிரியாவிலுள்ளவைகளும் அவ்விதம் ஈடுபடும். ரோமல் ஓட்டம் பிடித்ததின் பயனாக மத்தியதரைக்கடலில் கிழக்கிலும், மத்தி

யிலும் பிரிடிஷ் கப்பற்படை தாராளமாக நடமாடுகிறது. டோரன் சம்பவத்தினால் சில சந்தேகங்கள் நிவர்த்தியாயிற்று. அங்கே சில கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டதாலும், சிலவை உபயோகமில்லாமல் போனதாலும், அந்த பயம் நமக்கில்லை. இதாலியக் கப்பற்படையோ வெளியிலேயே தலை காட்டவில்லை.

வி வி வி வி வி வி வி

**ரோம்.** இந்த யுத்தம் என்ன என்பதை இதாலியர்களுக்கு பிரிடிஷ் விமானப்படை எடுத்துக் கூற ஆரம்பித்துவிட்டது. டூரின், மிலான், நேபிள்ஸ், ஜினோவா முதலியவைகளின் பேரில் நடந்த பிரிடிஷ் விமானத்தாக்குதல்கள் கடுமையாகவே இருந்தன. ரோமாபுரியை ராணுவப் பாதுகாப்பில்லாத நகரமென்று செய்ய ஏற்பாடு நடந்து வருகிறது. இந்த ஏற்பாடு போப் (Pope) பினால் செய்யப்பட்டதேயாகும். 10 வருஷங்களுக்கு முன் நடந்த ஒரு உடன்படிக்கையின் பயனாக ரோமின் ஒரு பாகத்தில் அவருக்கு ஸர்வாதிகாரம் கொடுக்கப்பட்டிருந்தது. அது எந்த பாகம் என்று விமானத்திலிருந்து கண்டு பிடிப்பது சாத்தியமில்லாததால் அங்கிருந்து எல்லா ராணுவங்களும் அகற்றப்படுகின்றன.

வி வி வி வி வி வி வி

**குற்றவாளியா, தந்திரசாலியா.** டிஸம்பர் 16-ம்வ அட்மிரல் டார்லான் நேசதேசப் பத்திரிகைகளுக்கு ஒரு அறிக்கையை விடுவித்திருக்கிறார். அதைக்கொண்டு அவன் திருப்தி அடையாமல் போனாலும் ஜெர்மனியுடன் உறவு கொண்டாடினதற்கு சில காரணங்கள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. அவர் சொன்னதாவது:—'ஜெர்மானியர் என்பேரில் அதிக கவனம் செலுத்திவந்தனர். நான் நகரும்போதும், ஏதாவது எழுதும்போதும், யாரிடமாவது பேசிக்கொண்டிருக்கும்போதும் ஜெர்மானியரும் கூடவே அவைகளை கவனித்து வந்தனர்.' பிரான்ஸுக்கு நேசதேச உதவி அனுப்ப முடியாமலிருந்தபொழுது ஜெர்மன் பலாத்காரம் அதிகமாக ஏற்படாமலிருக்கும்படி தான் பாதுகாத்து வந்ததாயும், வட ஆபிரிக்காவில் யுத்த சக்தியை சரியான சமயத்தில் அதாவது நேசப்படைகள் அங்கு இறங்கியதும் விருத்திசெய்து நேசதேசங்களுடன் தானும் சேர்ந்துகொண்டதாயும் சொன்னான். இதற்கு அத்தாக்ஷியாக வட ஆபிரிக்காவிலுள்ள பிரெஞ்சு சைனியத்தையும், கடற்படையையும், டாகர், அலெக்ஸாண்டிரியா போன்ற துறைமுகங்களிலுள்ள பிரெஞ்சுக் கப்பல்களையும் நேசதேசங்களிடம் ஒப்படைக்கத் தான் ஒத்துக்கொண்டிருப்பதாயும் தெரிவித்தான். இவைகளைப்பார்த்தால் டார்லான் ஒரு ஏமாற்றக்காரனைப் போலவும் காணப்படலாம். ஆனால் தற்சமயத்தில் அவன் நேசதேசங்களுக்குச் செய்திருக்கும் ஊழியத்தைப் பார்த்தால் அப்படி நினைப்பது தவறு என்று சொல்லப்படும். அதனால்தான் நவம்பர் 8 முதல் வட ஆபிரிக்க ஜனங்கள் யுத்த முயற்சியில் உதவுவதை ஜனாதிபதி ரூஸ்வெல்ட் அங்கீகரித்திருக்கிறார்.

டார்லான் தற்சமயத்தில் கூறும் பிசகுகளைப் பார்த்தால் முன் செய்த குற்றங்களுக்கு பச்சாதாபப்படுகிறவனைப் போலவும், நேசநாடுகளுக்கு வெற்றி கிடைத்துவரும் இந்த சந்தர்ப்பத்தில் தானும் ஒரு மேன்மை ஸ்தானத்தை அடைய விரும்புகிறவனைப் போலவும் காணப்படுகிறது. அது எப்படியிருந்தாலும் அயல் நாட்டு பரஸ்பர சம்பந்தக் கமிட்டியின் சேர்மனான ஸால் பினும் சொல்லும் விதமாக காத்தாடியைப்போல் 'அட்மிரல் டார்லான் இந்த யுத்தத்தில் எந்தக் கக்ஷி ஜயிக்கப் போகிறது என்று தெரிந்துகொண்டிருக்கவேண்டும்.' [பிற்பட்டு 24—12—42-ம் தேதி வியாழக்கிழமை பிற்பகலில் அட்மிரல் டார்லான் ஆல்ஜியர்ஸில் கொலை செய்யப்பட்டதாக ரேடியோ மூலம் தகவல் கிடைத்திருக்கிறது. பத்திராதியர்].

வி வி வி வி வி வி வி

**யுத்தமல்ல, ஆனால் கொலை.** டிஸம்பர் 16-ம்வ காமன்ஸ் சபையில் அயல் நாட்டு மந்திரி ஈடன், நேசநாடுகளோடும் பிரிடிஷ் குடியேற்ற நாடுகளோடும் பேச்சு வார்த்தை நடத்தி, யுத்தக்குற்றங்களை விசாரிக்க ஒரு கமிஷன் ஏற்படுத்தப்போவதாக அறிவித்தார். அதற்கு



மறுநாள் கிழக்கு ஐரோப்பாவில் ஜெர்மானியர் யூதர்களை அடியோடு அழிக்க ஏற்பாடு செய்திருப்பதை பத்திரிகையிலிருந்து மிஸ்ட்டர் ஈடன் சபையின் முன்பு படித்தார். உடனே சபை பூராவும் அனுதாபம் தெரிவிக்கும் முறையில் எழுந்து நின்றது. இவ்வித சம்பவம் காமன்ஸ் சபையில் நடந்ததே இல்லையென்று லாயிட் ஜார்ஜ் தெரிவித்தார். 'இது யுத்தம் அல்ல, கொலை' என்று L. S. லிப்ஸன் சொன்னார்.

யூதர்களை ஜெர்மானியர் கொலை செய்வதைப்பற்றி டிஸம்பர் 19-ம்வ வெளிவந்த நேசதேசச் செய்தியிலிருந்து, ஒரு வருஷத்திற்குள் போலந்திலுள்ள யூதர்களில் பாதிப்பேரைக் கொல்ல ஜெர்மானியர் விசேஷ கோஷ்டிகளைத் தயாரித்து மின்சார சக்தியினாலும், விஷப் புகையினாலும் கொல்ல ஏற்பாடு செய்திருக்கும் விஷயம் வெளிவந்தது. தினம் 10,000 பேர் வீதம் நாட்டைவிட்டு துரத்தவும் படுகின்றனர். அமெரிக்க யூத சபையின் தலைவரான ஸ்டீபன் வைஸ் என்பவரின் அபிப்பிராயப்படி 1939 முதல் அச்சு நாடுகளின் வசத்திலிருக்கும் நாடுகளிலிருந்து 20,00,000 பேர்கள் தேசப் பிரஷ்டம் செய்யப்பட்டனர். இன்னும் 50,00,000 பேர்கள் சீக்கிரம் துரத்தப்படுவார்கள்.

வி வி வி வி வி வி வி

**டெஹ்ரான்.** சமீபத்தில் பெர்ஸியாவில் நடக்கும் கலவரங்கள் அச்சு நாட்டுத் தூண்டுதலின் பேரில் நடைபெறுகிறதாகத் தெரிகிறது. முக்கியமாகத் தலைநகரிலேயேதான் நடைபெறுகின்றன. அவை உணவுத் தட்டினால் ஏற்பட்டவையல்ல. ஆனால் அங்குள்ள உணவுப்பொருள்களைப் பிரிடன் பறித்துக்கொண்டு பஞ்சத்தை உண்டாக்கிவிட்டதாக அச்சு நாட்டுப் பிரசாரம் நடைபெறுகிறது. உண்மையில் பிரிடனும், அமெரிக்காவும் இரானுக்கு உணவுப்பொருள்களை அனுப்புவதாக ஒப்புக்கொண்டு அனுப்பி வருகின்றன. சைனிய ஸப்ளைகளிலிருந்து மத்தியக்கிழக்கிற்கு அனுப்பப்பட்டு வருகின்றன. பொருளாதார நிலையை அபிவிருத்தி செய்ய பிரிடன் தானியங்களையும் சாமான்களையும் அனுப்பியது. இந்த உதவியை பிரதம மந்திரியான குவாம் ஸுல்தானே அங்கீகரித்து பின்வருமாறு பேசியிருக்கிறார். 'இந்த உதவி பரஸ்பர நட்பின் அடையாளமாக இருக்கிறது. இதிலிருந்து இரான் நேச நாடுகளுடன் ஒத்துழைக்கவில்லை என்ற அச்சு நாட்டுப்பிரசாரம் பொய் என்று தெரியவரும்' என்றார்.

வி வி வி வி வி வி வி

**சாமான் உற்பத்தியும், தயாரிப்பும்; அதன் பலனும்.** டிஸம்பர் 16வ காமன்ஸ் சபையில் காப்டன் ஆலிவர் லிட்டில்டன் அறிவிக்கும் போது பிரிடிஷ், அமெரிக்க வியாபாரக் கப்பல்களின் உற்பத்தி 1943-ல் 200 லக்ஷம் டன்களைவிட அதிகமாக இருக்குமென்றார்.

அமெரிக்காவிற்குச் சமீபத்தில் இவர் சென்று இவ்வித முடிவிற்கு வந்தார்.

'நாம் ஒன்றிரண்டு ரகசிய விமான ரகங்களை உண்டுபண்ணியிருக்கிறோம். இவைகள் எதிரிகளை அதிகமாகத் தாக்கும்' என்று அமெரிக்கப் போர் விமானத் தலைவர் ஆர்னால்டு சொன்னார்.

யுத்த உதவி மந்திரி ராபர்ட் பாடர்ஸன் அமெரிக்கப் படையில் 50 லக்ஷம் பேர் இருப்பதாகத் தெரிவித்தார்.

இவ்வருஷம் பிப்ரவரி முதல் டிஸம்பர் வரை அமெரிக்கப்போர் விமானங்கள் 928 அச்சுநாட்டு விமானங்களைச் சுட்டு வீழ்த்தியதாகச் சொன்னார். அதாவது நஷ்டமான அமெரிக்க விமானம் ஒன்றுக்கு எதிரிக்கு 4 விமானங்கள் வீதம் நஷ்டம்.

# சட்ட மறுப்பு இயக்கம்.

### மேன்மை தங்கிய வைஸ்ராயின் வேண்டுகோள்.

கல்கத்தா, டிஸம்பர் 17.

பிரிடிஷ் கவர்ன்மெண்டின் நற்பெயரில் அக்கரைகொண்டவர்களெல்லாம் காங்கிரஸ் கட்சித் தலைவர்களது வேலைத் திட்டத்தின் காரணமாக ஏற்பட்ட பெருத்த கலகத்தை வருத்தத்துடன் சமாளிக்கவேண்டியிருக்கிறது. காட்டுமிருண்டித் தன்மைவாய்ந்த கொரேமான திடுக்கிடும் செயல்கள் இந்தக் குழப்பத்தில் நிகழ்ந்திருக்கின்றன. ஹிந்து சமூகத்தில் பெரும் பகுதியினர் இந்தக் கலகத்தை ஆதரிக்கவில்லை. முஸ்லீம் சமூகத்தினரும், இந்திய மக்களிலுள்ள இதர முக்கியமான பகுதியினரும் இந்தக்கலகத்தில் கலக்கவில்லை. இந்திய ஸமஸ்தானங்களைச் சிறிதளவே இந்தக் கலகம் பாதித்திருக்கிறது.

நன்முக ஒழுங்குபடுத்தப்பட்ட சிறிய பகுதியே இதைத் துவக்கியிருக்கிறது. அதில் சேர்ந்தவர்கள் அஹிம்சைக் கொள்கையைப் புறக்கணித்து ஏராளமாக சேதத்தை விளைவித்தார்கள். அதனல் போக்குவரத்துக்கு தடை ஏற்பட்டது. நிரபராதியான பொது மக்களுக்கு உயிர்ச் சேதமும், பொருள் சேதமும் ஏற்பட்டது. பொது ஜன வசதிகள் அழிக்கப்பட்டதால் வரி செலுத்துவோருக்கு அதிக நஷ்டம் ஏற்பட்டது.

இந்தியாவை ஜப்பானியர்கள் படையெடுக்கவிடாமல் தடுக்கவும், இந்தியப் பாதுகாப்புக்கும் அச்சு நாடுகளுடன் போரிடவும், தேவையான யுத்தப் பொருள்களைச் சேகரிக்கவும், நாம் பலத்த முயற்சிகள் எடுத்துக்கொண்டிருக்கும்பொழுது இவ்வித இயக்கம் தோன்றிற்று. அதை அடக்குவதற்கு நம்முடைய ராணுவம் அதிகம் ஈடுபடவேண்டியதாயிற்று. இத்துடன் யுத்த முயற்சியிலும் தடை ஏற்பட்டது.

### திடுக்கிடும் சம்பவங்கள்.

இவ்வியக்கத்தின் பயனுக பல கலகங்கள் ஏற்பட்டன. அதை ஆரம்பித்தவர்கள் மிருகத்தன்மையுடன் பலாத்காரத்தை உபயோகித்தார்கள். இத்துடன் நிற்காமல் வாலிபர்களையும் அவ்வியக்கத்தில் சேரும்படி தூண்டிவந்தார்கள். அவர்களின் சூழ்ச்சியில் பல வாலிபர்கள் அகப்பட்டிருக்கிருர்கள். அவர்கள் மிகவும் சாமர்த்தியம் வாய்ந்தவர்கள். வருங்காலத்தில் அரசியல் பொறுப்பு ஏற்றுக்கொள்ளக்கூடியவர்கள். இம்மாதிரி வாலிபர்களை சட்ட மறுப்பு இயக்கத்தில் ஈடுபடும்படிசெய்து பெருத்த குழப்பத்தைக் கிளப்பிவிட்டிருக்கிருர்கள். இவர்கள்தான் இந்தியாவில் அமைதிக் குறைவுக்கும், உற்சாகமுள்ள வாலிபர்களைக் கெட்டவழியில் திருப்பியதற்கும் பொறுப்பாளிகளாவார்கள்.

ஒழுங்கை நிலை நாட்டுவதில் பொது மக்களுக்கு அதிக குழப்பம் ஏற்படாமல் செய்ய சர்க்கார் சொற்பமாக பலாத்கார முறையை வெற்றிகரமாகக் கையாண்டார்கள். ஏனென்ருல் அதில் வெகு சிலரே கொல்லப்பட்டனர். இப்பொழுது நிலைமையில் அமைதி ஏற்பட்டிருக்கிறது. இருந்தாலும் சில பாகங்களில் ஏற்பட்டிருக்கும் கலகங்களை அடக்க வெகு ஜாக்கிரதையான முறைகளைத் தீவிரமாக எடுத்துக்கொள்ளவேண்டியிருக்கிறது.

---

# யூதர்களைக் கொலைசெய்த குற்றவாளிகள் தண்டிக்கப்படுவார்கள்.

### நேசநாடுகளின் தீர்மானம்.

பெல்ஜியம், ஸெகோஸ்லோவாகியா, கிரீஸ், லக்ஸம்பெர்க், ஹாலந்து, நார்வே, போலந்து, யூனைடெட் ஸ்டேட்ஸ், கிரேட் பிரிடன், வட ஐயர்லாந்து,



ஸோவியத் ஐக்கிய அரசாங்கம், யூகோஸ்லாவியா முதலிய அரசாங்கங்களுக்கும், பிரெஞ்சு தேசிய கமிட்டிக்கும், ஐரோப்பாவில் ஜெர்மானியர் செய்துவரும் அட்டூழியங்களைப்பற்றி அநேக அறிக்கைகள் வந்திருக்கின்றன. ஜெர்மனி ஆக்கிரமித்த பிரதேசங்களிலுள்ள யூதர்களுக்கு இயற்கையாகவுள்ள ஸ்வதந்திரத்தைக்கூட கொடுக்காமலிருப்பதில் திருப்தியடையாமல், ஐரோப்பாவில் யூதர்களைப் பூண்டுடன் அழித்துவிடவேண்டுமென்று அடிக்கடி சொல்லிவரும் ஹிட்லரின் எண்ணத்தை இப்பொழுது ஜெர்மன் ராணுவ அதிகாரிகள் பூர்த்திசெய்து வருகிருர்கள்.

ஜெர்மனி ஆக்கிரமித்த எல்லா நாடுகளிலிருந்தும் யூதர்கள் கடுமையாக நிர்ப்பந்திக்கப்பட்டு கிழக்கு ஐரோப்பாவுக்கும், போலந்துக்கும் ஏற்றியனுப்பப்படுகிருர்கள். போலந்தை அவர்களின் கொலைக்களம் என்றே சொல்லலாம்.

ஜெர்மன் வீரர்கள் ஆக்கிரமித்த இடங்களிலிருந்து யூதர்கள் வரிசைக் கிரமமாகக் காலி செய்யப்படுகிருர்கள். ஆங்காங்கு யுத்த சம்பந்தமான கைத்தொழில்களில் ஈடுபட்டிருக்கும் யூதர்கள்மட்டில் அனுப்பப்படுவதில்லை. இம்மாதிரி வெளிகடத்தப்பட்ட யூதர்களில் ஒருவராவது திரும்பிவந்ததாகத் தெரியவில்லை.

திடசரீரமுள்ளவர்களைத் தொழிலாளிகள் முகாம்களிலிருந்து வேலை செய்து இறக்கும்படி செய்கின்றனர். வியாதியஸ்தர்களை ஆதரவில்லாமல் வெளியே கிடக்கும்படி விட்டுவைத்தோ, பட்டினிபோட்டோ, அல்லது வேண்டுமென்று கொலை செய்தோ இறந்துபோகும்படி செய்கின்றனர். இம்மாதிரி படுகொலைகளுக்கு ஆளான நிரபராதியான ஸ்திரீ, புருஷர்கள், குழந்தைகள் இவர்களின் எண்ணிக்கை கணக்கிலடங்கவில்லை.

மேற்சொல்லிய அரசாங்கங்களும், பிரெஞ்சு தேசிய கமிட்டியும் எதிரி இம்மாதிரி கொடுமையான முறையைக் கையாளுவதைப்பற்றி அதிக பலமாகக் கண்டனம் செய்கின்றன. ஹிட்லரின் கொடுமையை அடியோடு ஒழிப்பதற்கு ஸ்வதந்திரத்தை விரும்பும் தேசத்தினர் கொண்டிருக்கும் தீர்மானத்தை இம்மாதிரி சம்பவங்கள் அதிகமாகப் பலப்படுத்தும் என்று அவை உறுதி கூறுகின்றன.

இந்த விதமான குற்றங்களுக்கு யார் பொறுப்பாளிகளோ அவர்களுக்குப் பதிலுக்குப் பதிலாக தண்டனை கொடுக்கப்போவதையும், அம்மாதிரி தண்டிப்பதற்கு அவசியமான நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளவும் தீர்மானித்திருப்பதை மீண்டும் அவை உறுதி கூறுகின்றன.

---

# சர்வதேச செய்தி ஸ்தாபனம்.

தங்கள் பொய்கள் நாளடைவில் வெளியாகிவிடுமென்று நாஸி பிரசாரகர்களுக்கு நன்முகத் தெரியும். அவர்கள் வெளியிடும் பொய்களைப் பிறர் கண்டுகொள்வார்களோ என்று பயந்து, கீழே குறிக்கப்பட்ட தந்திரத்தைப்போல் பல தந்திரங்களைக் கையாளுகிருர்கள். அவ்வித தந்திரத்தைக் கண்டுபிடித்தவர் கோயபெல்ஸ்தான். அதைப்பற்றி W. A. ஸின்களேர் நவம்பர் 10-ல் பி. பி. ஸி.யில் ஒலிபரப்பினர். அது பின்வருமாறு :—

### புதிய தந்திரம்.

இப்பால் நாஸிகள் ஒரு பிரசார சூழ்ச்சியைக் கையாண்டு வருகிருர்கள். அவர்கள் வெளியிடும் அறிக்கைகளில் மேற்சொல்லிய ஸர்வதேசச் செய்தி ஸ்தாபனத்திலிருந்துவந்ததாக அடிக்கடி ஜெர்மானியர் பிரஸ்தாபிக்கிருர்கள். உண்மையில் அம்மாதிரி ஸ்தாபனமே கிடையாது. அது மூன்று நாலு வாரங்களுக்கு முன்தான் ஜெர்மன் பிரசார மந்திரியால் சிருஷ்டிக்கப்பட்டது.

அச்செய்தி ஸ்தாபனம் நடுநிலைமை வகிக்கிறது என்று சொல்லப்படுகிறது. நமது ரேடியோவில் ராயிட்டர், யூனைடெட் பிரஸ் அல்லது மற்ற ஏஜென்ஸிகளிலிருந்துவந்த செய்தி என்று சொல்லப்படுவது போல், ஜெர்மன் ரேடியோவிலும் மேற்சொல்லிய ஏஜென்ஸியிலிருந்து வந்த செய்தி என்று ஒலிபரப்பப்படுகிறது. உதாரணமாக நவம்பர் 3-ல் வட ஆபிரிக்காவிலுள்ள இன்டர் நேஷனல் இன்பர்

மேஷன் பீரோவின் விசேஷ நிருபரிடமிருந்துவந்த செய்தி என்று ஜெர்மன் ரேடியோவில் சொல்லப்பட்டது. முதல் நாள் முதற்கொண்டே பீரங்கிப் பட்டாளத்தைப் பலப்படுத்திக்கொண்டு பிரிடிஷார் எல் அலமீன் போர்முனையில் நடத்திய தாக்குதலில் முறியடிக்கப்பட்டார்கள் என்றும், இன்னும் பலவிதமாகவும் ஒலிபரப்பப்பட்டது. இது யாவும் உண்மையல்ல. இம்மாதிரி பொய் வதந்திகளைக் கிளப்பும் ஏஜென்ஸியை நம்பக்கூடாது என்றுதான் நாம் நினைப்போம். ஆனால் உண்மையில் அவ்வித ஏஜென்ஸியே கிடையாது. அப்படி ஒன்று இருக்கிறதாக வைத்துக்கொண்டாலும் அதைச்சார்ந்த நிருபர்கள் வட ஆபிரிக்காவிலோ, வேறு எங்கேயோ கிடையாது.

### இன்னும் பொய்யை விடவில்லை.

மேற்சொல்லிய ஏஜென்ஸி உண்மையில் இருக்கிறதென்று பொய் சொல்லி வரும் வழக்கத்தை நாஸிகள் இன்னும் விடவில்லை. அதைப்பற்றி பேசும்போதெல்லாம் அதற்கும் தங்களுக்கும் யாதொரு சம்பந்தமும் இல்லையென்று அடிக்கடி சொல்லுவதுண்டு. உதாரணமாக அக்டோபர் 31-ல் 1,00,000 டன் நிறையுள்ள நேசதேசக் கப்பல்களை அட்லாண்டிக் சமுத்திரத்தில் 'யு' படகுகள் மூழ்கடித்ததாக இன்டர்நேஷனல் இன்பர்மேஷன் பீரோவிலிருந்து செய்தி கிடைத்திருக்கிறதாக அன்று ஜெர்மன் ரேடியோ ஒலிபரப்பியது. இன்னும் அரை மணி கிரமித்து மொத்தம் 1,65,000 டன் நிறைக்கு அதிகரித்துவிட்டதென்று அதே ஸ்தாபனத்திலிருந்து செய்தி கிடைத்ததாகவும் ஒலிபரப்பப்பட்டது. பிற்பட்டு 3½ மணி கிரமித்து அங்குள்ள ஜெர்மன் அதிகாரிகளிடமிருந்து உத்தியோக முறையில் ஒன்றும் வெளிவராததினால், மேற்படி ஸ்தாபனத்திலிருந்து வந்த எண்ணிக்கையின் விவரத்தை முற்றிலும் நம்ப இடமில்லை என்றும் வெளியிட்டது. தான் எழுதிய ஒரு நாவல் புஸ்தகத்தை வேறொருவர் எழுதியதாகப் பிரசுரப்படுத்தி, அதற்கு முகவுரை தான் எழுதியதாகப் பாசாங்கு செய்யும் ஆசிரியனைப்போல் ஏதோ ஒரு தனி ஏஜென்ஸியிலிருந்து வந்த செய்தி என்று சொல்லிக்கொண்டு ஜெர்மன் ரேடியோ பொய் விவரங்களை ஒலிபரப்புகிறது.

### தங்கள்மேல் பொறுப்பில்லாமல் செய்துகொள்ளுவது.

இம்மாதிரி ஒரு ஏஜென்ஸி இருப்பதாகச் சொல்லுவது ஜெர்மானியரின் ஒரு சூழ்ச்சி. முற்றிலும் பொய்யான விஷயத்தை முதலில் ஒலிபரப்பி, பிற்பட்டு அது தவறு என்று மீண்டும் ஒலிபரப்புவது ஜெர்மானியருக்குப் பிடிக்கவில்லை. ஆகையால் அச்செய்தி நடுநிலைமை வகிக்கும் நியூஸ் ஏஜென்ஸியிலிருந்து வந்த செய்தி என்று மழுப்பிவிடுகிறார்கள். இந்த ஏஜென்ஸியின் பெயரை வைத்து பல பொய் வதந்திகளைக் கிளப்பி, ஒன்றும் அறியாத சிலரை நம்பும்படி செய்கிறார்கள். பிற்பட்டு பூரா விவரங்களுடன் நடப்பு விஷயங்கள் வெளிவந்தவுடன் மேற்சொன்ன செய்திகள் யாவும் இந்த ஏஜென்ஸியிலிருந்து கிடைத்ததாகச் சொல்லி ஜெர்மானியர் தப்புவதற்கு மார்க்கம் தேடுகிறார்கள். உதாரணமாக சென்ற சில வாரங்களாக ஸ்டாலின்கிராடு போரைப்பற்றி விவரங்களைப் பிரஸ்தாபிக்கும்பொழுது ஜெர்மன் ரேடியோவில் அடிக்கடி புதிய ஸ்தாபனத்தின் பெயர் குறிப்பிடப்பட்டது. இம்மாதிரி முறையைக் கையாளுவதினால் தாங்கள் ரொம்ப நிதானமாகவும், ஜாக்கிரதையாகவும் நடந்துவருவதாக நாஸி பிரசாரகர்கள் காட்டிக்கொள்ள முடிகிறது. இதைத் தவிர இந்த ஏஜென்ஸியிலிருந்து வரும் செய்திகளை ஜெர்மன் பிரசார இலாகா உறுதிப்படுத்தினாலொழிய நம்பவேண்டாமென்று அடிக்கடி ரேடியோ மூலம் அவர்கள் எச்சரிக்கை செய்வதுமுண்டு.

### ஏன் இந்தப் புதிய முறையைக் கண்டுபிடிக்கவேண்டும்?

புதிய நியூஸ் ஏஜென்ஸி ஏற்பட்டிருப்பதாகச் சொல்லுவதற்கு இரண்டு முக்கிய காரணங்கள் உண்டு. முதலாவதாக நடுநிலைமை நாட்டுப் பத்திரிகைகளிலிருந்து செய்திகள் வருவதாக சில பொய் வதந்திகளை ஜெர்மானியர் சொல்லிக்கொண்டிருந்தார்கள். அதைப் பொய்ப்பிக்க பி. பி. ஸி. அந்நாட்டு பத்திரிகைகளை வாங்கி, அவைகளில் கண்ட பதங்கள், வாக்கியங்களுடன் உண்மைச் செய்திகளை உடனே ஒலிபரப்பி நாஸிகளின் பொய்களைப் பகிரங்கப்படுத்திவிடுவதால்,



நாஸிகள் செய்த இந்த தந்திரம் பலிக்கவில்லை. அடுத்தபடியாக நாஸி ராணுவ நிலைமையில் மாறுதல் ஏற்பட்டது மற்றொரு காரணம். முன்போலல்லாமல் இப்பொழுது நாஸிகளுக்குத் தங்கள் தோல்விகளையும்பற்றிச் சொல்லவேண்டியிருக்கிறது.

யுத்த ஆரம்ப நாட்களில் ஐரோப்பாவில் நாஸிகள் நார்வே, ஹாலந்து, பெல்ஜியம், பிரான்ஸ் முதலிய நாடுகளைக் கைப்பற்றியபொழுதும், ருஷ்ய யுத்த ஆரம்பத்தில் ஜெர்மன் சைனியங்கள் நாளுக்கு நாள் அதிக தூரம் முன்னேறிய பொழுதும், நாஸிப் பிரசாரம் பூராவும் பொய்யென்றும், ஆனால் ஜெர்மன் ஹை கமாண்ட் விடுக்கும் அறிக்கைகள் யாவும் உண்மையென்றும், ஜனங்கள் பொதுவாக 1940—1941-ம் வருஷங்களில் சொல்லிவந்தார்கள். அப்பொழுது பிரிடனிலும் அம்மாதிரியே சொல்லப்பட்டது.

### உத்தியோகமுறையில் வெளிவந்த ஜெர்மன் அறிக்கைகள்.

ஹிட்லர் சேனைத் தலைமை வகித்தது முதற்கொண்டு அநேக ஜனங்கள் ஜெர்மன் ஹை கமாண்ட் இனி விடுக்கும் அறிக்கைகள் யாவும் பொய்யென நம்ப ஆரம்பித்துவிட்டனர். அது உண்மையல்ல. அவ்வறிக்கைகளில் வாசகத்தின் தன்மையில் சில மாறுதல்கள் ஏற்பட்டிருப்பதைத் தவிர மற்றபடி இதற்கு முன் கண்ட விஷயங்கள் எவ்வளவு நம்பத்தகாததோ அதேபோலவே தான் இப்பொழுது வரும் அறிக்கைகளில் வரும் விஷயங்கள் உண்மையல்ல. ஆனால் அவை உண்மைபோல் தோன்றும். நடப்பது பின்வருமாறு:—யுத்த ஆரம்ப நாட்களில், ஜெர்மன் துருப்புகள் ஒரு செவ்வாய்க்கிழமையன்று ஸாம் நதியைக் கடந்துவிட்டதாக ஜெர்மன் ஹை கமாண்ட் விடுத்த அறிக்கைகளில் கண்டிருக்கும். ஆனால் அன்று ஜெர்மன் துருப்புகள் ஸாம் நதிக்கருகாமையில்கூட சென்றிருக்காது. அடுத்த வியாழன், வெள்ளிக்கிழமைதான் நதிப்பக்கம் முன்னேறியிருப்பார்கள்.

இதைப்போலவே ஜெர்மன் ஹை கமாண்ட் விடுத்த அறிக்கைகளில் கலே (Calais) பட்டணம் பிடிபட்டதாகத் தெரியவந்தது. உண்மையில் அது அப்பொழுது பிடிபடவேயில்லை. அதற்கு கொஞ்ச நாட்களுக்குப் பிற்பட்டும் அது பிடிபடவில்லை. ஆகையால், இதர ஜெர்மன் பொய் பிரசாரங்களைப் போலவே ஜெர்மன் ஹை கமாண்டும் அடிக்கடி பொய்யான அறிக்கைகளை வெளியிடுகிறது. இவ்வித பொய்கள் யாரொருவர் யுத்த விஷயங்களைக் கூர்மையாகக் கவனித்து வருகிறாரோ அவருக்குத்தான் வெளியாகும். ஏனென்றால், சில நாட்களுக்கெல்லாம் ஜெர்மானியர் ஏற்கனவே கைப்பற்றியதாகச் சொல்லிவந்த இடங்களை நோக்கி முன்னேறிவிடுவதினால், சாதாரணமாக ஜனங்கள் அவ்வறிக்கைகள் உண்மையென்று நம்பிவந்தார்கள்.

### உண்மையென்று நம்பும்படி செய்ய என்ன தேவை.

ஜெர்மன் ராணுவம் தொடர்ந்தாற்போல் முன்னேற்றம் அடைந்துவருவது போல வெளி உலகத்தை நம்பும்படி செய்ய ஜெர்மானியர் விரும்புகிறார்கள். ஏனென்றால், ஒரு வெற்றி கிடைத்தால் அதுவே பல வெற்றிகளுக்குக் காரணமாகுமென்பதைப் பலமாக நம்பியிருக்கிறார்கள். உண்மையில் அவர்களின் ராணுவம் யுத்த ஆரம்பகாலத்தில் துயர்ந்தாற்போல் முன்னேறிக்கொண்டிருந்தது. பிற்பட்டு ஜெர்மன் ஹை கமாண்ட் எதிர்பார்த்ததற்கு மாறாக நடவடிக்கைகள் நடக்க ஆரம்பித்தன. பிரிடன்பேரில் போர் தொடுத்த காலம் முதல் ஜெர்மானியர் போட்ட திட்டப்படி நடப்பது நின்றுபோக ஆரம்பித்துவிட்டது. உதாரணமாக, இங்கிலாந்தைவிட்டு பிரிடிஷ் விமானப்படை துரத்தியடிக்கப்பட்டதாக ஜெர்மன் ஹை கமாண்ட் கூறிற்று. இதோடு நிற்காமல் லுப்ட்வாபி ஆகாயச் சண்டையில் முழு ஆதிக்கமும் பெற்றிருப்பதாகக் கூறிற்று. ஜெர்மன் ஹை கமாண்டிலுள்ளவர்களுக்கு அந்த சமயத்தில் இது உண்மையல்லவென்று தெரியும். இருந்தபோதிலும் ஒருவார டயத்திலாவது அல்லது பிறகாவது அம்மாதிரி ஆகிவிடுமென்று எதிர்பார்த்தார்கள். அந்த வாரம் சென்ற பிறகும், பிற்பட்டும் இங்கிலாந்தின்பேரில் படையெடுத்து பிரிடிஷ் விமானங்களை முறியடிக்கமுடியவில்லை. ஆனால் ஐரோப்பா கண்டத்தில் பிரிடிஷ் விமானப்படை

ஆகாயச் சண்டையில் ஆதிக்கம்பெற ஆரம்பித்துவிட்டது. ஆதலால் ஹை கமாண்ட் அறிக்கைகள் உண்மையும் அல்ல; உண்மையாக ஆகவும் இல்லை என்று யாவரும் அறிந்துகொண்டார்கள். அச்சம்பவத்திற்குப் பிறகுதான் வழக்கமாக சமாசாரப் பத்திரிகைகள் படிப்போருக்கும், ரேடியோ கேட்போர்களுக்கும் ஜெர்மன் அறிக்கைகள் வழக்கமாகப் பொய் சொல்லிவந்தனவென்று முதன் முதலில் தெரிந்தது.

பிற்பட்டு ஜெர்மனி ருஷ்யாபேரில் படையெடுத்தபொழுது இதே முறை அனுஷ்டிக்கப்பட்டது. ஜெர்மன் அறிக்கைகளை ஜனங்கள் நம்ப ஆரம்பித்தார்கள். ஏனென்றால், அறிக்கைகள் வெளியிட்டபொழுது அவற்றில் கண்ட விஷயங்கள் உண்மையில்லாமல்போனாலும் பிறகு சில நாட்களில் உண்மையாக ஆகிவந்தன. பிற்பட்டு நிலைமை மாறிவிட்டது. ஏனென்றால் 1940-ம் வருஷ மாரிகால ஆரம்பத்தில் ஜெர்மானியரின் முன்னேற்றம் ருஷ்யர்களால் தடுக்கப்பட்டது. மறுபடியும் ஹை கமாண்ட் அறிக்கைகள் உண்மையல்லவென்று பொது ஜனங்கள் கண்டு கொண்டார்கள். இந்த மாரிகாலத்தில் ருஷ்யாவில் நடந்த சண்டையிலும் இந்த விஷயம் தெளிவாயிற்று. இம்மாதிரி நிலைமைதான் நாஸி பிரசாரகர்களை ஸர்வ தேச செய்தி ஸ்தாபனம் ஒன்றை கண்டுபிடிக்கும்படி தூண்டியிருக்கிறதென்று எனக்குத் தோன்றுகிறது. ஜெர்மன் மக்களை உற்சாகமூட்டுவதற்கும், நேச தேசத்தார்களுக்குக் கலவரத்தை உண்டாக்குவதற்கும் ஹை கமாண்ட் அறிக்கைகளை உபயோகிப்பதற்குப் பதிலாக இந்த உபாயம் கையாளப்படுகிறது.

### பொறுப்பு ஏற்றுக்கொள்ள மறுப்பு.

ஒவ்வொரு அறிக்கையிலும் அவர்கள் இந்த மானஸீகமான நடுநிலை செய்தி ஸ்தாபனத்தைக் குறிப்பிடுகிறார்கள். உதாரணமாக ஸ்டாலின்கிராட்டில் தொழிற்சாலைப் பிராந்தியம் பூராவும் ஜெர்மானியர் வசமிருப்பதாக இந்தச் செய்தி ஸ்தாபனம் கூறுவதாகச் சொல்லுகிறார்கள். இம்மாதிரி செய்வதில் துயர்ந்தாற்போல் அவர்களுக்கு வெற்றி கிடைப்பதாகப் வெளிப் பார்வைக்குத் தெரியும்படி செய்ய அவர்களுக்கு அனுகூலமாகயிருக்கிறது. அவர்களின் செய்தி அறிக்கைகளில் தங்கள் ராணுவ முன்னேற்றத்தைப்பற்றி பொதுவாகச் சொல்லத் தோதாகவும் இருக்கிறது. ஒருக்கால் சில நாட்களுக்குப் பிறகு அந்தச் செய்தி பொய்யென்று ஆய்விட்டாலும், ஜெர்மன் ஹை கமாண்டை பாதிக்காமலிருப்பதற்காகவும் இம்முறை கையாளப்படுகிறது. இந்த செய்தி ஸ்தாபனத்தைக் குறித்து எனக்கு அதிகமாகத் தெரியாது. முக்கியமாக இப்பெயருள்ள ஸ்தாபனம் ஏதாவது ஒன்று இருக்கிறதா என்பதுதான் கேள்வி. டிக்கன்ஸ் எழுதியுள்ள கட்டுக்கதை ஒன்றில் அடிக்கடி மிஸஸ் ஹாரிஸ் என்ற மாதைப்பற்றி ஸாராகாம்ப்பால் குறிப்பிடப்பட்டிருக்கிறது. பிற்பட்டு அக்கதை முடிவில்தான் மிஸஸ் ஹாரிஸ் என்ற ஸ்திரீயே உண்மையில் இல்லையென்றும், ஸாராகாம்பின் கற்பனைதான் என்றும் வெளியாகிறது. அதுபோல் இம்மாதிரி ஸ்தாபனமே இல்லாமல் இருக்கலாம். இம்மாதிரி பெயருள்ள ஸ்தாபனம் ஒன்று இருப்பதாக ஜெர்மானியர் சொல்லியும் வரலாம்.

பெர்லினில் நாஸி பிரசார இலாகாவில் ஒன்று, இரண்டு குமாஸ்தாக்கள் எழுதும் அறிக்கைகளை வெகு தலையிலிருந்து இப்புதிய ஸ்தாபனத்தின் அயல் நாட்டு நிருபர்களிடமிருந்து வந்த செய்திகளாகவும் சொல்லிக்கொள்ளலாம்.

எப்படியிருந்தபோதிலும் அந்த ஸ்தாபனம் மிஸஸ் ஹாரிஸைப்போல் மானஸீகமான பெயராக இருந்தாலும் சரி, அல்லது ஒரு சிறு இலாகாவாக இருந்தாலும் சரி, ஜெர்மன் பிரசார இலாகாவினால்தான் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறது என்பது நிச்சயம். பிரசார இலாகா தானே சொல்லவிரும்பாத விஷயங்களை வெளியிடுவதற்கு இந்த ஸ்தாபனம் உபயோகப்படுகிறது.

ஜெர்மன் செய்திகளில் சென்ற 3 வாரங்களாக இந்த மானஸீகமான செய்தி ஸ்தாபனத்தைப்பற்றி அடிக்கடி பிரஸ்தாபிக்கப்பட்டுவருகிறது. வரப்போகும் மாதங்களில் உலகத்தாருக்கு இன்னும் அதிகமாக அது சொல்லக்கூடும் என்றும் ன் எதிர்பார்க்கிறேன். ஜெர்மனிக்கு விரோதமாக ராணுவ சம்பவங்கள் பல பட்டுவந்தால் இம்மாதிரி செய்திகளும் அதிகமாகலாம். மேலும் அம்மாதிரி



செய்தி ஸ்தாபனமே இல்லையென்று யாராவது கூறினால், அவர்பேரில் நாஸிகள் அதிகக் கோபம்கொண்டிருப்பதாகக் காட்டுவார்கள். அந்த ஸ்தாபனத்தை உண்மையென்று யாவரும் நம்பும்படியாக விவரிப்பார்கள். அது எப்படி வேலை செய்கிறதென்றும் வர்ணிப்பார்கள். இன்னும் அதற்கு ஆதாரமாக அவர்களின் வழக்கப்பிரகாரம் ஏதாவது ஒரு ஸ்தாபனத்தின் புகைப்படங்களையும் பிரசுரிப்பார்கள்.

---

# பொருளாதார முற்றுகை.

### (பி. பி. ஸி.யில் லியனார்டு இன் கிராம்ஸ் பேசியது).

யுத்தம் என்றால் ஆயுத பலம் கொண்ட நாடுகளின் படைகள் ஒன்றுக்கொன்று மோதிக்கொள்ளுவது என்றுதான் சாதாரணமாக நினைக்கப்பட்டு வருகிறது. ஆனால் தற்காலத்திலோ படைகள் சண்டையிட்டுக்கொள்ளுவதைக் காட்டிலும் கொடிய விதமாக நடைபெறுகிறது. அதுதான் பொருளாதாரச் சண்டை. அச்சு நாடுகளின் பலம் படைகளில்தான் காணப்படுகிறது. பொது மக்களுக்கும், துருப்புகளுக்கும் யாதொரு வித்தியாசமுமன்னியில், அந்நாடுகளில் யுத்தம் வந்ததும், பொதுமக்களும் பாதிக்கப்படுகின்றனர். அவர்களின் பொருளாதார திட்டங்களெல்லாம் ராணுவத்தின் ஒரு அம்சமாகக் கருதப்படுகிறது. இவைகளை அதிகம் பலப்படுத்திக்கொண்டு பிற நாடுகளைத் தாக்க ஆரம்பிக்கின்றன.

ஆகவே அச்சுநாட்டுச் சவாலையை எதிர்க்கவேண்டுமென்றால் இரண்டு விஷயங்களை நாம் கவனிக்கவேண்டும். அவர்களின் முஸ்தீப்பைக் காட்டிலும் நாம் அதிகம் உண்டாக்கவேண்டும். அடுத்தபடியாக அவர்களுடைய முஸ்தீப்பும், மூலப்பொருள்களும் விருத்தியாகாதபடி செய்து, சின்னபின்னமாகப் போகும்படி செய்யவேண்டும். ஸ்வதந்திரத்தை விரும்பும் நாடுகள் யாவும் முன்னேற்றப் போருக்கு லாயக்காக சைனியங்களை விருத்தி செய்துகொள்ளவேண்டும். அதே சமயத்தில் எதிரி மீண்டும் பலமடைந்துகொண்டே போக முடியாதபடியும் செய்யவேண்டும்.

இதற்காக நேசநாடுகளிலிருந்து மூலப்பொருள் சேகரிக்கப்படவேண்டும். அச்சு நாட்டு யந்திரசாலைகளும், சாமான்களும், மனிதர்களும் தாக்கப்பட்டு எதிரியின் யுத்த சக்தி குறையவேண்டும். இதற்குத் தகுந்த ஆயுதம் பொருளாதார முற்றுகை தான்.

இந்த யுத்தம் ஆரம்பிக்கும்போது ஜெர்மன் கப்பல்கள் எல்லாக் கடல்களிலும் சஞ்சரிக்க முடியாது. ஆகவே ஜெர்மனி நேராடி சாமான்களை அயல் நாடுகளிலிருந்து ஏற்றிக்கொண்டுபோக முடியாது. நடுநிலை நாடுகளுக்குச் சொந்தமான கப்பல்களில் ரகசியமாகச் செல்லும் சாமான்களை பிரிடன் பரித்துவிடும். இதற்கு உதவியாக பிரிடிஷ் வியாபாரக் கப்பல்கள் ஒத்துழைத்துவந்தன. மேலும் பிரிடிஷ் ரிபேர் தளங்கள், இன்ஷூரன்ஸ் கம்பெனிகள், பாங்கிகள் யாவும் நேசதேசக் கப்பல்களுக்கே சாதகமாக இருந்தன. ஆகவே 1941-ம் வருஷத்தின் முடிவில் நடுநிலை நாடுகளுக்குச் சொந்தமான கடல்களில் சஞ்சரிக்கும் எதிரிக் கப்பல்களுக்கு ஸப்ளை கிடைக்கவில்லை.

மேலும் ஜெர்மனிக்கு ரகசியமாக உதவிய நடுநிலை நாடுகளுக்கு அபராதம், தண்டனை முதலியவைகளும் விதிக்கப்பட்டன. ஜெர்மனியோடு வியாபாரம் செய்யும் கம்பெனிகள், அமெரிக்கா முதலிய நேசநாடுகளுக்கும் சத்துருக்கள் என்று பாவிக்கப்பட்டன.

இவ்வித பொருளாதா முற்றுகையில் ஒத்துழைத்துவந்த அமெரிக்க அரசாங்கம், அமெரிக்காவிலுள்ள இதாநாட்டு சொத்துக்களைத் தேக்கிவைத்தது. ஜெர்மனிக்கு அருகிலுள்ள நாடுகளிலிருந்து, போட்டியாக முக்கிய சாமான்களை பிரிடன் விலைக்கும் வாங்கியது.

### ஐரோப்பாவைப் பிடித்தும்கூட முற்றுகை நீங்கவில்லை.

ஜெர்மனிக்கும், ஜப்பானுக்கும் சொந்தமான நாடுகளில் கிடைக்கும் இயற்கைப் பொருள்களைக் கொண்டு நவீன யுத்தத்தில் ஈடுபட முடியாது. அதற்காக வழிப்பறிக்காரனைப்போல் கொள்ளையிட ஆரம்பித்தன. ஏராள விளைவுபொருள்களையும், ஸப்ளைகளையும் சேமிக்க முயன்றன. இந்த இரண்டு நாடுகளும் மின்னல் தாக்குதலைச் செய்து புதிதான இடங்களைப் பிடித்து முக்கிய நிலைகளை ஸ்வாதீனப்படுத்திக்கொண்டு, சைனியத்தைப் பலப்படுத்திக்கொள்ளவும் நினைத்தன. ஆனால் ஜெர்மனி ஐரோப்பா பூராவையும் பிடித்தாலும் அந்த இடங்களில் சண்டை ஓய்ந்தபாடில்லை.

பொருளாதார முற்றுகையும் தீர்ந்தபாடில்லை. இதைப் போல பஸிபிக்கில் ஜப்பானுக்கும் கஷ்டம் ஏற்பட்டது. இதில் ஒரு விஷயம் என்னவென்றால் அமெரிக்காவில் ஒரு இடத்தையாவது அச்சுநாடுகள் பிடிக்கவும் முடியவில்லை. அதன் மூலம் தங்களுடைய சைனியங்களைப் பலப்படுத்தவும் முடியவில்லை. தனக்குத் தேவையானதைக் காட்டிலும் அதிக விளைபொருள்கள் ஜப்பான் வசத்தில் இருக்கிறது. ஜெர்மனிக்கோ சாமான்களோ, மனிதர்களோ போதுமானபடி இல்லை. ஆனால் தொழிற்சாலைகள் அதிகம் இருக்கின்றன. இரண்டு நாடுகளுக்கும் பஞ்சு, கம்பளி, தாமிரம் இல்லை. இவ்விரு நாடுகளும் ஒன்றுக்கொன்று சாமான்களைக் கொடுத்துதவ வசதியிருந்தால் நலம்தான். ஆனால் அந்த வசதியில்லை. அந்த இருநாடுகளுக்கும் சீக்கிரத்தில் வெற்றி கிடைத்து, லாபங்களை ஒன்று சேர்த்து, யுத்தத்தில் சேதமேற்படாமல் செய்துகொண்டால் சாதகமாக இருக்கும். அப்படி வெற்றி கிடைக்காவிட்டால் பொருளாதாரம் காரணமாக இருநாடுகளும் குலையவேண்டியதுதான். ராணுவ சம்பந்தமான வெற்றிகளை பொருளாதார லாப, நஷ்டங்களைக்கொண்டுதான் நிர்த்தாரணம் செய்யவேண்டும்.

இந்த யுத்தத்தை ஆரம்பிக்கும்போது ஜெர்மனிக்கு ஏராளமான ரிஸர்வ் பலம் இருந்தது. அதை வைத்துக்கொண்டு 1939-40 வரைச் சண்டைகளைச் செய்தது. மேற்கு ஐரோப்பாவை வசப்படுத்தியதால் சில லாபங்கள் கிடைத்தன. 1941-ன் ஆரம்பத்தில் இதாலியின் உதவிக்காக கிரீஸ், பால்கன் முதலிய இடங்களில் சண்டைசெய்ய நேர்ந்தது. லாபம், நஷ்டம் எல்லாம் சமமாகிவிட்டது. பல வருஷங்களாக ஜெர்மனிக்கு வந்துகொண்டிருந்த உணவு ஸப்ளைகளும் குறைந்துவிட்டன. ஏனென்றால் ஜெர்மனிக்கு பால்கன் நாடுகளிலிருந்துதான் அதிக உணவு கிடைத்துவந்தது. இப்போது அங்கே குதிரைகளும், ஆட்களும் யுத்தத்திற்குச் சேர்த்துக்கொள்ளப்பட்டதால் தானியச் சாகுபடி பாதிக்கப்பட்டது. குடியானவர்களும் நாஸிகளை விரோதிகளாகப் பாவிக்கிறார்கள். கடந்த ஜூன் மாதத்தில் ருஷ்யாவை ஜெர்மானியர் தாக்கும்போது தனக்குத் தேவையான சாமான்களை ஐரோப்பாவிலிருந்து பெறலாமென்றும், ருஷ்யாவைப் பிடித்து அங்கிருந்தும் அடையலாமென்றும் ஜெர்மனி நினைத்தது.

### பொருளாதார முற்றுகையில் ருஷ்யாவின் பங்கு.

ருஷ்யா வீரத்தனமாக நாஸிகளை எதிர்க்க, எதிர்க்க ஜெர்மன் ரிஸர்வ்களெல்லாம் குறைய ஆரம்பித்தன. பொருளாதார முற்றுகை அதிகம் பாதித்தது. ஜெர்மனியில் மின்னல் படையெடுப்புகளோ, கொள்ளையோ நேராதபோயினும், மாரிகாலம் முதலிய சந்தர்ப்பங்களில் சாகுபடி செய்யவோ, தொழிற்சாலைகளில் ஈடுபடவோ முடியவில்லை. மறுபடி வசந்தகாலம் வந்ததும் சைனியங்களுக்குத்தான் தொழிற்சாலைகளிலிருந்து ஆட்களைச் சேகரிக்கவேண்டியிருந்தது. சாமான்களின் தட்டும் அதிகம் ஏற்பட்டது. போரில் ஈடுபடும் சைனியங்களுக்கு சாமான்களும் ஆட்களும் தட்டில்லாமல் மேலும் மேலும் அனுப்பிக்கொண்டிருக்க வேண்டுமென்றால் மனிதர்கள், எண்ணெய், தோல், துணிமணி, போக்குவரத்து சாதனங்கள், உணவு முதலியவை தேவை. இவைகளுக்காகத் தொழிற்சாலை உற்பத்தி, வியவசாயம், மீன் பிடிப்பது முதலியவைகளுக்குப் பொதுஜன உதவியும் தேவையாயிருக்கின்றன.

நேசதேசங்கள் பலம் பெறப்பெற முன் சொன்ன விஷயங்களில் எதிரி நாடுகளில் சிரமம் ஏற்பட்டது. எதிரியின் கடல் போக்குவரத்தையும் உள்நாட்டுப்



போக்குவரத்தையும் பிரிடிஷ் கப்பற்படையும், விமானப்படையும் சேர்ந்து தாக்கிவருகின்றன. வடகடலில் ஜெர்மன் கப்பல்கள் அதிகமாக இவ்வருஷத்தில் தாக்கப்பட்டு வருகின்றன. பிரிடிஷ் பாம்பர் விமானங்கள், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவில் உள்ள யுத்தத் தொழிற்சாலைகளைத் தினம் தாக்கிவருகின்றன. 1940—41-ல் பிரிடன் பேரில் செய்யப்பட்ட ஜெர்மன் தாக்குதலைக்காட்டிலும் இன்னும் கடுமையாகவே அங்கு செய்யப்படுகின்றன.

இதனால் யுத்த சாமான்களின் உற்பத்தி பாதிக்கப்பட்டிருக்கிறது. போர் முனையிலும் சைனியங்களையும் சாமான்களையும் சரியாக வைத்துக்கொள்ளவும் முடியவில்லை. எந்தப் பொதுமக்களின் நம்பிக்கையில் தனது யுத்த சக்தியை எதிரி வைத்துக்கொண்டிருக்கிறானோ அந்தப் பொதுமக்களே தாக்கப்படுகின்றனர். சைனியங்களையும் அவைகளுக்குத் தேவையான சாமான்களையும் எவ்வளவு தூரம் விருத்திசெய்ய முடிகிறதென்றும், பொதுமக்கள் தேவையான சாமான்களைப் பெற்று வியாதி முதலிய பயம் இல்லாமல் எவ்வளவு தூரம் இருக்க முடிகிறதென்றும், எதிரி இனித்தான் கவனிக்கவேண்டும்.

உள்நாட்டில் இருப்போர், இந்த யுத்தம் முடியும்வரை சாமான்களைச் செய்துகொண்டிருக்க வேண்டுமென்ற நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. அவர்களால் இனி தாங்க முடியாது என்றே சொல்லலாம்.

நேசநாடுகள் அதிகம் விமான மூலம் தாக்குவதால் எதிரி நாட்டிலுள்ளோர் புதிதாக வீடுகளைக் கட்டவேண்டும். துண்டிக்கப்பட்ட போக்குவரத்துகளைப் பழுது பாக்கவேண்டும். பொதுஜன வாழ்க்கையை மறுபடி அமைக்க வேண்டும்.

இவைகளுக்கு ரிஸர்வ் ஸப்ளைகளை உபயோகிக்க முடியாது. ஏனென்றால் அவைகள் முன்னமேயே செலவழிக்கப்பட்டன. ஆகவே யுத்தத் தேவைகளைக் குறைக்கவேண்டியதுதான்.

### ஸ்வதந்திரத்தை விரும்பும் மக்களின் ஆத்மீக சக்தி.

பொருளாதார யுத்தத்தில் மற்றொரு அம்சம் பாதகமாகி ஜெர்மனியின் பலத்தைக் குறைத்து வருகிறது. அது ஆத்மீக சக்தி. இது ஸ்வதந்திரத்தை விரும்பும் ஒவ்வொரு மக்களுக்கும் சொந்தமானது. இது ஐரோப்பா பூராவும் இருந்துவருகிறது. இது இல்லாத நாடே கிடையாது. ஐரோப்பாவின் மேற்கேயுள்ளவர்கள் ஜெர்மனிக்கு உட்பட்டு சைனியத்தில் சேர மறுக்கின்றனர். தென்கிழக்கிலுள்ளோர் குத்தகைத் திட்டத்தின்படி வியவசாயம் செய்ய மறுக்கின்றனர். பிரிடிஷார் எப்படி அர்ஜென்டைனாவிலிருந்து சோளம் முதலிய தானியங்கள் ஜெர்மனிக்குப் போகவொட்டாதபடி தடுக்கின்றாரோ, அதேவிதமாக தென்கிழக்கில் இருக்கும் ஐரோப்பியர்களும் தானியம், எண்ணெய், வித்து முதலியவைகளை ஜெர்மனிக்கு ஏற்றுமதி செய்ய மறுக்கின்றனர்.

ஆகவே மேற்கே பொருளாதார முற்றுகையும், கிழக்கே சண்டையும், விமானத் தாக்குதலால் போக்குவரத்துக் குறைவும், எல்லைப்புறங்களில் கலகங்களும், ஜெர்மனியை பலவித கஷ்டங்களுக்கு உள்ளாக்கி வருவதால் ஜெர்மனிக்கு ராணுவத்தில் முடிவான தோல்வி ஏற்படும் என்று நிச்சயம் சொல்லலாம்.

---

## ஜப்பானிய ஆகாய வாணம்.

பிரசித்திபெற்ற ஒரு ராஜதந்திரியைப்பற்றி சொல்லும்போது, அவருடைய புகழ் ஆகாய வாணத்தைப்போல் கிளம்பி, பிறகு ஒரு குச்சிபோல் மங்கியது என்று சொல்லப்பட்டது. அதைப்போல், ஏற்கனவேயே யுத்தத்தில் சென்று தயார் செய்து வைத்திருந்த கொடுமை முறைகளைக் கையாண்டதால் ஜப்பானுக்கு வெற்றிகள் சுலபமாகக்கிடைத்தது. பொதுக்ஷேமத்தைத் தருவதாகச் சொன்னதால் கொஞ்சகாலம் அந்த வெற்றிகள் நிலைத்தும் இருந்தன. ஆனால் தற்சமயத்தில் அவையெல்லாம் மங்கி, குலைய ஆரம்பித்து வருகின்றன.

இவ்விதம் திடீரென்று அப்புகழ் ஏற்படுவதற்கும் பூராவாகத் திடீரென அழிவதற்கும் என்ன காரணம் என்று பார்ப்போம். முதலில் கபடமுறையைக் கையாண்டு அமெரிக்கக் கடற்படை முடமாக்கப்பட்டது. பிரின்ஸ் ஆப் வேல்ஸ், ரிபல்ஸ் போன்ற பிரிடிஷ் யுத்தக் கப்பல்கள் அமுக்கப்பட்டன. மூன்றாவதாக கொரில்லாப்படையைத் தயாரித்ததும், ஐந்தாம்படையை உபயோகித்து வந்த தாகும். அடுத்த படியாக ஹிட்லரை எதிர்த்து ஒரு வருஷ காலமாக பிரிடன் தனியே போரிட்டு வந்திருக்கிறது. ஆகவே அதன் நாடுகளைத் தாக்கினால் பிரிடனால் உதவி சரியாக அனுப்ப முடியாதென்று எதிர் பார்த்தது.

இவ்வளவையும் தவிர வேறு சில சாதகங்களும் ஜப்பானிய வெற்றிகளுக்குக் காரணமாக இருந்தன. அதாவது அவர்களுடைய பலத்திலும், சாமர்த்தியத்திலும் ஒரு அதிக நம்பிக்கையிருந்தது. அவர்கள் விடுவிப்பு, பொதுக்ஷேமம், என்று சொல்லி வருகிறபடியே, செய்வார்கள் என்று யாவராலும் நம்பப்பட்டது. ஆனால், உண்மையில் சயாங்கின் மனைவி சொன்னவிதமாக, நாங்கள் உங்களை விடுவிக்க வருகிறோம் என்பார்கள். 'அது பொய்.' மேலும் சைனாவில் அவர்கள் செய்து வந்த அட்டூழியங்களைக் கவனியாது 'ஜப்பானியர் தீங்கு செய்யமாட்டார்களென்றும்' சொல்லி வந்தனர். இவ்வித காரணங்களாலேயே ஜப்பானுக்கு முதலில் வெற்றிகள் கிடைத்தன.

ஜப்பான் அடைந்த வெற்றிகள் அதிகம் என்பதில் சந்தேகம் இல்லை. ஆனால், பொதுக்ஷேமம் ஒன்றும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. இதற்கு பல காரணங்கள் இருக்கின்றன. சீனர்கள் வெற்றிகரமாக நேசநாடுகளுக்கு உதவிக்கு வருகின்றனர். மெக் ஆர்தரும், பாடானில் வெயின்ரைட்டும், பர்மாவில் அலெக்ஸாண்டரும், ஜாவாவில் ஹெல்பிரிச்சும் பலமாக எதிரிகளை எதிர்த்து வந்தனர். ஆஸ்திரேலியர்களும், ஜப்பானிய முன்னேற்றத்தைத் தடுத்தனர். கடைசியாக கூடல்கனார், நியூ கினி போன்ற இடங்களில் அட்மிரல் நிமிட்ஸும் அவ்ராது படைகளும் செய்த சண்டைகளால் ஜப்பானிய வெற்றி மங்க ஆரம்பித்தன. இனி பிரயோஜனப்படாது என்று நினைக்கக்கூடிய சந்தர்ப்பங்களிலும், இனி ஒரு திட்டமும் நிறைவேறாது என்று நினைக்கக்கூடிய சமயங்களிலும் நேசப்படைகள் சமாளித்து வந்திருக்கின்றன.

இவ்வளவு வெளிப்படையான காரணங்களோடு பிடித்த நாடுகளில் ஜப்பான் தனது உறுதிமொழிகளை நிறைவேற்றுததும் ஒரு காரணமாகும். ஜப்பானில் டானகா எழுதிய புத்தகத்தில், "உலகைப் பிடிக்குமுன் ஆசியாவையும் ஐரோப்பாவையும் பிடிக்க வேண்டும். அவை இரண்டையும் பிடிக்குமுன், சைனாவையும், அதற்குமுன் மஞ்சூரியா, மங்கோலியாவையும் பிடிக்கவேண்டும்" என்று கண்டிருக்கிறது. நாடுகளைப் பிடித்து பொதுக்ஷேம திட்டத்தை நிறைவேற்ற விடாமல் அங்குள்ள மக்கள் ஜப்பானிய திட்டத்திற்கு இணங்க மறுக்கிறார்கள்.

ஜெர்மானியரைப்போல் ஜப்பானியரும் தங்களை யாவரும் சீக்கிரத்தில் வெறுக்கும்படி நடந்துகொள்ளுகின்றனர். கர்வம், தற்புகழ்சி, ஜாதி கர்வம், கொள்ளை, வீண் வாக்குறுதி முதலியவைகளால் யாவருடைய துவேஷத்தையும் சம்பாதித்துக்கொள்ளுகின்றனர். ஷின்டோ மத ஸ்தாபனத்தை ஏற்படுத்திக் கொண்டு, சிறு பெண்களையும் உத்தியோகம் விரும்பும் சிலரையும் அழைத்துக் கொண்டு வெட்டுக்கிளிகளைப்போல் நாடெங்கும், ஜப்பானியர்பரவி விடுகிறார்கள். பர்மியர்களைப் பார்த்து "கைகளைக் கட்டிக்கொண்டிருந்தால் ஸ்வதந்திரம் தானாக வராது" என்றும், சொன்னார்கள். ஸயாமில் பூரா படையும் திரட்டப்பட்டதாம். ஜப்பானியரைப்போல் ஜாவா வாஸிகளும் தினமும் வெகு நேரம் வரை உழைக்க வேண்டுமாம். மலேயா இனி ஜப்பானிய மகாணமாய் ஆகிவிடுமாம். ஆகவே மலேயர்கள் ஜப்பானியருக்காகப் பாடுபடவேண்டியதுதான். உறுதிமொழிகளை அதிகம் கொடுக்கும் ஜப்பானியரிடமிருந்து ஏதாவது நன்மை கிடைக்குமா என்று எதிர் பார்த்தால் ஒன்றும் கிடைக்காததுதான். அதனால் யாவரும் நேசதேச வெற்றியையே கோருகிறார்கள். இந்த எண்ணம்தான் பலப்பட்டு வருகிறது.



# உல்லாசமும், தைரியமும் வாய்ந்த வீரர்கள். இந்திய சைனியத்தை பிரிடிஷ் ராணுவ அதிகாரி பெருமைபடுத்திப் பேசியது.

*பி. பி. ஸி. ஒலிபரப்பு.*

சென்ற வருஷத்திலும், அதற்கு முந்தியும் இந்தியத் துருப்புகள் ஸிரியா, எகிப்து, லிபியா முதலிய இடங்களில் நடந்த சண்டைகளில் ஈடுபட்டிருந்தனர். இவர்களை விர பிரிடிஷ் துருப்புகளும் அவர்களுடன் சேர்ந்து போரில் ஈடுபட்டிருந்தனர். அவர்களுக்குத் தலைமை வகித்தவர் ஒரு இங்கிலீஷ் ராணுவ உத்தியோகஸ்தர். அவருக்கு இந்தியாவைப்பற்றியே தெரியாது. இருந்தபோதிலும் இந்திய சிப்பாய்களின் தீரத்தைக்கண்டு பின்வருமாறு பெருமையாகப் பேசுகிறார்.

எனக்கு இந்திய உள்நாட்டு விஷயங்களைப்பற்றித் தெரியாது. ஆனால் சென்ற வருஷத்திலும், அதற்கு முன்பும் ஸிரியா, எகிப்து, லிபியா முதலிய இடங்களில் நடந்த சண்டைகளில் இந்தியத் துருப்புகள் ஈடுபட்டிருந்தனர். இந்திய சைனியத்தில் இரண்டு இந்திய பட்டாளங்களும், ஒரு இங்கிலீஷ் அல்லது ஸ்காத்லாந்து தேசத்திய படைப்பகுதியும் அடங்கியிருக்கின்றனவென்பது எனக்குத் தெரியாது. சாதாரணமாக பிரிடிஷாரே பீரங்கிகளைக் கையாளுவார்கள். இந்தியப் பட்டாளத்திற்கு இந்தியாவிலேயே வெவ்வேறு இடங்களிலிருந்தும் ஆட்கள் சேகரிக்கப்பட்டிருக்கிறார்கள். அதில் பஞ்சாபியர்கள், சீக்கியர்கள், மகாராஷ்ட்ரர்கள், ராஜபுத்திரர்கள், ஜாட் வகுப்பினர், நேபாலிலிருந்து வந்த கூர்க்கர்கள் இவர்கள் சேர்ந்திருக்கின்றனர்.

## டமாஸ்கஸ்.

இந்திய சிப்பாய்கள் அதிக தீரத்துடன் நடத்திய சண்டைகளில் பலவற்றை நான் நேரில் பார்த்திருக்கிறேன். சென்ற வருஷத்தில் ஜூன் மாதத்தில் டமாஸ்கஸ் கைப்பற்றப்பட்டதற்கு, பெரும்பாலும் இந்தியப் பட்டாளத்தினரின் போர் திறமைதான் காரணம் என்று சொல்லலாம். அங்கு கடும் போர் நடந்தது. இந்தியப் பட்டாளத்தில் ஒரு சிறு பகுதியைத்தவிர மற்றவைகள் அழிக்கப்பட்டன. நகருக்கருகாமையிலுள்ள ஒரு வீட்டிலும், அதைச் சேர்ந்த தோட்டத்திலுமிருந்து கொண்டு நகருக்குள் பிரவேசிக்க, எதிரியின் குண்டுகளையும் லக்ஷியம் செய்யாமல் கடைசி வரையில் ஒரே உறுதியாக நின்று கடும்போர் புரிந்தனர். முடிவில் எதிரிகள் அதிக சமீபத்திலிருந்துகொண்டு டாங்கிகளையும், பீரங்கிகளையும்கொண்டு தாக்கியதால் இந்தியப் பகுதியால் சமாளிக்கமுடியவில்லை. அதில் எஞ்சியிருந்த 50 வீரர்களில் ஒருவருக்காவது காயமில்லாமலில்லை.

சென்ற வருஷம் நவம்பர் மாதத்தில் ஸிடிஒமாரை ஜெர்மானியரும், இதாலியர்களும் சேர்ந்து பலமாகப் பாதுகாத்துவந்தனர். அப்பிரதேசத்தை ஸைக்ஸிலிருந்துவந்த பிரிடிஷ் துருப்புகள் தாக்கின. அவர்களுக்கு உதவியாக சீக்கர்களும், பஞ்சாபியர்களும் கலந்துகொண்டனர். எதிரிகள் கடுமையாகப் பீரங்கிகளைப் பிரயோகம் செய்துகொண்டிருந்தாலும்கூட இந்தியத் துருப்புகள் மிகவும் தைரியமாகவும், சந்தோஷத்துடனும் பாடிக்கொண்டு மோட்டார்களில் 20, 20 பேர்களாக வந்து சேர்ந்தனர்.

## வேலைகள் திறமையாகச் செய்யப்பட்டன.

சென்ற சில மாதங்களில் அவர்கள் செய்த எல்லா தீரச் செயல்களையும் பற்றிச் சொல்லுவது சாத்தியமாக இருக்காது. அவர்கள் அதி அற்புதமாக நடந்துகொண்ட ஒன்று இரண்டு சம்பவங்களைப்பற்றி இங்கு குறிப்பிடுகிறேன். டெர்னாவில் சமுத்திரத்தை நோக்கி மிகவும் செங்குத்தான குன்று ஒன்றிருக்கிறது. அந்த மலைக்கு ஏறிச்செல்ல நடுவில் ஒரு ரஸ்தா போடப்பட்டிருக்கிறது. அந்த ரஸ்தாவிற்கு அருகாமையில் ஒரு விமான நிலயம் இருக்கிறது. அந்த இடத்திற்கு ஜெர்மன் விமானங்கள் வந்து இறங்கியும், அங்கிருந்து வேறிடங்களுக்குப் புறப்பட்டுக்கொண்டுமிருக்கும். அதை சீக்கியர்கள் பீரங்களைக்கொண்டு தாக்கினார்கள். அதனால் அந்த ரஸ்தா பெரும்பாலும் போக்குவரத்துக்கு லாயக்

கில்லாமல்போய்விட்டது. கற்களை ஒன்றன்மேல் ஒன்றாகத் தங்கள் கைகளாலேயேத் தூக்கிக் குவித்து, இந்திய ஸாப்பர்கள் அந்த ரஸ்தாவைப் போக்குவரத்துக்கு லாயக்காகச் செய்தனர். அதனால் பாரமான வண்டிகள் அந்த ரஸ்தாவில் செல்ல சாத்தியமாக இருக்கிறது.

### இட்ட வேலையைக்காட்டிலும் அதிகம்.

பிற்பட்டு நாங்கள் கஸாலா மார்க்கத்தில் செல்லும்பொழுதும், சுரங்க வெடிகளை வைக்கும்பொழுதும், எனது பட்டாளம் ஒரு இந்தியப் பகுதிக்கு அடுத்த ஸ்தானத்தில் நின்றது. நமது திறப்பு வேவு பார்க்கிறவர்கள் சுரங்க வெடிகள் வைக்கப்பட்டிருக்கும் இடங்களைத் தெரியாமல் குறுக்கிட்டுப் போய்விடாமலிருப்பதற்கு, இருட்டுவதற்குள் இந்திய ஸாப்பர்கள் எவ்வளவு தூரம்வரை இவ்வெடிகளை வைக்கிறார்கள் என்பதைத் தெரிந்துகொள்ளவேண்டியது என்னுடைய பொறுப்பாக இருந்தது. ஆனால் இந்தியர்கள் வெகு தீவிரமாக வேலையைத் துவக்கி எதிர்பார்த்த இடத்திற்கும் அப்பால் ஒரு மைல் தூரம்வரை சுரங்க வெடிகள் வைத்திருந்ததை வேவு பார்க்கிறவர்கள் கண்டார்கள். எதிர் பாராதவிதமாக ஸ்காத்லாந்து தேசத்தினரும், இந்தியர்களும் இருட்டில் சந்திக்கும்பொழுது நேரிட்ட குழப்பம் எப்படியிருக்குமென்பதை நீங்கள் யூகிக்கலாம். ஸ்காத்லாந்து தேசத்தினரை ராணுவ அறிகுறி வார்த்தையை உச்சரிக்கும்படி நிர்ப்பந்தித்தும் குழப்பம் குறையவில்லை. ஏனென்றால் இந்தியர்களுக்கு அந்த வார்த்தை ஒன்றை மட்டில் ஆங்கிலத்தில் உச்சரிக்கத் தெரியும். ஆனால் அந்த வார்த்தை ஸ்காத்லாந்து தேசத்தினருக்குத் தெரியாது.

இந்தப் பிரதேசத்தில் சுரங்க வெடிகள் வைப்பதற்கு அதிகப் பிரயாசை ஏற்பட்டது. ஏனென்றால், எதிரிகளும் அநேக கண்ணிகள் வைத்திருந்ததால் இந்திய ஸாப்பர்களுக்கு அதிகச் சேதம் ஏற்பட்டது. இருந்தாலும் தங்களுக்கிட்ட வேலையைச் செய்ய தீர்மானித்திருந்தார்கள். இந்த சந்தர்ப்பத்தில் எதிரிகள் குறுக்கிட்டுச் செல்லுவதற்கு முடியாமல் அதிக சாமர்த்தியத்துடன சுரங்க வெடிகளைவைத்து அந்தப் பிரதேசத்தை நிறப்பிவிட்டார்கள்.

### நம்பிக்கையான சிநேகிதர்கள்.

பாலைவனப் பிரதேசத்தில் இந்தியப் பகுதிகள் திக்காலுக்குத் திக்கால் வியாபித்திருந்தார்கள். இந்தியப்படைப் பகுதிகளை யார் சந்திக்க நேரிட்டாலும், பெட்ரோல், தண்ணீர், ஆகாரம் அல்லது வேறு எந்தப்பொருளோ அவர்களிடமிருந்தால் இந்தியத் துருப்புகள் அதைக்கொடுத்து உதவுவார்கள்.

இந்திய வீரர்களுக்கு டாங்கி எதிர்ப்பு பீரங்களை பிரயோகிக்கப் பயிற்சியளிப்பதற்காக சில வாரங்கள் தங்கியிருந்தேன். அந்தப் பயிற்சியிலுள்ள சூழ்ச்சிகளை சில நாட்களுக்குள் அதிக சீக்கிரமாகக் கற்றுக்கொண்டுவிட்டார்கள். இது ஆச்சரியம்தான். ஏனென்றால் அவர்களுக்குக் கற்றுக்கொடுப்பதற்கு துவிபாஷை விமர்சகர்களுக்கும் அப்பயிற்சியில் அவர்களுக்குத் தெரிந்ததற்குமேல் அதிகம் தெரியாது. 10 நாட்களுக்குப் பிறகு நகர்ந்து சென்றுகொண்டிருக்கும் லக்ஷியங்களைக் குறிவைத்துச்சுட பயிற்சிகொடுத்தபொழுது, குறிப்பிட்ட காலத்தில் பிரிடிஷ் படையில் சேர்ந்தவர்கள் 15 தடவை சுட்டதில் 10 குண்டுகள்தான் லக்ஷியங்கள்பேரில் பட்டன. ஆனால் இந்தியர்களோ சிரமமேயில்லாமல் 22 தடவை சுட்டதில், 20 குண்டுகள் சரியாகத் தைத்தன.

முடிவாக உல்லாசத்துடனும், தைரியமாகவும் இருக்கும் இந்த வீரர்களின் பக்கத்தில் என் படைப் பகுதியுடன் நானுமிருந்து போர்புரியவேண்டுமென்ற ஆசையைத் தவிர வேறொன்றும் நான் விரும்பவில்லை. சிக்கலான இடத்தில் பிரிடிஷ் பட்டாளங்கள் அகப்பட்டுக்கொண்டபொழுது, இந்தியத் துருப்புகள் உதவிபுரியத் தகுதியானவர்கள் என்பதை, மத்தியக் கிழக்குப் போரில் காட்டி நம்பிக்கை உண்டாக்கியிருக்கிறார்கள். இத்தகைய மேன்மையான ஐக்கியபத்தியம் எங்கெங்கு பிரிடிஷ் துருப்புகளும், இந்தியத்துருப்புகளும் சேர்ந்திருக்கின்றனவோ ஆங்காங்கு இருக்குமென்று எனக்கு நம்பிக்கையிருக்கிறது.



## ஜோயா காஸ்மோடம்ஸ்காயா என்பவள் விரத்தனம் வாய்ந்த ருஷ்யப்பெண்.

இந்த யுத்தத்தில் மாஸ்கோ முதல் வ்ளாடிவாஸ்டாக் வரையிலும் இப்பெண்ணின் வீரத்தனம் பிரமாதமாகப் புகழப்படுகிறது. தனிப்பட்டையான தியாக புத்திக்கும் தைரியத்திற்கும் இவளுக்கு "ருஷ்ய வீரப் பட்டம்" அளிக்கப்பட்டது. பெட்ரிஷ்செவோ என்ற கிராமத்தை ருஷ்யர்கள் நாஸிகளிடமிருந்து கைப்பற்றிய போது அங்கிருந்த குடியானவர்கள் இவைகளைப்பற்றிய கதைகளைச் சொன்னார்கள். டன்யா என்று இவளுக்கு மற்றொரு பெயர் உண்டு.

கடைசியாக மாஸ்கோ மீது ஜெர்மானியர் படையெடுத்தபோது ஜோயா மாஸ்கோவில் இருந்தாள். இவளுக்கு அப்போது வயது 18. 'நன்றாகப் படித்தவள். ருஷ்யப் புத்தகங்களையும, அயல் நாட்டுப் புத்தகங்களையும் எப்போதும் படித்துக் கொண்டிருப்பாள். பள்ளிக்கூடத்தில் இவள் படிக்கும்போது, ஆயுதங்களின் உபயோகத்தைப்பற்றி நன்றாகத் தெரிந்துகொண்டவள். எனவே மாஸ்கோ மீது நாஸிகள் படையெடுத்தபோது கொரில்லாப் படைகளில் சேர்ந்துகொண்டு ஜெர்மன் படைகளுக்குப் பின்பக்கமாக இருந்து தாக்கி வந்தாள். ஒரு சமயம் போர் அரங்கத்தைக் கடந்து பெட்ரிஷ்செவோ கிராமத்தில் இருக்கும் ருஷ்யப் படைகளுடன் சேர்ந்துகொண்டாள். இந்த இடம் மாஸ்கோவிற்கு அருகில் இருக்கிறது. அந்த இடத்தில்தான் ஜெர்மானியரும் படைகளை நிறுத்தி வைத்திருந்தனர். ஜோயா அங்கிருந்த ஜெர்மன் ராணுவக் கட்டடங்களை அழித்து பல எதிரி மருந்து கிட்டங்கிகளுக்கும், பெட்ரோல் கிணறுகளுக்கும் தீ வைத்தாள். இவளது தீரச் செயல்களால் இவளைக் கண்டாலே நாஸிகள் பயப்படும்படியாயிற்று; ஆனால் இவளை நேரில் காணவே முடியாது.

பகல் காலத்தில் சாடுகளில் மறைந்து நாஸிப் படைகளைத் தாக்குவாள். தனது மற்ற கொரில்லாப் படையினர் நகருக்கு உணவு பெறச் செல்லும்போது இவள் மாத்திரம் காட்டிலேயே தனியாக நின்றுவிடுவாள்.

இவ்விதமாகச் சில காலம் செய்துவந்தாள். ஓரிரவில், ஒரு ஜெர்மன் போசகுவரத்துக் கிடங்கிற்கு இவள் தீ வைக்க வந்தபோது பிடிபட்டாள். எதிரிகளிடம் தனது பெயரையோ, மற்ற கொரில்லாப் படைகள் இருக்கும் இடத்தையோ சொல்ல மறுத்துவிட்டாள். அந்த இரவில் பனிக்கட்டி மீது, வெறும் காலால், உடுப்பில்லாமலேயே நடக்கும்படி நிர்ப்பந்திக்கப்பட்டாள். குடிக்கத் தண்ணீர் கேட்டபோது காவல்காரன் விளையாட்டாக கிரோஸின் எண்ணெயைக் கொடுத்தானாம். கடைசியாக அந்தக் கிராமத்தின் நடுவில் பகிரங்கமாகத் தூக்கிடப்பட்டாள். அந்தச் சமயத்தில் முன்னால் நின்றுகொண்டிருந்த கூட்டத்தைப் பார்த்து பின்வருமாறு சொன்னாள்:—'தோழர்களே, பயப்படாதீர்கள். தைரியம் கொள்ளுங்கள். நாஸிகளை எதிர்த்தடியுங்கள். அவர்களை விரட்டி அடியுங்கள். இறப்பதற்கு நான் பயப்படவில்லை. இறத்தல் என்பது மனிதர்களுக்குள்ள ஸ்வதந்திரம்தான்' என்றாள்.

இந்த சமயத்தில் ஜெர்மன் ஆபீஸர் இவளை போட்டோ எடுத்துக் கொண்டிருந்ததால் மீண்டும் அவள் பேச சமயம் கிடைத்தது. 'நீங்கள் என்னைத் தூக்கிடலாம். ஆனால் நான் ஒருத்தி மாத்திரமில்லை. 20 கோடி பேர்களிருக்கிறோம். யாவரையும் உங்களால் தூக்கிடமுடியாது. நான் போனாலும் மற்றவர்கள் உங்களைப் பழி வாங்குவார்கள். ஜெர்மன் துருப்புகளே! நீங்கள் தற்போதே சரண் அடையுங்கள். ருஷ்யச் சைனியத்திற்கு வெற்றி கிடைப்பதென்பது நிச்சயம்' என்றாள். இந்த சமயத்தில் அவளுடைய கழுத்தில் சுருக்குக் கயிறு கட்டப்பட்டது. கீழிருந்த பெட்டியும் தள்ளப்பட்டது. அப்போதும் அவள் சொன்னதாவது 'தோழர்களுக்கு வந்தனம், மீண்டும் சண்டை செய்யுங்கள். பயம் வேண்டாம். நம்முடன் ஸ்டாலின் இருக்கிறார். அவர் உங்களுடைய துணைக்கு வருவார்'.

## 'வி' டயரி-1943.

(குறிப்பு புஸ்தகம்).

லினன் ரூ. 1—4—0; ஷீப்ஸ்கின் ரூ. 1—8—0;
மொராக்கோ ரூ. 2—0—0.

லாபம் யுத்தநிதிக்குச் சேர்க்கப்படும்.

கீழ்கண்ட விலாசத்திலிருந்து வாங்கிக்கொள்ளலாம்.—

காரியதரிசி,
தேசிய யுத்த முன்னணி நிலயம்,
புதுக்கோட்டை (தென் இந்தியா).


## பிரஸங்க நிகழ்ச்சி முறை.

### பிரஸங்கம் 126. (2-வது பிரிவு.)

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 19–12–42 | முனிஸிபல் ஆபீஸ்... | மாலை | 6.00 | 21–12–42 | வெங்களூர் | ... மாலை | 7.00 |
| 20–12–42 | குடுமியாமலை | ... ,, | 7.00 | ,, | கோளுபட்டு | ... ,, | 7.30 |
| | பரம்பூர் | ... ,, | 7.30 | 22–12–42 | பனையப்பட்டி | ... ,, | 7.00 |
| | | | | ,, | ராங்கியம் | ... ,, | 7.30 |

### பிரஸங்கம் 127. (3-வது பிரிவு)

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 3– 1–43 | ஆலங்குடி | ... மாலை | 7.00 | 6– 1–43 | ராமச்சந்திரபுரம் | ... ,, | 7.00 |
| ,, | வடகாடு | ... ,, | 7.30 | ,, | ராயவரம் | ... ,, | 7.30 |
| 4– 1–43 | அன்னவாசல் | ... ,, | 7.00 | 7– 1–43 | மழையூர் | ... ,, | 7.00 |
| ,, | கீழக்குறிச்சி | ... ,, | 7.30 | ,, | கரம்பக்குடி | ... ,, | 7.30 |
| 5– 1–43 | குழிபிறை | ... ,, | 7.00 | 8– 1–43 | சடயம்பட்டி | ... ,, | 7.00 |
| ,, | சுந்தரம் | ... ,, | 7.30 | ,, | ஒலியமங்கலம் | ... ,, | 7.30 |

### யுத்தத்திற்கு ஆள் சேர்த்தல்—விளம்பரம்—மாலை 4-மணி.

| | | | |
|---|---|---|---|
| 3— 1—43 | திருமயம். | 6— 1—43 | ராமச்சந்திரபுரம். |
| 4— 1—43 | விராச்சிலை. | 7— 1—43 | கீழாநிலை-புதுப்பட்டி. |
| 5— 1—43 | முள்ளங்குறிச்சி. | 8— 1—43 | ஆலங்குடி. |

Sri Brihadamba State Press, Pudukkottai. 2,000—28-12-42.


# புதுக்கோட்டை ஸமஸ்தான
# தேசிய யுத்த முன்னணி நிலயம்.

பிரசுரம்] 1943-ம் வருஷம் ஜனவரி மீ 9உ [நெ. 128


பிரஸங்கம் CXXVIII.

## சமீபத்தில் கிடைத்த வெற்றிகள் இன்னும் பெரிய பிரயத்தனங்களை எடுத்துக்கொள்ளும்படி நம்மைத் தூண்டவேண்டும்.

### 'சென்னை யுத்த சஞ்சிகை' க்கு மேன்மை தங்கிய சென்னை கவர்னர் விடுத்த புதுவருஷச் செய்தி.

சென்னை, டிஸம்பர் 31.

உலக மகா யுத்தம் ஆரம்பமானதிலிருந்து 4-வது புது வருஷம் தான் இந்த 1943-ம் வருஷம் ஜனவரி மாதம் 1-ம் தேதி.

1942-ம் வருஷத்திய சம்பவங்களைக்கொண்டு ஆலோசித்துப் பார்த்தால், முடிவில் நாம் நிச்சயமாக வெற்றிபெறுவோம் என்னும் உறுதி உண்டாகிறது.

அந்த வருஷ ஆரம்பத்தில் அடுத்தடுத்துப் பல தோல்விகள் நேர்ந்தன, கிழக்கே, மலேயா, பிலிப்பைன் தீவுகள், நெதர்லாந்து கிழக்கிந்தியத் தீவுகள். ஆகியவற்றை இழந்தோம். பிறகு பர்மாவையும் இழந்தோம். ஆகவே இந்தியாவின் எல்லைப்புறத்திற்கு யுத்தம் வந்துவிட்டது. ருஷ்யாவிலோ டான் நதிப் பள்ளத்தாக்கையும், காகஸஸ் பகுதியையும் ஜெர்மானியர்கள் கைப்பற்றிக் கொண்டார்கள். ஆபிரிக்காவிலோ, ஜெர்மன் சேனாதிபதியான ரோமல் அலெக்ஸாண்டிரியா வரை நம்மை விரட்டியடித்திருக்கிறான். ஆனால் சென்ற சில மாதங்களாக நிலைமையில் மாறுதல் ஏற்பட்டிருக்கிறது. ஜெர்மானியர் ஸ்டாலின்கிராட்டில் சரியானபடி தோல்வியடைந்தார்கள். அன்றியும் ருஷ்யக் குளிர்காலத்தையும் தாங்கவேண்டிய நிர்ப்பந்த நிலைமையில் இருக்கிறார்கள். எகிப்தில் நாம் மகத்தான வெற்றி பெற்றிருக்கிறோம். ரோமலின் படைகளை அடித்து நொறுக்கிவிட்டோம். ஸிரெனைகாவைவிட்டே விரட்டிவிட்டோம். அதே சமயத்தில், மீண்டும் தலை தூக்கிய பிரெஞ்சுப்படைகள், பிரிடிஷ் படைகளுக்கும், அமெரிக்கப் படைகளுக்கும், உதவியாக வந்து சேர்ந்தன. இவை ஒன்று சேர்ந்து, வட ஆபிரிக்காவிலும், மேற்கு ஆபிரிக்காவிலும், ட்ரிபோலியும், டுனிஸியாவின் ஒரு பகுதியும் விரைவில் நம் வசப்படலாம். கிழக்கே நியூ கினியிலும், ஸாலமன் தீவுகளிலும் ஜப்பானியர் மகா கஷ்டமடைந்துவிட்டார்கள். அவர்களுடைய கப்பற்படை அடுத்தடுத்துத் தோல்வியடைந்தது.

நமக்குக் கிடைத்த வெற்றிகள் நமக்கு இறுமாப்பை உண்டுபண்ணிவிடக் கூடாது. இதுபற்றி மிஸ்டர் சர்ச்சில் கூறியது மிகவும் பொருத்தமாகும். 'அவை முடிவின் ஆரம்பமல்ல; ஆனால் ஆரம்பத்தின் முடிவு. அதாவது என்றென்றைக்கும் பாதுகாக்கும் பொருட்டு நடைபெறும் சண்டையின் முடிவையும், நேசதேசப்படைகள் எதிரிகளைத் தாக்குவதின் ஆரம்பத்தையும் அவை

குறிக்கும்' என்று சொல்லியிருக்கிறார். இவை நம்மைத் தூண்டும்; அப்போது நம் முயற்சிகள் அதிகமாகும்; இதன் பயனாக முடிவான வெற்றி விரைவில் கிடைக்கும்.

எதிர் காலத்தில்.

இங்கே இந்தியாவில், நம் சிந்தனையும், முயற்சிகளும் கொஞ்சகாலமாக சிதறிக்கிடக்கின்றன. ஏனென்றால், வேண்டுமென்றே சிலர் இந்நாட்டில் கலவரங்களைக் கிளப்பிவிட்டிருக்கிறார்கள். இவற்றை நாம் ஒடுக்கவேண்டியிருக்கிறது. இப்படி கிளப்பிவிடுகிறவர்கள், மக்கள் விடுதலையே தமது லக்ஷியம் என்று கூறுகிறார்களே யொழிய, உண்மையில் அந்த லக்ஷியத்திற்கு பாதகந்தான் செய்கிறார்கள். இந்தக் கலவரங்களை நாம் தகுந்தபடி அடக்கியிருக்காவிட்டால், விரைவில் இந்தியாவை ஜப்பானியர்கள் தாக்கியிருப்பார்கள். அரசியல் வசதிகள் மட்டுமன்றி, கல்வி, நீதி, தனிப்பட்டவர்களின் உரிமை ஆகிய அனைத்தையும் கொடுங்கோலர்கள் ஈவிரக்கமின்றி நசுக்கித் தொலைத்திருப்பார்கள். இப்படித் தான் மலேயாவிலும், பர்மாவிலும் செய்துகொண்டிருக்கிறார்கள். மீண்டும் இந்நாடுகளை நாம் நம்படைகளையெல்லாம் திரட்டிக்கொண்டுவந்து, மீட்கிறவரைக்கும், அதே கொடுமைகளுக்குத் தான் ஆளாக நேர்ந்திருக்கும்.

ஆகவே இந்நாட்டில் உள்ளவர்களில் நாட்டுப் பற்றுடையவர்களுக்கு ஒரு கடமையிருக்கிறது. கலகமும், கலவரமும் எங்கே தலை தூக்கினாலும் உடனே அதை ஒடுக்கவேண்டும், யுத்த முயற்சிக்கு முழுமனதோடு உதவும்படி பெரும் முயற்சி செய்யவேண்டும். அப்போதுதான் விடுதலை லக்ஷியம் கை கூடும். நாஸிக்கொடுமைகளும், ஜப்பானிய அக்கிரமங்களும் என்றென்றைக்கும் ஒழிந்து போகும்.

---

# வார யுத்தச் செய்திகள்.

## 26—12—42-லிருந்து 9—1—43-வரை.

**இரண்டு வாரத்திய யுத்தச் செய்திகள் சுருக்கமாக எழுதப்பட்டிருக்கின்றன.**

**ருஷ்யா.**—பூராப் போர்முனையிலும் மாரிகாலம் ஏற்பட்டிருக்கிறது. இதனால் ருஷ்ய முன்னேற்றத்திற்குத் தடை ஏற்பட்டிருந்தாலும், ஜெர்மன் போக்குவரத்துகளைத் தடுத்து எதிரித் துருப்புகளைத் தாக்குவதற்கு முடியும். ஜெர்மன் செய்தி வியாக்யானக்காரர் கர்னல் பாயிர் என்பவரின் மொழிகளின்படி எதிரிக்கு ஏற்படும் சிரமங்கள் பல இருக்கின்றன. 'ஜெர்மன் துருப்புகள் ஓய்வு கிடைக்காமல், பனிக் கட்டிகளின்பேரில் சண்டை செய்து களைக்கின்றனர். அவர்களிஷ்டம் குளிரால் நிறைவேறவில்லை. இரவு காலங்களில் சிறு குடிசைகளில் அடைபட்டுத் தூங்க வேண்டியிருக்கிறது. உணவு, தண்ணீர் எல்லாம் குளிரில் உறைந்து போகின்றன. உடுப்புகளை மாற்றிக் கொள்ளவோ, தோய்த்துக் காயப்போடவோ முடியாது'.

ஸ்டாலின்கிராட்டில் அடைபட்டிருக்கும் ஜெர்மன் துருப்புகளுக்கு உதவி கொடுக்கச் சென்ற ஜெர்மன் துருப்புகள் வீணாகச் சண்டை செய்து, முடியாமல் கொடலினிகோவை நோக்கி ஓடிவிட்டன. இதைத் துரத்திச் சென்ற ருஷ்யப் படை கொலஸ்டோ, நிகோலஸ்கோ, மோரோஸோகா, முதலியவைகளைப் பிடித்தது. டிஸம்பர் 26ல, அதாவது டான் தாக்குதல் ஆரம்பித்து 11-நாட்கள் கிரமித்து, கட்லின்ஸ்காயா என்ற முக்கிய ரயில்வே ஸ்டேஷனை ருஷ்யப் படை பிடித்தது. டிஸம்பர் 28ல மில்லரோவோவைச் சுற்றிக்கொண்டு ரோஸ்டவிற்கு 81 மைல் சமீபத்து வந்துவிட்டது. 29ல கொடலினிகோவோ, ஜாஷ்கில், யோர்கோவாயி முதலியவைகளையும் பிடித்தது. கார்கவ்விற்கு 150 மைல் தூரத்திலுள்ள கன்டிமிரோவ்கோ என்ற இடத்தில் ஜெர்மானியர் சிறிது எதிர்த்து நின்றனர். அதற்குள் ருஷ்யர்கள் கன்டிமிரோவ்கோவிற்கும், மில்லரோவோவிற்கும் இடையிலுள்ள செர்கோவைப் பிடித்தனர். கொடலினிகோவிலிருந்து முன்னேறும் ருஷ்யத் துருப்புகள் டான் நதியை நோக்கி முன்னேறி ரோஸ்டவை மில்லரோவோ, கொடலினிகோவோ, ஓரஷிலோவோகிராட், யாஷ்கல் என்ற



நான்கு பக்கங்களிலும் தாக்குகின்றன. செர்னிஷ்கோவ்ஸ்காயா, செர்னிஸ்கால் மொரொரா ஜோவ்ஸ்காயா, ஸிம்லியான்ஸ்காயா என்ற இடங்களும் பிடிபட்டன. இவையாவும் ஜெர்மன் தோல்வியைக் குறிக்கும்.

டான் பிரதேசத்தில் ஜெர்மன் தற்காப்பு ஸ்தலங்களுக்குக் கெடுதி ஏற்பட்டு விட்டது என்று நியூஸ் கிரானிகிள் பத்திரிகை கூறுகிறது.

இந்த சந்தர்ப்பத்தில் புது வருஷ ஆரம்பத்தில் மத்தியப் போர்முனையில் ருஷ்யர்கள் வெலிகியிலூகி என்ற முக்கிய ரயில்வே ஜங்ஷனையும் கல்மக் (Kalmuck) பிரதேசத்தின் தலைநகரான எலிஸ்டா என்ற இடத்தையும் பிடித்து லாட்வியாவின் எல்லைப் புறத்திலுள்ள நோவோஸோகோல்னிகி என்ற இடத்தையும் தாக்கி வருகின்றனர்.

காகஸஸில் கிருஸ்துமஸ் முதல் செய்யப்பட்ட புதிய ருஷ்யத் தாக்குதல் ஸ்டாலின்கிராட்டிற்கு ஜெர்மன் உதவி போகவொட்டாமல் செய்ய ஆரம்பிக்கப் பட்டது. மாஸ்டக், நால்சிக்கு, பிரோக்லாடனயா, மெயிஸ்கோ பிடிபட்டன.

**ட்ரிபோலிடானியா.**—வெற்றியோடு கூடிய 8-ம் படை ஸிர்டி, பீரட் ஹூஸன் இரண்டையும் பிடித்து வாடி செபீரிலிருந்து எதிரியை விரட்டி வருகிறது. சீதோஷ்ண நிலையால் முன்னேற்றம் மெதுவாக இருந்துவருகிறது.

தெற்கில் போரிடும் பிரெஞ்சுப் படைகள் சாட் (Chad) பிரதேசத்திலிருந்து முன்னேறி பெஜன் (Fezzan) என்ற இடத்தில் எதிரியுடன் சண்டைசெய்து வருகின்றன.

**டூனிஸியா.**—இங்கும் மழையால் சண்டைகள் மெதுவாக நடந்து வருகிறது. மெட்காஸ் பிரதேசத்தில் சண்டை நடந்து வருகிறது. மத்தியதரைக்கடலில் அச்சு நாட்டுக் கப்பல்களை பிரிடிஷ் நீர்மூழ்கிகள் தாக்கிவருகின்றன. டூனிஸ்ஸும் பிஸர்ட்டாவும் கடுமையாகத் தாக்கப்பட்டு வருகின்றன. ஜனவரி 3ல மொராக்கோவிற்கு ஒரு பிரெஞ்சுத் துணைக்கப்பல் கூட்டம் வந்தது. பிரெஞ்சு குடியரசு வீழ்ச்சிக்குப் பிறகு இதுவே முதல் தடவையாகும்.

**ஸாலமன்ஸ்.**—ஜப்பானியக் கப்பல்கள் மீண்டும் தாக்கப்படுகின்றன. டிஸம்பர் 26ல நியூ ஜார்ஜியா தீவுக்கூட்டத்தில் வான்குனு தீவிற்குத் தெற்கில் இரண்டு எதிரிக் கப்பல்களை அமெரிக்க விமானங்கள் மூழ்கடித்தன. கூடல்கனாலிலுள்ள ஜப்பானியத் துருப்புகளுக்கு ஸப்ளை குடை விமான மூலம் வருகிறது.

**நியூ கினி.**—பூனா (Buna) மிஷன் பிடிபட்டது. ஸனன்தாவைச்சுற்றி சண்டை நடைபெறுகிறது.

**கிரேட் பிரிடன் தீவுகள்.**—டிஸம்பர் 28லயும், ஜனவரி 6லயும் ராபால் தாக்கப்பட்டது.

**டிமோர்.**—லெய்வய், புயிலோரா இரண்டும் பலதடவை தாக்கப்பட்டன.

**வேக், பீலி தீவுகள்.**—கிருஸ்துமஸ் அன்று தாக்கப்பட்டன.

**நியூ ஜார்ஜியா.**—டிஸம்பர் 24ல முண்டா தாக்கப்பட்டது.

**அலூஷியன்.**—டிஸம்பர் 26, 30, 31 தேதிகளில் கிஸ்கா கடற்கரை தாக்கப்பட்டது.

**ஸுமத்ரா.**—ஸபாங்கை பிரிடிஷ் விமானங்கள் தாக்கின.

**சைனா.**—பர்மா எல்லைக்கும் குன்மிங்கிற்கும் இடையிலுள்ள யூனன்யி என்ற இடத்தை ஜப்பானிய விமானங்கள் படையெடுத்தன. கிழக்கு ஹூபே மாகாணத்தில் டபிசன் மலையை நோக்கி முன்னேறும் ஜப்பானியர்கள் திருப்பியடிக்கப்பட்டனர். குவான்டங்கிலிருந்து ஜப்பானியர் முன்னேறுவதாகத் தெரிகிறது. அன்வேப், ஹூபே எல்லையில் சடீான்ஷானை சீனர்கள் திரும்பப் பிடித்தனர்.

**ஸயாம்.**—டிஸம்பர் 26, 27-ல் பாங்காக் படையெடுக்கப்பட்டது.

**இந்தியா.**—டிஸம்பர் 28உ கல்கத்தா, சிட்டகாங், பெனி முதலியவை தாக்கப்பட்டன. சேதம் மிகக் குறைவு.

**பர்மா.**—கீழ்கண்ட இடங்கள் தாக்கப்பட்டன. டிஸம்பர் 23உ மெயின்குவான்; 24உ மாக்வே விமான தளம், டெங்சங; 25உ டாங்கூ பிரதேசம், கியுக்—படவுஞ விலிருந்த ரயில்வண்டிகள், சான்க் எண்ணெய் டாங்கிகள், அக்யாபிலுள்ள பீரங்கிப் படகுகள், மான்க்வா; 26உ ஹிஹோ விமான தளம், லாஷியோ; 27உ மாக்வே, லாஷியோ, மெயிமியோ, மண்காமாவோ; 28உ ரங்கூன் துறைமுகத்திலுள்ள கப்பல்கள்; 30உ ஷிவிபோ; 31உ மோஹின்யின், மால்பி, ஹோபின், பின்பா; ஜனவரி 2உ மாக்வே, அக்யாப் வட அரகானுக்கும் பகோடாமுனைக்கும் இடையிலுள்ள பிரதேசம், மாண்டலே, நாபா; டிஸம்பர் 30உ அரக்கான் மாகாணத்தில் எதிரியை நேசதேசப் பாராப்படை தாக்கி மாயூ நதிக்கரையில் சிறிது சண்டை செய்தது.

**பலவகைப்பட்டவை.**—1. பெல்ஜியத்தில் நீதிபதிகளாக இருந்த 1,000 பேர்கள் வேலைநிறுத்தம் செய்தனர். இதற்குக் காரணம் என்னவென்றால் நியாய விசாரணையில் ஜெர்மானியர் குறுக்கிடுவதுதான். நகர ஸ்தாபனங்களையும் நாஸிகள் ஆக்கிரமித்துக்கொண்டனர். இதைப் பொறுக்கமாட்டாமல் சில ஸ்வதந்திர வாதிகள் நீதிபதிகளிடம் முறையிட்டனர். நாஸி முறையை நீதிபதிகள் கண்டித்துப் பேசுவதாக இருந்த சமயத்தில் ஜெர்மானியர் குறுக்கிட்டு ஜட்ஜ்மெண்டுகளைத் தடைசெய்தனர். இதைக் கண்டித்து எல்லா நீதிபதிகளும் வேலைநிறுத்தம் செய்தனர்.

2. பிரிடிஷ் கவர்ன்மெண்டாலும் இதர 16 நேசதேச அரசாங்கங்களாலும், பிரெஞ்சு தேசீயக் கமிட்டியாலும் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அதன்படி ஆக்கிரமித்த நாடுகளில் நாஸிகள் கொள்ளையிடுவதைத் தடுக்க ஏற்பாடு செய்வதெனத் தீர்மானிக்கப்பட்டது. நாஸிகளது ஆக்கிரமணம் தாங்காது ஆங்காங்கு கலகங்கள் ஏற்படுகின்றன. ரகசியமாகக் கொள்ளையிட்டு எல்லாவற்றையும் எதிரிகள் கைப்பற்றுகின்றனர். ‘அவர்கள் கலை, உணவுப் பண்டங்கள், சொத்து, வியாபார சாமான்கள் முதலியவை யாவற்றையும் கைப்பற்றுகின்றனர். ருஷ்யாவிலும், வட ஆபிரிக்காவிலும், திருடிய சாமான்களை ஜெர்மானியர் நடுநிலை நாடுகளுக்கு அனுப்பிவிடுகின்றனர். இதேவிதமாக ஜப்பானும் கிழக்கிந்தியத் தீவுகளில் அம்மாதிரி கொள்ளையிட்டுவருகிறது. இதைத் தடுக்கவே முன் சொன்ன நாடுகள் முற்பட்டுவருகின்றன.

---

## சத்துருவினுடையவும், சத்துருவினால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில், பிரிடிஷ், நேசதேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

**—12—42.** (திங்கட்கிழமை).

ஐரோப்பா (Europe).

**பகலில்.**—விமானக்கூடங்கள் ஹாலந்திலும், பெல்ஜியத்திற்கும் அருகாமையிலுள்ள அட்லாண்டிக் கடற்கரையில்.

இரவில்.—தொழிற்சாலைப் பிரதேசம்—ஜெர்மனியிலுள்ள மூனிச் (Munich).

வட ஆபிரிக்கா (North Africa).

**விமான மிறங்குமிடங்கள்.**—ேஹாம்ஸ் (Homs) (7 விமானங்கள் சேதமாயின, இன்னும் மற்றவைகளும் சேதமாயின).

துறைமுகங்கள்—டேனிஸ் (Tunis), லாகௌலெட் (Lagoulette).

விரோதிக் கப்பல்—ஸிஸிலி (Sicily)-க் கருகாமையில்.

**ருஷ்யா (Russia).**

**விமானச் சண்டைகள், விமானங்கள்**—ருஷ்யப் போர்முனை எங்கும்.

**தூரக்கிழக்கு (Far East).**

கடற்கரையிலுள்ள கட்டடங்கள்—அலூஷியன் தீவுகளிலுள்ள கிஸ்கா (Kiska).

நியூ ஜார்ஜியா கடற்கரையோரத்திலுள்ள தளங்கள்—மூண்டா (Munda).

ஜப்பானிய சாமான் கப்பல்கள்—ஸாலமன் தீவுகளிலுள்ள காஹிலி (Kahili).

விமானக் கூடம், துறைமுகம்—பர்மாவிலுள்ள ஆக்கியாப் (Akyab).

ஒரு நீராவி கப்பல்—பர்மாவிலுள்ள பாடிஒகியா.



**22—12—42.** (செவ்வாய்க்கிழமை).

ஐரோப்பா (Europe). (1 பிரிடிஷ் விமானம் திரும்பி வரவில்லை.)

பகலில்.—இருப்புப்பாதைகள், மற்ற லக்ஷியங்கள்—வட மேற்கு ஜெர்மனி (Germany), ஹாலந்து, பெல்ஜியம் (Low Countries).

விரோதியின் துணைக் கப்பல் கூட்டம்—டச்சுத் தீவுகளுக்கருகாமையில் (2 அச்சு நாட்டு கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டன).

வட ஆபிரிக்கா (North Africa).

கப்பல் துறைகள், விமானக்கூடம்—டேனிஸ் (Tunis), பிஸர்ட்டா (Bizerta).

இருப்புப் பாதைகள்—தெற்கு டேனிஸியா (Tunisia), ட்ரிபோலி (Tripoli).

விமானமிறங்குமிடம்—ஹோம்ஸ் (Homs).

**ருஷ்யா (Russia).**

விமானச் சண்டைகள், தரையிலுள்ள விமானங்கள்.—ருஷ்யப் போர்முனை எங்கும்.

அச்சு நாட்டுத் துருப்புகள்.—மத்திய டான் பிரதேசம், ஸ்டாலின்கிராடு (Stalingard).

**தூரக்கிழக்கு (Far East).**

ஜப்பானிய ஸ்தானங்கள்—பூனா (Buna) பிரதேசத்தில்.

ஜப்பானிய ஸப்ளைக் கப்பல்கள்—பூனா (Buna) வுக்கருகாமையில்.

விரோதியின் கட்டடங்கள்—டிமோர் (Timor).

ஒரு நீராவிக் கப்பல்—பர்மாவிலுள்ள ஆக்கியாப் (Akyab)புக்கருகாமையில்.

விரோதியின் மோட்டார் போக்குவரத்து—மியிட்டா (Myittha) பள்ளத்தாக்கில்.

**23—12—42.** (புதன்கிழமை).

ஐரோப்பா (Europe).

பகலில்.—கப்பல் துறைகள்—ஸெயின்ட் மாலோ (Saint Malo).

விமான எதிர்ப்புகள்—பிரிடானி (Britanny), நார்மண்டி (Normandy).

டென்ஹெல்டர் (Denhelder) (ஹாலந்தில்).

இதாலியிலுள்ள நேபிள்ஸ் (Naples), டாரெண்டோ (Taranto).

வட ஆபிரிக்கா (North Africa).

விமானமிறங்குமிடம்—ஹான் (Hon).

கப்பல் துறைகள்-டேனிஸ்(Tunis)பிஸர்ட்டா (Bizerta), ஸ்வாக்ஸ் (Sfax).

ரயில்வே லக்ஷியங்கள்—ஸ்வாக்ஸ (Sfax)க் கருகாமையில்.

**மத்தியதரைக்கடல் (Mediterranean).**

விமானக் கூடம்—கிரீடிலுள்ள டிம்பேக் (Tymbake).

**ருஷ்யா (Russia).**

விமானச் சண்டைகள், தரையிலுள்ள விமானங்கள்—ருஷ்யப் போர்முனை முழுவதிலும்.

**தூரக்கிழக்கு (Far East).**

ஜப்பானிய ஸ்தானங்கள்—நியூகினியிலுள்ள பூனா (Buna) பிரதேசம், நியூஜார்ஜியாவிலுள்ள மூண்டா (Munda).

விமானக்கூடம்—பர்மாவிலுள்ள மாக்வி (Magwe).

எண்ணெய் சுத்தி செய்யுமிடம்—பர்மாவிலுள்ள யேனுங்யாங் (Yenangyaung).

கட்டடங்கள்—ராதிடாங் (Rathedaung).

**24—12—42.** (வியாழக்கிழமை).

ஐரோப்பா (Europe).

இரவில்.—சுரங்க வெடிகள் பாவுவது—எதிரிக்குச் சொந்தமான கடற்கரையோரங்களில்.

**வட ஆபிரிக்கா (North Africa).**

கப்பல் துறைகள்.—கேப்ஸ் (Gabes), பிஸர்ட்டா (Bizerta).

விமானக் கூடம்—ஸ்வாக்ஸ் (Sfax).

**ருஷ்யா (Russia).**

விமானச் சண்டைகள், விமானங்கள்—ருஷ்யப் போர்முனை எங்கும்.

**தூரக்கிழக்கு (Far East).**

விமானக் கூடம்—நியூஜார்ஜியாவிலுள்ள மூண்டா (Munda) (24 ஜப்பானிய விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன).

விரோதி லக்ஷியங்கள்—பர்மாவிலுள்ள டாங்கூ (Toungoo) பிரதேசம்.

சாமான் ஏற்றிச் செல்லும் ரயில் வண்டிகள்—பர்மாவில், கியாக்—படானு (Kyauk-Padauna) பிரதேசத்தில்.

ஒரு எண்ணெய் கிணறு—பர்மாவிலுள்ள சாக் (Chauk).

பீரங்கி ஸ்தானங்கள், கட்டடங்கள்—பர்மாவிலுள்ள அக்கியாப் (Akyab), பர்மாவில் மொனிவா (Monywa) என்னுமிடத்திற் கருகாமையில் ஒரு ரயில்.

**25—12—42.** (வெள்ளிக்கிழமை).

ஐரோப்பா (Europe).

கிருஸ்துமஸ் தினத்தன்று ஐரோப்பா கண்டத்தில் ஒரு இடத்திலும் விமானத் தாக்குதல் நேரவில்லை.

**வட ஆபிரிக்கா (North Africa)** (1 அச்சு நாட்டு விமானம் நாசமாக்கப்பட்டது).

படகுகள்.—டேனிஸியா (Tunisia) கடற்கரைக் கருகாமையில்.

இருப்புப் பாதை—டேனிஸியாவில் ஸூஸ் (Sousse) என்னுமிடத்திற்கு அருகாமையில்.

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகள், தரையிலுள்ள விமானங்கள்—ருஷ்ய யுத்தரங்கம் முழுவதிலும்.

தூரக்கிழக்கு (Far East).

விரோதிக் கப்பல்கள்—ராபால் (Rabaul) துறைமுகத்தில்.
கப்பற்படை தளம்.-பிஸ்மார்க் ஆர்ச்சிபிலாகோ—(Bismarck Archipilago).
லாஷியோ (பர்மாவில்).

**26—12—42.** (சனிக்கிழமை).

ஐரோப்பா (Europe).

தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை.

வட ஆபிரிக்கா (North Africa).

துறைமுகம்—ஸூஸ் (Sousse).
கப்பல் துறைகள்—பிஸர்ட்டா (Bizerta) டூனிஸ் (Tunis).

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகள், தரையிலுள்ள விமானங்கள்—ருஷ்யப் போர்முனை எங்கும்.

தூரக்கிழக்கு (Far East).

ஜப்பானிய • ஸ்தானம்—நியூகினியிலுள்ள பூனா (Buna) பிரதேசம்.
ஒரு விமானக் கூடம்—பர்மாவிலுள்ள ஹெஹோ (Heho).

**27—12—42.** (ஞாயிற்றுக்கிழமை).

ஐரோப்பா (Europe).

இரவில்.—சுரங்க வெடிகள் போடுவது—விரோதிக்குச் சொந்தமான சமுத்திரக் கரையோரங்களில்.

வட ஆபிரிக்கா (North Africa).

கப்பல் துறைகள்—டூனிஸ் (Tunis).
ரயில் ;வண்டிகள் நிற்குமிடங்கள்—ஸூஸ் (Sousse).
அச்சு நாட்டு சைனியங்கள்—வேடி சேபீர் (Wadi Chebir).

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகள், விமானக்கூடங்களிலுள்ள விமானங்கள்.—ருஷ்யப் போர்முனை எங்கும்.

தூரக்கிழக்கு (Far East):

கப்பல்கள், துறைமுகத்திலுள்ள கட்டடங்கள்.—நியூ பிரிடனிலுள்ள ராபால் (Rabaul).
தொழிற்சாலைகள்.--விடாஸ் ஜலசந்தி (Vitaz Sarits).
விமானக்கூடம்.--கிளௌஸெஸ்டர் (Cape Gloucestor) முனை.
டிமோரிலுள்ள லெய்வாய் (Laivai).
விமானக்கூடம்,—மாக்வி (Magwe).
பர்மாவில்.—பர்மாவில் ஐராவதி நதியில் செல்லும் ஒரு நீராவிக் கப்பல்.
லாஷியோ (Lashio) பர்மாவில்.
ஜப்பானியத் தளங்கள்.—மேற்கு பர்மா, யூனன் (Yunnan) பிரதேசங்கள்.

**28—12—42.** (திங்கட்கிழமை).

ஐரோப்பா (Europe).

தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை.

வட ஆபிரிக்கா (North Africa).

ரஸ்தாக்கள்.—டூனிஸுக் (Tunis) கருகாமையில்.
கப்பல் துறைகள்.—டூனிஸியாவிலுள்ள ஸூஸ் (Sousse).
ஒரு கப்பல்.—பான்ட்டெலேரியா (Pantellaria) தீவிற்கு அருகாமையில் அக்கப்பல் மூழ்கடிக்கப்பட்டது.

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகள், தரையிலுள்ள விமானங்கள்.—கிழக்குப் போர்முனை எங்கும்.

தூரக்கிழக்கு (Far East).

பர்மாவில் மேமியோ (Maymyo), மெங்காமோ (Mengamao).
விமானக்கூடம்.—பர்மாவிலுள்ள மாக்வி (Magwe).
கப்பல்கள், துறைமுகம்.—நியூ பிரிடனிலுள்ள ராபால் (Rabaul).
விமானக்கூடம்.—காஸ்மாடா (Gasmata), டிமோரிலுள்ள லெய்வாய் (Laivai), பூயிலோரோ (Fuiloro).
துறைமுகம்.—டச்சு கினியிலுள்ள மீராகா (Merauka).

**29—12—42.** (செவ்வாய்க்கிழமை).

ஐரோப்பா (Europe)—(2 நேச தேச விமானங்கள் திரும்பிவரவில்லை).

பகலில்.—விமான எதிர்ப்புகள்—ஹாலந்து, பெல்ஜியம் (Low Countries), வட பிரான்ஸ் (France).
ரயில்வண்டித் தொடர்கள்.—பிரான்ஸ் (France).

வட ஆபிரிக்கா (North Africa).

விமானக்கூடம்.—டூனிஸ் (Tunis).
கப்பல் துறைகள்.—ஸ்வாக்ஸ் (Sfax), கேப்ஸ் (Gabes).
விரோதியின் வண்டிகள்.—டிரிபோலிடேனியா—டூனிஸியா (Tripolitania—Tunisian) எல்லைப்புறத்தில் இருபக்கங்களிலும்.

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகள், தரையிலுள்ள விமானங்கள்.—ருஷ்யப் போர்முனை முழுவதிலும்.



தூரக்கிழக்கு (Far East).

தரைப்படைகள்.—நியூ கினியிலுள்ள பூனா (Buna) பிரதேசத்தில்.
விமானக்கூடம்.—நியூ கினியிலுள்ள லே (Lae).
விரோதியின் ஸ்தானங்கள்.— காஸ்மாடா (Gasmata).
விமானத்தளம்.—கேவியங் (Kavieng).
விமானக் கூடங்கள்—பர்மாவிலுள்ள மொனிவா (Monywa), டாங்கூ (Toungoo), லாஷியோ (Lashio).
விமான எதிர்ப்புகள்.--பர்மாவிலுள்ள நாயு (Nayu) நதி பிரதேசத்தில்.
துறைமுகம், கப்பல்கள்.—பர்மாவிலுள்ள ரெங்கூன், நியூஜார்ஜியாவிலுள்ள மூண்டா (Munda).

**30—12—42.** (புதன்கிழமை).

ஐரோப்பா (Europe)—(3 நேச தேச விமானங்கள் திரும்பிவரவில்லை).

பகலில்.—நீர்மூழ்கி தளங்கள்—பிரான்ஸிலுள்ள லோரியன்ட் (Lorient).
ரயில்வே லக்ஷியங்கள்.—புலோன் (Bulogne), அபிவில்லி (Abbeville) பிரதேசங்களில்.

வட ஆபிரிக்கா (North Africa).

கப்பல்கள்.—ஸூஸ் (Sousse).
கப்பல் துறைகள்.—டூனிஸ் (Tunis), பிஸர்ட்டா (Bizerta).
விமானமிறக்குமிடங்கள்.—ஹான் (Hon).
துறைமுகம்.—ட்ரிபோலி (Tripoli).

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகள், தரையிலுள்ள விமானங்கள்.—கிழக்குப் போர்முனை முழுவதிலும்.

தூரக்கிழக்கு (Far East).

துறைமுகம், கப்பல்கள்.—நியூ பிரிடனிலுள்ள ராபால் (Rabaul), புலோரோ (Fulloro), டிமோரிலுள்ள பெடானோ (Betano).
விரோதியின் படகுகள்.—வங்குனுத் (Vangunu) தீவு.
விரோதிக்குச் சொந்தமான கப்பல்கள்.—அலூஷியன் தீவுகளிலுள்ள கிஸ்கா (Kiska).
விமானதளம்.—பர்மாவிலுள்ள் ஷ்வீபோ (Shwebo).

**31—12—42.** (வியாழக்கிழமை).

ஐரோப்பா (Europe)—(2 அச்சு நாட்டு விமானங்கள் சேதமாயின).

பகலில்.—ரயில்வே தொழிற்சாலைகள்—பிரான்ஸ் (France), பெல்ஜியம் (Belgium), பிரான்ஸிலுள்ள பாஸ்டிகலே (Pasde Calais) பிரதேசத்தில்.

வட ஆபிரிக்கா (North Africa).

கப்பல்கள், கப்பல் துறைகள்.—ஸ்வாக்ஸ் (Sfax), ஸூஸ் (Sousse).
ராணுவ லக்ஷியங்கள்.—கேப்ஸ் (Gabes), மத்திய டூனிஸியா (Tunisia), லிபியாவிலுள்ள மோர்ஸக் (Murzuk).

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகள், தரையிலுள்ள விமானங்கள்.—ருஷ்யப் போர்முனை எங்கும்.

தூரக்கிழக்கு (Far East)—(9 ஜப்பானிய விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன).

விமானக்கூடம்.—லே (Lae).
விமானக்கூடம், துறைமுகம்.—அலூஷியன் தீவுகளிலுள்ள கிஸ்கா (Kiska).
ஒரு ரயில் வண்டி.-பர்மாவிலுள்ள மோஹ்னீம் (Mohnyim), மாலு (Mawlu), பின்பா (Pinbaw).

**1—1—43.** (வெள்ளிக்கிழமை).

ஐரோப்பா (Europe).

இரவில்.—சுரங்க வெடிகள் போடுவது—• விரோதி சமுத்திரக்கரையோரங்களில்.

வட ஆபிரிக்கா (North Africa).

துறைமுகம், இருப்புப் பாதைகள்.—டூனிஸ் (Tunis).
கப்பல் துறைகள்.—ஸூஸ் (Sousse), கேப்ஸ் (Gabes).

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகள், தரையிலுள்ள விமானங்கள்.—கிழக்குப் போர்முனை முழுவதிலும்.

தூரக்கிழக்கு (Far East).

விரோதி தற்காப்பு ஸ்தானங்கள்.—பூனா (Buna) பிரதேசத்தில்.
ஒரு ஜப்பானிய நீர் மூழ்கி.—நியூ பிரிடனிலுள்ள ஒயிடு விரிகுடா ((Wide bay).
விமானக்கூடம்.—ஸாலமன் தீவுகளிலுள்ள பூயின் (Buin).
நகரத்திலுள்ள ஒரு பிரதேசம்.—மீராக் (Merauke).
கடற்கரையோரமாயுள்ள கப்பல்கள்.—பர்மாவிலுள்ள டாங்குப் (Taungup) பிரதேசம்.
துறைமுகம்.—பர்மாவிலுள்ள அக்கியாப் (Akyab).

**2—1—43.** (சனிக்கிழமை).

ஐரோப்பா (Europe).

நேசதேச விமான தளங்கள்.—வட பிரான்ஸ் (Northern France).

வட ஆபிரிக்கா (North Africa).

துறைமுகம்.—லாகௌலெட் (Lagoulette).

கப்பல் துறைகள், ராணுவ முகாம்.—ஸுஸ் (Sousse).

இருப்புப்பாதை.—ஸுஸு (Sousse)க்கும் ஸ்வாக்ஸு (Sfax)க்கும் இடையே, ஸிஸிலியிலுள்ள பாலெர்மோ(Palermo).

கிரீட் (Crete).

விமானக்கூடம்.—ஹெராக்கிளியான் (Heraklion), மற்ற விமான தளங்கள் கிரீட் (Crete).

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகள், விமானக்கூடங்களிலுள்ள விமானங்கள்.—ருஷ்யப் போர் முனை முழுவதிலும்.

தூரக்கிழக்கு (Far East).

விரோதி ஸ்தானம்.—நியூ கினியிலுள்ள பூனா (Buna) பிரதேசத்தில்.

ஒரு விமானக்கூடம்.—நியூ பிரிடனிலுள்ள காஸ்மாடா (Gasmata).

ஸாலமன்ஸ் தீவுகளிலுள்ள பூயின் (Buin).

ஜப்பானியக் கப்பல்கள்.—ராபால் (Rabaul).

விமானக்கூடம்.—பர்மாவிலுள்ள மாக்வி (Magwe).

கடற்கரையோரமுள்ள எதிரி விமானங்கள்.—அக்கியாப் (Akyab).

ராதிடாங் (Rathedaung)குக்கு மேற்குள்ள பிரதேசம்.

## விரோதிகளின் விமானப்படையெடுப்புகளின் விவரங்கள்.

**22—12—42.** (செவ்வாய்க்கிழமை).

பிரிடன் (Britain).

பல பட்டணங்களும், கிராமங்களும்.—தென் கிழக்கு இங்கிலாந்தில் (England).

(2 அச்சுநாட்டு விமானங்கள் சுட்டு வீழ்த்தப் பட்டன).

வட ஆபிரிக்கா (North Africa).

நேச தேசத்தாரின் முன்னணிப் பிரதேசங்கள்.—மெட்ஜெஸ் எல்பாப் (Medjez-El-Bob)புக் கருகாமையில்.

ருஷ்யா (Russia).

ஸ்டாலின் கிராடு (Stalingrad) பிரதேசத்தில், சுற்றி வளைக்கப்பட்ட ஜெர்மன் சைனியத்திற்கு அனுப்பப்படும் ஸப்ளைகள்.

தூரக்கிழக்கு (Far East).

இந்தியாவிலுள்ள கல்கத்தா (Calcutta).

(2 ஜப்பானிய விமானங்கள் சேதமாக்கப் பட்டன.)

**23—12—42.** (புதன்கிழமை).

பிரிடன் (Britain).

தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை.

ருஷ்யா (Russia).

ருஷ்யச் சைனியங்கள்.—எல்லாப் போர்முனைகளிலும் முன்னேறுகின்றன.

தூரக்கிழக்கு (Far East).

நியூ கினியிலுள்ள மோர்ஸ்பி (Moresby) துறைமுகம்.

இரண்டு கிராமங்கள்.—இந்தியாவிலுள்ள கிழக்கு வங்காளத் (Bengal) தில்.

இந்தியாவில் சிட்டகாங் (Chittagong) பிரதேசத்தில்.

**24—12—42.** (வியாழக்கிழமை).

பிரிடன் (Britain).

விமான தாக்குதலில்லை.

ருஷ்யா (Russia).

ருஷ்யரின் ஸ்தானங்கள்.—ஸ்டாலின்கிராடு (Stalingrad)பிரதேசத்தில்.

தூரக்கிழக்கு (Far East).

இந்தியாவிலுள்ள கல்கத்தா (Calcutta).

விமான தளம்.—ஸாலமன்ஸ் தீவுகளிலுள்ள கூடால்கனூர் (Gudal Canar).

**25—12—42.** (வெள்ளிக்கிழமை).

பிரிடன் (Britain).

பிரிடனில் எந்த இடத்திலும் விமானப் படையெடுப்பு நேரிடவில்லை.

ருஷ்யா (Russia).

ருஷ்யர்களின் ஸ்தானம்.—மில்லிரோவோ (Millerovo) பிரதேசத்தில்.

தூரக்கிழக்கு (Far East).

இந்தியாவிலுள்ள கல்கத்தா (Calcutta).

**26—12—42.** (சனிக்கிழமை).

பிரிடன் (Britain).

தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை.

வட ஆபிரிக்கா (North Africa).

டுனிஸியாவில் மெட்ஜெஸ் எல்பாப் (Med-Jez-El-Bob).

ருஷ்யா (Russia).

ஸ்டாலின் கிராடு (Stalingrad) பிரதேசத்தில் பிடிபட்ட ஜெர்மன் சைனியத்திற்கு ஸப்ளை போக்குவரத்து.

**27—12—42.** (ஞாயிற்றுக்கிழமை).

பிரிடன் (Britain).

விமானத் தாக்குதலே நேரிடவில்லை.



ருஷ்யா (Russia).

ருஷ்யர்களின் ஸ்தாபனம்.—விலிக்கியிலூகி (Velikiyeluki) பிரதேசத்தில்.

தூரக்கிழக்கு (Far East).

தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை.

**28—12—42.** (திங்கட்கிழமை).

பிரிடன் (Britain).

எங்கும் விமான நடமாட்டமேயில்லை.

ருஷ்யா (Russia).

ருஷ்யர்களுக்கு உதவிப்படைகள்.—வோல்கா (Volgo)வுக்கும் டான் (Dan) பிரதேசத்துக்கும் இடையே.

தூரக்கிழக்கு (Far Fast).

இந்தியாவில் கல்கத்தா (Calcutta) பிரதேசம்.

விமானச் சண்டைகள்.—நியூ கினியிலுள்ள பூனா பிரதேசத்தில்.

(15 ஜப்பானிய விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன).

**29—12—42.** (செவ்வாய்க்கிழமை).

பிரிடன் (Britain).

தென் கிழக்குக்கடற்கரையில் ஒரு இடம்.

வட ஆபிரிக்கா (North Africa).

பெங்காஸி (Benghazi).

ருஷ்யா (Russia).

விமானமிறங்குமிடங்கள்.—முன்னேறிச் செல்லும் ருஷ்ய சைனியத்திற்குப் பின்னால்.

தூரக்கிழக்கு (Far East).

விமானச் சண்டைகள்.—கூடேனோல்கா (Goodenowgh)தீவு.

(1 ஜப்பானிய விமானம் சுட்டு வீழ்த்தப் பட்டது).

**30—12—42.** (புதன்கிழமை).

பிரிடன் (Britain).

கடற்கரை ஜில்லாக்கள்.—தென் கிழக்கு, தென் மேற்கு, இங்கிலாந்து (England).

ஒரு பட்டணம்.—தென் கிழக்கு இங்கிலாந்து (England). (சொற்பச் சேதம்).

வட ஆபிரிக்கா (North Africa).

நேசதேச விமானதளம்.—ஆல்ஜியர்ஸிலுள்ள போன் (Bone).

ருஷ்யா (Russia).

ருஷ்யத் துருப்புகள்.—மோஸ்டாக்(Mozdok) பிரதேசத்தில் முன்னேறுகின்றன.

**31—12—42.** (வியாழக்கிழமை).

பிரிடன் (Britain).

எங்கும் விமானத்தாக்குதல் கிடையாது.

வட ஆபிரிக்கா North Africa).

விமானச் சண்டைகள்.—லிபியா போர்முனையில்.

தூரக்கிழக்கு (Far East).

தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை.

**1—1—43.** (வெள்ளிக்கிழமை).

பிரிடன் (Britain).

தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை.

வட ஆபிரிக்கா (North Africa).

போன் (Bone). (4 அச்சு நாட்டு விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன. அநேகம் சேதமாயின).

ருஷ்யா (Russia).

ஸ்டாலின்கிராடு (Stalingrad), ரிஷவ் (Rzev) பிரதேசங்களில் சுற்றி வளைக்கப்பட்ட சைனியங்களுக்கு ஸப்ளை போக்குவரத்து.

**2—1—43.** (சனிக்கிழமை).

பிரிடன் (Britain).

ஒரு இடம்.—தென் கிழக்கு இங்கிலாந்தி (England)ல்.

வட ஆபிரிக்கா (North Africa).

டுனிஸியா (Tunisia)வில் விமானச்சண்டைகள்.

ருஷ்யா (Russia).

ரிஷவ் (Rzev) போர்முனையிலுள்ள ருஷ்யர்களின் ஸ்தானங்கள்.

**3—1—43.** (ஞாயிற்றுக்கிழமை).

பிரிடன் (Britain).

கடற்கரை ஜில்லாக்கள்.—வட கிழக்கு இங்கிலாந்து (England).

வட ஆபிரிக்கா (North Africa).

அல்ஜீரியாவிலுள்ள போன் (Bone).

ருஷ்யா (Russia).

ரிஷவ் (Rzev), மோஸ்டாக் (Mozdok), மத்திய டான் போர்முனைகளில் முன்னேறிச் செல்லும் ருஷ்யச் சைனியம்.

## யுத்தக் குறிப்புகள்.

**1943.** வரும் காலத்தைப்பற்றி இப்போது ஜோஸ்யம் சொல்லத் தயாராக இல்லாதபோயினும் இதுவரை இருந்துவரும் நிலைமையிலிருந்து வரும் காலத்தில் யுத்தத்தின் போக்கு எப்படி இருக்குமென்பதை ஊகிக்கலாம். 1940-ல் நமக்கு அதிக சிரமமேற்பட்டது. 1941-ல் யுத்தத்திற்கான முயற்சி பலமாகச் செய்யப்பட்டது. 1942-ன் ஆரம்பத்தில் சில சிரமங்களேற்பட்டாலும் முடிவில் நடந்த சம்பவங்களைக்கொண்டு 1943-ல்

நமக்கு வெற்றி கிடைக்குமென்பதை ஊகிக்க முடிகிறது. வெற்றியென்பது ஜெனரல் ஸ்மட்ஸ் சொல்லும்விதமாக, எதிர்பாராதவிதமாக திடீரென ஏற்படும். எதிரி பூரா தோல்வியுறும்படியாக நாம் இதுவரை எதிர்த்தடிக்காதபோயினும் மான்ட்காமரியின் உறுதிமொழியின்படி எதிரி நாலா பக்கங்களிலும் சிதைந்துவருகிறான். 'தனக்கு ஆபத்து வந்திருப்பதாக' கோயபெல்ஸ் சொல்லிக்கொள்ளுகிறான். 'உயிருக்காகப் போராடவேண்டுமென்று' ஹிட்லர் சொல்லுகிறான். எதிரியின் மின்னல் படையெடுப்புகளைக் காணோம். ருஷ்யச் சமவெளிகளிலும், ஆபிரிக்கப் பாலைவனத்திலும், பர்மா, நியூ கினி முதலிய இடங்களில் எல்லாம் எதிரி புறங்காட்டி ஓடுகிறான். எதிரியால் இனி முன்னேற்றப்போர் செய்யமுடியாது.

யுத்தத்தைச் சரிவர நடத்துவதென்றால் மனித சக்தியும், யந்திர சக்தியும் அதிகம் வேண்டும். நேசநாட்டுக்கூட்டத்தில் 30 நாடுகளிருக்கின்றன. சமீபத்தில் பிரெஞ்சு சாம்ராஜ்யமும் சேர்ந்துகொண்டது. இதில் அமெரிக்கா மாத்திரம் 50-லக்ஷம் பேர்கொண்ட சைனியத்தைத் திரட்டியிருக்கிறது. 1943-ல் யுத்த சாமான்கள் இரட்டிப்பு மடங்கு தயாராகிவிடும். மத்தியதரைக்கடல் பூரா நடமாட்டத்திற்கு லாயக்காகும். எதிரி யூ படகு தீங்கும் சமாளிக்கப்பட்டு வருகிறது. பீல்டு மார்ஷல், லார்டு ஹோர்டு சொன்னபடி 'கடற் படையின் பலத்தைக்கொண்ட நாடுடன் தரை பலம்கொண்ட நாடு சண்டைசெய்து வெற்றி பெற முடியாது'

இந்தியாவிற்கும் 1942-ல்கொஞ்சம் சிரமகாலமாகத்தானிருந்தது. ஏனென்றால் சட்ட மறுப்பு இயக்கம் முதலியவை நடந்தன. ஆனால் இவ்வருஷத்தில்தான் அதிகம் பேர் சேனையில் சேர்ந்துகொண்டுள்ளனர். ஆங்கிலேய—அமெரிக்கத் துருப்புகளும் வந்திருக்கின்றன.. இதிலிருந்து 1943-ல் தனது பாதுகாப்பை இந்தியா நன்றாகக் கவனித்துக்கொள்ளும். வெளிநாடுகளில் இந்தியப்படையினர் செய்யும் சண்டையைப்பற்றியும் மகிழ்ச்சிகொள்ளும். இனி மற்ற நேசதேசங்களோடு சேர்ந்து எதிரிகளையும் எதிர்த்தடிக்கும்.

இதைப்போல் மற்ற போர் அரங்கங்களிலும் சண்டையில் வெற்றி சின்னங்கள் தென்படுகின்றன. மாரிகாலத்தினிடையில் ருஷ்யர்கள் பிரமாதமாகச் சண்டைசெய்து ஸ்டாலின்கிராட்டில், சண்டை செய்து, வெலிகியுலூகி, மாஸ்டக், நால்சிக் முதலியவைகளைப் பிடித்து எதிரிகளை விரட்டியடிக்கின்றனர். வட ஆபிரிக்காவிலும் எதிரி தாக்கப்படுகிறான். பஸிபிக்கில் பூனா மிஷன் பிடிபட்டது. ஆகவே ஜப்பானியருக்கும் ஆபத்து ஏற்பட்டிருக்கிறது.

வி வி வி வி வி வி வி

**டார்லான்** கொலையாளியால் சுடப்பட்டு இறந்தான். இறந்தவர்களைப்பற்றி பேசுவது சரியல்ல. ஆனாலும் ஆதியில் கபடமாக நடந்துகொண்டதற்குப் பிரதிகாரமாக முடிவுகாலத்தில் நடந்துகொண்டதால் அவனது குற்றங்கள் சிறிதளவிற்குப் பரிஹாரமாயின. வடஆபிரிக்காவில் ஆங்கிலேய—அமெரிக்கப்படைகள் இறங்கியகாலத்தில் இவன் ஜெனரல் ஐஸன் ஹோவருக்கு செய்த உதவி மிகமுக்கியமானது. ஏனென்றால் மூன்று வாரகாலம் முன்னாடியே படைகள் முன்னேறவும், உள்நாட்டுப்படைகளின் எதிர்ப்பு இல்லாமலும் இருந்ததால் நேசப்படைகள் தடையில்லாமல் முன்னேறவும் முடிந்தது. இவனுடைய ஸ்தானத்திற்கு ஜெனரல் ஜீரோ நியமிக்கப்பட்டுள்ளார். இவர் உண்மையான வீரன். அதோடு பலதடவைகளில் எதிரிகையிலிருந்து தப்பி வந்திருக்கிறார். கெடுதலிலிருந்து நல்லது உண்டாவதுபோல் டார்லான் கொல்லப்பட்டாலும் பட்டான், எல்லா பிரெஞ்சுக்காரர்களும் ஒத்துழைக்க ஆரம்பித்திருக்கின்றன. டிகால் கக்ஷியினரும் வடஆபிரிக்கப் பிரெஞ்சுக்காரர்களும் ஒற்றுமைப்பட்டிருக்கின்றனர். கடற்படையும் ஒன்றுபட்டது.

வி வி வி வி வி வி வி

**கிழக்கு மத்தியதரைக்கடல்.** வட ஆபிரிக்காவிலுள்ள விமான, கப்பல் தளங்களை நேசநாடுகள் ஆக்கிரமித்துக் கொண்டதாலும் ரோமல் மேற்கு நோக்கி ஓட்டம் பிடித்ததாலும் கிழக்கு மத்தியதரைக்கடல் பிரதேசத்தில் நேசதேசங்களின் நிலைமை சற்று பலமடைந்தது. டிஸம்பர் 15ல மிஸ்ட்டர் கேஸி சொன்னதிலிருந்தும் இதைக்கண்டு



கொள்ளலாம். மால்டாவுக்கு ஸப்ளைகள் கொஞ்சமும் சேதமன்னியில் புதுப்பிக்கப்பட்டன. 1942 நவம்பர் வரை இத்தீவுக்கு அனுப்பிவந்த ஸப்ளைகள் சேதப்பட்டும் பல தடவைகளில் கப்பல் போரில் ஈடுபடவேண்டியும் இருந்தது. ஈகிள், மான்செஸ்டர் போன்ற கப்பல்களும் சேதமாயின.

இருந்தாலும் தற்போது கிழக்கு மத்தியதரைக்கடல் பிரதேசத்தில் எதிரி நடமாட்டாம் பூரா நின்றுவிட்டது என்று சொல்லுவதற்கில்லை. ஸைப்ரஸ்ஸுக்கு ஜெனரல் அலெக்ஸாண்டர் விஜயம் செய்ததிலிருந்தும் கிரீட்டை தாக்க பிரிடிஷ் விமானப்படை சென்றபோதும் இவ்விஷயம் புலப்பட்டது. கிரீட்டை ஜெர்மானியர் வியாபித்துக்கொண்டதிலிருந்து ஸிரியாவும், பாலஸ்தினமும் ஆபத்துக்குள்ளாயின. அதனால் ஸைப்ரஸின் முக்கியத்வம் அதிகரித்தது. ஏனென்றால் இது ஹெய்பாவிலிருந்து 130 மைல் தூரத்திலும், அலெக்ஸாண்டிரியாவிலிருந்து 300 மைல் தூரத்திலும் டொப்ருக்கிலிருந்து 450 மைல் தூரத்திலும் இருக்கிறது. இங்கே வசதியான விமான தளங்களிருக்கின்றன. அவைகளும் மலைகளுக்கு இடையில் இருக்கின்றன. அவைகள் தற்சயத்தில் பலப்படுத்தப்பட்டிருக்கின்றன.

வி வி வி வி வி வி வி

**ஸ்பெயின், போர்ச்சுகல் ஒற்றுமை.** இந்த இரு நாடுகளின் மந்திரிகள் ஒன்றுசேர்ந்து நடத்தியிருக்கும் சொற்பொழிவுகளில் இருந்து ஏதாவது முக்கியமான அரசியல் சம்பவங்கள் ஏற்படுமாவென்று பார்ப்போம். நியூ யார்க் பத்திரிகையில் மாட்ரிட் செய்தி ஒன்றில் குறிப்பிடப்பட்டிருப்பதாவது, 'ஜிப்ரால்டர் பக்கத்தில் யுத்தக் கப்பல்களும், விமானங்களும் சேமிக்கப்படுவதிலிருந்து' ஏதோ அந்தப் பக்கத்தில் சண்டை உண்டாகும்போல் இருக்கிறது, அச்சுநாட்டுத் தலைவர்கள் ஹிட்லர் காரியாலயத்தில் ரகசியப்பேச்சுவார்த்தை நடத்துகிறதாகத் தெரிகிறது. ஜெர்மன் படைகளின் தைரியம் குலைந்திருக்கிறது. ருஷ்யா, ஆபிரிக்கா முதலிய இடங்களில் ஏற்பட்டிருக்கும் நிலையில் ஸ்பெயின் மூலமாயும் ஹிட்லர் துருப்புகளை அனுப்பினால் அதுவும் தடபுடலாகத்தானிருக்கும். அதனால் ஏற்படும் தீமைகளை இப்போது யோசிக்காமலிருக்கலாம். இப்படிச் செய்தால் டிரிபோலிடானியா, டேனிஸ் முதலிய இடங்களைக்காலி செய்யவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டால், ஜெர்மன் மக்களுக்கு திருப்தியை உண்டாக்க மற்றொரு பக்கம் ஹிட்லர் சண்டையை கிளப்புவதாகவே ஆகும். ஆனால் இதிலிருந்து உண்டாகும் பிரச்னை யாதெனில் ஹிட்லர் சொற்படி பிராங்கோ நடந்துகொள்ளமாட்டான். ஸ்பெயின் சர்வாதிகாரக் கொள்கைகளில் ஈடுபட்டிருந்தபோதிலும் தற்சமயத்தில் சண்டையில் ஈடுபடாது. அதன் பொருளாதாரம், ராணுவம் அரசியல் முதலியவைகளின் நிலைமை இன்னும் தளர்ந்துதானிருக்கிறது.

பல நூற்றாண்டுகளாக பிரிடன் போர்ச்சுகலின் சிநேக நாடாக இருப்பதால் தனது நிலைமையை மாற்றிக்கொள்ளாது.

வி வி வி வி வி வி வி

**பிரெஞ்சு ஸோமாலிலாந்து.** இந்த நாடும் நேசதேசங்களின் பக்கத்தில் சேர்ந்துகொண்டது. ஆகவே, பிரெஞ்சு, இந்தோ-சைனா, மேற்கிந்தியத் தீவுகளில் சில தீவுகள் இவைகளைத்தவிர பாக்கி பிரெஞ்சு சாம்ராஜ்யம் பூராவும் நேசநாட்டுப் பக்கம் சேர்ந்து அச்சு நாடுகளை எதிர்க்கிறது. ஹிட்லருக்கு இருக்கும் எண்ணம் நேசநாடுகளுக்கு இருந்திருந்தால் முன்னமேயே நேசநாடுகள் பிரெஞ்சு ஸோமாலிலாந்தை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கும். ஆனால் அப்படிச்செய்யவில்லை. அதோடு அங்குள்ள பிரெஞ்சுக்காரர்களுக்கு உணவும் பாலும் பிரிடனால் அனுப்பப்பட்டு வருகிறது.

இந்தப் பிரதேசம் செங்கடலுக்குள் போகும் மார்க்கத்தில் இருக்கிறது. ஜிபுடி துறைமுகத்தினாலேயே பிரெஞ்சு ஸோமாலிலாந்திற்கு அதிக முக்கியத்வம். ஏனென்றால் அதன் வழியாகத்தான அபிஸீனியாவின் வியாபாரம் நடைபெறுகிறது.

வி வி வி வி வி வி வி

**அல்பானியா.** ருஷ்ய அரசாங்கம் அல்பானியாவை அதிகக் கருணையுடன் கவனித்து வருவதாக மாலடோவ் அறிவித்தார். அதே விதமாக பிரிடிஷ் அரசாங்கமும், கிரீக் அரசாங்கமும்

இதாலியக் கொடுங்கோலை ஒழித்து அல்பானியாவிற்கு ஸ்வதந்தரம் கொடுப்பதாக வாக்களித்திருக்கின்றன. 1939 ஏப்ரல் 7ௗ ஐரோப்பாவில் சமாதானம் நிலவிய போதே முஸோலினி அல்பானியா மீது பாய்ந்து அதை வசப்படுத்திக் கொண்டான். ஆனால் அங்குள்ள சில தேசாபிமானிகள் கொரில்லாபடைகளை அமைத்து இதாலியரை எதிர்த்து வருகின்றனர். இதனால் அல்பானியாவில் 1,00.000 இதாலிய துருப்புகளை நிறுத்திவைக்கவேண்டிய நிர்ப்பந்த மேற்பட்டிருக்கிறது. ருஷ்யா, பிரிடன், கிரீஸ் முதலிய நாட்டு அரசாங்கங்கள் சமீபத்தில் சொல்லியதைப் பார்த்தால் அல்பானியாவில் கொரில்லா கலகத்தை அங்கீகரித்து எதிரியை விரட்ட முயற்சி எடுத்திருப்பது தெரியவரும்.

வி வி வி வி வி வி வி

**மாக்வி.** பர்மாவில் எத்தனையோ இடங்களிருக்கையில் பிரிடிஷ் விமானப்படை மாக்வியை தினம் விடாமல் * தாக்குவதற்கு என்ன காரணமென்று கேட்கலாம். ஐராவதி நதிக்கரையில் மாக்வி ஒரு முக்கிய பட்டணம். பர்மாவில் ஒரு ஜில்லாவிற்கு இது தலை நகரமும் ஆகும். இதனருகில் சின்மலைகள் இருக்கின்றன. இங்கே அடிக்கடி கடுமையான சண்டை நடக்கும். அதோடு யேனங்யாங் எண்ணெய் தளங்கள் இருக்கின்றன. அதனால் தான் அந்த இடம் தாக்கப்படுகிறது.

வி வி வி வி வி வி வி

**அக்யாப்.** இதனருகில் முன்னேறிக்கொண்டிருக்கும் நேச தேசப்படைகளை எதிர்க்காமல் ஜப்பானியர் பின் வாங்கிக்கொண்டுபோவதில் ரகசியமான அம்சம் ஒன்றுமில்லை. ஜப்பானியர் எதிர்த்து சண்டை செய்து ஓய்ந்த பிறகு எதிரி வசமாகாமல் இருப்பதற்காகப் பின் வாங்குவது சகஜம். உதாரணமாக நியூ கினியாவில் தோல்வி வரும்போல் இருந்தால் ஜப்பானியர் தற்கொலை செய்துகொள்ளுவதையே விரும்புகிறார்கள். ஆகவே அக்யாபிற்கு நேசப்படைகள் வந்தால் எதிர்த்து நிற்க முடியாது என்ற காரணத்தினாலேயே ஜப்பானியர் பின் வாங்குகின்றனர். அக்யாபிற்கு கடல் மூலமாகத்தான் உதவி கொண்டுவரமுடியும். அதையும் பிரிடிஷ், அமெரிக்க விமானங்கள் கடுமையாகத் தாக்கி வருகின்றன.

வி வி வி வி வி வி வி

**ஸெபாங்.** (சுமத்ரா) ஸெபாங்கை பிரிடிஷ் கடற்படை தாக்கியதற்கும் பர்மாவில் பிரிடிஷார் முன்னேறுவதற்கும் ஒருவித சம்பந்தமுமில்லை. ஆனால் இவைகளிலிருந்து தரையிலும் கடலிலும் நாம் முன்னேற்றப்போரைத் தொடங்கிய விஷயம் தெரிகிறது. ஸெபாங் என்பது பூபி வெய் (Pule Wai) என்ற தீவின் கோடியில் இருக்கிறது. சிங்கப்பூருக்கு அருகில் இருக்கிறது. பர்மா, வங்காளக்குடாக்கடல் முதலிய இடங்களில் ஜப்பானியருக்கு ஸப்ளை தளமாகவும் இருக்கிறது. விமான மேற்றும் கப்பல்களிலிருந்து தான் பிரிடிஷ் தாக்குதல் நடைபெற்றது.

வி வி வி வி வி வி வி

**ஸயாம்.** ஜப்பானியரின் மொழிகளில் நம்பிக்கை வைப்போர் ஸயாமுக்கு வந்திருக்கும் ஆபத்தைத் தெரிந்துகொள்ளுவது நலம். ஒருகாலத்தில் பைபல் ஸாங்கிராம் மூலமாக தாய்லாந்து, தனது ஸ்வதந்திரத்தை இழப்பதைக் காட்டிலும் இறக்கும், என்று சொன்னதும் உண்டு. தற்சமயத்தில் ஜப்பானிய ராணுவத்தில் ஸயாம் ஒரு முக்கிய அங்கமாகிவிட்டது. அகில ஆசியா திட்டத்திற்கு உட்பட்டுவிட்டது. கொரியா, பார்மோஸா முதலியவைகளைப்போல் ஜப்பானுக்கு உட்பட்ட நாடாக ஆகிவிடும். லஞ்சமாகக் கொடுப்பதாகச் சொன்ன பொருளை ஸயாமுக்கு ஜப்பான் அனுப்பவேயில்லை. ஸயாமிய நாணயத்தின் மதிப்பு குறைந்து போயிற்று. வயல்களும் சுரங்கங்களும் ஜப்பானுடைய நன்மைக்காகக் கொள்ளையிடப்பட்டன. ஸயாம் பாஷையும் பழக்க வழக்கங்களும் ஜப்பானியமயமாகியிருக்கின்றன.



**தற்கொலை.** ஊர்ஜிதமாகாத ஒரு செய்தியின் படி, மஞ்சுகோ பிரதம மந்திரி சாங்சிங்ஹூ, தனது குடும்பத்தினருக்கு விஷத்தைக் கொடுத்து, தனக்கு உபதேசம் செய்து வந்த ஜப்பானியர்களைக் கொன்று, தானும் தற்கொலை புரிந்துகொண்டதாகத் தெரிகிறது. இவன் டோஜோவின் அத்யந்த நண்பனாக இருந்தான். கடந்த மார்ச்சு மாதத்தில் ஜப்பானுடைய புதிய ஆசியா திட்டத்திற்கு ஒத்துழைப்பதாக வாக்களித்தான். இதற்கிடையில் தற்கொலை புரிந்துகொள்ளுவதற்கான படி என்ன நேர்ந்ததென்று தெரியவில்லை. ஜப்பான் தோற்றுப் போகுமென்று கண்டு கொண்டு * தனது துரோக நடத்தைக்குப் பின்னாடி தண்டனை கிடைக்குமென்று உணர்ந்தே தற்கொலை புரிந்து கொண்டிருக்கலாம்.

வி வி வி வி வி வி வி

**கல்கத்தா தாக்குதல்கள்.** எதிர் பார்த்தபடி பலவித பொய்வதந்திகள் கிளம்பியிருக்கின்றன. ஆள் சேதமும், சொத்து சேதமும் அதிகமென்றுதான் சொல்லப்படுகிறது. ஆனால் டம் டம் விமான தளம், ஹௌரா பாலம், ரயில்வே ஸ்டேஷன் முதலியவை சேதமாகாமல் அப்படியே தானிருக்கின்றன. தூக்குத் தூக்காக குண்டுகளை எரிந்து, மனிதர்களைத் தாக்கும் குண்டுகளைப் போட்டதிலிருந்து ஜப்பானியருக்குப் பொதுஜனங்களுக்கு பீதியை உண்டாக்கவேண்டுமென்பது தான் முதலாவதான நோக்கம். ஏனென்றால் மூன்று, நான்கு குண்டுகளைப் போட்டால் ஒரு பெரிய தாக்குதலாய்விடாது. ஒரு வாரத்திற்குள் 4 தடவை தாக்குதல் நேர்ந்திருந்தாலும் சேதம்மிகக் குறைவு. ராணுவத்திற்குச் சேதம் இல்லை என்றே சொல்லலாம். இதிலிருந்து நமது பலத்தையும் எதிரியின் பலக் குறைவையும் கண்டுகொள்ளலாம். இரவு காலத்தில் வந்ததிலிருந்தே கல்கத்தா பாதுகாப்பின் பலம் தெரியவரும். எதிரி விமானங்களால் நினைத்தபடி தாக்க முடியவில்லை. இதைப் பற்றி ஸர்க்கார் அறிக்கை கூறிவதாவது: ‘இராக்காலங்களில் எதிரி விமானங்களைத் தடுத்துப் போர் செய்வது ஒருவித பாதுகாப்பாகும். எதிரி விமானங்கள் சேதமாக்கப்பட்டதாகச் சொன்னால் அவை பத்திரமாகத் திரும்பிப் போய்விடமுடியாது. எதிரி விமானம் நிச்சயம் தாக்கப்பட்டாலொழிய பிரிடிஷ் விமானப்படை தாக்கப்பட்டதாக அறிவிக்காது. அதோடு இராக்காலங்களில் நேரும் விமானப் போரில் தாக்கப்பட்ட எதிரி விமானத்தின் கதி என்னவாயிற்று என்று சொல்லவும் முடியாது. வங்காளத்தில் ஒரு விமானம் நிச்சயம் தாக்கப்பட்டது. மற்றும் சில தங்களுடைய தளங்களுக்குத் திரும்பிச் செல்லவில்லை.’

வி வி வி வி வி வி வி

**திருப்பித் தாக்குதல்.** பர்மாவில் நாம் முன்னேற்றப் போரை துவக்கி இருக்கும் விஷயம் தெரிந்ததுதான். மங்டவ்—பூதிடாங் பிரதேசம் கைப்பற்றப்பட்டது. எதிர்த்து நிற்காமல் எதிரி ஓடிவிட்டான். பிரிடிஷ் விமானப்படை இந்திய தளங்களிலிருந்து தினம் ஒரு தடவை வீதம் பர்மாவைத் தாக்கியிருக்கின்றன. முக்கியமாக மாக்வே, அக்யாப், ஹிஹோ,. டாங்கோ தாக்கப்பட்டன. அமெரிக்க விமானங்கள் ரெங்கூன், பாங்காக் முதலியவைகளை 25 தடவை தாக்கின.

“விமான தளங்கள், போக்குவரத்துகள், கப்பல் துறைகள், கப்பல்கள் தொழிற்சாலைகள் முதலியவை லக்ஷியங்களாக இருந்தன. இவ்வளவும் அநேகமாக பைடர் விமானங்களாலேயே செய்யப்பட்ட தாக்குதல்களாகும்.”

வி வி வி வி வி வி வி

**ஸர் சிக்கந்தர்.** டிஸம்பர் 26ௗ இறந்தார். இது ஒரு நஷ்டமே. சர்ச்சில் சொல்லியபடி இவர் ஒரு சாமர்த்தியம் வாய்ந்த வீரன். படைத்தலைமை வகித்த இந்தியர்களுக்குள் இவரே முதலாவதானவர். 1914—18 சண்டையிலும், ஆப்கன் யுத்தத்திலும் பங்கெடுத்துக்கொண்டார். இவரை திருஷ்டாந்தமாகக் கொண்டே பஞ்சாப் மாகாணத்தில் பலர் சைனியத்தில் சேர்ந்துகொண்டார்கள். மத்தியக்கிழக்கில் நடக்கும் சண்டையை நேரில் சென்று பார்வையிட்டார். இவருடைய மரணத்தால் இந்திய

தேசாபிமானி ஒருவர் குறைந்துவிட்டார். சாம்ராஜ்யத்திலேயே ஒரு உண்மை அதிகாரி குறைந்துவிட்டது.

வி வி வி வி வி வி வி

**சில்லரை நாணயங்கள்.** பொழக்கத்தில் சில்லரைத்தட்டு ஏற்பட்டிருப்பதால் உண்டாகும் சிரமங்களைப்பற்றி குறிப்பிடவேண்டியது அவசியமாகும். இதற்கு அரசாங்கத்தார் ஜவாப்தாரியல்ல. பொழக்கத்திலிருக்கும் சில்லரையை அரசாங்கத்தார் வாங்கிவிடவில்லை. ஆனால் புதிதாக ஏராளமாக வெளியிட்டிருக்கிறார்கள். இந்த யுத்தம் ஆரம்பித்த பிறகு 180 கோடி புதிய நாணயங்களை அச்சு அடித்து அனுப்பியிருக்கின்றனர். 7 கோடி மாதாமாதம் மீண்டும் அதிகப்படுத்தியும் இருக்கின்றனர். ஆகவே சில்லரைத் தட்டு ஏற்பட்டால் அதற்குக் காரணமாக நாணயங்களை யாராவது சேகரித்து வைத்துக்கொண்டிருக்கவேண்டும். அதிக லாபத்துக்கு சிலர் சில்லரைகளைக் கொடுக்க நினைக்கவேண்டும். அல்லது உலோகமாக மாற்ற அவைகளை உருக்கவேண்டும். இந்தக் காரணத்தைத் தவிர வேறு காரணங்கள் இல்லை.

சட்டப்படி இதில் ஒவ்வொன்றும் குற்றமாகும். உள்ள மதிப்புக்குமேல் ஒருவரும் நாணயங்களை வாங்கவோ கொடுக்கவோ கூடாது. அப்படி அதிகம் கேட்கிறவர்களை அதிகாரிகளிடம் ரிபோர்ட்டு செய்யவேண்டும்.

வி வி வி வி வி வி வி

**ரப்பர் தூதுகோஷ்டி.** மலேயா, டச்சுநாடுகள் எதிரிவசமானதிலிருந்து ரப்பர் சரியாகக் கிடைக்காததால் இந்தியா ரப்பரைப்பற்றி விசேஷ கவனம் செலுத்தப்பட்டிருக்கிறது. வழக்கமாக வருஷத்தில் 370 லக்ஷம் பவுண்டு உற்பத்திசெய்யப்படுவதில் இவ்வருஷம் 10 லக்ஷம் பவுண்டு இன்னும் அதிகமாக்கவும், அடுத்த வருஷம் 20 லக்ஷம் பவுண்டு அதிகமாக்கவும் முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது. இதைப் பரிசீலனைசெய்ய பிரிடிஷ் ரப்பர் ஸப்ளை தூதுகோஷ்டி இந்தியாவிற்கு விஜயம் செய்யும்.

வி வி வி வி வி வி வி

**ராயல் இந்தியக் கடற்படை டார்பிடோ பள்ளிக்கூடம்.** நான்கு மாதங்களுக்கு முன்பு ஆரம்பிக்கப்பட்டு மும்மரமாக நடந்துவருகிறது. ராயல் இந்தியக் கடற்படையின் பிளாக்ஸ் ஆபீஸர் ஹெர்பர்டு பிட் ஹெர்பர்டு அறிவித்தபடி 'இப்பள்ளிக்கூடத்தை ஆரம்பித்ததின் பயனாக இந்தியக் கடற்படை பிரிடிஷ் கடற்படைக்கு சமமாக ஆகிவருகிறது. பிரிடிஷ் சாம்ராஜ்யத்தில் இது இரண்டாவது ஸ்தாபனமாகும். டார்பிடோக்களைச் சுடுவது பொருக்குவது, லக்ஷியங்களைத் தாக்குவது, சுரங்கவெடிகளைத்தாக்குவது, மின்சார சக்தியை உபயோகிப்பது முதலியவைகளில் பயிற்சி கொடுக்கப்படுகிறது. மற்ற வேலைகளுக்கு லாயக்காகப் பொதுவான படிப்பும் கற்றுக்கொடுக்கப்படுகிறது.

வி வி வி வி வி வி வி

**நமது வாலிபர்கள்.** மதராஸ் படிப்பு இலாகா டைரக்டர் இம்மாகாண வாலிபர்கள் தகுந்த விதமாக நடந்துகொள்ளுவதாக அறிவித்தார். அதை கேட்க நாம் சந்தோஷம் கொள்ளுகிறோம். சமீபத்தில் வெளிவந்திருக்கும் மதராஸ் யுத்த சஞ்சிகைக்கு இவர் எழுதிய வியாசமொன்றில் இந்திய வியாபாரக் கப்பல்களுக்கும், கடற்படைக்கும் இம்மாகாணத்திலிருந்து பல வாலிபர்கள் முன்வந்திருப்பதாகத் தெரிவித்தார். பல கல்லூரிகளிலிருந்து மாணவர்கள் விமானப்படை முதலியவைகளில் சேர முன் வந்திருக்கிறார்கள். இந்த யுத்தம் காரணமாக வேலையில்லாத் திண்டாட்டம் தாத்காலிகமாக நீங்கியிருக்கிறது. இதுவரை ஜனங்கள் தொழில் செய்யக்கூடாதென்று நினைத்த வேலைகளிலெல்லாம் இப்போது ஈடுபட்டிருக்கின்றனர். இந்தியச் சைனியம், கடற்படை, விமானப்படை, ஏ. ஆர். பி. பிரதம சிகித்சை கோஷ்டி முதலியவைகளில் பலர் சேர்ந்திருக்கின்றனர். அதோடு தொழிற்சாலை, விக்ஞானம் முதலியவைகளிலும் அபிவிருத்தி காணப்படுகிறது.



இவ்வித தொழில்களில் ஈடுபட்ட வாலிபர்கள், தைரியம், பொருமை, தியாகம், சிரத்தை, உண்மை தேசாபிமானம் முதலியவைகளைக் காண்பிக்கின்றனர். இவைகளிலிருந்துதான் வரும் காலத்தில் இந்தியா அமைக்கப்படும்.

இவர்கள் இதர தேசத்தவர்களுடனும் இதர ஜாதியார்களுடனும் சேர்ந்து சகோதரத் தன்மையுடன் கலந்துகொள்ளுகிறார்கள். இதிலிருந்து இந்தியாவில் ஒற்றுமை ஏற்படுத்தப்படும்.

பழைய வழக்கங்களை அனுசரித்து ஸ்திரீகளும் தங்கள் புருஷர்கள், பிள்ளைகள், சகோதரர்கள் முதலியவர்களுடன் சேர்ந்து இந்தியப் பாதுகாப்பில் ஈடுபட்டிருக்கின்றனர். பொதுஜன பாதுகாப்பிலும் ஈடுபடுகின்றனர். பொது ஜனங்களையும் பாதிக்கும் இந்த யுத்தத்தில் இவ்விதம் ஈடுபடுவது தான் பொருத்தமாகும்.

---

# யுத்தம் புதிய கட்டத்தை அடைகிறது.

**(ஸர் ஆர்ச்பால்டு வேவல்).**

நியூ டெல்ஹி, டிஸம்பர் 26.

யுத்தம் ஒரு புதிய கட்டத்தை அடைந்திருக்கிறது. இதிலிருந்து முடிவான வெற்றி நமக்குக் கிடைக்குமென்பதைக் காணலாம்.

வெற்றியடையுமுன் நாம் பல சிரமங்களை அனுபவிக்கவேண்டியிருக்கலாம். ஆனால் படையில் சேர்ந்தோ, தொழிற்சாலையிலோ எப்படி ஈடுபட்டிருந்தாலும் அவரவர்கள் தங்கள் கடமைகளைச் சரிவரச்செய்து முடித்தால் வெற்றி தானே நிச்சயம் கிடைக்கும்.

---

## வெற்றி அதிக சீக்கிரத்தில் கிட்டிவிடும்.

**M. காலினின்.**

மாஸ்கோ, ஜனவரி 1.

செம்படை சுமார் இரண்டாயிரத்திற்கதிகமான நகரங்களையும், கிராமங்களையும் திரும்பப் பிடித்திருக்கிறது.

சென்ற வருஷம் ஹிட்லருடனும், அவனது சகாக்களுடனும் கடும்போர் புரிந்தோம். ஹிட்லர் தன் தேசத்திலிருந்தும், இதர தேசங்களிலிருந்தும், மனித பலம், யுத்த தளவாடங்கள் இவைகளைச் சேகரித்து யுத்தத்தில் ஈடுபடுத்தினான்.

ஆனால் ஜெர்மன் நோக்கங்கள் அளவுக்கு மிஞ்சிய ஆசையுடன் கூடியவைகளாக இருந்தன. எப்பொழுதும் போர் உக்கிரமாக நடந்துவந்திருக்கிறது. சில சமயங்களில் கடுமையாகவும் இருந்திருக்கிறது. ஆனால் செம்படை, ஹிட்லரின் நம்பிக்கை தகர்ந்து, பாழாகப்போகும்படி செய்திருக்கிறது.

ஒரு வருஷத்திற்கு முன்பு இருந்ததைவிட தற்போது நமது நிலை அதிக அனுகூலமாக இருக்கிறது. இவ்வருஷம் எதிரிகள் போர்முனை நெடுக முன்னேறித் தாக்கவில்லை. ஆனால் தெற்கிலும், தென்மேற்குப் பகுதியிலும் தான் அவர்கள் முன்னேறித்தாக்கினர். அதனால் அவர்களுக்குக் கிடைத்த பலன் சொற்பமேயாகும்.

இப்பால் எதிரியின் முன்னேறித்தாக்கும் சக்தி குறைந்துவிட்டது. எதிரிக்கு ஏற்பட்ட நஷ்டம் மகத்தானதாகும். இவ்வருஷம் அவனது போர் நடவடிக்கையால் ஒரு வருஷத்திற்கு முன்பு ஏற்பட்டதைவிட அவனுக்கு அதிக நஷ்டமேற்பட்டிருக்கிறது.

ஸ்டாலின்கிராட்டிலும், மத்தியப் போர்முனையிலும், மத்திய டான் பிரதேசத்திலும், வட காகஸஸிலும் நாம் முன்னேறித் தாக்கிவருவதால், நிலைமை நமக்குச் சாதகமாக மாறிவருகிறது. ஜெர்மானியருக்கும் பெரும் நஷ்டம் ஏற்பட்டு

வருவதால் இந்தப் போர்முனைகளில் எல்லாம் இனி அவர்களின் நிலைமை மோசமாகிவரும்.

கைதிகளது தொகையும், பிடிபட்ட தளவாடங்களது அளவும் அதிகமாகப் பெருகிவருகின்றன. செஞ்சேனை சுமார் இரண்டாயிரத்திற்கதிகமான நகரங்களையும், கிராமங்களையும் திரும்பக் கைப்பற்றியிருக்கிறது. அதனால் நமது மக்களது முன்னேறித்தாக்கும் உணர்ச்சியும், நமது தேசாபிமான உணர்ச்சியும் நாளுக்குநாள் அதிகரித்துவருகின்றன. இதனால் நமது உற்பத்தி சக்தி அதிகரித்திருக்கிறது. ராணுவத்தின் சகல தேவைகளும், நமது தொழிலாளரும், கூட்டுமுறையில் பண்ணைவேலை செய்வோரும் செய்யும் முயற்சிகளால் பூர்த்தி செய்யப்படுகின்றன.

1943-ம் வருஷ ஆரம்பத்தில் வெற்றிக்கான அறிகுறி அதிகத் தெளிவாகத் தெரிகிறது. நமது பெரிய தலைவரான ஸ்டாலின் தலைமையின்கீழ் நாம் ஒன்றுசேர்ந்து ஒத்துழைப்பதில் வெற்றி அதி சீக்கிரத்தில் கிடைத்துவிடும் என்பது திண்ணம்.

---

## நமது மூன்று கடமைகள்.

(ஜனாதிபதி ரூஸ்வெல்டு).

வாஷிங்டன், ஜனவரி 1.

நேசநாட்டு உடன்பாடுகளுக்கு இணங்கி ஒரு வருஷத்திற்கு முன்பு 26 நாடுகள் வாஷிங்டன் திட்டத்தில் கையொப்பமிட்டன. அந்த சந்தர்ப்பத்தில் நேசநாடுகளின் நிலைமை கவலைக்கிடமாகத்தானிருந்தது. ராணுவ ஆக்கிரமணம், உடன்படிக்கைகளை மீறுவது திட்டமாக் கொடுங்கோல் செலுத்துவது முதலியவைகளை நடத்தும் நாடுகளை எல்லாபலத்துடனும் எதிர்ப்பது என்று நேசநாடுகள் சென்றவருஷ ஆரம்பத்தில் அட்லாண்டிக் சாஸனத்தை அனுசரித்து ஒப்புக்கொண்டன். மேலும் மனிதவர்க்கத்தின் புனித லக்ஷியங்களான ஸ்வதந்திரம் சந்தோஷ வாழ்க்கை முதலியவைகளை நிலைநாட்டவும் ஒப்புக்கொண்டன.

இவ்வளவு அதிகமான நாடுகள் இதற்குமுன் ஒன்றுசேர்ந்ததேயில்லை. கேவலம் சரீர பலத்தை மாத்திரம் ஒன்றுதிரட்ட முற்படாமல் ஆத்மீக பலத்தையும் ஒன்றுசேர்க்க ஒப்புக்கொண்டன.

அதற்குப்பிறகு இன்னும் மூன்று நாடுகள் இதில் சேர்ந்துகொண்டிருக்கின்றன. அவசியமான இந் நிலையில் இவ்வளவு நாடுகள் ஒன்றுசேர்ந்ததற்குத் தகுந்த பலனும் கிடைத்திருக்கிறது. நேசநாடுகள் தற்காப்புப்போர் திட்டத்திலிருந்து முன்னேற்றப்போர் திட்டத்திற்கு வந்துவிட்டன.

இந்த சந்தர்ப்பத்தில் நமக்கு மூன்று கடமைகள் இருக்கின்றன.

முதலாவதாக, நாகரீகத்திற்குத் தீங்கு விளைவிக்கும் கொள்ளைக்கூட்டத்தார் அழியும்வரை ஸ்வதந்திரத்தைக்கோரும் நாடுகள் மீண்டும் படைகளைச் சேகரிக்க வேண்டும்.

இரண்டாவதாக பரஸ்பரம் இந்நாடுகளின் ஒற்றுமையை அதிகப்படுத்துவதால் மறுபடி எதிரிகள் தலை தூக்காதவண்ணம் செய்யவேண்டும்.

மூன்றாவதாக, எல்லாநாடுகளும் ஒத்துழைத்து மனிதவர்க்கத்திற்கு கடவுள் அளித்திருக்கும் நன்மைகளை நாகரீகத்தின் முன்னேற்றத்தின் மூலம் சமாதானமாயும், சுயேச்சையாகவும் அனுபவிக்கும்படி செய்யவேண்டும்.

---

## பஸிபிக் சமுத்திர யுத்தத்தில் முதலாவது வருஷம்.

---

1941-ம் ஞு டிஸம்பர் மீ 6-ம் தேதி ஜப்பானிய விமானங்களை ஏற்றிச் செல்லும் கப்பல்கள் ஹாவாயை நோக்கிச் செல்லும்பொழுது ஜப்பானிலும்,



யுனைடெட் ஸ்டேட்ஸிலும் இருந்த கப்பல்களின் நிறை பின்வருமாறு மதிப்பிடப்பட்டிருக்கிறது.

| முக்கியமான ஐந்து வகுப்புகள். | | யுனைடெட் ஸ்டேட்ஸ் கப்பற்படை டன் நிறை. | ஜப்பானியக் கப்பற்படை டன் நிறை. |
|---|---|---|---|
| 1. | யுத்தக் கப்பல்கள் ... | 3,84,200 | 3,10,400. |
| 2. | விமானங்கள் ஏற்றிச்செல்லும் கப்பல்கள். | 1,20,300 | 1,30,550. |
| 3. | க்ருயிஸர்கள் ... | 3,31,350 | 2,82,565. |
| 4. | நாசகாரிகள் ... | 2,73,580 | 1,54,948. |
| 5. | நீர் மூழ்கிகள் ... | 91,875 | 82,863. |
| | மொத்தம் ... | 12,01,305 | 9,61,326. |

குறிப்பு:—10 லக்ஷம் டன் அமெரிக்க கப்பற்படையின் பெரும்பாகம் நிரந்தரமாக அட்லாண்டிக் சமுத்திரத்தில் மட்டில் வேலை செய்ய ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் ஜப்பானியக் கப்பற்படைக்கு பஸிபிக் சமுத்திரத்திற்கப்பால் வேலை பார்க்க உபரியான கப்பற்படை கிடையாது.

1941-ம் வருஷம் டிஸம்பர் மாதம் 8-ம் தேதி கப்பற்படையைச்சேர்ந்த விமானங்களாலும், சிறு நீர்மூழ்கிகளாலும் பேர்ல் துறைமுகத்தை ஜப்பானியர்கள் தாக்கியதற்கு அடுத்த நாள், யுனைடெட் ஸ்டேட்ஸின் பஸிபிக் கப்பற்படையைச்சேர்ந்த 8 யுத்தக் கப்பல்களும் தாத்காலிகமாக முடமாகித் தங்கியிருந்தன. அவற்றில் 5 கப்பல்களின் நிறை 1,55,000 டன்கள். அவை மூழ்கடிக்கப்பட்டோ, அல்லது கொஞ்ச காலத்துக்கு சண்டைக்கு உபயோகப்படுத்த முடியாமலோ அவ்வளவு கடுமையாகச் சேதப்படுத்தப்பட்டன. ஜப்பானியருக்கு இரண்டு மனிதர்கள் ஏறிச்செல்லும் நீர்மூழ்கிகள் சிலதும், சில விமானங்களும் தான் நஷ்டம். அந்த நஷ்டமும் பொருட்படுத்தத் தக்கதல்ல. இவ்விதமாக ஜப்பானியக் கப்பற்படை பலம் குறையாமலிருந்தது.

1941-ம் ஞு டிஸம்பர் மீ 10-ல் பிரிடிஷ் தூரக்கிழக்கு கப்பற்படையின் அதிகப் பிரசித்திபெற்ற 35,000 டன் நிறையுள்ள 'பிரின்ஸ் ஆப்வேல்ஸ்' என்ற யுத்தக்கப்பலும், 32,000 டன் நிறையுள்ள 'ரிபல்ஸ்' என்ற க்ருயிஸரும் தெற்குச் சீனக்கடலில் எதிரி ஆகாய விமான நடவடிக்கையினால் அழித்து விடப்பட்டன. அப்பொழுதும் ஜப்பானியக் கப்பற்படை சேதமன்றியிருந்தது

### ஆரம்பத்தில் நேசதேசத்தார்களுக்கு இருந்த பாதகங்கள்.

சேதமான யுத்தக் கப்பல்களுக்குப் பதிலாக கப்பல்களைச் சேகரிப்பதற்கு முன்னும், சேதமடைந்த கப்பல்களைப் பழுது பார்ப்பதற்கு முன்னும், பஸிபிக்கில் கடல் யுத்த நடவடிக்கை ஒன்றும் எடுத்துக்கொள்ள முடியாமலிருந்தது. நேசதேச பஸிபிக் சமுத்திர கப்பற்படையின் பெரும் பகுதிகளுக்கு 8 அங்குல பீரங்கிகள் கொண்ட க்ருயிஸர்களே இருந்தன. எதிரிக் கப்பல்களை நிறுத்திச் சண்டை செய்ய ஆரம்பிப்பதற்கு முன்னமேயே, 14, 16 அங்குல பீரங்கிகள் கொண்ட ஜப்பானிய யுத்தக் கப்பல்களிலிருந்து வரும் வெடிகுண்டுகள் இவற்றைத் தவிடுபொடியாக்கி விடும்.

ஆகையினால் நேசதேசத்தார்கள் எதிரிகளை நேர்முகமல்லாத சாதாரணமான தாக்குதல்களில் மூன்று முறைகளைக் கையாள வேண்டியதாயிற்று. ஒன்று ஜப்பானியர்களின் போக்குவரத்துக்கும், ஸப்ளைக்கும் அனுகூலமாக, இடையிடையே இருந்த தீவுகளைக் க்ருயிஸர்கள், நாசகாரிகள், விமானமேற்றிச் செல்லும் கப்பல்கள் இவைகள் அடங்கிய கப்பற்படையைக்கொண்டு தாக்குதல் செய்தல்; இரண்டாவது எதிரியின் ஸப்ளைக் கப்பல்களையும், கடலிலுள்ள கப்பற்படை பகுதிகளையும், நீர்மூழ்கிகளைக்கொண்டு தாக்குதல், மூன்றாவது, விமானங்

கள் ஏற்றிச்செல்லும் கப்பலிலிருந்தும், தரையிலுள்ள விமான நிலயத்திலிருந்தும் விமானங்களை அனுப்பி கடலிலிருக்கும் எதிரியின் கப்பற்படையைத் தாக்குவது. முதல் இரண்டு முறைகளினால் ஜப்பானியக் கப்பற்படை ஆதிக்கம் பரவாமல் குறையும்படிக்கும், 3-வது முறையினால் ஆரம்பத்தில் கிடைத்த வெற்றியைக் கொண்டு எதிரிக்கு கப்பற்படை பலம் அதிகமிருப்பதைக் குறைப்பதற்கும் எதிர் பார்க்கப்பட்டது.

### வீரத்தன்மை வாய்ந்த டச்சு தளகர்த்தர்.

பேர்ல் துறைமுகத்தில் நடந்த தாக்குதல் முதல் ஸாலமன் தீவுகளில் அமெரிக்கர்கள் திரும்பத்தாக்கும் வரையிலும் உள்ள 8 மாத காலத்தில் இருதிறத்தார்களுடைய கப்பற்படைகளுக்கும், ஒரே ஒரு யுத்தம் தான் நடந்தது. அதன் முடிவு எப்படி என்பது தெரிந்தது தான். பிப்ரவரி மாதக்கடைசியில் ஐந்து க்ரூயிஸர்கள், நாலு நாசகாரிகள் இவைகளுடன் ஜாவாவிலிருந்து வடக்கே பிரயாணம் செய்தபொழுது அட்மிரல் டோர்மானுக்கு இதன் முடிவு எப்படியாகுமென்று நன்றாய்த் தெரியும். அவனுடைய சிறு கப்பற்படைக்கு எதிராக ஜப்பான் வசம் 5 விமானந்தாங்கிக் கப்பல்களும், 15 க்ரூயிஸர்களும், அவற்றைப் பாதுகாக்க 13 நாசகாரிகளும் இருந்தன. இருந்தாலும் வீரத்தனம் பொருந்திய டச்சு தளகர்த்தர் முன்னேறிச் சென்றான். இருதிறத்தார்களுக்கும் நேர்ந்த உயர்ந்த சண்டைகளில் அவனுடைய கப்பல்கள் ஒன்றும் மீதப்படவில்லை. ஆனால் அவை மூழ்குவதற்கு முன் 3 எதிரி க்ரூயிஸர்களையும், நாலு நாசகாரிகளையும் மூழ்கடித்தோ, நாசமாக்கியோ விட்டன.

ஆனால் இந்த 8 மாதங்களில் டோகியோவிலிருந்து சுமார் 1,000 மைல் தூரத்திலிருக்கும் மார்க்கஸ் தீவிலும், வில்பர்ட், மார்ஷல் தீவுகளிலுள்ள எதிரியின் பலமான இடங்களிலும் அட்மிரல் ஹால்ஸியின் தலைமையின் கீழுள்ள அமெரிக்க விமானப்படை கடுமையான தாக்குதல்களைச் செய்தன. படையெடுப்பு ஆரம்பத்தில் எதிரியால் கைப்பற்றப்பட்ட வேக் தீவை பேர்ல் துறைமுகத்திலிருந்த விமானங்கள் வந்து வெடி குண்டுகளால் தாக்கின. மிட்வே தீவு. நியூ கினி, வட ஆஸ்திரேலியா இவைகளில் இருக்கும் எதிரியின் தளங்களை பாம்பர் விமானங்கள் இடைவிடாது தாக்கின.

### ஜப்பானியரின் பலம் குறைக்கப்பட்டது.

இந்நிலைமையில் மே மாதத்தில் பவளக்கடலிலும் ஜூன் மாதத்தில் மிட்வே தீவுக்கப்பாலும் மிகவும் முக்கியமான இரண்டு சண்டைகள் ஏற்பட்டன. இந்த இரண்டு சண்டைகளிலும் இருதிறத்தார்களுடைய கப்பல்களும் பீரங்கி வெடி தூரத்துக்குட்பட்டு நெருங்கி வாராமலே பிரயாணம் செய்துகொண்டிருந்தன. அப்பொழுது அவற்றை விமானங்களால் தாக்குவதும், திரும்பத்தாக்குவது மாகவே இருந்தன. அப்பொழுது நேசதேசத்தார்களுக்கு 'யார்க்டவுன்,' 'லெக்ஸாங்டன்' என்ற விமானமேற்றிச்செல்லும் கப்பல்களும், ஸிம்ஸ், ஹமாம் என்ற இரண்டு நாசகாரிகளே சேதம். ஜப்பானியருக்கு ரியூகாகு (Ryukaku), காகா, அகாகி, ஸோர்யூ, ஹிர்யூ என்ற விமானமேற்றிச்செல்லும் கப்பல்களும், 6 க்ரூயிஸர்களும், 5 நாசகாரிகளும், வேறு 8 யுத்தக் கப்பல்களும் மூழ்கிப்போய் நஷ்டமாகிவிட்டது.

கப்பற்படைக்கு உதவியாக விமானப்படை இல்லாமல் போனால் சிறகில்லாத மீன் போலதானிருக்கும். பவளக்கடல், மிட்வே தீவு இவைகளில் நடந்த சண்டையில் ஜப்பானிய கப்பற்படையின் பக்கபலம் துண்டிக்கப்பட்டது. ஆகையினால் பஸிபிக் சமுத்திரத்தில் நேசதேசத்தார் திரும்பவும் நிலைத்திருக்கும்படி அமெரிக்க விமானப்படைப் பகுதியினால் செய்ய முடிந்தது. அந்த வெற்றியை எதிர் பார்த்ததற்கு முன்னாலேயே நேசதேசப்படை, ஆஸ்திரேலியாவிலிருந்தும், நியூகலிடோனியாவிலிருந்தும், வடக்கே திரும்பத்தாக்க வேண்டுமென்று பஸிபிக் யுத்த சங்கம் தீர்மானித்தது. திரும்பத்தாக்குதலின் வரையறுப்பையும் குறிப்பிட்டது.

### ஸாலமன் தீவுகளில் நடந்த தாக்குதல்.

1942-ம் ௵ ஆகஸ்டு ௴ 7-ம் தேதியில் ஸாலமன் தீவு கூட்டத்திலும் கூடால் கனாலிலும், யுனைடெட் ஸ்டேட்ஸ் கப்பற்படைப் பகுதிகள் வந்து இறங்கின.



இம்மாதிரி வந்து சேருவதற்கு முன் நேசதேச பாதுகாப்புப் படைக்கு 4 க்ரூயிஸர்கள் நஷ்டம். ஆனபோதிலும் சீக்கிரத்தில் இரண்டு முக்கிய லக்ஷியங்கள் நேசதேசத்தார்களுக்குக் கிடைத்தன. அவையாவன:—ஹின்டர்ஸன் என்றும் விமான தளத்தைக் கைப்பற்றியதும் டுளாகியிலுள்ள விமான தளத்தை நேசதேசத்தார்கள் வியாபித்துக்கொண்டார்கள். இந்த முக்கியமான தளங்களை எதிரி தரை, கடல், ஆகாயம் மார்க்கமாக இடைவிடாமல் நாலு மாதங்களாகத் தாக்கியும் அவை வசப்படவில்லை. ஸாலமன் பிராந்தத்தில் ஜப்பானியக் கப்பற்படை அதிகமாக வந்திறங்கியபொழுது மூன்று முறை துரத்தியடிக்கப்பட்டன.

1942-௵ நவம்பர் ௴ 13-ம் தேதியில் கூடால்கனாலை நோக்கி பிரயாணம் செய்துகொண்டிருந்த ஜப்பானிய யுத்தக் கப்பலின் நிலைமை 11 மாதங்களுக்கு முன் பிரின்ஸ் ஆப்வேல்ஸ் கப்பலின் நிலைமை எப்படியோ அப்படியிருந்தது. அதற்கு விமானப்படை பாதுகாப்பு இல்லை. அந்தக் கப்பலிலுள்ள விமான எதிர்ப்பு பீரங்கிகள் போதுமான பாதுகாப்பு கொடுக்க முடியாமலிருந்தது. அதனால் அந்தக் கப்பல் மூழ்கடிக்கப்பட்டது. நவம்பர் 20-ல் ஜப்பானிய ஒலிபரப்பில், யுத்தம் தொடங்கியது முதல் இதுதான் ஜப்பான், இழந்த முதல் கப்பல். இந்த யுத்தத்தின் கொடுமை எவ்வளவு என்பது இதிலிருந்து தெரியும். மேலும் யுத்தத்தின் தன்மை மாறுவதற்கும் இதுவே உதாரணம். டோகியோ இவ்விஷயத்தை நேரே ஒப்புக்கொள்ளாதபோனாலும், ஜப்பானுக்கு விமான மேற்றிச்செல்லும் பல கப்பல்கள் நஷ்டமாகிக்கொண்டு வருகின்றன.

### ஜப்பானின் இரண்டு இடையூறுகள்.

வியாபாரக்கப்பல் பிரச்னை ஜப்பானியருக்கு மிகுந்த தொந்தரவைக் கொடுக்கிறது. அடிக்கடி டோகியோ ஒலிபரப்புகளில் இதைப்பற்றிச் சொல்லப்படுகிறது. 'கப்பற்கட்டும் பிரச்னையைத் தீர்க்க ஜப்பானிய அரசாங்கம் பலத்த நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளுகிறது, யுத்தக் கப்பல்களைக் கட்டுவதைப் போலவே வியாபாரக் கப்பல்கள் கட்டுவதையும் கவனிக்கப்படும்' என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. சமீப காலத்தில் தென் கடல்களில் கப்பல் பழுது பார்க்கும் நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டிருப்பதையும் ஒலிபரப்பப்பட்டது. நவம்பர் 27-ல் சிங்கப்பூரிலும், டிஸம்பர் 7-ல் ஹாங்காங்கிலும் முதன் முதலாக ஜப்பானியக் கப்பல்களைக் கட்டுவதற்கு ஆரம்பிக்கப்பட்டதையும் ஒலிபரப்பப்பட்டிருக்கிறது.

#### (1) மூழ்கடிக்கப்பட்ட ஜப்பானிய வியாபாரக் கப்பல்கள்.

யுத்தம் ஆரம்பித்த முதல் வருஷத்தில் 65 வியாபாரக் கப்பல்களை இழந்ததை ஜப்பானியர் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். சண்டை ஆரம்பிக்கும் பொழுது 60,00,000 டன் நிறையுள்ள கப்பல்கள் இருந்ததில் நிச்சயமாக 10,00,000 டன் நிறையுள்ள கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டு ஜப்பானுக்கு நஷ்டமேற்பட்டதாகத் தெரிகிறது. இன்னும் 15,00,000 டன் நிறையுள்ள கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டிருக்கவேண்டும். அந்தக் கப்பல்களுடன் பயிற்சி பெற்ற நூற்றுக்கணக்கான கப்பற்படை வீரர்களையும் ஜப்பான் இழந்திருக்கிறது. நவம்பர் மாதம் 20-ம் ௳ ஜப்பானியர்களுக்கு டோக்கியோவிலிருந்து ஒலிபரப்பியதில், வியாபாரக் கப்பல்களுக்கு ஆள் சேகரிப்பதற்கு கப்பல் இலாகா மந்திரி சபை பிரசுரித்திருப்பதையும், 8 பள்ளிக்கூடங்களில் பயிற்சி கொடுக்கும் காலத்தை 21 மாதங்களுக்குக் குறைத்திருப்பதையும் தெரியக்கொடுத்திருக்கிறார்கள். அதில் ஆச்சரியப்படுவதற்கு இடமில்லை.

#### (2) அமெரிக்காவில் கப்பல் கட்டும் திட்டம்.

அமெரிக்கக் கப்பல் கட்டும் திட்டத்தில் ஏற்பட்ட அபிவிருத்தியையும் பேர்ல் துறைமுகத்தில் மூழ்கடிக்கப்பட்டும், சேதமாக்கப்பட்டும் இருக்கிற கப்பல்களைப் பழுது பார்த்து வேலைக்கனுப்பும் வேகத்தையும் பார்க்க ஜப்பானியருக்கு கவலையாக இருக்கிறது. பேர்ல் துறைமுகத்தில் தாக்கப்பட்ட 8 சண்டைக் கப்பல்களில் மொத்தத்தில் ஒன்று தான் நஷ்டமாயிருக்கும். அந்தத் தாக்குதலுக்குப் பிறகு 3 புதிய யுத்தக் கப்பல்களைக் கட்டுவதற்கு ஏற்பாடாயிற்று. இன்னும் மூன்று கப்பல்கள் கட்டி முடிக்கப்பட்டன. சென்ற ஐந்து மாதங்களில் ஐந்து புதிய விமானம்தாங்கி கப்பல்கள் கட்டப்பட்டிருக்கின்றன. யுனைடெட் ஸ்டேட்ஸில் வருஷத்திற்கு 15.00.000 டன் நிறை வீதம் புதிய யுத்தக் கப்பல்கள்

கட்டுவதற்கு ஏற்பாடாயிருக்கிறது. மாதத்திற்கு 10 லக்ஷம் டன் நிறை வீதம் பல வியாபாரக் கப்பல்கள் அமெரிக்கத் தொழிற்சாலைகளில் இப்பொழுது கட்டப்பட்டு வருகின்றன.

பேர்ல் துறைமுகத்தில் நடந்த சண்டையில் அமெரிக்காவிற்குக் கடுமையான சேதம்தான். ஆனால் நேசதேசத்தார்களின் பலம் நாளுக்கு நாள் பெருகிவருகிறது. பெரிய வல்லரசுகளை சண்டைக் கிழுத்ததில் ஏற்பட்டிருக்கும் தவறுகளை ஜப்பான் இப்பொழுது உணர ஆரம்பித்திருக்கிறது. அதன் தவறுதல்களுக்காக ஜப்பான் பல கப்பல்களையும், விமானங்களையும், அநேக வீரர்களையும் இழந்துவருகிறது.

---

# நவீன யுத்த முறை.

---

## (மேஜர் ஓயிஹேஸ்டிங்ஸ் என்பவர் எழுதியது).

முக்கியமாக இந்த யுத்தத்தில் கரையோரமுள்ள பல முக்கிய தளங்களைக் கைப்பற்றியாகவேண்டும். அதற்குத் தரைப்படைகளை உபயோகிக்கவேண்டியிருக்கிறது. ஆகாயப்படை, தரைப்படை, கப்பற்படை இவைகள் பரஸ்பரம் ஒன்று சேர்ந்து ஒத்துழைக்கவேண்டும் என்ற விஷயம் சென்ற மூன்று வருஷம் நடந்த நடவடிக்கைகளில் நாம் அவசியமாகக் கற்றுக்கொள்ளவேண்டிய பாடங்களில் ஒன்று. இந்த விஷயத்தைத் தெரிந்துகொள்ளாததினால்தான் இதற்குமுன் நமக்குப் பல தோல்விகள் ஏற்பட்டன. அப்பொழுது நமக்கு நவீன யுத்த ஆயுதங்களின் சக்தியைப்பற்றியும், அதிதுரிதமாக ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குச் சைனியத்தைக் கொண்டுசெல்லும் சாதனங்களைப்பற்றியும் தெரியாது. இக்காரணத்தினால்தான் நமக்குப் பல தோல்விகள் நேரிட்டன.

தரைச் சண்டைகளைப் பற்றி கவனிப்போம். முன்காலத்தில்தான் தரைச் சண்டையென்றும், கடற் சண்டையென்றும், தனித்தனியாகச் சொல்லப்பட்டது. அம்மாதிரி வெவ்வேறு சண்டைகளாகப் பிரிப்பது நவீன யுத்தமுறையல்ல. தற்போது நவீன யுத்தத்தில் எல்லாவிடங்களிலும் சண்டை நடைபெறும். கடல் ஆதிக்கம் என்றால் என்ன? கடல் மார்க்கமாக வரும் போக்குவரத்தைப் பாதுகாக்க கடற்கரையோரங்களில் வைக்கப்பட்டிருக்கும் படை பலம் உபயோகமாக இருக்கிறது. எகிப்தில் நீண்டகாலமாக நடந்துவந்த சண்டையை உதாரணமாகச் சொல்வோம். மத்தியதரைக்கடல் மார்க்கமாக கப்பல் போக்குவரத்தை வைத்துக்கொள்ளத்தான் அச்சண்டை புரியப்பட்டிருக்கிறது. ஆனால் அங்கு ஒரே சமயத்தில் திடீரென்று கடலாதிக்கத்தைப் பெறுவதற்கு விசேஷ டாங்கிப் பகுதி தேவையாக இருக்கும். முதலெடுப்பில் இவ்விஷயம் நமக்கு புதிர்போல் தோன்றும். ஆனால் அது உண்மைதான்.

புராதனமாக நடந்துவந்த யுத்தமுறைகளும், அவைகளைக் குறித்துள்ள அபிப்பிராயங்களெல்லாம் இப்பொழுது பழமையாகிவிட்டன. ஏனென்றால் நவீன யுத்த முறையில் தரைச்சண்டையிலும், ஆகாயச்சண்டையிலும் வெகு தூரமுள்ள பல இடங்களுக்கு வெகுசீக்கிரத்தில் போவதற்கான பல சாதனங்கள் இருக்கின்றன. அதனால் ஒருவித யுத்த முறையில் மட்டும் பழக்கமுள்ளவர்கள் நவீன யுத்தத்தில் சமாளிக்க முடியாது.

உண்மையில் பலவித படைகள் செய்யவேண்டிய வேலைகளில் பல மாறுதல்கள் ஏற்பட்டுவருகின்றன. உதாரணமாக நவீன காலத்தில் நடக்கும் ஒரு படையெடுப்பைக் கவனித்தால் பீரங்கிப்படை, காலாட்படை இவைகளின் யுத்த முறைகளில் உள்ள வித்தியாசம் மறைந்துவருகிறது. இதற்குமுன் குஸ்டேபஸ், அடால்பஸ் போட்ட திட்டப்படி பீரங்கிப்படை ஸ்தானத்திலிருந்துதான் காலாட்படை சுடவேண்டும் என்ற முறை இப்பொழுது கையாளப்படுகிறது. பீரங்கிப் படை பலவிதத்தில் காலாட்படைக்கு உதவியாக ஆகிவிட்டது. ஏனென்றால் நவீன யுத்த முறைப்படி அதிதுரிதமாக எதிர்த்துவரும் கவசம்பூண்ட டாங்கிகளை யந்திர பீரங்கிகளைக்கொண்டு காலாட்படை சிறுத்துவது அசாத்தியம். மேலும் திடீரென்று ஏற்படும் டாங்கி எதிர்ப்பைத் தடுக்க கொஞ்ச தூரத்திலுள்ள பீரங்



கிப்படை முகாம்களுக்குச் செய்தி அனுப்பி அதன் உதவியை எதிர்பார்ப்பதும் காலதாமதமாகும். அதனால்தான் காலாட்படை பீரங்கிப்படை ஸ்தானத்தில் வைக்கப்பட்டிருக்கிறது.

இவ்யுத்தத்தின் முக்கிய அம்சம் அடிக்கடி யுத்த சாதனங்களையும், முறைகளையும் மாற்றுவதுதான். ஒரு சமயம் நெபோலியன் ஒவ்வொரு பத்து வருஷத்திலும் யுத்த தந்திரத்தில் மாறுதல் ஏற்படும் என்று சொல்லியிருக்கிறான். அவ்வித அபிப்பிராயம் நவீன காலத்திற்குப் பொருந்தாது. ருஷ்யாவில் யுத்தம் ஆரம்பித்தது முதற்கொண்டு, எகிப்தில் யுத்தம் நடந்த ஒரு வருஷ காலத்திற்குள் வெவ்வேறு யுத்த தந்திரங்களும், யுத்த சாதனங்களும் கையாளப்பட்டன. இம்மாதிரி மாறுதல்கள் நெபோலியன் வாழ்நாளைக்குள் நேர்ந்ததே கிடையாது.

உதாரணமாக டாங்கி யுத்த தந்திரங்களை அடிக்கடி மாற்றவேண்டியிருக்கிறது. ஏனென்றால் டாங்கி எதிர்ப்பு பீரங்கிகளின் சக்தி அதிகரித்துவருவதோடு மட்டுமல்லாமல் வெகுதுரிதமாகவும், தானாகவே சுடக்கூடிய புதுமாதிரியான பீரங்கிகளும் இப்பொழுது உபயோகப்பட்டுவருகின்றன. பீரங்கிகளைப் பிரயோகிப்பவர்களுக்கும் நல்ல பலமான கவசம் கொடுக்கப்படுகிறது. இப்பொழுது விஞ்ஞான சாஸ்திரமும் நூதன சிருஷ்டிகளும் சைனியங்களின் உபயோகத்திற்கிருக்கின்றன. இப்பொழுது படத்தில் வரைந்து அதன்படி யுத்த தந்திரங்களை அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது.

பிரிடன் பேரில் நடந்த விமானத் தாக்குதலைப் பற்றிய படத்தை அநேகர் பார்த்திருக்கலாம். அதிலிருந்து ஒரு உண்மைவெளியாகிறது. அத்தாக்குதலில் பிரிடனுக்கு வெற்றி நிச்சயம் கிடைக்குமென்று பல நிபுணர்கள் அபிப்பிராயப்பட்டார்கள். இதற்குக் காரணம் பிரக்யாதி பெற்ற யந்திர நிபுணர்களும், தொழிலாளிகளும் R. J. மிச்சலின் தலைமையின் கீழ் ஸ்பிட்பையர் என்ற விமானங்களைச் செய்துமுடித்தனர். இதற்கு பல தடைகள் ஏற்பட்டன. உத்தியோக முறையில் அதற்கு ஆதரவு கிடையாது. எப்படியிருந்த போதிலும் அவர்கள் எடுத்த காரியத்தைச் செய்து முடித்தார்கள்.

நவீன யுத்தங்களில் பிரக்யாதிபெற்ற சேனைத் தலைவர்களுக்கும், யுத்த வீரர்களுக்கும், ரசாயன வேலைக்காரர்கள், என்ஜினியர்கள், இவர்களின் அபிப்ராயப்படி எஃகு ஆயுதங்களைத் தயாரிக்கும் தொழிலாளிகளின் உதவி அத்யாவசியம். பற்பல யுத்த சாதனங்களைக்கொண்டு வெவ்வேறு காரியங்களைச் சாதிக்கமுடியும் என்று சொல்வது நவீன யுத்தத்திற்குப் பொருத்தமாக இராது. இதில் பல தொழிலாளிகளின் ஒற்றுமைவேண்டும். சைனியத்தை நடத்துவதிலும், யுத்தத்திற்கு திட்டங்கள் போடுவதிலும், யந்திரங்களைப் பழுது பார்ப்பதிலும், சுரங்கவேலை செய்வதிலும் தொழிலாளிகளுக்குள் ஒற்றுமைவேண்டும். இவ்வித ஐக்கிய பத்தியத்தில் ஏதேனும் ஒரு இடத்தில் பங்கம் நேரிட்டால் முழு யுத்த முயற்சியும் வீணாகும்.

பொதுவாக யுத்தங்களில் முக்கியமான விஷயம் ஒன்றேதான். அதுதான் நமது உற்பத்தி சக்தி. இவ்விஷயம் எல்லோருக்கும் தெரிந்ததுதான். எதிரியின் பலத்திற்குத் தக்கவாறு நாம் அதிகமாக யுத்தப்பொருள்களைத் தயாரிக்கவேண்டும். சென்ற இரண்டு வருஷங்களுக்கு முன்பு நமக்கிருந்த ஆயுதபலமும், மனித பலமும், இப்பொழுது பன்மடங்கு அதிகரித்திருக்கின்றன. இருந்தாலும் அவை வெவ்வேறு போர்முனைகளில் சிதறியிருக்கின்றன. அவைகளைத் தற்போது ஒன்று சேர்ப்பதற்கு முடியாமலிருக்கிறது.

இக்காரியத்தைச் சாதிக்கும் சக்தி நம்மிடத்தில் மறைவுதலாக இருக்கிறது. ஆனால் அதை நடைமுதலுக்குக் கொண்டுவரும்படியாக நாம் இதுவரை அபிவிருத்தி செய்யவில்லை. இப்பொழுது அந்த சக்தி விருத்தியாகிவருகிறது. இந்நாட்டில் சென்ற ஜுலை மாதத்தில் நேசதேசத்தார்களின் யுத்த இலாகா அதிகாரிகள் கூட்டம்கூடி செய்த தீர்மானங்களை நிறைவேற்றுவார்கள் என்று நம்பப்படுகிறது.

யுத்தத்தில் போட்ட திட்டம் நிறைவேறிவிட்டால் சாதாரணமாக எல்லோருக்கும் கொஞ்சம் பரபரப்பு ஏற்படும். அப்பரபரப்பு நீங்க ஒரு வழி இருக்கிறது. ஜெர்மன் ஒலிபரப்புகளை சமீபகாலமாக நான் படித்துவருகிறேன். நாஸிப் பிரசாரத்திலும் எப்போதாவது உண்மை வெளிவரும். கொஞ்சம்கூட உண்மை கலப்பில்லாமலும், வெகு சாதுர்யமாகவும், பொய்யான விஷயங்களை ஜெர்மானியர் நம்பும்படியாகவும், அவர்களுக்கு சந்தோஷத்தை உண்டாக்கும்படியாகவும் ஜெர்மனியில் ஒலிபரப்பப்படுவதால் அவ்வொலிபரப்புகளைப் படிப்பதற்கு நான் விரும்புகிறேன். இம்மாதிரி பொய் விஷயங்களை கோயபெல்ஸ் சர்வசாதாரணமாக பரப்பிவருகிறான். "இவ்வுலகத்தில் நாஸிகள் தவறி நடக்கக்கூடிய விஷயம் ஒன்றுமேயில்லை. அவர்களுக்குத் தோல்வியே கிடையாது. நஷ்டமும் இல்லை. எல்லாம் போட்ட திட்டங்கள் பிரகாரமே நடந்துவருகின்றன. 'யு' படகுகளும், ரகஸியப் போலீஸாரும் எங்கு பார்த்தாலும் மேன்மையான நிலைமையிலேயே இருக்கின்றன. சிற்சில குக் கிராமங்களைத்தான் பிரிட்டிஷ் விமானப்படை தாக்கி வருகின்றன. மற்றபடி முக்கியமான இடங்கள் தாக்குதலுக்கு உட்படவில்லை. ஓரிடத்திலும் புகார் இல்லை. அவர்கள் செய்துவருவதை ஒருவரும் குறைகூறவில்லை" என்றெல்லாம் ஒலிபரப்பப்படுகிறது.

இம்மாதிரி அளந்த பொய்யான செய்திகளுடன் உண்மையான நடப்புகளை வைத்து சிந்தித்துப் பார்த்தால் நமக்கு தேறுதல் ஏற்படும். ஆனால் இத்தகைய ஒலிபரப்புகள் பிரிட்டிஷாருக்கு அருவெறுப்பைதான் கொடுக்கும். யுத்தத்தில் அடிக்கடி தோல்விகளும், வெற்றிகளும் கலந்துகலந்துதான் வரும். அடிக்கடி மாறுதல் ஏற்பட்டு வரும் நிலைமை ஒருபொழுதும் நமக்குப் பூரண திருப்தியை அளிக்காது. எப்படியிருந்தபோதிலும் நடப்பை நேர்முகமாகப் பார்த்து நாம் தேர்தல் அடையக்கூடும். ஆனால் ஜெர்மானியருக்கு அது முடியாது.

---

## ஸ்திரீகளும், யுத்தமும்.

(டைம்ஸ் ஆப் இந்தியா பத்திரிகையிலிருந்து எடுக்கப்பட்டது).

லெப்டினன்ட் லெட்மிலா பாவ்லிச்சென்கோ என்னும் ருஷ்ய ஸ்திரீ மிகவும் பிரக்யாதி பெற்ற துப்பாக்கி வீரர். அவள் திறச்செயலை மெச்சி பல ஆங்கிலேய ஸ்திரீகள் அவளைக்கொண்டாடினார்கள். அச்சம்பவத்தைப்பற்றி சமீபத்தில் பத்திரிகைகளில் வெளிவந்திருக்கிறது. இந்த சம்பவத்தில் இந்த யுத்தத்தில் அடிக்கடி ஸ்திரீகளும் மகத்தான செய்கைகளைச் செய்யக்கூடியவர்கள் என்று காட்டப்பட்டிருக்கிறது. இந்தியாவிலிருக்கும் நமக்கு, யுத்தரங்கங்களில் ஸ்திரீகள் எடுத்துக்கொள்ளும் பங்குகளைப் பற்றியுள்ள கதைகள் ஆச்சரியத்தைக் கொடுக்கக்கூடியவை யல்ல. இந்திய தேச சரித்திரத்தில் போர் செய்த ராணிகள் அரசியல் தந்திரங்கள் தெரிந்த பிரக்யாதி பெற்ற ஸ்திரீகள் இவர்களின் சரித்திரங்கள் நிரம்பியிருக்கின்றன.

மின்னல் படை முறைகள் அனுஷ்டிக்கப்பட்டு வரும் இந்த நவீன யுத்தத்தில் ராணுவப் படைகளுக்கும், பொது மக்களுக்குமுள்ள வித்தியாசங்கள் போய்விட்டன. இம்மாதிரி யுத்தங்களில் ஜயம்பெற வேண்டுமானால் மனிதர்களுடன் ஸ்திரீகளும் சமமான கஷ்ட நஷ்டங்களை அனுபவிக்கவேண்டும். அதுமுதல் தற்காப்பு முறை என்பதில் திட சரீரமுள்ள ஜனங்கள் சேர்ந்தோ, யாவரும் தனிமையிலோ எதிரிகள் முன்னேற்றத்தைத் தடுக்கக் கூடியவர்களாக இருக்க வேண்டும். முதன் முதலில் நவீன யுத்தத்தில் அனுபவம் பெற்றது ஸ்பெயின் தேசம்தான். பொதுவுடமைக் கொள்கைகொண்ட லா பாஷியனேரியா என்ற ஸ்திரீயின் தலைமையின் கீழ் அதிக தைரியம் வாய்ந்த ஸ்திரீ



களின் செய்கை உலகத்தையே பிரமிக்கச் செய்தது. அவளை 20-ம் நூற்றாண்டு ஜோன் ஆப் ஆர்க் என்றும் சொல்லலாம். ஜெனரல் பிராங்கோ தளகர்த்தர் பதவிக்கும் மேற்கொண்ட பதவியை அவளுக்குக் கொடுத்தான். பொதுவாக எல்லா ஸ்திரீகளும் அவளை உதாரணமாகக் கொள்ளவேண்டும். ஸ்பெயின் தேசத்து பொதுவுடமைக் கக்ஷியினர் அவளைத் தெய்வமெனக் கொண்டாடுகிறார்கள். அவளைப் பார்க்க எல்லா ஸ்திரீகளுக்கும் ஊக்கம் அதிகரிக்கிறது.

சீனாவிலும், ருஷ்யாவிலும் புராணக்கதைகள் மாதிரி இப்பொழுதும் பல சம்பவங்கள் நடந்திருக்கின்றன. ஜப்பானியப் போர்அணிகளுக்குப் பின்புறம் இருந்துகொண்டு கொரில்லாச் சண்டை செய்து வரும் பல சீன ஸ்திரீகள் அதிகப் புகழடைந்திருக்கிறார்கள். சீனாவில் கொரில்லாப் படைகளைச் சேகரித்ததற்கு லேடி ஸாவோ என்று சொல்லப்படும் சீன ஸ்திரீதான் காரணம். அவள் ஒரு குடியானவன் மனைவி. அவளுக்கு எழுதப்படிக்கத் தெரியாது. சீன சைனியங்கள் பின் வாங்கிய பிறகு சீன எதிர்ப்பை ஒருங்குபடுத்தி நடத்தி வந்த நாலு ஸ்திரீகளில் அவள் ஒருவள். அவளுடைய தைரியமும் விடாமுயற்சியும் இன்று வரையில் அழியாப் புகழ்பெற்றிருக்கிறது. இது வரையில் கிழக்கு தேசத்தில் கிடைக்கப் பெறாத சம உரிமையை சீன ஸ்திரீகள் பெற்றுவிட்டார்கள் என்று தெரிந்த பின்தான் அவள் இறந்தாள். ஏனென்றால் அப்பொழுது போர் முன்னணியில் 40 சீன ஸ்திரீகள் சண்டை செய்து கொண்டிருந்தார்கள். ஜப்பானிய பீரங்கிகளால் சுட்டு வீழ்த்தப்பட்ட சீன சகோதரர்கள், புருஷர்கள், சிநேகிதர்கள் இவர்கள் போட்டிருந்த உடைகளை யுத்தகளத்திலிருந்து பொருக்கியெடுத்து அவற்றை போதும் போதாமலும், நாகரீகமில்லாமலும் போட்டுக்கொண்டு சீன ஸ்திரீகள் சண்டை செய்து வந்தார்கள்.

ஸோவியத் அரசாட்சிக்குட்பட்ட ருஷ்யாவில் 26 வருஷங்களுக்கு முன் ஸ்திரீகள் தினமென்று ஒரு விசேஷக்கொண்டாட்டம் நடந்தது. அந்த தேச சரித்திரத்தில் அது ஒரு முக்கியமான தினம். ஏனென்றால் அன்று முதல் ருஷ்யாவிலுள்ள ஸ்திரீ புருஷர்கள் ஒன்றாகவும், சமமாகவும் இருக்கத் தீர்மானித்திருக்கிறார்கள். வேலைத்திறமைக்கு புத்தி கூர்மையைத் தவிர 'ஸ்திரீ புருஷர் என்ற வித்தியாசமே கிடையாது. அநேக முக்கியமான வேலைகள் ஸ்திரீகளுக்குக் கொடுக்கப்பட்டிருந்தன. ஒவ்வொரு சமையக்காரனும்கூட அரசாங்கத்தை நடத்தத் தெரிந்துகொள்ளவேண்டும். என்று லெனின் சொன்னான். நாஸிக் கூட்டங்களால் முற்றுகை போடப்பட்டிருக்கும் அந்த தேசத்தில், இந்த முக்கியமான சந்தர்ப்பத்தில் 26-வருஷங்களுக்கு முன் புருஷர்களால் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்ட பொறுப்பை இரண்டு மடங்காகச் செய்திருக்கிறார்கள். ருஷ்ய தேசத் தற்காப்பில் ஸ்திரீகள் எடுத்துக்கொள்ளும் முக்கியமான பங்கு யாவருக்கும் தெரியும். பாராசூட்களில் இறங்கி 'தன் நாட்டிற்கு உதவி செய்யக்கூடிய பயிற்சி பெற்ற ஆயிரக்கணக்கான ஸ்திரீகள் அங்கு இருக்கிறார்கள். செஞ்சேனை அச்சு நாடுகளுக்கு எதிராக முழுபலத்துடன் தாக்க ஆரம்பிக்கும்பொழுது வருங்காலத்தில் அவர்கள் இன்னும் அரிய சேவை புரிவார்கள் என்பதற்கு இதுவே அத்தாக்ஷி. இங்கிலாந்தில் மின்னல்படை அந்த தாக்குதல்கள் நடந்த பயங்கரமான காலத்தில் அவர்கள் தைரியமாகவும், வீரத்தனமாகவும் ஸ்திரீகள் நடந்து கொண்டதில் அவர்களுக்குக் கியாதி ஏற்பட்டிருக்கிறது. வேலையில் அவர்களுக்கிருந்த பற்றுதல் மிகவும் அதிகம். வருங்காலத்தில் உலக அமைப்பில் எல்லா இடங்களிலும் ஸ்திரீகள் திறமையாக உழைத்துப் பங்கெடுத்துக்கொள்வதற்கு இவ்விஷயம் அதிக ஊக்கமளிக்கும்.

---

# பெட்ரோல் சுவற்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்தது.

---

## பாலைவனத்தின் நடுவிலுள்ள ஸிவா (Siwa) செழிப்பான பிரதேசத்தில் நேசதேசத்தார்களுக்கு அராபியர் செய்த உதவி.

நியூ யார்க், டிஸம்பர் 5.

கெய்ரோவிலிருந்து நியூயார்க் டைம்ஸ் பத்திரிகை நிருபர் அறிவிப்பதாவது:- ரோமல் எல்அலமீனைத் தாக்கி முன்னேறியபோது இதாலியர்கள் ஸிவா (Siwa) பிரதேசத்தை ஆக்கிரமித்துக்கொண்டிருந்தார்கள். அங்கிருந்த ஷேக் ஆலி ஸெனியூஸி என்ற அராபியத் தலைவன் பிரிடிஷாரின் எண்ணெய் கிடங்கு இருந்த இடத்தைத் தெரியப்படுத்த மறுத்துவிட்டான்.

இதாலியர்கள் ஷேக் ஆலியை சிறைப்படுத்தி விட்டார்கள். மீண்டும் பிரிடிஷார் எகிப்து—லிபியா எல்லைப் பிராந்தியத்தைக் கைப்பற்றும் வரை அதை ரகசியமாக வைத்துக்கொண்டிருந்தான்.

அந்த இதாலியர்கள் அநேகமாக எல்லோரும் இளைஞர்கள் என்று அராபியர்கள் தெரியக்கொடுத்தார்கள். அந்தப் பிரதேசத்தில் ஜெர்மானியர் தங்கியிருப்பதில்லை என்றும் அவர்களுக்குச் சொன்னார்கள்.

சமீபத்தில் பிரிடிஷார் அங்கு வந்தபொழுது பிரிடிஷ் விமானப்படை ஸார்ஜென்ட் பெட்ரோல் வேண்டுமென்று கேட்டார். ஷேக் ஆலி ஒரு முத்தத்திலிருந்த மண் சுவரின் அருகே அவரைக் கூட்டிச் சென்றார். வேறொரு அராபியனைக் கொண்டு அந்தச் சுவரை எடுக்கச் சொன்னார். உடனே ஒரு மரக்கதவு தென்பட்டது. ஷேக்ஆலி ஸார்ஜென்டிடம் ஒரு சாவியைக் கொடுத்தார். அதைத் திறந்து பார்க்க கதவுக்குப் பின்புறம் 44 காலன் பெட்ரோல் கொண்ட 5 டிரம்கள் இருந்தன.

---

# விளம்பரம்.

---

## எதிரி ஏஜெண்டுகளைப் பிடிப்பவர்களுக்கு ரூ. 5,000 இனம்.

---

1. எதிரி ஏஜெண்டுகளை பொதுமக்களில் யாரும் பிடித்துக் கொடுக்கலாம். அப்படி பிடிபட்டவர் விசாரணையில எதிரி ஏஜெண்டுதான் என்று நிரூபிக்கப்பட்டு, அதனால் தண்டனை அடைந்தாலும், அல்லது அவன் எதிரிக்கு நேர்முகமாக உதவி அளிக்கும் வேலையில் ஈடுபட்டிருப்பதாக பாதுகாப்பு இலாகா அதிகாரிகளுக்குத் திருப்திகரமாக ரூபிக்கப்பட்டாலும் அம்மாதிரியுள்ளவர்களை உயிருடன் பிடித்துக் கொடுப்பவருக்கு **5,000** ரூபாய்வரை இந்திய ஸர்க்காரால் பரிசு அளிக்கப்படும்.

2. அம்மாதிரி ஏஜெண்டாக இருப்பவர்களைக் கண்டு பிடிப்பதற்கான முக்கியமான தகவலைக் கொடுக்கக்கூடிய பொதுமக்கள் யாருக்கும் **1,000** ரூபாய் வரை பரிசு கொடுக்கப்படும்.

3. அம்மாதிரி ஏஜெண்டுகளைக் கண்டுபிடித்து கைப்பற்றுவதற்கும், அவர்களைக் கைப்பற்றுவதில் உபயோகமாக இருக்கக்கூடிய தகவல்களைச் சேகரிப்பதற்கும் பொதுமக்கள் கூடிய சீக்கிரத்தில் அடியில்கண்ட விவரப்படி தகவல் கொடுக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.



(i) கடல் மூலமாக எதிரி ஏஜெண்டுகளைப் புகுத்த எதிரிகள் முயற்சிப்பதாகச் சந்தேகம் தோன்றும்பொழுது, முக்கியமாகக் கரையோரத்திற்குக் கப்பல்கள் வந்தால் அதன் நடவடிக்கைகளையும்;

(ii) இந்தியக் கடற்கரையோரமாகவோ, அல்லது வேறிடங்களிலோ சந்தேகிக்கும்படியாக அன்னியர்கள், ஆயுதம் பூண்டோ, பூரா உடை தரித்தோ, இல்லாமலோ வந்திருப்பதையும்;

(iii) நேசதேசங்களுக்குச் சொந்தமில்லாத விமானங்கள் இறங்குவதையும், அல்லது நாட்டைத்தாண்டிச் செல்வதையும்; ஆட்களோ, சாமான்களோ, குடை மூலமாகவோ, விமானங்களிலிருந்தோ இறங்குவதையும்;

(iv) தரை, கடல், ஆகாய மார்க்கமாக சமீப இடங்களில் எதிரி நடவடிக்கையைக் குறிக்கக்கூடிய எந்த சம்பவத்தையும்பற்றி பொதுமக்கள் கூடிய சீக்கிரத்தில் தகவல் கொடுக்கவேண்டும்.

4. **எதிரி ஏஜெண்டுகளை கண்டுபிடித்துக் கைப்பற்றுவதில் கொடுக்கப்படும் முக்கியமான தகவல்கள் யாவும் வெகு சீக்கிரத்தில் கொடுக்கப்படவேண்டும்;**

5. பிடிக்கப்பட்ட எதிரி ஏஜெண்டுகளையும், தெரியக்கொடுக்கவேண்டிய தகவல்களையும்;

(i) **கிராமாந்திரங்களில்**—வட்டம் அதிகாரிகள், அல்லது போலீஸ் உத்தியோகஸ்தர்;

(ii) **டவுன்களில்**—அருகிலுள்ள போலீஸ் அதிகாரி அல்லது போலீஸ் ஸ்டேஷன், இவைகளில் தெரியக்கொடுக்கவேண்டும். வட்டம் அதிகாரிகளும், போலீஸ் உத்தியோகஸ்தர்களும் இது விவரத்தை உடனேயே உயர்தர போலீஸ் அதிகாரிக்கோ, அல்லது சமீபத்திலிருக்கும் ராணுவ முகாம்களிலோ அறிவிக்கவேண்டும்.

6. பரிசுக்குரியவர்கள் தங்களுக்குள்ள உரிமையை ஜில்லா மாஜிஸ்திரேட்டுக்கோ, அல்லது ஜில்லா கலெக்டருக்கோ, (இந்திய ஸமஸ்தானங்களாய் இருந்தால் ரெஸிடெண்ட் அல்லது பொலிடிகல் ஏஜெண்ட் அவர்களுக்கோ) சம்பவத்தின் தேதி, மணி, சாக்ஷிகளின் பெயர், விலாசம், அவர்கள் வாக்கு மூலங்கள் முதலிய முழு விவரத்துடன் எழுதி அனுப்பவேண்டும்.

7. பிடிக்கப்பட்ட மனிதனின் விசாரணை முடிவான பிறகு விசாரணை நடத்திய கோர்ட்டார் அவர்களின் சிபார்சை அனுசரித்து, கூடிய சீக்கிரத்தில் அந்த ஜில்லா மாஜிஸ்திரேட்டினால் பரிசுகள் கொடுக்கப்படும்.

8. ராணுவ இலாகா அதிகாரிகள், பொது இலாகா அதிகாரிகள் இவர்கள் யுக்தப்படி பரிசுகள் கொடுக்கப்படும். கொடுக்கப்பட்ட தகவலின் முக்கியத்வத்தையும், உண்மையையும் அனுசரித்து ஒவ்வொரு கேஸிலும் தொகை நிர்ணயிக்கப்படும். ஒரே கேஸில் முதல் பாராவில் கண்டபடி ரூபாய் **5,000** வரைக்குமோ அல்லது இரண்டாவது பாராவில் கண்டபடி ரூபாய் **1,000** வரைக்குமோ பரிசுத் தொகை இருக்கலாம்.

9. கப்பற்படை, தரைப்படை, விமானப்படை இவ்விலாகாக்களில் உள்ள உத்தியோகஸ்தர்கள் அல்லது உயர்தர ஸர்க்கார் வேலைக்காரர்கள் இவர்களுக்கு பரிசுகள் கொடுக்கப்படமாட்டா. ஆனால் இந்திய அரசாங்கத்தார் ஏற்கனவே அனுமதி கொடுத்த விசேஷ சந்தர்ப்பங்களில் மேற்கண்ட உத்தியோகஸ்தர்களுக்கு இனம் அளிக்கப்படும். உயர்தர வேலையிலில்லாத பொது இலாகாவில் உள்ள வேலைக்காரர்கள் இப்பரிசுகளைப் பெற தகுதியுள்ளவர்கள்.

## 'வி' டயரி-1943.

(குறிப்பு புஸ்தகம்).

—○:○:○—

லினன் ரூ. 1—4—0; லிம்ப்ஸின் ரூ. 1—8—0;
மொராக்கோ ரூ. 2—0—0.

லாபம் யுத்தநிதிக்குச் சேர்க்கப்படும்.

கீழ்கண்ட விலாசத்திலிருந்து வாங்கிக்கொள்ளலாம்.—

காரியதரிசி,
தேசிய யுத்த முன்னணி நிலயம்,
புதுக்கோட்டை (தென் இந்தியா).

## பிரஸங்க நிகழ்ச்சி முறை.

### பிரஸங்கம் 128. (4-வது பிரிவு.)

| | | | | |
|---|---|---|---|---|
| 9- 1-43 | முனிஸிபல் ஆபீஸ் ... மாலை 6.00 | | 11- 1-43 | கீழச்சாவிஸ்யம் ... மாலை 7.30 |
| 10- 1-43 | கீரப்பழனி ... ,, 7.00 | | 12- 1-43 | கொன்னையூர் ... ,, 7.00 |
| ,, | ஆலூர் ... ,, 7.30 | | ,, | மேலவெருப்பட்டி. ,, 7.30 |
| 11- 1-43 | காரையூர் ... ,, 7.00 | | | |

### பிரஸங்கம் 129. (5-வது பிரிவு)

| | | | | |
|---|---|---|---|---|
| 16- 1-43 | முனிஸிபல் ஆபீஸ் ... மாலை 7.45 | | 20- 1-43 | ராணி பெண் பாடசாலை. காலை 10.15 |
| 17- 1-43 | திருவரங்குளம் ... ,, 7.00 | | ,, | காலேஜ் A இங்கிலீஷ் ,, 10.15 |
| ,, | வம்பன் ... ,, 7.30 | | ,, | காலேஜ் B தமிழ் ... ,, 10.15 |
| 18- 1-43 | திருமயம் ... ,, 7.00 | | ,, | பொ. புதுப்பட்டி ... மாலை 7.00 |
| ,, | மேலூர் ... ,, 7.30 | | ,, | வேந்தம்பட்டி ... ,, 7.30 |
| 19- 1-43 | குளவாய்ப்பட்டி ... ,, 7.00 | | 21- 1-43 | பள்ளிவாசல் ... ,, 7.00 |
| ,, | கீழையூர் தெற்கு ... ,, 7.30 | | ,, | தில்லைமங்கலம் ... ,, 7.30 |
| 20- 1-43 | C.S.M. பள்ளிக்கூடம். காலை 10.00 | | 22- 1-43 | பூசத்துறை ... ,, 6.00 |

### யுத்தத்திற்கு ஆள் சேர்த்தல்—விளம்பரம்—மாலை 4-மணி.

| | | | |
|---|---|---|---|
| 8— 1—43 | புதுக்கோட்டை. | 17— 1—43 | வம்பல். |
| 9— 1—43 | திருமயம். | 18— 1—43 | கீரனூர். |
| 10— 1—43 | கீத்தான்விடுதி. | 19— 1—43 | வடகாடு. |
| 11— 1—43 | கொன்னையூர். | 20— 1—43 | ராயவரம். |
| 12— 1—43 | குடுமியாமலை. | 21— 1—43 | குழிபிறை. |
| 13 to 15-1-43 | பொங்கல் லீவு நாட்கள். | 22— 1—43 | பூசத்துறை. |
| 16— 1—43 | வெட்டன்விடுதி. | | |


புதுக்கோட்டை ஸமஸ்தான

# தேசிய யுத்த முன்னணி நிலயம்.

பிரசுரம்] 1943-ம் வருஷம் ஜனவரி மீ 16உ [ந 129


பிரஸங்கம் CXXIX.

## அமெரிக்க காங்கிரஸின் 78-வது கூட்டத்தின் முன்பு ஜனாதிபதி ரூஸ்வெல்டு செய்த பிரஸங்கம்.

நவீன நாகரீகத்திற்கே சென்ற வருஷம் ஒரு சோதனை காலமாக இருந்து வந்தது. அடுத்து வரும் இவ்வருஷத்திலும் பலமான சண்டைகள் நிகழுமாயினும், நிலைமை சாதகமாகுமென்பதற்கான நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது.

1912-ம் வருஷத்தில் நடந்த சம்பவங்களை நாம் அவையவைகளின் முக்கியத்வத்திற்குத் தகுந்த விதமாக பரிசீலனை செய்வது நலம்.

முதலாவதாக அமெரிக்கா சம்பந்தப்பட்ட வரையில் அமெரிக்க வீரர்கள் காண்பித்த தீரம் குறிப்பிடத்தக்கதாகும். கஷ்ட நிலையிலும், வெற்றி கிடைக்கும் சமயங்களிலும் அமெரிக்கர்கள் இந்த தைரியத்தைக் காண்பித்திருக்கிறார்கள். இந்நகரில் அமெரிக்கக் கொடி பறக்கும் வரையில், வேக்தீவு, வாடன், கூடல்கனல், ஜாவா, மிட்வே, வட அட்லாண்டிக் முதலிய இடங்களில் சண்டைசெய்து இறந்தவர்களும் உயிருடன் கூடியவர்களுமான சிப்பாய்களையும், மாலுமிகளையும் அமெரிக்கர்கள் கௌரவிப்பார்கள். எவருக்கும் படியாத அவர்களது உணர்ச்சி என்றைக்கும் நிலைத்திருக்கும்.

1912-ம் வருஷத்தில் நடந்த சண்டைகளுக்குள் ருஷ்யாவில் ஸ்டாலின் கிராட்டின் பாதுகாப்பே முதலாவதாகும். இரண்டாவதாக ருஷ்யர்கள் நவம்பர் பின் பாதியிலிருந்து ஆரம்பித்த முன்னேற்றப் போராகும். இப்போர் இன்னும் குறையாத வண்ணம் வெற்றிகரமாக நடந்தேறிவருகிறது.

மற்றபடி பிலிப்பைன்ஸ், கிழக்கு இந்தியத் தீவுகள், மலேயா, பர்மா முதலியவைகளில் ஜப்பானியரது முன்னேற்றமும், மத்திய பஸிபிக், தென் பஸிபிக், இந்து மகா சமுத்திரம் முதலியவைகளில் நாம் ஜப்பானியரைத் தடுத்தும், எகிப்து, லிபியா முதலிய இடங்களில் பிரிடிஷ் குழுக்கு எதிர்ப்புகளால் எதிரிகளைத் தடுத்ததும், வட ஆபிரிக்காவில் அமெரிக்கர்களும் பிரிடிஷாரும் வியாபித்துக் கொண்டதும் பெரிய சம்பவங்களாகும்.

### நேசநேச விமானநிக்கம்.

1912-ல் இன்னும் அதிக முக்கிய சம்பவம் யாதெனில் துணைக்கப்பல் கூட்டத்தை விமானநிக்கம் கொண்டு பல்வேறு நேசநாடுகளுக்குக் கொண்டுபோய்ச் சேர்த்ததுதான்.

அச்சு நாடுகள் 1942-ல் யுத்தத்தில் ஜயித்தால் ஜயித்தது, இல்லா

1942-ல் எதிரிகள் ஜயம் பெறவில்லையென்பது யாவருக்கும் தெரிந்தது தான்.

பஸிபிக் பிரதேசத்தில் மிட்வே தீவில் 1942-ல் நாம் அடைந்த விமான, கப்பல் வெற்றி மிக முக்கியமானது. இதற்கு ஒரு சரித்திர பிரதான்யம் உண்டு. ஏனென்றால் அதன் பிறகுதான் பலவேறு இடங்களுக்குச் சுலபமாகப் போக்குவரவு மார்க்கங்கள் நமக்குக் கிடைத்தன. இதே சமயத்தில் பஸிபிக்கில் பல இடங்களில் நாம் அடைந்த தரை, கடல், விமான வெற்றிகளை நான் கவனிக்காமலில்லை. ஸாலமன்ஸ், நியூ கினி முதலிய இடங்களில் பல சண்டைகள் நிகழ்ந்தன. இவை அநேகமாகத் தற்காப்புப் போர்களாகவே இருந்தன. ஜப்பானிய விமானங்கள், சண்டைக் கப்பல்கள், சாமான் கப்பல்கள், போக்குவரத்துக் கப்பல்கள் முதலியவைகளுக்கு அதிகச் சேதம் விளைவிக்கப்பட்டது. ஜப்பான் புதிதாகச் செய்து சண்டைக்கு அனுப்பக்கூடிய யுத்தச் சாமான்களைவிட அதிகமாகவே அழித்துவிடுவதென்பதுதான் நமது திட்டமாக இருந்து வந்தது.

இவ்வேளையில் அமெரிக்க நீர்மூழ்கிகள் ஈடுபட்டு யோகோஹாமா வரையில் சென்று ஜப்பானியக் கப்பல்களை மூழ்கடித்தன.

இவைகளின் பயனாக ஜப்பானியக் கப்பல் பலம், விமான பலம் நாளுக்குநாள் குறைந்துகொண்டே போகிறது. இவைகளில் அமெரிக்க பலம் அதிகமாகிக் கொண்டே வருகிறது.

நிச்சயமாக நமது சண்டைக் கப்பல்களும், விமானங்களும் இதில் பொறுப்பெடுத்துக் கொண்டிருக்கின்றன.

## சைனாவிற்குப் பாராட்டு.

ஜப்பானை எதிர்த்து செய்யப்பட்ட சண்டைகளில் சீனர்களுக்கும் அதிகப் பங்கு உண்டு. இன்னும் தளவாட குத்தகைக் கடன் திட்டப்படி சைனாவிற்கு விமான மூலம் சாமான்கள் அனுப்பப்படுகின்றன. 17,000 அடி உயரத்தில் பனி முதலியவைகளைக் கடந்து செல்லுகின்றன. பர்மா ரஸ்தாவின் வழியாகச் சென்ற அவ்வளவு உதவி இப்போதும் செல்லுகிறது.

வெற்றியைக் கணக்கு மூலம் நிர்மாணித்து விடலாமென்று எனக்குத் தோன்றுகிறது.

இவ்விஷயம் ஜப்பானின் உள்நாட்டைப் படையெடுத்து குண்டுகளைப் பொழியும் போதுதான் அவர்களுக்குத் தெரியும். எல்லாவித இடையூறுகளையும் மீறி சைனாவிற்குச் சாமான்களை அனுப்பி எதிரியை முறியடிப்போம்.

ஜப்பான் கருணையில்லாமல் அழிப்பதாக நினைத்திருக்கும் பத்திரம், மேன்மை, சௌரவம் முதலியவைகளை இந்த யுத்தத்தின் முடிவில் சைனா திரும்பப்பெறும்.

பஸிபிக்கில் நமது தற்காப்புப் போர் நிலை மாறிவருகிறது. ஜப்பானுடன் இனி பலாத்காரப் போருக்கு நாம் முயலுவோம். சென்ற வருஷம் நாம் தற்காப்பு செய்துகொண்டு அவர்களைத் தடுத்து வந்தோம். இவ்வருஷம் முன்னேறித்தாக்குவோம்.

## ஐரோப்பியப் போர்முனை.

சென்ற வருஷம் இங்கே நமது முதல் வேலை ருஷ்யப்போர் முனையில் எதிரியின் பளுவு அதிகமில்லாமல் செய்வதுதான். அதற்காக ஜெர்மன மனித பலத்தையும், யந்திரங்களையும் மற்றொரு பக்கம் திருப்பப் பிரயத்தனப்பட்டோம்.

இதற்காகப் பல மாதங்களாகத் திட்டம் போட்டு வட ஆபிரிக்காவில அமெரிக்க, பிரிடிஷ் துருப்புகளை நூற்றுக்கணக்கான கப்பல்களில் ஏற்றிக் கொண்டு சென்று இறக்கினோம். நமக்குச் சேதம் இல்லை. நமது லக்ஷியமும் கைகூடிற்று. யுத்தத்தின் போக்கிலும் இதனால் கொஞ்சம் மாறுதல் ஏற்பட்டது. தென் அட்லாண்டிக்கிலும், தென் அமெரிக்காவிற்கும் அச்சு நாட்டு படையெடுப்பு பயம் இல்லாமல் செய்யப்பட்டது.



எகிப்திலிருந்து பிரிடிஷ் எட்டாம்படை உசித காலத்தில் முன்னேறியதும் நேசதேசங்களின் தந்திரத்தின் ஒரு அம்சமாகும். பெரும் மழைகளால் டுனிஸியாவில் முடிவானப்போர் இன்னும் நடைபெற வில்லை.

அச்சு நாடுகளும் தங்களுடைய பலத்தை விருத்திசெய்து வருகின்றன. இதனால் சண்டை கடுமையாக இருக்குமென்று சொல்லலாமே தவிர மத்திய தரைக்கடல் கரையிலிருந்து எதிரிகள் துரத்தப்படுவார்கள் என்று திண்ணமாகக் கூறுவேன்.

## சண்டைகளில் மாறுபாடுகள்.

ஆகவே 1942-ல் நடந்த சம்பவங்களைப் பரிசீலனை செய்யும்போது அவைகளின் அளவையும் மாறுபாடுகளையும் கவனிப்பது நலம். அமெரிக்காவிற்கு வெளியே 15-லக்ஷம் அமெரிக்கச் சிப்பாய்களும். மாலுமிகளும், விமானிகளும் சண்டையில் ஈடுபட்டிருக்கின்றனர். நமது வியாபாரக் கப்பல்கள் நேசநாடுகளுக்கு ஸப்ளைகளை எடுத்துச்செல்லுகின்றன. நம்மில் அநேகர் நமது விமான ஆதிக்கத்தை உணரவேயில்லை. ஆனால் நமது விரோதிகள் உணர்ந்திருக்கிறார்கள். நமது விமானங்கள் எதிரி நாட்டில் படையெடுத்தும், எதிரிகளுடன் சண்டை செய்தும் வந்திருக்கின்றன. ஆபிரிக்காவில் நமக்கு ஒரு விமானம் நஷ்டமாவதற்கு எதிரிக்கு இரண்டு விமானங்கள் நஷ்டமாகின்றன. தென் மேற்கு பஸிபிக்கில் நமக்கு ஒரு விமானம் நஷ்டமாவதில் எதிரிக்கு 4 விமானங்கள் சேதமாகின்றன. இதிலிருந்தே நமது விமானாதிக்கத்தை உணரலாம்.

ஆகவே அமெரிக்கா, சைனா, ருஷ்யா, பிரிடன், மற்றும் பிரிடிஷ் சாம்ராஜ்யம், முதலியவைகளில் இருந்து இந்தச்சண்டையில் பல வருஷங்களாக ஈடுபட்டு எதிரி கொண்டுள்ள உலகாக்கிரமண ஆசையை முறித்ததற்கு நாம் பாராட்டுகிறோம். எதிரியால் வசப்படுத்தப்பட்டுள்ள நேசநாடுகளிலிருந்தும் ஈடுபட்ட விமானிகள், சிப்பாய்கள், மாலுமிகள் இவர்களுக்கும் நாம் வந்தனமளிக்கிறோம். வட ஆபிரிக்கச் சண்டையின் பயனாக பிரெஞ்சுச் சைனியமும், கப்பற்படையும் நம்முடன் சேர்ந்திருக்கின்றன.

## மூன்றுபெரும் தலைவர்கள்.

1940 முதல் பிரான்ஸின் விடுதலைக்காகப் போராடும் இந்தப் பிரெஞ்சுக்காரர்களை நாம் நேசநாட்டினரைப்போலவே வரவேற்கிறோம். வின்ஸ்டன் சர்ச்சில், ஸ்டாலின், சாயாங் கை ஷேக் போன்ற பெரும் தலைவர்களையும் பாராட்டுகிறோம். நேசநாடுகளுக்குள் அதிக ஒற்றுமை நிலவுகிறது. அதனாலேயே யுத்த தந்திரங்களை பயன் பெரும்படி செய்து ஸப்ளைகளை நீடித்துச்செய்ய முடிகிறது.

என்னால் ஜோஸியம் சொல்ல முடியாது. நேச நாடுகள் அடுத்தபடி ஐரோப்பாவில் எங்கே தாக்குமென்றும் கூற முடியாது. ஆனால் கடுமையாகவே சண்டை செய்யுமென்று மாத்திரம் சொல்லுவேன்.

தரையில் எங்கே தாக்கினாலும், நாமும், பிரிடிஷாரும், ருஷ்யர்களும் விமானத்திலிருந்து ஓயாது தாக்குவோம். எதிரியின் தொழிற்சாலைகளிலும், துறைமுகங்களிலும் டன்கள் கணக்கில் குண்டுகளைப் போடுவோம். அப்போதுதான் தாங்கள் செய்த தவறுதல்களை ஹிட்லரும முஸோலினியும் உணருவார்கள்.

இந்த யுத்தத்தின் ஆரம்பத்தில் நாஸிகள் வார்ஸா, ராட்டர்டாம், லண்டன், கவன்டரி முதலியவைகளைத் தாக்கும்போது கொண்டிருந்த விமான பலம் தற்போது கொள்ளவில்லை. அந்த பலமெல்லாம் போய்விட்டது.

எதிரிகள் எதிர் பார்த்தபடியே நாம் திருப்பித்தாக்குவோம்.

## உற்பத்தி.

இந்த யுத்தத்தில் முன்னேறுவது சாமான்களின் உற்பத்தியைப் பொருத்ததாகவே இருக்கிறது. யுத்தச் சாமான்களின் உற்பத்தி, மானேஜ்மெண்டு முதலியவைகளைப் பற்றி பலர் குறைகூறினார்கள். ஆனால் இதுவும் சாதகமாகவே இருந்தது. இவ்விதம் குறைகூறியதாலேயே, உற்பத்தி அதிகரித்தது. நாமும் எதிர் பாராத விதமாக பிரமாதமாகவேதான் சாமான்களை உற்பத்தி, செய்திருக்கிறோம்.

சிலர் நம்முடைய சில யோசனைகளை பொய்யென்று கூறிக்கொண்டும் அரசாங்கத்தாரின் பேரில் வேறெமென்கிற குறையும் கூறுகிறார்கள். இதனால் சந்தேகமும் பயமும் உண்டாகலாம். ஆனால் பிரகிருதமுள்ள உற்பத்தி திட்டம் திருப்திகரமாக இருக்கிறதென்று நான் கூறுவேன். இதற்காக 1942-ல் நாம் சாதித்தது என்னவென்பதை கவனித்தே நான் இம்மாதிரி சொல்லுகிறேன். 1942-43-க்கு நாம திட்டங்களைப் போட்டோம். இதிலிருந்த புள்ளி விவரங்களைப் பார்த்து சிலர், எதிரிகளைப் பயமுறுத்துவதற்காக நாம் இம்மாதிரி கணக்குகளைச் சிருஷ்டி செய்திருப்பதாகக் குறைகூறினார்கள். ஆனால் போட்ட திட்டப்படி நமது மக்கள் நிறைவேற்றினர். சில திட்டங்கள் மாறுபாடுகளுக்கு உள்ளாயின. சில அதிகமாயும் சில குறைவாயும் முடிந்தன. இவைகளை நான் நிவர்த்திக்க முடியாது என்று அநுபவத்திலிருந்து தெரிந்துகொண்டேன்.

1942-ல் 48,000 சண்டை விமானங்களை உற்பத்தி செய்தோம். இது ஜெர்மனி, இதாலி, ஜப்பான் இம்மூன்று நாடுகளும் சேர்ந்து செய்யும் உற்பத்தியைக் காட்டிலும் அதிகமானது.

டிஸம்பர் மாதத்தில் 5,500 விமானங்களை உற்பத்தி செய்தோம். இக்கணக்கு அதிகரித்துக்கொண்டே போகிறது. அதிக கனமாயும், பெரியதாயும் கட்டப்படுகின்றன. சண்டையின் அநுபவத்திலிருந்து டாங்கி உற்பத்தியைக் குறைத்து தாங்கிச் சுடும் பீரங்கிகளை உண்டுபண்ணுகிறோம்.

## பீரங்கி உற்பத்தி.

1942-ல் டாங்கி முதலியவைகளில் 56,000 வண்டிகளையும், 6,70,000 யந்திர பீரங்கிகளையும் செய்தோம். இது 1941-ஐவிட ஆறு மடங்கு அதிகமாகும் 21,000 டாங்கி எதிர்ப்பு பீரங்கிகளைச் செய்தோம். இதுவும் 1941-ஐவிட ஆறு மடங்கு அதிகமாகும். ஏராளமான தோட்டாக்களையும் உண்டுபண்ணினோம்.

ஆகவே அமெரிக்க உற்பத்தித் திட்டம் அதிகமானதுதான். இந்தக் கணக்கு விவரங்கள் எதிரிக்குச் சந்தோஷத்தை அளிக்காது. ஆனால் கவலையைத்தான் செய்யும்.

இவ்விதம் அமெரிக்காவால் எப்படி அதிகமாகச் சாமான்களைச் செய்ய முடிகிறது. ஜெர்மானியருக்கும், ஜப்பானியருக்கும், ஹிட்லரும், டோஜோவும் எடுத்துச் சொல்லவேண்டியதுதான்.

## படைகள்.

நமது படை 20,00,000-லிருந்து, 70,00,000-க்கு அதிகரித்திருக்கிறது. நமது குடியானவர்களும், ஏராளமான உணவுப் பண்டங்களை உற்பத்தி செய்திருக்கின்றனர்.

## அமெரிக்க தேசாபிமானம்.

தேசாபிமானத்தைவிட உணவுதான் மேலானதென்று வெகு சில அமெரிக்கர்கள்தான் கருதுவதால், இங்கிருந்து உணவுப் பண்டங்களை மீதப்படுத்தி அயல் நாடுகளுக்கு அனுப்ப முடிகிறது. இதற்கு எல்லா அமெரிக்கர்களின் ஒத்துழைப்பும் அவசியம்.

நமது பொது முயற்சிகளால் தேசீய ஒற்றுமை, நம்பிக்கை முதலியவைகளுக்குக் காரணமான தன்மைகளை விருத்தி செய்யவேண்டும்.

அமெரிக்க காங்கிரஸ் சபையை, பைத்தியக்காரர்கள் நிறைந்த கூட்டம் என்றும், ராஜீய அநுபவமில்லாதவர்களென்றும் பலர் சொல்லுவதுண்டு. ஆனால் யார் எப்படிச் சொன்னாலும் முடிவுதான் நமக்கு வேண்டியது. ஒரு வருஷகாலமாகத்தான் இந்த யுத்தத்தில் ஈடுபட்டபோதிலும், நாம் ஆத்மீகத் தன்மையாலும் சரீரப் பிரயாசையாலும் பூரா ஈடுபட்டுவிட்டோம்.

அமெரிக்கர்களான நாம் தைரியம் வாய்ந்தவர்களாதலால் கௌரவமாகவே இதுவரை சண்டை செய்திருக்கிறோம். இதற்குக் காரணமாயிருந்த அமெரிக்க யந்திரசாலை நிபுணர்கள், தொழிலாளிகள், இஞ்ஜினியர்கள் தொழிற்சாலையில் ஈடுபட்ட ஸ்திரீ, புருஷர்கள் உலகத்திற்கே போதுமான உணவை உண்டுபண்ணிய



குடியானவர்கள், இதரவிதமாக ஈடுபட்ட ஸர்க்கார் உத்தியோகஸ்தர்கள், உணவுத் திட்டத்திற்கு உட்பட்ட மற்றும் யாவருக்கும் நாம் வந்தனத்தைச் செலுத்துகிறோம்.

## பகுத்தறிவு.

யுத்த விமர்சனத்திற்கும், யுத்தத்திற்குத் தேவையானவைகளைத் தயாரிப்பதற்கும் பகுத்தறிவு வேண்டும். எதற்காக நாம் போராடுகிறோம் என்பதை மறக்கக்கூடாது. அல்ப விஷயங்களில் ஈடுபட்டு நமது முறைகள் சரியா, இல்லையா என்பதிலெல்லாம் வியவகாரங்களைச் செய்யக்கூடாது.

நாமும் நேச நாடுகளும் விரும்புவது கௌரவமான சாச்வத சமாதனம் சென்ற யுத்தத்திற்குப் பிறகு நாம் நீடித்திருக்கும் சமாதானத்தையடையவில்லை

போர்முனையில் ஈடுபட்டிருக்கும் நமது துருப்புகளுக்குச் சண்டையில் வெற்றி பெறுவது என்ற லக்ஷியத்தைவிட இரண்டு பெரிய நோக்கங்களிருக்கின்றன. அவர்கள் நினைப்பதுபோலவே இங்குள்ளவர்களும் நினைக்கவேண்டும். அப்படியில்லாவிட்டால் போர்முனையில் அவர்கள் அவஸ்தைப்பட்டு இறப்பதிலிருந்து நாம் ஒரு நன்மையைக் காணுதபோனால் அது ஒரு குற்றமேயாகும்.

படையில் சேர்ந்துள்ளோர் போருக்குப் பிறகு நிரந்தரமான சமாதானமும், தங்களுக்கும், குடும்பத்திற்கும், அயலாருக்கும் ஜீவனோபாயமும் வேண்டுமென்று நினைக்கிறார்கள். இரண்டு வருஷங்களுக்குமுன் நான் ஸ்வதந்திரத்தைப் பற்றிப் பேசினேன். பேச்சுரிமை, மத உரிமை என்பது நமது வாழ்க்கையின் முக்கிய அம்சங்கள் இவை மற்றவர்களுக்கும் வேண்டுமென்பது நமது கருத்து. இதோடு பஞ்சமில்லாமல் இருப்பதென்பதும் நமது லக்ஷியமாகும்.

## பஞ்சமின்மை.

யுத்தத்திற்குப் பிறகு இந்தத் தொழிற்சாலைகளை சமாதான காலத்திற்குத் தேவையான பொருளாதாரங்களை உண்டுபண்ண ஈடுபடுத்தினால், ஸ்திரீ புருஷர்கள் யாவருக்கும் வேலை கிடைக்கும்.

இவ்விதம் செய்ய பல இடையூறுகளிருந்தாலும், யுத்தத்திற்குப் பிறகு அமெரிக்காவில் உணவுத்தட்டு இல்லாமல் செய்யப்படவேண்டும். வெகு நாள் நீடித்திருக்காத மேன்மையை அவர்கள் விரும்பவில்லை. யுத்தம் முடிந்த பிறகு தாங்களும் தொழில்புரியவேண்டுமென்று சிப்பாய்கள் நினைக்கிறார்கள். இதற்கான உத்தரவாதத்தையே அவர்கள் எதிர்பார்க்கிறார்கள். இதை 78-வது காங்கிரஸின் முன்பாக நான் சொல்லுவதின் காரணமென்னவெனால், அடுத்துவரும் இரண்டு வருஷங்களுக்குள் நமது தேவைகளுக்கும், வேலைக்கும், வாழ்க்கையின் லக்ஷியங்களுக்கும் தீங்கு ஏற்படலாம். அவ்விதம் ஏற்படாமல் செய்ய நாம் யாவரும் திட்டமாக ஒத்துழைக்கவேண்டியதவசியமாகும்.

இந்த யுத்தத்தில் எதை நாம் எதிர்த்துப் போராடுகிறோமென்றும், எதை நாம் லக்ஷியமாகக்கொண்டிருக்கிறோமென்றும் கவனிக்கவேண்டும்.

நமது புராதன கௌரவத்தை நிலைநாட்டி வருங்காலத்திலும் மேன்மை பெறப்போராடுகிறோம்.

உலகத்தின் பொருளாதாரத்திற்கு க்ஷேமம் ஏற்பட்டால்தான் அமெரிக்கப் பொருளாதாரமும் நிலைத்திருக்கும்.

ராணுவம், பொருளாதாரம் இவைகளில் அமெரிக்காவைத் தனிப்பட்ட நாடாக நினைக்கமுடியாது. இந்த யுத்தத்தில் முதலில் வெற்றிபெற்று, பிறகு சமாதானமாக வாழ முயலவேண்டும். முடிவாக நிர்ப்பயமாக வாழவேண்டும்.

இன்னும் 10, 20, 50 வருஷங்களில் மறுபடி சண்டைவந்தால் நமது தேவைகள் எவ்வாறு பத்திரமாக இருக்கும்.

யுத்தங்கள் வர வர கடுமையாயும், யாவற்றையும் அழிக்கக்கூடியதாயும் இருந்து எல்லா நாடுகளையும் பாதித்துவரும்.

ஆகவே இந்த யுத்தத்தின் முடிவில் நிரந்தரமான சமாதானம் ஏற்படாமல் மறுபடியும் சண்டை மூண்டால், மனித வர்க்கத்திற்கு என்ன நேருமென்றே எனக்குத் தெரியவில்லை. அதை நினைக்கவே எனக்குப் பயமாக இருக்கிறது. இந்த யுத்தத்திலிருந்து அமைதியாகக் கழட்டிக்கொண்டு பத்திரமாக இருந்துவிடலாம் என்று சிலர் நினைக்கின்றனர்.

ஆனால் அம்மாதிரி இருப்பது எளிதல்லவென்று அனுபவத்திலிருந்து தெரிந்து கொண்டிருக்கிறோம். அப்படியிருந்தால கொள்ளையிடும் நாடுகளிடமிருந்து தப்ப முடியாது.

இப்படியே அவர்களை விட்டு வைத்தால் மீண்டும் அவைகள் பலம் பெற்று நம்மைத்தாக்கும். எதிரி கையாளும் முறைகளால் உலகில் எந்த பாகத்திலும் சண்டை திடீரென உண்டாகும்.

### வரும் காலத்தில் ஆக்ரமணம் கூடாது.

ஜெர்மனியோ, இதாலியோ, ஜப்பானோ, இதில் ஏதாவது ஒன்றை அப்படியே விட்டு வைத்தால் மறுபடி பலப்படுத்தக்கொண்டு உலகாக்கிரமணத்தில் ஈடுபடும்.

அவைகளுக்கு ஆயுத பரிஹாரணம் செய்யப்பட வேண்டும். அவர்களுடைய பிரசாரமெல்லாம் ஒடுக்கப்படவேண்டும்.

சென்ற யுத்தத்திற்குப் பிறகு நிரந்தரமான சமாதானத்தை ஏற்படுத்த முயன்றோம். அது பலிக்க வில்லை.

ஆனால் வெறும் பேச்சுகளால் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த முடியாதென்றும் கண்டு கொண்டோம்.

தற்போது நேசநாடுகளின் பலம் மிகப் பெரிது. இவைகள் யாவும் ஒன்று சேர்ந்து, பலாத்காரம் ஆக்கிரமணம் முதலியவை செய்வதில்லையென்றும் ஒப்புக் கொண்டிருக்கின்றன.

ஆகவே ஜெர்மனி, இதாலி, ஜப்பான் முதலியவைகள் மறுபடி பலப்படுத்திக் கொள்ள முடியாதபடி நேசநாடுகள் முயற்சித்து, 'ஆசைப்படாதே' என்ற வேத வாக்கியத்தை மீறுகிற எல்லா நாடுகளையும் அடக்க வேண்டும்.

அவ்விதம் செய்ய முடியாதென்று நினைக்கிற சில பயங்குளிகளும் இருக்கிறார்கள். ஆனால் அவ்விதம் நிச்சயம் செய்யப்பட வேண்டுமென்றே எல்லா ஸ்வதந்திர மக்களும் நினைக்கின்றனர். இவர்களின் எண்ணம் தான் ஜெயக்கூடும்.

அச்சு நாட்டுக் கொள்கைகளெல்லாம்தான் மனிதவர்க்கத்திற்கே வெறுப்பை மூட்டுகின்றனவே.

### குறைகூறுவோருக்குப் பதில்.

நம்மைக் குறைகூறுவோரின் விருப்பபடி நடப்போமாகில் எதிரிக்கொள்கைகளுக்கு நாம் இணங்கியவர்களாவோம். நாம் அடைந்த வெற்றி தோல்வியாகும். ஆகவே அவர்களிஷ்டப்படி நடக்காமல் மனித வர்க்கத்தின் லக்ஷியங்களை நிலை நாட்டவேண்டும்.

ஜனநாயகத்தில் நம்பிக்கை கொண்டவர்களுக்கும், கொடுங்கோல் புரியும் ஸர்வாதிகாரிகளிடத்தில் நம்பிக்கை வைப்போருக்கும் ஏற்பட்ட பிரச்னையும் இதுதான்.

ஜனநாயகத்தை வெறுத்து அவர்களின் முன்னேற்றத்தைத் தடுக்கிறவர்கள் எப்போதும் தானிருந்திருக்கிறார்கள்.

ஆனால் தற்சமயத்தில் ஸ்வதந்திர மக்கள் ஒன்று சேர்ந்து முழுபலத்துடனும் முன்னேறுகின்றனர். இப்போது ஒருவராலும் தடுக்க முடியாது.

எங்கும் சமாதானமும், பத்திரமும் ஏற்படுமென்று எதிர்பார்த்து விட்டு



இந்த யுத்தம் எப்போது முடியுமென்று என்னால கூற முடியாது. ஆனால் 1943-ல் ஜெர்மனி, இதாலி, ஜப்பான முதலிய நாடுகளுடன் முனனேறப் போர் நடத்த முடியுமென்று கூறுவேன்.

வரும் காலத்தில் உலகில் நிர்பயமான வாழ்க்கையை எப்படி ஏற்படுத்துவதென்பதை இந்த 78-வது காங்கிரஸ் தீர்மானிக்க வேண்டும். இதற்கான முயற்சியை நாம் எலலோரும் இரட்டிப்பு மடஙகாகச் செய்வோம். இனித்தான் நமது கடமையின் பெரும் பாகம் இருக்கிறது. யுத்தத்தைப் போல் சமாதான காலத்திலும் நாம் செய்ய வேண்டியது பல உள.

இந்த மக்களின் பிரகிருத நிலைமையும் மனஸும், உணர்ச்சியும், நம்பிக்கையும் சரியாக இருக்கின்றன.

---

## வார யுத்தச் செய்திகள்.

### 9—1—43-லிருந்து 15—1—43-வரை.

ருஷ்யா.—டான் பிரதேசத்தில் ருஷ்யர்கள் டானெட்ஸ் வரையிலும் முன்னேறியிருக்கின்றனர். இது ஸ்டாலின்கிராட்டிலிருந்து 200 மைல் தூரமிருக்கிறது. அவர்களுக்குப் பின்னால் ஜெர்மன் 6-ம் படை சூழ்ந்து கொள்ளப்பட்டது. அதுதான் ஸ்டாலின்கிராடு முன்னால் கொஞ்சம் சண்டை செய்து வருகிறது. அதற்குப் போதுமான யுத்தச் சாமான்கள் விமானமூலம் வந்து கொண்டிருக்கிறது.

ஆனால் ருஷ்யர்கள் சற்று முன்னேறி காகஸஸிலிருந்து ஜெர்மானியரைப் பின்வாங்கவொட்டாமல் அவர்களுடைய ஸப்ளை தளங்களை அழித்து வருகின்றனர். அதாவது ரோஸ்டவ், டிகோரெட்ஸ்கிலும் தாக்கி வருகின்றனர். பின்கண்ட இடத்தில் தான் ஸ்டாலின்கிராடு—கருங்கடல் இருப்புப்பாதை சந்திக்கிறது. காகஸஸிலுள்ள ஜெர்மன் படை ரோஸ்டவ்விற்கு 300 மைல் தூரத்தில் இருக்கிறது.

மில்லரோவோ ஜில்லாவில் ருஷ்ய முன்னேற்றம் கொஞ்சமாகத்தானிருக்கிறது. இதற்குக் கிழக்கில் ருஷ்யர்கள் டாட்ஸின்காயாவை அடைந்து, டான் நதியை ஸிம்லியன்ஸ்காயா என்ற இடத்தில் கடந்து வால்நதி வரையிலும் முன்னேறியிருக்கின்றனர். இது மனிச்நதியின் கிளை நதியாகும். ரோஸ்டவ்விற்கு அருகில் டான் நதியில் சேருகிறது. இப்படை கொடலினிகோவில் உள்ள மற்றொரு ருஷ்யப்படைக்குச் சமீபித்து வருகிறது. இப்படை செல்லும் இருப்புப்பாதையில் ஸால்ஸ்க், டிகோரெட்ஸ்க் இருக்கின்றன. பிறகு ஜிமோவெனிகியைப் பிடித்து ஸால் நதியைக் கடந்து விட்டது. நோவோனிகோலேவ்ஸ்காயாயும் பிடிபட்டது. இவ்விதமாக 22,000 சதுர மைல் பிரதேசம் ருஷ்யர்கள் வசமாகிவிட்டது.

காகஸஸில் ருஷ்யப்படை இருவரிசையாகச் செல்லுகிறது. ஒன்று மாஸ்டக்கிலிருந்து புறப்பட்டு ப்ரோக்லாடுயா மினரல்வோடி, கூர்ஜியர்ஸ்க் மூன்றையும் கைப்பற்றின. மற்றொன்று நால்சிக்கிலிருந்து புறப்பட்டு பியாடிகோர்ஸ்க்கை நோக்கிச் செல்லுகிறது. இந்த இடத்தில்தான் ஜெர்மானியர் மாரிகாலத்தில் தங்க நினைத்தார்கள். பிறகு ருஷ்யர்கள் ஓர்லோவ்ஸ்கியையும் அடைந்திருக்கின்றனர்.

காகஸஸுக்கு வடக்கில் கால்மக் பிரதேசத்தில் மற்ற ருஷ்யப்படைகள் கொடலினிகோவோவிலுள்ள ருஷ்யர்களுடன் சேர்ந்துகொள்ள வருகின்றன. இன்னும் 40 மைல் தூரமிருக்கிறது.

சமீபத்தில் கிடைத்த செய்திகளின்படி வடக்கு காகஸஸிலிருந்து வரும் ருஷ்யப்படைகள் கால்மக் பிரதேசத்திலுள்ள படைகளுடன் சேர்ந்துகொண்டு ரோஸ்டவ்வை நோக்கி வருவதாகத் தெரிகிறது.

காகஸஸ் பிரதேசத்தில் கோதுமை அதிக விளைச்சலுண்டு. சாராயக் கிடங்குகளும், மில்லுகளும் இருக்கின்றன.

மத்திய முனையில் ருஷ்யர்கள் வெலிகியியுலூகிக்கு மேற்கில் முன்னேறி நெவெல்லை நோக்கி முன்னேறுகின்றனர்.

ஜெர்மன் செய்தியின்படி வாரனேஷ், லெனின்கிராட் முனைகளில் ருஷ்யர்கள் சண்டையை ஆரம்பித்திருக்கின்றனர்.

**டிரிபோலிடானியா**—மூன்று நாள் கடுமையான சண்டைக்குப் பிறகு போரிடும் பிரெஞ்சுப்படை ஒளமல் அரனப் என்ற முக்கிய தளத்தைப் பிடித்தனர். இது ஸாமி என்ற இடத்திலிருந்து 1,000 மைல் தூரத்தில் இருக்கிறது. டிரிபோலிடானியா எல்லைப்புறத்தையும் கடந்து பிராச், மர்ருக், ஸிபா என்ற இடங்களைக் கைப்பற்றினர். மற்றொரு பிரெஞ்சுப்படை சாட் பிரதேசத்திலுள்ள படையுடன் சேர்ந்துகொண்டு டகோனிட், கார்லெட் என்ற இடங்களைப் பிடித்தன.

**டுனிஸியா**—பவ்ரடா, காபிலட் என்ற பிரதேசத்தில் ரோந்து வேலை கடுமையாக இருக்கிறது. [illegible]ய்ரவான், என்ற இடத்தை பிரெஞ்சுப்படை பிடித்து ஜிபல் டல்டாபர்ஸ் என்ற இடத்தில் எதிரிகளைச் சூழ்ந்து கொண்டனர்.

**ஸாலமன்ஸ்**.—கீழ்கண்ட இடங்கள் தாக்கப்பட்டன. ஜனவரி 6உ ஷார்ட்லண்டு தீவு, போகன்வில்லியிலுள்ள கஹிலி, நியூஜார்ஜியாவிலுள்ள முண்டா; ஜனவரி 7உ ஸெயிண்டு இஸபெல் தீவிலுள்ள [illegible] 10உ கூடல்கனாலிலுள்ள ஜப்பானிய நிலையங்கள்.

**நியூ கினி**.—லே என்ற இடத்திற்கு உதவிப்படைகளைத் துணைக்கப்பல்களில் ஏற்றிக்கொண்டு வந்தபோது எதிரியின் 138 விமானங்கள் வீழ்த்தப்பட்டன. அதோடு பல கப்பல்கள் சேதமாக்கப்பட்டன. இந்தச் சண்டை ஜனவரி 1உ ஆரம்பமாயிற்று. காஸ்மாடாவிற்குத் தெற்கில் நேசதேச விமானங்கள் பலமாகத் தாக்கின. அன்று தப்பிய சில கப்பல்கள் ஜனவரி 2உ நியூ பிரிட்டன் தீவிற்கு அருகில் காணப்பட்டு தாக்கப்பட்டன.

**அலூஷியன்**.—ஜனவரி 5, 6, 7 தேதிகளில் கிஸ்கா படையெடுக்கப்பட்டது. 'அட்டு தீவில் ஹோல்ட்ஸ் குடாவில் ஜப்பானிய சாமான் கப்பல் தாக்கப்பட்டது.'

**பர்மா**—அரக்கான் மாகாணத்தில் இருக்கும் பிரிடிஷ் படைகள் மாயூ நதிக்கு இருகரையிலும் ராதிடாங் பிரதேசத்தில் எதிரிகளுடன் சண்டை செய்தன.

பிரிடிஷ், அமெரிக்க விமானப்படை மாக்ஷி என்ற இடத்தை ஜனவரி 7உ தாக்கினர்; ஜனவரி 8உ ராதிடாங்கிற்கு அருகில் ஒரு கிராமத்தையும், கியுக்டாங் என்ற இடத்தில் மோட்டார் போக்குவரத்தையும், டபியாங் விமானத் தளத்தையும், பகீர் முனையிலுள்ள பீரங்கி நிலயங்களையும், வெஷிஸ்லான், சிக்ரன்கா, வாவ்ஜப் முதலிய இடங்களையும் தாக்கின. ஜனவரி 9உ ராதிடாங், ஷிவிபோ, கியகபலாங், ஜனவரி 11உ பின்டா ரயில்வே ஸ்டேஷனும், கயிக்தின், லுயிங்சாங், ராதிடாங்; ஜனவரி 10உ மாண்டலேக்கு அருகிலுள்ள மியிட்க்னி பாலத்தையும் தாக்கின.

**சைனா**—ஸின்யாங்கைச் சுற்றியுள்ள ஜப்பானிய நிலைகளை சீனர்கள் பொடி செய்து டுங்கோஹொங் என்ற இடத்திலிருந்து விரட்டிவிட்டனர். குவாங்ஷான், லோஷான் இரண்டும் முறையே ஜனவரி 11, 12 தேதிகளில் பிடிபட்டன.

**பலவகைப்பட்டவை**.—1. ஆர்க்டிக் கடலில் ஒரு பெரிய பிரிடிஷ் துணைக் கப்பல் கூட்டம் எதிரிகளுடன் சண்டை செய்து ருஷ்யாவை அடைந்தது. கடுமையான பனியால் வெளிச்சமும் அதிகம் தெரியவில்லை. எதிரி ஒரு சிறு சண்டைக் கப்பல், க்ருயிஸர், பல நாசகாரிகளைக்கொண்டு தாக்கினான். முதலில் டிஸம்பர் 8உ எதிரி 4 தடவை தாக்கினான். ஆனால் திருப்பியடிக்கப்பட்டான். கப்பல் இலாகா மந்திரி A. V. அலெக்ஸாண்டர் பின்வருமாறு சொல்லியிருக்கிறார். 'இதைப் போன்ற வெற்றிகரமான செய்தி இதற்கு முன் கிடைத்ததேயில்லை'. இந்த சமயத்தில் வெற்றிகரமாக நடந்துகொண்ட காப்டன் ராபர்டு ஸெயிண்டு வின்ஸண்டு ஷெர்புருக் என்பவருக்கு விக்டோரியா பதக்கம் அளிக்கப்பட்டிருக்கிறது.



2. 1943-க்கு 7,70,000 லக்ஷம் டாலர்களும் 1944-க்கு 10,00,000 லக்ஷம் டாலர்களும் அமெரிக்காவில் வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டிருக்கிறது. செலவு விவரம் பின்வருமாறு.

| | 1943. | 1944. |
|---|---|---|
| யுத்தச் சாமான்கள் ... | 4,30,000 | 6,60,000 |
| ராணுவம், பொதுஜன சம்பளம் போக்குவரவு செலவு. | 1,50,000 | 2,10,000 |
| தொழிற்சாலை ... ... | 60,000 | 20,000 |
| மற்ற உற்பத்தி ... ... | 80,000 | 50,000 |
| இதரச் செலவு ... ... | 50,000 | 60,000 |

3. பிரிடனுக்கும், அமெரிக்காவிற்கும் ஜனவரி 11உ நடந்த ஒப்பந்தத்தின் பயனாக சைனாவில் இந்த இரு நாடுகளும் பிரதேச பாந்தவ்யத்தை விட்டுவிட்டன. சயாங்-கை-ஷேக் செய்த ஒலிபரப்பில் பின்வருமாறு சொல்லியிருக்கிறார்.

'சீன சரித்திரத்திலேயே இது ஒரு முக்கிய சம்பவமாவதோடு அமெரிக்காவும் பிரிடனும், இதர நேசநாடுகளும் சேர்ந்து மனித வர்க்கத்தின் சமதை, ஸ்வதந்திரம் முதலியவைகளுக்குப் போராடுகின்றன என்று தெரிகிறது.'

---

## சத்துருவினுடையவும், சத்துருவினால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில், பிரிடிஷ், நேசதேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

**3—1—43.** (ஞாயிற்றுக்கிழமை).

**ஐரோப்பா (Europe)**.—(ஒரு நேசநாட்டு விமானங்கூட சேதமில்லை).

**பகலில்**.—கப்பல் துறைகள், கப்பற்படை தளம்—ஸெயின்ட் நாஸேர் (St. Nazaire).

**வட ஆபிரிக்கா (North Africa)**.

**கப்பல் துறைகள்**.—பிஸர்ட்டா (Bizerta).

**இருப்புப் பாதைகள்**.—ஸுஸ் (Sousse), கேப்ஸ் (Gabes).

**ருஷ்யா (Russia)**.

**விமானச் சண்டைகள், தரையிலுள்ள விமானங்கள்**.— ருஷ்யப் போர்முனை எங்கும்.

**தூரக்கிழக்கு (Far East)**.

**விரோதி விமானத்தளம்**.—நியூஜார்ஜியாவிலுள்ள மூண்டா (Munda).

**ஜப்பானியர் ஆக்கிரமித்த பிரதேசங்கள்**.—பர்மாவிலுள்ள ராதிடாங் (Rathedaung) பிரதேசத்தில்.

**ஒரு தொழிற்சாலை**.—பர்மாவிலுள்ள மொனிவா (Monywa).

**ஜப்பானிய லாரிகள்**.— பர்மாவிலுள்ள மெய்க்டிலா (Meiktila).

**4—1—43.** (திங்கட்கிழமை).

**ஐரோப்பா (Europe)**—(2 நேச தேச விமானங்கள் திரும்பிவரவில்லை).

**இரவில்**.—ராணுவ லக்ஷியங்கள், தொழிற்சாலைகள்.—ரூர் (Ruhr) பிரதேசத்தில்.

**வட ஆபிரிக்கா (North Africa)** (5 அச்சு நாட்டு விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன).

**துறைமுகமும், கப்பல்களும்**.— ஸ்வாக்ஸ் (Sfax).

**ஒரு விமானதளம்**.—கேர்வான் (Kairwan).

**விமானச் சண்டைகள்**.—டுனிஸியா (Tunisa).

**விமானதளம்**.— லாம்பெடுஸா (Lampedusa) தீவு.

**ருஷ்யா (Russia)**.

**விமானச் சண்டைகள், தரையிலுள்ள விமானங்கள்**.—கிழக்குப் போர்முனை முழுவதிலும்.

**தூரக்கிழக்கு (Far East)**.—(3 ஜப்பானிய விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன).

**விமானதளம்**.— நியூ ஜார்ஜியாவிலுள்ள மூண்டா (Munda).

**விமான நிலயங்கள்**.—நியூ பிரிடனிலுள்ள காஸ்மாடா (Gasmata), நியூ கினியிலுள்ள லே (Lae).

**ரயில்வே ஜங்கிஷன்**.—பர்மாவிலுள்ள நாபா (Naba).

**இருப்புப் பாதைக்கருகாமையில் ரயில் வண்டிகள் நிற்குமிடங்கள்**.— பர்மாவிலுள்ள மாண்டலே (Mandalay).

**ஒரு பெரிய கப்பல்**.—பர்மாவிலுள்ள ரெங்கூனுக் (Rangoon)கருகாமையில்.

**5—1—43.** (செவ்வாய்க்கிழமை).

ஐரோப்பா (Europe).

*தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை.*

வட ஆபிரிக்கா (North Africa).

ரயில் வண்டிகள் மாறுமிடங்கள், சிறு துறைமுகங்கள்.—*ஸுஸ்* (Sousse).

விமான எதிர்ப்புகள்.—*லாம்பெடுஸா* (Lampedusa) *தீவு*.

ரயில் வண்டிகள் நிற்குமிடங்கள்.—*கேரோனு* (Kairwan)*க்கருகாமையில்*.

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகள், தரையிலுள்ள விமானங்கள்.—*ருஷ்யப் போர்முனை முழுவதிலும்.*

தூரக்கிழக்கு (Far East).

விமானதளம்.—*நியூஜார்ஜியாவிலுள்ள மூண்டா* (Munda).

விமானக்கூடம்.—லே (Lae).

ஜப்பானிய சாமான் கப்பல்.—*அலூஷியன் தீவுகளிலுள்ள கிஸ்கா* (Kiska)*வுக்கருகாமையில்*.

ஜப்பானிய ஸ்தானம்.—*ராதிடாங்* (Rathedaung)*குக்கருகாமையில்*.

ரயில்வே ஜங்ஷன்.—*மாண்டலே* (Mandalay).

**6—1—43.** (புதன்கிழமை).

ஐரோப்பா (Europe).

சுரங்க வெடிகள் போடுவது.—*விரோதிக்குச் சொந்தமான கடற்கரையோரங்களில்.*

**மத்தியதரைக்கடல் (Mediterranean).**

*4 அச்சுநாட்டு விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன.*

*(4 அச்சுநாட்டு கப்பல்கள் சேதமாயின).*

துறைமுகம்.—*லாகௌலெட்* (La Goulette).

கப்பல் துறைகள்.—*ஸுஸ்* (Sousse).

கந்தகம் தயாரிக்கும் தொழிற்சாலைகள்.—*ஸிஸிலியிலுள்ள லிகாடா* (Licata).

விமானக்கூடம்.—*லாம்பெடுஸா* (Lampedusa) *தீவு*.

கப்பல் துறைகள்.—*டுனிஸ்* (Tunis).

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகள், தரையிலுள்ள விமானங்கள்.—*ருஷ்யப் போர்முனை எங்கும்.*

தூரக்கிழக்கு (Far East).

விமானத்தளம்.—*மூண்டா* (Munda).

கனமான க்ரூயிஸர்.—*ஸாலமன் தீவுகளிலுள்ள பூயின்* (Buin) *தீவுக்கருகாமையில் (3 ஜப்பானிய விமானங்களும், 2 நேசதேச விமானங்களும் சேதமாயின).*

ஜப்பானியப் போக்குவரத்து.—*ஷார்ட்லாந்து* (Shortland) *தீவு*.

ஜப்பானிய ஸ்தானம்.—*மாயூ* (Mayu) *நதி*.

**7—1—43.** (வியாழக்கிழமை).

ஐரோப்பா (Europe).

இரவில்.—ராணுவ லக்ஷியங்கள், தொழிற்சாலைகள்.—*ஜெர்மனியிலுள்ள ரூர்* (Ruhr) *பிரதேசம்.*

வட ஆபிரிக்கா (North Africa).

மத்தியதரைக்கடல். (Mediterranean).

விரோதிகளின் போக்குவரத்து.—*மேற்குமுகமாக ட்ரிபோலி* (Tripoli) *பக்கம்.*

விமானத்தளம், சைனிய வாஸஸ்தலங்கள்.—*கேப்ஸ்* (Gabes).

லக்ஷியங்கள்.—*டுனிஸ்* (Tunis)*க்கருகாமையில் ஸ்வாக்ஸ்* (Sfax).

விமானச் சண்டைகள்.—*ஸிஸிலியிலுள்ள காமிஸோ* (Comiso)— *(2 அச்சுநாட்டு விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன).*

துறைமுகம்.—*ஸிஸிலியிலுள்ள பாலெர்மோ* (Palermo).

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகள். — தரையிலுள்ள விமானங்கள் *கிழக்குப் போர்முனை முழுவதிலும்.*

தூரக்கிழக்கு (Far East).

விமானக்கூடம்.—*ஸாலமன்ஸிலுள்ள காலி* (Khali).

விமானத்தளம்.—*நியூ ஜார்ஜியாவிலுள்ள மூண்டா* (Munda).

துறைமுகம்.—*நியூ பிரிடனிலுள்ள ராபால்* (Rabaul).

ஜப்பானிய ஸ்தானம்.—*நியூ கினியிலுள்ள ஸபனுண்ட்* (Sabanand) *பிரதேசம்.*

பர்மாவிலுள்ள அக்கியாப் *துறைமுகம்.*

பர்மாவிலுள்ள *ராதிடாங்* (Rathedaung).

**8—1—43.** (வெள்ளிக்கிழமை).

ஐரோப்பா (Europe).

இரவில்.—ராணுவ லக்ஷியங்கள், தொழிற்சாலைகள்—*ரூர்* (Ruhr).

*விரோதிக்குச் சொந்தமான சமுத்திரக் கரையோரங்களில் சுரங்கவெடிகள் பாவுவது.*

வட ஆபிரிக்கா (North Africa).

துறைமுகங்கள்.—*பிஸர்ட்டா* (Bizerta), *பெர்ரி வில்லி* (Ferry Ville).

*(4 அச்சு நாட்டு விமானங்கள் சேதமாயின).*

லக்ஷியங்கள்.—*கேர்வான்* (Kairwan), *கேப்ஸ்* (Gabes).



ரயில் ரோடு.—*காலாஸிரியா* (Kallasriea), *டுனிஸியாவிலுள்ள கிரேபா* (Graiba).

விமான எதிர்ப்புகள்.—*பான்டாக்* (Fondouk), *(2 அச்சு நாட்டு விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன.*

போக்குவரத்து.—*ஸில்பனு* (Zillpen)*க்கும் ஹோம்ஸு*(Homs)*க்கும் இடையேயுள்ள ரஸ்தாவில்.*

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகள், தரையிலுள்ள விமானங்கள்.—*ருஷ்யப் போர்முனை முழுவதிலும்.*

தூரக்கிழக்கு (Far East).

(20 ஜப்பானிய *விமானங்கள் அழிந்து போயின).*

விமானக்கூடம் —*நியூ பிரிடனிலுள்ள காஸ்மாடா* Gasmata).

விரோதியின் இடிதண்டுப் படகு.—*கே* (Kai) *தீவுகளுக்கருகாமையில்.*

விரோதி சைனியங்களை ஏற்றிச் செல்லும் கப்பல்கள்.—*நியூ கினி* (New Guinea)*க் கருகாமையில்.*

**9—1—43.** (சனிக்கிழமை).

ஐரோப்பா (Europe).

இரவில்.—ராணுவ லக்ஷியங்கள்—*எஸ்ஸன்* (Essen).

சுரங்கவெடிகள் பாவுவது.—*விரோதிக்குச் சொந்தமான கடற்கரையோரங்களில்.*

வட ஆபிரிக்கா (North Africa).

கப்பல் துறைகள், விமானக்கூடம்.—*டுனிஸு* (Tunis)*க்கும், பிஸர்ட்டா* (Bezerta)*க்கும் அருகாமையில்; ஸ்வாக்ஸுக்கும்* (Sfax), *கேப்ஸுக்* (Gabes)*கும் இடையேயுள்ள ரஸ்தாவில்.*

போக்குவரத்து ரஸ்தா சந்திப்புகள்.—*டிரிபோலி* (Tripoli)*க் கருகாமையில்.*

லக்ஷியங்கள்.—*மிஸுராடா* (Misurata).

இடையிடையே காவல் புரியும் படைகள்.—*பான்டெலேரியா* (Pantellaria) *தீவு*, *ஸிஸிலி* (Sicily), *டுனிஸ்* (Tunis).

**ருஷ்யா (Russia)**—(2—1—43 *முதல்* 9—1—43 *வரை அச்சு நாடுகளுக்கு* 313 *விமானங்களும், ருஷ்யாவுக்கு* 93 *விமானங்களும் நஷ்டம்).*

விமானச் சண்டைகள், தரையிலுள்ள விமானங்கள்.—*ருஷ்யப் போர்முனை முழுவதிலும்.*

தூரக்கிழக்கு (Far East).

விரோதிக்குச் சொந்தமான படகுகள், கிடங்குகள்.—*நியூ கினியிலுள்ள லே* (Lae).

துறைமுகம்.—*நியூ பிரிடனிலுள்ள ரபால்* (Rabaul).

விமானக்கூடம்.—*ஸாலமன்ஸிலுள்ள மாடாங்* (Madang); *கே* (Kai) *தீவுகள்.*

கிராமங்கள்.—*டிமோரில்* (Timor).

விரோதி லக்ஷியங்கள் —*பர்மாவிலுள்ள ராதிடாங்* (Rathedaung)*குக்கு அருகாமையில்.*

ஜப்பானிய மோட்டார் லாரிகள்.—*பர்மாவில் ஷ்வீபோ*(Shwebo)*வுக்கு மேற்கே.*

சாமான் ரயில் வண்டிகள், வண்டிகள் நிற்குமிடங்கள்.—*பர்மாவிலுள்ள கியாக்பாடாங்* (Kyaukpadaung).

பீரங்கிகள் நிறுத்தும் மேடைகள்.—*மாயூ* (Mayu) *தீபகற்பம்.*

## ***விரோதிகளின் விமானப்படையெடுப்புகளின் விவரங்கள்.***

**4—1—43.** (திங்கட்கிழமை).

பிரிடன் (Britain).

சில ஜில்லாக்கள்.—*இங்கிலாந்தி* (England)*ற்கு வட கிழக்கே.*

வட ஆபிரிக்கா (North Africa),

தூரக்கிழக்கு (Far East).

*தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை.*

ருஷ்யா (Russia).

ருஷ்யச் சைனியங்கள்—*மோஸ்டாக்* (Mozdok) *பிரதேசத்தில்.*

**5—1—43.** (செவ்வாய்க்கிழமை).

பிரிடன் (Britain).

கடற்கரை ஜில்லா.—*கிழக்கு ஆங்கிலியா* (East Anglia).

வட ஆபிரிக்கா (North Africa).

நேச தேசத்தார்களின் விமான தளம்.—*அல்ஜீரியா* (Algeria)*விலுள்ள போன்* (Bone),.

தூரக்கிழக்கு (Far East).

விமான தளம்.—*கூடல்கனார்* (Gudalcanar).

**6—1—43.** (புதன்கிழமை).

பிரிடன் (Britain).

பகலில்.—இங்கிலாந்தி (England)*ன் கிழக்குக் கரையில் ஒரு இடம்.*

ருஷ்யா (Russia).

*வெலிக்கியுலூகி* (Velikiye-Luke) *க்கு தென் மேற்கேயுள்ள ருஷ்ய ஸ்தானம்.*

தூரக்கிழக்கு (Far East).

நேச தேசத்தார்களின் பலமான பிரதேசம்.—*பூனா* (Buna)*வுக் கருகாமையில்.*

**7—1—43.** (வியாழக்கிழமை).

பிரிடன் (Britain).

*பிரிடனில் எந்த இடத்திலும் விமான எதிர்ப்பே கிடையாது.*

லிபியா (Libya).
நேச தேசத்தார்களின் முன்னணிப் பிரதேசம்.—வேடிஸெம்ஸென் (Wadi-zemzen) பிரதேசம்.

ருஷ்யா (Russia).
ருஷ்யர்களுக்குச்செல்லும் ஸப்ளை மார்க்கங்கள்.—மத்தியப் போர்முனையில் யுத்த அரங்கத்திற்கு பின்னால்.

**8—1—43.** (வெள்ளிக்கிழமை).

பிரிடன் (Britain).
எங்கும் விமான எதிர்ப்பே கிடையாது.

ருஷ்யா (Russia).
ருஷ்யர்களின் ஸ்தானங்கள்.—மத்தியப் போர்முனை, தெற்குப் போர்முனை.

தூரக்கிழக்கு (Far East).
தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை.

**9—1—43.** (சனிக்கிழமை).

பிரிடன் (Britain).
பகலில்.—இங்கிலாந்தி (England)ன் கிழக்குக் கடற்கரையில் ஒரு இடம்.
இரவில்.—விமான தாக்குதல் நேரவில்லை.

ருஷ்யா (Russia).
ருஷ்யர்களுக்குச் செல்லும் ஸப்ளை மார்க்கங்கள்.—முன்னணிச் சைனியங்களுக்குப் பின்புறம்.

தூரக்கிழக்கு (Far East).
ஸாலமன் ஸிலுள்ள மேராக்கி (Merauki).

---

# யுத்தக் குறிப்புகள்.

**உணர்ச்சி கொடுக்கக் கூடிய புது வருஷச் செய்தி.** ஜனவரி 7௳ வாஷிங்டனில் 78-வது காங்கிரஸ் சபையின் முன்பாக ஜனாதிபதி ரூஸ்வெல்ட் செய்த பிரசங்கத்தை இந்த அறிக்கையின் மற்றொரு பாகத்தில் அச்சிட்டிருக்கிறோம். அது மிகவும் பொருத்தமானதேயாகும். ஏனென்றால் அது புது வருஷச் செய்தி யாவதோடு உலகில் நல்லெண்ணம் படைத்த மக்களுக்கும் அமெரிக்கர்களுக்கும் நம்பிக்கையை உண்டுபண்ணக் கூடியதாகவும் இருக்கிறது. இந்த யுத்தத்தின் முடிவைப்பற்றிய பிரச்னைகளை ஊர்ஜிமாகத் தெரிவிக்கின்றன. அதாவது கொடுங்கோல் புரிவோரை அடியோடு அழிப்பது தான். அச்சொற்பொழிவின் சில அம்சங்களாவன.

"பஸிபிக்கில் தற்காப்பின் சிரம நிலை தீர்ந்துவிட்டது. ஜப்பானியரை பலாத்காரமாகவே நாம் இனி சண்டைக்கு இழுப்போம். சென்ற வருஷம் நாம் அவர்களை நிறுத்தினோம். இவ்வருஷம் நாம் முன்னேறப் போகிறோம். (இது இந்தியாவிற்குச் சாதகமான செய்தி).

"அச்சு நாடுகளும் பலப்படுத்திக்கொண்டுதானிருக்கின்றன. ஆனால் இந்தச் சண்டை இனி கடுமையாக இருந்தாலும் மத்தியதரைக்கடல் ஓரங்களிலிருந்து எதிரிகள் பூரணமாகத் துரத்தப்படுவார்கள். (இது இதாலிக்கு எச்சரிக்கை).

"நான் ஜோஸியம் கூற முடியாது. ஐரோப்பாவில் நேசநாடுகள் எங்கே சண்டை தொடுக்கப்போகின்றன என்று சொல்ல இயலாது. ஆனால் மிகக் கடுமையாக மட்டும் தாக்குமென்று சொல்லுவேன். வார்ஸா ராட்டர்டாம் லண்டன், கவன்டரி முதலியவைகளைத் தாக்கும்போது கொண்டிருந்த விமான பலம் எதிரிகளுக்கு இப்போது இருக்காது. அந்த பலமெல்லாம் போய்விட்டது. (இது கோயரிங்கிற்கு எச்சரிக்கை)".

"நாம் பத்திரமாக அடைத்துக் கிடக்க முடியாது என்றும், எதிரியை எளிதில் அடக்க முடியாதென்றும் நமக்குத் தெரியும்.........இந்த யுத்தத்தின் முடிவில் ஜெர்மனி, ஜப்பான், இதாலி இவைகளில் எது மீதியிருந்தாலும் அது மீண்டும் வலுப்பெற்று விடும், அதனால் நமக்குத் தான் சிரமம் ஏற்படும். நமது பழைமையான புகழை நிலைநாட்டி வரும்காலத்திலும் மேன்மை பெற நினைக்கிறோம்.........மனிதவர்க்கத்தின் தன்மைகளை நம்புகிறவர்களுக்கும், நம்பாதவர்களுக்கும் நடக்கும் சண்டையேயாகும். ஜனநாயகத்தையும் கொடுங்கோலையும் நம்பும் இரு கக்ஷிகளுக்குள் நடக்கும் சண்டையும் ஆகும். (இதுவே ஜெர்மனியின் கொள்கைக்கு விரோதமான கொள்கையாகும்).



"எப்போது இந்தச் சண்டை முடியுமென்று என்னால் சொல்ல முடியாது. ஆனால் இந்த வருஷம் ஜெர்மனி, இதாலி ஜப்பான் முதலிய நாடுகளுடன் நாம் முன்னேற்றப்போரை நடத்த முடியும். (இதைத்தான் நாம் எதிர் பார்ப்பது).

"ஸ்டாலினும், ருஷ்யர்களும் தைரியமாக இருக்கிறார்கள். உணர்ச்சியும் அதிகமாக இருக்கிறது. நம்பிக்கையும் பூர்ணமாக இருக்கிறது. (இது நேசதேசங்களுக்குச் சாதகம்தான்)."

வி வி வி வி வி வி வி

**சாயம் வெளுக்கிறது.** கடைசியாக ஹிட்லர் செய்த பிரசங்கத்தின் போது அவனைப் பார்த்தவர்களெல்லாம், இது ஹிட்லரா, வேறுயாராவதா என்று ஆச்சரியப்பட்டனர். ஏனென்றால் தோல்வியும் அவமானமும் அவனை இம்மாதிரி நிலைக்குக்கொண்டு வந்திருக்கிறது. ஏமாந்து போனவர்களுக்குள் ஒருவனாகிறான்.

'ஒரு ரொட்டித் துண்டுக்கு நான் எதைத்தரமாட்டேன்.' ஒன்றும் தின்னக் கிடைக்காமல் மிருக ஜீவனம் செய்கிறோம். புது வருஷக் கொண்டாட்டத்தின் போது எங்கள் ஆகாரத்திற்கு அருகில் இருந்த இறந்த குதிரையைத் தான் கண்டோம்' என்று ருஷ்யப் போர்முனையிலிருந்து ஒரு ஜெர்மன் சிப்பாய் எழுதுகிறான். இதெல்லாம் ஒரு பரிதாபகரமான கதையாக இருக்கிறது. "கௌரவம் வாய்ந்த ஜெர்மன் சைனியப் பிணங்களைத்தின்பதென்றால் என்ன கஷ்டம் பாருங்கள். காய்கறிகளைத்தின்கும் ஹிட்லர் என்ன நினைக்கிறானோ தெரியவில்லை. கோயபெல்ஸும் அவனது பிரசார கோஷ்டியும் இவ்வித ஆகாரங்கள் உடம்புக்கு நலமென்று பிரசாரம் செய்யவேண்டியதுதான்."

ஆகவே ஹிட்லர் வருங்காலத்தைப் பற்றி கதிகலங்கி கடவுளுக்கு வந்தனம் அளிக்கிறான். வரும் காலத்தில் ஜெர்மானியர் கதி என்னவாயிருக்குமென்று கோயரிங்குக்கும் தெரியவில்லை. "இனி சிரம நிலையைக் கடக்கவேண்டியிருக்குமென்று" கோயபெல்ஸ் நினைக்கிறான். "அதை சமாளிக்காவிட்டால் எல்லா முயற்சியும் வீணாகிவிடும்" என்கிறான்.

சமீபத்தில் தான் ஹிட்லர் வீராப்பு பேசும்போது 1943 மாரிகாலம் சாதகமாக இருக்குமென்றான். ருஷ்யாவை ஜயித்துவிடுவோமென்றும் கோயரிங் சொன்னான். அந்தப் பேச்சை இப்போது காணோம்.

ஆகவே நிலைமை நேசதேசப் பக்கம் திரும்பி வருகிறது. வெலிகியுலூகி முதல் காகஸஸ் அடி வாரம் வரை ருஷ்யர்கள் தாக்கி வருகின்றன. ஜெர்மன் விமர்சகர் ஹான்ஸ் பிரிட்ஸ்சி சொல்லும் விதமாக ருஷ்யச் சைனியங்கள் ராவணன் தலையை வெட்டினால் கிளம்புவதுபோல் மறுபடி கிளம்புகின்றன.

இந்தக் கஷ்டங்களுக்கு ஹிட்லரைத் தான் ஜெர்மனியில் குறைகூறுகிறார்கள். திடீரென படைகளைத் திருப்ப அழைக்கமாட்டான். ஜூலை மாதத்தில் ருஷ்யத் தாக்குதலை ஆரம்பிக்கும்போது மாஸ்கோவிற்கு ஸப்ளை போகவொட்டாமல் செய்துவிடலாமென்று நினைத்தான். இவனைவிட கெட்டிக்காரனான ஸ்டாலின் அவ்விதம் செய்யவிடவில்லை. காகஸஸில் அதிகமாகச் சண்டை செய்து வந்தாலும் மாஸ்கோ முனைதான் முக்கியமானது என்று ஹிட்லருக்குத் தெரியும். ஆனால் ஸ்டாலின் மாஸ்கோவிற்குப் போகும் மார்க்கத்திலுள்ள வாரனேஷ், ஸ்டாலின்கிராட் முதலிய இடங்களிலுள்ள சைனியங்களைத் திருப்ப அழைத்து விட்டான். ஸ்டாலின் ரிஸர்வ் படைகளைக்கொண்டே ஜெர்மன் படைகள் அசந்த சமயம் பார்த்து பல இடங்களில் தாக்கினான்.

இதைப்பற்றி டைம்ஸ் பத்திரிகை கூறுவதாவது :—

'ருஷ்யர்கள் மாறும் சீதோஷ்ண நிலையையே கவனிக்கின்றனர்.' கடந்த மாரி காலத்திலும் அதன் கொடுமை தாங்கமாட்டாமல் ஜெர்மன் முன்னேற்றம் தடையுற்றது. இவ்வருஷம் அவ்வளவு கொடுமையில்லாத போயினும் ருஷ்ய முன்னேற்றத்தை எதிரிகளால் தடுக்க முடியாது.

'இந்தச் சமயத்தில் பிரதேச ஞானம் முதலியவைகளைக்கொண்டு ருஷ்யர்கள் சமாளித்து வருகிறார்கள் என்பதில்லை. ஆனால் குறையாத உணர்ச்சியும் ஊக்கமும் இருப்பதாலேயே ருஷ்யர்கள் சண்டை செய்து வருகிறார்கள்.

‘ஜெர்மானியருக்கு விரோதமாக எதரிகளால் சமாளிக்க முடியாத யுத்த தந்திரங்களை நேசநாடுகள் போட்டு வருகின்றன. ஏராள ஜெர்மானியர் இறப்பதோடு கைதி செய்யப்படுகின்றனர். எதிரி வசமாவோரின் குடும்பங்களை அழித்துவிடுவதாயும், வெலிகியிலூகி இன்னும் எதிரி வசமாகவில்லையென்றும் ஜெர்மன் பொதுமக்களுக்கு எடுத்துச் சொல்லப்படுகிறது. இதெல்லாம ஜெர்மன் தோல்வியின் சின்னங்களேயாகும்.

ருஷ்யர்களின் தோல்வியை மறைப்பது கோயபெல்ஸின் வேலையாகும். வெலிகியுலூகியை ருஷ்யர்கள் பிடித்ததாகச் சொல்லுவது வெரும் கதையாம். அதோடு நிற்காமல் டான் சமவெளியில் ஜெர்மானியர்தான் முன்னேறிக் கொண்டிருப்பதாக கோயபெல்ஸின் சிஷ்யரான லார்டு ஹாஹா சொல்லுகிறான். ஜெர்மானியர் அங்கே பின்வாங்குவதை மறைப்பதுபோலவே ரோமல் பின்வாங்குவதையும் மறைக்கிறார்கள்.

ஹிட்லருக்கு மேலும் ஒரு சிரமம். லவால் செய்யும் தடபுடலைக்கூடமீறி பிரான்ஸ் விரோதமாகக் கிளம்புகிறது. ருமேனியாவும் தான் ஏன் ருஷ்யாவில் இந்தப்போரில் மடியவேண்டுமென்று நினைக்கிறது. ஹங்கேரியில் பலர் முணுமுணுக்கின்றனர். பின்லாந்திலும் அதன் துரோக ஜனாதிபதிக்கு அதிக அதிகாரங்கள் கொடுக்கப்படவில்லை. ஸ்வீடனும் ராணுவ ஏறபாடுகளைச் செய்து வருகிறது. ஸ்பெயின் ஹிட்லர் பேரில் சந்தேகமடைந்துவருகிறது. துருக்கி விஷயங்களை கவனித்து வருகிறது. இதாலி மெதுவாக நழுவ சமயம் பார்க்கிறது. போராக்குறைக்கு போப்பாண்டவனும்—அதிகார ஆசை, அடிமையாக்குவது, பொய் கொள்கைகள், மனிதர்களைக் கைதி செய்வது, மிருகங்களைப் போல் நடத்துவது முதலியவைகளைக் கண்டித்துப் பேசியிருக்கிறார்.

வி வி வி வி வி வி வி

**கப்பற் சண்டை.** நேசதேசங்களின் கப்பல்களை எதிரி மூழ்கடித்துக்கொடுக்கும் விவரம் பொய்யானது. அவ்வளவு கப்பல்களையே நேசநாடுகள் கட்டவில்லை. இதற்காக வாஷிங்டனில் கொடுக்கப்பட்டுள்ள விவரங்களைக் காணலாம். தினம் 4 கப்பல்கள் வீதம் அமெரிக்கா மாத்திரம் கட்டுகிறது. இன்னும் அது இரட்டிப்பு மடங்காக் கப்படும். இதோடு பிரிடனிலும் அதிகக்கப்பல்சள் கட்டப்படுகின்றன. ஆகவே எதிரி மூழ்கடிப்பதைக் காட்டிலும் அதிமாகவே கட்டப்படுவதால் நமக்கு சிரமமில்லை.

வி வி வி வி வி வி வி

**பர்மா.** மாயூ நதிக்கு இருபக்கங்களிலும் சண்டை நடக்கிறது. டான் பயிக் பிரதேசம், மாயூ தீபகர்ப்பம், ராதிடாங் இங்கேதான் சண்டை நடக்கிறது. பிரிடிஷ்படைகளும் இந்தியப் படைகளும் மாங்டாவிலிருந்து தெற்கு நோக்கிப் போகும்போது எதிரி ராதிடாங்கிற்குப் பின்வாங்கினான். சண்டையும் விசித்திரமாக இருக்கிறது. இந்த இடத்தில் மாயூ நதி இரண்டு மைல் அகலமிருக்கிறது. காலையில் மூடுபனி படிந்திருக்கும். நதியில் படகுகளிலோ, தரையில் கோவேறு கழுதைகளிலோ தான் சாமான்களை எடுத்துச் செல்லமுடியும். நதியில் நீந்தவேண்டும். காடுகளில் மலைப் பாம்பு, புலி, அம்மை, மலேரியா முதலிய தொந்தரவும் உண்டு. குடிசைகள் தான் இருக்கின்றன.

ஜப்பானியப் படைகள் அங்குள்ள மலை ஜாதியாரை கிளப்பி விடுகின்றனர். அவர்களின் மதக்கொள்கைகளை ஜப்பானியர் கவனிக்கவேயில்லை. உதாரணமாக ராதிடாங்கில் புத்தக் கோவில்களைச் சுற்றிதான் ஜப்பானியரின் ராணுவ நிலை இருக்கிறது.

ஒவ்வொரு நாளும் ஜப்பானியர் பர்மாவில் அட்டூழியம் செய்கின்றனர். எதிரி ஒலிபரப்புகளைக் கேட்கக்கூடாதெனச் சொன்னார்கள். ஜனவரி 5ல் ரெங்கூன் ரேடியோவில் பர்மியரின் ஒத்துழைப்பு வேண்டுமெனச் சொல்லப்பட்டது. ஆனால் பர்மியர் ஒத்துழைப்பதாக முன்னாடியே சொல்லியிருக்கிறார்கள். ஜனவரி 6ல் பயமுறுத்தினர். ஏனென்றால் ரெங்கூனில் ஜப்பானிய நிலயங்களை பிரிடிஷ் விமானப்படை தாக்கியதற்கு பர்மியர்களும் இந்தியர்களும் உதவினார்களாம்.



இவர்களைக் கொல்லப்போவதாக ரேடியோவில் சொல்லப்பட்டது. இதைப்போல ஐந்தாம் படையினருக்கும் ஒரு பயமுறுத்தல் காணப்பட்டது.

வி வி வி வி வி வி வி.

**கூடல்கனால்.** இப்போது பத்திரமாக இருக்கிறது. கடந்த அக்டோபரில் நேசநாட்டு நிலைமை மோசமாகத்தானிருந்தது. ஜப்பானியர் படைகளை இறக்கும்போது அவர்களைத் தடுக்கவே முடியவில்லை. மேலும் கோலிமுனையிலிருந்து க்ரூஸ் முனைவரைதான் நேசநாட்டு ஸ்வாதீனத்தில் இருந்தது. மடனிகா நதிவரைதான் போக்குவரவும் நடத்த முடியும்.

ஆனால் இப்போது நிலைமை அதிகமாக மாறிவிட்டது. 18 மைல் நீளம் 4 மைல் அகலத்திற்கு அமெரிக்கப் படைகள் ஸ்வாதீனபடுத்தியிருக்கின்றன. ஹெண்டர்சன் விமானத்தளம் ஜப்பானிய பீரங்கிகளுக்கு இலக்காக ஆகவே முடியாது. கூடல்கனாலில் போதுமான படைகள் இறக்கப்பட்டிருந்தன. எதிரி இரண்டு பக்கங்களிலிருந்தும் கழட்டிச் செல்லவேண்டியதாயிற்று. குடை விமானங்களைக்கொண்டே உணவு ஸப்ளைகளை முதலியவைகளைப் பெறுகிறான்.

வி வி வி வி வி வி வி

**பாபுவா.** நியூகினியில் பாபுவாவில் ஜப்பானியரின் நிலைமை மோசமாகிவிட்டது. போர்டு மார்ஸ்பியை கைவசப்படுத்தும் எண்ணம் ஸ்வப்பனமாகி விட்டது. அதோடு சரியான நிலையிலிருந்தும் துரத்தப்பட்டனர். பூனா, கோனா, நமது வசமாயின. ஸனாந்தா என்ற சிறு இடம் மாத்திரம் அவர்கள் வசமிருக்கிறது. அதுவும் சீக்கிரம் கைப்பற்றப்படும்.

டிஸம்பர் 13லேயே தோல்வி ஏற்படுமென்று எதிர்பார்த்து ஜப்பானியர் புனா, ஹோன், டச்சு நியூகினி எல்லை வரையிலுள்ள கடற்கரையை வைத்துக் கொண்டிருந்தனர். மர்பரி, குமுஸி, மடாங் பின்ஸசாபன முதலியவைகளை ஸ்வாதீனப்படுத்திக்கொண்டன. சமீபத்தில் ஜனவரி 6ல் ஒரு பெரியத் துணைக் கப்பல் கட்டடத்தையும் கொண்டுவந்தனர். விவாக் விமானத் தளத்தையும் கைவசப்படுத்தின.

இதிலிருந்து ஜப்பானியர் தற்காப்புப்போர் செய்துகொண்டு சமயம் வந்தால் முன்னேற்றப் போர் செய்ய ஏற்பாடு செய்ய வந்தது தெரிகிறது. ஜப்பானியர் ஆக்கிரமித்த இடங்களில் கப்பல்களும் விமானங்களும் நிறுத்தக் கூடியதாக இருந்தன. இங்கிருந்து ரபாலைப் பலப்படுத்த நினைத்தனர். ஏனென்றால் இது தான் ஜப்பானிய திட்டங்களுக்கு வசதியானது. பூனாவிலிருந்து 500 மைல் தூரம் தானிருக்கிறது. மேலும் லே, ஸலாமூவா இவைகளும் பூனாவிலிருந்து ஒரு மணியில் விமான மூலம் சொல்லலாம்,

ஆகவே ராபலில் ஜப்பானியர் அதிகம் கப்பல்களைத் திரட்டியிருப்பது ஆச்சரியமில்லை. இதிலிருந்து ஆஸ்திரேலியாவைப் படையெடுக்கப் போகிறார்களென்றும் சொல்ல முடியாது. ஏனென்றால் அமெரிக்கர்கள் திட்டமாக வலுப்பெற்றுவிட்டார்கள். ஒருக்கால் அமெரிக்கப் போக்குவரத்தையும் நேசதேச ஸப்ளை மார்க்கங்களையும் துண்டிக்கும் நோக்கம் இருக்கலாம்.

வி வி வி வி வி வி வி

**தற்காப்புடன்கூடிய முன்னேற்றப் போர்.** இதனால்தான் சுங்கிங் இவ்வளவுநாள் சமாளித்து வந்திருக்கிறது. ஸப்ளைகளுக்குப் பதிலாக தந்திரங்களைக் கையாடும், கெட்டிக்காரத்தனமாகப் பின்வாங்கியும் எதிரிகளைத் தளரவைத்திருக்கின்றனர். ஒரு முறையைக் கைவிட்டாலும் மறுபடி அதைப்பின்பற்றுவார்கள். அதனால்தான் அன்ஹவேய் மகாணத்தில் இடங்கள் திடீரென கைமாறுகின்றன.

பர்மா ரஸ்தா திறந்திருந்தபோது சென்ற ஸப்ளைகளைப்போலவேதான் இப்போதும் சைனாவிற்கு ஸப்ளைகள் போய்ச்சேருகின்றன என்று ஜனாதிபதி ரூஸ்வெல்டு சொல்லியிருக்கிறார்.

ஹாங்கல், ஸ்வாடல் முதலிய இடங்களில் இருக்கும் ஸப்ளைக்கப்பல்களை அழிக்க நேசதேச விமானங்கள்தான் செல்லுகின்றன.

பிரிட்டனும் அமெரிக்காவும் சைனாவில் பல வருஷங்களாக இருந்த பிரதேச பாத்யதையை விட்டுவிட்டன. இதனால் பல மனஸ்தாபங்கள் நீங்கின. வெற்றிகரமாகப் போராடும் நாடுகளுடன் சைனாவும் சேர்த்துக்கொள்ளப்பட்டது.

வி வி வி வி வி வி வி

**வேஷதாரி.** நான்கிங் அரசாங்கத்தை ஜப்பான் சந்திக்கு இழுத்துவிட்டது. பிரிடிஷ் சாம்ராஜ்யம் அமெரிக்கா இவைகள்பேரில் இது யுத்தம் தொடர்ந்திருக்கிறது. இதைப் பார்த்தால் நான்கிங்கிற்கு ஏதோ ஒரு சைனியமும் அரசாங்கமும் இருப்பதுபோல் காணப்படும். இது வெறும்பொய். சைனாவில் சுங்கிங் அரசாங்கத்தைவிட வேறு ஆட்சி இருப்பதுபோல் உலகத்தாருக்குக் காண்பிப்பதே ஜப்பானின் தந்திரம். வாங்சிங்வெய்க்குச் சொந்தமானது எதுவுமே இல்லை. நேசநாடுகள் செய்வதுபோல் தானும் செய்வதாக ஜப்பான் சொல்லிக்கொண்டு தேசாக்கிரமண ஆசையை விட்டுவிட்டதாகப் பிரகடனம் செய்கிறது.

வி வி வி வி வி வி வி

**விமான ஆஸ்பத்திரிகள்.** கொடிய யுத்த முறைகளைக் கண்டுபிடித்தமாதிரி அதனால் ஏற்படும் தீங்குகளையும் சிகித்சை செய்ய விக்ஞானம் சிலமுறைகளைக் கண்டுபிடித்திருக்கிறது. யுத்தம் வெகு விஸ்தாரமான இடங்களில் நடப்பதால் இந்த ஆஸ்பத்திரிகள் மெத்த அவசியம். இதை பாபுவாவில் அமெரிக்கர்கள் உபயோகப்படுத்தினர். (Xray) கருவிகள் உள்பட இதில் இருக்கின்றன. இந்த விமானங்களின் கனம் 50,000 பவுண்டு.

---

## அக்யாப்.

(இல்லஸ்ட்ரேடட் வீக்லி ஆப் இந்தியா பத்திரிகையிலிருந்து).

"அக்யாப் நகரை பிரிடிஷ் விமானப்படை வெடிகுண்டுகளைக்கொண்டு தாக்கிவருகிறது. காலடான், மாயூ நதிக்கரை ஓரங்களில் நமது பைடர் விமானங்கள் புதுபுது தாக்குதல்களை நடத்துகின்றன", என்று அரக்கான் பிரதேசத்தில் நடந்துவரும் தாக்குதலைப்பற்றி பத்திரிகைகளில் வெளிவருகின்றன. அத்தாக்குதல்களினால் பல நீராவிக்கப்பல்கள் பழுதுபட்டுப்போயின. பல கட்டடங்கள் தீக்கிரையாகின. இன்னும் பல ராணுவக் கட்டடங்கள், விமானக்கூடங்கள் யாவும் அழிந்துபோயின. இவ்விதம் அரக்கான் பிரதேசத்தைப் பிரிடிஷ் விமானப்படை தாக்கி அதிக சேதத்தை விளைவிப்பதின் காரணம் ஜப்பானியப்படைகள் அப்பிரதேசத்தைவிட்டு காலிசெய்யவேண்டுமென்பதற்காகத்தான்.

ஒரு சைனியத்தையும், விமானப்படையையும் வைத்துக்கொண்டு அதற்குத் தேவையான ஸப்ளைப் பொருள்களைப் பெறுவதற்குண்டான பிரச்னை ஜப்பானியர்களுக்குத் திகைப்பை உண்டாக்கியிருக்கவேண்டும். அவர்களுக்கு ரெங்கூனிலிருந்து கடல் மார்க்கமாகத்தான் பெரும்பாலும் ஸப்ளைகள் வரவேண்டும். தெற்கு பர்மாவிலிருந்து அரக்கான் பிரதேசத்திற்கு ஸப்ளைகள்கொண்டு செல்ல ஆன் (An), டாங்கூப் (Taungup) வழிகள் போல பல வழிகள் இருக்கின்றன. அவ்வழிகள் மூலமாக சொற்ப சாமான்கள்தான் கொண்டுசெல்ல இயலும். அதுவும் நதியில் செல்லும் நீராவிக்கப்பல்கள், சாதாரணப் படகுகள் மூலமாகத்தான் ஆன் (An), டாங்கூப் (Taungup) முதலிய இடங்களிலிருந்து அக்யாப்புக்கு கொண்டுசெல்லவேண்டும். அம்மாதிரி கொண்டு செல்ல 3 நாட்கள் பிடிக்கின்றன.

அரக்கான் பிரதேசத்தில் நல்ல ரஸ்தாக்களாவது இருப்புப் பாதைகளாவது கிடையாது. அங்கு பல நதிகளும், கால்வாய்களும்தான் செல்லுகின்றன. அப்பிரதேசத்தின் சன்னிவேசமானது மனிதனின் முன் கையை ஒத்திருக்கிறது. மணிக்கட்டுதான் அதன் தலைநகர் அக்கியாப். ஐந்துவிரல்களும் ஐந்து முக்கியமான நதிகள். அவைகளின் பெயர், நாயவ் (Naaf), மாயூ, மோஸி (Moze), காலடான் (Kaladan), லெம்ரோ (Lemro). கையிலுள்ள பல நரம்புகள்தான் இந்நதிகளை ஒன்றோடொன்று சேர்க்கக்கூடிய சிறு கிளைநதிகளும், கால்வாய்களுமாகும்.



### வங்காளிகளின் குடியேற்றம்.

சாதாரண காலங்களில் அக்யாப்பின் ஜனத்தொகை சுமார் 45,000 இருக்கும். அறுவடை காலத்தில் அதன் ஜனத்தொகை மிகவும் அதிகரித்துவிடும். வங்காளத்திலிருந்து 1,50,000 ஜனங்களுக்கு மேல் அரக்கான் பிரதேசத்தில் குடியேறியிருக்கிறார்கள். அவர்கள் அநேகர் அக்யாப்பிலுள்ள நெல்மிஷின்களில் வேலையில் ஈடுபட்டிருக்கின்றனர். இன்னும் பலர் அந்த ஜில்லாவிலுள்ள பல இடங்களிலும் விளைவான பொருள்கள் அறுவடை செய்ய கூலிக்கமர்ந்திருக்கிறார்கள். வழக்கமாகவே சிட்டகாங்கிலிருந்து மாங்டாவரை அநேக ஜனங்கள் நடந்து செல்வார்கள். இன்னும் சிலர் சிட்டகாங்கிலிருந்து மாங்டாவுக்குக் கடல் மார்க்கமாய்ப் போய்க்கொண்டிருக்கும் நீராவிக்கப்பல்கள் மூலம் வந்துவிடுவார்கள். பிற்பட்டு மாங்டாவிலிருந்து கால்நடையாக 16 மைல் தூரத்திற்கப்பாலுள்ள புதிடாங்குக்கு (Bothidaung)ச் செல்வார்கள். இதற்குமுன் அவ்விடங்களுக்கு மிடையே ஒரு சிறு இருப்புப்பாதை போடப்பட்டிருந்தது. அங்கிருந்து நதிகளில் நீராவிக் கப்பல்கள் மூலம் அக்யாப்புக்குச் செல்வார்கள். அப்பொழுது பார்த்தால் மீன் குவியல் மாதிரி ஏராளமான மனிதர்கள் திறள் திறளாகச் செல்வார்கள். வேலை கிடைக்குமென்றும், நல்ல சம்பளம் கிடைக்குமென்றும் எல்லோரும் சந்தோஷமாகச் செல்வார்கள்.

மே மாத ஆரம்பத்திலேயே ஜப்பானியர் அக்யாப்பை ஆக்கிரமித்தபடியால் அந்த சமயத்தில் அங்கிருந்த சைனியத்திற்குக் கஷ்டமான காலமாக இருந்திருக்கும். சாதாரணமாக மழைகாலம் மே 11-ம் தேதி முதல் 24-ம் தேதிக்குள் ஆரம்பமாய்விடும். ஆகையால் அந்தக்காலத்தில் அவர்களுக்குத் தகுதியான இடவசதிகள் தயாரித்துக்கொள்வதற்குப் போதுமான அவகாசமிருந்திருக்காது. 'பூதகன' முறை அக்யாப்பில் அனுஷ்டிக்கப்பட்டிருக்கிறது. அதிலும் அழிக்கப்படாமல் ஏதாவது கொஞ்சம் இருந்தாலும், பிரிடிஷ் விமானப்படையின் கடுமையான தாக்குதல்களினால் அவை அழிக்கப்பட்டிருக்கவேண்டும். ஆகையால் அக்யாப்பைக் கைப்பற்றியதில் அவர்களுக்குக் கொஞ்சம்கூட லாபமில்லையென்றே ஜப்பானியர் தெரிந்துகொண்டிருக்க வேண்டும். அங்கு ஏற்கனவேயுள்ள ஜனங்கள் யாவரும் காட்டுப்பக்கம் ஓடிவிட்டார்கள். அதனால் ஆகாரம் கிடைக்காமல் திரிந்துகொண்டிருக்கும் நாய்களும், பூனைகளும்தான் அங்குயிருக்கின்றன.

### ஏராளமான மழை.

மே பாதியிலிருந்து அக்டோபர் மாதம் முடியும்வரை அங்கு சராசரி 224 அங்குலம் மழை பெய்யும். 1941-ம் வருஷம் ஜூன் மாதத்தில் ஒரு நாள் 6 மணி அவகாசத்திற்குள் 14 அங்குலம் மழை பெய்திருக்கிறது. இம்மாதிரியான நிலைமைகளில் விமான எதிர்ப்பு பீரங்கிகளைக்கொண்டு விமானங்களைச் சுடுவதற்கு யார்தான் விரும்புவார்கள்? மே மாதம் முடிய அக்யாப் நகர் 50 தடவைகள் வெடிகுண்டுகளால் தாக்கப்பட்டிருக்கிறது. இம்மாதிரி தாரைதாரையாய் மழை பெய்யும் பொழுதும், புயல்காற்று அடித்துக்கொண்டிருக்கும்பொழுதும், வெகு துணிவுடனும், தைரியமாகவும் அங்குள்ள துறைமுகத்தையும், விமான நிலயத்தையும் ஜப்பானியர் இனி உபயோகிக்க லாயக்கில்லாமல் செய்ய தாக்குதல்கள் நடத்திய நமது விமானிகளின் தீரம் மிகவும் மெச்சத்தகுந்ததாகும்.

### பாதுகாப்பாளிகளின் கவலை.

அக்யாப் ஒரு தீவு. அதிலிருந்து வெளியே செல்லவோ, அல்லது அதற்கு உள்ளே போகவோ, படகையோ, விமானத்தையோ உபயோகிக்கவேண்டும். அந்நகரத்தில் பல நல்ல ரஸ்தாக்கள் போடப்பட்டிருக்கின்றன. நகரத்திலிருந்து ஒரு ரஸ்தா $5\frac{1}{2}$ மைல் தூரம் வந்து, இரண்டு ரஸ்தாக்களாகப் பிரிந்து அவ்விரண்டு ரஸ்தாக்களும் 11-வது மைலில் ஒரு நதிக்கரையில் வந்து ஒன்று சேருகின்றன. விமான நிலயம் நகரத்திலிருந்து $1\frac{1}{2}$ மைல் தூரத்தில் இருக்கிறது.

அங்கு இப்பொழுது கோடைகாலம் ஆரம்பித்திருக்கலாம். அங்குள்ள ஜப்பானியர் சுகமாக இருப்பவர்கள் போல் காணப்படலாம். ஆனால் அவர்களுக்கு இப்பொழுது தான் கஷ்டம் ஆரம்பித்திருக்கிறது. ஏனென்றால் இது விமானங்

களில் ஏறிச்செல்வதற்கு தகுதியான காலம். இனிமேல் அங்குள்ள விமான நிலயங்களைக்காக்கும் ஜப்பானியர் நரக வேதனையைத்தான் அடைவார்கள். அக்யாப் நகரம் கல்கத்தாவிலிருந்து 340 மைல் தூரத்திலும், சிட்டாகங்கிலிருந்து 160 மைல் தூரத்திலும்தான் இருக்கிறது. ஆதலால் அக்யாப்பிலிருந்து கொண்டு ஜப்பானியர் வங்காளத்திலுள்ள பல நகரங்களுக்குத் தீங்குவிளைவிக்கக் கூடியதாக இருப்பதால் அதைப்பற்றி பல செய்திகள் இனி வந்து கொண்டிருக்கும்.

---

## ஹிம்லர்.

(அப்ஸர்வர் பத்திரிகையிலிருந்து எடுக்கப்பட்டது).

ஹிம்லர் மியூனிச் பள்ளிக்கூட உபாத்தியாயரின் மகன். மற்றவர்களைப் போலவே இவனும் சாதாரணமான முறையில் படித்தவன் தான். முதலில் ஜெர்மன் சைனியத்தில் ஒரு சாதாரண சிப்பாயாக இருந்தான். பிறகு விசேஷ கௌரவங்கள் ஒன்றும் பெறாமல் சில வருஷங்கள் படித்தான். அதன் பிறகு ஒரு தொழிற்சாலையில் குமாஸ்தாவாக அமைந்தான். சிறிது காலம் பக்ஷி வளர்க்கும் வேலையைச் செய்து வந்தான். அது சம்பந்தமாகவே 20 வருஷங்களுக்கு முன்னால், விவசாய நிபுணன் என்ற ஹோதாவில் நாஸிக் கக்ஷியில் சேர்ந்து கொண்டான்.

கிரிகர் ஸ்டிராஸர் (Gregor Strasser) கோயபெல்ஸைப் பொறுக்கி எடுத்த மாதிரி இவனையும் சேர்த்துக்கொண்டான். அந்த சமயத்தில் ஸ்டிராஸர் கக்ஷித் தலைமைக்கு ஹிட்லருக்குப் போட்டியாக இருந்தான். ஸ்டிராஸர் ஹிம்லரை தனது காரியதரிசியாக வைத்துக்கொண்டான். ஹிம்லர் ரகசிய ஜாபிதாக்களையும், நோட் புஸ்தகங்களையும் வைத்துக்கொள்ள ஆசைப்படுவதை ஸ்டிராஸர் பரிகாசம் செய்வதுண்டு. ஸ்டிராஸரின் சிபார்சின் பேரில் 1929-ல் ஜெர்மன் S. S. போலீஸ் படையின் தலைவனாக ஹிம்லர் நியமிக்கப்பட்டான். அப்போது அப்படையில் 280 பேர்களே இருந்தனர். பிறகு 1934 ஜூன் 30-ல் ஸ்டிராஸர் சாப்பிட்டுக் கொண்டிருக்கும்போது ஹிம்லர் அவனைக் கைதி செய்து காட்டிற்கு அழைத்துச் சென்று கொன்றுவிட்டான்.

அந்தத் தேதியிலிருந்து ஹிம்லரின் பெயர் எங்கும் அடிபட ஆரம்பித்தது. சாதாரண போலீஸ் தலைவனாக இருந்தவன் ஜெர்மன் அரசாங்கத்திற்கே கொலையாளி என்ற ஹோதாவில் முக்கியமாகிவிட்டான். வேறுவிதமாக அவனுக்கு பெயர் கிடையாது. மெதுவாகவும், திடமாகவும் இப்பதவிக்கு வந்துவிட்டான். ரகசிய ஜாபிதாக்களைக் குறிப்பதும், ரகசிய நோட்டுப் புஸ்தகங்களை வைத்துக்கொள்ளுவதும் அவனுடைய வேலைக்கு உபகாரமாக இருந்தன. 1936-ல் ஜெர்மன் போலீஸ் தலைமை பதவியைக் குறித்து இவனுக்கும் கோயரிங்குக்கும் போட்டி ஏற்பட்ட போது இவனே ஜயித்தான். ஏனென்றால் கோயரிங் வெளிப்படையாகவே தனது ஆசைகளை வெளியிட்டு, தற்புகழ்ச்சி கொண்டவனாதலால் ஹிம்லரே விரும்பப்பட்டான்.

இனி ஹிம்லரின் யோசனைகளையும் அவனது செய்கைகளையும் கவனிப்போம். ஹிம்லரின் அந்தரங்க வாழ்க்கை மிக சாதாரணமானது. விஷயங்களில் ஒரு அசிரத்தைக்கொண்டவன். பெரிய குணாதிசயங்கள் பொருந்தினவனல்ல. போக்கிரிகளுக்கு இருக்கவேண்டிய கொடிய ஆசைகளும் கிடையாது. ஹிட்லருக்குள்ள பிடிவாதமும் இல்லை. அமைதியாயும், சரியாகவும் நடக்கக்கூடியவன். கொஞ்சம் மந்த ஸ்வபாவம் பொருந்தியவன். இப்பேற்பட்டவன் தான் பெரிய ராக்ஷஸனாக மாறிவிட்டான்.

இவனுடைய முகம் படம் வரைகிறவனுக்கே சரியாகப் புலப்படாது. ஏனென்றால் ஒரே சதைப்பிடிப்புடன், மொத்தையா இருக்கும். ஓரத்தில் ஒரு கொக்கிபோல் தொங்கும். கண்களில் நிறம் கிடையாது. தூக்கம் சொட்டும். பிறரை நேரில் பார்த்துப் பேசமாட்டான். சரியாகப் பேசவே தெரியாது. பல வருஷங்களாக பொது பிரசங்கங்களே செய்ததில்லை. எழுதவும் தெரியாது. ஏதாவது எழுதினாலும் சம்பந்தமில்லாமல் படிக்க ரசமாக இராது. ஆனால் படிக்காத சிலரைப்போல் ஒரு சிறு கூட்டத்தில் வேடிக்கையாகப் பேசுவான்.



ஹாஸ்யக கதைகளைக பசாலஸமய ஹிட்லருடன் ஒட்டிக்கொண்டான். "இப்பேற்பட்டவன் ஒரு ரகசியப் போலீஸுக்குத் தலைவனாக இருக்கவே முடியாதே" என்று ரிப்பன்டிராபின் பிரிடிஷ் நர்ஸ் சொல்லுகிறாள். ஆகவே பிரகிருதம் வகிக்கும் பதவிக்கு முன்னால் ஹிம்லர், ஹாஸ்யக் கதைகளைச் சொல்லிக்கொண்டு, அடக்கமாக மரியாதையுடன் கூடி, ஸ்திரீகளுடன் பழகக்கூடியவனாக, கொஞ்சம் சாமர்த்தியம் பொருந்தியவனாக இருந்தான். அப்பேற்பட்டவன் ஐரோப்பாவிலேயே முதல்தர கொலையாளியாகிவிட்டான்.

இதுவரை இவன் கொன்றிருக்கிறவர்களின் கணக்கு எத்தனையோ. டார்கிமடா, ராபஸ்பியரி போன்ற கொலையாளிகள் இவனுக்கு சமமாகவே ஆகமுடியாது. இவ்விதம் கொலையை நடத்துவதற்காக நவீன முறையில் மிகக்கடுமையான முறைகளைச்சரியாகப் படித்துவைத்துக்கொண்டிருக்கிறான். இம்முறைகளைத் தயாரித்ததும் இவன்தான். உபயோகிப்பதும் இவன்தான். 5,00,000 தேற்சிபெற்ற கொலையாளிகளை S. S. படை, ரகசியப் போலீஸில் சேர்த்திருக்கிறான். இந்த சமயத்தில் ஹிட்லரைக் காட்டிலும்கூட ஐரோப்பாவில் அதிக சக்திவாய்ந்தவனாக விளங்குகிறான். ஏனென்றால் ஹிட்லரையும் சமயம் வந்தால் இவன் விலக்கிவிடலாம்.

இப்போது இவனுக்கு 42 வயதாகிறது. இதுவரை அவன் செய்ததெல்லாம் சாதாரணம்தானாம். இனித்தான் அவனுடைய வேலை பாக்கியிருக்கிறதாம். ஹிட்லர் ஒரு சகாப்தத்தை ஆரம்பிக்கப்போவதாக அமைதியாகச் சொல்லும்போது, ஹிம்லர், 20, 30 ஆயிரம் வருஷங்கள் வரை இருக்கக்கூடிய புதிய உலக திட்டத்திற்கு அஸ்திவாரத்தைப் போட்டுவிட்டதாகச் சொல்லிக்கொள்ளுகிறான். "இந்த மனிதவர்க்கம் அழியப்போகிறது. இனி இரண்டுவிதமாக இது உண்டாகப்போகிறது" என்றும் அதை ஹிம்லர் தான் உண்டாக்கப்போவதாயும் சொல்லுகிறானாம். யூதர்களை அடியோடு ஒழித்து, ஐரோப்பாவிலேயே பல நாடுகளை அழிக்கப்போகிறானாம். உதாரணமாக ஆரம்பத்தில் போலீஷ்காரர்களையும் செக்கர்களையும் காண்பிக்கிறான். ஜெர்மனியை அப்படியே முன்னேற்றத்திற்குக் கொண்டுவருவதில்கூட அவனுக்கு இஷ்டமில்லை. "ஜெர்மனியும் கலந்து யார் மிஞ்சுவதற்கு லாயக்கோ அவர்களைத்தான் மீதப்படுத்தப் போவதாயும்" ஒருதடவை எழுதினான். S.S. படை ஒரு கருவியாகமட்டில் இல்லை. அதுதான் அதிகாரம் வகிக்கக்கூடியதாயும் புதிய ஜாதியாயும் கருதுகிறான். இதை ஆதாரமாகக்கொண்டுதான் அடுத்த மனிதவர்க்கத்தை உண்டாக்கப்போகிறானாம்.

இப்பேற்பட்டவன் தலை கொழுத்துத்திரிகிறான். ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டிற்கு தினம் சென்று பலரைக்கொன்று திரும்புகிறான். ஐரோப்பாவே இவனுக்குட்பட்டு அலறுகிறது. இப்பேற்பட்ட அரக்கன் இதற்குமுன் தோன்றியதே இல்லை. ஆனால் அரக்கனுடைய பூர்ண குணங்கள் இவனுக்கும் கிடையாது. ஜீவனற்ற, கடவுளற்ற, குணங்களற்ற ஒரு மிருகம்தான்.

---

## ஜெர்மன் லுப்ட்வாபி விமானப்படை அடைபட்டுள்ளது.

### நேசதேசப்பைடர் விமானத் தாக்குதல்களினால் கோயரிங் போட்ட திட்டங்கள் பாழானவிதம்.

(Illustrated weekly of India—பத்திரிகையிலிருந்து எடுக்கப்பட்டது).

ஒவ்வொரு நாளும் பிரிடிஷ் பைடர் விமானங்கள் பிரிடனிலிருந்து கிளம்பி வட பிரான்ஸ், பெல்ஜியம், ஹாலந்து முதலிய இடங்களிலுள்ள ஜெர்மன் ராணுவ லக்ஷியங்களைத் தாக்கிவருகின்றன. மற்ற போர்முனைகளில் பிரிடிஷ் பைடர் விமானங்கள் ஈடுபட்டிருந்தாலும், ஐரோப்பாவிற்குச் சென்று தாக்கிவருவதிலும் ஏராளமாக ஈடுபட்டிருக்கின்றன. சீதோஷ்ண நிலை பாதகமாக இருந்தாலும்கூட இவ்விமானங்கள் படையெடுப்பை நிறுத்துவதில்லை. பிரிடிஷ் கப்பற்படை எவ்வளவு சகஜமாக ஜெர்மன் கப்பல்களைத் தாக்கிவருகின்றனவோ, அவ்வளவு சகஜமாகவே எதிரிநாட்டில் விமானத்தாக்குதல்கள் செய்யப்படுகின்றன.

பெரிய பாம்பர் விமானங்கள் செய்துவரும் தாக்குதலைப்போல பைடர் விமானங்களின் தாக்குதல் அதிக ஆடம்பரங்களுடன் இருப்பதில்லை. ஏனென்றால் பைடர் விமானத் தாக்குதல்களில் கப்பல் கட்டும் துறைகள் எரியமாட்டாது. தொழிற்சாலைகள் அழிக்கப்படமாட்டாது. எங்கும் ஒரே புகைமண்டலமாக சூழ்ந்து விஸ்தாரமான பிரதேசத்தில் எச்சரிக்கையாக இருக்கமாட்டாது. இருந்தபோதிலும் பத்திரிகைகளில் சுருக்கமாகக்கண்டிருக்கும் விஷயங்களைவிட இன்னும் அதிகமான சேதத்தை இப்பைடர் விமானங்கள் விளைவித்துவருகின்றன. பல நூற்றுக்கணக்கான மைல்களுக்கப்பாலுள்ள பிரதேசங்களில் அவை செல்லுகின்றன. எங்கேனும் ஓரிடத்தில் ஒரு தொழிற்சாலையோ, அல்லது ஒரு விமானக் கூடமோ தென்பட்டால் அப்பைடர் விமானங்கள் பீரங்கிகளைப் பிரயோகித்து அதைத் தகர்க்கின்றன. கியாஸ் சேகரிக்கப்பட்டிருக்கும் பெரிய பாண்டங்கள் விமானத்தாக்குதலால் சல்லடைக் கண்களாகத் துளைத்துவிடப்படுகின்றன. முக்கியமாக பல இடங்களிலுள்ள ராணுவ முகாம்கள் யந்திர பீரங்கிகளால் தாக்கப்படுகின்றன. அதனால் அவைகளிலுள்ளோருக்கு பலத்த சேதம் நேரிடுகிறது. இவ்விமானத்தாக்குதலால் நதியில் செல்லும் படகுகள் பல சேதமாகின்றன. மின்சார உற்பத்திசாலைகளும் முக்கிய இலக்குகளாகின்றன. இருப்புப் பாதைகள் துண்டிக்கப்பட்டு ரயில் வண்டிகள் பாதைகளிலிருந்து மாறிவிடுகின்றன.

சில பிரிடிஷ் ஹரிகேன் விமானங்கள், பைடர் விமானத்தின் அலுவல்களையும், பாம்பர் விமானத்தின் அலுவல்களையும் சேர்த்துச்செய்கின்றன. விசேஷ லக்ஷியங்களைத் தாக்கும் போதெல்லாம் கொஞ்ச வெடிகுண்டு சுமைகளைத் தூக்கிச்செல்லுகின்றன. சுரங்க வாரிக் கப்பல்கள் அல்லது பெரிய கப்பல்கள் இவைகளின்பேரில் சாதாரணமாய் பீரங்கிகளைப் பிரயோகிப்பதினால் அவைகள் மூழ்கடிக்கப்படமாட்டா. அவைகளை எங்கேயாகிலும் கண்டால் இவ்விமானங்கள் தாழப்பறந்து இடிகுண்டு தாக்குதலைப் போல் வெடிகுண்டுகளைக் கப்பல்களுக்குள் போட்டுவிட்டு உயரப்பறந்துவிடும். உடனே அக்கப்பல் எரிய ஆரம்பித்துவிடும். சில சமயங்களில் அவைகளின் அடி பாகங்களில் துவாரம் ஏற்பட்டு அவைகள் மூழ்கிவிட நேரிடும்.

இவ்விதம் பைடர் விமானங்கள் நடத்தும் தாக்குதல்கள் பிரிட்டனுக்கு ராணுவ இலாகா சம்பந்தப்பட்டமட்டில் முக்கியமான பயனைக் கொடுக்கின்றன. எப்படியிருந்தபோதிலும் பாம்பர் விமானத்தாக்குதலுக்கு இவை ஈடாகாது. மேற்கு பாகத்தில் ஜெர்மனி ஆக்கிரமித்த நாடுகளில் கோயரிங் தன் பைடர் விமானப் படைப்பகுதியில் பெரும்பாகத்தை நிறுத்திவைக்க வேண்டி, முக்கியமாக பிரிடிஷ் பைடர் விமானங்கள் தொடர்ந்தாற்போல் பகற்காலத்தாக்குதல்களை நடத்துகின்றன.

இப்பொழுது அதிமும்முரமாக ருஷ்யாவில் யுத்தம் நடந்துவருவதில் ஜெர்மனிக்கு ஏராளமான பைடர் விமானங்களையும், பாம்புர் விமானங்களையும் ஈடுபடுத்தவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. ஜெர்மனிக்குக் கிழக்குப்போர் முனையிலிருந்து அதன் பாம்பர் விமானங்களை வேறிடங்களுக்குக் கொண்டுவருவதற்கு முடியாமல் இருப்பதின் காரணமாக பிரிடிஷார் 1,000 பாம்பர் விமானங்களைக்கொண்டு பெரிய ஜெர்மன் தொழிற்சாலைகளைத் தாக்கி யாதொரு எதிர்ப்புமின்றி திரும்பச்செல்லுகின்றன. இன்னும் ஜெர்மனி அதன் பைடர் விமானங்களையும் ருஷ்யப்போர்முனையில் ஈடுபடுத்த விரும்புகிறது. ஆனால் அது முடியாத காரியமாக இருக்கிறது. ஏனென்றால் ஜெர்மனியிலுள்ள துறைமுகங்களையும், தொழிற்சாலைகளையும் தாக்கவரும் பிரிடிஷ் விமானப்படையைத் தடுப்பதற்கு ஜெர்மனி தன் பைடர் விமானங்களை அங்கு நிறுத்திவைக்கவேண்டியிருக்கிறது. இதைத்தவிர ஜெர்மனி ஆக்கிரமித்த மேற்கு ஐரோப்பா பூராவிலும் பாதுகாப்புக்காக ஏராளமான பைடர் விமானங்களை வைக்கவேண்டியிருக்கிறது.

ஆகையால் பிரிடிஷ் விமானத் தாக்குதல்களினால் கோயரிங் பைடர் விமானப் படைப் பகுதியில் சுமார் ஒரு பாதியை மேற்கு ஐரோப்பாவிலேயே வைத்திருக்கிறான் என்று தெரிகிறது. பிரிடிஷ் ஸ்பிட் பையர், ஹரிகேன் விமானப்பகுதிகள் ஜெர்மன் துருப்புகள், விமானக்கூடங்கள், ரயில் வண்டிகள், எண்ணெய் ஸப்ளை



செய்யுமிடங்கள், கப்பல்கள் முதலியவைகளை வெடிகுண்டுகளைக் கொண்டும், யந்திர பீரங்கிகளைக் கொண்டும் தாக்குகின்றன. இவ்வித தாக்குதல்களைத் தடுப்பதற்கு ஜெர்மன் பைடர் விமானங்கள் திரும்பத்தாக்கி அச்சண்டையில் அழிபடவேண்டும் என்ற நோக்கத்துடன்தான் இம்மாதிரி நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்படுகின்றன.

அந்த சமயங்களில் பிரிடிஷ் விமானங்களை எந்தெந்த சந்தர்ப்பங்களில் சண்டையில்லாமல் தவிர்க்கக்கூடுமோ, அவ்வப்போது எதிர்க்காமல் இருக்கும்படி ஜெர்மன் பைடர் விமானங்களுக்கு உத்தரவு கொடுக்கப்பட்டிருக்கிறது. இது கோழைத்தனத்தினால் அன்று. லுப்ட்வாபி விமானப்படையில் போதுமான விமானங்கள் இல்லாததுதான் இதற்குக் காரணம். மேலும் பிரிடிஷ் பைடர் விமானங்கள் ஜெர்மனியிலுள்ள விமானங்களில் பறந்துசெல்லும்போது, ஜெர்மன் பைடர் விமானங்களுக்கு அவைகளை எதிர்த்துத் தாக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது அல்லது அவைகள் தரையிலேயே அழிக்கப்படுகின்றன. பிரிடிஷ் பைடர் விமானங்கள் தாழப்பறந்து ஜெர்மன் தொழிற்சாலைகளின் ஜன்னல்களுக்குள் வெடிகுண்டுகளைப் போடுகின்றன. இவ்விதம் தொழிற்சாலைகளுக்குச் சொற்ப தூரத்தில் பறந்துவரும் விமானங்களை ஜெர்மன் பைடர் விமானங்கள் தாக்காதபோனால், அதிக விலையுயர்ந்த யந்திரங்கள் பூராவும் அழிந்துபோக நேரிடும். இவ்விதமாக பிரிடிஷ் பைடர் விமானங்கள் ஜெர்மன் பைடர் விமானங்களைத் தாக்குதலில் ஈடுபடுத்தி அவைகளில் பலவற்றை அழிக்கின்றன.

லுப்ட்வாபி விமானப்பகுதியிலடங்கிய எவ்வளவு விமானங்கள் பிரான்ஸ், ஹாலந்து, பெல்ஜியம் இவ்வூர்களில் நிறுத்திவைக்கப்பட்டிருக்கின்றனவென்பதை பிரிடிஷ் விமானத்தாக்குதல்களைப்பற்றிய ரிகார்டுகளைப் பார்ப்பதிலிருந்து தெரியவரும். ஒரு மாத காலத்திற்குள் ஜெர்மனி ஆக்கிரமித்த நாடுகளில் சராசரி தினம் இரண்டு தாக்குதல்கள் வீதம் நமது பைடர் விமானப்பகுதி 57 தடவைகளுக்குக் குறையாமல் பகற்காலத்தில் தாக்குதலை நடத்தியிருக்கிறது. அவ்விதம் நடத்திய 4 தாக்குதல்களில் ஒவ்வொரு தடவையிலும் 200 பிரிடிஷ் விமானங்களுக்கு மேலேயே கலந்துகொண்டிருக்கின்றன. அவ்விமானங்களை எதிர்த்து தாக்காமலிருப்பதற்கு ஜெர்மானியர் எவ்வளவு பிரயத்தனப்பட்டாலும், அந்த மாதத்தில் மட்டில் லுப்ட்வாபிக்கு 42 விமானங்கள் சேதமாயின.

## இரவில் சென்று தாக்கும் பைடர் விமானங்கள்.

ஜெர்மனி ஆக்கிரமித்த நாடுகளில் பகற்காலங்களில்தான் விமானத்தாக்குதல்கள் நேரும் என்பதில்லை. பகற்காலத்தில் தாக்கும் பைடர் விமானங்கள் ஜெர்மனி ஆக்கிரமித்த பிரதேசங்களில் வெடிகுண்டுகளைப் போட்டுவிட்டு மசண்டைவேளையில் திரும்பிவரும்பொழுது அநேகமாக தங்கள் தோழர்களான இராக்கால பைடர் விமானங்களைச் சந்திப்பதுமுண்டு. இராக்கால பைடர் விமானங்கள் எதிரிகளின் நடவடிக்கைகளை மாற்ற சூழ்ச்சி செய்கின்றன. அவைகள் தனியாகத் தாக்கச்செல்வதில்லை. ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பாலுள்ள ரூர் பிரதேசத்திலும், ஜெர்மனியின் கடற்கரைப் பிரதேசத்திலும் வெடிகுண்டுகள் போட்டுத் தாக்கும் பாம்பர் விமானங்களுக்கு உதவியாக இவை ஒத்துழைக்கின்றன.

பிரிடிஷ் பாம்பர் விமானங்கள் ஜெர்மன் பிரதேசத்தில் தாக்குதல்களை நடத்திவிட்டு திரும்பிவரும்பொழுது அவைகளைத் தாக்குவதற்காக ஜெர்மானியர் அநேக பைடர் விமானங்களை பெல்ஜியம் வடபிரான்ஸ் இவைகளிலுள்ள விமான நிலயங்களில் வைத்திருக்கின்றனர். திரும்பிப்போகும்போது தடுமாறிக்கொண்டு செல்லும் சில பிரிடிஷ் விமானங்களைத் தாக்குவதற்கும், ஏற்கனவே சேதமடைந்த, அல்லது முடமாக்கப்பட்ட விமானங்களை அடியோடு அழிக்கவும்தான் ஜெர்மன் பைடர் விமானங்கள் தயாராக இருக்கின்றன. இதன் காரணமாக பிரிடிஷ் பாம்பர் விமானங்கள் தங்கள் சொந்த ஊரை நோக்கி திரும்பிச்செல்லும்பொழுது அவைகளை பத்திரமாகக் கொண்டு சேர்ப்பதற்கு பைடர் விமானங்கள் வேண்டிய நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளுகின்றன. ஜெர்மன் விமானங்கள் தரையிலிருந்து கிளம்பியவுடன் நமது பைடர் விமானப்படையுடன் போர் செய்யும்படி நிர்ப்பந்தப்படுத்தியும், பாம்பர் விமானங்கள் இருக்குமிடங்களிலிருந்து எதிரி விமா

னங்களை வெகு துலைக்கப்பால் இழுத்துச்சென்றும் நமது பாம்பர்கள் ஜெய கோஷத்துடன் பத்திரமாய் ஊர் போய்ச்சேர உதவிசெய்கின்றன.

ஜெர்மானியருக்கு ஏற்கனவே பைடர் விமானங்கள் மிகக்குறைவு. விமானச் சண்டைகளில் அழிந்துபோன விமானங்களுக்கு ஈடுசெய்ய ஜெர்மானியரால் முடியவில்லை. ஏற்கனவேயே அவர்களின் விமான உற்பத்தி உன்னத நிலையை அடைந்துவிட்டது. இப்பொழுது உற்பத்தி குறைவுதான்.


## 'வி' டயரி-1943.

(குறிப்பு புஸ்தகம்).

லினன் ரூ. 1—4—0; ஷீப்ஸ்கின் ரூ. 1—8—0;

மொராக்கோ ரூ. 2—0—0.

லாபம் யுத்தநிதிக்குச் சேர்க்கப்படும்.

கீழ்கண்ட விலாசத்திலிருந்து வாங்கிக்கொள்ளலாம்.—

காரியதரிசி,

தேசீய யுத்த முன்னணி நிலயம்,

புதுக்கோட்டை (தென் இந்தியா).


## பிரஸங்க நிகழ்ச்சி முறை.

### பிரஸங்கம் 129. (5-வது பிரிவு)

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 16- 1-43 | முனிஸிபல் ஆபீஸ்... | மாலை | 6.00 | 20-1-43 | ராணி பெண்பாடசாலை. | காலை | 10.15 |
| 17- 1-43 | திருவரங்குளம் ... | ,, | 7.00 | ,, | காலேஜ் A இங்கிலீஷ் | ,, | 10.15 |
| ,, | வம்பன் ... | ,, | 7.30 | ,, | காலேஜ் B தமிழ் ... | ,, | 10.15 |
| 18- 1-43 | திருமயம் ... | ,, | 7.00 | ,, | பொ. புதுப்பட்டி ... | மாலை | 7.00 |
| ,, | மேலூர் ... | ,, | 7.30 | ,, | வேந்தம்பட்டி ... | ,, | 7.30 |
| 19- 1-43 | குளவாய்ப்பட்டி ... | ,, | 7.00 | 21- 1-43 | பள்ளிவாசல் ... | ,, | 7.00 |
| ,, | இலைப்பூர் தெற்கு ... | ,, | 7.30 | ,, | பில்லமங்கலம் ... | ,, | 7.30 |
| 20- 1-43 | C.S.M. பள்ளிக்கூடம். | காலை | 10.00 | 22- 1-43 | பூசத்துறை ... | ,, | 5.00 |

### பிரஸங்கம் 130. (1-வது பிரிவு:)

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 23- 1-43 | முனிஸிபல் ஆபீஸ்... | மாலை | 7.45 | 27-1-43 | ராணி பெண்பாடசாலை. | காலை | 10.15 |
| 24- 1-43 | பூவரசகுடி ... | ,, | 7.00 | ,, | காலேஜ் A ஆங்கிலம் | ,, | 10.15 |
| ,, | வேங்கடகுளம் ... | ,, | 7.30 | ,, | காலேஜ் B தமிழ்... | ,, | 10.15 |
| 25- 1-43 | பெருங்களூர் ... | ,, | 7.00 | ,, | மிரட்டுநிலை ... | மாலை | 7.00 |
| ,, | ஆதனக்கோட்டை... | ,, | 7.30 | ,, | அரிமளம் ... | ,, | 7.30 |
| 26- 1-43 | கீரனூர் ... | ,, | 7.00 | 28- 1-43 | பூங்குடி ... | ,, | 7.00 |
| ,, | நாஞ்சூர் ... | ,, | 7.30 | ,, | சததியமங்கலம் ... | ,, | 7.30 |
| 27- 1-43 | C. S. M. பள்ளிக் கூடம். | காலை | 10.00 | 29- 1-43 | உடையாளிப்பட்டி | ,, | 7.00 |
| | | | | ,, | கிள்ளுகோட்டை ... | ,, | 7.30 |

### யுத்தத்திற்கு ஆள் சேர்த்தல்—விளம்பரம்—மாலை 4-மணி.

| | | | |
|---|---|---|---|
| 16— 1—43 | வெட்டம்விடுதி. | 23— 1—43 | பொன்னமராவதி. |
| 17— 1—43 | எம்பல். | 24— 1—43 | கொடும்பாளூர். |
| 18— 1—43 | கீரனூர். | 25— 1—43 | அரிமளம். |
| 19— 1—43 | வடகாடு. | 26— 1—43 | பொரம்பூர். |
| 20— 1—43 | ராயவரம். | 27— 1—43 | காரம்பக்குடி. |
| 21— 1—43 | குழிபிறை. | 28— 1—43 | கீழாநிலை. |
| 22— 1—43 | பூசத்துறை. | 29— 1—43 | புதுக்கோட்டை. |

Sri Brihadamba State Press, Pudukkottai. 2,000—19-1-43.


# புதுக்கோட்டை ஸமஸ்தான
# தேசீய யுத்த முன்னணி நிலயம்.

பிரசுரம்] 1943-ம் வருஷம் ஜனவரி மீ 23உ [ந. 130


பிரஸங்கம் CXXX.

## 1942—1943.

### மிஸ்ட்டர் அட்லியின் விமர்சனம்.

கடந்த இரண்டு மாதங்களாக வட ஆபிரிக்காவில் நேசதேசத் துருப்புகள் இறங்கியதைத் தவிர வேறு சம்பவங்கள் இல்லாதபோதிலும், 1942-ம் வருஷத்தில் நமக்குக் கிடைத்துள்ள வெற்றிகள் மிகத் திருப்திகரமானவை. இதைக்கொண்டு 1943-லும் நமக்கு வெற்றிகள் கிடைக்குமென்று எதிர்பார்ப்பது பொருத்தமாகும்.

ஒவ்வொரு போரரங்கத்திலும் முன்னேறித் தாக்கும் முறை நேசதேசங்களின் கைக்கு மாறிவிட்டது. இந்த யுத்தத்தைப்பற்றி நாம் செய்யும் விமர்சனங்களில் எல்லா ருஷ்யச் சைனிங்கள் அடைந்த வெற்றிகளுக்கு முதல் ஸ்தானம் கொடுக்கப் படவேண்டும்.

கடந்த நவம்பர் மாதம் 11-ம்தேதி மிஸ்ட்டர் சர்ச்சில் செய்த விமர்சனத்தில் ஸ்டாலின்கிராடுக்கு ஜெர்மன் படையின் ஆபத்து இருப்பதாகச் சொன்னார். அதற்கு 9 நாட்கள் கிரமித்து ருஷ்ய முன்னேற்றம் ஆரம்பிக்கப்பட்டது. அது முதல் ருஷ்யர்கள் விடாமல் தாக்கி வருகின்றனர்.

ஸ்டாலின்கிராட்டிலுள்ள படைக்கு உதவி அனுப்பச்செய்யப்பட்ட ஜெர்மன் பிரயத்தனங்கள் எல்லாம் வீணாயின. அங்குள்ள ஜெர்மன் படை தப்பி ஓட முடியாமல் அங்கேயே மடியுமென்று காணப்படுகிறது. இதற்கிடையில் ருஷ்யர்கள் ரோஸ்டோவை நோக்கி முன்னேறி காகஸஸிலுள்ள ஜெர்மன் படையையும் விரட்டப்பட்டது. லெனின்கிராடு, வெலிகியுலூகி, வாரனேஷ் முதலிய இடங்களிலும் ருஷ்யர்கள் தளராமல் தாக்கிவருகின்றனர்.

இவ்விதம் இந்த மாரிகாலத்தில் செய்யப்படும் இந்த ருஷ்யத் தாக்குதல்கள் விசேஷப் புகழை அடையும்.

வட ஆபிரிக்காவில் ரோமல் மறுபடி பின்வாங்க ஆரம்பித்துவிட்டான். நமது படைகளும் மிஸுராடாவிற்குச் சென்றுவிட்டன. [எட்டாவது சைனியம் ட்ரிபோலிக்கு வந்துவிட்டது. ட்ரிபோலி வசமாகும் தருவாயில் இருக்கிறது. பத்திராதிபர்].

வட ஆபிரிக்காவில் நமது லக்ஷியம் எதிரிகளைப் பூரா அழிப்பதுதான். ஆகவே இனிமேல் எதிரிக்கு எங்கும் ஓடமுடியாமல் அகப்பட்டுக்கொள்ளும் நிலைமை நேரிடும்.

### பூரண ஒத்துழைப்பு.

வட ஆபிரிக்காவில் ஜெனரல் இஸன்ஹோவரின் கீழ் அமெரிக்கர்கள், பிரெஞ்சு, பிரிடிஷ் யாவரும் பூரணமாக ஒத்துழைக்கின்றனர்.

சில வாரங்களுக்குமுன் ஆபத்திலிருந்த மால்டாவிற்கு இப்பொழுது ஸப்ளை கள் சென்றுவிட்டன. அதுவும் எதிரிக்குத் தொந்தரவை உண்டுபண்ணுகிறது. பிரெஞ்சு ஸிவில் அதிகாரிகளும் டுனிஸியாவிலுள்ள நமது படைகளுடன் ஒத்துழைக்கின்றனர்.

வட ஆபிரிக்காவில் பிரிடனுக்கும், அமெரிக்காவிற்கும் ஏதோ வேற்றுமைப் பட்ட அபிப்பிராயங்கள் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. பிரெஞ்சுக்காரர்களைப் பற்றி பிரிடனுக்கும், அமெரிக்காவிற்கும் மாறுபட்ட அபிப்பிராயம் இருப்பது சகஜம்தான். ஆனால் இந்த மாறுபாட்டைப் பிரமாதப்படுத்துவது தவறாகும். பிரேட்டன் அரசாங்கத்தோடு அமெரிக்க அரசாங்கம் முதலில் சிநேகப்பான்மையாக நடந்துகொண்டதை பிரிடிஷ் அரசாங்கம் பூரணமாக அங்கீகரித்தது.

அமெரிக்கா அப்பொழுது செய்துகொண்ட ஒப்பந்தத்தின் பயனாகத்தான் வட ஆபிரிக்காவில் அமெரிக்கப் படைகள் சுலபமாக இறங்கமுடிந்தது.

ஐஸன்ஹோவருக்குக் கீழுள்ள பிரிடிஷ், அமெரிக்க அதிகாரிகளிடையே ஒத்துழைப்பு காணப்படுகிறது. எப்படியாவது அச்சுநாட்டுக்கு விரோதமாகப் பிரான்ஸை விடுவித்து, பிரெஞ்சு மக்களிடையே ஒற்றுமையை ஏற்படுத்துவதுதான் இந்த இரண்டு அரசாங்கங்களின் லக்ஷியமாக இருக்கிறது.

இதற்கு உதவுவதற்காகத்தான் வட ஆபிரிக்காவில் மிஸ்ட்டர் மாக்மிலன் மந்திரியாக நியமிக்கப்பட்டிருக்கிறான்.

பிரான்ஸின் புகழை நிலைநாட்டும் விஷயத்தில் அற்ப விஷயங்களையும், சொந்த தகராறுகளையும் மிகைப்படுத்தக்கூடாது.

தூரக்கிழக்கு.

இங்குள்ள ஆபத்துக்களைக் குறைவாகக்கூறுவது தவறாகும். ஆனால் "ஒரு வருஷத்திற்கு முன்னிருந்ததைவிட இப்பொதுள்ள நிலைமை அதிகமாக மாறுபாடு அடைந்திருக்கிறது". பர்மாவில் நேசதேசங்கள் முன்னேற்றப் போரைச் செய்கின்றன. ரபாலில் சேமிக்கப்பட்டுள்ள ஜப்பானியப் படைகளைத் தடுக்க எல்லாவித முயற்சிகளும் எடுக்கப்பட்டுவருகின்றன.

நவம்பர், டிஸம்பரில் பிரிடிஷ் பாம்பர்கள் ஒவ்வொரு நாளும் எதிரி நாடுகளைத் தாக்கியிருக்கின்றன. எஸ்ஸன், லோரியன்ட், பெர்லின்போன்ற முக்கிய லக்ஷியங்கள் தாக்கப்பட்டு அதன்மூலம் எதிரியின் யுத்த சக்தி குறைக்கப்படும்.

இவ்விதமாக 1943-ல் இதர நேச நாடுகளுடைய ஒத்துழைப்பின் பேரில் எதிரியை தரை, கடல், விமானம் மூன்றிலும் பூரண பலத்துடன் தாக்குவதென பிரிடிஷ் அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது.

---

## வார யுத்தச் செய்திகள்.

---

### 16—1—43-லிருந்து 22—1—43-வரை.

ருஷ்யா.—வாரனேஷுக்கும் காகஸுக்கும் இடையில் பல் வேறு முனைகளில் போர்புரிந்துவரும் ருஷ்யப்படைகள் ஒன்றை ஒன்று அணுகி வருகின்றன. மத்திய காகஸிலுள்ள கால்மக் பகுதியும், கொடல்னிகோவிலுள்ள பகுதியும் ஒன்று சேர்ந்தன. பிறகு இவை ஸிமலியன்ஸ்காயாவிலுள்ள படைகளுடனும் சேர்ந்து கொண்டன. இவ்விதமாக மத்திய டான்முனை, டானெட்ஸ் முனை, டான் கீழ்பகுதி, டானெட்ஸ், ஸால்நதிப் பகுதிகள் முதலிய இடங்களிலுள்ள ருஷ்யச் சைனியங்கள் ஒன்றுபட்டு நின்றுகொண்டிருக்கின்றன. ஸால் நதியிலிருந்து ஜிமோவ்னிகியிலுள்ள ருஷ்யச் சைனியமும், இதற்குச் சரியாக மனியிச் நதிக்கரையில் கால்மக்கிலிருந்து டிவோனி, வடகாகஸஸ் வரையிலும் இச்சைனியங்கள் இருக்கின்றன. இவ்விதமாக வாரனேஷிலிருந்து வட காகஸஸ் வரையிலுமுள்ள போர்முனையில் ஈடுபட்டிருக்கின்றன.



காகஸஸில்.—மினரல்னிவோடி ஜில்லாவில் ஸ்பாவிற்கு அப்பால் ருஷ்யர்கள் முன்னேறியிருக்கின்றனர். ஜனவரி 13, குமகோர்ஸ்கி (Kumagorsky), ஸுவரோவ்ஸ்க் (Suvurovsk) என்ற இந்த இரண்டு இடங்களையும் பிடித்தனர். முறையே 8 மைல் தூரத்திலும் 16 மைல் தூரத்திலும் இருக்கின்றன. பிறகு குரின்னி பிடாகோடாணுக், அலெக்ஸாண்டிரோஸ்கோ முதலியவைகளும் பிடிக்கப் பட்டன. காகஸஸ் அடிவாரத்தில் மெய்காப், ஸால்ஸ்கை நோக்கி தீவ்ரமாக இருக்கிறது. (ஸால்ஸ்கும் விழுந்து விட்டதாக சமீபத்தில் வந்த ரேடியோ செய்தி கூறுகிறது. பத்திராதிபர்).

ஸ்டாலின்கிராடிலுள்ள ஜெர்மன் படைகள் வெகு சீக்கிரத்திலேயே அழிந்து விடும். அங்கிருந்த 2,00,000 அச்சுப் படையில் 80,000 பேர் தானிருக்கின்றனர். சரணடையும்படி விடுவித்த ருஷ்ய எச்சரிக்கைக்கு ஜெர்மானியர் இணங்காமல் பசி, தாகம் முதலியவைகளால் துன்பப்பட்டு வருகின்றனர். நகரின் மேற்குப் பக்கத்தில் ருஷ்யத் துருப்புகள் உட்புகுந்தன.

வாரனேஷுக்குத் தெற்கில் டான் நதியில் இருந்த படைகள் ரோஸ்டவ்—வாரனேஷ் இருப்புப் பாதையை குழுபோஸ் காவா என்ற இடத்தில் பிளந்தது. லிட்விகோவ்கா, மில்லரோவோ, அலெக்ஸிஸ்கா, கோரோடோயாக், போடோகோர்னயா, ரோஸோஷ், வெலிகியுலுகி, உரஜாகோபலியா—கலிட்வா முதலியவைகள் பிடிபட்டன. இவைகளில் மூன்றுதான் முக்கியமானவை. வெலுகியுலுகியும் ரோஸோஷும் ரயில்வே நகரங்கள். கமன்ஸக் என்பது ரோஸ்டவிற்குச் செல்லும் ரஸ்தாவில் மிக முக்கியமானது.

அலெக்ஸாவ்காவிலிருந்து ஆரம்பிக்கப்பட்ட புதிய ருஷ்ய முன்னேற்றம் வாரனேஷுக்கு அருகிலுள்ள ஜெர்மானியருக்குப் பயத்தை உண்டாக்கியிருக்கிறது. கர்ஸ்க் என்ற முக்கிய ஜெர்மன் தளமும் நெருங்கப்பட்டது.

இவ்வாரத்தில் லெனின்கிராட்டில் முற்றுகை நீங்கியதே முக்கிய சம்பவமாகும். நீவா நதிப் பக்கத்திலிருந்தும் லடோகா ஏரிப்பக்கத்திலிருந்தும் ருஷ்யத் தாக்குதல் ஆரம்பமாயிற்று. ஒரு வாரத்திற்குப் பிறகு நீவா நதி கடக்கப்பட்டு ஸ்லுஸல்பர்க் பிடிபட்டது. இந்த இரண்டு படைகளும் ஒன்று சேர்ந்து ஜனவரி 18ல லெனின்கிராட்டைத் தாக்கச் சென்றது. அந்த சமயத்தில் நேர்ந்த சம்பவங்கள் வெகுவாக வர்ணிக்கப்பட்டிருக்கின்றன. முன்பின் தெரியாத பலர் ஒருவரையொருவர் தழுவிக் கொண்டனர். சிப்பாய்களைத் தொழிற்சாலை வேலைக்காரர்கள் வழிமறித்துக் கொண்டாடினார்கள். கடந்த மாரி காலத்தில் ஆயிரக் கணக்கில் பசி முதலிய பிணியால் ருஷ்யர்கள் இறந்தனர். இவ்வருஷம் மீதியுள்ளோர் காப்பாற்றப்பட்டனர். உணவு ரயில் வண்டிகளில் வந்து சேருகிறது. இதற்காக ஜெனரல் ஜுகோ மார்ஷல் பதவி கொடுக்கப்பட்டார்.

டிரிபோலிடானியா.—ரோமலை மான்ட்காமரி ஜனவரி 15ல மீண்டும் துரத்த ஆரம்பித்திருக்கிறார். தெற்கிலிருந்து டாங்கிகள் விரட்டுகின்றன. அதே சமயத்தில் பீரட்டைச் சுற்றியிருந்த பிரிடிஷ் காலாட் படையும், பீரங்கிப் படையும் ஒன்று சேர்ந்து முன்னேறின. பக்கவட்டுத் தாக்குதலால் மான்ட்காமரி தாக்குவதால் எதிரிகள் தட்டுத் தடுமாறி ஓடுகின்றனர். சண்டை இன்னும் நடைபெறுகிறது. பீரட், ஸெடிடா பிர்டாலா, டவரகாபிர்டுவான்—பின் உலிட், மிஸுரரடா, சாரிபால்டி, ஜீடன் முதலிய இடங்களிலிருந்து ஓட்டம் பிடித்து விட்டான். டிரிபோலிக்கு வசமாகும் தருவாயில் இருக்கிறது.

ஸ்வதந்திர பிரெஞ்சுப் படைகள் சாட் பிரதேசத்திலிருந்து முன்னேறி டுனிஸியாவிலுள்ள பிரெஞ்சுப் படைகளுடனும், 8-ம் படையுடனும் சேர்ந்து கொண்டது. லிபியப் பாலைவனத்தில் பிரெஞ்சு ஒட்டகப் படை இரண்டு மலைக் கணவாய்களைப் பிடித்தன.

டுனிஸியா.—கெய்ர்வானுக்கு வடமேற்கே 20-மைலுக்கப்பாலுள்ள ஜெபெல் பௌட்-அபூஸ் (Djebel Boud-Abous) பிரதேசத்தில் நேசதேசத் துருப்புகள்

பல முக்கியமான இடங்களைக் கைப்பற்றியிருக்கின்றன. கவசம்பூண்ட காலாட்படைகள் நடத்திய சண்டையில் பான் அராடா கான்பிலியாட் (Bou Arada-Coubelliat) பிரதேசத்தில் எதிரி சற்று முன்னேறியிருக்கிறான்.

**பர்மா.**—ராதிடாங்கைக் கைப்பற்ற பலமாக சண்டை நடக்கிறது. அதற்கருகாமையிலுள்ள மூன்று இடங்களை ஜப்பானியர் விடாமல் பிடிவாதமாகச் சண்டை செய்கிறார்கள். இருந்தாலும் டெம்பிள்ஹில் என்னுமிடத்திலிருந்து அவர்கள் விரட்டப்பட்டார்கள். மற்ற இரண்டு கோவில்கள் உள்ள மலை உச்சிகள் ஜப்பானியர் வசமே இருந்து வருகின்றன. இவ்விடங்கள் யாவும் மாயூ நதியின் ஒரு பக்கத்துக் கரையிலிருக்கின்றன. அதன் மறுகரையில் டான்பேக் என்ற கிராமத்தை நாம் கைப்பற்றியிருக்கிறோம். இந்த வாரத்தில் பிரிடிஷ் விமானப்படை நடத்திய தாக்குதலின் விவரங்கள் பின்வருமாறு:

ஜனவரி 13—கியாக்டா, லாங்கோமங் (Laungcomung).

ஜனவரி 15—அக்யாப் பிரதேசம், சின்ட்வின், ஐராவாதி நதிகளில் செல்லும் கப்பல்கள் யாவும் தாக்குண்டன. அமெரிக்க விமானங்கள் டாங்கூ, டோமோடங் (Tamangdung), சேடிங் (Chatiang)கும் தாக்கப்பட்டன.

டிஸம்பர் 31-ம் தேதி இரவில் ஜப்பானிய விமானங்கள் நேசதேசக் கப்பல்கள் பர்மா துறைமுகத்தில் தங்கியிருக்கும்பொழுது தாக்கின.

**இந்தியா.**—ஜனவரி 15, எதிரியின் 3 பாம்பர் விமானங்கள் கல்கத்தாவில் குண்டுகளைப் போட்டன. நமது பைடர் விமானங்கள் 4 நிமிஷத்திற்குள் அவைகளைச் சுட்டு வீழ்த்தின. இது ஒரு பெரிய மகத்தான சம்பவம். அநேகமாக வயல்களிலேயே எதிரிகள் குண்டுகளை வீசினான். அதில் சொற்பச் சேதம்தான் நேரிட்டது. ஒருவருக்கும் காயமில்லை. அபாய அறிவிப்பு சங்கு மட்டில்தான் ஊதிய பிறகு ஜனங்களுக்குத் தெரிந்ததே தவிர எதிரி விமானங்கள் படையெடுத்ததும், அவைகள் சுட்டு வீழ்த்தப்பட்டதும் அவர்களுக்குத் தெரிந்திருக்காது.

ஜனவரி 17-ம் தேதி காலையில் சில எதிரி விமானங்கள் பென்னி (Fenny)யிலுள்ள விமான நிலயத்தைத் தாக்கின. அன்றிரவே சிட்டகாங் பிரதேசத்திலும் குண்டுகள் வீசின. அதில் சேதம் கொஞ்சம். சிலர் கொல்லப்பட்டனர்.

ஜனவரி 19-ம் தேதி இரவில் மறுபடியும் எதிரிகள் கல்கத்தா பேரில் வெடி குண்டுகள் போட்டன. இரண்டு எதிரி பாம்பர் விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன. சேதம் மிகக் குறைவுதான்.

**ஸாலமன் தீவுகள்.**—ஜனவரி 10—11 யுனைடெட் ஸ்டேட்ஸுக்குச் சொந்தமான மோட்டார் படகுகள் புதிய துருப்புகளை இறக்க எத்தனித்த 3 ஜப்பானிய நாசகாரிகளைத் தாக்கி விரட்டியடித்தன. அமெரிக்கத் தரைப் படைகள் வரவர முன்னேறி வருகின்றன. ஜப்பானியக் கப்பல்கள் சிதறியடிக்கப்பட்டன.

**நியூ கினி.**—ஸனானந்தா பிரதேசம் கைப்பற்றப்பட்டது. அதற்கு வடமேற்கே மூபோ என்னுமிடத்தில் ஜெனரல் மாக் ஆர்தர் புதிய போர்முனை ஒன்றை ஏற்படுத்தியிருக்கிறான். இந்த வாரத்தில் ராபாலுக்கருகாமையில் சென்ற ஜப்பானியக் கப்பல்கள் குண்டு வீச்சினால் சேதமாக்கப்பட்டோ, மூழ்கடிக்கப்பட்டோவிட்டன.

**பலவகைப்பட்டவை.**—1. ஜெர்மனி, இதாலி, ஜப்பான் இவைகள்பேரில் இராக் சண்டை தொடுத்திருக்கிறது. அதற்குக் காரணங்கள்:—(1) இராக் அரசாங்கத்தை ஜெர்மானியர் கலைக்க நினைத்தது. (2) பொய் செய்திகளைப் பரப்பியது. (3) ராஜ குடும்பத்தினரைப் பற்றி அவதூறாகப் பேசியது. (4) இராக் கலகக்காரர்களுக்கு இடம் கொடுத்தது.

2. ஜனவரி 16, 17 இரவுகளில் பெர்லின் கடுமையாகத் தாக்கப்பட்டது. 17வ லண்டனும் தாக்கப்பட்டது. அதில் 9 ஜெர்மன் விமானங்கள் வீழ்த்தப்பட்டன. ஜனவரி 20வ லண்டனில் நடந்த தாக்குதலில் ஒரு சிறுவர் பள்ளிக்கூடம் தாக்குண்டபோது 30 சிறுவர்களும், இரண்டு உபாத்தியார்களும் கொல்லப்பட்டனர்.



## சத்துருவினுடையவும், சத்துருவினால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில், பிரிடிஷ், நேசதேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

**10—1—43.** (ஞாயிற்றுக்கிழமை).

ஐரோப்பா (Europe).

இரவில்.—சுரங்க வெடிகள் போடுவது—விரோதிக்குச் சொந்தமான கடற்கரைப் பிரதேசங்களில்.

வட ஆபிரிக்கா (North Africa).

மத்தியதரைக்கடல் (Mediterranean).

அச்சு நாட்டுப் போக்குவரத்து.—சமுத்திரக்கரை ரஸ்தா—ட்ரிபோலிடேனியா (Tripolitania), வேடிராமி (Wadi-rami) பிரதேசம்.

விமான நிலயங்கள்.—ஸிஸிலி (Sicily), லாம்பெடுஸா (Lampedusa), லாகௌலெட் (Lagoulette), ஸ்வாக்ஸ் (Sfax).

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகள், தரையிலுள்ள விமானங்கள்.—பூராப் போர்முனை எங்கும்.

தூரக்கிழக்கு (Far East).

விரோதிக்குச் சொந்தமான காவற்படையுடன்கூடிய கப்பல்கள்.—நியூ பிரிடனு (New Britain)க்கு அருகாமையில்—(2 கப்பல்கள் மூழ்கிற்று).

விமானக்கூடங்கள்.—நியூ கினியிலுள்ள விவாக் (Wewak), பின்ஸ்சாபென் (Finschhafen), மாடாங் (Madang).

விமானத்தளம்.—நியூ கினியிலுள்ள லே (Lae).

ஸனானந்தா (Sanananda) பிரதேசம் (நியூ கினியில்).

அக்யாப் (Akyab) தீவிலுள்ள கிராமங்கள்.

மியிட்கினி பாலம்.—பர்மாவிலுள்ள மாண்டலே (Mandalay)க்கருகாமையில்.

**11—1—43.** (திங்கட்கிழமை).

ஐரோப்பா (Europe).

ராணுவ லக்ஷியங்கள், தொழிற்சாலைகள்.—ஜெர்மனியிலுள்ள ரூர் (Ruhr).

இதாலியிலுள்ள நேபிளஸ் (Naples).

வட ஆபிரிக்கா (North Africa),

மத்தியதரைக்கடல் (Mediterranean).

லக்ஷியங்கள்.—கேப்ஸுக் (Gabes)கருகாமையில்.

விமானத் தளம்.—காஸ்டெல் பெனிடோ (Castel Benito).

பாலங்கள்.—ஸ்வாக்ஸு (Sfax)க்கும், கேப்ஸுக் (Gabes)க்கும் இடையே.

லக்ஷியங்கள்.—டூனிஸ் (Tunis), ஸூஸ் (Sousse).

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகள், தரையிலுள்ள விமானங்கள்.—ருஷ்யப் போர்முனை எங்கும்.

தூரக்கிழக்கு (Far East).

துறைமுகம்.—நியூ பிரிடனிலுள்ள ராபால் (Rabaul).

கப்பல்துறை.—நியூ கினியிலுள்ள ஆன்டோபியா (Andobia).

ரயில்வே ஸ்டேஷன்.—பர்மாவிலுள்ள பிம்தா (Pimtha).

ஜப்பானியக் கப்பல்கள்.—பர்மாவிலுள்ள சின்ட்வின் (Chindwin) நதியில்.

சாமான் ரயில் வண்டிகள், கட்டடங்கள்.—கெய்க்தின் (Kyaikthin).

கிராமங்கள்.—அக்யாப் (Akyab) பிரதேசத்தில்.

பர்மாவிலுள்ள லியங்சாங் (Liungchang), ராதிடாங் (Rathedaung).

**12—1—43.** (செவ்வாய்க்கிழமை).

ஐரோப்பா (Europe).

பகலில்.—கப்பல் போக்குவரத்து, ரயில்வே லக்ஷியங்கள்—ஹாலந்து, பெல்ஜியம் (Low Countries).

ராணுவ லக்ஷியங்கள்.—ரூர் (Ruhr) பிரதேசத்தில்.

வட ஆபிரிக்கா (North Africa).

ரஸ்தாக்கள்.—மிஸுராடா (Misurata).

காவற்படையுடன் கூடிய துணைக்கப்பல்கள்.—ட்ரிபோலிடேனியா (Tripolitania), டூனிஸியா (Tunisia).

துறைமுகங்கள்—ஸூஸ் (Sousse).

ஒரு கப்பல்.—டூனிஸியா (Tunisia)விற் கருகாமையில்.

துறைமுகம், விமானத்தளம்.—ட்ரிபோலி (Tripoli), ஹோம்ஸ் (Homs).

ரயில்வே லக்ஷியங்கள்.—கேப்ஸ் (Gabes)க் கருகாமையில்.

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகள், விமானக்கூடத்திலிருந்தும் விமானங்கள்.—கிழக்குப் போர்முனை முழுவதிலும்.

தூரக்கிழக்கு (Far East).

ஜப்பானிய ஸ்தானம்.—நியூ ஜார்ஜியாவிலுள்ள மூண்டா (Munda).

ஜப்பானிய ஸ்தானம்.—ஸனானந்தா (Sananda).

விமானக்கூடம்.—கிங்மென் (Kingmen).

ரயில்வே லக்ஷியங்கள்.—மத்திய பர்மா.

விரோதியின் படகுகள்.—சின்ட்வின், ஐராவதி நதிகளில்.
கிராமங்கள்.—அக்யாப் (Akyab) தீவு.
சிறுபடகுகள்.— அக்கியாபு (Akyab)க்கருகாமையில்.

**13—1—43.** (புதன்கிழமை).

ஐரோப்பா (Europe).—(4 நேசநாட்டு விமானங்கள் திரும்பிவரவில்லை).
பகலில்.—தொழிற்சாலைகள்—பிரான்ஸி லுள்ள லில (Lille).
விமானத்தளம்.—ஸெயின்ட் ஓமர் (St. Omer).
என்ஜின்கள் நிற்குமிடங்கள், ரயில்வண்டிகள், ரயில்வண்டிகள் நிற்குமிடங்கள்.—வட பிரான்ஸ (Northern France).
இரவில்.—ஜெர்மனியிலுள்ள எஸ்ஸன் (Essen).
விரோதியின் துணைக்காவல் கப்பல்கள்.—டச்சுக் கடற்கரைக்கருகாமையில்.

வட ஆபிரிக்கா (North Africa),
மத்தியதரைக்கடல். (Mediterranean).

ஸப்ளைக்கு உபயுக்தமான துறைமுகங்கள்.—ஸூஸ் (Sousse), ஸ்வாக்ஸ் (Sfax).
துணைக்கப்பல்களுடன் கூடிய போக்குவரத்துக் கப்பல்கள், டாங்கிகள்.—ட்ரிபோலி(Tripoli)யை நோக்கி கடற்கரை பக்கமாக.

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகள், தரையிலுள்ள விமானங்கள்,—ருஷ்யப் போர்முனை முழுவதிலும்.

தூரக்கிழக்கு (Far East).

விமானக்கூடம், கட்டடங்கள்.—நியூ கினியிலுள்ள மாடாங் (Madang), பின்ஸ்சேபென் (Finschhafen).
விமானக்கூடம், துறைமுகங்கள்.—நியூ கினியிலுள்ள லே (Lea), ஸலாமுவா (Salamaua):
பர்மாவிலுள்ள கியாக்டா (Kyauktaw), லாங்கோமுங் (Laungcomung).
விமானக்கூடம்.—பர்மாவிலுள்ள அக்யாப் (Akyab).

**14—1—43.** (வியாழக்கிழமை).

ஐரோப்பா (Europe).

பகலில்.—ரயில்வே லக்ஷியங்கள்— வட பிரான்ஸ் (Northern France).
விமான எதிர்ப்புகள் பிரான்ஸ் (France).
இரவில்.—நீர்மூழ்கித் தளம்—லோரியன்ட் (Lorient).

வட ஆபிரிக்கா (North Africa).

துறைமுகம்.—ட்ரிபோலி (Tripoli).
லக்ஷியங்கள்.—டுனிஸியா (Tunisia)விலுள்ள யுத்தப் பிரதேசத்தில்.

சாமான் ரயில் வண்டிகள்.—ஸ்வாக்ஸ் (Sfax)க்கும், கேப்ஸுக் (Gabes)க்குமிடையே.

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகள், தரையிலுள்ள விமானங்கள்.—ருஷ்யப் போர்முனை எங்கும்.

தூரக்கிழக்கு (Far East).

நியூ கினியிலுள்ள மாடாங் (Madang), பின்ஸ்சேபென் (Finschhafen), லே (Lae), ஸலாமுவா (Salamaua).
விமானக்கூடம்.—நியூ பிரிடனிலுள்ள காஸ்மாடா (Gasmata); டிமோரிலுள்ள பூலோரோ (Fuiloro).
கிராமங்கள்.—அக்யாப் (Akyab) பிரதேசம்.
ஜப்பானிய ஸ்தானம்.—பர்மாவிலுள்ள ராதிடாங் (Rathedaung).

**15—1—43.** (வெள்ளிக்கிழமை).

ஐரோப்பா (Europe).

பகலில்.—கப்பல் துறைகள்—செர்பர்க் (Cherbourg).
இருப்புப்பாதைகள் கால்வாயிலுள்ள படகுகள்.—பிரான்ஸ் (France), ஹாலந்து பெல்ஜியம் (Low Countries).
(3 அச்சு நாட்டு விமானங்கள் சுட்டு வீழ்த்தப் பட்டன).
இரவில்.—நீர்மூழ்கி தளம்—பிரான்ஸிலுள்ள லோரியன்ட் (Lorient).
ரயில்வே லக்ஷியங்கள்.—வட பிரான்ஸ் (Northern France).

வட ஆபிரிக்கா (North Africa).

துறைமுகம்.—ட்ரிபோலி (Tripoli).
விமானக்கூடம்.—காஸ்டல்பெனிடோ (Castel Benito).
விமானக்கூட்டங்கள்.—லாம்பெடூஸா (Lampedusa) தீவு.
ரயில்வே லக்ஷியங்கள்.—தெற்கே டுனிஸியா (Tunisia).

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகள், தரையிலுள்ள விமானங்கள்.—போர்முனை எங்கும்.

தூரக்கிழக்கு (Far East).

விமானக்கூடங்கள்.—மாடாங் (Madang).
நியூ கினியிலுள்ள பின்ஸ்சேபென் (Finschhafen).
நியூ பிரிடனிலுள்ள காஸ்மாடா (Gasmata).
துறைமுகம்.—நியூ பிரிடனிலுள்ள ராபால் (Rabaul).
ஒரு கப்பல்.—வட ஐயர்லாந்துக்கருகாமையில்.
விமான தளம்.—ஸெலிபெஸ் (Celebes).



ஜப்பானிய ஸ்தானம்.—ஸனானந்தா (Sananda) பிரதேசத்திலும், அதற்கருகாமையிலும்.
துணைக்கப்பல் கூட்டம்.—பர்மாவிலுள்ள ரெங்கூன் (Rangoon).
ஜப்பானிய லக்ஷியங்கள்.—வடமேற்கு பர்மா (Burma).

**16—1—43.** (சனிக்கிழமை).

ஐரோப்பா (Europe).

இரவில்.—ஜெர்மனியிலுள்ள பெர்லின் (Berlin). (ஒரு நேச நாட்டு விமானம் திரும்பவில்லை).
கப்பல்கள், ரயில்வே லக்ஷியங்கள்.—வட பிரான்ஸ் (Northern France), ஹாலந்து, பெல்ஜியம் (Low Countries).

வட ஆபிரிக்கா (North Africa),
மத்தியதரைக்கடல் (Mediterranean).

துறைமுகம்.—ட்ரிபோலி (Tripoli) ஸ்வாக்ஸ் (Sfax), ஸூஸ் (Sousse).
அச்சு நாட்டு மோட்டார்கள்.—டிரிபோலி மிஸுராடா (Tripoli-Misurata) ரஸ்தாவில்.

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகள், தரையிலுள்ள விமானங்கள்—ருஷ்யப் போர்முனை எங்கும்.

தூரக்கிழக்கு (Far East).

துறைமுகம்.—நியூ பிரிடனிலுள்ள ராபால் (Rabaul).
விமானக்கூடம்.—நியூ பிரிடனிலுள்ள காஸ்மாடா (Gasmata).
விமானக்கூடம்.—கிளௌஸெஸ்டர் (Gloucester) முனை.
விரோதிப் போக்குவரத்து.—அட்மிராலிடி (Admiralty) தீவுகள், அம்பாயினா (Amboina) தீவு.
விரோதிக்குச் சொந்தமான லக்ஷியங்கள்.—அக்யாப் (Akyab) தீவு.
கடற்கரையோரம் செல்லும் கப்பல்கள்.—அரக்கான் (Arakan) பிரதேசத்திற்கருகாமையில்.

## *விரோதிகளின் விமானப்படையெடுப்புகளின் விவரங்கள்.*

**11—1—43.** (திங்கட்கிழமை).

பிரிடன் (Britain).

விமான நடமாட்டமேயில்லை.

வட ஆபிரிக்கா (North Africa).

பிரிடிஷாரின் முன்னணிப் பிரதேசங்கள்.—டிரிபோலிடேனியா (Tripolitania).

ருஷ்யா (Russia).

ஸ்டாலின் கிராடு பிரதேசத்தில் சுற்றி வளைக்கப்பட்ட ஜெர்மன் சைனியத்திற்கு ஸப்ளைகள்.

தூரக்கிழக்கு (Far East).

தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை.

**12—1—43.** (செவ்வாய்க்கிழமை).

பிரிடன் (Britain).

விமானத்தாக்குதல் நேரிடவில்லை.

வட ஆபிரிக்கா (North Africa).

அல்ஜீரியாவிலுள்ள போன் (Bone).

தூரக்கிழக்கு (Far East).

விமான தளம்.—கூடல்கனார் (Gudalcanar).

**13—1—43.** (புதன்கிழமை).

பிரிடன் (Britain).

ஒரு இடம்.—இங்கிலாந்தி (England)ன் தென் கிழக்குக் கடற்கரையில்.

வட ஆபிரிக்கா (North Africa).

விமானச் சண்டைகள்.—டுனிஸியா (Tunisia).

ருஷ்யா (Russia).

ருஷ்யர்களுக்கு உதவிச் சைனியங்கள்.—எல்லாப்போர் முனைகளிலும் ருஷ்ய ஸ்தானங்களுக்குப் பின்புறம்.

தூரக்கிழக்கு (Far East).

விமானச் சண்டைகள்.—ஸாந்தா இஸபால் (Santa Isabal).

**14—1—43.** (வியாழக்கிழமை).

பிரிடன் (Britain).

வட கிழக்கு இங்கிலாந்தி (England)லுள்ள கடற்கரை ஜில்லாக்களில்.

வட ஆபிரிக்கா (North Africa).

டுனிஸிலுள்ள பான்ட்-டு-பாஸ் (Pont-tu-Fahs).

தூரக்கிழக்கு (Far East).

டச்சுக்காரர்களுக்கு சொந்தமான நியூ கினியிலுள்ள மோராக் (Merauke).

**15—1—43.** (வெள்ளிக்கிழமை).

பிரிடன் (Britain).

தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை.

ஆபிரிக்கா (Africa).

கெய்ர்வான் (Kairwan).

தூரக்கிழக்கு (Far East).

நியூ கினியிலுள்ள மோர்ஸ்பி (Moresby) துறைமுகம், கல்கத்தா(Calcutta)பிரதேசம்
(3 ஜப்பானிய விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன).

**16—1—43.** (சனிக்கிழமை).

பிரிடன் (Britain).

ஒரு இடம்.—இங்கிலாந்தி (England)ன் தென் கிழக்குக் கடற்கரை.

வட ஆபிரிக்கா (North Africa).

நேச தேசத்தார்களின் ஸ்தானங்கள்.—மெட்ஜெஸ் எல்பாப் (Medjez El-bo]

**ருஷ்யா (Russia).**

ருஷ்ய ஸ்தானங்கள்.—ருஷ்யாவிலுள்ள எல்லா போர்முனைகளிலும்.

**தூரக்கிழக்கு (Far East).**

விமானச் சண்டைகள்.—ஹுவன் (Huon) விரிகுடா. (3 ஜப்பானிய விமானங்கள் சேதமாயின).

**17—1—43.** (ஞாயிற்றுக்கிழமை).

**பிரிடன் (Britain).**

அங்குமிங்கும் சில இடங்கள்.—தென் கிழக்கு இங்கிலாந்து (England), லண்டன் (London) பிரதேசம்.

**வட ஆபிரிக்கா (North Africa).**

தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை.

**தூரக்கிழக்கு (Far East).**

விமான தளம்.—ஸாலமன்ஸிலுள்ள கூடால்கனார் (Gudalcanar).

விமானக்கூடம்—இந்தியாவிலுள்ள பென்னி (Fenny).

---

# யுத்தக் குறிப்புகள்.

---

**வெற்றி வாரம்.** புது வருஷம் நேசதேசங்களுக்குச் சாதகமான சமயத்தில் ஆரம்பித்திருக்கிறது. தினம் காலையில் புதிய வெற்றிச் செய்திகளைக் கேட்டுவருகிறோம். உலகின் எல்லா பாகங்களிலும் நேசப்படைகள் வெற்றிமேல் வெற்றி அடைந்துவருகின்றன. பஸிபிக்கில் ஸனனந்தா நமது வசமாகிவிட்டது. கூடல்கனாரில் அமெரிக்கர்கள் முன்னேறிய வண்ணமாக இருக்கின்றனர். சீனர்கள் ஜப்பானியரைச் சின்னாபின்னமாக்குகின்றனர். பர்மிய எல்லைக்கப்பால் பிரிடிஷ், இந்தியப் படைகள் அதிடாங்கை நோக்கிச் செல்லுகின்றன. டிரிபோலிடானியாவில் மாண்ட்காமரி அச்சுப் படைகளை மீண்டும் துரத்த ஆரம்பித்துவிட்டார். டிரிபோலிக்கு அருகில் இருக்கிறார். இவ்வளவையும்விட ருஷ்யப் போர்முனையில் தான் அதிக வெற்றிகள் கிடைத்திருக்கின்றன. 1942 கடைசியில் ருஷ்யர்கள் கோடலினிகோவோவைப் பிடித்தனர். 1943, ஜனவரி முதல் தேதியன்று வெலிகியுலூகியைக் கைப்பற்றினர். அதற்கு அடுத்த வாரத்தில் மாஸ்டக்கைப் பிடித்து இவ்வாரத்தில் ஸ்டாலின்கிராட்டில் அடைபட்டுக் கிடக்கும் ஜெர்மன் படைகளுக்கு ருஷ்யர்கள் சரணடையும்படி எச்சரிக்கையும் அனுப்பியிருக்கின்றனர். டானெட்ஸ் பிரதேசத்திலும் ருஷ்யர்கள் புகுந்தனர். எல்லாவற்றையும் விட மிகப்பெரிய சந்தோஷச் செய்தியாதெனில் லெனின்கிராட்டின் முற்றுகையை நீக்கி, பின் சார்ந்து படைகளையும் தனியே பிரித்ததுதான்.

ருஷ்ய அறிக்கைகளில் பிடிப்பட்டதாகக் காணப்படும் புதிய இடங்களைப் பார்த்து உண்டாகும் ஆச்சரியத்தில் யுத்தத்தின் போக்கை நாம் மறந்துவிடக்கூடாது. சுமார் குறைந்த பக்ஷம் 12 இடங்களில் குறுக்கு எதிர்ப்புகள் நடப்பதில் ருஷ்யப் போர்முனை லடோகா ஏரியிலிருந்து காகஸஸ் வரை ஒன்றுதான். ருஷ்யர்களின் இவ்வித குறுக்கு எதிர்ப்புகளைச் செய்து ஏதாவது ஓர் முனையில் வெகுதூரம் முன்னேறவேண்டுமென்ற நோக்கமில்லை. ஆனால் பல இடங்களில் ஒரே சமயத்தில் தாக்கி மார்ஷல் பாக் 1918-ல் செய்த மாதிரி எதிரிகளை பல இடங்களில் சின்னாபின்னமாக்குவதுதான். ருஷ்யர்களின் யுத்தத் தந்திரங்களுக்கு அனுகுணமாக மாரிகாலமும் விசித்திரமாக உதவி செய்கிறது. 1942-ல் இருந்ததைப் போல் 1943-ல் மாரிகாலம் கடுமையாக இல்லை. மேலும் கடந்த மாரிகாலத்தில் ஜெர்மன் முன்னேற்றம் தடையுற்றது. இவ்வருஷம் ருஷ்யர்கள் தாக்குவதற்குச் சாதகமாக இருக்கிறது. இதோடு ருஷ்யப் படைகளுக்குப் புதிய துருப்புகளும், விமானங்களும், புதிய ஆயுதங்களும் கிடைக்கின்றன. இவ்வளவுக்கும் காரணம் எல் அலமீனில் பிரிடிஷ் 8-ம் படை விடாமல் செய்த முன்னேற்றப்போர் தான். இல்லாவிட்டால் ஜெர்மன் படைகள் ருஷ்யாவிலிருந்து சென்றிருக்காது. டிமோஷன்கோவின் தாக்குதலும் பயனடைந்திருக்காது.



ருஷ்ய யுத்த தந்திரத்திலும் சற்றுமாறுதல் ஏற்பட்டிருக்கிறது. முசென்ற மாரிகாலத்தில் ஜெர்மானியர் பலமாகக் காபந்து செய்துகொண்டு தனிப்பட்ட அரண்களில் இருந்தனர். இவ்வருஷத்தில் ருஷ்யர்கள் அவைகளைச் சூழ்ந்துகொண்டு பிறகு தாக்குகின்றனர். வெலிகியுலூகி இம்மாதிரி தான் கைப்பற்றப்பட்டது. ஸ்டாலின்கிராடும் இப்படித்தான் பிடிக்கப்படும்.

ஸ்டாலின்கிராடில் அடைபட்டுள்ள ஜெர்மன் படைகளின் கதி மிகப்பரிதாபகரமாக இருக்கிறது. அவர்களுக்கு பசி, வியாதி, முதலியவைகள் ஏற்பட்டு உறைபனியில் அவஸ்தைப்படுகின்றனர். மாரிகால உடைகள் அவர்களுக்குக் கிடையாது. இந்த நிலைமையில் சரண் அடைவது ஒரே வழிதானிருக்கிறது. ஆனால் உதவி வந்துகொண்டிருக்கிறது என்று ஜெர்மன் ரேடியோவில் சொல்லப்பட்டது. இது வீண் பொய். ஸ்டாலின்கிராடு எதிரிகளுக்கு அதிக அவமானத்தை உண்டுபண்ணிவிட்டது. 22 ஜெர்மன் படைகள் 2,00,000 பேரிலிருந்து 80,000 பேருக்குக் குறைந்துவிட்டது. தினம் 1,500-வீதம் அங்கே பசி, தாகம், குளிர் இவைகளால் இறக்கின்றனர்.

வி வி வி வி வி வி வி

**மூலப்பொருள்கள்.** யுத்தத்திற்கு முக்கியமான மூலப்பொருள் மனிதர்கள் என்று டாக்டர் கோய்பெல்ஸ் அபிப்பிராயப்படுகிறான். ஏனென்றால் தொழிற்சாலைகளுக்கும் போர்முனைகளுக்கும் ஆட்கள் தேவையாக இருக்கிறது. ஜெர்மனியில் தற்போது ஆள் பலம் குறைந்துவிட்டதால் அது மிகவும் முக்கியம் என்று சொல்லப்படுகிறது. ஆட்களைப் புதிதாகச் சேகரிக்க ஜெர்மன் அதிகாரிகள் நாடெங்கும் சுற்றி, இதற்கு முன்பு லாயக்கில்லையென்று விடப்பட்டவர்களையெல்லாம் திரட்டி வருகின்றனர்.

ருஷ்யப் போர் முனைக்கு ஆட்களை அதிகம் அனுப்பவேண்டுமென்ற உத்தேசத்துடன் ருமேனியாவிலும் ஹங்கேரியிலும் ஹிட்லர், அங்குள்ள அதிகாரிகளுக்குப் பயத்தை உண்டாக்க கலகங்களைத் தூண்டிவருகிறான். முதலில் இந்த இருநாடுகளுக்குள் சண்டையை மூட்டி, பிறகு சில துர் கக்ஷிகளைக் கிளப்பி, அங்கிருக்கும் அரசாங்கத்தை எதிர்க்க ஏற்பாடு செய்கிறான். மீண்டும் ஆட்களை அனுப்ப அன்டோனிஸ்கூ மறுத்து வந்ததால் ருமேனியாவில் ஹிட்லர் அயரன் கார்டு சூழ்ச்சியைத் தூண்டிவிட்டான். இந்த சூழ்ச்சியில் அன்டோனிஸ்கூ படிந்தால் கலகக்காரர்களும் அடக்கப்படுவார்கள். பணியாவிட்டால் அவன் பதவியிழப்பான்.

ஹங்கேரியிலும் அரோ கிராஸ் (Arrow Cross) என்ற கக்ஷியை நாஸிகள் கிளப்பி விட்டிருக்கின்றனர். இக்கக்ஷியைக் கொண்டுதான் அங்கே ரீஜெண்டாக இருக்கும் அட்மிரல் ஹார்தியை நெருக்குகிறான். 1940-ல் இவனை விலக்கி ஸாலஸியை நிலை நாட்ட முயன்றதும் இக்கக்ஷிதான். இதை ஹார்தி மறந்திருக்க முடியாது.

வி வி வி வி வி வி வி

**வட ஆபிரிக்கா.** இங்கிருக்கும் 8-ம் படையும் முதல் படையும் இதர நேசப்படையும் சேர்ந்து முடிவாகத் தாக்கப்போவதற்கான சின்னங்கள் காணப்படுகின்றன. மாரிகாலமும், சில அரசியல் தகரார்களும் சண்டையைச் சற்று தாமதப்படுத்தியிருக்கின்றன. இந்த அவகாசத்தில் டிரிபோலிடானியாவிலும், டூனிஸியாவிலும் உள்ள அச்சுநாட்டுப் படைகளுக்கு ஸப்ளைகள் வந்திருக்கின்றன. இதில் எந்தப் படையை பலப்படுத்துவதென அவர்களுக்குத் தெரியவில்லை. எங்கேதான் ரோமல் முடிவாக எதிர்த்து நிற்கப்போகிறானென்று தெரியவில்லை. மாண்ட்காமரி நின்றால் அவனும் நிற்பான். இல்லாவிட்டால் இருட்டில் ஒளிந்து ஓடவேண்டியதுதான். இதுவரை அச்சுப்படை வெகு தூரம் ஓடிவிட்டது. அதில் பல பான்ஸர் படைகள் கொல்லப்பட்டன. மீதியுள்ளவைகளை ஆபிரிக்காவிலிருந்து விரட்ட மாண்ட்காமரி சமயம் பார்த்துக்கொண்டிருக்கிறான். நேசதேச விமானநிக்கம் நிலைநாட்டப்பட்டிருக்கிறது. ஸ்வதந்திர பிரெஞ்சுப் படைகள் சாட் பிரதேசத்தைக் கடந்து 1,500 மைல் தூரத்தைக் கடந்து டூனிஸியாவிலுள்ள பிரெஞ்சுப் படைகளுடனும் 8-ம் படையுடனும் சேர்ந்துக்கொண்டிருக்கின்றன. மால்டா விமானங்கள் அச்சுநாட்டு லக்ஷியங்களை பல பக்கங்களில் தாக்குகின்றன.

**வட ஆபிரிக்கத் தகராறுகள்.** டார்லான் கொலையில் பிரெஞ்சு ராயலிஸ்டு கக்ஷியினர் ஈடுபட்டிருப்பதாகத் தெரிகிறது. பிரெஞ்சு ஸிம்மாசனத்திற்கு சம்பந்தமிருப்பதாகச் சொல்லிவரும் (Comte de Paris) டான்ஜியருக்கு வந்திருக்கிருன். அமெரிக்கப்படைகள் அங்கு இறங்கியது முதல் லிபரல்கள், ஜனநாயக கக்ஷி இந்த இருவருக்கும், விஷி கக்ஷிக்கும் தகராறு ஏற்பட்டிருக்கிறது. அதாவது தற்போது யார் வட ஆபிரிக்காவில் தலைமை வகிப்பதென்றும், பிறகு பிரான்ஸை யார் பெறுவது என்பது பற்றிதான் தகராறு. இந்த சந்தர்ப்பத்தில் ஒரு அமெரிக்க நிருபர் ஒரு பரபரப்பை உண்டாக்கி விட்டான். அதாவது கிரேட் பிரிடனுக்கும் அமெரிக்காவிற்கும் தகராறு இருப்பதாகச் சொன்னுன். பிரிடன் டிகாலேத் தூக்கி விடுவதாயும் அமெரிக்கர்கள் ஜிரோவைத் தூக்கிவிடுவதாகச் சொன்னுன். ஆனுல் அது உண்மையல்ல. மொத்தத்தில் விஷி கக்ஷியினர் பலர் முன் வந்திருக்கின்றனர். ஈஸன் ஹோவரும் இவர்களுக்கு பல வாக்குறுதிகளைக் கொடுத்திருக்கிருர். டிகாலும் ஜீரோவும் கலந்து பேசினுல் இந்தத் தகராறு ஒருக்கால் தீரலாம். ஆனுல் அது இன்னும் ஏற்படக்காணும். தான் ஒரு அரசியல் தந்திரி இல்லையென்று ஜீரோ சொல்லிக்கொள்ளுகிருன். இந்த சமயத்திற்கு ஒரு சிப்பாயும், தந்திரியுமாக இருப்பவன் தேவையாக இருக்கிறது. டார்லான் அப்பேற்பட்டவன். மார்ஷல் பிருடன் என்பவனை ஒரு அங்கத்தினராக ஜீரோ நியமித்து நிலைமையை இன்னும் சிருங்கலையாக்கி விட்டான். ஏனென்ருல் இவன் பிடேன் அரசாங்கத்தில் உள்நாட்டு மந்திரியாக இருந்தான். மேலும் இவன் டிகாலே எதிர்த்தவன்.

நேசநாடுகளுக்கு டிகால் செய்திருக்கும் உதவி மிக அதிகம். இதோடு தற்சமயத்தில் இப்படைகள் மத்திய ஆபிரிக்காவிலிருந்து 1,050 மைல் முன்னேறி பெஸான் (Fezzan)ஐ ஆக்கிரமித்து, லிபரியாவிலிருந்து இதாலியப் படைகளைத் துரத்தி, பிரிடிஷ் 8-ம் படையுடன் சேர்ந்துகொண்டிருக்கிறது. இதனுல் தான் மத்தியதரைக்கடற்கரையில் சண்டை செய்ய முடிகிறது. 13உ ஜெனரல் டிகால் ஒலிபரப்பும்போது 'சாத் பிரதேச துருப்புகளின் வெற்றியினுல் பிரான்ஸை ஹிட்லர் அடக்கியதாக நினைத்தது முடியவில்லை' என்று சொன்னுன்.

இவ்வளவு சிருங்கலைகளுக்குள் வட ஆபிரிக்காவின் அரசியல் வாழ்க்கையும் பொதுஜன வாழ்க்கையும், பிரெஞ்சு நிருபர் பியரிமெயிலாட் சொல்லும்விதமாக விஷி அரசாங்கமும் அச்சுநாட்டு ஒத்துழைப்பும் பிரசாரமும் நடந்துவந்ததால் மிகமட்டமாகப் பாவிக்கப்படுகிறது. பலபேர்கள் நேசநாடுகளுக்குச் சாதகமாக இருக்கின்றனர்; விஷியினுலும், ஜெர்மனியினுலும் செய்யப்படும் பிரசாரத்திற்கு இணங்குகிறவர்களுமிருக்கின்றனர். அப்பிரதேச அரசாக்ஷியானது, ஜெனரல் ஜீரோ, நோகஸ், செடல், பாய்ஸன், பெர்ஜிரா போன்ற பலர் அடங்கிய சங்கத்தினுல் நடைபெற்று வருகிறது.

இந்த நிலையில் மிகவும் சாமர்த்தியம் வாய்ந்த தலைவனிருந்தால்தான் சரிவர நடைபெறும். ஜனவரி 15-உ மிஸ்ட்டர் பிரன்டன்பிராக்கன் ஒரு ஸ்டேட்மென்டு விடுவித்து பிரிட்டனுக்கும் அமெரிக்காவிற்கும் இதில் தகராறு கிடையாது என்று நிரூபித்தார். அவர் சொன்னதாவது: 'வட ஆபிரிக்க வியாபாரங்களைக் கவனிக்க ஈஸன்ஹோவரையே பிரிடிஷ் அரசாங்கம் அங்கீகரித்திருக்கின்றனர். அவனிடத்தில் இவர்களுக்கு நம்பிக்கை இருக்கிறது.' நியூ யார்க் டைம்ஸ் பத்திரிகை இந்த அறிக்கையைப்பற்றி விமர்சிக்கும்போது 'இதுதான் ஆங்கிலேய அமெரிக்க திட்டம் என்று சொல்லிற்று'. வட ஆபிரிக்காவில் இருக்கும் பிரிடிஷ் மந்திரியான ஹெரால்டு மாக்மில்லன் சொன்னதாவது:—'டார்லான் வட ஆபிரிக்காவில் இருந்தது அவ்வளவு சாதகமாக நினைக்கப்படவில்லை. இனி அப்போதைக்கப்போது ஏற்படும் நிலைமைக்கேற்றவாறு நம்முடைய திட்டங்கள் மாறுதலடையும்; டி காலேயும் ஜீரோவையும் ஒன்று சேர்க்க ஏதாவது ஏற்பாடு செய்யப்படுமா என்று கேட்டதற்கு மாக்மில்லன் 'நேசநாடுகள் தங்களால் முடிந்தவரை பிரயத்தனப்படுகிருர்கள்' என்ருன்.

வி வி வி வி வி வி வி

**கூடல்கனுர்.** ஸாலமன்ஸிலுள்ள நிலைமை சற்றேறக்குறைய பின்வருமாறு. அத்தீவில் பெரும்பாகம் ஜப்பானியர் வசமிருந்தபோதிலும் நேசதேசங்களும் ஊர்ஜிதமாக சில இடங்களைப்



பிடித்திருக்கின்றன. மீண்டும் கப்பற்படையின் உதவிபெற்று ஜப்பானியரை விரட்டிவிடலாமென்று ராணுவ நிபுணர்கள் நினைக்கின்றனர். அங்குள்ள ஜப்பானியப்படைக்கு ஸப்ளை போகவொட்டாதபடி செய்யப்பட்டது. விமான மூலம்தான் செல்லுகின்றன. ஆகவே சிரமங்களைப் பொறுக்கமாட்டாமல் ஜப்பானியர்களாக விட்டுப்போய்விடுவார்கள்.

வி வி வி வி வி வி வி

**நியூ கினி.** ஹம்போல்டு குடாவிலிருந்து பென்ஸ்பாக் நதிவரை ஒரு கோடு இழுத்தால் இக்கோட்டிற்குக் கிழக்கிலிருப்பது பிரிடிஷ் நியூ கினி, மேற்கிலிருப்பது டச்சு நியூ கினி. அதேமாதிரி ஸ்டேன்மலையிலிருந்து ஓவன் ஸ்டான்லி தொடரில் ஸிம்ஸன் மலைவரை ஒருகோடு போட்டால் இதற்குத்தெற்கில் பாபுவாவும் வடக்கில் மார்ஸ்பியும் இருக்கின்றன. இந்த மார்ஸ்பியை அடைவதற்குத்தான் ஜப்பானியர் பல மாதங்களுக்குமுன் வீண் பிரயத்தனங்களைச் செய்தனர். தற்சமயத்தில் ஜப்பானியர் பூனு, சோனு, ஸனுனந்தா முதலிய இடங்களிலிருந்து துரத்தப்பட்டனர். ஸனுனந்தா முனையானது 700 கெஜ நீளமும், 400 கெஜ அகலமுமிருக்கிறது. இங்கே எதிரி, எதிர்த்து நிற்கமுடியாத சமயத்தில் 50 பேர்களடங்கிய கூட்டமாக ஓடிவிட்டனர். பிடிபட்ட சில ஜப்பானியர் லேகுவாக வாட்டமடைந்திருந்தனர். ஒவ்வொரு மரத்திலும் வெட்டுக்காயம் காணப்படுகிறது. இப்போது அப்பிர தேசம் பாழாகியிருக்கிறது.

தற்போது எதிரி லேயிலும், ஸாலாமூவாவிலும் பலப்படுத்திவருகிருன் இப்பிரதேசம் நியூ கினியில் பின்ஸ்காபென் என்ற இடத்திற்கும் மூபோ என்ற இடத்திற்கும் இடையிலிருக்கிறது. ஆனுல், அவர்கள் முயற்சி பலிக்கவில்லை.

வி வி வி வி வி வி வி

**திருட்டுத்தனம்.** ஐரோப்பாவிலும் ஆசியாவிலும் அச்சுநாட டினர் செய்துவரும் கொள்ளையும் திருடு அபாரமாக இருக்கிறது. ஆங்காங்கு தொழிற்சாலை முதலாளிகளடங்கிய சங்க களை ஏற்படுத்திக்கொண்டு அவைகளுக்கு அரசியல் அதிகாரம் கொடுக்கப்பட் வருகிறது. ஆனுல் இவ்வித சங்கங்களை ஏற்படுத்துவதால உள்நாட்டு வியாபார தடைபடுவதோடு சாதாரணமான பொதுஜனங்கள் வியாபாரத்தைக் கட்டு படுத்துவதால் பல இடைஞ்சல்கள் ஏற்படுகின்றன என்று ஜனநாயகங்கள் இ முறையை விட்டுவிட்டன. அச்சுநாடுகளோ பிறர் கைப்பட்ட அம்முறை கையாண்டு, பொருளாதார பத்திரத்தை உண்டாக்குவதென பெயர் வைத்து கொண்ட திட்டமான கொள்ளைத் தொழிலைப் புரிந்து வருகின்றன.

உதாரணமாக ஐரோப்பாவில் டாக்டர் பூங்க் என்பவரின் மொழிகளி 'சாதாரண காலங்களில் ஏற்படும் பொருளாதாரத்திலுல் ஜெர்மன் அரசாங்க திற்கு அதிக செல்வாக்கும், ஜெர்மன் மக்களுக்கு அதிக சௌக்கியமும், இவ்வி சௌக்கியத்தைப் பெற. எல்லாவித சாமான்களின் உபயோகமும் ஏற்ப வேண்டும். ஜெர்மனிக்கு வெளியே பெரிய தொழிற்சாலைகள் இருப்பதைக்கூட ஜெர்மனி விரும்பவில்லை. இந்த யுத்தத்திற்குப் பின்னுடியும் யுத்த தொழி சாலைகள் தறபோதுள்ளபடி வேலைசெய்து கொண்டுதானிருக்கும். இதனு உலகத்தில் அதிகாரம் ஜெர்மனிக்குத்தான் கிடைக்கும்' என்ற இந்தக் கொள்கை யின்படி ஹெர்மான், கொயரிங் இரும்புத் தொழிற்சாலை யுத்தத்திற்கு மு சாதாரணமாக இருந்ததுபோக இதுதான் தற்போது பெரிய தொழிற்சாலையா விளங்குகிறது. இதற்கு மூல நிதி 4,000 மிலியன் ரீஷ் நாணயங்கள். ஒ மிலியன் தொழிலாளிகள் கட்டாய வேலை செய்துவருகின்றனர். இதைத் தவி ஸெக்கோஸ்லாவாகியாவில் ஸ்கோடா பிரன்னர், யுத்தத் தொழிற்சாலை, லக்ஸ பர்க், லொரயின் எஃகு தொழிறசாலை, போலந்திலுள்ள ஸைலீஷிய பெரி தொழிற்சாலை, ருமேனியாவிலுள்ள ரெஸிட்ஸா தொழிற்சாலை, நார்வேயிலுள் டன்டர்லன் இரும்புச் சுரங்கங்கள்; பெல்ஜியத்திலுள்ள ஸால்வே கணு தொழிற்சாலை முதலியவைகளும் இருக்கின்றன.

கோல்னிசி ஜிடங் என்ற பத்திரிகையில் ஜெர்மன் தொழிலாளிகளும், ஜெர்மன் முதலும் ஒவ்வொரு நாட்டிலும் போட்டு ஜெர்மன் பொருளாதார நிலைமை பலப்படுத்தப்படுமென்றும் அதன் மூலமாக அரசியல் லக்ஷியங்கள் சாதிக்கப்படுமென்றும் சொல்லப்பட்டது.

வி வி வி வி வி வி வி

**புதிய திட்டம்.** ஜப்பானும் ஜெர்மன் முறைகளைக் கையாண்டு புதிய திட்டத்தை அமுல்படுத்தி வருகிறது.

அதன்படி பொருளாதார திட்டத்தின்படி யுத்தகால நிலைமையைச் சமாளிப்பதோடு அதன்பிறகு சமாதான காலத்திற்குத் தேவையானவைகளும் நிறைவேற்றப்படும். இங்கும் வியாபாரச் சங்கங்கள் ஸ்தாபிக்கப்பட்டு அவைகளுக்கு முக்கிய அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. சிறிய வியாபாரிகளெல்லாம் அடக்கப்படுகின்றனர். லாபம் சம்பாதிப்பது, தலைவர்களை நியமிப்பது யாவும் இச்சங்களிடமே ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

ஜப்பான் டைம்ஸ் அண்டு அட்வர்டைஸர் பத்திரிகை பின்வருமாறு கூறுகிறது. ஜப்பானுடைய பொருளாதாரத்தை அபிவிருத்திசெய்ய லாயக்காக வெளிநாடுகளுக்குத் தேவையான சாமான்களின் உற்பத்தி மட்டுப்படுத்தப்படும். அதாவது ஜப்பானுடைய லக்ஷியங்களுக்கும், தேவைகளுக்கும் லாயக்கான முறைகள்தான் பயன்பெறும். இதை ஜப்பானியத் தலைவர்கள்தான் தீர்மானிப்பார்களாம். உதாரணமாக ஜாவாவில் நெசவுத் தொழிலையும், மலேயாவில் அரிசி வெள்ளாமையையும், பர்மாவில் பஞ்சுயந்திர சாலைகளும் ஏற்படுத்தப்படுமாம்.

ஜப்பானுக்கு இதில் இரண்டு லக்ஷியங்கள் இருக்கின்றன. பிடித்த நாடுகளில் சிறிய தொழிற்சாலைகளை உண்டுபண்ணி, ஜப்பானில் பெரிய தொழிற்சாலைகளை ஏற்படுத்துவதுதான். இந்த திட்டப்படி பிலிப்பைன்ஸுக்கு பொருளாதார சுபிக்ஷம் கொடுத்து ஜாவாவை அரிசி, ரப்பர், காபி, கொய்னா முதலியவைகளை உண்டுபண்ணும் நாடாகவும், சுமத்ராவை ஜப்பானுக்கு வேண்டிய முக்கிய சாமான்கள் கிடைக்குமிடமாயும் செய்யப்படும்.

ஆகவே இம்மாதிரி கொள்ளைத் தொழில் நடந்துவருவதில் நேசநாடுகள் இவைகளை யுத்தத்திற்குப்பின் அங்கீகரிக்கவேமாட்டா என்று சொல்லிவிட்டன.

வி வி வி வி வி வி வி

**‘1918’** ‘வி’ இயக்கத்திற்கு அனுகுணமாக 1918 என்ற பெயருடன் ஒரு இயக்கம் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. ‘1918’ என்று ஜெர்மனியில் எல்லா இடங்களிலும் எழுதப்பட்டிருக்கிறது. அதாவது கடந்த யுத்தத்தில் 1918-ல் ஜெர்மனிக்கு நேர்ந்த விபத்தை ஞாபகமூட்டுகிறதாக ஆகிறது. இந்த யுத்தத்திலும் நான்காவது வருஷம் ஆரம்பமாகியிருப்பதில் ஜெர்மனிக்கு விபரீதமாக இருந்துவருகிறது. இதன் நோக்கம் ஜெர்மனியில் யுத்த சக்தியை குறைப்பதுதான். இதற்கு ஆரம்பம் ஹிட்லரின் பேச்சிலேயேதானிருக்கிறது. அவன் சொன்னதாவது :— ‘1918 சம்பவங்கள் திரும்ப நடக்கவிடமாட்டோம்! என்றும், அதாவது 1918-ல் ஏற்பட்ட மனத்தாங்கலை நிவர்த்தித்துக்கொள்ள இந்தச் சண்டையை ஆரம்பித்து அதுவும் விபரீதமாய் முடியாமல் இருக்கவேண்டுமென்று அவன் எதிர்பார்க்கிறான்.

வி வி வி வி வி வி வி

**ஒரு நவீன அதிசயம்.** லண்டனில் ஜனவரி 13-ல Mr. A. V. அலெக்ஸாண்டர் பேசும்போது பிரிட்டனின் கப்பல் பலம் ஏற்கனவே அடைந்த நஷ்டங்களுக்கிடையில் விருத்தியடைந்து வருகிறது என்றார். சென்ற யுத்தத்தைவிட 1,00,000 பேர்கள் குறைச்சலாகப் பெற்றிருந்தும் கப்பல் கட்டுவதில் அபிவிருத்தி காணப்படுகிறது. அமெரிக்க விவரங்களின்படி ஜெர்மனி நீர்மூழ்கிகளை அதிகமாக கட்டிவருகிறது. நேசநாடுகள் சாமான் கப்பல்களை அதிகம் கட்டுகின்றன.



# பர்மாவில் நடக்கும் சண்டை.

*பீல்ட் மார்ஷல் வேவல்—ஜனவரி 16.*

அரக்கான் பிரதேசத்தில் எதிரிகளை விரட்டுவது நமக்கு உபயோகமானது. அது முன்னேற்றமுமாகும். அதனால் இந்தியாவிற்கு அனுகூலம் ஏற்படும். தவிர அது நமது மனிதர்களுக்கும், உத்தியோகஸ்தர்களுக்கும் நல்ல பயிற்சியுமாகும். அங்கு பிரிடிஷ் துருப்புகளும் வெகு திறமையுடன் வேலைசெய்து வருகின்றன.

இப்பொழுதுதான் அப்பிரதேசத்தைச் சுற்றிப்பார்வையிட வந்திருக்கிறேன். அது நியூகினியைப்போல காடு, மலை நிறைந்த பிரதேசம். இங்குள்ள நிலைமை அநேகமாக நியூகினியிலுள்ள நிலைமையைப் போன்றது.

இப்பொழுது நடந்துவரும் படையெடுப்புகளுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் இப்படையெடுப்பு அதிகக் கஷ்டமானது என்று சொல்வதற்கு முடியாது. ஆனால் ஒவ்வொரு படையெடுப்பிலும் ஏதாவது ஒரு பிரச்னை இருக்கத்தான் செய்யும்.

இந்தப் பிரதேசத்திலுள்ள பிரச்னை போக்குவரத்து கஷ்டம்தான். அந்த நாட்டில் போக்குவரத்துக்கு என்ன சாதனங்கள் கிடைக்கின்றனவோ அவற்றையும், சிறு படகுகளையும் தான் உபயோகிக்க வேண்டியிருக்கிறது. இப்பிரதேசத்தில் யானைகளை உபயோகிக்கலாமா என்று யோசித்துப் பார்த்தோம். ஆனால் அவைகளுக்குத் தீனி அதிகமாக வேண்டியிருக்கிறது. எப்படியிருந்தாலும் அவை அங்கு வளர்ந்திருக்கும் மூங்கிலின் இளங்குருத்துகளைத் தின்று ஜீவிக்கலாம். இந்தக் குருத்துகள் இங்கு ஏராளமாகக் கிடைக்கின்றன.

மலைப் பிரதேசங்களில் ஏராளமாக காட்டு யானைகள் இருப்பதாகத் தெரிகிறது. அங்கு ஒரு புலியை உத்தியோகஸ்தர் ஒருவர் சுட்டிருப்பதாகவும் எனக்குத் தகவல் கிடைத்திருக்கிறது.

வட ஆபிரிக்காவில் நடக்கும் சண்டையினால் இப்பிரதேசத்திற்கு வரும் ஸப்ளைகள் பாதிக்கப்படும் என்று நான் கருதவில்லை. அவை எப்போதும் போலவே சரியாகத்தான் கிடைத்துவருகின்றன. மேலும் முன்பு இருந்ததைவிட இப்பொழுது நமது வசம் அதிகமான விமானங்கள் இருக்கின்றன.

ஆயினும் ஸாலமன் தீவுகளில் நடக்கும் சண்டைகள் பர்மா நிலைமையை நிச்சயமாக பாதிக்கின்றன. அங்கு ஜப்பானியர் பலமாகத் தாக்கப்பட்டுவருவதாகத் தோன்றுகிறது. முக்கியமாக அவர்களின் கப்பல்களும் பல நஷ்டமாயிருக்கும். அதனால் அவர்கள் முக்கியமாகக் கருதிவரும் கப்பற் போக்குவரத்துக்கு ஆபத்து நேர்ந்திருக்கக்கூடும்.

---

# ‘நாம் ஏன் சண்டை செய்கிறோம்.

*மாஸ்கோ ரேடியோவில் பின்வருமாறு சொல்லப்பட்டது.*

1940-ல் ஹிட்லர் ‘நாம் ஜயித்துவிட்டோமென்றும்’, 1941-ல் ‘நாம் ஜயித்துவிடுவோமென்றும்’, 1942-ல் ‘நாம் நிச்சயம் ஜயிக்கவேண்டுமென்றும்’, 1943-ல் ‘நாம் எதிரி வசமாகக் கூடாதென்றும்’ சொன்னான்.

இதிலிருந்து ஜெர்மனியின் மங்கு சனியின் நிலைமை தெரியவருகிறது. ஏனென்றால் நாஸி பிரசாரம் முதலில் வெகு தடபுடலாக இருந்தது போக இப்போது பயத்தைத் தெரிவிக்கிறது. பிரசாரத்தைக்கொண்டே முதலில் தனது கொடிய வேலைகளை ஹிட்லர் ஆரம்பித்தான். பிரசாரம் மூலம் ஜெர்மன் மக்களைத் தான் சொற்படி நடக்கும்படி செய்தான். சண்டை செய்யப்போகும் நாடுகளிலுள்ள ஸ்வதந்திர மக்கள் ஜெர்மன் பிரசாரத்தைக் கேட்டு நம்பி, பயந்து போகும்படிக்கும் செய்யப்பட்டது. மாஸ்கோ ரேடியோவில கூறப்பட்ட மொழிகள் யாவும் ஹிட்லரால் கூறப்பட்டவையே. ஒவ்வொரு தடவை சொல்லும்போதும் ஹிட்லர் தன்னை ஒரு பெரும் தலைவனாக பாவித்து, உள்நாட்டிலுள்ளோருக்கும்,

அயல் நாட்டிலுள்ளோருக்கும், தன்னை அனுசரிக்கும் படியான அபிப்பிராயத்தை உண்டுபண்ண நினைத்தான். ஆனால் முன் சொல்லப்பட்ட மொழிகளைப் பார்த்தால் அவை ஒரு எச்சரிக்கையையும் கொடுக்கின்றன.

ஹிட்லரைப்போல் அதிக சைனிய பலம் பெற்ற ஒருவன் 'எதிரி வசமாக மாட்டேன்' என்று சொல்லுவது சாதாரணமான விஷயமல்ல. தான் ஏதோ எதிரி வசமாகும் நிலையில் இருப்பதாயும் அவ்விஷயம் ஜெர்மனியிலுள்ளோருக்குத் தெரிந்துவிட்டதால் அவர்களைத் திருப்தி செய்ய இம்மாதிரி சொல்லுவதுபோலவும் காணப்படுகிறது. தான் செய்த கொடிய குற்றங்களுக்குத் தண்டனை ஏற்பட்டுவிடுமென்று ஜெர்மன் மக்கள் பயந்ததால் அப்பயத்தை நிவர்த்திக்கவே இம்மாதிரி சொல்லியிருக்கவேண்டும். தற்சமயத்தில் கோயபெல்ஸும் ருஷ்யாவிற்கு எதிராக விசேஷமான ஒரு பிரசாரத்தை நடத்தி வருகிறான். அதன் மூலம் ருஷ்யர்களின் யுத்த சக்தியைக் குறைத்து ஜெர்மன் படைகளின் 'தற்காப்புப் போரின் நிலைமையை' புகழ்ந்துகொண்டும் பேசினான். ஆனால் உண்மை நிலையில் ஜெர்மன் படைகள் பிரமாதமானவை என்ற கதையெல்லாம் போய்விட்டது.

அயல் நாடுகளில் ஜெர்மன் சைனியங்களை எதிர்ப்பது பிரயோஜனப்படுமா என்ற பிரச்னையை உண்டாக்கவே ஜெர்மன் பிரசாரம் நடந்துவருகிறது. ஆனால் 1940-ல் இருந்த மதிப்பு தனக்கு இல்லையென்றும், தான் எவ்வளவு சிரமப்பட்டாலும் தனது தந்திரங்கள் பலிக்காது என்றும் ஹிட்லருக்குத் தெரியும். அதோடு உள்நாட்டில் ஜெர்மன் மக்களுக்கு யுத்தத்தில் அலுப்பு ஏற்பட்டிருப்பதை உணர்ந்து அதை மறைக்கவே பிற நாடுகளைப்பற்றிய பிரசாரத்தை நடத்துகிறான்.

யுத்தத்தில் நம் யாவருக்கும் அலுப்பு ஏற்பட்டுத்தானிருக்கிறது. யுத்தம் ஆரம்பமானது முதல் நாம் அசந்து போயிருக்கிறோம். ஆனால் ஹிட்லர், டோஜோ முதலியோர் சொல்லுவதற்கு இணங்கிவிடமாட்டோம். அவர்களெல்லாம் யுத்தத்தை காரணமாகக்கொண்டு நீடித்து அதிகாரம் பெற நினைக்கிறவர்கள். யுத்தத்தை நாமாக விரும்பவில்லை. ஆக்கிரமண நாட்டினராகத்தான் ஆரம்பித்தார்கள். ஆனால் முடிவில் அவர்களுக்குத்தான் ஆபத்து ஏற்படப்போகிறது.

---

# மறைமுகமான யுத்தம்.

(விகாம் ஸ்டீட் எழுதியது).

இந்த யுத்தத்தில் வெளிப்படையாக படைகள் ஒன்றுக்கொன்று போர் முனையில் ஈடுபடுவதைத் தவிர அரசியல், ஆத்மீகம் என்ற மறைமுகமான அரங்கங்களும் இருக்கின்றன. இதை நேசநாடுகள் ஜயித்தால் தான் முடிவான வெற்றி கிட்டும்.

சில நாட்களுக்கு முன்பு லண்டனில் நேசதேச அரசாங்கத்தில் பொறுப்பு வாய்ந்த ஒருவர் சொன்னபோது ஐரோப்பாவில் பல இடங்களில் மறைமுகமான உணர்ச்சி அதிகப்பட்டு வருவதாயும், அது இப்படியே நீடித்து வந்தால் அச்சு நாடுகளின் பலம் தளர்ந்துவிடும் என்றும் தான் நினைப்பதாக அறிவித்தார். இவ்வித முடிவிற்கு அவர் மிக பரிசிரமப்பட்டே வந்திருக்கிறார். ஆதலால் அவர் நினைப்பது தவறென நிராகரிக்க முடியாது.

### நேசதேச வெற்றிகளின் பலன்.

வட ஆபிரிக்காவில் நேசதேசங்கள் வெற்றி பெற்றுவருவதால் பால்கன் பிரதேசத்திலும் பின்லாந்திலும் கொஞ்சம் பரபரப்பு ஏற்பட்டு இருக்கிறது. மொராக்கோ, அல்ஜீரியா முதலிய இடங்களில் நேசதேசப் படைகள் இறங்கியதைப்பற்றி ருமேனியாவில் ஒருவரும் கொண்டாடக்கூடாதென ஒரு நாஸித் தலைவன் உத்தரவிட்டானும். டூரின், நேபிள்ஸ் முதலிய இடங்களில் பிரிடிஷ் அமெரிக்க விமானப் படையெடுப்புகள் நேரும் போதெல்லாம் இதாலியில் சமாதானம் வேண்டுமென யாவரும் கத்துகிறார்களாம். பின்லாந்தில் யுத்த அலுப்பு ஏற்பட்டிருக்கிறது. ஜெர்மனியுடன் அதிகம் ஒத்துழைப்பதாக லவால்



சொல்லும்போதெல்லாம் அவனுக்குத் தடை ஏற்படுகிறது. ஹாலந்துக் கடற்கரையிலுள்ளோர் உள்நாட்டிற்கு அனுப்பப்படுகின்றனர். ருஷ்யாவில் ஜெர்மனியாருக்கு ஏற்பட்ட நஷ்டங்களையும், ரோமல் எல் அகிலாவிலிருந்து ஓடிவிட்டதாகவும் ஜெர்மன் தலைவர்கள் சொல்லாதபோயினும் ஜெர்மன் மக்கள் பரபரப்புடன் இருக்கின்றனர்.

### ஆபிரிக்காவிலிருந்து அச்சு நாட்டினரை விரட்டுவது.

ராணுவம் சம்பந்தப்பட்ட வரையில் வட ஆபிரிக்கப் போர் இதாலியின் கதியைத் தீர்மானிக்கும். டிரிபோலியிலிருந்தும், டூனிஸிலிருந்தும் அச்சுப் படைகள் விரட்டப்பட்டால்தான் இதாலியர்களைச் சண்டையில் ஈடுபடுத்துவதா இல்லையா என்று ஹிட்லரும் முஸோலினியும் தீர்மானிப்பார்கள். டூனிஸை விட்டு அச்சு நாட்டினரை விரட்டுவது சிரமமாயும் கொஞ்சம் தாமதமாயும் ஏற்படலாம். ஏனென்றால் இன்னும் 400 மைல் தூரம் தண்ணீரில்லாத பொட்டல் வெளி பாக்கி இருக்கிறது. இதற்கிடையில் டான், வால்கா பிரதேசத்திலும் சூழ்ந்து கொள்ளப்பட்ட ஜெர்மன் டிவிஷன்களைக் காப்பாற்றுவதிலும், காகஸஸ், கிரிமியா, தென் கிழக்கு ருஷ்யா இங்கே நஷ்டங்கள் ஏற்பட்டாலும் ஜெர்மன் தளகர்த்தர்கள் எடுத்துக்கொள்ளும் முயற்சிகளுக்குக் கிடைக்கும் வெற்றி, தோல்வியையும் பொறுத்து ராணுவம், ஆத்மீகம் இவைகளின் பலம் இருக்கிறது. ராணுவ சம்பந்தமான தோல்வி ஏற்படாமல் மாத்திரம் ஜெர்மானியர் செய்து கொண்டால் போதாது. பொதுஜனங்களின் மனப்பான்மையையும் வசிகரம் செய்தாக வேண்டும். ருமேனியா, ஹங்கேரி, பல்கேரியா, யூகோஸ்லாவியா, கிரீஸ் முதலிய இடங்களில் ஜெர்மன் பிடிப்பு தளர்ந்து வருகிறது. இப்படியே விஷயங்கள் முத்திக்கொண்டு போனால் ஜெர்மானியரின் வெற்றியில் அவர்களுடைய ஸகாக்களுக்கு அவர்கள் நம்பிக்கை போய்விடுமாதலால் அவர்கள் அடிமைகளாகவே இருக்க விரும்ப மாட்டார்கள். அப்போதுதான் மனப்பான்மையைப் பற்றிய பிரச்னைகளுக்கு முடிவான பயனேற்படும்.

### ஜப்பானியரின் தோல்விகள்.

இவ்விதமான ஐரோப்பிய நிலையில், நியூ கினியில் ஜப்பானியர் அடைந்துவரும் தோல்விகளும், மடகாஸ்கரை டிகால் கக்ஷியிடம் விட்டதும் அதிகம் பாதித்து வருகின்றனர். இந்தியா, பர்மா, சைனா, தென் பஸிபிக் முதலிய இடங்களில் தற்போதுள்ள நிலைமையை கவனித்தால் ஜப்பானுக்கு முடிவான தோல்வியைக் குறிக்கின்றன. அந்தப் பிரதேசத்திலும் தனக்கு எதிராக பொதுஜன மனப்பான்மை இருந்து வருவதை ஜப்பான் உணரும்.

### முயற்சிக்குத் தடை கிடையாது.

இவ்வித அனுகூலமான சந்தர்ப்பங்களைப் பார்த்து உடனே வெற்றி கிடைத்துவிடுமென்று நினைத்து நேசநாடுகள் யுத்த முயற்சியைத் தளர விடவில்லை. பிரிடனில் 17 முதல் 50 வயது வரையிலுள்ளோர் சேனையில் சேர்க்கப்படுகின்றனர். 3,30,00,000 கொண்ட ஸ்திரீ புருஷ ஜனத்தொகையில் 2,20,00,000 பேர் யுத்த சேவையைச் செய்து வருகின்றனர். பிரிடனுக்கு யுத்தத்தில் யுத்த அலுப்போ, அல்லது வெறுப்போ கிடையாது. மூன்று வருஷ காலமாக வெற்றி கிடைக்குமென உத்தேசமாகச் சொல்லப்பட்டதுபோக நேசநாடுகளுக்கு வெற்றி கைக்கு கிட்டியது என்ற எண்ணம் உதயமாகிருப்பதால் யாவரும் சீரப் பிரயாசை, தகுந்த மனப்பான்மை இவ்விரண்டையும் காண்பிக்கவேண்டும்.

நேசதேசக் கக்ஷியிலும் மனப்பான்மை சற்று தளர்ந்திருப்பதாகக் காணப்பட்டாலும், யுத்த முயற்சியில் ஓய்வு ஏற்படவில்லை என்பது நிச்சயம். ஓட்டப் பந்தயக்காரன் சரீரம், மனது இரண்டையும் வலுவாகக் கொண்டிருந்தால்தான் வெற்றி பெற முடியும். இதுவேதான் நேசநாடுகளுக்கும் லக்ஷியமாக இருக்க வேண்டும்.

# டான்ஜியரில் ஐந்தாம் படையினரின் நடவடிக்கைகள்.

(மதராஸ் யுத்த சஞ்சிகையிலிருந்து எடுக்கப்பட்டது).

வட ஆபிரிக்காவில் டான்ஜியர் ஒரு நடுநிலை நாடு. இப்பொழுது அங்கு ஜெர்மன் ஸ்தானீகராக டாக்டர் கார்ட் ரீத் இருந்து வருகிறான். அவன் ஐந்தாம் படையைச் சேர்ந்தவன். அவனைப்பற்றி டெய்லி ஹெரால்டு பத்திரிகையின் அந்நிய நாட்டு நிருபர் பின்வருமாறு எழுதியிருக்கிறார். ரீத் அங்கிருந்துகொண்டு விஷமச் செய்கைகளைச் செய்து வருகிறான். அதனால் அவன் நடவடிக்கைகளைக் கவனிக்கவேண்டியிருக்கிறது. ஏற்கனவே ஏற்பட்ட ஸர்வதேச ஒப்பந்தத்தின்படி அந்நாடு நடுநிலை நாடாகக் கருதப்படுகிறது. மற்ற நாடுகள் அந்த ஒப்பந்தத்தைப் புறக்கணித்துவிட்டன. ஆனால் பிரிடன் மட்டில் அவ்வொப்பந்தத்தின்படி கட்டுப்பட்டு நடக்கிறது. இதைச் சாதகமாக வைத்துக்கொண்டு நேசநாடுகளுக்கு விரோதமாக ரீத் பல விஷமச் செய்கைகளைச் செய்து வருகிறான். இப்பொழுது நடந்துவரும் வட ஆபிரிக்கப் போர் முடிவடைவதற்குள் இவ்விஷமியைப் பற்றியும் டான்ஜியர் பிரதேசத்தைப் பற்றியும் பல விஷயங்கள் வெளிவரும்.

ஐந்தாம் படையினரை ஒழுங்குப்படுத்தி பல சூழ்ச்சிகளைச் செய்வதில் ரீத் ஒரு பெரிய நிபுணன். உதாரணமாக வியன்னாவில் அவன் ஜெர்மன் மந்திரியாக இருந்தபொழுது சான்ஸலர் டோல்பஸ் (Dollfuss) கொலை செய்யப்பட்டான். அதற்கு இவன் தூண்டுதலாக இருந்தான். அப்பொழுதே இவனுடைய பெயர் அடிபட ஆரம்பித்தது. அக்கொலையைப் பற்றி ஆஸ்திரியா போலீஸ் விசாரணை நடத்தி, அவன் அக்கொலையில் சம்பந்தப்பட்டிருக்கிறான் என்று ஊர்ஜிதமாகக் கண்டுபிடித்துவிட்டது. நேராடி தலையிடாதபோனாலும் கொலையாளிகளை ஜெர்மனிக்கு அனுப்பப்பட்டதற்கு அவன் உதவி செய்திருக்கிறான் என்றும் கண்டுபிடிக்கப்பட்டது. உடனே ஹிட்லர் ஆஸ்திரியாவிலுள்ள நாஸிக் கலகக்காரர்களை விட்டு ரீத்தை வரவழைத்துக் கொண்டான். அது முதற்கொண்டு கொஞ்சகாலமாகவே இவ்விஷமியைப் பற்றித் தெரியாயலிருந்தது.

## ‘வியாபார ஏஜெண்டு.’

அவன் மறுபடியும் சென்ற வருஷத்தில் மெக்ஸிகோவிலிருந்து யுனைடெட் ஸ்டேட்ஸுக்கு வியாபார ஏஜெண்டாகச் சென்றான். யுனைடெட் ஸ்டேட்ஸ் எல்லைப்புறத்திற்கு வந்தது முதல் அவனை பிடரல் பியூரோ வேவு பார்ப்பவர்கள் (G. Men of the Federal Bureau) கவனித்து வந்தார்கள். இரண்டு மாத காலத்திற்குள் அவன் அரெஸ்டு செய்யப்பட்டு, தேசப் பிரஷ்டம் செய்யப்பட்டான். அந்த அவகாசத்திற்குள் அங்கு ஜெர்மனிக்குச் சாதகமாக ஒரு கக்ஷியைப் பலப்படுத்திக் கொண்டு குத்தகைக் கடன் மசோதாவின் முயற்சிகளுக்குப் பல தடைகள் ஏற்படுத்தி வந்தான்.

ஆறுமாதத்திற்கு முன்பாகத்தான் ஹிட்லர் அவனை டான்ஜியருக்கு ஸ்தானிகனாக அனுப்பினான். அங்கு ஸ்பெயின் தேச அதிகாரிகள் அவனுக்குரிய கௌரவத்துடன் வரவேற்றார்கள்.

டான்ஜியரில் ஸ்பெயினுக்கு ஆதிக்கம் இந்த யுத்தம் ஆரம்பித்தபிறகுதான் ஏற்பட்டது. அப்பிரதேசம் ஏற்கனவே ஸ்பெயினுக்குச் சொந்தமான மொராகோவின் ஒரு பாகமாக இருந்தது. பிற்பட்டு 1923—1928-ம் வருஷத்தில் ஏற்பட்ட ஸர்வதேச ஒப்பந்தப் பிரகாரம் டான்ஜியர் பரஸ்பர தேசீய கமிட்டிக்குட்பட்ட நடுநிலை நாடாக இருந்துவருகிறது. இருந்தபோதிலும் அப்பிரதேசத்தைப் பாதுகாக்க ஸ்பெயினுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருந்தது. இதை ஒரு நல்ல சந்தர்ப்பமாகக் கருதி 1940, ஜூன் மாதத்தில் பிரான்ஸ் வீழ்ந்ததும், ஜெனரல் பிராங்கோ ஏராளமாக ஸ்பெயின் தேசத்து துருப்புகளை அங்கு அனுப்பினான். அதனால் ஒரு சில மாதங்களுக்குள் அத்துருப்புகளின் எண்ணிக்கை 1,000-த்திலிருந்து 20,000-க்கு அதிகரித்து விட்டது. உடனே அப்பிரதேசம் பூராவையும் ஸ்பெயின் எடுத்துக்கொண்டுவிட்டதாக பிராங்கோ எங்கும் பிரஸ்தாபித்துவிட்டான்.



ஏற்கனவேயிருந்த கமிட்டி இப்பொழுது எடுபட்டுவிட்டது. மொராகோவின் ஹை கமிஷனர் தான் இப்பொழுது டான்ஜியரின் நிர்வாகத்தை நடத்தி வருகிறான். இம்மாறுதலை பிரிடன் ஆக்ஷேபித்தது. அதன் பேரில் டான்ஜியரில் பிரிடிஷாரின் உரிமைகள் பாதுகாக்க ஒரு தனி ஒப்பந்தம் ஏற்பட்டது. அப்பிரதேசத்தைப் பலப்படுத்தவில்லையென்றும் ஸ்பெயின் உறுதி கூறிற்று. ஆனால் அவ்வுறுதி மொழிப்படி ஸ்பெயின் இப்பொழுது நடக்கவில்லை.

ஏனென்றால் அங்குள்ள பிரிடிஷார் அதிக இழிவாக நடத்தப்பட்டு வருகிறார்கள். அச்சு நாட்டினரின் தூண்டுதலின் பேரில் பல கலகக்காரர்கள் அங்கே பிரிடனுக்குச் சொந்தமான வியாபாரப் பொருள்களைச் சேதமாக்கி வருகிறார்கள். அவர்களுக்கு ஸ்பெயின் தேசத்து அதிகாரிகள் சலிகை காட்டி வருகிறார்கள். அதனால் ரீத்தும், அவன் சகாக்களும் டான்ஜியரிலிருந்துகொண்டு பல விஷமச் செய்கைகளைச் செய்யமுடிகிறது மொராகோவிலுள்ள ஸ்பெயின் தேசத்தினரும் இவர்களுக்கு உடந்தையாக இருக்கின்றனர். மேலும் டான்ஜியரிலிருந்துகொண்டு வட ஆபிரிக்காவில் நேச நாடுகள் எடுத்துக் கொள்ளும் பல ராணுவ நடவடிக்கைகளைப் பற்றி தெரிந்துகொண்டு அச்சு நாட்டினருக்கு அவ்வப்போது தகவல்கள் கொடுப்பதற்கும் நல்ல வசதியாகயிருக்கிறது.

---

# யுத்த தந்திரங்களின் மாறுதல்கள்.

ஸிரில் பால்ஸ் என்பவர் எழுதியது.

(Illustrated London News பத்திரிகையிலிருந்து).

ஸ்வல்ப விஸ்தீர்ணமுள்ள [illegible]த்தரங்கத்தில் நடக்கும் யுத்தத்தில் பலமாறுதல்கள் ஏற்படலாம். அவை சீக்கிரத்தில் யுத்த சூழ்ச்சிகளை மாற்ற ஆரம்பிக்கின்றன. பிறகு அதின் மூலம் கொள்கையை மாற்றிவிடும்படியாக ஆகிறது. அதனால் டாங்கிப்படை, தரைப்படை, பீரங்கிப்படை, இவைகளின் யுத்தப் போக்கை அனுசரித்து யுத்த மந்திரி சபை அவ்வப்போது தீர்மானிக்கவேண்டியதாக இருக்கிறது. ஆகையினால் யுத்தப்போக்குக்கும் மந்திரி சபை தீர்மானத்திற்கும் ஒரு தொடர்பு ஏற்பட்டிருக்கிறதென்று தெரியவரும். நூதனமாக ஏற்படும் யுத்தப் போக்கின் விவரம் ராஜநீதி நிபுணர்களுக்கும், ராணுவ இலாகா மந்திரிகளுக்கும் தெரிவதற்குசற்று கால தாமதமாகலாம். இருந்தாலும், அந்தப் பிணைப்புக்குப் பலம் குறையவில்லை. இம்மாதிரி யுத்த தந்திரங்கள் நாளுக்கு நாள் அபிவிருத்தியாகி வருகின்றன. யுத்த ஆரம்ப காலத்தில், திடிரென்று தாக்குவதும், பிரதேசங்களை ஆக்கிரமிப்பதுமான சம்பவங்கள் பல நிகழ்ந்தன. இம்மாதிரியான சம்பவங்கள் நேரும் நாள் இன்னும் முடிவடைந்து விடவில்லை. இருந்தாலும் அவை வரவரக் குறைந்து வருகின்றன. இதற்கு பல காரணங்கள் உண்டு. யுத்த ஆரம்பகாலத்தில் ஜெர்மனிக்கிருந்த யுத்த தளவாடங்களின் எண்ணிக்கை நேச நாடுகளுக்கிருந்ததைவிட அதிகமாக இருந்தது. ஆனால் இப்பொழுது நேசநாடுகளின் பலம் அதிகம் அபிவிருத்தியடைந்து விட்டதினால் இவ்விரு நாடுகளுக்குமிருந்த வித்தியாசம் இப்பொழுது அடியோடு போய்விட்டது. எதிரியை எதிர்த்து தாக்குவதில் ஜனங்களுக்கு ஏற்படும் உணர்ச்சி மற்றொரு காரணம். உதாரணமாக ‘எதிரிகள் மின்னல் படையெடுப்பு’ என்ற முறையைக் கையாண்டார்கள். அதை எதிர்ப்பதற்கான தந்திரங்களை ஜனங்கள் ஆராய ஆரம்பித்துவிட்டனர். ஜனங்கள் இவ்வித முறையில் அதிகமாகப் பழக்கம் வைத்துக்கொண்டபடியால், படையெடுப்பு நேரும் காலங்களில் மனம் கலங்குவது கிடையாது. இம்முறையை எதிர்க்க புதிய அபிவிருத்திகளைக் கண்டுபிடித்தவர்கள் ருஷ்யர்கள். இப்பொழுதுள்ள ஜெர்மானியரின் நிலைமையும் இதற்கு ஒரு காரணமாக இருக்கிறது. ஏனென்றால் 1941-ம் வருஷம் கிருஸ்துமஸ் தினம் முதற்

நிறுத்தப்பட்டிருந்தன என்றும் அவைகளின் சக்தியும் ஊகித்துத்தான் சொல்லப்படுகின்றன. மொத்தத்தில் ருஷ்யக் கடற்படையின் பலம் நன்ருகத் தெரிந்தது தான்.

நவீன முறையில் தயாரிக்கப்படாத போயினும் கருங்கடற்படை அக்கடலை பாதுகாக்கப்போதுமானதே. அங்கே அச்சு நாட்டுக் கப்பல்களே கிடையாது. ருமேனியாவிற்குச் சொந்தமான சில நாசகாரிகளும், பீரங்கிப்படகுகளும், நீர்மூழ்கிகளும்தான் இருந்தன. கான்ஸாடான்ஸா, வார்ஞ போன்ற இடங்களில் கட்டப்பட்ட விமானங்கள் மிகக்குறைந்த சக்தி வாய்ந்திருந்ததால் அவைகள் ருஷ்ய விமானங்களுடன் போட்டிபோடவே மூடியாது. ஆகவே தெற்கு ருஷ்யப் பாதுகாப்பிற்கு இக்கப்பற்படை போதுமானதுதான். அதோடில்லாமல் ருஷ்ய ஸப்ளைக் கப்பல்கள் தரைப்போருக்கு உதவியாகச் செல்லும்போது பத்திரமாகவே போகமுடிந்தது. உதாரணமாக ஸெபாஸ்டோபோல் முற்றுகையின் போது காணலாம். ஒடெஸ்ஸாவிலிருந்து துருப்புகளையும், ஸெபாஸ்டோபோலிலிருந்து ஜனங்களையும் எடுத்துவர முடிந்தது. மேலும் அச்சு நாடுகளும் சுலபமாக சஞ்சரிக்க முடியவில்லை. தரை மார்க்கமாக முடியாத ஸப்ளைகளை ஜெர்மானியர் கடல் மார்க்கமாக பெறமுடியவில்லை. இதனுலேயே காகஸஸில் எதிரிகளுக்குச் சிரமம் ஏற்படுகிறது.

அதேவிதமாக பால்டிக் கப்பற்படை தரைப்படைக்கு உதவி, சைனியத்தின் வடபாகத்தை காபந்துசெய்து, ஸப்ளைக் கப்பல்களுக்கு துணையாகச்சென்று, டாலினி (Tallinn) லிருந்து ஜனங்களைக் காலிசெய்ய உதவவேண்டி நிறுத்தி வைக்கப்பட்டது. அப்படைக்கு தற்போது அதிகச் சேதமேற்பட்டிருக்கிறது. இருந்தாலும், பல எதிரிக் கப்பல்களை திருப்பித் தாக்கியிருக்கிறது. மீதமுள்ள பால்டிக் ருஷ்யக் கப்பல்கள் ஸ்டாலின் கால்வாய் வழியாக வெளியேறின. மற்ற நீர்மூழ்கிகளும் சில சிறு கப்பல்களுமே மிஞ்சியிருந்து அச்சுநாட்டுக் கப்பல்களைத் தாக்கிவருகின்றன.

ஆர்க்டிக்கில் ருஷ்யக் கப்பல்கள் பல ஜெர்மன் ஸப்ளைக் கப்பல்களை மூழ்கடித்து நேசதேசத் துணைக்கப்பல்களுக்கு உதவி மர்மன்ஸ்க், ஆர்கேஞ்ஜல் போகும்படி செய்கின்றன.

இவ்வளவு அலுவல்களைக் கவனிக்கவேண்டியிருந்தும் ருஷ்யக் கடற்படை ஜப்பானிய ஆக்கிரமணத்தையும் தடுக்க உஷாராக இருக்கவேண்டும். கிடைக்கக்கூடிய ருஷ்யக் கப்பல்களைக்கொண்டு ஜப்பானியக் கடற்படையை எதிர்த்தடிக்க முடியாதுதான். இருந்தாலும் 1941 ஆகஸ்டில் ராயல் யுனைடெட் ஸர்விஸ் புத்தகத்தில் வெளிவந்த விவரப்படி ருஷ்யாவிற்கு தூரக்கிழக்கில் 70 நீர்மூழ்கிகளும் மற்றும் சில கப்பல்களும் இருப்பதால் அவைகளைக்கொண்டு ஜப்பானியக் கடற்படையைத் தடுக்கலாம்.

ருஷ்ய பிளாடில்லா கப்பல்கள் வால்காவிலும் இருக்கின்றன. இவைகள் ருஷ்யத் தரைப்படைகளுக்கு உதவியாக இருந்து ஸ்டாலின்கிராட்டைப் பாதுகாக்கின்றன. ஆகவே ருஷ்யக் கடற்படை எங்கும் தரைப்படைக்கு உதவியாகவே இருக்கின்றது. ஜப்பான், பிரிடன், ஜெர்மனி முதலிய நாடுகளுக்கு இருப்பது போல தனிப்பட்ட கப்பல் தந்திரங்கள் ருஷ்யாவிற்குக் கிடையாது. ருஷ்யச் சைனியத்திற்கோ இவ்வித கப்பற்படை உதவி மெத்த அவசியமாக இருப்பதோடு, அச்சுநாட்டுக் கப்பல் போக்குவரவிற்குத் தடை செய்யமுடிவதால் நேசநாடுகளின் முடிவான வெற்றிக்குச் சாதகமாகவே இருந்துவருகிறது.

---



# தேசீய யுத்த முன்னணி முன்னேற்றத்தை நோக்குகிறது.

---

**ஸர் ராபர்ட் டெனிஸ்டன்.**

(மதராஸ் யுத்த சஞ்சிகையிலிருந்து எடுக்கப்பட்டது).

நாம் சொல்லும் ஜோஸ்யம் எல்லாம் பலிக்காதபோனுலும், 1943-ம் வருஷத்தில் பெரிய சம்பவங்கள் நிகழும் என்று சொன்னுல் எப்பேற்பட்டவனும் ஒப்புக்கொள்ளுவான். எதிர்பாராத சம்பவங்களெல்லாம் நடக்கும். அவைகளின் பயனுக உலகின்கண் பாதிப்பேருக்கு நிச்சயம் விமோசனம் ஏற்படுமென்று சொல்லலாம். இந்த சந்தர்ப்பத்தில் இந்தியாவிலுள்ள நாம் யுத்தத் தீங்குகளை எவ்வளவுதூரம் தவிர்க்கமுடியுமென்று கவனிப்போம். இதற்காக இந்தியாவிலுள்ளோரையும், சரித்திரத்திலேயே பெரிய கொடுங்கோல் செலுத்துபவர்களென்று பெயர் பெற்ற அச்சு நாட்டினர் வசப்படுத்தியிருக்கும் நாட்டிலுள்ளோரையும் ஒப்பிட்டுப்பார்ப்போம்.

யுத்தத்தில் ஈடுபட்ட எந்த நாடானுலும், சில அசௌகரியங்களைச் சகித்துக் கொள்ளத்தான் வேண்டும். ஆனுல் நமக்கு ஏற்பட்டிருக்கும் சில அசௌகரியங்களைப்பார்ப்போம். உணவுப்பொருள்களின்விலை அதிகரித்துத்தானிருக்கிறது. ஆனுல் பிரான்ஸ், பெல்ஜியம், போலந்து, நார்வே, கிரீஸ் முதலிய நாடுகளிலுள்ள லக்ஷக்கணக்கானபேர்களைப்போல் நாம் பட்டினி கிடக்கவில்லை. நம் நாட்டு ஸ்திரீ புருஷர்கள், அடிமைகளாகி, எதிரியிடம் கூலிவேலை செய்யும் நிலைமைக்குப் போய்விடவில்லை. நம் நாட்டில் பொதுமக்கள் ஜெயில்களில் அடைக்கப்பட்டோ, குழந்தைகள் கொலை செய்யப்பட்டோ அழியவேண்டிய சந்தர்ப்பம் ஏற்படவில்லை. இவ்விதமாகவெல்லாம் செய்துகொண்டு ஜப்பானியர் புது திட்டம் என்று சொல்லிக்கொள்ளுகிருர்கள். இவ்வளவும் காட்டுமிராண்டித்தனமில்லையா? அதோடு இல்லாமல் தாங்கள் பிடித்த நாடுகளிலுள்ளோரை விடுவிக்கப்போவதாயும் ஜப்பானியர் சொல்லுகிருர்கள். அதற்காக ஆங்காங்கு குடியல் பழக்கத்தை உண்டுபண்ணி, அந்த நாட்டினரை தைரியத்தை இழக்கச்செய்து, தங்கள் சொற்படி நடக்கச்செய்கிருர்கள்.

## முணுமுணுப்புக்கு தண்டனை கிடையாது.

மேலும் நம் நாட்டில் விளையும் தானியங்களை எதிரி நாடுகளுக்கு ஒருவரும் அனுப்பிவிடவில்லை. பெல்ஜியம், ஹாலந்து, டென்மார்க், இதாலி முதலிய இடங்களில்தான் அவ்வாறு செய்யப்படுகிறது. கோயரிங் நம்மைப்பார்த்து உங்கள் உணவை ஜெர்மனிக்கு முதலில் அனுப்புங்கள் என்று அதட்டமுடியாது. மிச்சமிருப்பதை நாமே உபயோகித்துக்கொள்ளலாம். நமது முறைகளை வெளிவிடுவதற்காக நம்மை அரசாங்கத்தார் தண்டிப்பதில்லை. பெர்லினில் செய்வதைப் போல் இங்கும் செய்வதானுல் நம்மளில் பலர் காராகிரஹவாஸம் செய்யவேண்டியதுதான். நமக்குக் கொஞ்சம் பொழுதுபோகவேண்டுமென்று தோன்றினுலும், பொய்க்கதைகளைக் கேட்கவேண்டுமென்று தோன்றினுலும் பெர்லின், டோகியோ நிலயங்களின் ஒலிப்பரப்புகளைக் கேட்கலாம். அவைகளிலிருந்து வெளிவரும் விஷமச்செய்திகள் நமக்கு எவ்வளவு வெறுப்பை உண்டாக்கின்றன என்று பாருங்கள். ஹிட்லருக்கு முன்னுளாக இருந்து கோயபெல்ஸ் அபாண்டமாக ஒலிபரப்புகிருன். ஆனுல் பெர்லின், டோகியோ முதலிய இடங்களிலிருந்துகொண்டு பிரிடிஷ் அல்லது இந்திய ஒலிபரப்புகளைக் கேட்டால் ஜெயிலில் அடைபடவேண்டியதுதான். அல்லது இறக்கவேண்டியதுதான். இதுவரையிலும் இங்கே விமானத்தாக்குதல் ஏற்படவில்லை யென்றே சொல்லலாம். ஏதோ மொத்தத்தில் இரண்டு டஜன் குண்டுகள் சில சமயங்களில் விழுந்ததைத்தவிர வேறில்லை. மால்டா மீது ஐந்து நாட்களில் 1,000 விமானப் படையெடுப்புகள் நேர்ந்தது என்ருல் அதையோசித்துப்பாருங்கள். அவர்களுடைய வாழ்க்கையில் பாதிசமயம் சுரங்கங்களிலேயேதான் கழிக்கவேண்டும்.

நமக்கு அவ்வித சிரமநிலையே ஏற்படவில்லை. மேலும் இங்கிலாந்தில் வீடுவாசல்கள், மாதாக்கோவில்கள், சரித்திர சின்னங்கள் யாவும் இடிந்து ஆயிரக் கணக்கானபேர் இறந்தமாதிரி இந்தியாவில் ஒன்றும் ஏற்பட்டு விடவில்லை.

### நமது வாழ்க்கை அமைதியானதே.

ஆகவே உலகத்தின் பெரும்பாகம் பலவித கஷ்டங்களுக்குக்குள்ளாகி இருக்கும்போது நாம் சுகமாகத்தானிருக்கிறோம். இவ்வித சுகவாழ்க்கையை நீடிக்க நாம் கொஞ்சம் பரிசிரமப்படவேண்டாமா? அச்சுநாட்டு விமானத் தாக்குதல் இடைவிடாது நடந்துகொண்டிருக்கும்போதே பிரிடன் பிறருக்கு உதவி வந்திருக்கிறது. இரண்டாம் போர்முனை, வேண்டுமென்று பலர் கேட்டிருக்கிறார்கள். லிபியாவில் இரண்டாம் போர்முனை. வட ஆபிரிக்காவில் மூன்றும் போர்முனை, இந்தியாவில் நான்காம் போர்முனை, இவ்வளவுக்கும் ஈடு கொடுத்து பிரிடனும் அமெரிக்காவும் ருஷ்யாவிற்குச் செய்திருக்கும் உதவியை மறந்து விடுகிறார்கள். கடந்த வருஷத்தில் 172 நிமிஷங்களுக்கு ஒரு தடவை ஒரு விமானமும், 128 நிமிஷத்திற்கு ஒரு தடவை ஒரு டாங்கியும், 17 நிமிஷத்திற்கு ஒரு தடவை ஒரு மோட்டாரும், ஒவ்வொரு 4 நிமிஷங்களுக்கும் ஒரு டன் பெட்ரோல் எண்ணெயும், ஒவ்வொரு 38 செகண்டுக்கு ஒரு டன் யந்திரசாமான்களும் அனுப்பப்பட்டிருக்கின்றன. உண்மைநிலை இவ்வாறு இருக்க "ருஷ்யர்களுக்கு பிரிடனும், அமெரிக்காவும் ஒன்றும் அனுப்பாமல் ஏமாற்றி விட்டன" என்று பெர்லின் ரேடியோ கூறுகிறது. இது பொய் நாஸிகள் நடத்தும் பொய் பிரசாரத்தைத்தவிர வேறென்ன.

இந்த யுத்தத்தில் வெற்றிபெற்று நாகரீகத்தை மறுபடி ஸ்தாபிக்க இந்தியாவிலுள்ள நாம் எவ்வித உதவியைச் செய்கிறோமென்று பார்ப்போம். அது அதிகம் தான். இந்தியச் சைனியத்தின் புகழ் உலகம் பூராபரவி வருகிறது. இந்தியக் கப்பற்படையும் தகுந்த விதமாக ஈடுபட்டு வருகிறது. உதாரணமாக "வங்காளம்" என்ற கப்பலின் தீரச்செயலைக்காணலாம். இந்தியத் தொழிற்சாலைகளும், மில்களும் இரட்டிப்பு மடங்காக சாமான்களை உற்பத்தி செய்கின்றன. இந்தியத் தொழிலாளிகளும் தகுந்த விதமாக ஈடுபட்டு வருகின்றனர். இது இவ்வாறு இருக்க, சட்ட வரம்புகளை மீறி, பண்டங்களை அழித்து, கொலை முதலியவைகளில் இந்தியர்கள் ஈடுபட்டால் உலகம் என்ன நினைக்குமென்று யோசியுங்கள். ருஷ்யாவிற்கு நேசதேசங்கள் செய்த உதவியையும் இந்தியாவில் நடந்த அட்டூழியங்களின் விவரங்களையும் ஒத்துப்பாருங்கள். 3,052 விமானங்களும், 4,084 டாங்கிகளும், 30,031 மோட்டார்களும், 1,18,000 டன் எண்ணெயும், 8,31,000 டன் உலோக சாமான்களும் அனுப்பப்பட்டன. இந்தியாவிலோ, 32 போலீஸ்காரர்கள் கொலைசெய்யப்பட்டனர். 550 தபாலாபீஸ்கள் தாக்கப்பட்டன. 70 போலீஸ் ஸ்டேஷன்கன்களும், 140 சர்க்கார் கட்டடங்களும், எறிக்கப்பட்டன. 3,500 இடங்களில் தந்திக்கம்பிகள் அறுக்கப்பட்டன. இன்னும் ரயில்வே ஸ்டேஷன்கள் தபாலாபீஸ்கள் முதலியவைகளுக்கு நேர்ந்த சேதம் ஒரு கோடி ரூபாய்க்கு மேலாகவே இருக்கும். இவ்வளவும் ஜெர்மனி, ஜப்பான் விரும்பியதாகும்.

### 1943-ஐப்பற்றி என்ன ?

முன் சொன்ன கதையாவும் 1942-ல் நடந்தவை. 1943ஐப் பற்றி கவனிப்போம். இந்த வருஷம் அதிக நம்பிக்கையை உண்டாக்கக்கூடியதாக இருப்பதால் நல்லெண்ணம் படைத்த யாவருக்கும் ஒரு நல்ல சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்கிறது. இதற்குமுன் நடந்த யுத்தங்களில் பொதுமக்களுக்கு இவ்வளவு பங்கு உண்டானதில்லை. புதிய வருஷத்தில் தேசீய யுத்த முன்னணியில் சேர்ந்திருப்போர் கவனிக்கவேண்டிய சில விஷயங்களைச் சொல்லுகிறேன். தெருக்களில் ஓடுகிறவர்களைவிட பாதுகாப்பு ஸ்தலங்களிலுள்ளோருக்கு குண்டுகளால் அதிகத் தீங்கு ஏற்படாது என்று நினைத்து நாம் எந்த சந்தர்ப்பத்திலும் பாதுகாப்பு ஸ்தலங்களிலேயே இருப்போம். பூதசனமுறை முதலியவைகளை நாம் மறந்து



விடலாம். அது தோல்வியைக் குறிக்கும். சட்ட வரம்புகளை மீறுவோரை எதிர்த்து நிற்போம். பயப்படுகிறவர்களை உத்ஸாகப்படுத்துவோம். உணவுப் பண்டங்களை சேமித்துவைப்போரைத் தேடிப்பிடிப்போம். வீண் பயத்தை உண்டாக்குவோரைத் தாக்குவோம். இப்படிச்செய்வதால் ஹிட்லருக்கும் அவருடைய சகாக்களுக்கும் பயத்தை உண்டாக்கி, அனுகிவரும் வெற்றியை அடைவோமாக.

---

## 'கமாண்டோ துருப்புகள்.'

'கமாண்டோ படையில் சேர்ந்த ஒவ்வொருவருக்கும் கடுமையான பயிற்சியளிக்கப்படுகிறது. அதற்குத் தகுந்தாற்போல் அவனுடைய தேகம், பருமனுகவும், வலுவுள்ளதுமாக இருக்கிறது. மேலும் ஒரு விஷயத்தை அதிசீக்கிரத்தில் ஆலோசனை செய்து, முடிவிற்கு வருவதற்கும் பயிற்சியளிக்கப்படுகிறது.

சாதாரணமாக 18 முதல் 25 வரை வயதுள்ளவர்களையும், நல்ல பருமனுகவும், அதிக உயரமில்லாத கட்டை குட்டையான வாலிபர்களையும்தான் இப்படையில் சேர்த்துக்கொள்ளப்படும். புதிய ரெக்ரூட்கள் வாரத்திற்கு $6\frac{1}{2}$ நாட்கள் வேலை செய்கிறார்கள். அவர்கள் அதிகாலையில் வேலையைத் துவக்கி இரவில் அதிக நேரம்வரை வேலை செய்கிறார்கள்.

### பயிற்சி இரவு முழுவதும்.

அவர்களுக்கு இரவு பூராவும் பல பயிற்சிகள் கொடுக்கப்படுகிறது. இம்மாதிரி அநேக இரவுகளில் நடைபெற்றிருக்கின்றன. தலையிலிருந்து இடுப்புவரை யாதொரு உடையன்னியில் இம்மாதிரி குளிர் காற்றிலும்கூட அவர்கள் கடுமையாக தேகப்பயிற்சி செய்கிறார்கள். கமாண்டோ துருப்புக்குக் குத்துச் சண்டை, குஸ்தி, மலைச் சருவில் ஏறுவது, படகு ஓட்டுவது, நீந்துதல், துப்பாக்கிப் பிரயோகம் இன்னும் சமையல் வேலை முதலியவை தெரிந்திருக்கவேண்டும். பெரிய உயரமான குன்றுகளில் ஏறிச் செல்லவும், மரத்திற்கு மரமோ, அல்லது ஒரு நதியின் குறுக்கேயோ கட்டப்பட்டிருக்கும் கயிருகளின் பேரில் ஊர்ந்து செல்லவும் தேர்ச்சி பெறவேண்டும். இம்மாதிரி கடுமையான பயிற்சிகள் பெருவதால் அவர்களுக்கு நம்பிக்கையும், தைரியமும் ஏற்படுகிறது.

சில இடங்களில், எதிரியை எதிர்த்து என்னென்ன செய்ய வேண்டுமோ அந்தப்படி திருப்பிச் செய்யக்கூடிய விதமாக அவர்களுக்குப் பயிற்சியளிக்கப்படுகிறது. உதாரணமாக ரோமலின் தலைமை முகாம்போல் ஒன்றை அமைத்துக்கொண்டு ஒரு பகுதி அதைத் தாக்கும். மற்றொரு பகுதி நார்வேயிலுள்ள வாக்ஸா என்ற இடத்தில் வீடு புகுந்து எதிரிகளை அடித்தது போல் இங்கு பயிற்சி செய்து காண்பித்தது.

மற்றொரு பயிற்சியில் நோர்த்தியான மலைப் பிரதேசத்திலுள்ள ஏரியின் கையில் பிரித்துத் தூக்கிக்கொண்டு செல்லும் படகுகள் மூலம் ஒரு பகுதித் துருப்புகள் செல்லும். அதன் அருகில் உண்மையாகவே துப்பாக்கி குண்டுகள் பாயும் அவைகளை சமாளித்துக்கொண்டு படகில் சென்றவர்கள் ஏரிக்கு எதிர் கரையில் $\frac{1}{2}$ மைல் தூரத்திலிருக்கும் எதிரியின் பீரங்கி மேடை என்று கருதப்படும் பீரங்கிகளை அழிப்பார்கள்.

பிரிடிஷ் ராணுவத்தின் 60, 70 பட்டாளங்கள் 'கமாண்டோ' துருப்புகளாக இருக்கிறார்கள். அவர்கள் இப்பொழுது பரவலாக வியாபித்திருக்கிறார்கள் அவர்கள் எப்பொழுதும் கப்பற்படையுடன் ஒத்துழைக்கிறார்கள்; அடிக்கடி விமானப்படையுடன் சேர்ந்து வேலை செய்கிறார்கள். வழக்கமாக மற்ற தரைப் படை பகுதிகளுடனும் கலந்துகொள்ளுகிறார்கள்.

சிலர் நம்முடைய சில யோசனைகளை பொய்யென்று கூறிக்கொண்டும் அரசாங்கத்தாரின் பேரில் வேறுமென்கிற குறையும் கூறுகிறார்கள். இதனால் சந்தேகமும் பயமும் உண்டாகலாம். ஆனால் பிரிட்டிருந்துள்ள உற்பத்தி திட்டம் திருப்திகரமாக இருக்கிறதென்று நான் கூறுவேன். இதற்காக 1942-ல் நாம் சாதித்தது என்னவென்பதை கவனித்தே நான் இம்மாதிரி சொல்லுகிறேன். 1942-43-க்கு நாம திட்டங்களைப் போட்டோம். இதிலிருந்த புள்ளி விவரங்களைப் பார்த்து சிலர், எதிரிகளைப் பயமுறுத்துவதற்காக நாம் இம்மாதிரி கணக்குகளைச் சிருஷ்டி செய்திருப்பதாகக் குறைகூறினார்கள். ஆனால் போட்ட திட்டப்படி நமது மக்கள் நிறைவேற்றினர். சில திட்டங்கள் மாறுபாடுகளுக்கு உள்ளாயின. சில அதிகமாயும் சில குறைவாயும் முடிந்தன. இவைகளை நான் நிவர்த்திக்க முடியாது என்று அநுபவத்திலிருந்து தெரிந்துகொண்டேன்.

1942-ல் 48,000 சண்டை விமானங்களை உற்பத்தி செய்தோம். இது ஜெர்மனி, இதாலி, ஜப்பான் இம்மூன்று நாடுகளும் சேர்ந்து செய்யும் உற்பத்தியைக் காட்டிலும் அதிகமானது.

டிஸம்பர் மாதத்தில் 5,500 விமானங்களை உற்பத்தி செய்தோம். இந்தக் கணக்கு அதிகரித்துக்கொண்டே போகிறது. அதிக கனமாயும், பெரியதாயும் கட்டப்படுகின்றன. சண்டையின் அநுபவத்திலிருந்து டாங்கி உற்பத்தியைக் குறைத்து தாங்கக் கூடும் பீரங்கிகளை உண்டுபண்ணுகிறோம்.

## பீரங்கி உற்பத்தி.

1942-ல் டாங்கி முதலியவைகளில் 56,000 வண்டிகளையும், 6,70,000 யந்திர பீரங்கிகளையும் செய்தோம். இது 1941-ஐவிட ஆறு மடங்கு அதிகமாகும். 21,000 டாங்கி எதிர்ப்பு பீரங்கிகளைச் செய்தோம். இதுவும் 1941-ஐவிட ஆறு மடங்கு அதிகமாகும். ஏராளமான தோட்டாக்களையும் உண்டுபண்ணினோம்.

ஆகவே அமெரிக்க உற்பத்தித் திட்டம் அதிகமானதுதான். இந்தக் கணக்கு விவரங்கள் எதிரிக்குச் சந்தோஷத்தை அளிக்காது. ஆனால் கவலையைத்தான் செய்யும்.

இவ்விதம் அமெரிக்காவால் எப்படி அதிகமாகச் சாமான்களைச் செய்ய முடிகிறது. ஜெர்மானியருக்கும், ஜப்பானியருக்கும், ஹிட்லரும், டோஜோவும் எடுத்துச் சொல்லவேண்டியதுதான்.

## படைகள்.

நமது படை 20,00,000-லிருந்து, 70,00,000-க்கு அதிகரித்திருக்கிறது. நமது குடியானவர்களும், ஏராளமான உணவுப் பண்டங்களை உற்பத்தி செய்திருக்கின்றனர்.

## அமெரிக்க தேசாபிமானம்.

தேசாபிமானத்தைவிட உணவுதான் மேலானதென்று வெகு சில அமெரிக்கர்கள்தான் கருதுவதால், இங்கிருந்து உணவுப் பண்டங்களை மீதப்படுத்தி அயல் நாடுகளுக்கு அனுப்ப முடிகிறது. இதற்கு எல்லா அமெரிக்கர்களின் ஒத்துழைப்பும் அவசியம்.

நமது பொது முயற்சிகளால் தேசீய ஒற்றுமை, நம்பிக்கை முதலியவைகளுக்குக் காரணமான தன்மைகளை விருத்தி செய்யவேண்டும்.

அமெரிக்க காங்கிரஸ் சபையை, பைத்தியக்காரர்கள் நிறைந்த கூட்டம் என்றும், ராஜீய அநுபவமில்லாதவர்களென்றும் பலர் சொல்லுவதுண்டு. ஆனால் யார் எப்படிச் சொன்னாலும் முடிவுதான் நமக்கு வேண்டியது. ஒரு வருஷகால மாகத்தான் இந்த யுத்தத்தில் ஈடுபட்டபோதிலும், நாம் ஆத்மீகத் தன்மையாலும் சரீரப் பிரயாசையாலும் பூரா ஈடுபட்டுவிட்டோம்.

அமெரிக்கர்களான நாம் தைரியம் வாய்ந்தவர்களாதலால் கௌரவமாகவே இதுவரை சண்டை செய்திருக்கிறோம். இதற்குக் காரணமாயிருந்த அமெரிக்க யந்திரசாலை நிபுணர்கள், தொழிலாளிகள், இஞ்ஜினியர்கள் தொழிற்சாலையில் ஈடுபட்ட ஸ்திரீ, புருஷர்கள் உலகத்திற்கே போதுமான உணவை உண்டுபண்ணிய



குடியானவர்கள், இதரவிதமாக ஈடுபட்ட ஸர்க்கார் உத்தியோகஸ்தர்கள், உணவுத் திட்டத்திற்கு உட்பட்ட மற்றும் யாவருக்கும் நாம் வந்தனத்தைச் செலுத்துகிறோம்.

## பகுத்தறிவு.

யுத்த விமர்சனத்திற்கும், யுத்தத்திற்குத் தேவையானவைகளைத் தயாரிப்பதற்கும் பகுத்தறிவு வேண்டும். எதற்காக நாம் போராடுகிறோம் என்பதை மறக்கக்கூடாது. அல்ப விஷயங்களில் ஈடுபட்டு நமது முறைகள் சரியா, இல்லையா என்பதிலெல்லாம் வியவகாரங்களைச் செய்யக்கூடாது.

நாமும் நேச நாடுகளும் விரும்புவது கௌரவமான சாச்வத சமாதனம் சென்ற யுத்தத்திற்குப் பிறகு நாம் நீடித்திருக்கும் சமாதானத்தையடையவில்லை

போர்முனையில் ஈடுபட்டிருக்கும் நமது துருப்புகளுக்குச் சண்டையில் வெற்றி பெறுவது என்ற லக்ஷியத்தைவிட இரண்டு பெரிய நோக்கங்களிருக்கின்றன. அவர்கள் நினைப்பதுபோலவே இங்குள்ளவர்களும் நினைக்கவேண்டும். அப்படியில்லாவிட்டால் போர்முனையில் அவர்கள் அவஸ்தைப்பட்டு இறப்பதிலிருந்து நாம் ஒரு நன்மையைக் காணுதபோனால் அது ஒரு குற்றமேயாகும்.

படையில் சேர்ந்துள்ளோர் போருக்குப் பிறகு நிரந்தரமான சமாதானமும், தங்களுக்கும், குடும்பத்திற்கும், அயலாருக்கும் ஜீவனோபாயமும் வேண்டுமென்று நினைக்கிறார்கள். இரண்டு வருஷங்களுக்குமுன் நான் ஸ்வதந்திரத்தைப் பற்றிப் பேசினேன். பேச்சுரிமை, மத உரிமை என்பது நமது வாழ்க்கையின் முக்கிய அம்சங்கள் இவை மற்றவர்களுக்கும் வேண்டுமென்பது நமது கருத்து. இதோடு பஞ்சமில்லாமல் இருப்பதென்பதும் நமது லக்ஷியமாகும்.

## பஞ்சமின்மை.

யுத்தத்திற்குப் பிறகு இந்தத் தொழிற்சாலைகளை சமாதான காலத்திற்குத் தேவையான பொருளாதாரங்களை உண்டுபண்ண ஈடுபடுத்தினால், ஸ்திரீ புருஷர்கள் யாவருக்கும் வேலை கிடைக்கும்.

இவ்விதம் செய்ய பல இடையூறுகளிருந்தாலும், யுத்தத்திற்குப் பிறகு அமெரிக்காவில் உணவுத்தட்டு இல்லாமல் செய்யப்படவேண்டும். வெகு நாள் நீடித்திருக்காத மேன்மையை அவர்கள் விரும்பவில்லை. யுத்தம் முடிந்த பிறகு தாங்களும் தொழில்புரியவேண்டுமென்று சிப்பாய்கள் நினைக்கிறார்கள். இதற்கான உத்தரவாதத்தையே அவர்கள் எதிர்பார்க்கிறார்கள். இதை 78-வது காங்கிரஸின் முன்பாக நான் சொல்லுவதின் காரணமென்னவெனில், அடுத்துவரும் இரண்டு வருஷங்களுக்குள் நமது தேவைகளுக்கும், வேலைக்கும், வாழ்க்கையின் லக்ஷியங்களுக்கும் தீங்கு ஏற்படலாம். அவ்விதம் ஏற்படாமல் செய்ய நாம் யாவரும் திட்டமாக ஒத்துழைக்கவேண்டியதவசியமாகும்.

இந்த யுத்தத்தில் எதை நாம் எதிர்த்துப் போராடுகிறோமென்றும், எதை நாம் லக்ஷியமாகக்கொண்டிருக்கிறோமென்றும் கவனிக்கவேண்டும்.

நமது புராதன கௌரவத்தை நிலைநாட்டி வருங்காலத்திலும் மேன்மை பெறப்போராடுகிறோம்.

உலகத்தின் பொருளாதாரத்திற்கு க்ஷேமம் ஏற்பட்டால்தான் அமெரிக்கப் பொருளாதாரமும் நிலைத்திருக்கும்.

ராணுவம், பொருளாதாரம் இவைகளில் அமெரிக்காவைத் தனிப்பட்ட நாடாக நினைக்கமுடியாது. இந்த யுத்தத்தில் முதலில் வெற்றிபெற்று, பிறகு சமாதானமாக வாழ முயலவேண்டும். முடிவாக நிர்ப்பயமாக வாழவேண்டும்.

இன்னும் 10, 20, 50 வருஷங்களில் மறுபடி சண்டைவந்தால் நமது தேவைகள் எவ்வாறு பத்திரமாக இருக்கும்.

யுத்தங்கள் வர வர கடுமையாயும், யாவற்றையும் அழிக்கக்கூடியதாயும் இருந்து எல்லா நாடுகளையும் பாதித்துவரும்.